
உ

# ஈழத்தின் புகழ்பூத்த பூசுரர்கள்



வெளியீடு

சர்வானந்தமய பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஈழத்தின்

# புகழ்பூத்த பூசகர்கள்

தமிழரசர் காலம் முதல் கி. பி. 2020 வரை

தொகுப்பாசிரியர்

**கோப்பாய் சிவம்**

வெளியீடு

**சர்வானந்தமய பீடம்**

**2022**

இந்நூலின் முதற்பதிப்பு PDF வடிவில்
ஓம் சிவாகம் வேத சதஸின் ஐந்தாம் ஆண்டு ஆரம்ப விழாச்
சிறப்பு வெளியீடாக 24.06.2021 இல் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளியீட்டுத் தரவுகள்


| | |
|---|---|
| நூலின் பெயர் | ஈழத்தின் புகழ்பூத்த பூசுரர்கள்<br>(தமிழரசர் காலம் முதல் 2020 வரை) |
| மொழி | தமிழ் |
| விடயம் | தமிழரசர் காலம் முதல் 2020 வரை வாழ்ந்து மறைந்த ஈழத்து அந்தணப் பெரியோர்களின் வரலாற்றுத் தொகுப்பு. |
| தொகுப்பாசிரியர் | பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா B.A.Hons.<br>(கோப்பாய் சிவம்)<br>'ஸ்ரீநகரம்', அளவோடைட வீதி,<br>இணுவில் மேற்கு, சுன்னாகம், ஸ்ரீலங்கா.<br>தொ. பே. 021 224 1504, 0094 77 3018266<br>E - mail - kopaysivam@gmail.com |
| வெளியீடு | சர்வானந்தமய பீடம் - இணுவில் |
| அனுசரணை | 1. சிவஸ்ரீ சிவ. கோகுலநாதக் குருக்கள் (கோபி சிவம்)<br>ஓம் சிவாகம வேத சதஸ்<br>கொரைடன் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்<br>2A, Elmwood Road, Croydon, Cr0 2SG<br>London 00447492454500<br>2. திரு சிவசுந்தரம்<br>சிவசக்தி மணிமண்டபம், ஆவரங்கால், புத்தூர். |
| கணினி வடிவமைப்பு | ஸ்ரீவித்யா கணினிப் பதிப்பகம்,<br>இணுவில், சுன்னாகம், ஸ்ரீ லங்கா. |
| அச்சுப்பதிப்பு | கஜானந்த் பிறின்டேர்ஸ்<br>மானிப்பாய் வீதி, இணுவில். 077 4374159 |
| வெளியீடு | 06.02.2022 |
| விலை | ரூபா 2000/= |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

## சிவாகம ஞான பாஸ்கரன், தர்மசாஸ்தா குருகுல அதிபர்,

## சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள்

ஈழத்தில் சிறப்புற வாழ்ந்து மறைந்த அந்தணப் பெருமக்களின் விபரங்களையும் அவர்கள் தம் வாழ்நாளில் ஆற்றிய பணிகளையும் தொகுத்து வெளியிடுகிறார்கள் சிவாகம வேத சதஸ் அமைப்பினர். கோப்பாய் சிவம் அவர்கள் இதற்காக பெருமுயற்சியெடுத்துப் பல காலம் சிரமப்பட்டிருப்பார்கள் என்றால் அது மிகையாகாது. ஏனென்றால், ஒவ்வொருவரது விபரங்களையும் சேகரிப்பது என்பது இலேசான காரியமல்ல. சிலரைப்பற்றி விரிவாகவும், சிலரைப்பற்றி மிகச்சிறிய தகவலாகவும் இருக்கும். இதற்குத் தகுந்தாற்போல் செயற்படவேண்டும். சிலர் ஆலயங்களில் பூஜை கைங்கர்யத்தைச் சிறப்பாக நடத்தி யிருப்பார்கள். சிலர் பல காலம் - ஐம்பது வருடத்திற்குமேலும் கூட - தொடர்ந்து ஒரே ஆலயத்தில் பணியாற்றியிருப்பார்கள். இதுதவிர, சங்கீத விற்பன்னர்கள், சோதிட விற்பன்னர்கள், அரச உத்தியோகத்தில் திறம்படச் செயல்பட்டவர்கள், இப்படியாகப் பலதுறைப்பட்ட அந்தணப் பெருமக்களைப்பற்றிய விபரங்கள் இதில் அடங்குகின்றன.

இவ்வெளியீடு வருங்கால சந்ததியினர், தமது முன்னோர் களைப்பற்றி அறிய வாய்ப்பளிக்கிறது. முதற்பாகத்தில் வரத்தவறிய அந்தணப் பெருமக்களின் விபரங்கள் அடுத்த வெளியீட்டில் வெளியிடப்படும். ஆதலால் எவரும் இதைப்பைற்றிக் குறை எண்ண அவசியமில்லை. இம்முயற்சி சிறப்பதற்கு இறையருள்வேண்டி ஆசீர்வதிக்கின்றேன்.

தா. மஹாதேவக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசாதனம் ஆசிரியர்
# சிவஸ்ரீ தியாக. மயூரகிரி சிவாசாரியர் வழங்கிய
# வாழ்த்துரை

தவ தத்வம் ந ஜானாமி
கீத்ருசோஸி மஹேஸ்வர
யாத்ருசோஸி மஹாதேவ
தாத்ருசாய நமோ நம:

சிவபெருமானே! உனது தத்துவமறியேன், நீ எப்படியிருக்கிறாய் எனவும் அறியேன், அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனான நீ எல்லா வடிவிலும் இருப்பாயாமே!, அப்படி எப்படி வேண்டுமானாலுமிரு, நீ அப்படி எப்படி எல்லாமிருக்கிறாயோ, அப்படியெல்லாம் உன்னை வணங்க விரும்புகிறேன். என் வணக்கத்தை ஏற்றருள்வாய்!

இலங்கை சைவஉலகம் நன்கறிந்த பேரறிஞர் கோப்பாய் சிவம் என்ற ப. சிவானந்தசர்மா அவர்கள். திருவுத்தரகோசமங்கை மரபில் வந்த ஆதிசைவரான இப்பெரு மகனார் கவிதை, சிறுகதை, நாவல் முதலிய இலக்கியங்களை படைக்கும் ஆற்றலும் பேச்சாற்றலும் கொண்டவர்.

தம் தந்தைபோல தமிழில் மட்டுமன்றி சம்ஸ்கிருத மொழியிலும் புலமை மிக்கவர். ஆகம ஆய்வும் அது வழி சர்வசாதகராகக் கடந்த பல தசாப்தங்களாக செயற்படும் அனுபவமும் உடையவர். தம் மாணவர்களையும் இளைஞர்களையும் இத்துறைகளில் ஆற்றுப்படுத்திவருபவர்.

தவிர புகழ் பூத்த பதிப்பாசிரியராக, நூலாசிரியராக, சர்வானந்தமயபீடம் என்ற தமது அமைப்பினூடாக பல நூற்றுக்கணக்கான நூல்களை பதிப்பித்து வருபவர். இதற்காக ஈழத்திலும் தமிழகத்திலும் கனடா முதலிய தேசங்களிலும் பலராலும் பலமுறை கௌரவிக்கப்பட்டவர்.

என்னையும் என் பிள்ளைப் பருவம் தொட்டே அறிந்தவர். ஆற்றுப்படுத்துபவர். இத்தகு பெரியவரின் பிரம்மாண்ட தொகுப்பு முயற்சியாக "ஈழத்தின் புகழ் பூத்த பூசுரர்கள்" என்ற நூல் வெளி வருவதறிந்து மகிழ்கிறேன். பல நூறு பக்கங்களுடன், இலங்கையின் ஆதிசைவ - வேத வேதியர்களின் சாதனை வரலாறுகள் இந்நூலில் பதிவாகின்றன. கி.பி 9ஆம் நூற்றாண்டிலேயே தில்லை வாழந்தணரான பெரியமனதுளார் என்ற அர்ச்சகர் இலங்கையில் மாவிட்டபுரத்தில் அரசர்களால் மகாராஜஸ்ரீ என்ற விருதோடு குடியேற்றப்பட்டதாக வரலாறு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு முன்னரே சிங்கள/ தமிழ் அரசர்களின் அவையில் அந்தணர்கள் மகாமந்திரிகளாகவும் புரோகிதர்களாகவும் இருந்ததாக சொல்லப்படுகிறது. இப்படி ஈழத்து அந்தண மரபு குறைந்தது ஈராயிரமாண்டு பழைமை மிக்கது. ஆனால் அவை முறையாக ஆவணமாக்கப்பட்டதாக அறிய முடியவில்லை.

இந்த வகையில் புதிதாக - சிறப்பாக சமூகத்திற்கு பயனுடையன செய்தல் வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட இலண்டன் கோகுலநாதக்குருக்கள் (கோபி அண்ணா) அவர்களின் ஆர்வமும் தூண்டலும் "நாம் வெளியிடுகிறோம்" என்ற உறுதியும் இந்த நூலை மலரவைத்திருக்கிறது. கோபி அண்ணா அவர்களின் பதிவுத்திருமணத்தில் நான் சாட்சி ஒப்பமிடும் பேறுபெற்றவன். அந்த அன்பின் நீட்சியை நினைத்து மகிழ்கிறேன்.

மொத்தத்தில் இது எக்காலத்திற்கும் போற்றப்படப் போகிற பெரிய முயற்சி என்றே சொல்லவேண்டும்.

நாங்கள் அண்ணாந்து பார்க்கிற அறிஞரின் நூலுக்கு வாழ்த்துரை வழங்க வாய்ப்புக் கிடைத்தது என்பது என்னைப் போன்றவர்களுக்குப் பெரும்பேறு. அதனால் இதனை வணக்க உரை என்றே கருதுகிறேன்.

என்னால் வணங்கப்படும் முன்னோரான வேதியர்களான சிவாச்சார்ய மூர்த்திகள் குறித்த செய்திகளை வணக்கத்திற்குரிய சிவம் அண்ணா தொகுத்தளிக்கிறார்.

வாழ்த்தி வணங்கி பயன் கொள்ள விழைகிறேன்.

அன்புடன்,
தியாக. மயூரகிரிக்குருக்கள்,
ஆசிரியர்
இந்துசாதனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புரை

## சிவஸ்ரீ சிவ. கோகுலநாதக் குருக்கள் (கோபி சிவம்)

ஓம் சிவாகம வேத சதஸின் ஐந்தாவது சம்வத்சரத் தொடக்கவிழா நடைபெறும் இவ்வேளையில், எனது தாய்வழிக் குலதெய்வம் வைரவர் மற்றும் ஸ்ரீ நாகபூஷணி திருவருளாலும், தந்தைவழிக் குலதெய்வம் கொழும்புத்துறை ஸ்ரீ பழனியாண்டவர் திருவருளினாலும் இன்று அரியதொரு நூலை வெளியிடுவதற்கு அம்பிகையின் திருவருள் கைகூடியுள்ளது.

எமது தாயகமான சிவபூமி எனப் போற்றப்படும் ஈழவளநாட்டில் காலம் காலமாக எமது சைவப்பண்பாட்டையும், தமிழையும் ஆலய நடைமுறைகளையும் வேதாகம ஈடுபாடு காரணமாக வளர்த்தும், அனுதினம் இறைவனை அர்ச்சித்து அவன் புகழ்பாடுவதையும் பெரும்பேறாகப்பெற்று வாழ்ந்த அந்தணப் பெருமக்கள் பற்றியும், அவர்களது பணிகள் பற்றியும் ஓர் ஆவணப்பெட்டகம் தயாரிக்கவேண்டும் என்னும் எண்ணம் மனத்தில் உதித்து ஆறு மாதத்திற்கு முன்னரே பெருமதிப்புக்குரிய கோப்பாய் சிவம் அண்ணாவுடன் தொடர்புகொண்டு அவரது ஆசியுடனும் புகழ்பூத்த சிவாசாரியர்களது ஆசியோடும், ஆரம்பித்தோம். நாம் கேட்டுக் கொண்டதற்கிணங்கப் பலர் தமது முன்னோர்கள் பற்றிய பல தகவல்களை அவ்வப்போது வழங்கி உதவினர். அதன்மேல் சிவம் அண்ணாவும் அரிதின் முயன்று இன்னும் பல பெரியார்களின் விபரங்களைத் தேடித் தொகுத்தார். பல வரலாற்றுத் தரவுகளும் சேகரிக்கப்பட்டன.

இன்று வெளியிடப்படும் இந்நூல் முடிந்த முடிபல்ல. இதில் தவறவிடப்பட்ட பல பெரியார்கள் இருக்கின்றனர் என்பதை அறிவோம். அத்தகையவர்களின் தகவல்கள் சேகரிக்கப்பட்டு அடுத்த பாகம் வெளியிடப்படவுள்ளது. எனவே இதில் இடம்பெறாத புகழ்பூத்த பேரறிஞர்களின் சந்ததியினரான அந்தணப் பெருமக்கள், குறை எண்ணாது எம்மை மன்னித்து, தத்தமது முன்னோர்கள் பற்றிய தகவல்களை எமக்கு அனுப்பிவைத்தால், "புகழ் பூத்த பூசுரர்கள்" - பாகம் 2 என்ற நூலை வெளியிடத் தயாராக உள்ளோம் என்பதை அறியத்தருகிறோம். இந்நூல் உருவாக்கத்தில் ஆக்கமும் ஊக்கமும் வழங்கி உதவிய அனைத்துப் பெரியோர்களுக்கும், தமது பொன்னான நேரத்தைச் செலவிட்டு இந்நூலைப் படித்து அரியமுறையில் ஆசியுரை, வாழ்த்துரை, அணிந்துரை வழங்கிய பெரியோர்களுக்கும், அருமையாக இதனைத் தொகுத்து வழங்கிய கோப்பாய் சிவம் அண்ணாவுக்கும் 'ஓம் சிவாகம வேத சதஸ்' அங்கத்தவர்கள் சார்பிலும் என் சார்பிலும் மனமார்ந்த நன்றிப் பெருக்கினைத் தெரிவித்து ஓம் சிவாகம வேத சதஸின் ஐந்தாவதாண்டு ஆரம்பவிழாவிலே உங்கள் அனைவரதும் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் வேண்டி அமைகின்றோம்.

சிவஸ்ரீ சிவ. கோகுலநாதக் குருக்கள் (கோபி சிவம்)
ஸ்தாபகர் - ஓம் சிவாகம வேத சதஸ் - லண்டன்.
ஸ்தாபகர் - ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்
கொரைடன், லண்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சனாதன தர்மத்தின் மூலவேர்களாக இருப்பவர்கள் அந்தணர்களே. பாரத நாட்டிலும், ஈழத்திலும் இன்றளவும் நமது சனாமன தர்மமாகிய இந்துசமயம் சார்ந்த பண்பாட்டு மரபுகளை நிலைகுலையாமல் கட்டமைத்து அடுத்த தலைமுறைகளுக்குக் கொண்டுசெல்லும் பெருமைக்குரியவர்கள் அவர்களே.

வேற்று நாடுகளிலிருந்து அவ்வப்போது பாரதத்திற்குள் நுழைந்து தமது பொருளாதார பலத்தினாலும், படை பலத்தினாலும், அதிகார வல்லமையாலும் தத்தமது சமயங்களையும் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களையும் புகுத்தி எமது பண்பாட்டு மரபுகளை இவர்கள் சீரழித்த போதெல்லாம், வேதம், ஆகமம், இதிஹாச புராணங்கள், சாஸ்திரங்கள் என்பவற்றை இறுக்கமாகக் கைக்கொண்டு - அவற்றைக் கற்றும் கற்பித்தும் அழியாமல் காத்து வருவதோடு ஆசார ஒழுக்கங்களை இறுக்கமாகக் கடைப்பிடித்து ஏனையோருக்கு முன்மாதிரியாக விளங்கி வருபவர்கள் அந்தணர்களே.

அந்நியர்களின் தூண்டுதலினாலும், அறியாமையினாலும் நமது தேசத்தவர்கள் பலர் பிறமத மாயையில் கட்டுண்டு அம்மதங்களைக் கைக்கொள்பவர்களாகவும், அவர்களின் நாகரிகங்கள், பழக்கங்களைக் கைக்கொள்வதில் ஈடுபாடு கொண்டவர்களாகவும் மாறிவிட்ட நேரத்திலும் அவ்வாறு திசைமாறாமல் நின்றதோடு, திசைமாறியவர்களுக்கு அறிவுரை கூறி வழிகாட்டி நின்றவர்களும் பலர். அவர்களில் அந்தணர்களின் எண்ணிக்கை அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

வேத சிவாகமங்களின் வழியில் மக்களை நெறிப்படுத்துபவர்களாகவும், தமிழ், சம்ஸ்கிருத மொழிகளை வளம்படுத்தி வாழவைப்பவர்களாகவும், கலை, இலக்கிய மரபுகளைப் பேணுபவர்களாகவும் நமது சமூகத்தின் மிக முக்கியமான அங்கத்தவர்களாகவும் விளங்கிய நமது முன்னோர்களான அந்தணப் பெருமக்கள் பலரின் வரலாறுகளை நாம் அறியாதிருப்பது எவ்வளவு பேதைமை? அந்தணர் அல்லாத சான்றோர்கள் பலர் காலம் காலமாகப் போற்றப்பட்டுவரும் நிலையில் அந்தணர்கள் அவ்வாறு போற்றப்படாமல் இலைமறை காயாக இருப்பது தகுமா?

**ஓம் சிவாகம வேத சதஸ்** அதிபர் கோபி அவர்கள் (சிவஸ்ரீ சி. கோகுலநாதக் குருக்கள் - லண்டன்) இந்த நிலைகண்டு வருந்தினார். புகழ்பெற்ற அந்தணர் வரலாறுகள் தொகுத்து வெளியிடப்படவேண்டும் என விரும்பி இப்பணியை என்னிடம் வழங்கினார். தமிழக அந்தணர் வரலாறு என்னும் தலைப்பில் தமிழ்நாட்டு அந்தணப் பெருமக்கள் பலரைப்பற்றிய தகவல்கள் பதிவாகியிருக்கின்றன. ஈழத்தில் அந்தமாதிரி முயற்சிகள் நடைபெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து அந்தணப் பெருமக்கள் சிலரைப்பற்றிய வரலாற்றுத் தகவல்கள் **'கோப்பாய் சிவம்'** அவர்களை ஆசிரியராகக்கொண்டு சில ஆண்டுகள் வெளிவந்த **'விவித வித்யா'** சஞ்சிகையில் பதிவாகியிருந்தன.

யாழ்ப்பாணத்தில் **சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின்** முயற்சியினால் 2020ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட கருத்தரங்குகளில் பல அந்தணப் பெரியார்களைப் பற்றிய வரலாற்றுத் தகவல்களை அவர்களது வழித்தோன்றல்கள் அல்லது அவர்களோடு தொடர்புடைய ஆர்வலர்கள் பகிர்ந்துகொண்டனர்.

**சிவஸ்ரீ தி. மயூரகிரிக் குருக்கள்** அவர்களும் தமது முகநூல் பக்கத்தில் அவ்வப்போது நமது அந்தணப் பெருமக்கள் பற்றிய குறிப்புக்களைப் பதிவுசெய்து வருகிறார்.

2021 பெப்ரவரியில் வெளிவந்த சித்தமருத்துவ கலாநிதி **சே. சிவசண்முகராஜா** அவர்கள் வெளியிட்ட **"ஈழத்துச் சிவப்பிராமணர்கள்"** என்ற நூல் இத்துறையில் முதலாவது ஆய்வுநூலாகவும், தொகுப்பு நூலாகவும் கொள்ளப்படலாம். இந்நூலில் ஈழத்து அந்தணர்கள் பற்றிய பொதுவான பல தகவல்களை வரலாற்று ரீதியில் அறிந்துகொள்ள முடிகிறது. அதுமட்டுமல்லாமல் சுமார் இருநூறு பக்கங்கள் கொண்ட இந்நூலில் முப்பத்தைந்து பக்கங்களில் 69 அந்தணர்கள் பற்றிய சிறு விபரக் குறிப்புக்கள் (அகர வரிசையில்) சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இத்தகவல்கள் அவரது அனுமதியுடன் இந்நூலில் சேர்க்கப்படுகின்றன.

**பேராசிரியர் சிவலிங்கராஜா** அவர்கள் தமிழிற்குச் சேவையாற்றிய பல அந்தணப் பெரியோர்கள் பற்றி அடிக்கடி பேசுவார்கள். புகழ்மிக்க அந்தணச் சான்றோர் விபரங்கள் தோகுக்கப்படவேண்டுமென்ற தமது ஆவலை அவர் முன்னர் பல தடவை இந்நூலின் தொகுப்பாசிரியரிடம் சொல்லி உற்சாகப்படுத்தியிருக்கிறார்.

இவற்றைவிட யாழ. முற்றவெளி சிவன் தேவஸ்தான ஆதீனகர்த்தரும் பிரதமகுருவுமான **சிவஸ்ரீ சந்திரசேகரசர்மா சதானந்தக் குருக்கள்** அவர்கள் தனிப்பட்ட முறையில் பல அந்தண சிரேஷ்டர்கள் பற்றிய தகவல்களை மட்டுமல்லாமல் நினைவுப் பொருட்களையும் ஒளிப்படங்களையும்கூடச் சேகரித்து வைத்திருக்கிறார். இவரிடம் ஒரு நூதனசாலையே இருப்பதாகக் கூறலாம்.

தம்பி **ஞானம் பலச்சந்திரன்** ஓர் அற்புதமான இளைஞர். அவர் புத்தம்புது இலத்திரனியல் மனிதனா, அல்லது பழம் பஞ்சாங்கமா என்று கண்டுபிடிக்க முடியாது. மிகப்பழைய பல விடயங்களை ஆராய்வதிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிக் கண்டுபிடிப்பதிலும், சேகரம் செய்வதிலும் அவருக்கு நிகர் அவரே! பல அந்தணப் பெரியார்கள் பற்றிய அரிய தகவல்களை அவர் தந்துதவினார்.

**சிவஸ்ரீ வ. ராஜேஸ்வரக் குருக்கள்** அமைதியாக அரும்பணியாற்றுபவர். அவருடைய தந்தையாரைப்பற்றிக் கேட்கப்போக, பல அருமையான தொடர்புகளை ஏற்படுத்தி இந்த நூலுக்கு பெரிதும் உதவியிருக்கிறார்.

இங்கு குறிப்பிட்ட இவை யாவும் இத் தொகுப்பு நூலுக்குத் தரவுகளாக உள்வாங்கப்பட்டிருக்கின்றன. சிலரைப் பற்றிய தகவல்கள் விரிவாகக் கிடைக்கின்றன. சிலரைப்பற்றிய தகவல்களை அறிந்துகொள்ள முடியவில்லை. இயன்றவரை கிடைக்கப்பெற்ற தகவல்கள் சுருக்கமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. சிலரது கட்டுரை நீண்டதாகவும் சிலரது கட்டுரை சிறியதாகவும் அமைந்திருப்ப தற்கான காரணம் அதுவேயன்றி வேறல்ல. வெவ்வேறு நபர்கள் (அந்தந்தச் சான்றோர்களுடன் தொடர்புடையவர்கள்) தொகுத்து வழங்கிய கட்டுரைகள் என்பதனால் அமைப்புமுறை, எழுத்துநடை, அளவு முதலியவற்றில் மாறுபாடு இருப்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகும்.

சிவாசாரியர்கள் அல்லது அந்தணர்கள் என்ற தலைப்பின்கீழ் மிகப் பரந்துபட்ட அளவில் மிகப்பெரிய தொகுப்பாக இதனைத் தொகுக்க முற்பட்டால் பலநூறு பேரை உள்ளடக்கிப் பலநூறு பக்கங்களில் வெளியிடவேண்டிவரும். ஆனால், அது இலகுவான ஒன்றல்ல என்பதால், எமது தலைப்பைப் **புகழ் பூத்த பூசுரர்கள்** என மட்டுப்படுத்தினோம். பல்துறை ஆற்றல்கள் திறமைகளுடன் பலரும் அறியப் புகழுடன் வாழ்ந்த பிரபலங்களை முதலில் தொகுக்கவே விரும்பினோம். இலக்கியம், மேடைப்பேச்சு, சங்கீதம், வைத்தியம், சோதிடம், புராணபடனம், சைவசித்தாந்தம், நூல்பதிப்பு, பல ஊர்களிலுள்ள பல ஆலயங்களுக்குச் சென்று கும்பாபிஷேகங்கள், மஹோற்வசங்கள் செய்தல், சமூக அமைப்புக்களில் அங்கத்துவம் பெற்று சமூக சேவைகளில் ஈடுபடுதல் முதலிய இத்தகைய தகுதிகள் எம்மால் கருத்தில் கொள்ளப்பட்டன. பின் எல்லையாக 2020ஆம் ஆண்டு அமைகிறது. 2020ஆம் ஆண்டுக்குமுன் வாழ்ந்து சாதனை படைத்து மறைந்த அந்தணர்களே இங்கு இடம்பெறுகிறார்கள் என்பது மனம் கொள்ளத்தக்கது.

இன்னும் பல அந்தணப் பெரியார்கள் இத்தொகுப்பில் இடம்பெறவில்லை என்பதை அறிவோம். அவர்கள் பற்றிய விபரங்களைத் தேடிக்கொண்டிருக்கிறோம். மறைந்தவர்கள் மட்டுமே முதலில் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். சிலர் பற்றிய சிறு குறிப்புக்கள், இன்னும் சிலரின் பெயர்கள் மட்டும் குறிப்பிட்டிருக்கிறோம். பெயர்கூடக் குறிப்பிடாமல் தவறவிடப்பட்டவர்களை நமக்கு ஞாபகப் படுத்துவதும், இவர்கள்பற்றிய விபரங்களை இயன்றவரை தந்துதவுவதும் இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் அந்தணர்களின் கடமை என்பதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவூட்ட விரும்புகிறோம். அதேநேரம் இன்னொரு விடயம் முக்கியமானது. எல்லோருக்குமே தமது முன்னோர்கள் பெரியவர்கள்தான். அதற்காக, எல்லோரும் தத்தமது தந்தையரைப்பற்றி எழுதித் தந்தால் அனைத்தையும் சேர்க்கமுடியாத நிலை ஏற்படும். வாழ்க்கையில் சில சாதனைகளைச் செய்தவர்களாக, புகழ் பெற்றவர்களாக, ஏதாவது ஒரு துறையிலாவது சிகரம் தொட்டவர்களாக இருப்பது அவசியம்.

இன்னொருவிதமான அவதானிப்பும் தேவை என்பதை நாம் உணர்கிறோம். குடத்துவிக்குகளைக் குன்றின்மேல் ஏற்றுவதே அது. அடுத்த முயற்சி அதுதான். கல்வி கேள்விகளில் வல்லவராகவும், ஆசார அனுஷ்டானங்களில் இறுக்கமான பிடிப்புடையவர்களாகவும், அதனாலேயே வெளியுலகில் அலையாமல் தாமும் தம் பாடுமாக இருந்தவர்கள் அநேகர். இன்னொரு வகையில், சொந்தக் கோவிலுடைய ஆதீன கர்த்தர்களாக இருந்த பலர் நன்கு கற்ற, ஆற்றலுடையவர்களாக இருப்பினும் வேறு ஆலயங்களுக்குச் செல்லாமல் தமது ஆலயப் பணியிலேயே ஆயுள் முழுதும் ஈடுபட்டவர்கள். மற்றொரு வகையினர் ஒரே ஆலயத்தில் மிக நீண்ட காலம் அருமையாகப் பணியாற்றி அந்த ஊர் மக்களுக்கும், அந்த ஆலய பரிபாலகர்களுக்கும் தெய்வமாகவே தோன்றும் வகையில் வாழ்ந்தவர்கள்..... இப்படியான வகையறாக்களில் உள்ளவர்களை நாம் தேடத் தொடங்கியிருக்கிறோம். ஆனால் ஒன்றைக் கவனத்தில் கொள்ளவேண்டும். ஓர் இடத்தில் நிலையாகச் சேவையாற்ற முடியாமல் வருடமொரு கோவில் பணியாற்றி அந்தப் பலவீனத்தைச் சாதனையாகக் கொண்டு பத்து வருடத்தில் இருபது கோவில் குருவாக இருந்தவர், ஐந்து வருடத்தில் இருபத்தைந்து கோவில் மஹோற்சவம் செய்தவர் என்று பதிவுகள் செய்வது தவிர்க்கப்படவேண்டும். முதலில் குறிப்பிட்டபடி நாம் மறந்த, அல்லது நாம் அறியாமலிருக்கும் புகழ் பெற்றவர்களும், இப்போது இங்கே குறிப்பிட்ட குடத்து விளக்குகளும் எமது அடுத்த பாகத்தில் இடம்பெறும் வகையில் ஆலோசனைகளையும், தகவல்களையும் தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரிகள். 0094 773018266 (WhatsUp)
kopaysivam@gmail.com

சான்றோர்களான நமது முன்னோர்களின் பெருமைகளை வியந்து போற்றி, அவர்களை நமஸ்கரித்து, அவர்களது ஆசிகளைப் பெற்று நமது அந்தண சமுதாயம் மிக உந்நத நிலையில் அனைத்து மக்களுக்கும் சேவையாற்றி உயர்வடையவேண்டுமென எதிர்பார்த்து இந்நூலினைச் சமர்ப்பிக்கின்றோம்.

ப. சிவானந்த சர்மா
கோப்பாய் சிவம்.
தொகுப்பாசிரியர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை


## பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

**மேனாள் தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்.**


திருமிகு கோப்பாய் சிவம் அவர்கள் தொகுத்து எழுதிய 'புகழ் பூத்த பூசுரர்கள்' என்னும் நூலைப் பார்த்தேன். கோப்பாய் சிவம் பல்பரிமாண ஆளுமை உடையவர். சிறுகதை, கவிதை, கட்டுரை, பதிப்பு, தொகுப்பு, ஆய்வு முதலான பல்வேறு துறைகளிலும் காலூன்றி நிற்பவர். அவரது தேடல் முயற்சியின் அறுவடையே இந்த நூல்.

ஈழத்துப் புலமைப் பாரம்பரியம்பற்றி - அறிஞர்கள் பற்றி நான் ஆய்வு மேற்கொண்டிருந்த வேளையிலே, தமிழ் இலக்கண, இலக்கியக் கல்வியிலும் வடமொழியிலும் பாண்டித்தியம் பெற்ற பிராமணப் புலமையாளர்கள் பலரைப்பற்றி அறிய முடிந்தது. ஆனால், அவர்கள் பற்றிய எழுத்துமூலமான பதிவுகளைப் பெறமுடியவில்லை. இதனால் என் அன்புக்கும் மதிப்புக்குமுரிய பிராமணக் கல்வியாளர்களைக் காணும்தோறும் ஈழத்துப் பிராமண அறிஞர்களைப்பற்றி நூல் எழுதும்படி தூண்டுவேன். எனது கோரிக்கையை ஏற்று கோப்பாய் சிவம் அவர்கள் இந்நூலைத் தந்தமை மிக்க மகிழ்வைத் தருகிறது.

சில மாதங்களுக்குமுன் முனைவர் சிவசண்முகராஜா அவர்கள் "ஈழத்து சிவப்பிராமணர்கள்" என்றதொரு நூலை எழுதினார்கள். கல்வி, புலமை, பதவி முதலானவற்றிலே சிறந்துவிளங்கிய பிராமணர்கள் பலரின் வாழ்வையும் பணியையும் அந்த நூல் பதிவுசெய்துள்ளது.

ஈழத்தின் பல பாகங்களிலும், பிராமண சமூகத்தினர் வாழ்ந்து வந்துள்ளனர். தென்னிலங்கை அரசர்களின் அரசபையிலே பிராமண அறிஞர்கள் இடம்பெற்றிருந் தமைக்கான சான்றுகள் உள. தமிழ்மக்கள் - சிறப்பாக சைவமக்கள் வாழும் இடம் எல்லாம் பிராமணசமூகத்தினர் செல்வாக்குடன் வாழ்ந்துள்ளனர்.

பிராமணர்களின் வாழ்க்கைமுறையின் பிரிக்கமுடியாத அம்சமாகக் கல்வி நடவடிக்கைகள் அமைந்திருந்தன. இவர்கள் வடமொழியிலும், தமிழ்மொழியிலும் நல்ல பயிற்சியும் தேர்ச்சியும் உடையவர்களாக இருந்தனர். சமயச் சடங்கு ஆசாரங்களுக்கு வேண்டிய வடமொழிப் பயிற்சியோடு வடமொழி இலக்கிய இலக்கணங்களையும் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் கற்றுத் தேறியவர்களாகப் பலர் இருந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிற் கடமைகளையும் அதனோடொட்டிய சேவைகளையும் 'புரோகிதம்' என்ற சொல்லால் சிலர் அழைப்பர். உண்மையிலே கோவிற்குருக்கள் அல்லது ஐயர் சைவ சமூகத்தால் குருவாகவே மதிக்கப்பட்டனர். இன்றும் ஓரளவுக்கு மதிக்கப்படுகின்றனர். கோவிற்குருக்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியதோடு ஆலயக் கடமைகளுக்கும் அப்பால், சமூகக் கடமைகளை ஆற்றி வந்தனர், வருகின்றனர். கோப்பாய் சிவத்தின் மொழியிலே இனிவரும் இடங்களில் பூசுரர் என்றே குறிப்பிடுவோம்.

ஆலயப் பூசை புனஸ்காரங்களை பக்திபூர்வமாகச் செய்யும் பூசுரர்களுக்கு சமூக செல்வாக்கு அதிகம். அத்துடன் இப் பூசுரர்களே சமூகத்தில் ஏற்படும் சிறுசிறு சச்சரவுகளைத் தீர்த்துவைப்பவர்களாகவும், நாள், நட்சத்திரம், திதி பார்த்துச் சொல்பவர்களாகவும், வித்தியாரம்பம் செய்துவைப்பவர்களாகவும், நூல்கட்டுதல், விபூதி போடுதல், கிரகசாந்தி முதலான சமயம் சார்ந்த சீர்மியலாளர்களாகவும் விளங்குகின்றனர்.

பூசுரர்கள் பலர் வைத்தியம், சோதிடம் ஆகியவற்றிலும் சிறப்புத் தேர்ச்சி உடையவர்களாக விளங்கினர். இன்றும் ஈழத்திலே பஞ்சாங்கம் கணிக்கும் திறன் பூசுரர்கள் வசமே உள்ளமை குறிப்பிடத்தக்கது. இது நீண்டதொரு மரபின் தொடர்ச்சி என்பதை ஆய்வாளர்கள் அறிவர்.

பூசுரர்களின் மற்றொருபக்கம், அவர்கள் புலமைச் சிறப்புடையவர்களாகத் திகழ்ந்தமையாகும். கல்வி கேள்விகளில் சிறந்து புலமையும் ஞானமும் கொண்ட பூசுரர் மரபொன்று ஈழத்திலே விளங்கியுள்ளமையை இந்த நூல் எடுத்துக்காட்டுகின்றது. ஈழத்துத் தமிழ்ப் புலமைப் பாரம்பரியத்திலே முத்திரை பதித்த பல பூசுரர்கள் இருந்தார்கள். இவர்களின் தமிழ்ப் புலமைக்கு உறுதுணையாக வடமொழிப் புலமையும் உதவியது எனலாம். ஈழத்து இலக்கிய வரலாற்றிலே முதன்மைபெறும் பிராமண அறிஞர்களைப் பட்டியலிடுவது மிகக் கடினம். வகைமாதிரிக்கு ஒருசில அறிஞர்களைச் சுட்டிக்காட்டுகிறோம்.

காசிவாசி செந்திநாதையர், இணுவில் நடராஜையர், மாதகல் ஏரம்பையர், புன்னாலைக்கட்டுவன் கதிர்காமையர், வித்துவ சிரோமணி கணேசையர், நல்லூர் மணி ஐயர், அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள், தும்பளை முத்துக் குமாரசுவாமிக் குருக்கள், சுப்பிரமணிய சாஸ்திரிகள், அராலி விஸ்வநாத சாஸ்திரிகள், கொக்குவில் ரகுநாதையர், துன்னாலை பரமசாமிக்குருக்கள், முகாந்திரம் சதாசிவ ஐயர், பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் என இப்பட்டியல் நீளும். உடனடியாக என் நினைவுக்கு வந்தவர்களையே இங்கு குறிப்பிட்டுள்ளோம். இன்னும் பலர் இருக்கிறார்கள். இவர்களின் பணியையும் பங்களிப்பையும் ஆய்வுநெறிமுறைகளுக்கமையப் பதிவுசெய்யவேண்டியது இந்நூலாசிரியரின் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தர் காலத்திலே கச்சிக் கணேசையர் என்ற மிகப்பெரும் பேரறிஞர் வாழ்ந்துள்ளார். இவர் தமிழ்மொழி, வடமொழி, ஆங்கிலம் முதலான மொழிகளிலே அதிக பாண்டித்தியம் பெற்று அக்கால அரசால் கௌரவிக்கப்பட்டவர் என அறியமுடிகின்றது. இவரைப்பற்றி ச. அம்பிகைபாகன் ஒருசிறு நூலை எழுதியுள்ளார். அக்காலத்தில் இவர் பிராமண முதலியார் என அழைக்கப்பட்டவர். இவரைப்பற்றிய ஆய்வும் செய்யப்படவேண்டும்.

தமிழிலும் வடமொழியிலும் சிறந்த புலமைபெற்ற பூசுரர்கள், கிறீஸ்தவக் கல்வி மரபினுள் செல்வதில் ஆர்வம் காட்டவில்லை. (விதிவிலக்காக ஒருசிலர் ஆங்கிலக் கல்விக்குள் சென்றனர்.) பூசுரர்களின் சமய அனுட்டானங்களும் பக்திசிரத்தையும் கிறீஸ்தவ கல்விச்சூழலுக்குள் செல்லத் தடையாயிருந்த காரணிகளுள் முதன்மையானது எனலாம்.

தமிழ்நாட்டுப் பிராமணர்கள் ஆங்கிலக் கல்வியைப் பெற்று அரச அதிகாரப் பதவிகளைப் பெற்று சமூக மேலாதிக்கமுடையவர்களாகத் திகழ, ஈழத்துப் பிராமணர்களுள் பெரும்பாலானோர் பூசை புனஸ்காரங்களையும், வேதம் ஓதுதலையும் பிரதான பணியாகக் கொண்டு சமூக செல்வாக்குடன் மகிழ்ச்சியாக வாழ்ந்துள்ளனர். இவ்விடயம் சமூகவியல் நோக்கில் ஆராயப்பட வேண்டும்.

ஈழத்துப் பிராமணர்கள் கல்வியில் ஆர்வமுடையவர்களாக இருந்துள்ளனர் என்பதற்குச் சான்றுகள் பல உள. பிராமணர்கள் அல்லாத தமிழ் வடமொழிப் புலமையாளர்களைத் தேடிச்சென்று பிராமணர்கள் பயின்றமைக்குச் சான்றுகள் உள.

தும்பளை முத்துக்குமாரசுவாமிக்குருக்கள், உடுப்பிட்டி சிவசம்புப் புலவரிடம் தினமும் எட்டு மைல் தூரம் நடந்துசென்று கற்றார் என்று முதியவர்கள் கூற நான் கேட்டிருக்கின்றேன். இவ்வாறே பிராமணர்கள் அல்லாத வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை, நீர்வேலி சிவசங்கர பண்டிதர், சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர், நாகநாத பண்டிதர் முதலான அறிஞர்களை அணுகித் தமிழையும் வடமொழியையும் பயின்றுள்ளனர். உடுவில் இரத்தினேஸ்வர ஐயர், வித்துவசிரோமணி கணேசையர் ஆகியோர் தமது ஆசிரியரான சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் பற்றி நூல்கள் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழிலும் வடமொழியிலும் ஆர்வமுடைய இவர்கள் ஆங்கிலக் கல்விக்குள்ளே செல்லாமைக்கு சமயமே அடிப்படைக் காரணமெனினும் சமூகவியற் காரணங்களும் இருக்கலாம். இவை ஆய்வுசெய்யப்படவேண்டியவை.

ஆங்கிலேயராட்சிக் காலத்தில் ஓரளவுக்கு ஆங்கிலம் கற்ற தமிழ்மொழி அறிவுடைய பிராமண அறிஞர்கள் பலர் தோற்றம் பெறுகின்றனர். அரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்பதவிகளிலும் அமர்ந்துள்ளனர். மிகச்சிறந்த மாணாக்கர் பரம்பரையையும் உருவாக்கியுள்ளனர். இந்தவகையிலே முகாந்திரம் தி. சதாசிவ ஐயர், பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள், பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர், பேராசிரியர் நா. சுப்பிரமணிய ஐயர் முதலானவர்களின் பெயர்கள் உடனடியாக என் நினைவுக்கு வருகின்றனர். இன்னும் பலர் இருக்கின்றார்கள். அவர்களின் விபரங்களையும் பதிவுசெய்வது நலம்.

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தை நிறுவிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் (ஆரம்பத்தில் மணி ஐயர், மணிபாகவதர்) அவர்களைப்பற்றியும் ஆய்வுசெய்யப்பட வேண்டியது அவசியமாகும். அவரின் வழித்தோன்றலும் ஞானம் சஞ்சிகையின் ஸ்தாபகரும் பிரதம ஆசிரியருமாகத் திகழும் எழுத்தாளர் டாக்டர் தி. ஞானசேகரன் அவர்களைப்பற்றியும் கோப்பாய் சிவம் போன்ற அறிஞர்கள் ஆய்வுசெய்து எழுதவேண்டும் என அவாவுறுகிறோம்.

புகழ்பெற்ற தமிழ்ப்பேராசிரியரான க. கணபதிப்பிள்ளை தும்பளை முத்துக்குமாரசுவாமிக் குருக்களின் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. தமது நூலொன்றினை அவர் முத்துக்குமாரசுவாமிக் குருக்களுக்கே சமர்ப்பணம் செய்துள்ளார். அந்த சமர்ப்பணம் பினவருமாறு.

"நத்தும் பருத்தித் துறைவாழ் சிவச்சுடர் நான்மறையோன்
ஒத்தநல் ஆரியம் செந்தமிழ் என்னை உணரவைத்தோன்
முத்துக் குமாரசுவாமிக் குருமணி மொய்க்கழற்கீழ்
வைத்திப் பனுவலை மாணும் அவனருள் வேண்டுவனே"

புகழ்பூத்த பூசுரர்கள் என்ற நூல், பாகம் 1, பாகம் 2 எனத் தொடரவேண்டுமென ஆசைப்படுகிறேன். கோப்பாய் சிவம் ஐயாவுக்கு எமது வாழ்த்துக்கள். பணி தொடர இறைவனை இறைஞ்சுகிறேன்.

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**
**மேனாள் தலைவர், தமிழ்த்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**
**18.06.2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை


## சித்தமருத்துவ கலாநிதி சே. சிவசண்முகராஜா

### சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவப்பிரிவு, யாழ். பல்கலைக்கழகம்.


இலங்கையில் தமிழ், சைவசமயம் என்பவற்றின் வளர்ச்சியில் பிராமணர்களின் வகிபாகம் மிகப்பெரியது. வேதாகம விதிப்படி கோவில்களில் நித்திய நைமித்திக கிரியைகளை நடத்துவதுடன் நின்றுவிடாது தமிழ், சமயம் சார்ந்த நூற்றுக்கணக்கான நூல்களை அவர்கள் ஆக்கியுள்ளனர். சோதிடம், சுதேசமருத்துவம், நாடகம், நடனம். சங்கீதம், சிற்பம் போன்ற பல்வேறு துறைகளிலும் அவர்கள் தமது முத்திரையைப் பதித்துள்ளனர். இலங்கையி லுள்ள பெரும்பாலான இந்துக்கோவில்களின் வளர்ச்சியில் அவர்கள் நேரடியாகவும், இலைமறை காயாகவும் இருந்து அரும்பணியாற்றியுள்ளனர். கோவில் உரிமையாளர்களாக, தர்ம கர்த்தாக்களாக, பூசகர்களாக விளங்கிய பலர் பொருளாதார ரீதியில் தம்மை வளர்த்துக்கொள்ளச் சந்தர்ப்பங்கள் கிடைத்திருந்தபோதிலும் அவர்கள் அவ்விதம் தம்மை வளர்த்துக் கொள்வதில் அக்கறை காட்டவில்லை. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற கொள்கையுடன் ஆலயப்பணிகள், ஊர்ப்புரோகிதங்கள் என்பவற்றைச் செம்மையாகச் செய்து கிடைத்த சொற்ப வருமானத்தில் மனநிறைவுடன் வாழ்க்கை நடத்தியுள்ளனர்.

அதேவேளை, சமஸ்கிருதம், தமிழ், சமயம், சோதிடம், வைத்தியம் போன்ற பல்துறைகளில் மிகுந்த பாண்டித்தியத்துடன் விளங்கிய பலர் அவை சம்பந்தமான பல நூல்களை இயற்றியுள்ளனர். ஆயினும் அவர்கள் தமது பாண்டித்தியத்தை விளம்பரப்படுத்தவோ, அவற்றின்மூலம் புகழ் தேடிக்கொள்ளவோ முயற்சிக்கவில்லை. தமக்கு விதிக்கப்பட்ட பாரம்பரியக் கடமைகளை வழுவாது பின்பற்றி தன்னடக்கத்துடன் வாழ்ந்து மறைந்துபோனோர் பலர். அதனால் அவர்களின் வாழ்க்கை வரலாறுகள் தற்காலச் சந்ததியினருக்குத் தெரியாமல் போய்விட்டன. உண்மையில் அவர்களின் வரலாறுகளும், ஒப்பற்ற செயல்களும் தற்போதுள்ள அந்தணர்களுக்கு மட்டுமன்றி ஏனையோருக்கும் தெரிந்திருக்கவேண்டியது மிகவும் அவசியம்.

அந்தவகையில் இலங்கையில் வாழ்ந்த பிராமண சிரேட்டர்களைப் பற்றிய விபரங்கள் சேகரிக்கப்பட்டு, தொகுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டிய கடமை இன்றைய சந்ததியினருக்கு உண்டு. அந்த நல்முயற்சியில் ஈடுபட்டு, கோப்பாய் சிவம் அவர்கள் ஈழத்துப் புகழ்பூத்த பூசுரர்கள் என்ற இந்த நூலைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். இந்நூல் காலத்தின் தேவைகருதி வெளிவரும் ஒரு நூலாகவுள்ளது. இந்நூலைத் தொகுத்து வெளியிடுவதற்குக் கோப்பாய் சிவம் அவர்கள் மிகப் பொருத்தமானவர் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. அவர் நாடறிந்த எழுத்தாளர். அவரின் தமிழ், சமயம், சமஸ்கிருதம் சார்ந்த புத்தகப்பணிகள் பரந்துபட்டவை. முக்கியமாக ஏடுகளிலும், கையெழுத்துப் பிரதி களாகவும் வழக்கிலிருந்த கிரந்த நூல்கள் பலவற்றைக் கணினி மூலம் அச்சில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டு அவர் செய்துவரும் சாதனையை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

கோப்பாய் சிவம் அவர்கள் இந்த நூலில் கணிசமான புகழ்பூத்த பிராமணோத்தமர்கள் பற்றிய விபரங்களை இயன்றவரை தொகுத்தளித்துள்ளார். விபரங்களைத் தேடிச் சேகரிப்பதில் உள்ள சிரமங்கள் நாமறிந்ததே. முற்காலத்திலே அரசர்கள் தமது செயற்பாடுகளைக் கல்லிலே வெட்டி கல்வெட்டுகளாக எதிர்காலத்தவருக்கு வழங்கியிருந்தனர். ஆனால் அரசர்களைப்போல் வசதியற்றவர்கள் தமது செயற்பாடுகள் பற்றிய விபரங்களை அவர்தம் சந்ததியினர் ஏடுகளில் எழுதிவைத்து அடுத்த சந்ததியினருக்கு வழங்கி வந்தனர். முக்கியமாக ஒருவர் இறந்தபிறகு அவரின் பரம்பரை. குடும்பவிபரம், அவரின் பணிகள் என்பவை பற்றிய விபரங்களைச் செய்யுள்நடையில் ஆக்கி (சரமகவி) இறந்தவரது தசாகத்தன்று படிப்பதும், உறவினர்களுடன் பகிர்ந்துகொள்வதும் வழக்கம். அதனையும் கல்வெட்டு என்றே அழைத்தனர். அந்தவகையில் இறந்தவர் பற்றிய விபரங்கள் உறவினர்களால் ஆவணப்படுத்தப்பட்டுவந்தன. அச்சுயந்திரம் பாவனைக்கு வந்த பிற்பாடு அவை அச்சில் பதிப்பிக்கப்பட்டு வெளியடப்பட்டாலும் அவை பொதுவில் கல்வெட்டுக்கள் என்றே அழைக்கப்பட்டன. கல்வெட்டுப்படித்தல் என்பது தசாகத்தின் ஒரு அங்கமாகவே விளங்கியது என்று கூறலாம்.

ஆனால், இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இறந்தவரைப் பற்றிய விபரங்களை மட்டும் வெளியிடுவதால் மற்றவர்களுக்கு என்ன பிரயோசனம் என்ற கருத்து பலருக்கும் ஏற்பட்டதால் நினைவு மலர்களில் இறந்தவர் பற்றிய விபரங்களும், அவர்பரம்பரை பற்றிய செய்திகளும் சுருக்கப்பட்டு, பொது விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வழக்கமும் ஆரம்பமானது. இது காலத்திற்கேற்ற மாற்றம் என்று சிலர் கூறினாலும், கல்வெட்டு என்று அழைக்கப்படத்தக்க நினைவுமலர் இறந்தவர் பற்றிய பல உண்மைத் தகவல்களைத் தரத்தக்கதாக இருப்பதால் அதனைத் தனித்துச் சிறுநூலாகவேனும் வெளியிடுவது எதிர்காலத்தில் அவர்கள்பற்றிய சரியான தகவல்களைப் பெறுவதற்கும் வாய்ப்பாக அமையும். இதை இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம் சென்ற நூற்றாண்டில் செயற்கரிய செயல்களைச் செய்து, அமரராகிவிட்ட அந்தணர்களைப் பற்றிய விபரங்களைக் சேகரிப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளமை பற்றியே. கோப்பாய் சிவம் அவர்களும் அது பற்றி எடுத்துக் கூறியுள்ளார். இந்நூலில் இடம்பெறாத மேலும் பல புகழ்பெற்ற அந்தணர்கள் எமது மண்ணில் வாழ்ந்து மறைந்துள்ளார்கள். அவர்களைப்பற்றிய விபரங்களும் வெளிக்கொண்டு வரப்படவேண்டும். அதற்கு இந்தநூல் ஒரு உந்துசக்தியாக விளங்குமென நம்புகிறேன்.

இப்படி ஒரு நல்ல நூலை வெளியிடுவதற்கு முன்வந்த கோப்பாய் சிவம் அவர்களின் இந்த முயற்சியைப் பாராட்டுவதுடன் இது போன்ற ஆவணமாக்கல் முயற்சிகளில் அவர் தொடந்தும் ஈடுபடவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

**சே. சிவசண்முகராஜா MD(s) (India)**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவப்பிரிவு,**
**யாழ். பல்கலைக்கழகம். 12.06.2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. போசராச பண்டிதர் (14ஆம் நூற்றாண்டு) 01
2. கங்காதரக் குருக்கள் (14ஆம் நூற்றாண்டு) 01
3. சோம சர்மா (சோமசன்மா) (14ஆம் நூற்றாண்டு) 01
4. சித்தையர் (14ஆம் நூற்றாண்டு) 01
5. வையாபுரி ஐயர் (15ஆம் நூற்றாண்டு) 01
6. கரைசைப் புலவர் (15ஆம் நூற்றாண்டு) 02
7. சுந்தர சாஸ்திரிகள் (15ஆம் நூற்றாண்டு) 02
8. அருணாசலக்குருக்கள் (16ஆம் நூற்றாண்டு) 02
9. இராமலிங்க முனிவர் (1649 -1717) 02
10. பண்டிதராசர் (பதினேழாம் நூற்றாண்டு) 03
11. சுன்னாகம் அ. வரதபண்டிதர் (1656 - 1716) 03
12. கோ. சுப்பையர் (பதினெட்டாம் நூற்றாண்டு) 03
13. நா. சந்திரசேகர பண்டிதர் (பதினெட்டாம் நூற்றாண்டு) 04
14. பா. கணபதி ஐயர் (1709 - 1784) 04
15. சி. அப்புக்குட்டி ஐயர் (1788 - 1863) 04
16. சங்கீதச் சுப்பையர் (1795) 05
17. ம. கார்த்திகேயக் குருக்கள் (பதினெட்டாம் நூற்றாண்டு) 05
18. முருகேசையர் (1785 - 1870) 06
19. இராமசாமி ஐயர் (பதினெட்டாம் நூற்றாண்டு) 06
20. நாகேசு ஐயர் (1809 - 1857) 06
21. நா. குமாரசுவாமிக் குருக்கள் (1819 - 1912) 06
22. மு. கார்த்திகேய புலவர் (23.03.1819 - 1898) 07
23. க. சுப்பையர் (பத்தொன்பதாம் நூற்றாண்டு) 08
24. கணேசையர் (கணேசபண்டிதர்) (1843 - 1881) 08
25. ஆ. சபாரத்தினக் குருக்கள் (பத்தொன்பதாம் நூற்றாண்டு) 09
26. அநந்த சுப்பையர் (பத்தொன்பதாம் நூற்றாண்டு) 09
27. நாராயண சாத்திரிகள் (பத்தொன்பதாம் நூற்றாண்டு) 09
28. இணுவையூர் க. நடராஜ ஐயர் 1822 - 1902 10
29. ச. இரகுநாதையர் (பத்தொன்பதாம் நூற்றாண்டு) 11
30. கா. நாகநாத ஐயர் (பத்தொன்பதாம் நூற்றாண்டு) 11
31. கா. அப்பாசாமி ஐயர் (பத்தொன்பதாம் நூற்றாண்டு) 11
32. நா. விஸ்வநாத சாஸ்திரியார் (பத்தொன்பதாம் நூற்றாண்டு) 12
33. ஹே. கார்த்திகேய ஐயர்(பத்தொன்பதாம் நூற்றாண்டு) 12
34. ச. கதிர்காமையர் (பத்தொன்பதாம் நூற்றாண்டு) 12
35. சி. அகிலேஸ்வர சர்மா (21.03.1893 - 26.02.1953) 13
36. சு. ஏரம்பையர் (1847 - 1914) 14
37. மார்க்கண்டேயர் ஐயர்(பத்தொன்பதாம் நூற்றாண்டு) 14




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. காசிவாசி சி. செந்திநாதையர் (1848 - 1924) 15
39. வே. கார்த்திகேய ஐயர் (பத்தொன்பதாம் நூற்றாண்டு) 16
40. நா. வே. கார்த்திகேயக் குருக்கள் (பத்தொன்பதாம் நூற்றாண்டு) 16
41. நா. சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் (1849 - 1929) 17
42. வித்துவான் கா. சிவசிதம்பர ஐயர் (1851 - 1912) 17
43. ம. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் (1853 - 1936) 18
44. ஹே. சுப்பிரமணிய ஐயர் (1857 - 1912) 18
45. அ. அருணாசல சாஸ்திரிகள் (1857 - 1934.04.13) 19
46. ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் (1875 - ) 21
47. பஞ்சாட்சரக் குருக்கள் (பத்தொன்பதாம் நூற்றாண்டு) 22
48. சங்கர சுப்பையர் 22
49. மகாவித்துவான் சி. கணேசையர் (1878 - 1958) 23
50. ச. சிவானந்தையர் (1878 - 1916) 26
51. வித்துவான் சபாரத்தின ஐயர் (1880 - 1935) 26
52. முகாந்திரம் தி. சதாசிவ ஐயர் (1882 - 1950) 27
53. மு. சோமாஸ்கந்தக் குருக்கள் (20.08.1886 - 25.07. 1940) 29
54. அச்சுவேலி ச. குமாரசுவாமிக் குருக்கள் (16.11.1886 - 21.02.1971) 30
55. கோ. நடேசையர் (14.01.1887 - 07.11.1947) 34
56. ச. கணபதீஸ்வரக்குருக்கள் (10.03.1888 - 13.03.1967) 35
57. பண்டிதர் பஞ்சாட்சரக் குருக்கள் 1889 - 1953 38
58. சு. நவநீதகிருஷ்ண பாரதியார் 1889 - 37
59. வீ. இரத்தினசாமி ஐயர் (இருபதாம் நூற்றாண்டு) 38
60. வயலின் வித்துவான் இரத்தினேச ஐயர் .... - 1963) 39
61. சி. சுப்ரமணிய ஐயர் (19-1-1896 - 19-8-1970) 40
62. இ. கு. பூர்ணானந்தேஸ்வரக் குருக்கள் (07.01.1896 - 11.12.1965) 41
63. ந. கிருஷ்ணசாமிக் (பொன்னுச்சாமிக்) குருக்கள் 02.11.1898 - 19.03.1962) 43
64. நீர்வேலி சு. ஆபதோத்தாரணக் குருக்கள் (12.12.1898 - 04-04-1974) 45
65. சி. இரத்தினசபாபதி ஐயர் (இருபதாம் நூற்றாண்டு) 49
66. ஊரெழு பெரிய குருக்கள் ச. சோமசுந்தரக் குருக்கள் (1900 - 1974) 50
67. நூற் பதிப்பாளர் பிரம்மஸ்ரீ சி. பத்மநாப ஐயர் (1900 - 1971) 52
68. கா. சி. மகேச சர்மா (இருபதாம் நூற்றாண்டு) 52
69. ஆ. சண்முகரத்தின ஐயர் (இருபதாம் நூற்றாண்டு) 52
70. காலி மு. இராமநாதக் குருக்கள் (03.08.1901 - 11.02.1999) 53
71. சி. பாலசுப்பிரமணியக் குருக்கள் (இருபதாம் நூற்றாண்டு) 53
72. ப. இராம ஐயர் (07.06.1907 - 04.01.1987) 54
73. சு. சிவசுப்பிரமணியக் குருக்கள் (1906 - 1984) 54
74. பொன்னுத்துரை ஐயர் (இருபதாம் நூற்றாண்டு) 54
75. சிவஸ்ரீ செல்லையர் சண்முகையர் (இருபதாம் நூற்றாண்டு) 55
76. க. வை ஆத்மநாத சர்மா (1907 - 1975) 55




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. சண்டிலிப்பாய் சு. சின்னையாக் குருக்கள் (இருபதாம் நூற்றாண்டு) 56
78. க. வைத்தியநாத சாஸ்திரிகள் (இருபதாம் நூற்றாண்டு) 56
79. சோதிட நிபுணர் ந. கந்தசாமி ஐயர் (20.04.1908 - 11.01.2001) 57
80. வ. மு. இரத்தினேசுவர ஐயர் (இருபதாம் நூற்றாண்டு ஆரம்பம்) 57
81. திருகோணமலை சு. சோமாஸ்கந்தக் குருக்கள் (1910 - 07.05.1985) 58
82. பா. சண்முகக் குருக்கள் (இருபதாம் நூற்றாண்டு) 59
83. புல்லாங்குழல் மூர்த்தி ஐயர் (1910 - 1982) 60
84. சித்தாந்தபானு சோ. சுப்பிரமணியக் குருக்கள் (06.09.1910 - 05.07.2006) 62
85. மட்டக்களப்பு, வீ. வரதராஜக்குருக்கள் (11.12.1911 - 1992.11.14) 65
86. இ. கு. கருணாகரேஸ்வரக் குருக்கள் (31.08.1911 - 16.05.1991) 67
87. சோ. நடராஜக்குருக்கள் (1911 ஆடி அனுஷம் - 26. 11. 1994) 69
88. பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள் (30.01.1912 - 13.11.1988) 72
89. நயினாதீவு. ஐ. கைலாசநாதக் குருக்கள் (04.08.1912 - 02.02.1979) 74
90. மயிலணி மு. சிவகடாட்சக்குருக்கள் (02.08.1913 - 20.07.2002) 78
91. திருக்கோணமலை சு. சண்முகரத்தின சர்மா (29-12-1914 - 24-07-1994) 80
92. இணுவில் கு. இராமநாதக் குருக்கள் (10.09.1914 - 04.07.1983) 84
93. கப்பித்தாவத்தை, பா. சண்முகரத்தினசர்மா (06.11.1915 - 19.05.2012) 88
94. நல்லூர் வயலின் வித்வான் ச. வைத்தீஸ்வர ஐயர் (1916 - 1990) 90
95. சம்ஸ்கிருத பண்டிதர், ச. பஞ்சாட்சர சர்மா (13.11.1916 - 24.09.2003) 92
96. கலாநிதி க. வைத்தீஸ்வரக் குருக்கள் (22.09.1916 - 25.04.2015) 97
97. கம்யூனிஸ்ட் இராமசாமி ஐயர் (29.12.1916 - 11.09.1961) 99
98. திருக்கேதீஸ்வரம் ச. சுப்பிரமணிய பட்டர் (18.01.1917 - 14.09.2002) 105
99. பி. பா. பஞ்சாட்சரக் குருக்கள் (23.10.1917 - 21.09.1991) 108
100. துணைவி செ. மஹேஸ்வரக் குருக்கள் (04.03.1917) 108
101. மாவிட்டபுரம் கு. பாலசுந்தரக் குருக்கள் (14.07.1918 - 08.03.1977) 109
102. சி. எஸ். மணிபாகவதர் (08.02.1918 - 10.04.1981) 110
103. கி. லட்சுமண ஐயர் (இருபதாம் நூற்றாண்டு) 112
104. வித்துவான் பாலசுப்பிரமணிய ஐயர் (1918 - 1993) 113
105. கோண்டாவில், கி. நாராயண சாஸ்திரிகள் (03.05.1919 - 22.10.1990) 114
106. வை. மு. குமாரசாமிக் (சிவசாமிக்) குருக்கள் (10.05.1919-12.10.1974) 116
107. பருத்தித்துறை சோம. இராமநாதக் குருக்கள் (1920 - 1962) 117
108. சண்டிலிப்பாய் சி. நாகேஸ்வரக் குருக்கள் (1920 - 1963) 118
109. வை. மு. பரமசாமிக்குருக்கள் (18.06.1920 - 16.10.2009) 119
110. நல்லூர், சு. ஜெகந்நாத சர்மா (11.05.1921 - 03.10.2010) 122
111. வயலின் வித்துவான் இ. விஸ்வநாத ஐயர் (சங்கீத ஆசிரியர்) 122
112. கலாநிதி, கா. கைலாசநாதக்குருக்கள் (15.08,1921 - 07.08.2000) 123
113. மயிலணி, சிவஸ்ரீ சி. சர்வேஸ்வரக்குருக்கள் 134
114. நீர்வேலி சு. இராஜேந்திரக் குருக்கள் (22.04.1922 - 20.12.2000) 136
115. ஸ்கந்த. சாம்பசிவ சிவாச்சாரியார் (22.07.1922 - 07.02.1996) 141



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

116. வயலின் வித்வான் பி. வைத்தியநாதசர்மா (10-08-1923 - 1973) 144
117. ஓவியர், வே. சிவசுப்பிரமணியக்குருக்கள் (09-03-1924 - 22.11.2004) 146
118. கந்தரோடை, சங்கீதம் ந. நடராஜ ஐயர் (20.12.1924 - 22.10.2000) 148
119. மட்டுவில் ஐ. ஞானசர்மா (31.07. 1924 - 07.12.2010) 149
120. கி. சுப்பிரம்மண்யசாஸ்திரிகள் (05.05.1925 - 14.08.1998) 151
121. கா. சிவசுப்பிரமணியக் குருக்கள் (23.10.1926 - 29.06.2003) 154
122. வயலின் வித்வான் சோமாஸ்கந்த சர்மா (01-03-1926 - 08.11.2011) 155
123. சுழிபுரம், சி. வரதராஜக் குருக்கள் (10.07.1926 - 04.08.1993) 158
124. சி. குஞ்சிதபாதக் குருக்கள் (16.02.1926 - 10.01.2006) 160
125. வயலின் கலைஞர் தி. சுந்தரமூர்த்தி ஐயர் (15.04.1927 - 10.08.1992) 165
126. மாவைஆதீனம் சு. து. ஷண்முகநாத குருக்கள் (07.05.1927 - 06.03.2011) 167
127. பால. வைத்தியநாதக் குருக்கள் (20.07.1927 - 22.04.1998) 171
128. நயினை சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் (16.12.1927 - 21.05.2007) 173
129. தீவகம் நா. யோகீஸ்வரக் குருக்கள் (01.07.1928 - 27.11.2017) 175
130. வயலின் வித்துவான், சர்வேஸ்வர சர்மா (20.01.1928 - 16.06.2010) 177
131. நவாலி, சாமி. விஸ்வநாதக் குருக்கள்(14.05.1928 - 04.01.2010) 178
132. கண்டி இ. சோமாஸ்கந்தக் குருக்கள் (15.01.28 - 11.01.1999) 182
133. சோதிட நிபுணர் வி. பரமேஸ்வர ஐயர் (05.10.1929 - 14.12.2001) 184
134. மயிலணி சோ. சோமாஸ்கந்தக் குருக்கள் (26.03.1930 - 13.12.1997) 185
135. துன்னாலை சபா. ராமச்சந்திர ஐயர் (07.09.1930 - 1987) 186
136. நீர்வேலி, தி. நடனசபாபதி சர்மா (11.08.1930 - 21.04.2018) 187
137. பூரண தியாகராஜக் குருக்கள் (26.06.1931 - 01.10.2016) 190
138. இணுவில் மா.த.ந. வீரமணி ஐயர் (15.10.1931 - 07-10-2003) 194
139. மாவிட்டபுரம், து. சுந்தரமூர்த்திக் குருக்கள் (04.10.1931 - 03.12.2009) 200
140. அரியாலை இ. சுப்பிரமணியக்குருக்கள் (20.01.1931 - 13.04.2008) 203
141. நீர்வேலி ஆ. சந்திரசேகரக் குருக்கள் (19.01.1931 - 26.11.2020) 205
142. ஓவியர் பா. பஞ்சநத சர்மா (பகவான்) (29.09.1932 - 29.04.2010) 207
143. அரியாலை கு. பாலசுப்பிரமணியக் குருக்கள் (1932 - 1990) 211
144. இசைக்கலைஞர், ப. முத்துக்குமாசாமி சர்மா (23.08.1932 -25.06.2019) 213
145. மிருதங்கவித்வான், அ. கணேச சர்மா (12.11.1932 - 06.10.2001) 215
146. எழுத்தாளர் சி. சிவசரவணபவன் (சிற்பி) (28.02.1933 - 09.11.2015) 219
147. நா. சோமகாந்தன் (20ஆம் நூற்றாண்டு) (12.01.1934 - 28-04-2006) 225
148. திருமதி பத்மா சோமகாந்தன் 05-03-1934 - 15.07.2020 227
149. கதிர். செல்லப்பாக்குருக்கள் (26.06.1935 - 30.08.2002) 229
150. திருக்கணிதம், சி. சிதம்பரநாதக்குருக்கள் (18.12.1935 - 24.05.2015) 232
151. சொற்பொழிவாளர் வசந்தா வைத்தியநாதன் (இருபதாம் நூற்றாண்டு) 234
152. வாக்கிய கணிதர் இ. வெங்கடேச ஐயர் (22.02.1936 - 15.01.2014) 235
153. நல்லூர் ப. சர்வேஸ்வர ஐயர் (06.02.1936 - 16.12.2002) 237
154. ஜோதிடர், இ. சத்தியமூர்த்திக்குருக்கள் 1936 - 2013 240



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

155. எழுத்தாளர் சுந்தர. பிரேமசம்பு (17.02.1936 - 24.05.1976) 241
156. கல்வியாளர், இர. சந்திரசேகர சர்மா (12.07.1937 - 01.05.2019) 242
157. இ, மகேஸ்வர சர்மா (கோவை மகேசன்) (22.02.1939 - 04.07.1992) 245
158. திருகோணமலை மு. பத்மநாப சர்மா (09.05.1939 - 01.01.2021) 247
159. பத்திரிகையாளர் வி. பரிபூரணானந்த சர்மா (20.07.1942 - 22.11.2005) 250
160. தாணு. அரிஹரசுப்பிரமணிய சிவாசாரியார் (23.04.1942 - 08.03.2019) 253
161. சித்திரமேழி சோ. நடராஜக் குருக்கள் (27.06.1943 - 19-09.2005) 255
162. மயிலணி சிவஸ்ரீ சி. நாகேஸ்வரக்குருக்கள் (11.03.1943 - 03.11.1994) 257
163. வயலின் வித்துவான், வே. தியாகராஜசர்மா (21.06.1944 - 17.01.2010) 259
164. இ. சோமசுந்தரேஸ்வரக்குருக்கள் (சுப்பையர்)(20.06.1945 - 05.03.2004) 259
165. கானவினோதன் சோ. சண்முகநாதக் குருக்கள் (17.12.1947 - 29.08.2011) 260
166. வயலின் ச. வெங்கடேஸ்வர சர்மா (22.06. 1948 - 20.03.1998) 260
167. மயிலணி, வரதராஜேஸ்வரக்குருக்கள் (24.12.1948 - 17.11.2003) 261
168. இசைக் கலைஞர், இராமநாத சர்மா(1950 அக்டோபர் - 30.12.2007) 263
169. மன்னார், சபா. மனோகரக்குருக்கள் (06-09-1951 - 14.03.2012 ) 264
170. கரணவாய், சி. ஹரகுகவரத சர்மா (08.06.1951 - 15.12.2009) 265
171. கணினிக் கலைஞர் சா.பாலச்சந்திரசர்மா (25.03.1953 - 07.03.2016) 267
172. மிருதங்க வித்துவான், வி. ஜம்புநாத சர்மா (20.12.1958 - 21.12.2015) 268
173. கந்தர்மடம் நா. பாலசுப்பிரமணியக் குருக்கள் (28.10.1954 - 23.04.2016)269
174. கானப்பிரியன், தாணு. வாசுதேவக் குருக்கள் (29.12.1959 - 02.02.2019) 271
175. நல்லூர் ஸ்ரீ. கிருஷ்ணானந்த சர்மா (06.10.1961 - 04.09.2014) 272
176. லண்டன் சா. சுந்தரேசக் குருக்கள் (14.02.1963 - 25.02.2010) 275



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரவரிசையில் அந்தணர் பெயர்கள்


1. அகிலேஸ்வர சர்மா சி. 13
2. அப்பாசாமி ஐயர் கா. 11
3. அப்புக்குட்டி ஐயர் சி. 04
4. அரிஹரசுப்பிரமணியக் குருக்கள் தா. இணுவில் 253
5. அருணாசல சாஸ்திரிகள் அ. 19
6. அருணாசலக்குருக்கள் 02
7. அனந்தசுப்பையர் 09
8. ஆத்மநாதசர்மா க. வை. 55
9. ஆபதோத்தாரணக் குருக்கள் ச. நீர்வேலி 45
10. இரகுநாதையர் ச. 11
11. இரத்தினசாமி ஐயர் வீ. 38
12. இரத்தினசபாபதி ஐயர் சி. 49
13. இரத்தினேஸ்வர ஐயர் வ. மு. 57
14. இரத்தினேச ஐயர் - வயலின் 39
15. இராமசாமி ஐயர் 06
16. இராமசாமி ஐயர் கம்யூனிஸ்ட் 99
17. இராமநாதக் குருக்கள் சோ. பருத்தித்துறை 117
18. இராமநாதக் குருக்கள் கு. இணுவில் 84
19. இராமநாதக் குருக்கள் மு. காலி சிவன்கோவில் 53
20. இராமநாதசர்மா சங்கீத பூஷணம் 263
21. இராமலிங்க முனிவர் 02
22. இராமையர் ப. 54
23. இராஜேந்திரக் குருக்கள் சுவாமிநாத. நீர்வேலி 136
24. ஏரம்பையர் சு. 14
25. கங்காதரக்குருக்கள் 01
26. கதிர்காமையர் ச. 12
27. கந்தசாமி ஐயர் ந. வானியல் அறிஞர் 57
28. கணபதி ஐயர் 04
29. கணபதீஸ்வரக் குருக்கள் ச. காரைநகர் 35
30. கணேசசர்மா அ. மிருதங்கவித்வான் 215
31. கணேசபண்டிதர் (கணேசபண்டிதர்) 07
32. கணேசையர் சி. வித்துவசிரோமணி 23
22. இ. கு. கருணாகரேஸ்வரக் குருக்கள் 67
34. கரைசைப் புலவர் 02
35. கார்த்திகேய ஐயர் ஹே. 12
36. கார்த்திகேய ஐயர் வே. 16
37. கார்த்திகேயக் குருக்கள் நா. வே. 16




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. கார்த்திகேயக் குருக்கள் ம. 05
39. கார்த்திகேயப் புலவர் மு. 07
40. கிருஷ்ணசாமிக் குருக்கள் ந. மட்டுவில் 43
(பொன்னுஸ்வாமிக் குருக்கள்)
41. கிருஷ்ணானந்த சர்மா ஸ்ரீபதி 272
42. குஞ்சிதபாதக் குருக்கள் சி. கொழும்பு 160
43. குமாரசுவாமிக் குருக்கள் ச. அச்சுவேலி 30
44. குமாரசுவாமிக் குருக்கள் நா. 06
45. குமாரசாமிக் குருக்கள் வை. மு. சித்தன்கேணி
(சிவசாமிக் குருக்கள்) 116
46. கைலாசநாதக் குருக்கள் கா. பேராசிரியர் 123
47. கைலாசநாதக் குருக்கள் ஐ. நயினை 74
48. சங்கர சுப்பையர் 22
49. சத்தியமூர்த்திக் குருக்கள் இ. இணுவில் 240
50. சந்திரசேகரக் குருக்கள் ஆ. நீர்வேலி 205
51. சந்திரசேகரசர்மா இர. கல்வியாளர் 242
52. சந்திரசேகர பண்டிதர் நா. 04
53. சண்முக ஐயர் செ. கரம்பொன் 55
54. சண்முகக் குருக்கள் பா. 59
55. சண்முகரத்தின ஐயர் ஆ. 52
56. சண்முகரத்தின சர்மா ச. திருமலை 79
57. சண்முகரத்தினசர்மா பா. கப்பித்தாவத்தை 88
58. சதாசிவ ஐயர் தி. முகாந்திரம் 27
59. சபாரத்தினக் குருக்கள் ஆ. 08
60. சபாரத்தின ஐயர் வித்துவான் 26
61. சர்வேஸ்வர ஐயர் ப. நல்லூர் 237
62. சர்வேஸ்வரக் குருக்கள் மயிலணி 134
63. சர்வேஸ்வர சர்மா சி. வயலின் வித்வான் 177
64. சாம்பசிவக் குருக்கள் ஸ்கந்த. நாயன்மார்கட்டு 141
65. சித்தையர் 01
66. சிதம்பரநாதக் குருக்கள் சி. மட்டுவில் 232
67. சிவகடாட்சக் குருக்கள் மு. மயிலணி 78
68. சிவசரவணபவன் சி. (சிற்பி) கந்தரோடை 219
69. சிவசிதம்பரஜயர் வித்துவான் கா. 17
70. சிவசுப்பிரமணியக் குருக்கள் மட்டக்களப்பு கா. கு. 154
71. சிவசுப்பிரமணியக் குருக்கள் சு. 54
72. சிவசுப்பிரமணியக்குருக்கள் வே. பறாளாய் 146
73. சிவசுப்பிரமணிய சிவாசாரியர் நா. 17
74. சிவானந்தையர் ச. 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75. சின்னையாக் குருக்கள் சு. சண்டிலிப்பாய் 56
76. சீதாராம சாஸ்திரிகள் தி. கி. வியாகரண சிரோமணி 72
77. சுந்தர சாஸ்திரிகள் வா. 02
78. சுந்தர பிரேமசம்பு 241
79. சுந்தரமூர்த்தி ஐயர் தி. வயலின் வித்வான் 165
80. சுந்தரமூர்த்திக் குருக்கள் து. மாவிட்டபுரம் 200
81. சுந்தரேஸ்வரக் குருக்கள் சா. 275
82. சுப்பிரமணிய ஐயர் சி. திருக்கணிதர் 40
83. சுப்பிரமணிய ஐயர் ஹே. 18
84. சுப்பிரமணியக் குருக்கள் இ. அரியாலை 203
85. சுப்பிரமணியக் குருக்கள் சோ. கோப்பாய் சித்தாந்தபானு, 62
86. சுப்பிரமணிய சாஸ்திரிகள் கி. நியாய சிரோமணி 151
87. சுப்பிரமணிய சாஸ்திரிகள் ச. 21
88. சுப்பிரமணியபட்டர் ச. திருக்கேதீஸ்வரம் 105
89. சுப்பையர் க. 07
90. சுப்பையர் கோ. 03
91. சுப்பையர் சங்கீத 05
92. சுப்பையாக் (சோமசுந்தரேஸ்வர)குருக்கள் 259
93. செந்திநாதையர் காசிவாசி 15
94. செல்லப்பாக் குருக்கள் கதிர். மாதகல் 229
95. சோமகாந்தன் நா. 225
96. சோமசன்மா 01
97. சோமசுந்தரக் குருக்கள் ஊரெழு 50
98. சோமாஸ்கந்தக் குருக்கள் மு. 29
99. சோமாஸ்கந்தக் குருக்கள் சு. திருமலை 58
100. சோமாஸ்கந்தக் குருக்கள் கண்டி 182
101. சோமாஸ்கந்தக் குருக்கள் சோ. மயிலணி 185
102. சோமாஸ்கந்தசர்மா வயலின் வித்வான் 155
103. ஞானசர்மா ஐ. மட்டுவில் 149
104. தியாகராஜ சர்மா வே. வயலின் வித்வான் 259
105. தியாகராஜக் குருக்கள் பூரண. மட்டக்களப்பு 190
106. நடராஜக் குருக்கள் சோ. சுழிபுரம் 69
107. நடராஜக் குருக்கள் சோ. சித்திரமேழி 255
108. நடராஜ ஐயர் க. இணுவில் 10
109. நடராஜ ஐயர் சங்கீதம் கந்தரோடை 148
110. நடனசபாபதி சர்மா தி. நீர்வேலி 187
111. நடேசையர் கோ. 34
112. நவநீதகிருஷ்ண பாரதியார் சு. 37
113. நாகநாத ஐயர் கா. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

114. நாகேசு ஐயர் 06
115. நாகேஸ்வரக் குருக்கள் சி. சண்டிலிப்பாய் 118
116. நாகேஸ்வரக் குருக்கள் சி. மயிலணி 257
117. நாராயண சாஸ்திரிகள் கி. கோண்டாவில் 114
118. நாராயண சாஸ்திரிகள் 09
119. பஞ்சநத சர்மா பா. (பகவான்) 207
120. பஞ்சாட்சர குருக்கள் 22
121. பஞ்சாட்சரக்குருக்கள் பண்டிதர் 36
122. பஞ்சாட்சரக் குருக்கள் பி. பா. வண்ணார்பண்ணை 108
123. பஞ்சாட்சர சர்மா பண்டிதர் ச. கோப்பாய் 92
124. பண்டிதராசர் 03
125. பத்மநாப ஐயர் 52
126. பத்மநாப ஐயர் - திருமலை 247
127. பத்மா சோமகாந்தன் எழுத்தாளர் 227
128. பரமசாமிக்குருக்கள் வை. மு. கோப்பாய் 119
129. பரமேஸ்வர ஐயர் வி. சோதிடநிபுணர் 184
130. பரமேஸ்வரக் குருக்கள் சுவாமிநாத. நயினை 173
131. பரிபூரணானந்த சர்மா ஞான ஏந்தல் உடுவில் 250
132. பாலச்சந்திரசர்மா சா. கணினிக் கலைஞர் நீர்வேலி 267
133. பாலசுந்தரக் குருக்கள் மாவிட்டபுரம் 109
134. பாலசுப்பிரமணிய ஐயர் வித்வான் 113
135. பாலசுப்பிரமணியக்குருக்கள் சி. 53
136. பாலசுப்பிரமணியக் குருக்கள் நா. கந்தர்மடம் 269
137. பாலசுப்பிரமணியக்குருக்கள் அரியாலை 211
138. பூர்ணானந்தேஸ்வரக் குருக்கள் இ. கு. 41
139. பொன்னுத்துரை ஐயர் 54
140. போசராச பண்டிதர் 01
141. மகேச சர்மா கா. சி. 52
142. மகேஸ்வர சர்மா இ. (கோவை மகேசன்) 245
143. மகேஸ்வரக் குருக்கள் துணைவி 108
144. மணிபாகவதர் சி. (சுவாமிநாதத் தம்பிரான்) 110
145. மனோகரக் குருக்கள் சபா. மன்னார் 264
146. மார்க்கண்டேய ஐயர் 14
147. முத்துக்குமாரசாமிக் குருக்கள் ம. 18
148. முத்துக்குமாரசாமிசர்மா சங்கீத பூஷணம் ப. 213
149. முருகேசையர் 06
150. மூர்த்தி ஐயர் புல்லாங்குழல் 60
151. யோகீஸ்வரக் குருக்கள் நா. தீவகம் 175
152. ராமச்சந்திரக் குருக்கள் சபா. துன்னாலை 186



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| | | |
|---|---|---|
| 153. | லக்ஷ்மண ஐயர் கி. | 112 |
| 154. | வசந்தா வைத்தியநாதன் | 234 |
| 155. | வரதபண்டிதர் | 03 |
| 156. | வரதராஜக் குருக்கள் சி. சுழிபுரம் | 158 |
| 157. | வரதராஜக் குருக்கள் வீ. ஆனைப்பந்தி | 65 |
| 158. | வரதராஜக்குருக்கள் சோ. புளியங்கூடல் | 260 |
| 159. | வரதராஜேஸ்வரக் குருக்கள் ச. மயிலணி | 261 |
| 160. | வாசுதேவக் குருக்கள் தாணு. தாவடி | 271 |
| 161. | விஸ்வநாதக் குருக்கள் சாமி நவாலி | 178 |
| 162. | விஸ்வநாத ஐயர் இ. வயலின் வித்வான் | 122 |
| 163. | விஸ்வநாத சாஸ்திரியார் நா. | 12 |
| 164. | வீரமணி ஐயர் ந. மஹாவித்வான் இணுவில் | 194 |
| 165. | வெங்கடேச ஐயர் இ. கொக்குவில் | 235 |
| 166. | வெங்கடேஸ்வரசர்மா ச. வயலின் வித்வான் | 260 |
| 167. | வைத்தியநாதக் குருக்கள் பால. ஊரெழு | 168 |
| 168. | வைத்தியநாதசர்மா பி. வயலின் வித்வான் | 144 |
| 169. | வைத்தியநாத சாஸ்திரிகள் க. | 56 |
| 170. | வைத்தீஸ்வரக் குருக்கள் க. காரைநகர் | 97 |
| 171. | வைத்தீஸ்வரஐயர் ச. வயலின் வித்வான் | 90 |
| 172. | வையாபுரி ஐயர் | 01 |
| 173. | ஜம்புநாத சர்மா வி. மிருதங்க வித்வான் | 268 |
| 174. | ஜெகந்நாத ஐயர் சு. ஓவியர் நல்லூர் | 122 |
| 175. | ஷண்முகநாதக் குருக்கள் சு. து. மாவை | 167 |
| 176. | ஹரகுஹவரத சர்மா சி. கரணவாய் | 265 |


## கல்விப் பாரம்பரியமும் பிராமண சமுதாயமும்.

இந்தத் தொகுப்புநூலைப் படிப்பவர்கள் ஒரு விஷயத்தை அவதானிக்கலாம். தந்தையும் மகனுமாகச் சிலர் இங்கு இடம்பெற்றிருக்கிறார்கள். இன்னும் சிலர் வம்சத் தொடர்கொடியாகவே உள்ளனர். அவர்கள் வெவ்வேறிடத்தில் கால வரிசைக்கமைய இருக்கிறார்கள். ஆய்வு நோக்கில் படிப்பவர்கள் இதனை அவதானிக்கலாம். உதாரணமாக பஞ்சாங்க கணிதப் பரம்பரை, காரைநகர் சார் பரம்பரை, புன்னாலைக்கட்டுவன் - தெல்லிப்பழை சார் பரம்பரை, அராலி - வட்டுக்கோட்டை சார் பரம்பரை, முனீஸ்வரம் - நல்லூர் சிவன் தேவஸ்தான பரம்பரை எனச் சிலவற்றைக் கூறலாம். இவ்விடயத்தில் ஏற்கெனவே ஞானம் பாலச்சந்திரன் அவர்கள் சில ஆய்வுகளைச் செய்திருக்கிறார். அவர் செய்த பஞ்சாங்க கணிதர் பரம்பரையின் வம்சக் கொடியை அடுத்த பக்கத்தில் தருகிறோம். அதேபோல ஏனையவற்றை ஆய்வாளர்கள் தொடர்வார்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்

ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்
தொகுப்பாசிரியர் ஆ. சதாசிவம்.
- சாகித்தியமண்டல வெளியீடு 1966

ஈழநாட்டின் தமிழ்ச்சுடர் மணிகள்
தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை
- சென்னை, பாரிநிலைய வெளியீடு 1967

தமிழறிஞர் சரித்திரம் (வட்டுக்கோட்டைத் தொகுதி)
வட்டுக்கோட்டைத் தமிழ்ச் சங்கம் 1994

இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இசை முன்னோடிகள்
- பிரம்மஸ்ரீ அ. நா. சோமாஸ்கந்தசர்மா1995

ஈழத்துச் சிவப்பிராமணர்
Dr. சே. சிவசண்முகராஜா MD(s) 2021

தமிழ் வளர்த்த தீவகச் சான்றோர்கள்
கலாநிதி, பண்டிதர் செ. திருநாவுக்கரசு 2021

மற்றும்,

மணிவிழா மலர்கள், நினைவு மலர்கள், ஞாபகார்த்த நூல்வெளியீடுகள் இவற்றோடு, குடும்ப உறுப்பினர்கள், சந்ததியினரோடு நேரடித் தொடர்பாடலில் பெறப்பட்ட தகவல்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. போசராச பண்டிதர் (14ஆம் நூற்றாண்டு)

இவர் தம்பதெனியாவில் இருந்து ஆட்சி செய்த நான்காம் பராக்கிரமபாகு மன்னனின் அரசசபையில் அம்மன்னனின் வேண்டுகோட்படி இயற்றிய சரசோதிமாலை (1310) என்னும் சோதிட நூலை அரங்கேற்றம் செய்த ஒரு அந்தணராவார். இவரின் தகப்பனார் பெயர் சரசோதி என்பதால் அவர் பெயரிலேயே இந்நூல் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. மேலும் பிரமகுலதிலகரான தேனுவரைப்பெருமாள் என்று வழங்கும் போசராச பண்டிதர் என்று இவர் பெயர் குறிப்பிடப் பட்டிருப்பதால் இவர் தேனுவரை சந்திரசேகரேஸ்வர ஆலயத்தின் தலைமைப் பிராமணராயிருத்தல் வேண்டும்.

## 2. கங்காதரக் குருக்கள் (14ஆம் நூற்றாண்டு)

இவர் செகராசசேகர மன்னன் காலத்தில் நல்லூர் கைலாசநாதர் கோவிலில் பூசை செய்வதற்காகக் காசியிலிருந்து வரைவழைக்கப்பட்டவராவர். காசிப கோத்திரத்தைச் சேர்ந்தவர். மனைவி அன்னபூரணியம்மா. செகராசசேகர மன்னனுக்கு முடிசூட்டிச் சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி என்னும் பட்டத்தையும் சூட்டிய பெருமை இவருக்குரியது. இவர் வம்சத்தில் வந்த அந்தணர்கள் தற்போதும் வண்ணார்பண்ணை, நீர்வேலி ஆகிய இடங்களில் வசித்து வருகின்றனர்.

## 3. சோம சர்மா (சோமசன்மா) (14ஆம் நூற்றாண்டு)

இவர் சிங்கைச் செகராசசேகர மன்னன் காலத்தவர் (1380 - 1414) இவரது தந்தை இராமேச சர்மா. இவர்கள் இராமேஸ்வரம் அரசுரிமைச் சேதுபதிகளின் வழித்தோன்றல் எனக் கருதப்படுகிறது. இவர் 'செகராச சேகர மாலை' என்னும் சோதிட நூலை எழுதினார்.

## 4. சித்தையர் (14ஆம் நூற்றாண்டு)

இவர் சுபதிருஷ்ட முனிவரின் சீடர். இவர் தங்கியிருந்து தவம் செய்த இடமே சித்தன்கேணி என்று அழைக்கப்படுகிறது. இவரது சீடரே வையாபாடல் இயற்றிய வையாபுரி ஐயர் ஆவார்.

## 5. வையாபுரி ஐயர் (15ஆம் நூற்றாண்டு)

இவர் ஒரு பிராமண சந்நியாசி. சுபதிஷ்ட முனிவரின் சீடரான சித்தையர் என்பவரது சீடராவார். யாழ்ப்பாண வரலாற்றைக் கூறும் வையாபாடலை இயற்றியவர் இவரே. வையாபாடல் பொய்யாதென்பது முதுமொழி. இப்போது இந்நூலில் 105 செய்யுள்கள் காணப்படுகின்றன. இவர் பரராஜசேகரன், செகராஜ சேகரன் ஆகிய இரு தமிழ்மன்னர்கள் காலத்தில் வாழ்ந்தவர். (1478 - 1515)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. கரைசைப் புலவர் (15ஆம் நூற்றாண்டு)

இவர் உமாபதி சிவாசாரியாரின் மரபினர் என்பர். கோணேஸ்வரம் அருகில் அகத்தியர் ஸ்தாபனமாகக் கருதப்படும் கரைசை என்ற தலத்தைப்பற்றி 'கரைசைப் புராணம்' என்ற நூலை இயற்றியவர்.

## 7. வா. சுந்தர சாஸ்திரிகள் (15ஆம் நூற்றாண்டு)

இவர் பூர்வீகம் தென்னிந்தியாவில் திருநெல்வேலியில் உள்ள கல்லிடைக்குறிச்சியாகும். யாழ்ப்பாணம் வந்து பூர்வ. அபரக்கிரியைகளை எவ்வித பிரதிகளின் உதவியுமின்றி, (மனப்பாடமாகக் கொண்டு) நடத்துவிக்கும் திறமை மிக்கவராய் வண்ணார்பண்ணை, நல்லூர், கோப்பாய், விளைவேலி, நீர்வேலி, கந்தரோடை, காரைதீவு, வட்டுக் கோட்டை, மூளாய். தொல்புரம், சுழிபுரம் ஆகிய இடங்களிலிருந்த பிராமணர்களுக்கு உபாத்தியாயராகவிருந்து, பின்னர் அராலியிலிருந்த ஜோதிஷ கணித சாஸ்திரிகளின் மரபினர்க்கும் உபாத்தியாயராகவிருந்து, அவர்களிடையே விவாக உறவு கொண்டு, அராலி சிவன் கோவில் பூசகராகவுமிருந்து, அராலியிலேயே இறந்தனர்.

## 8. அருணாசலக்குருக்கள் (16ஆம் நூற்றாண்டு)

இவர் யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனில் வாழ்ந்தவர். இவரின் பூர்வீகம் திருவண்ணாமலையாகும். அட்டகர்ம, மாந்திரீகப் பிரயோகத்திலும் சிறந்து விளங்கியவர். நமசிவாயக்குருக்கள், சுப்பிரமணியக்குருக்கள். சின்னையாக் குருக்கள் (சபாபதிக்குருக்கள்) என்று இவர் சந்ததியினர் வேதாகம பண்டிதராய் விளங்கினர். கோப்பாயில் விக்கினேஸ்வர பைரவாலயங்களைத் தாபித்தவர் இவரே.

## 9. இராமலிங்க முனிவர் (1649 -1717)

யாழ்ப்பாணத்தை அரசாண்ட கூழங்கைச் சக்கரவர்த்தியால் இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட அந்தணரான இவர், அராலியில் வாழ்ந்த சந்திரசேகர சாத்திரிகளின் மைந்தர். தமிழ் வடமொழி இரண்டிலும் வல்லவர். சோதிடக் கலையிலும பாண்டித்தியம் பெற்றவர். தமது 18ஆம் வயசில் 1667இல் வாக்கிய பஞ்சாங்கத்தை முதன்முதற் கணித்துக் கையெழுத்துப் பிரதியாக வழங்கி வெளிப்படுத்தியவர், அந்தப் பஞ்சாங்கம் இவருக்குப்பின் இவரின் பரம்பரையினரால் தொடர்ந்து கையெழுத்துப் பிரதியாகக் கணிக்கப்பட்டு வரலாயிற்று. இராமலிங்க முனிவர் பழமொழிப் பிரபந்தம், சந்தானதீபிகை ஆகிய நூல்களையும் ஆக்கியவர். சந்தான தீபிகை 01-01-1713இல் வடமொழியிலிருந்து பெயர்த்துத் தமிழில் எழுதப்பட்ட நூலாகும். இது 122 விருத்தப் பாக்களைக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. பண்டிதராசர் (பதினேழாம் நூற்றாண்டு)

இவர் 350 ஆண்டுகளுக்கு முன்னர் திரிகோணமலையில் கோணேஸ்வரர் கோயில் அர்ச்சகராக இருந்தவர். வடமொழி, தென்மொழியில் அதிசமர்த்தர். கவிபாடுவதிலும் வல்லவர். தக்கிண கைலாச புராணம் எனப்படும் கோணேசர் தலபுராணம் இவர் இயற்றியதாகும். இவர் காலம் செகராசசேகரன் காலமாகும்.

## 11. சுன்னாகம் அ. வரதபண்டிதர் (1656 – 1716)

ஒல்லாந்தர் காலத்தில் அரங்கநாதையர் காசிநகரிலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள சுன்னாகத்திற்கு வந்து குடியேறினார். அரங்கநாதையருக்கு மகனாக 1656 இல் பிறந்தவர் வரதபண்டிதர். சிறு வயதிலிருந்தே தந்தையிடமும் பிறரிடமும் நூலறிவுபெற்றார். இவர் சங்கநூல்களுடன் பெரியபுராணம், திருக்குறள் போன்ற நூல்களைக் கற்றதாக குமாரசுவாமிப் புலவர் தெரிவிக்கின்றார். இவர் ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்தபடியால் சைவசமய நூல்களையே பெரிதும் ஆக்கியுள்ளார். சிவராத்திரி புராணம், ஏகாதசிபுராணம், அமுதாகரம், பிள்ளையார் கதை, கிள்ளை விடு தூது போன்ற நூல்களையும், மாவிட்டபுரம் கோயிற்கடவை, தெல்லிப்பளை தோதாரை போன்ற தலங்கள் மீதும் பாக்கள் பாடியுள்ளார். இவர் அச்சுவேலியிலே விவாகம் செய்து அங்கு வசித்துவந்தார். அச்சுவேலிச் சந்தைக்கு அருகில் இவர் இருந்த வளவு புலவனார் வளவு என்று அழைக்கப்பட்டு வந்தது. ஒல்லாந்தர் கால ஆரம்பத்தில் மதமாற்றங்களும். கெடுபிடிகளும் இருந்த வேளையில் வரத பண்டிதர் இவ்விதம் நூல்களை இயற்றியுள்ளமையானது அவர் சைவசமயத்தில் கொண்டுள்ள அதீத ஈடுபாட்டைக் காட்டுகிறது. வரதபண்டிதர் இயற்றிய நூல்கள் யாவற்றையும் சேர்த்து, வரதபண்டிதம் என்ற பெயரில் இந்துகலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவர் 1716 வரை வாழ்ந்து தமிழ்த்தொண்டு செய்துள்ளார்.

## 12. கோ. சுப்பையர் (பதினெட்டாம் நூற்றாண்டு)

இவரின் தகப்பன் பெயர் கோபாலையர் என்பதாம். யாழ்ப்பாணம் கந்தரோடையில் வாழ்ந்த இவர் 1704 இல் மாகியப்பிட்டி, அங்கணம்மைக் கடவையில் தமது காணியில் மீனாட்சியம்மன் கோயிலைக் கல்லால கட்டியவர் என்று தோம்பு கூறுகின்றது. கௌண்டின்ய கோத்திரத்தைச் சேர்ந்தவர். வேதாகம புராண இதிகாசங்களிற் பெரும் பாண்டித்தியம் பெற்றவராகவும் விளங்கினார். இவரின் பேரனார் கார்த்திகேய ஐயர் என்பவர். இவரும் வேதாகமத்தில் தேர்ச்சி பெற்றிருந்ததுடன் புராணபடனம் செய்வதிலும், சோதிடத்திலும் சிறந்து விளங்கியுள்ளார். அங்கணம்மைக்கடவை மீனாட்சியம்மன் கோவில் பூசகர்களாக இருந்த இவர்கள் அக்காலத்தில் அதிகார புருடராக விளங்கினர் என்பர். இவர்களின் பூர்வீகம் கும்பகோணம் என்று கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. நா. சந்திரசேகர பண்டிதர்
### (பதினெட்டாம் நூற்றாண்டு)

இவர் 250 ஆண்டுகளுக்கு முன்னர் நல்லூரில் இருந்த ஆதிசைவப் பிராமண குலத்தவரான நாராயணப்பட்டரின் புதல்வர். கவி பாடுவதில் சமர்த்தர். நல்லூர் கந்தசுவாமி மீது ஒரு கிள்ளைவிடு தூது பாடியுள்ளார். இது சகவாண்டு 1708 இல் இயற்றப்பட்டதாகும்.

## 14. பா. கணபதி ஐயர் (1709 ~ 1784)

இவர் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 18 ஆம் நூற்றாண்டில் வசித்தவர். தந்தையார் பாலகிருட்டின ஐயர் காஞ்சிபுரத்திலிருந்து வந்தவர். பிரம்மசாரியாக வாழ்ந்த இவர் பல நாடகங்களை இயற்றியதுடன், வட்டுநகர்ப் பிட்டிவயற் (சங்கரத்தை) பத்திரகாளி பேரிற் பதிகமும். ஊஞ்சற் பிரபந்தமும், பருத்தித்துறை கணேசர் பேரில் வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி, மருள் என்னும் பாவிகற்பம் பெற்ற நூறு கவிகளும் பாடியுள்ளார். தமது உறவினர் சண்முக ஐயர் என்பார் இயற்றி நிறைவேறாமல் கிடந்த 'சுந்தரி நாடகத்'தை 'வாளபிமன் நாடகம்' என்ற பெயரில் மாற்றி எழுதி முடித்தார். வண்ணை வைத்திலிங்கர் குறவஞ்சி, மலையகந்தினி நாடகம், அலங்காரரூப நாடகம், அதிருபவதி நாடகம் என்பவற்றை இவர் இயற்றியுள்ளார். முதன்முதலில் கோவிலின் பெயரால் ஊஞ்சற் பிரபந்தம் இயற்றியவர் இவரே.

## 15. சி. அப்புக்குட்டி ஐயர் (1788 ~ 1863)

இவரின் தகப்பனார் பெயர் சிகிவாகன ஐயர். இவரின் வேறு பெயர் பாலசுப்பிரமணிய ஐயர் என்பதாம். இவர் கி.பி.1788 - 1863 காலப்பகுதியில் வாழ்ந்தவர். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் அர்ச்சகராகப் பணிபுரிந்தவர். இவர் 13.09.1825 ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நீதித்தலத்தில் புறக்டராகப் பணிபுரிய எட்வேட்ஸ் பாண்ஸ் (Sir Edward Banes) பிரபுவிடமிருந்து அனுமதி பெற்றிருந்தனர்.

இவர் நல்லூரார்ச் சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ், சூதுபுராணம் என்பவற்றையும் வேறு தனிப்பாடல்களையும் பாடியுள்ளார். ஆங்கிலேயர் ஆட்சி இலங்கையில் ஏற்பட்டதும் சைவாலயங்களுக்கு அர்ச்சகர்களும் அரசினரால் நியமனம் பெற்றார்கள். அவர்களுக்குரிய மரியாதைகளும் வரிசைகளும் ஆணைப்பத்திரம் மூலமாகத் தேசாதிபதி கைச்சாத்தோடு வழங்கப்பட்டன. இங்ஙனம் தேசாதிபதி கைச்சாத்தோடு நியமன நிருபம் பெற்றாருள்ளே முதல்வர் நல்லூர்க் கோயில் அர்ச்சகர் சிகிவாகன ஐயர் புத்திரராகிய பாலசுப்பிரமணிய ஐயர். இவருக்கு நியமனப் பத்திரம் 05.01.1807 இல் தேசாதிபதி தோமஸ் மேற்லண்ட் (கவணர்) அவர்களாற் கொடுக்கப்பட்டது. அப்பத்திரம் இன்றும் அவர் சந்ததியாரிடமுள்ளது. இவர் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளக்கட்டுவதில் முன்னின்றுழைத்த கிருஷ்ணையர் சுப்பையரின் பேரன் என்று கூறப்படுகிறது. இவரின் தம்பியான வேங்கடாசல ஐயரின் புதல்வரே ஆறுமுக நாவலருடன் சேர்ந்து பிரங்கம் செய்த கார்த்திகேய ஐயராவார்.

## 16. சங்கீதச் சுப்பையர் (1795)

கோதாவரி நதிக்கரையிற் குடியிருந்த வேங்கடேச ஐயரின் இரண்டாவது புத்திரரான மேருகிரி ஐயர் தமது தமையனார் கோபித்து ஏசிய காரணத்தால் 1762ஆம் ஆண்டளவில் பிறந்த இடத்தை விட்டு நீங்கித் தஞ்சாவூருக்கு வந்து தங்கினார், அங்கிருக்கும் காலத்திலே தமிழை நன்கு கற்றுச் சமர்த்தரானார்.

அந்நாளில் தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பலர் வருதலையறிந்து, 1770ஆம் ஆண்டளவில் மேருகிரி ஐயர் நாகபட்டினத்திலிருந்து தோணியேறிக் காரைநகர் கோவளத்துறையில் வந்திறங்கினார். அவருக்கு முன்னதாகவே கனகசபாபதிக் குருக்கள் என்பவர் திருவுத்தர கோசமங்கையிலிருந்து வந்து காரைநகரிற் குடியேறியிருந்தார். மேருகிரி ஐயர் கனகசபாபதிக்குருக்களின் மரபிலே திருமணம் புரிந்தார். மேருகிரி ஐயரை மேருகிரி முனிவர் என்றும் கூறுவர்.

மேருகிரி முனிவரின் மூத்த மகனாகிய சுப்பையர் தமது தந்தையைப்போலவே தெலுங்கு, ஆரியம் தமிழ் மூன்றிலும் வல்லவர். சங்கீத சாகித்தியத்திலே மிக்க பாண்டித்தியம் உடையவராய், வடதேசத்துக்குப் போக்குவரவு செய்து இசைக் கலையிற் பிரிசித்தி பெற்றுச் சங்கீதச் சுப்பையர் என்று அழைக்கப்பட்டார்.

இவராற் பாடப்பட்டவை : நல்லைநாயகர். நான்மணி மாலை, காரைக்குறவஞ்சி என்பன.

## 17. ம. கார்த்திகேயக் குருக்கள்
### (பதினெட்டாம் நூற்றாண்டு)

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயில் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். கௌண்டின்ய கோத்திரத்தைச் சேர்ந்தவர். மாகியப்பிட்டி அங்கணம்மைக்கடவை மீனாட்சியம்மன் பரம்பரைப் பூசகர். ஆகமங்களில் மிகுந்த பாண்டித்தியம் உள்ளவர். காரைநகர் கார்த்திகேயப்புலவர் தமது மைத்துனரான இவரிடம் ஆகமங்களைக் கற்ற சீடர்களில் ஒருவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. முருகேசையர் (1785 ~ 1870)

19ஆம் நூற்றாண்டில் காரைநகரில் மேருகிரி முனிவரின் குமாரர் சங்கீதச் சுப்பையர். அவர் குமாரராகிய கார்த்திகேசையரின் புதல்வரான முருகேசையர் தன்னை யமகவந்தாதி 1-70 பாடல்கள், தன்னை நாயகரூஞ்சல், குருசேத்திர நாடகம். திக்கையந்தாதி, பாரதம்-மாவிந்தம் என்பவற்றை இயற்றியுள்ளார். ஸ்ரீவத்ச கோத்திரத்தைச் சேர்ந்தவர். இவர் மகன் கார்த்திகேயப் புலவரே விதானமாலை சோதிட நூலை அச்சிட்டவர்.

## 19. இராமசாமி ஐயர் (பதினெட்டாம் நூற்றாண்டு)

வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். 225 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். தகப்பனார் பெயர் சுப்பிரமணிய ஐயர். இவரின் புதல்வரே நாடகப் புலவர் எனவழைக்கப்பட் நாகேசையராவார். கதிரைமலைக் கந்தன் பேரில் பல கீர்த்தனங்களும், விருத்தங்களும் பாடியுள்ளார் என்பர். அருச்சுனன் மனைவியான அல்லி சரித்திரத்தை நாடகமாகப் பாடியவர் என்பர்.

## 20. நாகேசு ஐயர் (1809 ~ 1857)

இவர் வட்டுக்கோட்டைக் கண்ணலிங்கேசுரர் ஆலய அர்ச்சகராயிருந்த இராமசாமி ஐயரின் புதல்வர். நாகேசு பாரதி என்றும் அழைக்கப் பெற்றவர். நாடகப் புலவர் என்ற புகழ்படைத்தவர். அருச்சுன நாடகம், சுபத்திரைநாடகம் என்பவற்றை ஆக்கி, மேடையேற்றி மக்களின் பாராட்டைப் பெற்றவர். வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமியார் மேல் நாணிக்கண்புதைத்தல் என்னும் துறையில் 100 செய்யுள்களைக் கொண்ட அடைக்கலங் கோவையை ஆக்கியவர். இப்புலவர் அமுத நுணுக்கம் என்னும் பெயருடைய விஷ வைத்தியநூலும் எழுதியுள்ளார்.

## 21. நா. குமாரசுவாமிக் குருக்கள் (1819 - 1912)

கௌசிக கோத்திரத்தைச் சேர்ந்த இவரின் தந்தையார் பெயர் நாகேந்திரக் குருக்கள். கி.பி. 1819 - 1912 காலப்பகுதியில் வாழ்ந்தவர். முன்னேஸ்வரம் ஆலயத்தின் பிரதம குருவாகவும் தர்மகர்த்தாவாகவும் விளங்கியதுடன், ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய கோயிலின் பிரதான குருவாகவும் திகழ்ந்தார். வேத சிவாகமங்களில் மிக்க அனுபவமுடைவர். சோதிடம், கணிதம், சிற்பசாஸ்திரங்களில் மிக்க தேர்ச்சி பெற்றவர். முன்னேஸ்வர ஆலயத்தை இந்தியச் சிற்பிகளின் உதவியுடன் சீர்திருத்தி கி.பி 1875 இல் கும்பாபிஷேகம் செய்து வைத்ததுடன் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாதசுவாமி ஆலய விதிமுறைச் சட்டம், ஆலய தர்சன விதி என்னும் நூல்களை இயற்றியுள்ளார். புராதன திருக்கேதீச்சர ஆலயத்தை மீள அமைத்து கும்பாபிஷேகம் செய்ததிலும் இவரின் பங்கு குறிப்பிடத்தக்கது. இவரது புதல்வர் முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் (1856 1901) தந்தைக்குப் பின்னர் முன்னேஸ்வரம் கோவில் பிரதம குருவாகச் சேவை செய்துள்ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 22. மு. கார்த்திகேயப் புலவர்
## (23.03.1819 ~ 1898)

ஸ்ரீவத்ச கோத்திரத்தைச் சேர்ந்த இவர் 1819 - 1898 காலப்பகுதியில் காரைநகரில் வாழ்ந்தவர். இவரின் தகப்பனார் முருகேசையர். தந்தையார் மற்றும் சண்முகம்பிள்ளை என்பாரிடமும் தமிழும், சுவாமிநாத தேசிகரிடம் சம்ஸ்கிருதமும் கற்றவர். இருபாலைச் சேனாதிராய முதலியாரிடமும் தமது ஐயங்களைக் கேட்டு தம்மை உயர்த்திக்கொண்டவர்.

அந்தக்காலத்தில் நெல் முதலியவற்றை மதிப்பிடவும், வேறும் சில அரசகருமங்கள் காரணமாகவும் இருபாலைச் சேனாதிராச முதலியார் காரைநகருக்கு வந்து முருகேசையர் வீட்டில் பத்துப் பதினைந்து தினங்கள் தொடர்ந்து தங்குவது வழக்கம். இதனால் கார்த்திகேயப் புலவருக்கு அவரைக் குருவாகப் பெறும் வாய்ப்புக் கிடைத்தது. இராமாயணம், பாரதம், நன்னூல், காரிகை முதலான நூல்களை அவர் முதலியாரிடம் பாடம் கேட்டனர்.

பதினெட்டு வயதில் வரகவியாகப் பாடல்களியற்றியதால் கார்த்திகேயப் புலவர் எனவழைக்கப்பட்டார். தந்தையாரால் இயற்றப்பட்டுக் குறையிலிருந்த தன்னை யமகஅந்தாதி இறுதி முப்பது செய்யுள்களையும் பாடிப் பூர்த்திசெய்தவர். சூரபன்மன் நாடகம், சந்திரவண்ணன் நாடகம். திருத்தில்லைப் பல்சந்தமாலை. திருப்போசை வெண்பா. நகுலேசரியமக வந்தாதி, வண்ணைத் திரிபந்தாதி, திண்ணபுரத் திரிபந்தாதி. திக்கைத் திரிபந்தாதி என்பவற்றை இயற்றியதுடன். விதானமாலை. தக்ஷிணகைலாச புராணம் என்பவற்றையும் வெளியிட்டுள்ளார். தமது ஊரிலே ஒரு பாடசாலையை ஆரம்பித்து நடத்தியவர். 1886 இல் உதயபானு என்னும் சஞ்சிகையை இவர் ஆரம்பித்து நடத்தியுள்ளார்.

தந்தை முருகேசையர் பாடி வைத்திருந்த குருக்கேத்திர நாடகத்தைத் திருத்தியும் புதுக்கியும் விளக்கியும் இவர் எழுதிப் பலரின் வேண்டுகோட்படி நடிக்கச்செய்து அரங்கேற்றி வைத்தனர். பலரும் வேண்டியபடி சூரபன்மன் நாடகம், சந்திரவண்ணன் நாடகம் என பவற்றையும் ஆக்கி நடிக்கச் செய்து அரங்கேற்றினர். இவர் காலத்தில் கிறிஸ்துவப் பாதிரிமார் பாடசாலைகளைக் கட்டிச் சைவசமய நிந்தனை செய்து, மக்கள் சிலரை ஏமாற்றிக் கிறிஸ்துவராக்கினர். இவரும் மக்களின் ஒத்துழைப்போடு சைவப் பாடசாலைகளைக் கட்டிச் சைவப்பிள்ளைகள் சைவசமயக் கல்விபெற வழி காட்டியதோடு, கிறிஸ்துமத குடாரம் என்னும் கண்டன நூலையும் எழுதிப் பரப்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவரது ஆக்கங்களுள் தலைசிறந்ததாக அறிஞர் திண்ணபுர அந்தாதியைப் போற்றுவர். இந்நூல் திண்ணபுரச் சுந்தரேசுவரப் பெருமான்மேற் பாடப்பட்டது. இதற்குச் செஞ்சொற் கொண்டல் கலாநிதி சிங்காரவேலன் அவர்கள் "செஞ்சொல் விளக்கம்" என்னும் பெயரில் இனிய உரை எழுதியுள்ளார். இவரின் திக்கைத் திரிபந்தாதிக்குப் பண்டிதா க.மயில்வாகனம் அவர்கள் பொழிப்புரை எழுதியுள்ளார். புலவரவர்கள் சிறந்த கவிஞராக, இலக்கியகர்த்தராக, நாடகாசிரியராக, சைவசமயப் பாதுகாவலராக, சோதிடக்கலை விற்பன்னராக, சிறந்த நூற்பதிப்பாசிரியராக, நல்லாசானாக, அருளாளராக விளங்கியுள்ளார்.

இவர் தமது 79ஆவது வயசிலே தமக்கு அந்திய காலம் கிட்டியதை உணர்ந்து, தமது குடும்பத்தார் உறவினர் மாணவரை அருகில அழைத்து நல்ல புத்திமதிகள்கூறி, "எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ..... என்ற அப்பர் திருத்தாண்டகத்தைப் பாடச்செய்து, தாமும் பாடிக் கொண்டே பரகதி யடைந்தார்.

## 23. க. சுப்பையர்

(பத்தொன்பதாம் நூற்றாண்டு)

யாழ்ப்பாணம் மானிப்பாயில் 1820 ஆம் ஆண்டுக்கு முன்னர் கதிரேசையர் என்பவரின் மகனாகப் பிறந்தார். தாயார் பெயர் அன்னப்பிள்ளை. தம்பையர் என்றும் அழைக்கப்பட்ட இவர் தமிழ், சமஸ்கிருதம் என்பவற்றை நன்கு நவாலி கா. தமபையர் என்பாரிடம் கற்றிருந்ததுடன் காரிகை, சோதிடம் என்பவற்றிலும் புராண இதிகாசங்களிலும் பாண்டித்தியம் பெற்று விளங்கினார். கொழும்பிலுள்ள ஆலயம் ஒன்றில் நெடுங்காலம் பூசகராயிருந்த பின்னர் தமது இறுதிக்காலத்தில் மானிப்பாய் தெற்கு வேரகப்பிள்ளையார் கோயிற் பூசகராகச் சேவை புரிந்துள்ளார். இவர் பல தனிப்பாடல்கள் செய்துள்ளார். ஆனால்ட் சதாசிவம் இவரிடத்திலே பாடம் கேட்டார் என அறியப்படுகிறது. 1875 இல் தேக வியோகமடைந்தார்.

## 24. கணேசையர் (கணேசபண்டிதர்)

(1843 - 1881)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் ஒல்லாந்தர் காலப் பிற்பகுதியில் வசித்தவர். பாரத்துவாச கோத்திரத்தைச் சேர்ந்தவர். கொங்கண தேசத்திலிருந்து வந்தவராதலால் இவர் கொச்சிக் கணேசையர் என அழைக்கப்பட்டார். இவர் ஒரு பிராமணப் பிரபு. தமிழ்ப்புலவர்களை ஆதரித்துத் தமிழ் வளர்த்தவர். நல்லூர் வி. சின்னத்தம்பிப் புலவருக்குப் பரிசிலாக பண்டாரக்குளம் என்னும் வயல் நிலத்தை வழங்கியவர். இவர் யாழ்ப்பாணத்துக் கொம்மாடோரின் அரசியற் சங்கத்தில் முதன்மை பூண்டவராயிருந்தமையால் இவரைப் பிராமண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியாரென அழைத்தனர். இவர் பெயரால் அநேக பிரபந்தங்கள் பாடப்பட்டன. (அநந்த சுப்பையர் பற்றிய குறிப்பையும் பார்க்க.)

இவர் தமிழ, சம்ஸ்கிருதம் இரு மொழிகளிலும் வல்லவரான இவர் ஆகமம், இலக்கியம், இலக்கணம் என்பவற்றில் சிறந்துவிளங்கினார். பாண்டிநாட்டிலுள்ள இளையான்குடியிலிருக்கும்போது வடமொழியிலிருந்த அத்தலபுராணத்தைத் தமிழில் மொழிபெயர்த்து இளசைப்புராணம் என்ற பெயரில் விருத்தப் பாவில் பாடினார்.

## 25. ஆ. சபாரத்தினக் குருக்கள்

(பத்தொன்பதாம் நூற்றாண்டு)

யாழ்ப்பாணம், துன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் நெல்லையம்பதித் தமிழாகரர் இயற்றிய ஆசௌச தீபிகை என்னும் நூலுக்குத் தமிழில் தாத்பரிய உரையெழுதியுள்ளார். அது 1964 இல் கொக்குவில் இ. சி. இரகுநாதையரால் பதிப்பிக்கப்பட்டது. வல்லிபுரமான்மியம் என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.

## 26. அநந்த சுப்பையர்

(பத்தொன்பதாம் நூற்றாண்டு)

இவர் ஒல்லாந்தர் காலத்தில் பிரசித்தி பெற்றிருந்த கெணேசையர் என்றும் கணேசையர் என்றும் அழைக்கப்பட்ட ஆதிநாராயண கணேசையர் என்பவரின் பேரன் முறையினராவர். யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் வசித்தவர். பிராமண முதலியார் எனவழைக்கப்பட்டவர். இவர்கள் வழிவந்த ஆ. சண்முகரத்தினையர் என்பார் 1909 இல் திருகோணாசலபுரணம் என்னும் நூலைப் பதிப்பித்துள்ளார். இவர்கள் பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்த பிராமணர் என அறியக்கிடக்கிறது.

## 27. நாராயண சாத்திரிகள்

(பத்தொன்பதாம் நூற்றாண்டு)

இவர் இராமலிங்க முனிவரின் மரபிலே வந்தவர். தமிழ், வடமொழி இரண்டிலும் வல்லவர். இவரது தந்தையார் தில்லைவாழந்தணரில் ஒருவரான சாத்திரிகள். கணித சிந்தாமணியின் ஒரு பகுதியாகிய நடராச பரகிதகணிதம் என்ற சோதிடநூலை நாராயணசாத்திரிகள் இயற்ற, அதனை அவரது இரண்டாவது குமார ராகிய விசுவநாத சாத்திரிகள் புதுக்கியும் விளக்கியும் வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28. சைவசித்தாந்த பேரறிஞர் இணுவையூர்
# க. நடராஜ ஐயர்
## 1822 ~ 1902

1822ஆம் ஆண்டு பிரம்மஸ்ரீ கணேசையர் திருக்குமாரராக உதித்தவர் நடராஜ ஐயர் அவர்கள். வேதம் ஆகமம் சிக்ஷாதி சாஸ்திரங்கள். தமிழ் சமஸ்கிருதம் ஆகியவற்றை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது முதன்மை மாணாக்கராயிருந்து கற்றார். சைவசித்தாந்த சாஸ்திரங்களுள் சிவஞானசித்தியார் சுபக்கம் வியாக்கியானம் எழுதினார். 1901இல் நீலகண்ட பாஷ்யம் எனும் நூலுக்கு உரை எழுதியுள்ளார்.

அக்கால சைவ இலக்கிய சித்தாந்த நூல்களைப் பரிசோதித்து திருத்தி பதிப்பு, மீள்பதிப்பு. திருத்தம் முதலானவற்றிற்கு உதவினார். தமது செல்வங்களை யெல்லாம் பாடசாலை அமைப்பதிலும், பராமரிப்பதிலும், ஆலயங்களுக்கு வழங்குதிலும், பாடசாலைகளுக்கு காணிகள் வழங்குவதிலும் சிரத்தையாய் இருந்தார். தம்மால் அமைக்கப்பட்ட சைவப்பாடசாலைகளுக்குத் தமது மூதாதையரின் பெயரை வைத்தார்.

1. இணுவில் வெங்கடாசல ஐயர் பாடசாலை (தற்போதைய இணுவில் இந்துக் கல்லூரி)

2.கோண்டாவில் வெங்கடாசல ஐயர் பாடசாலை தற்போதைய கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.

இணுவில் இந்துக் கல்லூரிக்கு தமது நிலங்களை வழங்கியுள்ளமை. புங்குடுதீவு இறுப்பிட்டி சித்தி விநாயகர் வித்தியாலயத்திற்கு 100 பரப்பு காணி வழங்கியுள்ளமை.

இவரிடம் கல்வி கற்றோர் வரிசையில் காசிவாசி செந்திநாதையர் மிக முக்கியமானவராவார். இணுவிலில் இன்றும் பிறமதங்கள் பரவாமைக்கு இவர் அன்று ஆற்றிய பணிகளும், தெய்வீக சக்தியுமே துணை புரிகின்றன.

விஷகடி வைத்திய, மாந்திரீகராக விளங்கியுள்ளார். (பாம்பு தீண்டியிருந்தால் தீண்டிய பாம்பினை வரச்செய்து விஷத்தை நீக்க வல்லவர்)

அன்னாரது சிவசாயுச்சியம் 1902 எனக் கருதப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. ச. இரகுநாதையர்
(பத்தொன்பதாம் நூற்றாண்டு)

யாழ்ப்பாணம் கொக்குவில் சந்திரசேகர ஐயரின் புதல்வர். காலயுத்தி வருடம் (1858, 1859) முதல் வாக்கிய பஞ்சாங்கம் கணித்தவர். இவரின் தத்தபுத்திரன் ச. இ. சிவராமலிங்கையர் ஆவர். அவர் ஜயவருடம் (1894, 1895) முதல் வாக்கிய பஞ்சாங்கம் கணித்து வெளியிட்டவர். சிவராமலிங்கையரின் மகன் இ. சி. இரகுநாதையராவார். இவர் விக்கிரம வருடம் (1940, 1941) முதல் வாக்கிய பஞ்சாங்கம் கணித்தவர். வாக்கிய பஞ்சாங்க நிலையம் மூலம் இவர்கள் பல சோதிட சமஸ்கிருத, சமய நூல்களை பதிப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 30. பிரம்மஸ்ரீ கா. நாகநாத ஐயர்
(பத்தொன்பதாம் நூற்றாண்டு)

இவர் கார்த்திகேயப் புலவரின் மூத்த மகன். தந்தையாரிடமே கற்றவர். கவி பாடுவதிலும் வல்லவர். புலியூரந்தாதிக்கு ம. க. வேற்பிள்ளை அவர்கள் எழுதிய உரைநூலைப் பாராட்டி இவர் வழங்கிய சாற்றுகவி இவர் புலமைக்குச் சான்று. தந்தையார் இறந்தபொழுது இவர் பாடிய இரங்கற்பாடலும் உள்ளது.

## 31. கா. அப்பாசாமி ஐயர்
(பத்தொன்பதாம் நூற்றாண்டு)

யாழ்ப்பாணம் வசாவிளானில் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். 1845 அளவில் காசிநாதையர் - பொன்னம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தவர். ஊரெழு மயில்வாகனப் புலவர், வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை ஆகியோரிடம் கற்றவர். நகுலேஸ்வரம்மீது நகுலகிரிப் புராணம் என்னும் பெயரில் தலபுராணம் பாடியுள்ளார். கல்லடி வேலுப்பிள்ளை இவரது மாணவர். 1925 அளவில் மறைந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 32. நா. விஸ்வநாத சாஸ்திரியார்

(பத்தொன்பதாம் நூற்றாண்டு)

இவர் அராலியில் வசித்தவர். இராமலிங்க முனிவர் வழி வந்தவர். இவர் முன்னோர் ஒன்பது தலைமுறைாகப் பஞ்சாங்கம் கணித்து வந்த மரபினர். இவர் வட்டுக்கோட்டை செமினாரியார் கணித முறையையும் கற்றுப் பஞ்சாங்கம் கணித்ததுடன், சோதிடநூல்களை அவர்களுக்குக் கற்பிப்பதில் உதவியாகவுமிருந்தார். செமினாரியார் மூலம் இவருக்கு அரசாங்க சோதிடர் என்ற பட்டமும் கிடைத்தது. இவர் தகப்பனார் பெயர் நாராயண சாஸ்திரிகள் என்றும், வித்துவ சிரோமணி கணேசையர் காலத்துக்கு 103 ஆண்டுகளுக்கு முன் வசித்தவர் என்றும், வண்ணைக் குறவஞ்சி, நகுலமலைக் குறவஞ்சி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார் என்றும் கூறப்படுகிறது. தந்தையார் எழுதிய பரகித கணிதம் என்ற நூலைப் பரிசோதித்து வெளியிட்டவர். வாத்திய கரண கிரகணம் என்ற நூலை இயற்றியவர்.

## 33. ஹே. கார்த்திகேய ஐயர்

(பத்தொன்பதாம் நூற்றாண்டு)

கொழும்புத்துறையைச் சேர்ந்த ஹேரம்பையர் - நீலாயதாட்சியம்மாள் ஆகியோரின் இளைய புதல்வர். இவரே முதன்முதலாகத் திருக்கணித பஞ்சாங்கத்தை 1887-88 இல் வெளியிட்டவராவார். இவர் அக்காலத்தில் சின்ன சாஸ்திரியார் எனப்புகழ்பெற்று விளங்கிய தி. சிதம்பரநாத சாஸ்திரிகளின் மருமகனாவார். இவரின் மூத்த சகோதர் ஆத்மவிசாரம் முதலிய நூல்களைச் செய்த சுப்பிரமணிய ஐயராவார்.

## 34. ச. கதிர்காமையர்

(பத்தொன்பதாம் நூற்றாண்டு)

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். இவரின் தந்தையார் பெயர் சங்கர ஐயர் என்பதாகும். காசிப கோத்திரத்தைச் சேர்ந்தவர். வித்துவசிரோமணி கணேசையரின் பெரிய தந்தையார். இவர் புன்னாலைக்கட்டுவனில் வசித்தவர். ஊரெழு மயில்வாகனப் புலவரிடம் பாடம் கேட்டவர். இணுவில் நடராசையரிடத்திலே சைவசித்தாந்தம் படித்தவர். புன்னாலைக்கட்டுவனில் சைவப்பாடசாலை ஒன்றை நிறுவிச் சைவப்பிள்ளைகளின் கல்விக்கு அரும்பணியாற்றியவர். தமிழிலும் வடமொழியிலும் சிறந்த பாண்டித்தியம் உடையவர். ஊரெழு சரவணமுத்துப்புலவர், காசிவாசி செந்திநாதையர், கணேசையர் முதலியோர் இவரிடம் இளம்வயதில் பாடங்கேட்டவர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35. சி. அகிலேஸ்வர சர்மா

## (21.03.1893 - 26.02.1953)

இவர் யாழ்ப்பாணம் மண்டைதீவில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வாழ்ந்த அந்தணராவார். கொக்குவில் சிதம்பரநாத ஐயரின் ஏகபுத்திரன். ஒரு வயதிலேயே தந்தையை இழந்தார். கொழும்புத்துறை சுப்பிரமணிய ஐயரைக் குருவாயடைந்து வேத சிவாகமங்களைக் கற்று மண்டைதீவு திருவெண்யாடு சித்திவிநாயகர் கோவிலின் பூசகராக அமர்ந்தார். தமது முயற்சியால் பல்துறை அறிஞராக மலர்ந்தார் சோதிடத்திலும் வல்லவரானார். சுமார் நாற்பது வருட காலம் இக்கோயிலிலேயே பணியாற்றினார்.

இத்தலத்திறைவன்மீது திருவெண் காட்டந்தாதி, திருவெண்காட்டுச் சித்திவிநாயகர் திருவூஞ்சல். திருவெண்காட்டீசர் கும்மி என்னும் நூல்களை இயற்றியுள்ளார். அவை 1922 இல் ஒரே நூலாகக் கொக்குவிலில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. இவர் முருகன் கீர்த்தனைப் பதிகம், நடராஜ பஞ்சரத்தினம், மதுரை மீனாட்சியம்மன் மீது பேரின்ப கீர்த்தனை, பதிகம் என்பனவும் பாடியுள்ளார்.

ஆலயத்தின் அருகில் செந்தமிழ்ப்பிரகாச வித்தியாசாலை எனும் பாடசாலையை மிகுந்த சிரமப்பட்டு நடத்திவந்தார். பின்னர் இது அரச பாடசாலை ஆயிற்று. சனசமூக நிலையம் வாசிகசாலை என்பன அமைவதற்கும் சமூக சேவைகள் செய்வதற்கும் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

பண்ணைப்பாலம் அமைவதற்காக பல உயரதிகாரிகளுடன் தொடர்ச்சியாகப் பேசி முயற்சி எடுத்தார். இந்த ஆதங்கத்தைப் பண்ணைப் பாலக் கும்மி என்ற பாடலாகவும் இயற்றினார். இவர் இயற்றிய சோதிட வினாவிடை என்ற நூல் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. இதற்கு இவர் ஆங்கிலத்தில் எழுதிய முன்னுரை இவரது ஆங்கிலப் புலமையைக் காட்டுகிறது.

இவரது ஒரே குழந்தையும், அதனைத் தொடர்ந்து மனைவியும் காலமாகிவிடவே இந்தியா சென்று கேரளாவிலிருந்து ஒரு பெண்ணைத் திருமணம் செய்துவந்தார். இவர்களுக்கு இரு பெண் பிள்ளைகள். அவர்களது வழித்தோன்றல்கள் இன்று வவுனியாவிலும், சுவிஸ் நாட்டிலும் வாழ்கின்றனர். இவரது பேரன் ஒருவரே இப்போது சித்திவிநாயகர் ஆலயத்தின் மஹோற்சவத்தை நடத்திவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36. சு. ஏரம்பையர்

(1847 - 1914)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாதகல் கிராமத்திலே சுப்பிரமணிய சாத்திரியார் என்பவருக்குப் புதல்வராகத் தோன்றியவர் ஏரம்பையர். இவருக்குப் பூர்வீகம், பாண்டிநாட்டிலுள்ள திருப்பூவணம். இவர், தமது தந்தையாரிடத்திலே தமிழையும் வடமொழியையும் சிறிது காலம்வரை பயின்றபின், சங்கானை வேலுப்பிள்ளை ஆசிரியரிடத்திலும், நல்லூர்ச் சம்பந்தப் புலவரிடத்திலும் தமிழிலக்கண இலக்கியங்களைக் கற்றார். சங்கரபண்டிதரிடத்திலும் இவர் வடமொழி நூல்களைக் கற்றார் என்றும் அறியக்கிடக்கின்றது. ஆறுமுக நாவலரிடத்திலும் இவர் சென்று தமது ஐயங்களைக் கேட்டுத் தெளிவதுண்டு என்பர். இவர் மாணவர் பலர்க்குங் கல்வி கற்பித்து வந்ததுமன்றி, ஊர்கடோறுஞ் சென்று சைவ விரிவுரைகளும் ஆற்றிக்கொண்டிருந்தார். வண்ணார் பண்ணையிலே தொடங்கப்பெற்ற சைவப் பரிபாலன சபையில் சைவப் பிரகாசகராகவும் விளங்கினார். ஆறுமுகநாவலரவர்கள் வண்ணார்பண்ணையில் நிறுவிய தமிழ்ச் சங்கத்திலும் உறுப்பினராக இவர் விளங்கினார். கீரிமலையிலே ஆறுமுக நாவலர் தருமப்பொருள் கொண்டு த. கைலாசபிள்ளையவர்கள் நிறுவிய வித்தியாசாலையிலும் இவர் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். 1914ஆம் ஆண்டில் இவர் இவ்வுலக வாழ்வினை நீத்தார். இவர் வடமொழி நீதிசாத்திரத்தினைத் தமிழில் மொழிபெயர்த்து, "நீதிசாரம்" என்னும் பெயருடன் செய்யுள் நூலாக இயற்றியுள்ளார். சேதுபுராண வசன மொன்றும் இவரால் இயற்றப்பட்டுள்ளது.

இவரியற்றிய நூல்கள்:-

1. நீதிசாரம், 2. சேதுபுராணவசனம், 3. கனாநூல், 4. சூரனுடைய முற்பிறப்பு வரலாறு. 5. சிராத்த விதி, 6. ஆசௌச தீபிகை வினாவிடை, 7. மிருகாவதி விலாசம் (நாடகம்). 8. கண்ணப்பர் சரித்திரம் (நாடகம்), 9. மனுநீதிகண்ட சோழன் சரித்திரம் (நாடகம்) 10. நாகேஸ்வரி தோத்திரம், 11. குவாலாலம்பூர் சிவபெருமான் ஊஞ்சல், 12. கவுணாவத்தை வைரவர் ஊஞ்சல், 13. மாதகற் பிள்ளையார் ஊஞ்சல், 14. காலிக் கதிரேசன் ஊஞ்சல், நகுலாசல புராணம்.

## 37. மார்க்கண்டேயர் ஐயர்

(பத்தொன்பதாம் நூற்றாண்டு)

இவர் இணுவில் மகாவித்துவான் வீரமணி ஐயரின் பாட்டனாராவார். ஆத்மபலம் பெற்று விளங்கிய இவர் காலிச் சிவன் கோவிலில் பிரதான சிவாசாரியாராகப் பலகாலம் சேவை புரிந்துள்ளார். இவர் 1917 இல் கதிர்காமத்தில் சமாதியடைந்தார். இவரின் சமாதி மாணிக்ககங்கைக்கரையில் காலிச் சிவாலய அன்பர்களால் அமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 38. காசிவாசி சி. செந்திநாதையர்
## (1848 - 1924)

1848ல் யாழ்ப்பாணத்து குப்பிளானில் சின்னையர் - கௌரியம்மா தம்பதிகளின் மகனாகத் தோன்றிய ஆதிசைவ வேதியரான காசிவாசி செந்திநாதையர் அவர்கள் சிறந்த ஆளுமையாவார்.

புன்னாலைக்கட்டுவனில் இருந்த தமது மாமனார் கதிர்காமையரிடத்தில் தமிழும் சம்ஸ்கிருதமும் கற்றுவந்தார். பின் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பத்தாண்டுகள் முறையாக ஆங்கிலம் கற்றவர். அதன்பின் நல்லூர் சம்பந்தப் புலவரிடத்தில் தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையாகக் கற்றார். ஆறுமுகநாவலரின் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் அவர் ஆரம்பித்த ஆங்கில வித்தியாலயத்திலும் ஆசிரியராகக் கடமையாற்றியவர். அத்தோடு ஆறுமுகநாவலருக்கு வலதுகரமாகச் செயற்பட்டவர்.

1878ஆம் ஆண்டு இந்தியா சென்று திருவனந்தபுரத்தில் சுப்பா சாஸ்திரியார், அனந்தகிருஷ்ண சாஸ்திரியார் ஆகியோரிடம் சம்ஸ்கிருத காவியம், வியாகரணம், தருக்கம் என்பவற்றைக் கற்றார். 1880 இல் இலங்கை திரும்பி கொழும்பு தம்பையா முதலியாரின் தருமசத்திரத்திலே ஆறுமாதகாலம் சைவ சித்தாந்த விரிவுரைகள் ஆற்றினார். 1882இல் மீண்டும் இந்தியா சென்று திருநெல்வேலி சைவப் பாடசாலையொன்றில் ஆசிரியராக இருந்தார். 1883 இல் 'சுஜனமனோரஞ்சனி' என்ற பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். 1888இல் அமிர்தபோதினி என்ற வாரவெளியீட்டினை திருப்பற்றூரிலிருந்து சிலகாலம் வெளியிட்டார்.

1888 முதல் 1898 வரை இவர் காசியில் வசித்துவந்தமையால் காசிவாசி எனப் பெயர் பெற்றார். காசியில் ஐயரவர்கள் கடும் தவம் செய்திருக்கிறார். இந்த தவக்காலத்திலும் அங்கிருந்துகொண்டு எழுதியும் பேசியும் வந்திருக்கிறார். முக்கியமாக, இந்துசாதனம் இதழுக்கு தொடர்ந்து எழுதி அனுப்பி வந்திருக்கிறார். அக்கட்டுரைத் தொகுப்பு 1897ல் 'வைதிக சுத்தாத்துவித சைவ சித்தாந்த சமயம்' என யாழ்ப்பாணத்தில் நூலாகியிருக்கிறது.

1902ஆம் ஆண்டு திருப்பரங்குன்றத்தில் வைதீக சுத்தாத்துவித சைவ சித்தாந்த வித்தியாசாலை அமைத்து அதில் தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் ஆகியவற்றைக் கற்பித்தார். 1906இல் அச்சகம் ஒன்றையும் நிறுவினார். அதன்மூலம் தமது நூல்கள் பலவற்றை வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகோர சிவம் என்ற தீக்ஷா நாமம் கொண்ட ஐயரவர்கள் சிவ பரத்துவத்தை நிறுவி, வைதிக மார்க்கம் சைவமே என காட்டிய ஐயரவர்கள் ஸ்ரீ கண்ட பாஷ்யத்தைத் தேடிக் காசியில் கண்டுபிடித்து, மிக மிக முயன்று பிரம்மசூத்திரத்துக்கான சைவ பாஷ்யமான அதனைத் தமிழ் உரையுடன் 1907ல் பதிப்பித்திருக்கிறார்.

ஆதிசைவர்களையும் ஆகமங்களையும் இகழ்ந்து வந்த ஒரு சந்நியாசியாரை கண்டித்து தாந்த்ரீக துண்ட கண்ட கண்டனம் போன்ற நூல்களையும் எழுதியுள்ளார். 1917ல் தேவாரம் வேதசாரம் என்ற ஆய்வு நூலை எழுதி தேவாரப் பெருமையையும் அது வேதசாரமே என்பதையும் வெளிப்படுத்தினார்.

இவரது நூல்கள்:

கந்தபுராண நவநீதம், ஞானரத்னாவளி, சைவ வேதாந்தம், தேவாரம் வேதசாரம், தத்துவ விளக்கம், சிவஞானபோத வசனாலங்காரதீபம், வஜ்ரடங்கம், வஜ்ரதண்டம், சாண்சத்திரியப் பிரசண்டமாருதம், ஞானபோத விளக்கச் சூறாவளி, நீலகண்டபாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்பு முதலிய இன்னும் அனேக நூல்கள்.

அவருக்கு தமிழகத்திலும் இலங்கையிலும் நிறைய சீடர்கள் இருந்தனர். தத்துவவாதியாக மட்டுமன்றி அநுபூதிச் செல்வராக, துறவின் வடிவமாக, விளங்கிய ஐயரவர்கள் 1924ஆம் ஆண்டு வைகாசி மாத வளர்பிறை ஏகாதசியில்-திருப்பரங்குன்றில் சிவபதம் பெற்றார். காசிவாசி ஐயரவர்கள் யாழகத்தே தோன்றி, உலகெலாம் வைதிக சைவம் சிறக்கச் செய்த பணிகள் நினைதொறும் வியப்பூட்டுவன.

## 39. வே. கார்த்திகேய ஐயர்

(பத்தொன்பதாம் நூற்றாண்டு)

இவர் யாழ்ப்பாணம் நல்லூர் அப்புக்குட்டி ஐயரின் சகோதரரான வேங்கடாசல ஐயரின் புதல்வராவார். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய பாஷைகளில் தேர்ச்சி பெற்றிருந்த இவர் வண்ணார்பண்ணையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருடன் சேர்ந்து பிரசங்கங்கள் செய்துள்ளார்.

## 40. நா. வே. கார்த்திகேயக் குருக்கள்

(பத்தொன்பதாம் நூற்றாண்டு)

நல்லூரைச் சேர்ந்தவர். காசிப கோத்திரத்துக்குரியவர். நல்லூர் ஸ்ரீ கைலாசநாதசுவாமி கோவிலை ஸ்தாபித்தவர் இவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 41. நா. சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார்

1849 - 1929

இவருடைய தந்தையார் நாகேசு ஐயர். தந்தையார் காலத்திலிருந்தே இவர் வட்டு கண்ணலிங்கேசுரர் ஆலய அர்ச்சகராக விளங்கியவர். வேதம் ஆகமங்களில் வல்லவரான இவர் இலக்கியம் வைத்தியம் சோதிடம் என்பவற்றிலும் வல்லவராய் விளங்கினார். அக்காலத்து மக்கள் இவரை நாவன்னா ஐயர் எனச் செல்லமாக அழைப்பர். இவருடைய நூல்களிற் பல இலங்கையிலும் தமிழகத்திலும் அச்சேறின. இவரும் அச்சுக்கூடம் வைத்திருந்து பல நூல்களைப் பதிப்பித்தவர். இவரியற்றிய நூல்கள் ஏகாதசிப்புராணம், தென்கோயிற் புராணம், விநாயகசட்டி புராணம், நல்லூர்க் கைலாசநாதர் புராணம் என்பன. கந்தசட்டி புராணம் இவராற் பாடப்பட்டு வட்டுக்கோட்டை வே. சதாசிவம் பிள்ளையால் 1895ஆம் ஆண்டில் அச்சேறி வெளியாகியது. நெல்லைநாதர் பாடிய சிவராத்திரி புராணத்தைப் பரிசோதித்துப் புதுக்கிச் சென்னையிற் பதிப்பித்த இவர் சமய நூல்கள் பலவற்றை வடமொழியிலிருந்து தமிழிற் பெயர்த்தவர்களுள் தனியிடம் பிடித்துள்ளார். இவர்தாம் வாழ்ந்த சூழலில் அமைந்துள்ள ஆலயங்கள் பலவற்றிற்கு ஊஞ்சற்பாக்கள் பாடியுள்ளார். கண்ணாம்பிகை சமேத கண்ணலிங்கேசர் பேரில் இவர் கலிவெண்பா. எச்சரீக்கை, கப்பற்பாட்டு, லாலி, மங்களம் என்பனவும் பாடியுள்ளார்.

## 42. வித்துவான் கா. சிவசிதம்பர ஐயர்

(1851 - 1912)

கார்த்திகேயப் புலவரின் இளைய குமாரரான இவர் தமிழ், ஆரியம் இரண்டிலும் பெரும்புலமை பெற்றவர். மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான். சைவப் பிரசாரகர். இவர் தட்சிணகைலாச புராணத்தைப் (1887) பதிப்பித்தவர். தந்தை கார்த்திகேயப் புலவரால் முதலிற் பதிப்பிக்கப்பட்ட சோதிடநூலாகிய விதான மாலையை (1900) இரண்டாம் பதிப்புச் செய்தவர். கந்தபுராணம் மகேந்திர காண்டத்துக்கு (1908) இவரெழுதிய உரை, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரால் பரிசோதிக்கப்பட்டு இவரின் புதல்வராகிய கா. சி. மகேச சர்மாவினால் (1909) அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

இவர் பாடிய திக்கைநாயகர் மும்மணிமாலை களபூமியிலுள்ள திக்கரைத் தலத்து முருகப்பெருமான் மீது (1882) பாடப்பட்டது இந்த நூல் பற்றிய குறிப்புக்களை 1882 இல் வெளிவந்த உதயதாரகைப் பத்திரிகை பேசும். காலிக் கதிரேசர் அடைக்கலப்பத்து (1887), கார்த்திகேயப் புலவர் சரித்திரம் (1908) என்னும் நூல்களும் இவரால் ஆக்கப்பட்டவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43. ம. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள்

(1853 - 1936)

யாழ்ப்பாணம் புலோலியில் 1853 - 1936 காலப்பகுதியில் வாழ்ந்தவர். தகப்பன் பெயர் சுப்பிரமணிய ஐயர் மகாதேவ ஐயர் என்பதாகும். இவர்கள் பரராசசேகர மன்னன் காலத்தில் அரசாங்க சோதிடராக இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட அந்தணர் பரம்பரையில் வந்தவர்கள் என்பர். இவர் வண்ணார்பண்ணை சமஸ்கிருத வித்துவான ஐயாத்துரை ஐயரிடமும், உடுப்பிட்டி சிவசம்புப் புலவரிடமும் முறையே சமஸ்கிருதம், தமிழ் என்பவற்றைக் கற்றவர். சோதிடத்திலும், புராணங்களுக்குப் பொருள் சொல்வதிலும் சிறந்து விளங்கினார். புலோலி பசுபதீசுரன் கோவில் அர்ச்சகராகவும், ஆசாரியராகவும் இருந்ததுடன் பிராமணப்பிள்ளைகளுக்குச் சமஸ்கிருதம் கற்பிப்பதில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். வைதீகக் கிரியைகள் செய்வதிலும் வல்லவராக விளங்கிய இவர் பசுபதீசுரன்மேல் ஓர் அந்தாதியும், சிவபெருமான் அலங்காரம் என்னும் ஒரு தோத்திரப் பாமாலையும் பாடியுள்ளார். இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியராக விளங்கிய க. கணபதிப்பிள்ளை இவரின் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 44. ஹே. சுப்பிரமணிய ஐயர்

(1857 - 1912)

இவர் 1857 - 1912 கொழும்புத்துறையில் வசித்தவர். யாழ்ப்பாணத்துக்கு வந்த வாமனப்பட்டர் மரபைச் சேர்ந்தவர். தகப்பனார் பெயர் ஹேரம்பையர். தாயார் திருவானைக் காவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த இராமலிங்க முனிவர் (முதன்முதலாக வாக்கிய பஞ்சாங்கம் வெளியிட்டவர்.) மரபைச்சேர்ந்த நீலாயதாட்சியம்மாள் என்பவராவார். நைஷ்டிக பிரம்மச்சாரியாக வாழ்ந்த இவர் தமிழ், சமஸ்கிருதம் என்பவற்றில் பாண்டித்தியம் பெற்றிருந்ததுடன் யாழ்ப்பாணம் திருநெல்வேலிச் சிவகுருநாதபீட ஸ்தாபகரது குருவாகிய சின்னத்தம்பி என்பவருடன் நெருக்கமானவராக இருந்தார். யாழ்ப்பாணம் கடையிற்சுவாமிகள், ஆன்மவிசாரம் ஆகிய நூல்கள் இவரால் எழுதப்பட்டவையாகும். இவரால் சில கண்டன நூல்கள், தருக்கநூல், குறள் வடிவ வெண்பாக்கள் என்பன எழுதப்பட்டுள்ளதாக அறியப்படினும் அவை கிடைத்திலது. திருநெல்வேலிச் சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையின் உப அதிபராயிருந்த சிவஞானி பொ. கைலாசபதி அவர்கள் ஆன்மவிசாரம் நூலைப் பார்வையிட்டபோது வியப்படைந்து நுலாசிரியரை (One of the greatest thinkers of the world) பாராட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45. அ. அருணாசல சாஸ்திரிகள்

(1857 - 13.04.1934)

பத்தொன்பதாம் நூற்றாண்டு, சைவசமயத்தையும், தமிழ் மொழியையும் இருள் சூழ்ந்திருந்த காலப்பகுதியாகும். அக்காலப் பகுதியில் சைவத்தினையும், தமிழினையும் வளர்க்க ஆறுமுக நாவலருடன் பலர் அரும்பாடு பட்டனர்.

அந்தவகையில், சைவத்தினையும், தமிழினையும் வளர்க்கப் பாடுபட்டவர்தான் பிரம்மஸ்ரீ அருணாசல சாஸ்திரிகள். இவர் 1857ஆம் ஆண்டு பிரம்மஸ்ரீ அப்பாசாமி சாஸ்திரிகளுக்கு அருந்தவப் புதல்வராக அவதரித்தார். சைவ உலகம் போற்றும் மாதகல் பிரம்மஸ்ரீ ச. ஏரம்ப ஐயர் இவரின் தாய் மாமனாவார்.

இவர் உரிய காலத்திலே வித்தியாரம்பம் செய்யப் பெற்றுச் சங்கானை மேற்கு (வடலியடைப்பு) திரு. வேலுப்பிள்ளை ஆசிரியரிடத்துத் தமிழையும், நீர்வேலி சங்கர பண்டிதரிடம் சமஸ்கிருதத்தினையும் கற்று வல்லவரானார். இவரது பாண்டித்தியத்தை அறிந்த நாவலர், தம்மால் வண்ணார்பண்ணையில் ஸ்தாபிக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையில் இவரை ஆசிரியராக அமர்த்தினார். ஆசிரியராகக் கடமையாற்றுவதோடு நில்லாது மேலும் பல நூல்களை ஆராய்ந்து கற்றார்.

மேலும் கல்வி விருத்தியை விரும்பி ஆசிரியர் தொழிலைவிட்டு இந்தியா சென்று தர்க்கம், வியாகரணம் முதலான சாஸ்த்திரங்களைக் கற்று வல்லுநரானார். இந்தியாவில் இருக்கும் காலத்தில் பண்டிதர் சுவாமிநாதர் பதிப்பித்த சிவஞான மாபாடியத்திற்கு உதவிகள் புரிந்து புகழ்பெற்றார். இத்துடன் நில்லாது நாகபட்டினத்தில் இருந்து "ஞானபாஸ்கரன்" என்னும் பத்திரிகையை நடத்திவந்தார்.

இதன்பிறகு தாய் நாட்டிற்கே வந்து ஆறுமுக நாவலர் அவர்களின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி சைவத்தையும், தமிழையும் வளர்ப்போம் எனக் கருதித் தமது ஊராகிய வடலியடைப்பில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பாடசாலையினை 1900ம் ஆண்டு நிறுவி, தாமே நடத்தி வந்தார். இப் பாடசாலை தற்போது வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பெயரில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இப் பாடசாலையில் பிரம்மஸ்ரீ. அ. அருணாசல சாஸ்திரிகள் 1900ம் ஆண்டு முதல் 1920ம் ஆண்டுவரை அதிபராக கடமையாற்றினார். இவரால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை சிறப்பாக நடைபெற்று பல மாணவர்களுக்கு அறிவூட்டி வருகின்றமை தற்போதும் காணக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவன்றி தமது ஊரான வடலியடைப்பில் கிலமாக இருந்த விக்னேஸ்வர் ஆலயத்தினை தமது ஊராரது உதவியுடன் புதுப்பித்துக் கட்டினார். இவ்வாலயம் தற்போது வடலியடைப்பு புதரானை சித்திவிநாயகர் ஆலயம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

இவற்றோடு நில்லாது யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரின் வேண்டுகோளிற்கிணங்க சிதம்பரத்தில் நடைபெற்ற சமஸ்கிருத மாகாநாட்டிற்கு பிரதிநிதியாகச் சென்று புகழ் ஈட்டிக் கொடுத்தார். யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பரீட்சாதிகாரியாகவும் சிலகாலம் கடமையாற்றினார். பல வடமொழி நூல்களை எவரும் விளங்கிக் கொள்ளுமாறு விரித்து எழுதியுள்ளார். அவரால் விரித்து எழுதி அச்சேறிய நூல் ஆபஸ்தம்ப அபரப் பிரயோகம் ஆகும். திரிபதார்த்த விவேகம், வியோம வியாபி மந்திரத்திற்கு விருத்தியுரை. அக்கினி காரிய விருத்தி உரை, சித்தாந்த சாராவளி, பூர்வக் கிரியை என்பன இவரால் எழுதப் பெற்றுக் கையெழுத்துப் பிரதிகளாய் இருந்தன என 1954ம் ஆண்டு ஜூன் மாதம் 06ம் திகதி வெளிவந்த ஈழகேசரி என்னும் பத்திரிகையில் திரு நா. பாலச்சந்திரவிநாயகர் அவர்கள் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இவர் கவிபாடுவதிலும் வல்லவர். மாமனார் ஆகிய சு. ஏரம்ப ஐயர் எழுதிய சேது புராண வசனத்திற்கு இவர் அளித்த சாற்று கவியினால் இது புலனாகும். இவரிடம் சோதிடம், சித்தாந்தம், சிற்பம் என்னும் சாஸ்திரங்களைக் கற்று பலர் வல்லுநரானார்கள். அவர்கள் தமது காலத்தில் புகழுடன் வாழ்ந்துள்ளனர். இதுவன்றி வைதீக ஆகம கிரியைகளை கற்ற பலர் விசேட குருமாராய் விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக சிறந்து விளங்கிய பிரம்மஸ்ரீ அ. அருணாசல சாஸ்திரிகள் அவர்கள் 1934ம் ஆண்டு சித்திரை மாதம் 01ம் (1934.04.13) திகதி இறைவனடி சேர்ந்தார். இவரைப்பற்றிப் பிற்காலத்தில் பலர் தமது கட்டுரைகளில் கூறியுள்ளமை. குறிப்பிடத்தக்கது. அந்தவகையில், 1954ம் ஆண்டு ஜூன் மாதம் 06ம் திகதி வெளிவந்த ஈழகேசரி என்னும் பத்தரிகையில் திரு. நா. பாலச்சந்திரவிநாயகர் அவர்கள் தனது கட்டுரையிலும், க. சி. குலரத்தினம் அவர்கள் பத்திரிகையில் வெளிவந்த தனது கட்டுரையிலும், மங்கையக்கரசி திருசிற்றம்பலம் அவர்கள் அச்சுவேலி சிவாகம ஞானபானு சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்களின் 100வது பிறந்ததின நினைவுக் கட்டுரையிலும் குறிப்பிட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 46. ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள்

(1875 - )

இவர் யாழ்ப்பாணம் தும்பளையைச் சேர்ந்தவர். சபாபதி ஐயர் மகன். முத்துக்குமாரசுவாமிக்குருக்களுக்கு மருமகன். 1875ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி பிறந்தார். தாய்வழிப் பாட்டனாராகிய மகாதேவக் குருக்களே இவரது ஆரம்ப குரு ஆவார். பின் தாய்மாமன் முத்துக்குமாரசாமிக்குருக்களிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் சம்ஸ்கிருதம், தருக்கம், சோதிடம் ஆகியவற்றையும் முறையே கற்றார். மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் சிலகாலம் ஆசிரியராக இருந்தார். இவரது புலமை காரணமாக இவரை யாவரும் சாஸ்திரிகள் என அழைத்தனர்.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் கணிக்கப்பட்டு வெளிவந்த பஞ்சாங்கங்கள் சீரான முறையில் கணிக்கப்படாமையைக் கண்டு அவற்றிலுள்ள குறைபாடுகளை நீக்க முயன்றார். இவரது முயற்சியால் பருத்தித்துறை யிலிருந்து வாக்கிய கணித பஞ்சாங்கமொன்று வெளிவரத் தொடங்கியது. இதனைத் தாமே வெளியிடுவதற்காக, இவர் பருத்தித்துறை, தும்பளையில் அச்சுக்கூடம் ஒன்றை சோதிட விலாச யந்திரசாலை என்ற பெயரில் நிறுவியதுடன் அதன்மூலம் பல தமிழ், சம்ஸ்கிருத நூல்கள் வெளிவரவதற்குக் காரணகர்த்தாவாகவும் விளங்கியுள்ளார். கந்தபுராணம் நான்கு காண்டங்களுக்கு உரையெழுதியுள்ளார். சொற்பொருளகராதி என்னும் நூலும் இவரால் செய்யப்பட்டதாகும். சாதகரத்னாகரம், இருதுசாதகம், பாலசிக்ஷாமஞ்ஜரி, சம்ஸ்கிருத பிரதம பாலபாடம், சிவராத்திரி மகிமை முதலான நூல்கள் இவரால் தமது அச்சகத்தில் வெளியிடப்பட்டன. 1904ஆம் ஆண்டிலே தமது தம்பியாராகிய சோமசுந்தர ஐயரின் துணையுடன் புதிதொரு அச்சகத்தினை 'கலாநிதி யந்திரசாலை' என்னும் பெயருடன் நிறுவிக்கொண்டனர். அவ்வச்சகத்தில் அவரது நூல்கள் யாவும் அச்சிடப்பட்டன. இவர் மதுரைத் தமிழ்ச்சங்கத்துடனும், பாண்டித்துரைத் தேவர், டாக்டர் உ. வே. சாமிநாதையர் ஆகியோருடன் தொடர்புகொண்டிருந்தவர். நாவலர் அவர்களின் முன்னோராகிய திருநெல்வேலி ஞானப்பிரகாச சுவாமிகள் சம்ஸ்கிருதத்தில் எழுதி ஏட்டுவடிவில் கிடந்த பிரமாண தீபிகாவிருத்தி, சிவஞானபோத விருத்தி, சித்தாந்த சிகாமணி ஆகிய நூல்களையும் நல்லூர் த. கைலாசபிள்ளை அவர்களின் வேண்டுதலுக்கிணங்கி ம. முத்துக் குமாரசுவாமிக் குருக்களுடன் கூட இருந்து அச்சிடுவதற்காக பிழையறப் பரிசோதித்து உதவினார். சங்கானை அருணாசல சாஸ்திகள் அவர்கள் ஆபஸ்தம்ப அபரப்பிரயோகம் சம்ஸ்கிருத நூலை வெளியிட்டபோதும் அநேக திருத்தங்களைச் செய்துதவினார். கோவில்களில் நடைபெறும் புராணபடனங்கள், சமய விரிவுரைகள் முதலியவற்றில் பங்கேற்றுப் பணியாற்றினார். 'வித்தியாவிருத்தித் தருமாலயம்' என்ற பெயரில் ஒரு நூலகத்தைத் தமது இல்லத்தில் இவர் நிறுவியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சொற்பொருள் விளக்கம் எனும் தமிழ்அகராதியை வெளியிட்டிருந்த காலத்திலே சிறந்த தமிழறிஞரும் சோதிட வல்லுநருமான தும்பளை மு. சின்னையா சாஸ்திரிகளுக்கும் இவருக்குமிடையில் கண்டன மறுப்புப் போர் ஒன்று நீண்டகாலம் நடந்துவந்தது.

## 47. தெருமூடி மடம் அமைத்த பஞ்சாட்சரக் குருக்கள்

(பத்தொன்பதாம் நூற்றாண்டு)

இன்று இலங்கையில் எஞ்சியுள்ள ஒரேயொரு தெருமூடி மடம் பருத்தித்துறையில் காணப்படுகிறது. இந்த மடம் 1898-1901ம் ஆண்டு காலப்பகுதியில் வாழ்ந்த பிராமணரான வைத்தீஸ்வரக்குருக்களின் தகப்பனார் பஞ்சாட்சரக்குருக்கள் அவர்களால் அமைக்கப்பட்டது. தெருவின் இருபக்கமும் பொழிகல்லுத்திண்ணைகள் காணப்படுகின்றன, இத்தூண்களில் தெருமூடி மடம் கட்டுமானத்துடன் தொடர்பான இப்பிராமண குடும்பத்தினரின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன, மேற்புறம் தெருவை மூடி ஓரோடுகளால் வேயப்பட்ட கூரை காணப்பட்டது. தற்போது தட்டை ஓடுகள் போடப்பட்டுள்ளன.

அந்தக்காலத்தில் தெருவில் நடைசாரியாகவும், மாட்டு வண்டிகளிலும் பயணம் செய்வோர் இளைப்பாறிச்செல்ல இந்த் மடம் உதவியாக இருந்தது. இந்த தெருமூடி மடத்தின் தெற்குப்பக்கச் சுவரில் வாசலிடப்பட்டு கதவும் இருக்கிறது. இவ்வாசல் தெற்குப்புறமாக இருந்த பிராமணரின் வீட்டுடன் தொடர்புடையதாக இருந்துள்ளது. இராக்காலத்தில் இம்மடத்து திண்ணையில் தங்கிச்செல்லும் வழிப்போக்கர்களுக்கு சாப்பாட்டு வசதிகளை செய்து கொடுக்க பிராமணர் இந்த வாசலைப்பயன்படுத்தினார். இந்த வீட்டில் பிராமணரால் சமஸ்கிருத வகுப்புகளும் நடத்தப்பட்டுள்ளன.

இந்த தெருமூடிமடத்தின் அருகில் இருக்கும் சிவன் கோவில் வீதிக்கிணறு, தண்ணீர்த்தொட்டி, ஆவுரோஞ்சிக்கல் என்பன மனிதர் குறிக்கவும், குடிக்கவும் தொட்டிகளில் வண்டில் மாடுகள் தண்ணீர் குடிக்கவும், ஆவுரோஞ்சிக்கல்லில் மாடுகள் உரசி நமைச்சலைப்போக்கவும் மிகவும் கருணையோடு அமைக்கப்பட்டிருந்தது



## 48. சங்கர சுப்பையர்

1873ஆம் ஆண்டு தமிழகத்தில் பிறந்த இவர் யாழ்ப்பாணம் உடுவிலில் வாழ்ந்தவர். இசைச் சொற்பொழிவுகள் மூலம் மக்களை ஆன்மீக நெறிப் படுத்தியவர். 1943ஆம் ஆண்டில் மறைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 49. வித்துவ சிரோமணி, மகாவித்துவான் சி. கணேசையர் (1878 – 1958)

தமிழறிஞர். புலவர், உரையாசிரியர், ஆய்வாளர், இலக்கணப் பேரறிஞர், இலங்கை இலக்கிய வரலாற்றாசிரியர், கண்டனப் பேரறிஞர், மரபுவழிப் போதனாசிரியர், சோதிட அறிஞர், சமூகப் பணியாளர்.

தந்தையார்: புன்னாலைக்கட்டுவன், காசிப கோத்திரம், பிரம்மஸ்ரீ சின்னையர் தாயார்: ஸ்ரீமதி சின்னம்மாள்

பிறப்பு: ஈசுவர வருடம் பங்குனி மாதம் பதினைந்தாம் திகதி (26.03.1878) செவ்வாய்க்கிழமை பூராட நட்சத்திரம்.

கல்வி

1. பெரியதந்தையாரின் (கதிர்காமர்) திண்ணைப்பாடசாலை

கதிர்காமர் அவர்கள் ஊரெழு மயில்வாகனப் புலவரின் மாணவர், நீர்வேலிச் சங்கரபண்டிதரிடம் ஐயங்கள் கேட்டுத் தெளிந்தவர், சுன்னாகம் முருகேசபண்டிதரின் நண்பர், இணுவில் நடேசையரிடம் சித்தாந்தம் கற்றவர், ஆறுமுக நாவலரோடு பரிச்சயமுடையவர்.

2. வித்துவான் ந. ச. பொன்னம்பலபிள்ளையின் திண்ணைப் பாடசாலை

(பொன்னம்பலபிள்ளை அவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் நேரடி மாணாக்கர்.)

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளையிடம் கணேசையரோடு பாடம் கேட்ட பெரியோர்கள் சிலர்:

கரவெட்டி கார்த்திகேயபிள்ளை,
கொக்குவில் பண்டிதர் இளையதம்பி,
தாவடி சோமாஸ்கந்த பண்டிதர்,
வடகோவைச் சபாபதி நாவலர்,
உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை.

3. சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரின் திண்ணைப் பாடசாலை.

(புலவர் அவர்கள் ஏழாலைச் சைவப்பிரகாச வித்தியாசாலைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையாசிரியர், யாழ்ப்பாணத்தின் மரபுவழித் தமிழ்க்கல்வி, வடமொழிக் கல்வி ஆகியவற்றின் நேரடி வாரிசு)

கணேசையர் அவர்கள் அரசினர் பாடசாலைகளில் கற்பிப்பதற்கான ஆசிரிய தராதரமும் பெற்றிருந்தார். 21 வயது முதல் வண்ணார்பண்ணை வேலுப்பிள்ளை வித்தியாலயத்திலும் அதன்பின் அங்குள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் ஆசிரியராயிருந்தார். புன்னாலைக் கட்டுவன், குரும்பசிட்டி, மல்லாகம், வயாவிளான், கீரிமலை, தையிட்டி, நயினாதீவு, வறுத்தலைவிளான் ஆகிய கிராமங்களிலுள்ள பாடசாலைகளில் கற்பித்தார்.

சுன்னாகம் பிராசீன பாடசாலைத் தலைமையாசிரிய ராகப் பதினோராண்டுகள் சேவைசெய்தார் (1921 - 1932)

தமது ஊராகிய புன்னாலைக்கட்டுவன்மீது கொண்ட பற்றினால், "புன்னைமா நகரவாசி" என்ற புனைபெயரிலும் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

32ஆவது வயதில் தமது மாமனாராகிய வறுத்தலைவிளான் யோகவன சாஸ்திரிகளின் ஏக புதல்வியான அன்னலக்குமி அம்மையாரைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு மக்கட்பேறு வாய்க்கவில்லை.

தமது தந்தையாரின் விருப்பப்படி ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயத்தில் வள்ளி, தெய்வயானை சமேதராக சுப்பிரமணிய உற்சவ மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வித்தார். தமது ஷஷ்டியப்தபூர்த்தி விழாவிழல் தமக்கு வழங்கப்பட்ட பொற்கிழி மூலம் விநாயகப் பெருமானுக்கு பொற்கிரீடமும், உபவீதமும் செய்து வழங்கினார்.

மனைவியின் மறைவையடுத்து, 1932ஆம் ஆண்டிலிருந்து தமது மனைவியின் ஊராகிய வறுத்தலைவிளானில் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு அண்மையில், ஓர் ஆசிரமம் அமைத்து துறவு வாழ்க்கை வாழ்ந்தார். அங்கு மாணவர்களுக்குப் பாடம் சொல்லிவந்தார்.

தமது 81ஆவது வயதில் 08.11.1958 ஐப்பசி மாத அபரபட்ச துவாதசித் திதியில் சிவபதமடைந்தார்.

கணேசையரவர்களின் நினைவு மண்டபம் ஒன்று வறுத்தலைவிளானில் அமைக்கப்பட்டுள்ளது. காசியிலிருந்து எடுத்துவரப்பட்ட பாணலிங்கம் ஒன்று அந்த நினைவாலயத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அவரது உருவச்சிலை புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய முன்றிலில் அமைக்கப்பட்டுள்ளது. அவரது பெயரில் கணேச சனசமூக நிலையம், கணேச முன்பள்ளி என்பன புன்னாலைக்கட்டுவனில் இயங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்துவசிரோமணி சி. கணேசையரால் வெளியிடப்பட்ட நூல்கள்.

1. ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்
ஈழகேசரிப் பொன்னையா வெளியீடு, குரும்பசிட்டி. 1939.
2. இரகுவமிசம் - மூலமும், கணேசையர் இயற்றிய புத்துரையும் சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில்.
ஆனந்த வருடம், தை மாதம்.
3. மகாபாரதம் - சூதுபோர்ச் சருக்கம்
- கணேசையர் உரை - 1939
4. குசேலர் சரிதம் - வடஇலங்கைத் தமிழ்நூல் பதிப்பகம்
- 1967இல் 12ம் பதிப்பு.
5. குமாரசுவாமிப் புலவர் சரிதம்
கொக்குவில் சோதிடப்பிரகாச யந்திரசாலை 1925
6. வறுத்தலைவிளான் மருதடி விநாயகர் பிரபந்தம்
ஸ்ரீமத் குணரத்தினம்பிள்ளை பதிப்பு 1956
7. வறுத்தலைவிளான் பிடாரத்தனை கண்ணகை அம்மன் ஊஞ்சல் ஸ்ரீமான் செல்வத்துரை குடும்பத்தினர் பதிப்பு 1975
8. ஆயாக்கடவை சித்திவிநாயகர் திருவூஞ்சல்
நாகமுத்து தம்பிராசா ஞாபகார்த்த வெளியீடு 21.08.1993

## வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்களைப்பற்றி வெளியிடப்பட்ட நூல்கள்

1. கணேசையர் நினைவுமலர்
ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம்,
குரும்பசிட்டி 1960.
2. வித்துவசிரோமணி மறைத்திரு கணேசையர்
பண்டிதர் இ. நமசிவாயம். தமிழ்மன்றம். மகாஜனக் கல்லூரி.
தெல்லிப்பளை, 1977.
3. ஞானசூரியன் - இ. சுந்தரராஜசர்மா
4. வித்துவசிரோமணி கணேசையரின் வாழ்க்கையும் பணியும்
எஸ். சிவலிங்கராஜா எம். ஏ.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1989

வித்துவசிரோமணி சி. கணேசையரின் மாணவர்களும் நண்பர்களும் தாமாகவே விரும்பி வழங்கிய பட்டம் **மகாவித்துவான்**

1952ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் வழங்கிய கௌரவம்: **வித்துவ சிரோமணி**

தொல்காப்பியக் கடல், இலக்கண ஞாயிறு எனவும் போற்றப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வித்துவசிரோமணி சி. கணேசையரின் மாணவர்கள் சிலர்:* **இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாயம்,** *பண்டிதவித்துவான் க. கி. நடராஜன், பண்டிதர் ச. பொன்னுத்துரை, பண்டிதர் ச. இளமுருகனார், பண்டிதர் ஆர். கே. முருகேசன், பண்டிதர் செவ்வந்திநாத தேசிகர், ஈழகேசரி நா. பொன்னையா.*

## 50. ச. சிவானந்தையர்

(1878 - 1916)

யாழ்ப்பாணம் பன்னாலையில் சபாபதி ஐயர் மகனாகப் பிறந்த இவர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் மாணவர். சம்ஸ்கிருதம், தமிழ் இரு மொழிகளிலும் வல்லவரான இவர் யாப்பு, அணி என்பவற்றில் சிந்துவிளங்கினார். தமிழ்நாடு சிதம்பரம் சென்று பச்சையப்பன் முதலியார் ஆங்கிலப் பாடசாலையில் தமிழ்ப்பண்டிதராகச் சிலகாலம் பணியாற்றினார்.

சாஸ்திரியார் ஒருவரிடம் தருக்கசங்கிரக நூலைக் கற்று "தருக்க குடார தாலுதாரி" எனப்பட்ட திருஞானசம்பந்தப் பிள்ளையின் உதவியோடு அவற்றுட் சிலவற்றை மொழிபெயர்த்து, 'நியாய போதினி', 'பதகிருத்தியம்', 'அன்னம்பட்டீயம்' 'நீலகண்டீயம்' என்பவற்றை வெளியிட்டார். நாற்கவிராய நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம் நூலுக்கு உரை எழுதி வெளியிட்டார் என அறியக்கிடக்கிறது.

1873 - 1916 காலப்பகுதியில் வாழ்ந்தவர். வித்துவான் சிவானந்தையர் என்று அழைக்கப்பட்ட இவர் புலியூர்ப்புராணம், புலியூர் அந்தாதி, சனிதுதி என்பவற்றை இயற்றியுள்ளார். இவரின் புத்திரியை இவர் மருமகரும் பாலபண்டிதருமான ப, இரத்தினேசுவர ஐயர் என்பவர் விவாகம் செய்துள்ளார்.

## 51. வித்துவான் சபாரத்தின ஐயர்


(1880 - 1935)

இவர் வடமொழி தென்மொழிகளில் வல்லவர். தமிழ் நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்காகக் காரைநகரில் மாணிக்கவாசக அச்சியந்திரசாலையை நிறுவினார். தனியொரு வராகவே நின்று "கலிகாலதீபம்" என்னும் பத்திரிகையையும் நடத்தினார். ஆலயந்தோறும் சென்று புராணபடன விரிவுரை செய்துவந்த இவர், ஈழத்துச் சிதம்பரத்தில் எழுந்தருளி யிருக்கும் சுந்தரேசுவரப் பெருமான்மீது திருவூஞ்சலும் பாடியுள்ளார் (1910) இந்நூல் 1923ஆம் ஆண்டில் கணபதீசுவரக் குருக்களாற் பதிப்பிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பிரம்மஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்ற
சுன்னாகம் பிராசீன பாடசாலை

# 52. வட பெரும்பாக வித்தியாதரிசி முகாந்திரம் தி. சதாசிவ ஐயர் (1882 - 1950)

*யாழ்ப்பாணத்திலே பிறந்த தமிழ், வடமொழி அறிஞர்களிலே முகாந்திரம் தி. சதாசிவஐயரும் ஒருவர். இவரும் பாரதியார் பிறந்த ஆண்டிலே பிறந்து இயன்றளவு தமிழ்ப்பணியாற்றி உள்ளார். இவர் தான் எழுதிய செந்தமிழ்ப் பயிற்சியும் தேர்ச்சியும் என்னும் பாடநூலில் மகாகவி பாரதியாரைப் பற்றிக் குறிப்பிட்டடுள்ளார்.*

*1882 இல் பிறந்து 1950 இல் அமரர் ஆன அவரை தமிழ் இலக்கிய உலகம் இலகுவில் மறந்துவிட முடியாது. இவர் இந்தியா சென்று கல்கத்தாவில் கற்று எம். ஏ. பட்டம் பெற்றவர். மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையில் ஆசிரியராகவும் பின்னர் அதிபராகவும் பணியாற்றினார். கந்தரோடை ஆங்கிலப் பாடசாலையிலும் பணியாற்றிய பின்னர், கொழும்பு ஆசிரியகலாசாலையில் பணியாற்றி, மட்டக்களப்பில் உயர்கல்வி அதிகாரியானார். ஐங்குறுநூறு, கரவை வேலன் கோவை முதலிய நூல்களைப் பதிப்பிப்பதில் முன்னின்றார். இவரால் ஆரம்பிக்கப்பட்ட ஆரியதிராவிட பாஷாவிருத்திச் சங்கத்தினரால் வெளியிடப்பட்ட கரவை வேலன் கோவை அச்சங்கத்தின் பரீட்சைக்குரிய நூலாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவரின் அடுத்த பதிப்பு மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு ஆகும். 1940 இல் வெளிவந்த இந்நூலில் நாட்டார் பாடல்கள் ஆய்வும் தொகுப்பும் செய்யப்பட்டிருப்பது இவரின் ஆளுமையை அறிய உதவுகின்றது.*

*சதாசிவ ஐயரின் பன்முகப்பட்ட பணியில் சிறப்பாகக் குறிப்பிடக் கூடியது அவர் க. நடேசபிள்ளை அவர்களுடன் சேர்ந்து முன்னின்று நிறுவிய ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கமும், சுன்னாகம் பிராசீன*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையும் எனலாம். தமிழிலும் வடமொழியிலும் வல்லுநரான இவர் இவ்விரு நிறுவனங்கள் மூலம் இவ்விரு மொழிப் புலமையையும் இரசனையையும் வளர்க்க வழிகோலினார். அவர் வகித்த பதவி இந் நிறுவனங்களுக்கு உதவி, நன்கொடை பெற உதவின. யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் 1921 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் நிறுவப்பட்டது. இச்சங்கத்தின் தலைவராக சதாசிவ ஐயர் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் அளவெட்டியில் பிறந்து சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்டு 22-09-1882 முதல் 27-11-1950 வரை வாழ்ந்த பெரியார் இவர். 1910 ஆம் ஆண்டில் வித்தியாதரிசியானார்.

சுன்னாகம் பிராசீன பாடசாலை 1920 ஆம் ஆண்டில் இவரது அரிய முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு ஆரியம், திராவிடம் இரு மொழிகளும் கற்றுக் கொடுக்க ஒழுங்குகள் செய்யப்பட்டன. வட மொழியைக் கற்பிப்பதற்கு இந்தியாவில் பாலைக்காட்டிலிருந்து வேதவிசாரதர் பிரம்மஸ்ரீ சிதம்பரசாஸ்திரியவர்களும், தமிழ் மொழிக்கு வித்துவ சிரோமணி பிரம்மஸ்ரீ சி. கணேசையரும் நியமிக்கப்பட்டனர். ஈழத்தில் பல பாகங்களில் இருந்தும் இங்கு மாணவர்கள் வந்து சமஸ்கிருதத்தையும் தமிழையும் கற்றனர். இங்கு வடமொழியைக் கற்ற எத்தனையோ சிவாச்சார்யர்களை இன்றும் காணலாம்.

இவர் **கலாநிதி** என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். ஆசிரியர்களுக்கென **ஆசிரிய போதினி** என்னும் பத்திரிகையையும் நடத்தினார். இவரின் பணிகளில் அவர் யாத்த செய்யுள் நூல்களையும் அடக்குதல் வேண்டும். மரபுரீதியான யாப்புக்களையே கையாண்டு மரபு ரீதியான இலக்கிய வடிவங்களையே ஆக்கியுள்ளார்.

அளவெட்டி பெருமாக்கடவை சித்திவிநாயகர் இரட்டைமணிமாலை, இருது சங்கார காவியம், தேவி மானச பூஜையந்தாதி, கதிர்காம மும்மணி மாலை, சியாமாளா தண்டகக் கலிவெண்பா, தேவீ நவரத்தினமாலை என்பன குறிப்பிடத்தக்கன. மேகதூதத்தை இவர் மொழிபெயர்த் தெழுதி வைத்துள்ளார்.

ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்னும் நூலில் எழுத்தாளர் கனக. செந்திநாதன் அவர்கள் சதாசிவ ஐயரைப்பற்றிப் பெருமையாகக் குறிப்பிடுகிறார். ஈழகேசரி வெள்ளிவிழா மலரிலும் சதாசிவ ஐயரைப் புகழ்ந்து சங்கம் வளர்த்த பெரியார் எனக் குறிப்பிடப்படுகிறது. 27.11.1950 இல் இவர் இறைபதமடைந்தார்.

பதிப்பு முயற்சிகள் பத்திரிகைத்துறை, பாடப்புத்தகங்கள், கல்வி நிறுவனங்கள், செய்யுள் நூல்கள், மொழி பெயர்ப்புக் கட்டுரைகள், சொற்பொழிவுகள் என்று பல்வேறு துறையிலும் ஈடுபட்டுழைத்தவர் தி. சதாசிவ ஐயர் அவர்களாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 53. மு. சோமாஸ்கந்தக் குருக்கள்

(20.08.1886 - 25.07. 1940)

கௌசிக கோத்திரத்தைச் சேர்ந்தவர். நா. குமாரசாமிக் குருக்களின் பேரன். 1886 -1940 காலப்பகுதியில் வாழ்ந்தவர்.
முத்துசுவாமிக் குருக்கள் - தையல்நாயகி அம்மா தம்பதிகளின் புதல்வர்.

வியாகரணப் புலமை மிக்கு விளங்கிய பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர சாஸ்திரிகளிடம் முறைப்படி சம்ஸ்கிருதம் கற்றவர். சிற்பக் கலையிலும் நிபுணத்துவம் பெற்றவர். முன்னேஸ்வரத்தில் பிரதமகுருவாக இருந்தவர். இவரால் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீசக்ரபூஜை தற்போதும் மரபுவழி தவறாது நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. கிரியைகளை நிகழ்த்துவதில் இவருக்கு இணை இவரே என்று கூறத்தக்க அளவு கிரியைகளில் வல்லவராக இருந்தார். முன்னேஸ்வர மான்மியம், முன்னேஸ்வர தேவஸ்தானக் கட்டளைச் சட்டம் என்ற நூல்களை 1927இல் வெளியிட்டுள்ளார். இலங்கையின் பல பாகங்களிலும் பல கும்பாபிஷேகங்கள், மஹோற்சவங்கள் நிகழ்த்தியவர். தமிழ்நாட்டிலும் புகழ்பெற்றிருந்தார். மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகத்தில் சர்வபோதகர் சபையில் அங்கத்துவம் பெற்றிருந்தார்.

சிற்பக்கலை வல்லுநராக இருந்த இவர் உருவாக்கிய திருவுருவங்கள் இன்றும் முனீஸ்வரத்தில் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 54. சிவாகம ஞான பானு, அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்

### (16.11.1886 - 21.02.1971)

இலங்கை சிவாச்சார்யர்களில் அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் அவர்களின் சைவப்பணி மிக மேன்மையானது.

சிவஸ்ரீ குருக்கள் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் பணியை அடியொற்றி அதன்வழி சிறிதும் மாறுபடாமல் பணியாற்றியவர். இவ்விருவருக்குமிடையான வேறுபாடு யாதெனில் நாவலர் நைமிட்டிக பிரம்மச்சாரி. குருக்கள் இல்லறத்தவர். நாவலர் சைவ வேளாள மரபில் பிறந்தவர். குருக்கள் சிவப்பிராமண மரபில் உதித்தவர். இவ்வளவு தான். ஆனால், இருவர் பணியும் அடிப்படையில் ஒன்றே.. சிந்தனையும் ஒன்றே. செயற்பட்ட விதமும் செய்கையும் ஒன்றே.

இவர்களது கருத்துக்கள் யாவும் வேத சிவாகமங் களைப் பிரமாணமாக கொண்டதேயாகும். நாவலர் வழி நேரடி தொடர்புடையவர் குருக்கள். நாவலரது நண்பர் நீர்வேலி சிவசங்கர பண்டிதர். அவரது புதல்வர் சிவப்பிரகாச பண்டிதரின் மாணவரே குருக்களாவார்.

சிவஸ்ரீ ச.குமாரசாமிக் குருக்கள் அவர்கள் அச்சுவேலி எனும் கிராமத்தில் கௌதம் கோத்திரத்து வழித்தோன்றலில் சபாபதிக் குருக்கள் தங்கம்மா தம்பதியருக்கு 16.11.1886 ஆம் ஆண்டில் (புநர்பூச நட்சத்திரம்) அவதரித்தார். இவர் நீர்வேலி சிவப்பிரகாச பண்டிதரிடம் சமஸ்ருதமும் தமிழும் கற்றார். சுன்னாகம் காவிய பாடசாலையிலும் ஸ்ரீமத் த. கைலாசநாதபிள்ளை அவர்களிடமும் கற்ற இவர் தமக்கு ஏற்படும் ஐயங்களை சித்தன்கேணி அருணாசல சாஸ்திரிகளிடமும், பருத்தித்துறை புலோலி முத்துக்குமாரசுவாமிக் குருக்களிடமும் கேட்டுக் தெளிவுடையவராக விளங்கினார்.

மாதகல் பரமசாமிக் குருக்களின் மகளான பராசக்தி அம்பாளை மணம் புரிந்த இவர் ஊரெழு சிவாகம பண்டிதர் சதாசிவக் குருக்களை தீக்ஷா குருவாகக் கொண்டு 1910ஆம் ஆண்டு சிவாச்சார்ய அபிஷேகம் செய்யப்பெற்று ஈசான சிவாச்சாரியார் எனும் தீக்ஷா நாமத்தோடு தன் சிவாச்சார்யப் பணியை ஆரம்பித்தார். வைத்தீஸ்வரக் குருக்கள், மனோன்மணி ஆகிய இரு குழந்தைகளையும் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் திருநாட்டின் பல பாகங்களிலும் குருக்கள் அவர்கள் நித்திய நைமித்தியக் கிரியைகளை நிகழ்த்திப் பெரும் புகழ் பெற்றார். தனது மேதாவித் தகைமையினால் சிவாச்சாரியார்கள், ஆலய நிர்வாகத்தினருக்கு ஆகம ஆலோசகராகவும் உபயகாரர்கள் அடியவர்களுக்கு ஆன்மிக வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்.

சமஸ்கிருதம், தமிழ்மொழி போன்றவற்றில் புலமை பெற்ற இவர் பல நூல்களைத் தொகுத்தும் பல நூல்களுக்கு உரை எழுதியும் வெளியீடு செய்தார். சைவ சித்தாந்தத்திலும் மிகத்தேர்ச்சி பெற்ற இவர் பல சித்தாந்த நூல்களையும் வெளியீடு செய்தார்.

1912ஆம் ஆண்டு முதல் 1915ஆம் ஆண்டு வரை குருக்கள் அவர்கள் தமது இல்லத்தில் பிராமண சிறார்களுக்கு வேத ஆகமக் கல்வியையும், சைவப்பிள்ளைகளுக்கு சமஸ்கிருதம், தமிழ்க்கல்வியோடு நீதி நூல்களையும் சமய நூல்களையும் கற்பித்தார்.

1916,1917 ஆம் ஆண்டுகளில் இந்தியா தல யாத்திரை மேற்கொண்டார். 1918ஆம் ஆண்டு சரஸ்வதி வித்தியாசாலை எனும் பாடசாலையை ஸ்தாபித்து மாணவர்களுக்கு அறிவு புகட்டினார். மருதங்கேணி, சேரன்பற்று ஆகிய கிராமங்களிலும் பாடசாலைகளை நிறுவினார். 1915ஆம் ஆண்டு அச்சுவேலி சித்திவிநாயகர் ஊஞ்சல் எனும் நூலே இவர் இயற்றிய முதல் நூலாகும். 1928இல் சிவ பூஜை விளக்கம் வெளியாகியது. 1931இல் தருமையாதீன மலரில் சிவஞான போதம் ஒன்பதாம் சூத்திரம் எனும் கட்டுரை வரைந்தார். 16.09.1932இல் மஹோற்சவ சந்திரிகை, 1933இல் சிராத்த தீபிகை, பிரசாத தீபவுரை, த்ரிபதார்த்த விவேகம் 1934 இல் விநாயக பரத்துவம், புவனேஸ்வரி மகத்துவமும் ஊஞ்சலும் ஆகியவற்றை வெளியிட்டார். 1937இல் அனுட்டான அகவலுரை பிரணயகலஹ வர்ணனம் கோளறு பதிகம் என்பன உரையெழுதி இவரால் பரிசோதிக்கப்பட்டு வெளிவந்த நூல்கள் ஆகும். 1939 இல் சைவ சாஸ்த்திர பரிபாலனம் எனும் பத்திரிகையையும் ஆரம்பித்தார். இந்து சாதனம், ஈழகேசரி, சோதிட பரிபாலினி, சுவதர்ம போதம், சிவநேசன், ஆறுமுகநாவலர் எனும் பத்திரிகைகளில் பல கட்டுரைகளை வரைந்தார். கொழும்பு விவேகானந்தர் சபையின் பரீட்சகராக சேவை புரிந்ததோடு தேவார திருப்பாக்களை தரத்துக் கேற்றவாறு திரட்டிக் குறிப்புரையும் எழுதிக் கொடுத்தார். கந்தபுராணக் கட்டுரைகள், கந்தபுராண நீதி மஞ்சரி என்பனவும் இவரால் எழுதப்பட்டவையாகும்.

1940ஆம் ஆண்டிலும் தென்னிந்திய தலயாத்திரை மேற்கொண்டார். 1949இல் பல ஆகமப் பிரணாமாணங்களோடு கூடிய சிவாகம் சேகரம் எனும் நூலையும், ஆலய அமைப்பும் ஆலய சேவையும் என்ற நூலையும் வெளியிட்டார். 1951இல் வேதாகம நிருபணம் வெளியாகியது. 1953இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவலிங்க பிரதிஷ்டாவிதி எனும் ஆகம பத்ததி நூலையும் தொகுத்து மகன் வைத்தீஸ்வரக் குருக்கள் மூலம் வெளியீடு செய்தார். தொடர்ந்து 1954இல் நீர்வேலி சிவசங்கர பண்டிதர் சரித்திரம், 1955இல் முப்பொருள் விளக்கம் என்பன வெளிவந்தன. முப்பொருள் விளக்கம் என்ற நூல் இலங்கையின் கல்வியமைச்சின் பாடநூலுக்காகச் சிபார்சு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. 1956இல் சிவபூஜாவிதி வெளிவந்தது.

1957ஆம் ஆண்டு காசி, கயை, அயோத்தி, வடமதுரை, அரித்துவாரம், பிரயாதை முதலிய தல தீர்த்த தரிசனம் செய்தார்கள். 1958ஆம் ஆண்டு மஹோற்சவ விளக்கம், 1960இல் சுப்பிரமணிய பிரதிஷ்டாவிதி, வைதிக சந்தியாவந்தனம், 1962இல் முத்திரா லக்ஷணம். 1963இல் நவராத்திரி, சிவராத்திரி நிர்ணயம், 1964இல் சுப்பிரமணிய ஆலய நித்திய பூஜாவிதி, 1965இல் சைவ சிராத்தவிதி, 1968ஆம் ஆண்டு பைரவ பிரதிஷ்டா விதி மற்றும் மூர்த்தியலங்கார விதி, சைவகாலப் பகுப்புஎன்பன வெளியிடப்பட்டன.

பல ஆலயங்களில் மஹோற்சவ விழாக்களையும் மஹா கும்பாபிஷேக வைபவங்களையும் நிகழ்த்தியதோடு ஆச்சார்ய அபிஷேகம், சிவதீக்ஷை, மந்திர உபதேசம் போன்ற கிரியைகள் ஊடாக சிறந்த சைவ குரு பரம்பரையை உருவாக்கினார். திருக்கேதீச்சர சிவானந்த குருகுலத்தில் அதிபராக சேவை செய்யும் காலத்தில் பல அர்ச்சகர்களையும் குருமார்களையும் வேதாகமக் கல்வியில் தேர்ச்சி பெறச் செய்தார்.

யாழ்ப்பாணம் வேதாகம சைவசித்தாந்த சபைத் தலைவராக பணிபுரிந்த காலப்பகுதியில் பல சைவ சித்தாந்த நூல்களையும் கட்டுரைகளையும் எழுதிப் பிரசுரித்தார்.

தனது தள்ளாத வயதிலும் சிவப்பணி, அறப்பணி, பொதுப்பணி என சதாசர்வகாலமும் சைவப் பணியையே முழுமூச்சாக ஆற்றிய பெருந்தகை. சிவாகமக் கிரியைகள் ஞானத்திற்கு நிமித்த காரணமாய் அமைகின்ற தன்மையினை நிலைக்களனாகக் கொண்டு சிவாகம கிரியை மரபைத் தமது வாழ்வியலாகக் கொண்டு வாழ்ந்தவர். சிவாகமப் புலமையாளராக, சமஸ்கிருத அறிஞராக, சிவாச்சாரியராக, ஆகம ஆலோசகராக, சிவாகம பத்ததி தொகுப்பாசிரியராக, சைவநூல் விளக்க அறிஞராக, பாடசாலை ஸ்தாபகராக, ஆசிரியராக, சமூக சேவகராக, முன்னுதாரண புருஷராக சைவத்தின் மேன்மைக்கு வளம் சேர்த்த புலமையாளர். சைவசித்தாந்த மேன்மைக்கும் அடித்தளமாக விளங்கினார். தாம் வாழ்ந்த காலத்தில் சைவசமயம் எதிர்கொண்ட பல சவால்களை எதிர்த்து சான்றாதாரங்களோடு சைவ சமூகத்தை விளிப்படையச் செய்து காத்தவர். 1966ஆம் ஆண்டு மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம் இவருக்கு "சிவாகம ஞானபானு" எனும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. வேதாகம சாஸ்திர நெறி வழுவாது வாழ்ந்த குருக்கள் அவர்கள் சைவப்பணியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்போடு 21.02.1971 இல் புநர்பூச நட்சத்திரத்தில் சிவனோடு ஐக்கியமாகி விட்டார்.

85 வருடங்கள் நிறைவாழ்வு வாழ்ந்த பெருமகனார் கதிர்காம மகிமைபற்றி இந்து சாதனம் இதழில் எழுதியவற்றைத் தொகுத்து 1972இல் கதிர்காம மான்மியம் என்ற பெயரில் வெளியீடு செய்தார்கள். அவரின் பல நூல்கள் இன்றும் மீள் பதிப்புப் பெற்று வெளிவருவது அவர் இன்றும் வேதாகம சைவசித்தாந்த சிரஞ்ஜீவியாக எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை நிரூபணம் செய்கின்றது.

சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் தமிழகத்துச் சிவாச்சார்யர்களோடு நெருக்கமான உறவு பேணி வந்தார். அதனால் குருக்களின் பல நூல்கள் அங்குதான் பதிப்பிக்கப்பட்டன. குருக்கள் அவர்கள் அக்காலத்தில் தமிழகத்தில் நடைபெற்ற ஆதிசைவ சிவாச்சார்ய மாநாடுகளில் சிறப்பு அதிதியாக அழைக்கப்பெற்றிருக்கிறார். சிறப்புரை யாற்றியிருக்கிறார். அச்சுவேலி குருக்களின் கருத்து ஒரு முக்கிய பிரமாணமாக, சான்றாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

அச்சுவேலிக் குருக்களின் மரபை ஒட்டியே இலங்கை சிவப்பிராமணர்கள், சிவாச்சார்யர்கள் இன்றுவரை தமது ஆத்மார்த்த பரார்த்த வழிபாடுகளை ஆற்றி வருவது வெளிப்படை. குருக்களின் மரபு என்பது சில வேளைகளில் ஈழத்து தனித்துவமாகக் கூடச் சிலரால் நோக்கப்படலாம். ஆயினும், அம்மரபு நாவலர் வழி சைவ சமயிகளால் ஏற்கப்பட்டு போற்றப்பட்டு வந்துள்ளமை கவனத்திற்குரியது.
திருக்கேதீஸ்வரம் சிவானந்த குருகுலம் உருவாக தூண்டு கோலாக இருந்தார்.

அவரது பணிகள் என்றென்றும் போற்றுதற்குரியன. வணங்குதற்குரியன. அச்சுவேலி சிவாச்சார்ய சுவாமிகளின் திருவடிகள் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 55. கோ. நடேசையர்

(14.01.1887 - 07.11.1947)

தஞ்சாவூர் வளவனூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தகப்பனார் பெயர் கோதண்டராமையர். தாயார் பகீரதியம்மாள். 14.01.1887 இல் பிறந்த இவர் 1920 - 1947 காலப்பகுதியில் இலங்கையில் வசித்தவர். தொழிற்சங்க வாதியாகவும். அரசியல் வாதியாகவும் விளங்கிய இவர் இந்தியத் தோட்டத் தொழிலாளர் உரிமைகளுக்காகப் பாடு பட்டவர். சட்டசபை உறுப்பினராக இருந்து அவர்கள் நலனுக்காகப் பாடுபட்டவர்.

பதினேழு ஆண்டுகள் அவர் சட்டசபை அங்கத்தவராக இருந்து பல்வேறு எதிர்ப்புக்களுக்கும் அஞ்சாமல் தோட்டத் தொழிலாளர்களது உரிமைகளை வென்றெடுக்கப்பாடுபட்டார். இத்துறையில் முதன்மையான போராளி இவரேதான்.

இலங்கையில் முதன்முதலாகத் தமிழ்ப்பத்திரிகையை வெளியிட்டவரும் இவரேயாவர். இவர் தேச நேசன்(1922). தேசபக்தன் (1924-1929), தொழிலாளி (1929) போன்ற தமிழ்ப் பத்திரிகைகளையும், இந்தியன் ஒப்பீனியன் (1936), சிற்றிசன் (1922), இந்தியன் எஸ்டேட் லேபர் (1929) போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளையும் நடத்தியுள்ளார். அத்துடன் பல நூல்களையும் வெளியிட்டுள்ளார். அவற்றுள் கதிர்காமம், அழகிய இலங்கை, இந்திய-இலங்கை ஒப்பந்தம். தொழிலாளர் சட்டபுத்தகம் என்பன குறிப்பிடத்தக்கவை. 1947 இல் சுதந்திரன் பத்திரிகை வெளியிடப்பட்டபோது அதன் முதல் ஆசிரியராகவும் இவரே கடமையாற்றினார்.

"இந்தியத் தொழிலாளர்கள் துயரச் சிந்து" இரண்டு பாகங்கள், "இந்தியர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை" ஆகிய நூல்களை மட்டுமல்லாமல் கணக்கியல் சம்பந்தமான நூல்களையும் வெளியிட்ட நடேசையர் ஓர் இலக்கியவாதியும்கூட. சிறுகதை, நாவல் முதலியவற்றையும் இவர் எழுதியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 56. ஈழத்துச்சிதம்பரம் ச. கணபதீஸ்வரக்குருக்கள்
## (10.03.1888 - 13.03.1967)

பாரத்துவாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவர். தந்தையார் சரவணபவ ஐயர். மூதாதையர் தென்னிந்தியா வில் உத்தரகோச மங்கையில் இருந்து வந்தவர்கள். (இவரின் மூதாதையருக்கு சேதுபதி மகாராசா திருவுத்தரகோசமங்கை ஆலயபரிபாலனம் தொடர்பாகச் செப்புப்பட்டயம் எழுதி வழங்கியுள்ளார் என அறியக் கிடக்கிறது) 1888 - 1967 காலப் பகுதியில் யாழ்ப்பாணம் காரைநகரில் வாழ்ந்தவர். காரைநகர் ஈழத்துச்சிதம்பர ஆலயத்தின் பரம்பரைப் பூசகர். பல அபூர்வமான சமஸ்கிருத, தமிழ் ஏட்டுச்சுவடிகளை இவர் சேர்த்து வைத்திருந்தார். உள்நாட்டு யுத்தத்தின்போது அவற்றுட் பல சேதமடைந்துவிட்ட போதிலும் ஏனையவை காரைநகர் வியாவில் ஐயனார் கோவிலில் இவர் பெயரில் அமைந்த கணபதீஸ்வரக் குருக்கள் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவர் பெயரில் யாழ்ப்பாணத்தில் கணபதீஸ்வரக்குருக்கள் குருகுலம் ஒன்று செயற்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது. ஈழத்துச் சிதம்பரம் என்னும் நூலை இவர் எழுதியுள்ளார். பேரறிஞர், கலாநிதி, பண்டிதர் வைத்தீஸ்வரக் குருக்கள் இவரது புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

சரவணபவக் குருக்கள் - திருவேங்கடாம்பா தம்பதியினருக்கு 10.03.1888 இல் கணபதீஸ்வரக்குருக்கள் பிறந்தார். சோமசுந்தரக்குருக்கள், தங்கம்மா, குஞ்சரம்மா, முத்துச்சாமிக் குருக்கள் ஆகியோர் இவர்களது சகோதரர்களாவர். ஆரம்பக் கல்வியை ஸ்ரீ சுப்பிரமணிய வித்திசாலையிலும், சம்ஸகிருதக் கல்வியை காரைநகர் இ. முருகேசஐயர், துணைவியைச்சேர்ந்த அப்பாத்துரைக் குருக்கள், வடலியடைப்பு அருணாசல சாஸ்திரிகள், கந்தரோடை வைத்தியநாத சாஸ்திரிகள், அல்வாய் இராமலிங்கக் குருக்கள் ஆகியோரிடமும் துறைபோகக் கற்ற இவர் வேதாகமங்களில் மிக்க புலமையுடையவராக விளங்கினார்.

காரைநகரின் புலவர் பரம்பரையினரான கார்த்திகேயப்புலவரின் மகனான சிவசிதம்பர ஐயரின் மகள் சிவயோகசுந்தராம்பாள் இவருக்கு மனைவியாக வாய்த்தார். 1915ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் சிவசுப்பிரமணியக் குருக்களால் ஆசார்யாபிஷேகம் செய்துவைக்கப்பட்டார். அன்றுமுதல் இறுதிமூச்சுவரை அறுபத்துநான்கு வருடங்கள் காரைநகர் சிவன்கோவிலிலே அர்ப்பணிப்போடு சேவையாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது இல்லறத்தின் பயனாக சௌந்தராம்பாள், மங்களேஸ்வரக் குருக்கள், இரத்தினசபாபதிக்குருக்கள், வைத்தீஸ்வரக் குருக்கள், திருவேங்கடம்மா என ஐந்து பிள்ளைகள் வாய்த்தனர்.

அக்கால அறிஞர்கள் பலரும் இவரை நாடிவந்து தமது ஐயங்களைத் தீர்த்தல் வழக்கம். அச்சுவேலிக் குமாரசுவாமிக் குருக்கள் இவரோடு உழுவலன்பு பூண்டிருந்தார். 1961இல் மகன் வைத்தீஸ்வரக் குருக்கள் மூலம் 'ஈழத்துச் சிதம்பரம்' என்ற நூலை வெளியிட்டார். காரைநகர் சிவன்கோவிலுக்கு ஈழத்துச்சிதம்பரம் என்ற பெயரை ஊருவாக்கியவர் இவரே. திருவூடல் (1964), ஆத்ம யாத்திரை (1965), ஆன்ம தரிசனம் (1967) என்பனவும் இவரது நூல்களாகும்.

அகில இலங்கை சைவசமய குருமார் சபையின் தலைவராக 14 ஆண்டுகள் கடமையாற்றினார். அகில இலங்கை சிவப்பிராமண சங்கம், அகில இலங்கை பிராமண குரு சமூக சேவா சங்கம், அகில இலங்கை குரு பிரம்ம வித்யார்த்தி சபா, ஈழத்துச்சிதம்பரம் திருப்பணிச்சபை, காரைநகர் மணிவாசகர் சபை ஆகியவற்றின் போஷகராக இருந்து ஆலோசனைகள் வழங்கிவந்தார்.

1952இல் இவரது துணைவியார் மறைந்தார். 1962ஆம் ஆண்டு நடந்த பாராட்டுவிழாவில் 'வேதாகம கிரியாபூஷணம்' என்ற விருது வழங்கப்பெற்றது. 1967ஆம் ஆண்டு பங்குனி மாதம் 13ஆம் திகதி ஈழத்துச் சிதம்பரனாரின் பாதங்களில் சரணடைந்தார்.



## 57. பண்டிதர் பஞ்சாட்சரக் குருக்கள்

### 1889 - 1953

சுன்னாகத்தைச் சேர்ந்த முகாந்திரம் சதாசிவ ஐயரின் சகோதரியின் மகனாகிய இவர் காரைநகரில் வாழ்ந்தவர். காவியபாடசாலையிலே சுன்னாகம் குமார சுவாமிப்புலவரிடம் சுற்றுப் பண்டிதரான இவர் பயிற்சி பெற்ற ஆசிரியருமாவர். கொழும்பு அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிற் கற்பித்த தென்கோவைப் பண்டிதர் கந்தையா பிள்ளை அவர்களைத் தமது ஆசிரியராகக் கொண்ட குருக்கள், சித்தாந்த சாத்திரங்களிலும் வல்லவர். வடமொழியறிவும் நிரம்ப உடையவர். கவிதைபுனையும் ஆற்றல், புராணபடன விரிவுரையாற்றுதல், சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தல் போன்றவற்றிலும், சோதிடத்திலும வல்லவர். காரை சுப்பிரமணிய வித்தியாசாலையில் அதிபராயிருந்தவர்.

திண்ணபுர வெண்பா (1945) வலந்தலை மருதடி விநாயகர் இரட்டை மணிமாலை (1931) விநாயகர் அகவல், விநாயக கவசம் பதவுரை (1917) கொழும்பு தம்பையா சத்திரம் சித்திவிநாயகப் பெருமான் திருப்பதிகம், திருவூஞ்சல் (1948) என்பன இவராக்கிய நூல்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 58. சு. நவநீதகிருஷ்ண பாரதியார்

## 1889 -

சோழவள நாட்டிலே கிருட்டினாவடம் என்ற இடத்திலே, 1889 இல் சுப்பிரமணிய பாரதியார் - தையலம்மை தம்பதிகளுக்குப் புதல்வராகத் தோன்றினார். சர்க்கரை இராமசாமிப் புலவர், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், பண்டிதர் அ. கோபாலையர், சோழவந்தான் அரசன் சண்முகனார் ஆகியோரிடத்தில் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். பின் திருவாவடுதுறை ஆதீனத்தில் அம்பலவாண தேசிக சுவாமிகளிடத்தில் திருமுறை ஆராய்ச்சித் துணைவராக அமர்ந்தார். 1917ஆம் ஆண்டு இவர் திறமைகண்டு சேர். பொன். இராமநாதனால் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டார். இராமநாதன் மகளிர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக நியமனம் பெற்றார். பின்னர் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியிலும் (12 ஆண்டுகள்) பணியாற்றினார்.

இவருக்குப் பண்டிதமணி, புலவர்மணி என்ற இரு விருதுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. சைவசமயப் பற்றும், பண்பும் நிறைந்த பாரதியார் சைவசமய வளர்ச்சிக்கும் தமிழ்மொழி உயர்ச்சிக்கும் தொண்டுகள் பல ஆற்றினார். இவர் இயற்றிய "உயிரியல் விளக்கம்" என்ற நூல் 1922ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இதன் பதிப்பாசிரியர் சுவாமி விபுலானந்தர் ஆவார். இவர் இயற்றிய ஏனைய நூல்கள் புத்திளஞ்செங்கதிர், பறம்புமலைப் பாரி, செழுங்கதிர்ச் செல்வம், காந்தி வெண்பா என்பனவாம். இவர் பல ஆண்டுகள் உழைத்துத் திருவாசகம் முழுமைக்கும் அரிய உரையொன்றினை எழுதினார். திருவாசகத்திற்கு உருகிநின்று அவர் உணர்ந்து கண்ட உரை உயர்ந்ததாயும், சிறந்ததாயும் திகழக்காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 59. மேன்மக்கள் சரித்திரம் நூல் படைத்த வீ. இரத்தினசாமி ஐயர்

(இருபதாம் நூற்றாண்டு ஆரம்பம்)

தம்பையர் எனும் நாமம் கொண்ட மகாவித்வான் வீராச்சாமி சாஸ்திரிகளுக்கும் ஸ்ரீமதி விசாலாட்சிக்கும். புதல்வரான இரத்தினசாமி ஐயர் தமிழ்ப் பண்டிதராவார். கொழும்பு கொம்பனித்தெரு புதிய அரசினர் பாடசாலையில் கடமையாற்றியவர். இவர் மதுரைத் தமிழ்ச் சங்க பண்டிதர். இசைத்துறை விற்பன்னர். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் மும்மொழிகளிலும் வல்லவராக இருந்தவர். இவர் சங்கீத சமாஸ் எனும் சங்கம் ஒன்றினை அமைத்து சங்கீதத் துறைக்கு பணிபுரிந்தார். சாஸ்திர பாடங்களையும் சங்கீதத்தையும் தஞ்சாவூர் மகாராஜாவினால் ஸ்தாபிக்கப்பட்ட 'கல்யாணமால்' என்னும் கலாசாலையில் கற்றார். தேவார திருவாசகங்களையும் பண்முறைகளையும் திருவாவடுதுறை ஆதீனத்தில் கற்றார். புராண இதிகாசங்களை இவர் தனது தந்தையிடமும் குமாரசாமிப் புலவரிடமும், முதலியார் கைலாச பிள்ளையிடமும் பயின்றார். 1910 ஆம் ஆண்டில் இவருக்கு அரசாங்க உத்தியோகம் கிடைத்த போதிலும் சங்கீதத்தில் கொண்ட ஈடுபாட்டினால் அந்த உத்தியோகத்தைக் கைவிட்டு 'பிடில்' வாசிப்பதில் நிபுணரானார். அதன்பின்னர் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். 1927ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற அகில இந்திய சங்கீத மகாநாட்டில் பங்குபற்றி உரையாற்றியதோடு, வாத்தியம் வாசித்து சன்மானமும் பெற்றார். 1913ஆம் ஆண்டு கோப்பாய் சபாபதி குருக்களின் மகள் ஸ்ரீமதி வாலாம்பா என்னும் மங்கையைத் திருமணம் செய்தார். இவர்களுக்குப் புத்திரச் செல்வம் இருக்கவில்லை.

இவர் இயற்றிய "மேன்மக்கள் சரித்திரம்" எனும் நூலானது சமகால வரலாறு எனும் வகைமையைச் சேருகின்றது. ஏறத்தாழ 250 வரையான ஈழத்துப் பெருமக்கள் பற்றிய சரித்திரக்குறிப்புகள் அடங்கியது.

தாம் அந்த நூல் எழுதியமைக்கான காரணத்தை அவர் இவ்வாறு கூறுகிறார். "நம் தமிழ்மக்களின் பெருமைகளைக் குறித்து விஸ்தாரமாய் எழுதப்பட்ட நூல்கள் இதுகாறும் தமிழ் பாஷையில் வெளிவராமையால் அக்குறையை நீக்கும் பொருட்டாக "மேன்மக்கள் சரித்திர" மென்னும் மகுட நாமத்துடன் இப்புத்தகத்தைச் சுருக்கமாய் எழுதத்துணிந்தோம்" சு. இரத்தினசாமி ஐயர் (15-12-1920) - மேன்மக்கள் சரித்திரப் நூலிலிருந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் புலவர் சரித்திர வரலாறுகளை ஆவணப் படுத்தியமைக்கும் ஈழத்தவர்களுக்கும் நெருங்கிய தொடர் புள்ளமை பலருக்கும் தெரிந்ததே. இப்பணி சார்ந்து சைமன் காசிச் செட்டி, ஆ. சதாசிவம்பிள்ளை, சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. புன்னாலைக்கட்டுவன் சி. கணேசையர் என்று ஈழத்தவர்கள் பலர் தங்கள் முயற்சிகளைத் தமிழ் உலகிற்கு வழங்கியுள்ளனர். சு. இரத்தினசாமி ஐயர் அவர்கள் வெளிக்கொணர்ந்த மேன்மக்கள் சரித்திரம் எனும் நூலானது மேற்குறித்த தமிழ்ப் புலவர் சரித்திர முயற்சிகளில் இருந்து வேறுபட்டது. ஆனால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

1930ற்கு முன்னர் தமிழகத்திலும் ஈழத்திலும் சமகால வரலாற்று நூல்கள் தமிழில் எழுந்தபோதும், அந்நூல்களில் ஒரு பகுதியாகவே மேன்மக்களின் சரித்திரம் கூறப்படும் மரபு இருந்துள்ளதாகத் தெரிகிறது. ஆனால், மேன்மக்கள் வாயிலாகத் தமிழரின் சமகாலத்தை ஆவணப்படுத்திய முதலாவது தமிழ் நூலாக அமைவது சு. இரத்தினசாமி ஐயரின் 'மேன்மக்கள் சரித்திரம்'' என்ற நூலே ஆகும்.

2008 ஆம் ஆண்டு இலங்கை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இந் நூலினை மறுபிரசுரம் செய்தது. இரத்தினசாமி ஐயர் 1973ஆம் ஆண்டு அமரரானார்.

## 60. வயலின் வித்வான் அனலைதீவு இரத்தினேச ஐயர்

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் அனலைதீவு புளியந்தீவு கிராமத்தில் சுப்பையர் என்பவரின் மகனாகப் பிறந்தவர் இவர். இவரது மனைவியார் பெயர் நாகரத்தின அம்மா. இவருக்கு நான்கு பிள்ளைகள்.

இளமையில் சங்கீதம், வயலின் கற்ற இவர் 1937இல் சிங்கப்பூர் சென்று அங்கு சங்கீத ஆசிரியராக இருந்தார். பின்னர் இலங்கை திரும்பியபின் 1940 அளவில் இலங்கை வானொலி இசைக் கலைஞராகப் பணிபுரிந்தார். 1945 இல் இந்தியக் கலைஞர்களோடு சேர்ந்து இசைக்கச்சேரிகள் நடத்தியிருக்கிறார். 1943 - 1950 காலப்பகுதியில் நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவிலில் கணக்குப்பிள்ளையாகப் பணியாற்றினார். அக்காலத்தில் அம்மனுக்குச் சாத்துப்படி செய்வதையும் மேற்கொண்டிருந்தார். 1952ஆம் ஆண்டளவில் மாத்தளை மகாவித்தியாலயத்தில் பகுதிநேர ஆசிரியராகக் கடமையாற்றினார். 1956இல் இந்தியா சென்று ஏழு தந்திகள் பூட்டிய வயலின் பயின்று இலங்கை திரும்பி தனியார் வகுப்புகள் பலவற்றையும் நடத்திவந்தார். இவரது ஏழு தந்தி வயலின் அக்காலத்தில் பெருமையாகப் பேசப்பட்டது. 1963இல் இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 61. திருக்கணித பஞ்சாங்க கணிதர் சி. சுப்ரமணிய ஐயர் F.R.A.S.

## 19-1-1896 - 19-8-1970

இவர் கோப்பாயைச்சேர்ந்த சிவகடாட்சக் குருக்களுக்கு புத்திரனாக 19-1-1896-ல் அவதரித்தார். சிறுவயதில் தமிழ் ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். பின்னர் ஆங்கில ஆசிரியராக தொழில் புரிந்தார். அந்நேரம் திருக்கணித பஞ்சாங்கத்தினைக் கணித்து வந்த கார்த்திகேய ஐயர் அவர்கள் தேகவியோகம் அடைந்ததும் அவரது பிள்ளைகள் பராயமற்று இருந்தமையால் கார்த்திகேய ஐயரின் மகளின் மகனாகிய இவரிடம் திருக்கணித பஞ்சாங்க கணிக்கும் பொறுப்பு வந்தடைந்தது.

இவர் பாடசாலை விடுமுறை காலங்களில் தனது மைத்துனர் வானியல் அறிஞர் ந. கந்தசாமி ஐயருடன் இணைந்து இந்தியா சென்று திருக்கணித பஞ்சாங்க கணிப்புக்களை கற்றுத் தேர்ந்தனர். அதன் பிரகாரம் 1933-34 ஸ்ரீமுக வருடம் முதல் மட்டுவிலில் திருக்கணித பஞ்சாங்கம் இவரது கணிப்பில் வெளிவரத் தொடங்கியது. பஞ்சாங்கம் அச்சிடுவதற்கென மட்டுவிலில் “ஜோதிஷ ரத்னாகரஅச்சகம்“ என்ற பெயரில் அச்சகத்தை நிறுவி வருடந்தோறும் பஞ்சாங்கத்தை வெளியிட்டார். இவர் மட்டுவில் ந. கிருஷ்ணசாமி குருக்கள் (பொன்னுச்சாமி குருக்கள்) அவர்களின் தங்கையார் தில்லைநாயகி அம்மையாரை திருமணம் செய்து வாழ்ந்து வந்தார். தில்லைநாயகி அம்மையாரின் தம்பியார்தான் வானியல் நிபுணர் ந. கந்தசாமி ஐயர் அவர்கள்.

சுப்ரமணிய ஐயர் அவர்கள் இந்தியாவில் கல்வி கற்கும் காலத்தில் வானியலிலும் ஈடுபாடு காட்டினார். அதன் பயனாக விண்ணூல் விரிவு என்ற நூலை ஆக்கியிருந்தார். அப்போதைய சூழ்நிலையில் அதனை அச்சிட்டு வெளியிட முடியவில்லை. மேலும் இவர் லண்டன் வானியல் நிலையத்தில் அங்கத்தினராக இருந்து இவருக்கு அந்நிறுவனம் F.R.A.S என்ற கௌரவப் பட்டத்தை வழங்கினர். இந்தப் பட்டத்தை இரு பிராமணப் பெரியார்கள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் ஆகும். ஒருவர் இவர், மற்றவர் காரைநகரைச் சேர்ந்த நொத்தாரிசு கா. மகேஸ்வர சர்மா அவர்கள்.

சி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் முதல் திருமணத்தின் பயனாக குழந்தைகள் கிடைக்காமையால் இந்தியா சென்று குடமாளூரில் மீனாட்சி அம்மாளை இரண்டாம் திருமணம் செய்து அவரின் சகோதரனாகிய சிதம்பரநாத குருக்களையும் (10 வயதில்) அழைத்து வந்து அவருக்கு பாடசாலைக் கல்வியுடன் பஞ்சாங்க கணிதத்தையும் போதித்துவந்தார். 19-8-1970-ல் இவர் சிவபதம் அடைந்ததும் சி. சிதம்பரநாதக் குருக்கள் திருக்கணித பஞ்சாங்கத்தைத் தொடர்ந்து வெளியிடலானார். அவரும் 24-5-2015-ல் தேகவியோகமடைய அவரது ஜேஷ்ட புத்திரன் ஜோதிடமணி சி. ஜெகதீஸ்வர சர்மாவினால் இப்பஞ்சாங்கம் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 62. திருகோணமலை சிவஸ்ரீ
# இ. கு. பூர்ணானந்தேஸ்வரக் குருக்கள்
## (07.01.1896 - 11.12.1965)

திருகோணமலையில் மைத்திராவரண கோத்திரத்தில் உதித்த இராமலிங்கக் குருக்கள் என்பார் பருத்தித்துறை முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் என்ற கல்வியில் சிறந்த பெரியாரின் மகள் அன்னபூரணி அம்மாவைத் திருமணம் செய்து சிவபெருமானுக்குப் பூசனை புரிபவராக வாழ்ந்து வந்தார். இவர்களுக்கு மகனாக பூர்ணானந்தேஸ்வரக் குருக்கள் பிறந்தார். ஆரம்பக்கல்வியை முடித்த குருக்கள் யாழ்ப்பாணம் சென்று வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடம் கல்விபயின்றார். அதன்பின் நீர்வேலிச் சங்கரபண்டிதர் மகன் சிவப்பிரகாச பண்டிதரிம் சம்ஸ்கிருதமும் தமிழும் கற்று இருமொழிப் பாண்டித்தியமுடையவரானார். இன்னும் பயலவேண்டுமென விரும்பி இந்தியா சென்று திருச்செந்தூரில் குருகுலக் கல்வியைப் பெற்றார்.

நாடு திரும்பி ஆலயப் பணிகளோடு அறப்பணிகள் பலவும் செய்து புகழ்பெற்றார்.

பருத்தித்துறை சோமசுந்தரக் குருக்கள், திருமலை சாமிக்குருக்கள் மகள் பர்வதவர்த்தனியை மணந்து பெற்றெடுத்த புத்திரி மீனாட்சி அம்மாவை உரிய காலத்தில் திருமணம் செய்து சிவசுப்பிரமணியக்குருக்களை மைந்தனாகப் பெற்று சிவப்பணி புரியும்போது மனைவியை இளமையில் பறிகொடுத்தார். அதன்பின் சிவாசார்ய மரபு பேணுதற்காக, வைத்தீஸ்வரக் குருக்கள் மகள் யோகாம்பிகையை திருமணம் முடித்து சண்முகரத்தினக் குருக்கள், தியாகராஜக் குருக்கள், நாகபூஷணி அம்மா, சுந்தரேஸ்வர சர்மா ஆகிய நான்கு மக்கட்செல்வங்களைப் பெற்று மகிழ்ந்தார். அவர்கள் யாவரும் தத்தமது துறையில் நன்கு பிரகாசிக்கச் செய்து அவர்களின் இல்லற வாழ்வுக்கும் வழிசமைத்துக் கொடுத்தார்.

சைவசித்தாந்த வகுப்புக்கள் நடத்தியமை, பல கிரியாபத்ததிகளைத் தமது மணியான கையெழுத்தில் சலிக்காமல் எழுதி எழுதிப் பல ஆலயங்களுக்கு வழங்கியமை, ஆய்வுக்கட்டுரைகள் பல எழுதியமை, பல ஆலயங்களில் பத்திவாசித்து கும்பாபிஷேகங்களை நடத்திவைத்தமை என்பன இவருக்கு மேன்மை தந்தன. அகில இலங்கைக் குருமார் சங்கம், பிராமணசமூக சேவாசங்கம் என்பன இவருக்கு 'சிவாகம வித்தியாபூஷணம்' என்ற விருது வழங்கிக் கௌரவித்தன. இவர் சிறந்த சொற்பொழிவாளரும் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதியற்புதமாக முன்னேஸ்வர வேள்வியை நடத்தியமையும், கோணேஸ்வரர் கோவில், நயினை நாகபூஷணி அம்மன் கோவில், பருத்தித்துறை கோட்டுவாசல் அம்மன் கோவில் ஆகியவற்றின் கும்பாபிஷேகங்களை நிகழ்த்தியமையும் குருக்கள் அவர்களுக்கு அழியாப் புகழைத் தந்தன. சித்தங்கேணியில் முதன்முதலில் நிகழ்ந்த முப்பத்துமூன்று குண்ட மஹாகும்பாபிஷேகத்திற்கான பத்தியை உருவாக்கி வழங்கியவர் பூரணக் குருக்களேயாவர்.

மூத்த மகனை வில்லூன்றிக் கந்தசுவாமி ஆலயத்தின் பிரதமகுருவாக நியமித்து ஆசார்ய அபிஷேகம் செய்துவைத்தார். இரண்டாவது மகன் சண்முகரத்தினசர்மாவை ஆசார்யாபிஷேகம் செய்வித்து திருகோணமலை சிவன்கோவிலின் பிரதம குருவாக்கினார். தியாகராஜக் குருக்களை சம்ஸ்கிருதக் கல்விப் புலத்தில் சிறந்து விளங்கச் செய்தார். நான்காவது குமாரன் சுந்தரப்பாவை சங்கீத உலகிற்குத் தந்து சிறந்த வைணிகராகவும் சங்கீத ஆசிரியராகவும் ஆக்கினார். சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் இவரது அன்புக்குரிய மாணாக்கர்களில் ஒருவராவார்.

இவ்வாறு புகழுடன் வாழ்ந்த பூரணக் குருக்கள் 11. 12. 1965 இல் இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 63. மட்டுவில், சிவஸ்ரீ ந. கிருஷ்ணசாமிக் குருக்கள் (பொன்னுச்சாமிக் குருக்கள்)

02.11.1898 - 19.03.1962



சகல வளங்களும் நிறைந்த தென் மராட்சிப் பகுதியில் சாவகச்சேரி, சரசாலைப் பதியில் சிவஸ்ரீ நடராஜக் குருக்கள் சேது அம்மா தம்பதியினருக்கு இரண்டாவது புத்திரராக 02.11.1898இல் பிறந்தவர் கிருஷ்ணசாமிக் குருக்கள். இவரை மக்கள் யாவரும் பொன்னுச்சாமிக் குருக்கள் என்றே அழைத்தனர். அவரது அழகிய தோற்றமும் புன்சிரிப்பும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

இவருடன் பிறந்தோர் மூவர். மூத்தவர் சிவஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள். சரசாலை சிதம்பர விநாயகர் ஆலய பிரதமகுரு. இளைய சகோதரர் முன்னாள் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளரும், வானியல் (பஞ்சாங்க) ஆராய்ச்சியாளருமான பிரம்மஸ்ரீ கந்தசாமி ஐயர் ஆவார். சகோதரி தில்லைநாயகி திருக்கணித பஞ்சாங்க கணிதர் பிரம்மஸ்ரீ சி. சுப்பிரமணிய ஐயர் அவர்களின் பத்தினியாவார்.

கிருஷ்ணசாமிக் குருக்கள் தமிழ்க்கல்வியை மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்திலும் பின்னர் யாழ். நாவலர் வித்தியாலயத்திலும் சம்ஸ்கிருதத்தை வடலியடைப்பு பிரம்மஸ்ரீ அருணாசல சாஸ்திரிகளிடமும் கோப்பாய் பிரம்மஸ்ரீ சிதம்பர சாஸ்திரிகளிடமும் கற்று வைதீக, ஆகம விடயங்களில் வல்ல சிவாசாரியராக சிறந்துவிளங்கினார்.

கிருஷ்ணசாமிக் குருக்கள் அராலியைச் சேர்ந்த சிவராமலிங்க ஐயர் மகள் இரத்தினம்மாவைத் திருமணம் செய்தார். 1933-40 காலப்பகுதியில் கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேசர் ஆலயத்தில் சிவாசாரியராகப் பணிபுரிந்தார். 1938 அளவில் மட்டுவிலுக்கு வந்து சகோதரி வீட்டிற்கு அருகில் குடியேறி அங்குள்ள நெல்லியடிப் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தா பொறுப்பையும் ஏற்று வாழ்ந்துவந்தார். இவரது மக்கட்செல்வங்கள் ஐவர்.

இவர் தமிழ, சம்ஸ்கிருதப் புலமை மிக்கவராகவும் சங்கீத ஞானமுடையவராகவும் நல்ல குரல்வளமுடைய வராகவும் இருந்தார். அதனால், புராணபடனத்தில் வல்லவராக இருந்ததுடன் பலரது சந்தேகங்களைத் தீர்த்துவைக்கும் பெருமையையும் கொண்டிருந்தார். வவுனியா கந்தசாமி கோவில், கிளிநொச்சிக் கந்தசாமி கோவில், கல்வயல் பெருங்குளம் வீரகத்தி விநாயகர் ஆலயம் முதலியவற்றில் சிவாசாரியக் கடமையுடன் புராணபடனங்களிலும் கலந்து சிறப்பிப்பார். வருடம்தோறும் பருத்தித்துறை நெல்லண்டை பத்திரகாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மன் கோவில் நிர்வாகத்தினரின் அழைப்பின்பேரில் அங்குசென்று கல்வயல் சங்கீத பூஷணம் விநாசித்தம்பி ஆசிரியர் போன்ற புராண படன வித்தகர்களுடன் இணைந்து தமது திறமையை விளங்கச்செய்தார். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை போன்ற தமிழ் அறிஞர்களிடமும் பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ நாராயண சாஸ்திரிகள் ஆகிய வைதிக அறிஞர்களிடமும் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்தார்.

நயினை ஐ. கைலாசநாதக் குருக்கள், சித்தங்கேணி சிவசாமிக் குருக்கள், புத்தூர் வைத்தியநாதக் குருக்கள், இணுவில் இராமநாதக் குருக்கள், ஊரெழு வைத்தியநாதக் குருக்கள் முதலிய பேர்பெற்ற சிவாசாரியர்களுடன் பல கும்பாபிஷேகங்களில் கலந்து சிறப்பித்திருக்கிறார். யாழ். வண்ணார்பண்ணை சிவன்கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்து பணியாற்றியபோது இந்திய சிவாசாரியர்களான சந்திரசேகரபட்டர், சுப்பிரமணிய பட்டர் ஆகியோரால் ஆசீர்வதித்து அன்பு பாராட்டப்பட்டதைத் தமது பேறாகக் கருதியிருந்தார். யாழ்ப்பாணத்தில் முதன்முதல் நடைபெற்ற சித்தங்கேணி மஹாகணபதிப் பிள்ளையார் ஆலய 33 குண்ட மஹாகும்பாபிஷேகத்தில் பிரதமகுரு சிவசாமிக் குருக்கள் இவரையும் அழைத்துச் சிறப்பித்ததுடன் இவரால் எழுதப்பட்ட 33 குண்ட பத்ததியைப் பார்த்து மகிழ்ந்து பாராட்டி அதனை அங்கீகரித்தமையைப் பெருமையாகக் கருதிவந்தார்.

ஆத்மார்த்த வழிபாடுகள், விரத அனுஷ்டானங்களிலும் மிகுந்த ஈடுபாடுகொண்ட இவர் குடும்பத்தினருடன் தீர்த்த யாத்திரைகள் செய்வதிலும் விருப்பம் கொண்டிருந்தார். கல்வயல் பெருங்குளம் வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் இருபத்தைந்து ஆண்டுகள் நித்தியநைமித்திகங்களைச் செய்து ஊரவர் யாவரினதும் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரானார். தமது பிள்ளைகளை மிகவும் உயர்ந்த முறையில் தமிழ், சம்ஸ்கிருதக் கல்விகளை வழங்கியும் அனுபவக் கல்வியைக் கொடுத்தும் உயர்ந்த சிவாசார்யப் பெருமக்க ளாகவும், சம்ஸ்கிருத குருகுல ஆசிரியராகவும் பிற்காலத்தில் திகழும்வகையில் சிறுவயதிலேயே அத்திவாரமிட்டு வளர்த்தார். அவரது புதல்வர்களான சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள் மற்றும் சம்ஸ்கிருத பண்டிதர் சிவஸ்ரீ கி. சதாசிவக் குருக்கள் ஆகியோர் இவரது நற்பெயரைக் காத்துவருகின்றனர். திருக்கணித பஞ்சாங்க கணிதர் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் இவரது மருமகன் என்பதும் இவரிடமே அவர் குருத்துவப் பயிற்சியைப் பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

19.03.1962ஆம் ஆண்டு சாவகச்சேரி, நுணாவில் வைரவர் கந்தசாமி கோவில் கும்பாபிஷேக ஆரம்ப நிகழ்வின்போது திடீரென ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக இவ்வுலகை விட்டு மறைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 64. நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையார் தேவஸ்தான ஆதீன கர்த்தர், பிரதமகுரு, சு. ஆபதோத்தாரணக் குருக்கள்

(12.12.1898 - 04-04-1974)

**ஜனனம்**

முப்போதும் திருமேனி தீண்டும் பேறுபெற்ற ஆதிசைவ குலத்தைச் சேர்ந்த அந்தணச் செம்மல்களின் வம்சத்திலே, பாரத்துவாஜ கோத்திரத்தையும் போதாயன சூத்திரத்தையும் சேர்ந்தவர்களாய், யஜுர்வேதிகளாய், தொன்றுதொட்டே கல்வி கேள்விகளில் வல்லவர்களாய் விளங்கிய சான்றோர்கள் வரிசையிலே பிரம்மஸ்ரீ சிவசாமிக் குருக்கள், பிரம்மஸ்ரீ சந்திர சேகரக் குருக்கள் (அண்ணாச்சாமிக் குருக்கள்) ஆகியோரின் பரம்பரையிலே சிவஸ்ரீ சுப்பிரமணியக் குருக்களும் லக்ஷ்மி அம்மாளும் செய்த தவப்பயனால் 1898ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் திகதிக்குச் சரியான ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் வேதநெறி தழைத்தோங்கவும் மிகுசைவத்துறை விளங்கவும் பிரம்மஸ்ரீ பிக்ஷாடனக் குருக்கள் அவர்கள் பிறந்தார்.

**முன்னோர் வரலாறு**

ஆபதோத்தாரணக் குருக்களின் முன்னோர்கள் தமிழ்நாடு சோழதேசத்திலிருந்து கி.பி. 13ஆம் நூற்றாண்டில் இங்கு வந்து குடியேறியதாக அறியப்படுகிறது.

சூரியவம்சத்தைச் சேர்ந்த சிங்கையாரியன் என்னும் இராசகுமாரன் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் வீரசிகாமணியாகிய புவனேகபாகு என்னும் மந்திரியுடனும், காசியிலிருந்து வந்த வேதியர் குலோத்துங்கராகிய கங்காதரக் குருக்கள் அவர் மனைவி அன்னபூரணி அம்மா மற்றும் பரிவாரங்களுடனும் பாண்டியராசன் வழிவிட்டனுப்ப, யாழ்ப்பாணம் வந்திறங்கி, அரசமைத்திருந்தான். இவ்வரலாறு மாதகல் மயில்வாகனப் புலவரால் இயற்றப்பட்ட "யாழ்ப்பாண வைபவ மாலை" எனும் நூலில் சொல்லப்பட்டுள்ளது.

மாளிகைகள், கோபுரங்கள் முதலிய சகல அம்சங்களும் பொருந்திய இராசதானியாக்கியதோடு அந்தணர்கள் வாழ அக்ரஹாரங்களும் உண்டாக்கி, வெயிலுகந்த பிள்ளையார், கைலை விநாயகர், வீரமாகாளி, நல்லூர் கந்தசுவாமி கோவில், முதலியவற்றைக் கட்டுவித்து திலகவதியார் என்னும் பத்தினியுடன் சிங்கையாரியன் ஆண்டுவந்தான். அவனுக்குப்பின் பல மன்னர்கள் ஆட்சி செய்தனர். 1616இன்மேல் சங்கிலிகுமாரனின் ஆட்சி நடைபெற்றது. 1620இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போத்துக்கேயர், பறங்கியர் ஆக்கிரமிப்பில் மன்னன் கைதுசெய்யப்பட்டுச் சிரச்சேதம் செய்யப்பட்டபின் சைவ ஆலயங்கள் பலவும் இடித்தழிக்கப்பட்டன.

நல்லூரிலிருந்த கங்காதரக் குருக்கள் பரம்பரையினர் இவ்வேளையில் குடிபெயர்ந்து நீர்வேலி, வடமராட்சி நவிண்டில் முதலிய இடங்களில் குடியேறினர். இவர்களின் வம்சத்தில்தான் நமது குருக்களின் தாயார் பிறந்தார். குருக்களின் தந்தை வழியினர் தென்மராட்சி மந்துவில் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். குருக்களின் மூத்த சகோதரர் இராசாக் குருக்கள் அங்கு குடியிருந்தமை இதற்குச் சான்றாகும். இராசாக் குருக்களின் மனைவி வடமராட்சி நவிண்டில் என்ற ஊரைச் சேர்ந்தவர்.

நல்லூரிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் சிலர் தென்மராட்சி வரணி என்ற இடத்திலும் குடியேறியிருந்தனர். வரணியுடன் இணைந்த கிராமமே மந்துவில். அங்குள்ள தாளையடிப் பிள்ளையார் கோவில் மஹோற்சவ பத்ததியில் "கேதகாபுரி வாச விநாயகர்" என தாளையடிப் பிள்ளையார் கோவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பத்ததி பத்தொன்பதாம் நூற்றாண்டு பிற்பகுதிவரை நீர்வேலி வாய்க்காற்றரவை விநாயகரின் மஹோற்சவத்திற்கு வாசிக்கப்பட்டது.

மந்துவில் அண்ணாத்துரைக் குருக்களின் மகள் பொன்னம்மா என்பவர் நவிண்டில் சிவானந்தக் குருக்கள் என்பவரை விவாகம் செய்து புத்திர பாக்கியங்களுடன் வாழ்ந்த வரலாறு 19ஆம் நூற்றாண்டு நடுப்பகுதிக்குரியது. 17ஆம் நூற்றாண்டிலேயே மந்துவிலிலிருந்து நீர்வேலி வந்து பெண் கொண்டார்கள். ம. க. வேற்பிள்ளைப் புலவரால் இயற்றப்பட்ட ஈழமண்டல சதகம் என்ற நூலில் அந்தணர்களைப்பற்றிய குறிப்பில் "விளைவேலி, நீர்வேலி, நவிண்டில் ஆகிய ஊர்களில் ஆதிசைவப் பிராமணர் வாழ்ந்தனர் எனக் கூறப்பட்டுள்ளது.

இவற்றை ஆராயும்போது நீர்வேலி, நவிண்டில், விளைவேலி ஆகிய மூன்று ஊர்களிலும் ஆபதோத்தாரணக் குருக்களுக்கு உறவினர் வம்சங்கள் இருந்தன எனத் தெரிகின்றது. பிற்காலத்தில் இம்மூன்று இடங்களிலும் ஆண், பெண் பரிவர்த்தன விவாகங்கள் நடந்தன.

**கல்விப்பேறு**

பிச்சுக் குருக்கள் உரிய வயதிலே வித்தியாரம்பம் செய்யப்பெற்று தமிழ்மொழி, வடமொழி ஆகிய இரு மொழிகளையும் நன்கு கற்றுச் சித்தாந்த சாஸ்திரங்களையும் நன்கு பயின்றார். நீர்வேலியிலே குருகுலப் பயிற்சி சங்கர. சிவப்பிரகாச பண்டிதர் தலைமையில் திறம்பட நடந்துவந்தது. பண்டிதர் அவர்களிடம் இருமொழிகளும் இவருடன் பயின்று வந்தவர்களுள் நீர்வேலி கார்த்திகேயக் குருக்கள், சுவாமிநாதக் குருக்கள் என்போரும் புத்தூர் அப்பாக் குருக்கள் என வழங்கும் நா. சிவசுப்பிரமணியக் குருக்களும் சிலராவர். இவர் தமது பேரனாகிய சந்திரசேகரக் குருக்களிடமும் சமயக்கல்வி பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியப்பணி**

இவர் சிவாசாரியப் பணிக்குரிய கல்வியோடமையாது இலௌகிகக் கல்வியிலும் தராதரப் பத்திரம் பெற்றவர். தமது பத்தொன்பதாம் வயதில் (12- 12- 1917) அரசினரிடம் உதவி பெற்ற பாடசாலைகளில் போதிப்பதற்குரிய ஆசிரிய தராதரப் பத்திரம்பெற்றுச் சிறுப்பிட்டியிலும் சண்டிருப்பாயிலும் ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

சிலகாலம் ஆசிரியப் பணியில் ஈடுபட்ட இவர் தமது குலத் தொழிலாகிய ஆசாரியப் பணியைச் செய்யத் திருவருள் பாலித்தமையின் திருப்புகலூர் சென்று தமது குடும்ப மரபுக்கேற்ப சமய விசேட நிர்வாண தீக்ஷைகளையும் ஆசார்யாபிஷேகத்தையும் பெற்றார். தமது சந்ததி உடையவர் என்று சொல்லப்படுகின்ற சூழிகாம்பாள் சமேத சரண்ய புரீஸ்வரர் என்னும் நாமமுள்ள பாணலிங்க பூஜையை மேற்கொண்டு கிரமமாக ஆத்மார்த்த பூஜையைச் செய்துவந்தார். பின்னர் தமது சம்பந்தியான விளத்தூர் (தமிழ்நாடு) மு. இராமநாத சிவாச்சாரியாரின் ஆலோசனையுடன் ஸ்ரீசக்ர பூஜையையும் ஆரம்பித்துச் செய்துவந்தார்.

**விவாகப் பேறு**

தமது குருத்துவத்துக்கு உதவியாக இல்லறமாகிய நல்லறத்தை நாடவேண்டியவரானார். நவிண்டிலைச் சேர்ந்த துவிபாஷா விற்பன்னரும் கந்தபுராண உரையில் சிறந்தவரும் கந்தவன நாதர் பரம்பரை அர்ச்சகருமான கனகசபாபதிக் குருக்களின் மகளாகிய தாக்ஷாயணி என்னும் கன்னியைக் கைப்பிடித்தார். மனைமாட்சி இரண்டு சற்புத்திரர்களைப் பெறுமளவே நீடித்தது. அம்மையார் சிவபதம் அடையவே இந்தியாவிலே சிவகங்கையைச் சேர்ந்த மீனாட்சிசுந்தர கனபாடிகள் மகள் சௌந்தராம்பிகையை மணமுடித்தார். அப்பெண்மணியும் இரண்டு புத்திரிகளைப்பெற்று விண்ணெய்தினார். அதன்மேல் சிவகங்கையைச் சேர்ந்த இராமநாதையர் மகள் சீதாலக்ஷ்மியை மணம் முடித்து நான்கு புத்திரர்களையம் ஆறு புத்திரிகளையும் பெற்றார்.

**ஆசாரியப்பணி**

கும்பாபிஷேகம், சங்காபிஷேகம், ஆசார்யாபிஷேகம், மஹோற்சவம் முதலிய நைமித்திகக் கிரியைகளில் பக்தர்கள் கண்டுகளிக்கும் வண்ணம் கடமையாற்றும் கண்ணியர். இவர் முற்றுவித்த கும்பாபிஷேகங்கள் பலவெனினும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை திருநெல்வேலி காயாரோஹண சிவன், விளைவேலி துர்க்கை அம்பாள், ஆயாக்கடவை சித்தி விநாயகர், கைதடிப் பிள்ளையார் என்பன.

**மஹோற்சவம்**

இவர் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக கந்தவனம் கந்தசாமி கோவில், மஞ்சவனப்பதி முருகன் கோவில், தம்பலகாமம் சிவன் கோவில், கைதடிப் பிள்ளையார் கோவில் முதலிய ஆலயங்களிலும் மஹோற்சவம் நடத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிர்வாகத்திறன்**

சிவாச்சாரியார் அவர்கள் தம்மாதீனத்திலுள்ள நீர்வேலி, வாய்க்காற்றரவைப் பிள்ளையார் கோவிலின் நித்திய நைமித்திகங்களை வழுவாது ஆற்றிவந்தார். கோவிலின் வளர்ச்சிக்கு அவ்வப்போது இன்றியமையாதனவற்றைச் செய்தும் செய்வித்தும் பணியாற்றிவந்துள்ளார். தேர் பழுதடைந்த நிலையில் இருந்ததைக் கண்டு விநாயகப் பெருமான் திருவருட்டுணை கொண்டு பக்தகோடிகளின் பொருளுதவியால் பெரும் பொருட்செலவில் புதிய சித்திர இரதத் திருப்பணியை 1963ஆம் ஆண்டு செய்துமுடித்தார். ஆலயமும் பல்லாண்டுகளாக கிலமாகியிருந்ததைக் கண்டு ஆலயத் திருப்பணியை முற்றுவித்து குடமுழுக்கும் செய்தார்.

**ஆபதோத்தாரணர்**

நித்திய கர்மாநுஷ்டானங்களில் அசையா நம்பிக்கையும் சைவம் அனுஷ்டானத்துக்குரியது என்னும் உறுதியும் பூண்ட இப்பெரியார் தம் பெயருக்கேற்றவாறு சமயத்துக்கு எத்திசையில் ஆபத்து நேரினும் முன்வந்து கைகொடுத்துதவும் வீரர் என்பதை அவர் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பல எடுத்துக்கூறும். தமது புதல்வர்களான சந்திரசேகரக் குருக்கள், சோமசுந்தரக் குருக்கள் என்போருக்கும் முறைப்படி ஆசார்யாபிஷேகம் செய்வித்து நித்திய கர்மானுஷ்டானங்களில் ஈடுபடுத்தினார்.

ஒருசில அந்தணர்களே குருக்களிடம் தீக்ஷை, ஆசார்யாபிஷேகம் பெற்றுள்ளனர். அவர்களில் மாவை ஆதீனத்தைச் சேர்ந்தவரும் வைதிக சைவ நெறியில் கடும் பற்றுக்கோடாக விளங்கியவரும் ஆகிய பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் ஒருவராவர். அவர் முதுகலைமாணிப் பட்டதாரியாக ஆசிரியப் பணிபுரிந்துகொண்டு சிவாச்சாரியாராகத் திகழ்ந்தவர். இவருடைய தோற்றமே ஒரு சிவாசாரிய வடிவமாகும். இவர் தமது தீக்ஷாகுருவுக்கு இறுதிக் காலம்வரை அன்பாக நடந்து இறுதிக் கிரியைகளிலும் பங்குகொண்டு தமது கடமையைச் செலுத்தினார்.

**சிவபதப் பேறு**

ஆபதோத்தாரணக் குருக்கள் என்னும் நாமம் பூண்ட ஆசார்யமணி அவர்கள் 4-4-74 இற்குச் சரியான பிரமாதீச வருடம் பங்குனி மாதம் 22ஆம் திகதி வியாழக்கிழமை வளர் திரயோதசியில் மாலை 4 மணியளவில் பிறவாயாக்கைப் பெருமான் திருவடி நீழலில் நித்தியானந்தப் பெருவாழ் வெய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 65. சி. இரத்தினசபாபதி ஐயர்

(இருபதாம் நூற்றாண்டு நடுப்பகுதி)

பிரதிகள் எங்குமிராது அழியவிருந்த சங்கரவிலாசம் நூலினைக் காத்துத் தமிழ் உலகிற்கு அளித்தவர் இரகுநாதையர் சோதிட பரிபாலன மடத்துத் தலைவரும், இரகுநாதையரின் பேரனும், இ. சிவராமலிங்கையரின் புத்திரரும். ஆரிய திராவிட பண்டிதருமாகிய சி. இரத்தினசபாபதி ஐயர் ஆவார். இவர் சி. வை. தாமோதரம் பிள்ளை, உ. வே. சாமிநாத ஐயர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வழியில் நின்று தொண்டாற்றியுள்ளார். நூலின் முன்னுரையிலே கீழ்க்கண்டவாறு குறித்துள்ளார். "புதிய புதிய நூல்களை ஆக்குவதிலும்பார்க்க, எமது பழைய புலவர்களால் அரிதின் இயற்றப்பெற்றனவாய் இதுவரையில் அச்சிடப்படாதிருக்கும் தமிழ்நூல்களை அச்சிட்டு வெளியிடுவது சிறந்ததென்பதை எவரும் ஒப்புக்கொள்வார்" - சி. இரத்தினசபாபதி ஐயர் 1937 சங்கரவிலாசம்.

வடமொழியிலிருந்த சங்கரவிலாசம் எனும் புராணத்தை சிதம்பரநாத பூபதி என்பவர் தமிழில் பாடியுள்ளார். இது தமிழில் பாடப்பெற்ற காலம் தெரியவில்லை. தன்னுடைய பாட்டனார். இரகுநாத ஐயரினால் சோதிடபரிபாலன மடத்துப் புத்தகக் கருவுலத்தினுள் வைக்கப்பட்டிருந்த சங்கரவிலாசம் எனும் அரிய நூலின் எட்டுப்பிரதியை சி. இரத்தினசபாபதி ஐயர் கண்டெடுத்தார். அந்த ஒலைச்சுவடியானது 1700ஆம் ஆண்டளவில் பிரதிசெய்யப் பட்டிருந்தமையால் சிதைந்த நிலையில் இருந்தது. இந்நூலை அச்சாக்கி வெளிக்கொணர்ந்தபோது அதற்கு அணிந்துரை எழுதிய ஸ்ரீமான் செ. இராசநாயகம் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். "சென்னை Goverrument Oriental Manuscripts Libraryயில் இத் தமிழ்ச் சங்கரவிலாசப் பிரதியில்லை. அதுவுமன்றிக் கனம் உலகநாத பிள்ளையவர்களால் அச்சிட்டு வெளியிட்டிருக்கும் தஞ்சை சரஸ்வதிமஹால் புத்தகங்களின் அட்டவணையிலும் இந்நூல் குறிக்கப்படவில்லை. (10:21038) "தாங்கள் இந்நூலை வெளியிட்டது தமிழுலகிற்கு உபகாரமே" என உ. வே. சாமிநாத ஐயர் 11-11-1037 இல் புகழ்கின்றார்.

சங்கரவிலாசம் என்பது சிவபெருமானுடைய விளையாட்டு அல்லது மேன்மை எனப்பொருள்படும் ஓர் புராணசரிதம் இது சிவபுராணங்களில் கூறப்படும் விடயங்களைத் திரட்டி 1435 விருத்தப் பாக்களால் ஆக்கப்பெற்றுள்ளது. இந்நூல்பற்றி வித்துவசிரோமணி சி. கணேசையர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார். "இந்நூற் செய்யுட்கள் யாவும் சொற்சுவை பொருட்களை நிரம்பினவாய் இராமாயணம், கந்தபுராணம், வில்லிபுத்தூர் ஆழ்வார் பாரதம் முதலிய காப்பியங்களோடு ஒத்த நடையுடையன என்பதும் இந்நூல் செய்யுட்களைப் படித்த அறிஞர்க்கு உணராதே போகா." சி. இரத்தினசபாபதி ஐயர் காலம் இருபதாம் நூற்றாண்டு நடுப்பகுதி ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 66. ஊரெழு பெரிய குருக்கள் என அழைக்கப்படும் ச. சோமசுந்தரக் குருக்கள் (1900 - 1974)

புனித வற்றாத நீரூற்றைத் தன்னகத்தே கொண்ட ஊரெழு கிராமத்திலே பெரிய குருக்கள் என அழைக்கப்படும் சதாசிவக்குருக்களுக்கும் வாலாம்பிகை அம்மா அவர்களுக்கும் மூத்த மகனாக சைவமும் தமிழும் தழைக்க 1900ஆம் ஆண்டு தைத்திங்கள் பூச நட்சத்திரத்திலே அவதரித்தார்.

குழந்தைப்பருவம் முதல் இறை நாட்டம் உடையவராக விளங்கிய இவர் இளமைக்கல்வியை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் மேற்கொண்டு சட்டக்கல்வியைக் கற்றுத்தேர்ந்தார். முற்பிறப்பு புண்ணிய பயன் இவரை இழுக்கவே இறை பணியை தம் முழுப்பணியாக ஏற்றார். இவர் தந்தையார் வைரவநாதக் குருக்கள் சதாசிவக்குருக்கள் இளமையில் காலமாக, தாயாரையும் சகோதரர் ஆகிய பாலசுந்தரக் குருக்களையும் பாதுகாத்து தந்தையாரின் குருத்துவத்தையும் தொடர்ந்தார். வட மொழியை அருணாசல சாஸ்திரிகளிடமும் ஆகம நுணுக்கங்களை அச்சுவேலி குமாரசாமிகுருக்களிட மிருந்தும் கற்று தன்னை முழுமையான இறைபணிக்கு தயார்படுத்தினார். திருப்பெருந்துறை சென்று ஆச்சாரியபிஷேகம் செய்யப்பெற்றார்.

1920ஆம் ஆண்டு மூளாய் வைத்தியரின் மகள் மனோன்மணி அம்மாவைக் கரம் பிடித்த இவர் மூன்று பெண்பிள்ளைகளையும், இரண்டு ஆண்பிள்ளைகளையும் பெற்று இன்புற்றார். பிரபல சிவாச்சாரியார்களின் தொடர்பால் தனது அறிவையும், ஆற்றலையும் வெளிப்படுத்தினார். நெடுந்தீவு. அனலைதீவு, புளியங்கூடல், இணுவில் கந்தசுவாமி ஆலயம், மண்டைதீவு திருவெண்காடு ஆலயம், நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவில், ஊரெழு மனோன்மணி ஆலயம், ஊரெழு வீரகத்தி பிள்ளையார் கோவில் போன்ற ஆலயங்களில் உற்சவ குருவாக விளங்கினார். இலங்கையில் முதன்முதலில் 33 குண்டங்களுடன் நடந்த சித்தங்கேணி மகாகணபதி பிள்ளையார் கும்பாபிஷேகம் இவர் தலைமையில் நடைபெற்றமை இவர் ஆளுமையை கோடிட்டுக்காட்டுகின்றது. ஈழத்திருநாட்டில் பல ஆலயங்கள் இவரால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு சிறப்புற இன்றும் விளங்குகின்றன. அடிக்கடி இந்தியத் திருத்தலங்களைச் சென்று தரிசிக்கும் இவர் காசி தீரத்தங்களை செம்புகளில் கொண்டுவந்து தான் செய்யும் கும்பாபிஷேகங்களில் பயன்படுத்தினார். இன்றும் அன்னாரின் மகனான வாகீஸ்வரக்குருக்கள் அவர்கள் ஊரெழுவில் தந்தையாரின் இறைபணிகள் அனைத்தையும் சிறப்பாக நடத்தி வருகின்றமை பெருமைக்குரியதும் போற்றுதற்குரியதுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் வேட்டல், வேட்பித்தல் முதலான அந்தணர்களுக்குரிய ஆறு தொழில்களிலும் முதன்மை பெற்று விளங்கினார். வேத ஆகமங்களை பல அந்தணர்களுக்கு கற்பித்து அவர்களைப் பிரகாசிக்கச் செய்தார். புராண படனங்களை செய்வதிலும் வல்லவராகி விளங்கினார். இதுமட்டுமல்லாமல் சித்திரம் வரைவதிலும், சோதிடம், மாந்திரிகம், பேச்சுத்திறன் ஆகியவற்றிலும் திறமைபெற்று விளங்கினார். பலருக்கும் ஆச்சாரியபிஷேகம் செய்து வைத்தார். இவரின் முதன்மை சீடராக நா. சோமஸ்கந்த குருக்கள் (கதிரைமலை சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்) விளங்குகின்றார். இவருடைய ஆச்சாரியபிஷேகத்தை கதிர்காம ஆலயத்தில் வைத்து நடாத்தி வைத்தார்.

பரார்த்த பூசையில் உள்ள சிரத்தையை ஆன்மாரத்த பூசையிலும் காட்டிவந்தார். சூளிகாம்பா சமேத சரண்ணிய புரீஸ்வர் எனும் நாமம் கொண்ட பாணலிங்கத்தை ஆன்ம லிங்கமாக ஏற்று வீட்டின் ஈசானத்தில் தனியிடம் ஒதுக்கி விரிவுபட வழிபாடு செய்துவந்தார். தான் வாழ்ந்த வீட்டின் வளவில் குலதெய்வமாக விளங்கும் வைரவப்பெருமானுக்கு கோவில் அமைத்து திறம்பட ஆதரித்து வந்தார்.

இவர் தோற்றத்தாலும், அறிவாலும் சிவப்பொலிவை பெற்று ஆறு அகப்பகைகளை வென்று எல்லோரின் அன்பிற்கும் இனியவராய் விளங்கினார். இதனால் சைவப் பெருமக்கள் பெரிய குருக்கள் என்று அழைக்கும் அளவிற்கு பெரிய இடம் பெற்றார். மந்திர தந்திர கிரியா பாவங்களை மனங்கொண்டு 'பிரதிட்டா நவரத்தினமணி' எனும் பட்டம் அளித்து அன்றைய சைவ பெருமக்கள் அகம் மகிழ்ந்தனர். இவரின் தந்தையார் சதாசிவக்குருக்களின் பெயரால் அனலதீவில் சதாசிவ மகாவித்தியாலயம் தாபிக்கப்பட்டு இன்றும் இயங்கி வருகின்றது. இது இவர்களின் மேன்மையை சான்று உரைப்பதாக உள்ளது. 1974ம் ஆண்டு வைகாசி மாதம் பூர்வபக்க ஏகாதசி திதியில் சிவபதம் எய்தினார். அண்மையில் கூட நவக்கிரக பிரதிட்டா விதி இவரின் கையெழுத்து பிரதியை கொண்டு தா. மகாதேவக்குருக்களால் தொகுக்கப்பட்டு வெளியீடு செய்தமை இங்கு நினைவு கூறத்தக்கது. ஊரெழு பெரிய குருக்கள் சோமசுந்தரக் குருக்கள் எனும் நாமம் என்றும் ஓங்கி ஒலிக்கட்டும், என்றும் வாழட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 67. நூற் பதிப்பாளர்
## சி. பத்மநாப ஐயர் (1900 - 1971)

இவர் 1900ம் ஆண்டில் பிறந்தவர். முன்னேஸ்வரம் பாரத்வாஜ கோத்ரம் சிவஸ்ரீ சிவராமகிருஷ்ண ஐயர் சுப்புலக்ஷ்மி தம்பதிகளின் புதல்வர். தமது இருபத்தி ரண்டாவது வயதிலேயே கொழும்பில் சரஸ்வதி புத்தகசாலை ஒன்றினை ஆரம்பித்து நடத்திவந்தவர். தமிழ், ஆங்கிலம், சிங்களம், சமஸ்கிருதம் ஆகிய மொழியறிவுகளைப் பெற்றவர். கொழும்பு செட்டியார்தெரு முத்துவிநாயகர் கோவில், ஜிந்துப்பிட்டி முருகன் கோவில் ஆகியனவற்றில் முப்போதும் திருமேனி தீண்டுபவராக விளங்கியவர். ஆனந்தசாகரம் எனும் தமிழ் மாதாந்த சஞ்சிகையை 1921 ஏப்ரல் மாதம் முதலும் சரஸ்வதி எனும் தமிழ் மாதாந்த சஞ்சிகையை 1927ம் ஆண்டு முதலும் வெளியிட்டு வந்தவர். கறுவாக்காட்டுப் பகுதியில் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிக்கும் தமிழ்ப் பண்டிதராகத் திகழ்ந்தவர். சிலாபம் சென்.மேரீஸ் கல்லூரியில் கற்றவர். கலாநிலையம், இந்துகலாபிவிருத்திச் சங்கம் எனும் நிறுவனமமைத்து அதனூடாக தமது சரஸ்வதி புத்தக சாலையில் ஆயிரக்கணக்கான நூல்களைப் பதிப்பித்தும், உரையெழுதியும், விற்பனை முகவராகவும் விளங்கி வெளிப்படுத்திய பெருமைக்குரியவர். சிறுசிறு நூல்களாக இந்துசமய நூல்களை வெளியிட்டு மக்கள் யாவரிடமும் அடைவதற்கு வழி வகுத்தவர். இத்தகைய பெருமைக்குரியவர் பத்மநாப ஐயர். 1971ல் அமரத்துவமடைந்தார்.

## 68. கா. சி. மகேச சர்மா
(இருபதாம் நூற்றாண்டு)

ஸ்ரீவத்ஸ கோத்திரத்தைச் சேர்ந்தவர். கார்த்திகேயப் புலவரின் இளைய மகன் சிவசிதம்பர ஐயரின் புதல்வர். பெற்றோரிட்ட பெயர் சிவஞானசுந்தர சர்மா. நொத்தாரிசாக வேலை பார்த்ததால் நொத்தாரிசு மகேச சர்மா எனவழைக்கப் பட்டார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் என்பவற்றில் தேர்ச்சி பெற்றிருந்த இவர் வானசாத்திரத்திலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார்.

## 69. ஆ. சண்முகரத்தின ஐயர்
(இருபதாம் நூற்றாண்டு)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வசித்தவர். கொச்சிக் கணேசையர் பரம்பரையில் வந்தவர். பாரத்துவாச கோத்திரத்தைச் சேர்ந்தவர். 1909 இல் திரிகோணாசல புராணத்தை முதன்முதலில் பதிப்பித்துள்ளார். (சண்முகரத்தின திரிகோணாசல புராணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 70. காலி சிவன் கோவில் மு. இராமநாதக் குருக்கள்

**(03.08.1901 - 11.02.1999)**

தமிழ்நாடு தஞ்சாவூரில் முத்துச்சாமி ஐயர் - ஜானகி தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். 1919இல் தமது தாய்மாமனுடன் இலங்கைக்கு வந்தவர், யாழ் கரவெட்டி, தச்சன்தோப்பு பிள்ளையார் கோவில் அர்ச்சகராக அமர்ந்தார். தமது 20 வயதில் மலேஷியா சென்று 1946வரை அங்கு குருத்துவப் பணியாற்றினார். இலங்கை திரும்பி ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோவிலில் கடமையேற்றார்.

1953இலிருந்து 1983 வரை தமது நீண்டகால குருத்துவ சேவையை அர்ப்பணிப்புடன் செய்தார். பிள்ளைகளின் கல்விமுன்னேற்றத்தில் கண்ணாயிருந்தார். கைவேலைகளில் திறமையுள்ள இவர் ஒட்டுப் பலகைகளில் நுட்பமான வேலைப்பாடுகள் செய்வதில் வல்லவராயிருந்தார்.

காலி சிவன்கோவில் கும்பாபிஷேக மலரில், "சிறப்பு, அழைப்பு, களிப்பு" என்ற தலைப்பில் மீனாட்சிசுந்தரேசருக்கு அற்புதமான பாடல் ஒன்று எழுதியிருக்கிறார். இவர் இக்கும்பாபிஷேகத்தை நயினை ஐ. கைலாசநாதக் குருக்களோடிணைந்து 08.02.1971இல் செய்தமை குறிப்பிடத்தக்கது. 11.02.1999 இல் இவர் இறையடி சேர்ந்தார்.

## 71. சி. பாலசுப்பிரமணியக் குருக்கள்

**(இருபதாம் நூற்றாண்டு)**

இவர் வட்டுக்கோட்டை சிவசுப்பிரமணியக் குருக்களின் புதல்வர். முன்னேஸ்வரம் மு. சோமாஸ்கந்தக் குருக்களின் மகளான வடிவாம்பாள் என்பவரைத் திருமணம் செய்து, மாமனாருக்குப் பிறகு முன்னேஸ்வரம் ஆலயப் பிரதம குருவாக விளங்கினார். முன்னேஸ்வர மான்மியத்தைத் தமிழ், சிங்களம். ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிட்டதிலும், முன்னேஸ்வரம் கோடியர்ச்சனை மலர் (1962). முன்னேஸ்வரம் மஹாகும்பாபிஷேக மலர் (1963),ஸ்ரீ முன்னேஸ்வர வரலாறு என்பவை வெளியிடப்படுவதில் இவரின் பங்கு அளப்பரியது ஸ்ரீ முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவழகி அம்பாள் திருவூஞ்சல் (1965) இவரால் இயற்றப்பட்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 72. ப. இராம ஐயர்

(07-06-1907 - 04-01-1987)



முழுப்பெயர்: பிரம்மஸ்ரீ பத்மநாபஐயர் இராமஐயர்

பிறந்த தேதி : 07-06-1907

தந்தை பெயர்: பத்மநாப ஐயர்

தாய் பெயர்: ரங்கநாயகி

பிறந்த இடம்: திருவனந்தபுரம் .இந்தியா

கல்வித்தகைமை (1) மகாமகோ பாத்தியாய - 1933 இந்திய அரச சமஸ்கிருதக் கல்லூரி, திருவனந்தபுரம்

(2) ஆயுர்வேத சிரோமணி 1937- சென்னைப் பல்கலைக்கழகம்

(3) B. A Sanskrit (Hons) London

தொழில்: ஆசிரியர் இராமநாதன் மகளிர் கல்லூரி மருதனார்மடம் வீட்டில் பிரத்தியேக சமஸ்கிருத வகுப்புகள் நடத்தியவர்

மனைவி : காமாட்சி அம்மா (கீரிமலை குருசாமிக் குருக்களின் மூத்த மகள், நகுலேஸ்வரக் குருக்களின் மூத்த சகோதரி)

பிள்ளைகள் (1) பத்மநாப சர்மா (2) ரங்கநாயகி (3) பாலகிருஷ்ண சர்மா (4) சீதாலட்சுமி (5) ஞானலட்சுமி (6) விஜயலட்சுமி

அமரத்துவம் : 04-01-1987 (இந்தியாவில்)

## 73. சு. சிவசுப்பிரமணியக் குருக்கள்

(1906 - 1984)

கந்தரோடையில் 1906 1984 காலப்பகுதியில் வாழ்ந்தவர். பாரத்துவாச கோத்திரத்தைச் சேர்ந்தவர். தகப்பனார் பெயர் சுவாமிநாத ஐயர். தாயார் ஈழத்துச் சிதம்பரம் கணபதீஸ்வரக்குருக்களின் சகோதரியான இலட்சுமி அம்மா என்பவராவர். தமிழ், சமஸ்கிருதம் இரண்டிலும் மிக்க புலமையுள்ளவராகவும், சிவாலய, வைதீக கிரியைகள் செய்வதில் அனுபவமுடையவராகவும் விளங்கினார்.

## 74. பொன்னுத்துரை ஐயர்

(இருபதாம் நூற்றாண்டு)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவர். ஆறுமுக நாவலிடமும், வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளையிடமும் தமிழ் இலக்கண இலக்கியங்கள் கற்றவர். இளமையிலேயே கவி இயற்றும் வல்லமை கொண்டவர். இவர் நல்லூர் நிரோட்டக யமக அந்தாதி இயற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 75. கரம்பொன் செல்லையர் சண்முகையர்

(இருபதாம் நூற்றாண்டு)



கரம்பொன் கிழக்கு முருகன் கோவில், கடற்கரை கண்ணகை அம்பாள் கோவில், முத்துக்குமார் வளவு வைரவர் கோவில் ஆகியவற்றில் 50 ஆண்டுமேலாக பூஜை செய்தவர் குலதெய்வ முருகன் உபாசனை மூலம் விஷகடிக்கு பார்வை பார்ப்பது, நூல் கட்டுதல் முதலியவற்றில் பிரபலமானவர் முள்முருங்கை விதைகள் (கொட்டை) மூலம் (நாடிசோதிடம், சோகி உருட்டி பார்ப்பது போல்) குறி, நினைத்த காரியம் கூறல் தேர்ச்சி நிறைந்தவர் என்பதனால் பல இடங்களிலிருந்தும் பலர் வந்து இவரது வைத்தியம், சோதிடம் முதலியவற்றால் பயன்பெற்றுச் சென்றனர். புராண படனம் செய்வதிலும் திறமை உள்ளவராய் விளங்கினார்.



## 76. க. வை ஆத்மநாத சர்மா

(1907 - 1975)

இவர் 1907 - 1975 காலப்பகுதியில் கந்தரோடையிலும், யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலும் வாழ்ந்தவர். பாரத்வாச கோத்திரத்தைச் சேர்ந்தவர். வேதாகமங்களிற் பாண்டித்தியம் பெற்றிருந்ததுடன் வண்ணார்பண்ணை நாவலர் சைவவித்தியா சாலையில் முதன்மையாசிரியராகவும் பணிபுரிந்துள்ளார். சமஸ்கிருதத்திலுள்ள விக்னேஸ்வர மகோற்சவ பத்ததி, ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம் (அன்னை லலிதாம்மிகை அருட்பேராயிரம்), ஆதிசங்கரரின் சுப்பிரமணிய புஜங்கம் என்பவற்றைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார். பிராமணசமாஜம் உருவாவதில் தீவிர பங்காற்றியவர். ஈழநாடு, வீரகேசரி, ஞானதீபம், இந்துசாதனம் முதலிய பத்திரிகைகளில் இவரது ஆக்கங்கள் வெளி வந்துள்ளன. சித்திர பாட ஆசிரியரான இவர் சங்கீதத்திலும் பாண்டித்தியமுடையவர்.

20 வயதில் சிவாசார்ய அபிஷேகம் செய்யப்பெற்று சிவபூஜாதுரந்தரராக இருந்ததுடன் பல மஹோற்சவங்கள், கும்பாபிஷேகங்களையும் செய்திருக்கிறார். இல்லறக் கிரியைகளையும் (பூர்வ) பல இடங்களில் விதிப்படி நடத்திவைத்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 77. சண்டிலிப்பாய்

## சு. சின்னையாக் குருக்கள்

(இருபதாம் நூற்றாண்டு)

சங்கானை இலுப்பைத்தாழ்வு முருகமூர்த்தி கோவில், சண்டிலிப்பாய் வேவிற்பதி ஐயனார் கோவில், சீரணி நாகபூஷணி அம்பாள் கோவில் ஆகியவற்றில் மகோற்சவ குருக்களாக விளங்கிய சின்னையாக் குருக்கள் புராணபடனத்திலும் வல்லவர். இவர் தென்னிந்தியா அம்பா சமுத்திரத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். அங்கேயுள்ள தமது குலதெய்வமான ஐயப்பன் கோவிலை நினைத்து சண்டிலிப்பாய் ஐயனார் கோவிலை அமைத்தனர்.

சண்டிலிப்பாயில் வேதாகம குருகுலம் நடத்தியவர். நவாலி சாமி. சண்முகரத்தினக் குருக்கள், சாமி. விஸ்வநாதக் குருக்கள், ஆலங்குளாய் செல்லத்துரைக் குருக்கள் முதலியோர் இக்குருகுலத்திலேயே படித்தவர்கள். மொடேர்ண் சர்வதேச கலை கலாசார நிறுவன ஸ்தாபகர் சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்களும் (இவரது பேரனார்) இவரிடம் பாடம் கேட்டவரே.

குருக்கள் மாதக்கணக்காக வன்னிப் பகுதியில் தங்கியிருந்து முள்ளியவளை, வற்றாப்பளை, குமாரபுரம், செம்மலை முதலிய இடங்களிலுள்ள ஆலயங்களில் குருத்துவ சேவைகளையும் செய்து புராண படனங்களையும் நடத்திவிட்டு வருவார். அங்கே பல குருமாரும் சைவப் பெருமக்களும் இவரிடம் பயன் சொல்லக் கற்றுக்கொண்டதுண்டு. பேராசிரியர் நா. சுப்பிரமணிய ஐயர் அவரது தமையனார் நடராஜ ஐயர் முதலானோர் இவரிடம் புராணபடனம் கற்றுக்கொண்டவர்களில் சிலராவர். சம்ஸ்கிருதமும் கற்பித்துவந்தார்.

பிரபல வயலின் வித்துவானாக இருந்த சிவஸ்ரீ சி. நாகேஸ்வரக் குருக்கள் இவரது மகன் ஆவார்.

# 78. க. வைத்தியநாத சாஸ்திரிகள்

(இருபதாம் நூற்றாண்டு)

கந்தரோடையில் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்தவர். பாரத்துவாச கோத்திரத்தைச் சேர்ந்தவர். தமிழ், சமஸ்கிருதத்தில் புலமை பெற்றவர். ஈழத்துச் சிதம்பரம் கணபதீஸ்வரக் குருக்கள் உட்படப் பலர் இவரிடம் சமஸ்கிருதம் பயின்றுள்ளனர். திருக்கேதீச்சரத் திருப்பதிகங்களும் அவற்றின் பொழிப்புரையும், வடமொழியிலுள்ள ஸ்ரீ கேதீஸ்வர க்ஷேத்திர வைபவமும் தமிழ் மொழி பெயர்ப்பும் என்ற நூலை வெளியிட்டுள்ளார் (1919), இவரின் புதல்வரே ஆத்மநாத சர்மா ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 79. வானியல் சோதிட நிபுணர்
## ந. கந்தசாமி ஐயர்
(20.04.1908 - 11.01.2001



யாழ்ப்பாண திருக்கணித பஞ்சாங்க கணித முன்னோடிகளில் ஒருவரும், பிரபல சோதிட, வானியல் நிபுணருமாகிய கந்தசாமி ஐயரவர்கள், ஒரு வானியல் அறிஞராக, சோதிடராக, விரிவுரையாளராக, அதிபராக, ஆசிரியராக, வர்த்தகராக, விவசாயியாக, பல்துறை விற்பன்னராகத் திகழ்ந்தவர். வானசாஸ்திரத்தில் நிபுணத்துவம் பெற்றிருந்த இவர் பல ஆய்வாளர்களை ஒன்றுசேர்த்து யாழ் வானியற் கழகம் எனும் அமைப்பை உருவாக்கி பலரது வானியற் சந்தேகங்களைக் களைந்தவர்.

செந்தண்மை பூண்டொழுகி தனது சமூகத்திற்கு பெருமை சேர்த்து கற்பித்தல், நிர்வாக ஆளுமை, ஆத்மீக விளக்கம், சோதிட நிபுணத்துவம், வானியல் ஞானம் என்பன கைவரப்பெற்று. சைவாசிரிய கலாசாலையில் பூமிசாஸ்த்திர விரிவுரையாளராயிருந்து தனது நெடுநாள் வாழ்வில் தன் சமூகத்திற்குப் பெருமைசேர்த்தவர்.

தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம். சிங்களம் ஆகிய மொழிகளில் மிக்க தேர்ச்சியும் பெற்ற இவர் T.S. விஸ்வநாத சிரௌதிகளிடம் சோதிட கணித பயிற்சி பெற்றவர். 34 வருட ஆசிரிய சேவையுடன் தனது ஓய்வுக்காலங்களையெல்லாம் பயனுறுதியுடன் செல்வழித்து வழிகாட்டியாகத் திகழ்ந்தார்

## 80. வ. மு. இரத்தினேசுவர ஐயர்
(இருபதாம் நூற்றாண்டு ஆரம்பம்)


யாழ்ப்பாணம் உடுவிலைச் சேர்ந்தவர். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் மாணாக்கர். பிற்காலத்தில் வண்ணார்பண்ணையில் வசித்தவர். தமிழ்ப் பண்டிதர். பிரசங்க சபாமணி எனப் பாராட்டப் பெற்றவர். இலங்கை, இந்தியா, பர்மா முதலிய நாடுகளில் ஆசிரியராகப் பணியாற்றியவர். செட்டிநாட்டிலே சிவநேசன் பத்திரிகையில் நீண்டகாலம் சேவையாற்றியவர். புராணங்களுக்குப் பயன் சொல்வதில் வல்லவர். நல்லூர்க் கந்தசுவாமி பஞ்சரத்தினம் பாடியவர். வரதபண்டிதரின் கண்ணியவளை குருநாதசுவாமி கிள்ளை விடுதூதை முதன் முதலில் பதிப்பித்தவர். இவருக்குப் பிள்ளைகள் கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 81. திருகோணமலை பத்ரகாளிகோவில் ஆதீனகர்த்தர் சு. சோமாஸ்கந்தக் குருக்கள்

## (1910 - 07.05.1985)



பாடல் பெற்ற தலங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வரத்தைக் கொண்டிருக்கும் மாவட்டமான திருகோணமலையில் ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் தேவஸ்தானம் மிக முக்கியமான ஓர் அடையாளமாகத் திகழ்கிறது. யாழ்ப்பாணத்தின் நல்லூர் கந்தசுவாமி கோவில்போல கிழக்கு மாகாணத்தில் ஒரு தேசியக் கோவிலாகவே அது மிளிர்கிறது. ஒருவகையில் இன்று கிழக்கு மாகாணத்தின் அனைத்துக் கோவில்களுக்கும் தலைமைக் கோவில்போல அதன் நிர்வாகக் கட்டமைப்பும் அவ்வாலயத்தின் ஆதீனகர்த்தர்களின் ஆளுமையும் சிறந்து விளங்குகிறன.

ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலயத்தை அத்தகைய நிலைக்குக் கொண்டுவந்தவர் அதன் ஆதீனகர்த்தாவாகிய சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் ஆவார். 1910ஆம் ஆண்டு பிறந்த இவர் உரிய காலத்தில் பாடசாலைக் கல்வி, வேத சிவாகமக் கல்வி முதலியவற்றை சிறப்பாகப் பெற்று இளமைப் பருவத்திலேயே குருப்பட்டம் தரித்து சிவாகம முறைப்படி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் நிர்வாகக் கடமைகளையும் பொறுப்பேற்று ஆலயத்தை மிகவும் சிறப்பாக நடத்திவந்தார். ஆலய வளர்ச்சிக்காக அயராது உழைத்தார். மஹோற்சவ காலங்களில் நேரம் தவறாது உற்சவங்களைச் சிறப்பித்து கோலாகலமாக்கி வழிநடத்துவார். நவராத்திரி, கௌரிக் காப்பு போன்ற விரத காலங்களில் பக்தர்கள் விரதங்களை அனுஷ்டித்து அம்பாளைத் தரிசிக்க உரிய ஏற்பாடுகளை வழிவகுத்துக் கொடுப்பார்.

நித்திய நைமித்திகங்கள் எவ்வளவு சிறப்பாக நடைபெறுகின்றனவோ, அதே அளவுக்கு நேரம் தவறாமை, அடியவர்களுக்கான வழிபாட்டு வசதிகள், அவர்களின் மனத்திருப்தி, அலங்காரம், கச்சிதமான செயற்பாடு, அர்ச்சகர்கள், ஊழியர்களிடையே ஒழுங்கான கடமை உணர்வு இவைகள் அனைத்திலும் தீவிர கவனம் செலுத்திவந்தார்.

பத்ரகாளி அம்பாளின் நான்கு கும்பாபிஷேகங்களைத் தலைமைதாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தினார். திருமலை மாவட்டத்தின் எல்லாக் கோவில்களின் கும்பாபிஷேகங்களைத் தலைமைதாங்கி நடத்தி அனைத்து ஆலயங்களுக்கும் வேண்டிய உதவிகளை வேண்டிய நேரத்தில் வழங்கிச் சிறப்பித்திருக்கிறார்.

கல்வி மேம்பாட்டுக்காக நிதியுதவிகள் நல்கினார். சமய விழாக்களை ஊக்குவித்து வழிநடத்துவார். அந்தணர்களின் குருப்பட்டமளிப்பான ஆசார்ய அபிஷேகங்களை அவர்களுக்கு உரிய பருவத்தில் நடத்த ஊக்குவித்து அதற்கான உதவிகளையும் செய்வார்.

இப்போது பிரசித்திபெற்றுள்ள ஸ்ரீ பத்ரகாளி அம்பாளின் கௌரிக்காப்பு நோன்பு ஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்களின் காலத்திலேயே ஆரம்பமானது. உலகெங்கும் உள்ள ஆலயங்களில் நடைபெறும் கௌரிக்காப்பு விரத வேளைகளில் இன்று பாடப்படுகின்ற கௌரிக் காப்புப் பாடலானது திருமலை காளிகோவிலுக்காக உருவாக்கப்பட்டதே.

இவர் சைவசமய விடயங்களில் மட்டுமன்றி ஆசிரியத்துவம் மிக்கவராகவும் இருந்தார். திருமலை இந்துக் கல்லூரியில் இவர் ஆசிரியப்பணி ஆற்றியமை குறிப்பிடத்தக்கது.

இவர் இராஜலக்ஷ்மி அம்பாள் என்னும் பெண்ணைத் திருமணம் செய்து இல்லறத்தை நல்லறமாக்கி வாழ்ந்துவந்தார். இத்தம்பதியினருக்கு ஏகபுத்திரனாக சோ. இரவிச்சந்திரக் குருக்கள் 1956 இல் பிறந்தார். 1985 இல் சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள் மறைவுக்குப்பின் அவரது புதல்வரே ஆலய ஆதீன கர்த்தாவாகவும் பிரதமகுருவாகவும் விளங்குகிறார். தந்தையின் வழியில் அதே சிறப்புடன் ஆலயம் இப்போதும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## 82. பா. சண்முகக் குருக்கள்

(இருபதாம் நூற்றாண்டு)

இவர் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் சித்தங்கேணியில் வாழ்ந்தவர். ஆயுர்வேத வைத்தியர். சிந்தூரங்களைச் செய்வதிலும் கையாள்வதிலும் சிறந்து விளங்கியதால் சிந்தூர வைத்தியர் எனவழைக்கப்பட்டார். அரிய சிந்தூரம் முதலிய அனுபவ அவுடதங்களின் வைத்திய முறைகள் என்னும் நூலை 1920 இல் வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 83. புல்லாங்குழல் மூர்த்தி ஐயர்
## (1910 - 1982)

1910ஆம் ஆண்டு டிசம்பர் 14ஆம்நாள் பிரம்மஸ்ரீ வெங்கட்ராமன் - ராஜாமணி தம்பதிகளுக்கு மகனாக கும்பகோணத்தில் ராமமூர்த்தி ஐயர் பிறந்தார். ஆரம்ப, உயர்கல்விகளைக் கும்பகோணத் திலேயே முடித்தார். சிறு வயதிலேயே சங்கீத ஆர்வமும் இசைக்கருவிகளைக் கையாள்வதில் ஆற்றலும் இருந்தது.

1930களில் பர்மா - ரங்கூன் சென்று காவலர் பணியேற்றார். பின் கலவரம் தொடங்கியதோடு இலங்கை வந்தார். தந்தையாரின் கணக்குத் தணிக்கையாளர் பணியில் பயிற்சிபெற்று உதவியாளராகப் பணியாற்றினார்.

ஆர்மோனியம், மிருதங்கம், புல்லாங்குழல், வயலின், வாய்ப்பாட்டு இவைகளைக் கற்றுத் தேர்ந்து விற்பன்னராக உயர்ந்தார். இவற்றில் புல்லாங்குழலையே பிரதானமாகக் கொண்டார். இசை ஆசிரியராகவும் தம்மை வளர்த்துக்கொண்டார். இந்தியாவுக்குச் சென்று தமது உறவினரான எஸ். பாலச்சந்தரிடம் இசைநுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்தார்.

திரு ஜனநாயகம், திரு அரியநாயகம், டாக்டர் கங்காதரன், டாக்டர் மகேஸ்வரன், டாக்டர் பொன்னம்பலம், மிருதங்கம் ஆத்மநாதன், சந்திரசேகர் முதலியோர் இவரிடம் புல்லாங்குழல் பயின்றவர்களே. சந்திரசேகர் இப்போது திருச்சி கலைக்காவிரி இசைக்கல்லூரியில் பணிபுரிகின்றார். இலங்கை வானொலியிலும், யாழ். ரசிகரஞ்சன சபா, மும்மூர்த்திகள் இசைமன்றம் முதலிய பல மேடைகளிலும் கச்சேரிகள் நிகழ்த்தி ரசிகர்களின் நன்மதிப்பைப் பெற்றார். வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சைகளில் பணியாற்றியுள்ளார்.

இவரது இசைக்கச்சேரிகளுக்கு ராமநாதன், பாக்கியநாதன், அம்பலவாணர், ஆத்மநாதன், சண்முகம்பிள்ளை, சந்திரசேகரன் போன்றோர் மிருதங்கமும் சித்திவிநாயகம், சர்வேஸ்வரசர்மா, வைத்தீஸ்வர சர்மா, ராதாகிருஷ்ணன் போன்றோர் வயலின் வாசித்துள்ளனர். கணபதிப்பிள்ளை, ராமநாதன் ஆகியோரும் மூர்த்தி ஐயரின் மகன் கண்ணன் என்ற ராமநாதனும் கடம் வாசித்தி ருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாமல் அனுராத புரத்திலும்கூடப் பலருக்கு இவர் பயிற்சி வழங்கியுள்ளார். அனைத்து இசைக்கருவிகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்துவதிலும் நிபுணத்துவம் கொண்டிருந்ததால் நிறைய வித்வான்கள் இவரது வீட்டில் நிறைந்திருப்பார்கள். நாதஸ்வர வித்வான்கள் பத்மநாதன், கோவிந்தசாமி, கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி, தவில் சின்னராசா, கணேசன், ருத்ரமூர்த்தி, வயலின் ராதாகிருஷ்ணன், குமுக்கா கணபதிப்பிள்ளை, வைத்தீஸ்வரன், மற்றும் வீரமணி ஐயர், பரம் தில்லைராஜா, சத்தியபாமா ராஜலிங்கம், ராம். குமாரசாமி போன்றோர் இவருடன் தொடர்பிலிருந்தவர்கள்.

'வேணுகானமணி', புல்லாங்குழல் வேந்தன்' முதலிய பல விருதுகள் கிடைத்தன. தங்கப்பதக்கம் வழங்கியும், புல்லாங்குழலுக்குத் தங்கப் பூண் அணிந்தும் கௌரவித் துள்ளனர். திருமுருக கிருபானந்த வாரியார் இலங்கை வரும்போது இவரது இல்லத்திலேயே தங்குவார். அவரது பிரசங்கத்தில் மூர்த்திஐயர் ஆர்மோனியம் வாசிப்பார். இதேபோல் கோபிசெட்டிப்பாளயம் கலைமாமணி ரத்னகுமாரி கல்யாணசுந்தரம் கச்சேரிக்காக இலங்கை வரும்போது இவர் வீட்டிலேயே தங்குவார். அவர்கள் இவரது உறவினரும்கூட.

மிருதங்கம் கணேசையர்போல இவரும் இசைத்துறையோடு கணக்கியல் துறையிலும் பிரகாசித்தவர். வி. எம். பேரம்பலம் நிறுவனத்தில் மேலாளராகப் பணிபுரிந்ததோடு பல பொது நிறுவனங்களுக்கும் வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் வரவுசெலவுக் கணக்கறிக்கை தயாரித்தல், தணிக்கை செய்தல் முதலியவற்றில் ஈடுபட்டிருந்தார்.

இறுதிவரை பல மாணவர்களுக்கு இலவசமாகப் பல கருவிகளைக் கற்பித்ததோடு கணக்கியல் துறையிலும் கற்பித்திருக்கிறார்.

இவ்வாறு பல்துறை வேந்தராக விளங்கிய புல்லாங்குழல் மூர்த்தி ஐயர் அவர்கள் 1982 ஜுலை ஏழாம் நாள் இறைவன் திருவடி அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 84. கலாநிதி , சித்தாந்தபானு சோ. சுப்பிரமணியக் குருக்கள்

(06 .09. 1910 - 05. 07. 2006)

வளம்பல மிக்கதும் நல்லறிஞர்கள் பலரை இவ்வுல கிற்கு ஈன்றளித்ததுமான கோப்பாய்க் கிராமத்திலே பிரம்மஸ்ரீ சோமசுந்தர ஐயர் - மீனாக்ஷிஅம்மா தம்பதிகளின் மூத்தபுதல்வனாக 06 .09. 1910 இல் பிறந்தவர்தாம் சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள்.

கோப்பாய் நாவலர் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்ற அவர் சிறு பராயத்திலேயே கல்வி கேள்விகளில் வல்லவராக விளங்கினார். வேதசிவாகம இதிகாச புராணங்களைக் குருகுல முறைப்படி கற்றுணர்ந்தவர் இவர்.

நல்லூர் கமலாம்பிகா சமேத கைலாசநாதசுவாமி கோவில் ஸ்தாபகர் சிவஸ்ரீ ந. வே. கார்த்திகேயக் குருக்களிடம் இவரது குருகுலவாசம் நடைபெற்றது. இக்காலத்தில் தமது குருவுடன் பல ஆலயங்களில் மஹோற்சவம், கும்பாபிஷேகம் என்பவற்றுக்குச் சென்றும் திருமணம் முதலிய இல்லறக் கிரியைகள் நடைபெறும் போது உடனிருந்தும் நல்ல குருத்துவப் பயிற்சியைப் பெற்றார். சேர். பொன். இராமநாதனின் குருவான நல்லூர் கார்த்திகேயக்குருக்களிடம் ஆகமக்கல்வி பெற்ற சுப்பிரமணியக் குருக்களுக்கு சாக்த தந்திரங்கள், வைதிக நூல்கள் இவற்றிலும் நிரம்ப அறிவு இருந்திருக்கிறது.

தமிழகம் சென்று தமது கல்வியையும் குருத்துவப் பயிற்சியையும் விருத்தி செய்து திரும்பிய சுப்பிரமணியக் குருக்கள் 1933 இல் திருகோணமலையைச் சேர்ந்த இரத்தினசௌந்தரி அம்மாவைத் திருமணம் செய்து இல்லறத்தில் புகுந்தார்.

ஆண்குழந்தைகள் இருவரும், பெண்குழந்தைகள் நால்வரும் இவரது மக்கட் பேறுகள். அவர்களை அன்போடும் பண்போடும் வளர்த்து அறிவும் ஆற்றலும் மிக்கவர்களாக உயரச் செய்து அவரவர்க்குத் தகுதியான வாழ்க்கைகளையும் அமைத்துக் கொடுத்து அவர்கள் மூலம் பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள் பெற்று மகிழ்ந்தார்.

வடகோவைச் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் சுமார் 75 வருடங்கள் குருத்துவப் பணியாற்றிய சுப்பிரமணியக் குருக்களவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு ஆலயங்களில் மஹோற்சவங்கள், கும்பாபிஷேகங்கள் முதலியவற்றையும் நடத்தியவர்.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் தொடர்ந்து 17 ஆண்டுகள் மஹோற்சவத்தை நடத்தியதுடன் மஹாகும்பாபிஷேகத்தையும் நிறைவேற்றினார். சம்பாவெளிப் பிள்ளையார் கோயில், உசன் கந்தசாமி கோவில் ஆகியவற்றின் மஹோற்சவங்கள் குறிப்பிடத்தக்கன.

திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம், காரைநகர் சிவன் கோவில், கருங்காலி முருக மூர்த்தி கோவில், இணுவில் கந்தசுவாமி கோவில், இணுவில் விநாயகர் கோவில், புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் கோவில், காங்கேசன்துறை முருகமூர்த்தி கோவில், பருத்தித்துறை சிவன் கோவில், கந்தவனக்கடவை முருகன் கோவில், ஆவரங்கால் சிவன்கோவில், நீர்வேலி கந்தசுவாமி கோவில், நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில், புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவில், புங்குடுதீவு சிவன்கோவில் முதலிய ஆலயங்களில் நடைபெற்ற மஹா கும்பாபிஷேகங்களில் பிரதம குருவாகவும் உதவிக் குருவாகவும் இருந்து பணியாற்றியவர்

மிகவும் நிதானமாகவும் பக்தி பூர்வமாகவும் கிரியைகளைப் பொறுப்பேற்று நடத்தும் குருக்களவர்கள் வேறு ஆலயங்களிற்குச் செல்வதைவிடத் தமது ஆலயமான வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுதப் பெருமானின் கைங்கரியங்களைச் சிரமேற் கொள்வதையே பெரிதும் விரும்புபவர். இவரது காலத்தில்தான் இந்த ஆலயத்தில் கொடியேற்று விழா ஆரம்பமாகியது என்பதும் பல்வேறு புனருத்தாரணப் பணிகள் இவரது ஆலோசனையின்படியே மேற்கொள்ளப்பட்டுப் புதுமெருகுடன் ஆலயம் விளங்குகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

குருக்கள் அவர்கள் பிரம்மஸ்ரீ தி. ஐயாத்துரைக் குருக்களிடம் இலக்கண, இலக்கியங்களையும், புராணங்களையும் கற்றுத் தெளிந்தவர். தமிழ், சமஸ்கிருதத்திலும் மிகுந்த பாண்டித்தியமுடையவர். இவற்றைவிட மலையாளம், தெலுங்கு, கன்னடம், சிங்களம் ஆகிய மொழிகளை வாசிக்கும் ஆற்றலையும் பெற்றுள்ளார்.

சிறந்த பேச்சாற்றலுடையவர். தமது நுண்மாண் நுழை புலத்தால் தாம் செய்திருக்கும் பலவேறு ஆராய்ச்சிகளைத் தமது அடக்கம் காரணமாகத் தமக்குள்ளே வைத்திருந்தவர் இவர். விகடமும் சிலேடையும் மிக்க இவரது உரையாடல் இவரது சிறப்பம்சங்களில் ஒன்று.

பல்வேறு துறைசார்ந்த நூல்களைத் தேடிச் சேகரிப்பதும் ஆய்வுசெய்வதும் தம்மைநாடி வருவோர்க்கு அவற்றைப் படிக்கக் கொடுத்து விளக்கம் கூறுவதும் அவரது நற்பண்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சைவ சித்தாந்தம் பற்றிய ஞானமும் அநுபூதி நிலையும் உடைய குருக்களை இலங்கை வந்தபோது தொண்டைமண்டல ஆதீன மகாசந்நிதானம் கண்டு பேசியிருக்கிறார். வியந்துபோனார். தான் சிறிதும் எதிர்பாராத நிலையில், எதிர்பாராத சூழலில், ஒரு சித்தாந்த சூரியன் கோயில் குருக்களாக இருப்பதை கண்டு 'சித்தாந்த பானு' என விருது வழங்கி மகிழ்ந்தார். அப்போது (1971இல்) ஊரவர்கள் யாவருமாக இவரைப் பாராட்டி விழா ஒன்றை எடுத்து மலரும் வெளியிட்டனர்.*

*கோப்பாய் ஞானபண்டித சைவவிருத்திச் சங்கம் யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களைக் கொண்டு "சிவாகம விசாரதர்" என்ற பட்டத்தை வழங்கியது. பின்னர் 1998 இல் இந்துசமயப் பேரவை "வேதசிவாகம ஞானி" என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தது.*

*யாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல ஜப்பானிய தற்காப்புக்கலைக்கான உள்ளகப் பல்கலைக்கழகம் இவருக்குக் கலாநிதிப் பட்டத்தை வழங்கியிருக்கிறது.*

வியவ ஆண்டு ஆனிப் பூர்வபட்ச நவமியில் (05.07.2006) இறைபதம் எய்தினார்.

*கலாநிதி, வேதசிவாகம ஞானி, சிவாகம விசாரதர், சித்தாந்தபானு சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக்குருக்கள் அவர்களின் பாதங்களை வணங்கி நிற்கின்றோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 85. மட்டக்களப்பு, ஆனைப்பந்தி, வீ. வரதராஜக்குருக்கள் (சுழிபுரம்)

(11.12.1911 - 1992.11.14)

குரு பாரம்பரியத்தின் தாற்பரியத்தை கடைப்பிடித்தும் சிவாசாரியர்க்குரிய அனைத்து அம்சங்களையும் தன்னகத்தே கொண்டும் வாழ்ந்தவர், சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வாழிடமாகவும் கொண்ட அமரர் பிரம்மஸ்ரீ வி. வரதராஜக்குருக்கள் ஆவார். சைவமும் தமிழும் தழைத்தோங்கும் சுழிபுரத்தில் சப்தபுரிகளில் ஒன்றாகிய காஞ்சிபுரத்தை அடியாகக் கொண்டு வாழ்ந்து வந்த ஸ்ரீவத்ஸ கோத்ரம் ஆபஸ்தம்ப சூத்திரத்தின் வழி வந்த பிரம்மஸ்ரீ ஐ. விஸ்வநாதக் குருக்களுக்கும் ஸ்ரீமதி பொன்னம்மாவுக்கும் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் அருளால் அவரது பூசை முறைக் காலத்தில் கார்த்திகைச் சோமவாரமும் பூச நக்ஷத்திரமும் கூடிய 11.12.1911 அன்று இவர் பிறந்தார். இவருக்குத் தாய் தந்தையர் வரதராஜ சர்மா என்று பெயரிட்டனர். இவருக்கு வீணாகானவிதூஷணி, வள்ளியம்மை எனும் இரு சகோதரிகள். இவரே கடைசியும் ஆண்குழந்தையும் ஆவார்.

சிறுவயதிலேயே அறிவில் சிறந்து விளங்கினார். ஏழாவது வயதில் உபநயனம் செய்யப்பட்டார். பதினோராவது வயதில் தந்தையை இழந்தார். தாயின் அரவணைப்புடனும் சகோதரிகளன கணவர்களான பறாளாய் பிரம்மஸ்ரீ வேதாரண் யேஸ்வரக் குருக்கள், அல்வாய் பிரம்மஸ்ரீ செல்லத்துரைக் குருக்கள் ஆதரவாலும் பாடசாலைக் கல்வியினையும், கோவில் கிரியை நெறிகளையும் கற்றுத் தேறினார். அன்னையின் மனம் நோகாதபடி நடந்து பாடசாலைப் படிப்பை முடித்தபின் வடலியடைப்பு பிரம்மஸ்ரீ அண்ணாசாமிக் குருக்கள் அவர்களிடம் வேதம் ஆகமம் முதலியவற்றை ஐயம் திரிபறக் கற்றார். இவருடன் கற்றவர்கள் சுழிபுரம் பிரம்மஸ்ரீ நடராஜக் குருக்கள், பிரம்மஸ்ரீ சு. சுப்பிரமணியக் குருக்கள், பறாளாய் பிரம்மஸ்ரீ ஷண்முகரட்ண சர்மா ஆகியோராவர். கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம் இவற்றிற்கு பயன் சொல்லும் ஆற்றலையும் சிறந்த தமிழறிஞர்களிடம் கற்றுத்தேறினார்.

தமது குலதெய்வமான குடியிருப்பு வள்ளியம்மன் ஆலயத்திலும் மற்றும் பெரியதம்பிரான் ஆலயத்திலும் பூசை செய்வதோடு தமது புரோகிதங்களையும் செய்துவந்தார். ஊரிலுள்ள ஆலயங்களில் புராணம் பயன் சொல்லவும் படிக்கவும் சென்று வந்தார். உரிய பருவத்தில் சுழிபுரம் பிரம்மஸ்ரீ சபாரத்தினக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமதி காமாட்சிஅம்மாளது புதல்வி சௌபாக்கியவதி அன்னம்மாவைக் கரம்பற்றி இல்லறம் நடத்தி வருகையில் 1945 ஆம் ஆண்டளவில் மைத்துணர் பிரம்மஸ்ரீ வேதாரண்யேஸ்வரக் குருக்களவர்களால் மட்டக்களப்பு ஆனைப்பந்திப் பிள்ளையார் கோவிலில் அறிமுகம் செய்யப்பட்டார். அன்று முதல் 1990 ம் ஆண்டுவரை சுமார் 44 வருடங்கள் சேவையாற்றினார். அக்கால கட்டத்திலேயே அவரது வாழ்வு வசந்தம் பெற்றது.

ஆனைப்பந்தி ஆலயத்திலேயே பிரம்மஸ்ரீ வேதாரண் யேஸ்வரக் குருக்களால் ஆசாரியாபிஷேகம் செய்யப் பெற்று சிவாசார்யார் ஆனார். இவர் முதலில் செய்த மஹோற்சவம் தனது பெயர் வரக்காரணமாய் அமையப் பெற்ற பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்திலாகும். ஆனைப்பந்திப் பிள்ளையார் ஆலயத்தில் மகோற்சவங்களையும் நித்திய நைமித்தியங்களையும் பக்தியுடன் ஆற்றிவந்ததையும் முப்பது வருஷங்களாக ஒரே ஆலயத்தில் சிறந்த சேவை ஆற்றியதையும் பாராட்டி 1975 ஆம் ஆண்டு ஆலய பரிபாலன சபையார் "பூஜாகிரியாபூஷணம்" என்னும் பட்டத்தையும், காளிகாமடு கற்பகவிநாயகர் ஆலய பரிபாலன சபையார் "பிரதிஷ்டா பூஷணம்" என்னும் பட்டத்தையும் நல்லை ஆதீனம் "சிவாகம சிரோமணி" என்னும் பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தனர்.

இவரைக் கிழக்கு மாகாணத்தில் தெரியாதவர்களே கிடையாது. காரணம் இவர் கிழக்கு மாகாணத்தில் செல்லாத கோவில்களே கிடையாது. "ஆனைப்பந்தி வரதராஜக்குருக்கள்" என்றால் பிரசித்தம். ஆனைப்பந்திப் பிள்ளையார் ஆலய வளர்ச்சியில் தம்மை அர்ப்பணித்தவர். ஆனைப்பந்திப் பிள்ளையார் ஆலயத்தில் மூன்று கும்பாபிஷேகங்களை நடத்தி முடித்தவர். இவர் ஆதரிக்காத அந்தணோத்தமர்களை விரல் விட்டுத்தான் எண்ண வேண்டும். ஏனெனில் அனைவரும் நண்பர்கள். இவருக்கு எட்டுப்பிள்ளைகள்.

இவர் மட்டக்களப்பு மக்களின் கண்கண்ட தெய்வமாகவே வாழ்ந்து வந்தார். ஆனைப்பந்தியான் குடைக் கீழேயே வாழ்ந்து வந்த இவர் இரண்டொரு வருஷங்கள் நோய் வாய்ப்பட்டு 1992 ஐப்பசிமாத தேய்பிறை பஞ்சமித்திதி கூடிய திருவாதிரை நாளில் ஆனைப்பந்தியானடி சேர்ந்தார். அன்னார் வாழ்வில் தூய்மை, வாய்மை, புறங்கூறாமை, பொறுமை, அன்பு என்னும் சிறப்பியல்புகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தார். அவர் நாமம் என்றும் நிலைத்து நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 86. மட்டக்களப்பு இ. கு. கருணாகரேஸ்வரக்குருக்கள்

## (31.08.1911 - 16.05.1991)

பிரம்மஸ்ரீ இ. கருணாகரேஸ்வரக் குருக்கள் அவர்கள், யாழ்ப்பாணம் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இரத்தினசபாபதிக் குருக்களுக்கும் திருகோணமலையைப் பிறப்பிடமாகக்கொண்ட அவரது மனைவி கமலாம்பிகை அம்மாவுக்கும் விரோதிகிருது வருடம் ஆவணி மாதம் 14ம் திகதி (31.08.1911) திருமலையில் பிறந்தார். பெற்றோருக்கு ஏகபுத்திரரான இவருக்கு மூத்த சகோதரி இருவரும், இளைய சகோதரி ஒருவரும் இருந்தனர்.

காரைநகரில் வாழ்ந்துவந்த புகழ்மிக்க திருவுத்தரகோசமங்கைப் பரம்பரையில் வந்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமது ஆரம்பக்கல்வியைத் திருமலை இந்துக்கல்லூரியில் பெற்றார். பின் 1923ம் வருடம் தை மாதம் முதல் தந்தையார் கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயப்பொறுப்பு ஏற்றதனால் இ.கி.மி. விவேகானந்த வித்தியாலயத்தில் தமது உயர்கல்வியைப் பெற்றார். இக்காலத்தில் அப் பாடசாலையில் தலைமை ஆசிரியராக இருந்த திரு. த. வேலுப்பிள்ளை அவர்களிடம் கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம் போன்றவற்றையும் கற்று அதற்குப் பயன் சொல்லவும் பயிற்சி பெற்றார்.

பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்தபின் தகப்பனாருக்கு உதவியாகப் பூஜைப் பணியினைச் செய்து கொண்டிருந்தார். 1931ம் ஆண்டு கார்த்திகை மாதம் அவர் காலமானபின் தொடர்ந்தும் ஆலயப்பூஜைப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தார். 1932ம் ஆண்டு ஆவணி மாதம் தாயாரும் காலமாகவே ஆலய பூசையைத் தனியே தொடர்ந்தும் செய்யமுடியாத நிலையில் மைத்துனர் குமாரசாமி சர்மா அவர்களிடம் பூசைப்பொறுப்பைக் கொடுத்துவிட்டு காரைநகருக்கு சென்று அங்கு வாழ்ந்து வந்தார்.

நீர்வேலி தியாகராஜக் குருக்கள் இராஜலட்சுமி அம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியான காமாட்சி அம்மாவை 1937ம் ஆண்டு மாசி மாதம் 6ம் திகதி திருமணம் செய்தார். அவர்கள் தமது இல்லற வாழ்வின் பயனாக ஷடாட்சரசர்மா, கமலாம்பிகை, சுரேஸ்வரசர்மா, செந்திநாதசர்மா, மகேஸ்வரசர்மா, பத்மலோசனி என்ற ஆறு பிள்ளைச் செல்வங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இவ்வுலகிற்கு ஈந்தனர். மாமனார் தியாகராஜக் குருக்களுடன் சேர்ந்து சைவஆகமக்கிரியை முறைகளைக் கற்றுத் தேர்ந்து 1940ம் ஆண்டில் சுன்னாகம் சிவஸ்ரீ **சதாசிவக்குருக்கள்** அவர்களினால் ஆசார்யாபிஷேகம் செய்துவைக்கப்பெற்றார். பின்னர் தெல்லிப்பழை குருநாதசுவாமி கோவிலில் ஆசார்யராகக் கடமையாற்றினார். 1946ம் ஆண்டில் திருமலை குச்சவெளிப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேகத்தைத் திருமலை வில்லூன்றிக் கந்தசாமி கோவில் ஆதீனகர்த்தா சிவஸ்ரீ **பூரணானந்தேஸ்வரக் குருக்கள்** மேற்பார்வையில் நடத்தித் தொடர்ந்து சிலகாலம் அக்கோவிலிலே பூசகாராகவும் இருந்தார். இக்காலகட்டத்தில் பூரணானந்தேஸ்வரக் குருக்களிடம் சைவ ஆகமமக்கரியைகள் பற்றிய அறிவையும் அனுபவத்தினையும் ஐயந்திரிபறக் கற்றுத்தேர்ந்தார். பின்னர் வாகரைப்பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகத்தை நடத்தி அங்கு கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் திருவாளர்கள் க. உ. வே. நமசிவாயம், கா. கந்தசாமி ஆசிரியர் ஆகியோரின் அழைப்பின் பேரில் 1948ம் ஆண்டு ஆனிமாதமளவில் மீண்டும் கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதம குருவாகப் பொறுப்பை ஏற்றார். கல்லடி உப்போடையில் தனது ஆலயக் கடமைகளைச் செய்துவரும் வேளையில் தமது இல்லற தர்மத்தின் கடமைகளையும் மறவாது பிள்ளைகளுக்குத் திருமணம் முதலியவற்றனைச் செய்துவைத்துப் பேரக் குழந்தைகளையும் கண்டு மகிழ்ந்தார்.

கணீரென்ற குரலை உடைய இவர் சங்கதஞானம் மிகுந்தவர். தமது குரல்வளத்தாலும் சங்கீத ஞானத்தினாலும் மந்திரங்கள், ஸ்தோத்திரங்களை அழகாக வெளிப்படுத்தி அடியார்களை ஈர்த்த பெருமை இவருக்குரியது. வேட்டைத்திருவிழாவில் பாண்டிவேட்டை ஆடுதல் என்ற கலையில் கைவந்தவர். அக்காலத்திலே அதுபற்றிப் பலரும் சிலாகித்துப் பேசுவர். பழகுவதற்கு மிகவும் இனியவரான இவர் நாட்டின் பல பாகங்களிலும் பல கும்பாபிஷேகங்கள், திருவிழாக்கள் செய்து மதிப்புப் பெற்றவர்.

கல்லடி உப்போடை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டுப் பல காலங்கள் சென்றதால் தனது காலத்திலேயே ஆலய பாலஸ்தாபனத்தையும் செய்து தனது இயலாத நிலையிலும் 1988ம் ஆண்டு கும்பாபிஷேகத்தை நடத்திவைத்தார். இச்சந்தர்ப்பத்தில் தமது கடமையாகவும் இறுதி ஆசையாகவும் ஆண்மக்கள் நால்வருக்கும் ஆசார்யாபிஷேகத்தைச் செய்துவைத்துத் தன் வழியிலேயே தொடர்ந்து செல்ல வழிவகுத்துத் தந்தார். நோய்வாய்ப்பட்டதன் காரணமாக ஆலயப் பொறுப்பினைத் தொடர்ந்து செய்யமுடியாத நிலையில் 15.03.1989 இல் கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயப்பொறுப்பிலிருந்து நீங்கினார். வயோதிபத்துடன் நோயும் சேர்ந்த காரணத்தினால் தனது 80வது வயதில் பிரசோற்பத்தி வருடம் வைகாசி மாதம் இரண்டாம் திகதி 16.05.1991 அன்று சிவபதமடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 87. கிரியாகலாப முக்தாமணி சோ. நடராஜக்குருக்கள்
## (1911 - 26. 11. 1994)

குடும்ப பின்னணியும் இளமைக்காலமும்

கல்வி கேள்விகளாலும் ஆசார ஒழுக்கங்களாலும் சிறந்த அந்தணர் கூடி வாழ்ந்துவரும் இடம் குடியிருப்பு சுழிபுரம் ஆகும். அப்பதியிலே சின்னையா குருக்கள் தெய்வநாயகி அம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரான சோமாஸ்கந்தக் குருக்களுக்கும் அமிர்தவல்லி அம்மையாருக்கும் சீமந்த புத்திரனாக அவதரித்தவரே நடராஜக் குருக்கள் ஆவார். 1911ம் ஆண்டு ஆடி மாதம் அனுஷ நட்சத்திரத்தில் ஸ்ரீவத்ஸ கோத்திரத்தில் இவர் பிறந்தார்.

உரிய வயதில் உபநயனம் செய்யபெற்று வடமொழியை வடலியடைப்பு ஸ்ரீ சோமசுந்தரக் குருக்களிடம் கற்று வந்தார். 1919ம் ஆண்டளவில் அவரது தந்தையார் மறைந்ததைத் தொடர்ந்து தந்தையாரின் தம்பியாரான முத்துச்சாமி குருக்களுக்கு உதவியாக இருந்து தந்தையாரின் புரோகிதங்களை மேற்கொள்ள வேண்டி இருந்தது. இதனால் உயர்கல்வி கற்கமுடியாவிடினும் வடமொழி, கோயில் கிரியைகள் என்பவற்றில் சிறிய தந்தையார் மூலம் பயிற்சிகள் பெற்றார். சில ஆண்டுகளில் சிறிய தந்தையார் மறைந்தபோது கோயில்பூசைகள் புரோகிதங்கள் யாவும் இவரது பொறுப்பாகின.

இல்லற வாழ்க்கை

புகழ் பெற்ற இருபாலை சபாபதிக் குருக்களினதும் காமாட்சி அம்மாவினதும் இரண்டாவது மகளான யோகாம்பாள் என்பாரை 1930 ஆண்டளவில் இவருக்கு திருமணம் செய்து வைத்தார்கள். அதன் பயனாக நிறைந்த நன்மக்கட் பேற்றினைப் பெற்றார். அவர்கள் பெருவிருட்சமாக உலகின் பல பாகங்களிலும் வம்சக்கிளை பரப்பி பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என வியாபித்துள்ளனர்.

தொழில் வாழ்க்கை

திருமணம் முடித்தவுடன் ஆசார்ய அபிஷேகம் செய்யப்பெற்றார். பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் பரம்பரைக் குருக்களான இவர் முதன் முதலாக மஹோற்சவ ஆச்சார்யராக அங்கேயே கொடியேற்றி சிறப்புற நடத்தி பெரும் புகழ் பெற்றார். இவருடைய பொருத்தமான தோற்றப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிவையும் திறமை, கிரியாபாவத்தையும் கண்ட முன்னேச்சர ஆதீன கர்த்தா ஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் இவரை முன்னேச்சரம் தேவஸ்தானத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே புதுக்குருக்கள் எனப் பெருமையுடன் அழைக்கப்பட்டார். அங்கே சில காலம் குருத்துவப் பணியாற்றிய பின் திரும்பி வரும்போது பலவேறு அனுபவங்கள் பெற்று கிரியாநிபுணத்துவத்தில் வல்லவரானார்.

பறாளாய் சிவசுப்பிரமணிய கோவிலில் முதன் முதலாக இலட்சார்ச்சனையும் இலட்சதீபமும் தொடங்கி நடத்தப்பட்ட போது சண்முகப்பெருமானின் மஹாயந்திர பூசை செய்த சிறப்பையும் விஸ்தாரத்தையம் கண்டு வியக்காதவர் இல்லை எனலாம். இவருடைய தகப்பனாராலே குலதெய்வ வழிபாட்டிற்காக தாபிக்கப்பெற்ற குடியிருப்பு ஓடையம்பதி வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானின் நித்திய பூசைகளைச் சிறப்புறச் செய்துவந்தார். தனது இறுதிக்காலத்தில் குலதெய்வத்தின் நித்திய பூசை ஒழுங்குமுறையினை கை எழுத்துப் பிரதியாக எழுதிக் கொடுத்தார். தமது தெளிவான அழகிய கையெழுத்தினால் அவர் எழுதிய பத்ததிகளும் பூஜா விதிமுறைகளும் எவருக்கும் எக்காலத்திற்கும் உபயோகமானவையாகும். இவர் சுமார் 40 வருட காலம் சுருவில் ஐயனார் கோயில் பிரதம குருவாக இருந்து ஊதியத்தை எதிர்பாராது தெய்வ சேவையாக ஆத்மீக சேவையாக இப்பணியை சிறப்பாக செய்தார்கள். அவ்வூர் மக்கள் இவரை ஓர் தேவாம்ச குருவாக ஏற்றுப் போற்றி நடந்தார்கள்.

பல சிவாச்சாரியார்களுடன் தலைமைத்துவம் பூண்டு பல ஆலயங்களிலும் நூற்றிற்கு மேற்பட்ட கும்பாபிஷேக வைபவங்களும் மகோற்சவங்களும் நிகழ்த்தியதாக அறியமுடிகிறது. தான் செய்யும் கிரியைகள் பற்றி விளக்கமுடையவராய் இருந்தது மட்டுமன்றி அவற்றை பிழையாகச் செய்வதால் கேடு உண்டாகும் என்பதையும் அனுபவபூர்வமாக ஏனையவர்களிற்கு உணர்த்தி இருந்தார்.

இவரிடம் விசேடமாகக் குறிப்பிடக்கூடிய சிறப்புக்கள் பலவற்றைக் கூறலாம். உணர்வு நிறைந்த பூஜை. அழகிய புஷ்பாஞ்சலி, ஆசீர்வாதம், மந்திரங்களின் உச்சரிப்பு, இசைஞானம் முத்திராலட்சணம் என்பன அவரது கிரியைகளை உன்னதமடையச் செய்தன.

**அவர் பெற்ற பட்டங்கள்**

12.01.1974 வேத சிவாகம விழாவில் சமஸ்கிருத, தமிழ், ஆங்கில பாஷா விற்பன்னர் முகாந்திரம் ஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்களின் ஞாபகார்த்த விருதாக "கிரியா கலாப முக்தாமணி" எனும் பட்டம் வியாகரண சிரோமணி ஸ்ரீ சீதாராம சாஸ்திரிகளால் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை ஞாளசம்பந்தர் ஆதீன 29வது பீடாரோகண வீழாவில் "நல்லைக்குருமணி" விருது வழங்கப்பட்டது.

இந்தியாவில் இருந்து வருகை புரிந்த சைவ சித்தாந்த சரபம் பழனி ஈசான சிவாச்சாரியார் மற்றும் பல அறிஞர் பெருமக்களாலும் சிறப்பு கௌரவங்களைப் பெற்றவராவார்.

1991ம் ஆண்டு சித்திரை மாதம் அவரது மனைவி ஸ்ரீமதி யோகாம்பாள் சுமங்கலியாக மறைந்ததைத் தொடர்ந்து அவரது பிரிவாற்றாத நடராஜக் குருக்களும் மங்காப் புகழ் பெற்ற தன் பொன் உடலை இங்கு விட்டு கார்த்திகை 10ம் நாள் (26.11.1994) சனிக்கிழமை அதிகாலை நடராஜப் பெருமானின் திருப்பொன் மலர் அடிகளில் கலந்து கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 88. வியாகரண சிரோமணி தி. கி. சீதாராம சாஸ்திரிகள்

(30.01.1912 - 13 -11 - 1988)

ஈழத்தில் சமஸ்கிருதம் வளர்த்த சான்றோர்கள் வரிசையில் வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள் அவர்களுக்கு மிகமுக்கியமான ஓரிடம் உண்டு. தமிழ்நாட்டிலிருந்து ஈழத்துக்கு வந்து இந்நாட்டையே தமது சொந்த நாடுபோல் கருதி ஆன்மீக அறப்பணிகளும் ஆசிரியப் பணியும் ஆற்றி அமைதியாக வாழ்ந்தவர் சாஸ்திரிகள்.

தமிழ்நாட்டில் திருப்புடை மருதூர் கிராமத்திலே ஸ்ரீ கிருஷ்ண உபாத்யாயர் லக்ஷ்மி அம்பாள் தம்பதிகளின் சீமந்த புத்திரராகத் தோன்றியவர் சீதாராமசாஸ்திரிகள். சாங்கிருதி கோத்திரத்தைச் சேர்ந்தவர். விரோதிகிருது வருடம் தை மாதம் 17 ம் திகதி (30.01. 1912) செவ்வாய் மிருகசீரிட நட்சத்திரத்தில் இவர் பிறந்தார். கோமதீவல்லப சீதாராமன் என அன்பாகப் பெயரிட்டனர் பெற்றோர். இவருக்கு கோமதீகாந்த இராமகிருஷ்ணன் என்ற சகோதரரும் உளர்.

பதினொரு வயதுவரை தந்தையாரிடமே வைதிகக் கல்வியைக் கற்றுவந்ததுடன் அதே ஊரிலிருந்த காசி சாஸ்திரிகளிடமும் வேத அத்யயனம் செய்தார். அதன்பின் ஐந்தாண்டுகள் உயர்பாடசாலையொன்றில் மரபுரீதியான காவியபாடம் கற்று இலக்கண இலக்கியங்களிலும் ஆற்றல் பெற்றார். பின்னர் சிதம்பரம் ஆர். எம். எஸ் பாடசாலையில் எம். என். ராகவசாஸ்திரிகளிடம் முறையாக வியாகரணம் கற்றார். அதன்பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கற்று வியாகரண சிரோமணி என்னும் பட்டத்தையும் பெற்றார்.

அம்பாசமுத்திரம் பெண்கள் பாடசாலையில் சிலகாலம் சமஸ்கிருதம் கற்பித்தார். பின்னர் தமது மாமனாரின் இருப்பிடம் சென்று வைதிக வாத்தியாராகவும் தொழில் புரிந்தார். இதற்கிடையில் ஹரிஹர தீக்ஷிதர் மகள் சீதாலக்ஷ்மி அம்பாளை 1925 ஆம் ஆண்டில் திருமணம் செய்து இல்லறத்திலும் நுழைந்தார்.

சாஸ்திரிகளுக்கு ஏழு பெண் குழந்தைகளும் ஒரு ஆண்மகவும் உள்ளனர். இக்காலகட்டத்தில் சுழிபுரம் பறாளாய் சிவசுப்ரமணிய சுவாமி கோவில் பிரம்மஸ்ரீ ஷண்முகரத்தின சர்மா அவர்களின் முயற்சியில் 1935



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் மாதம் தலை மன்னார் வழியாக யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார். பறாளாயில் கோவிலுக்கருகிலுள்ள மடம் அவரது வீடாகியது. அங்கு வேதபாராயணமும் சமஸ்கிருத வகுப்பும் நடைபெறலாயின. பின்னர் படிப்படியாக ஜாதகம் பார்த்தல், வைதிகக் கிரியைகளை அந்தணர் இல்லங்களில் நடத்திவைத்தல், உபந்நியாசம் செய்தல், ஆலயங்களில் கும்பாபிஷேகம் முதலிய வைபவங்களில் கலந்துகொள்ளுதல் ஆகிய பல்வேறு துறைகளில் ஈடுபட்டும் பல்வேறிடங்களில் சமஸ்கிருத வகுப்புகள் நடத்தியும் தமது பெரிய குடும்பத்தை நடத்தினார்.

திருநெல்வேலி காவிய பாடசாலையிலும் பின்னர் நாவலர் தர்மகர்த்தாசபையின் பிரவேச, பாலபண்டித, பண்டித வகுப்புகளிலும் பரமேஸ்வராக்கல்லூரி, சுன்னாகம் பிராசீன பாடசாலை, பிராம்மண சமாஜம் ஆகிய நிறுவனங்களிலும் சாஸ்திரிகள் கற்பித்தார். சமயப் பெரியார்கள். ஆலய பரிபாலகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் போன்ற பல்வேறுபட்ட மக்களின் ஐயங்களைப் போக்கியும். ஆலோசனை நல்கியும், வழிகாட்டியும் வேதாத்யயனம் செய்வித்தும் கிரியைகளைச் செய்வித்தும் வந்ததோடு சமஸ்கிருதச் செய்யுள்கள் வாழ்த்துப் பத்திரங்கள் எழுதுதல் பாடநூல்கள் மற்றும் சமயநூல்களை வெளியிடல் என்று இவ்வாறு பல்வேறுபட்ட பணிகள் சாஸ்திரிகளை அந்தண சமூகம் மட்டுமன்றி ஈழத்தின் இந்து சமூகத்தினர் அத்தனை பேருக்கும் வேண்டியவராக ஆக்கிவைத்தன.

1973இல் சாஸ்திரிகளின் மணிவிழாவைப் பல்வேறு அமைப்புக்களும் கொண்டாடின. அவரை இங்கு அழைத்து வந்தவரான பிரம்மஸ்ரீ சு. ஷண்முகரத்தின சர்மா அவரோடு என்றும் உழுவலன்பு பூண்டிருந்த பிரம்மஸ்ரீ சு. இராஜேந்திரக் குருக்கள் சாஸ்திரிகளது சிறந்த மாணவர்களுள் முதன்மை யானவர்களான பண்டிதர் பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சர சர்மா. கலாநிதி பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் ஆகியோர் இவ்விழாக்களில் முன்னின்றுழைத்தனர். மணிவிழா மலர்களும் வெளியாகின. 1979 முதல் ஓரளவு ஓய்வுபெறத் தொடங்கிக் கொழும்பில் சிறிதுகாலமும் பின்னர் 1984 முதல் மீண்டும் யாழ்ப்பாணத்தில் மகள் பார்வதி குமாரசாமி சர்மாவுடனும் வாழ்ந்திருந்தார். 13 -11 - 1988 இல் ஸ்கந்தஷஷ்டி விரதநாளில் (தமது இஷ்டதெய்வத்தின் விரத நாளில்) இறையடி சேர்ந்தார்.

சாஸ்திரிகள் ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே பரிசுத்திட்டம் ஒன்றும் உருவாக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் சம்ஸ்கிருதத்துறையில் சிறப்புக் கலையில் திறமைச்சித்தி பெறுபவர்களுக்குப் பரிசு வழங்கப்படுகிறது. சாஸ்திரிகள் சம்ஸ்கிருதத்திலேயே உரையாட வல்லவர் என்பதும் பலருக்கு அவர் சம்ஸ்கிருதத்திலேயே கடிதங்கள் எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 89. பிரதிஷ்டா பூஷணம் , நயினாதீவு.
## ஐ. கைலாசநாதக் குருக்கள்
## (04.08.1912 - 02.02.1979)



*நிறமோ கறுப்பு. பருத்த சரீரம். கட்டையான உடல்வாகு. நடந்தால் சிறு யானையின் தோற்றம். நாவிலோ வாணியின் வாசம். மடைதிறந்தாற்போல வடமொழியின் பிரவாகம். தெளிந்த சுத்தமான சொற்கள். இவர்தான் அமரர் ஐ. கைலாசநாதக் குருக்கள். யாழ் நகரிலே இவர் திருக்கரங்களால் கும்பாபிஷேகம் செய்யப்படாத ஆலயங்களில்லை. கோவில் சபையினரிடம் பழகும் பண்பு, தன்னுடன் வரும் சிவாச்சாரியர்களிடம் தோழமை,, சிற்றூழியர்களிடம் காட்டும் பரிவு இவை மேலும் சிறப்பான அம்சங்கள்.*

64 சக்தி பீடங்களில் ஒன்றாகிய நயினையம்பதியில் கேட்ட வரத்தை அள்ளிவழங்கும் அம்பாளை முப்பொழுதும் தொழும் அந்தண சிவாச்சாரியாரான ஐயாத்துரைக் குருக்களுக்கும், காமாட்சி அம்மாவுக்கும் புதல்வராக 1912 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 04ம் திகதி புனர்பூச நட்சத்திரத்தில் கைலாசநாதக் குருக்கள் பிறந்தார். சிறுவயதில் ஊர்ப் பாடசாலையில் கல்வி கற்றார். அதன் பின்னர் தனது சிறிய தந்தையாரான நா. சுவாமிநாதக் குருக்களிடம் வேதம், ஆகமம் கற்று தனது பத்தாவது வயதில் மைத்துனர் இராமநாதக் குருக்களுடன் இந்தியா சென்று சமஸ்கிருதம், வேதம், ஆகமம் கற்று இலங்கை வந்து பண்டித பரீட்சையில் சித்தியடைந்தார். புங்குடுதீவு பஞ்சாட்சரக் குருக்கள் பராசக்தியம்மாவின் ஏக புதல்வியான விசாலாட்சியம்மாவைத் திருமணம் செய்தார்.

1933ம் ஆண்டு சிறிய தந்தையாரினால் ஆச்சார்ய அபிஷேகம் செய்யப்பட்டு குருக்கள் ஆகினார். நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில், புங்குடுதீவிலுள்ள பல கோவில்கள் மற்றும் நம் நாட்டு கோவில்கள் பலவற்றிலும் கும்பாபிஷேகம், சங்காபிஷேகம், திருமணம் போன்ற கிரியைகள் செய்தார். முதன் முதலில் புங்குடுதீவு மடத்துவெளிப் பிள்ளையார் கோவிலில் கும்பாபிஷேகத்தை நடாத்தினார். 1943ம் ஆண்டு நல்லூர் கந்தசாமி கோவில் பூசகராக இரகுநாத மாப்பாண முதலியாருடனும், அவரது மகன் சண்முகநாத மாப்பாண முதலியாருடனும், குமாரதாச மாப்பாண முதலியாருடனும் 1978ம் ஆண்டு வரை கடமையாற்றினார். நல்லூர் கந்தசாமி கோவிலின் தற்போதைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரின் வெள்ளோட்டத்தை நடத்தினார். பலமுறை கொடியேற்றினார். தற்போதைய எசமான் குமாரதாச மாப்பாண முதலியாருக்கு திருமண குருவாக இருந்து நடத்தினார்.

1952ம் ஆண்டு நீர்கொழும்பில் மாரியம்மன் கோவில் பூசை ஏற்றார். 1953ம் ஆண்டு இந்தியாவில் இருந்து ஈசான சிவாச்சாரியாரை, ஐயாமணி சிவாச்சாரியார், ராஜாமணி சிவாச்சாரியார் போன்றோரை அழைத்து கும்பாபிஷேகம் செய்தார். ஈசான சிவாச்சாரியாரால் “மகனே'' என்று பெருமையோடு அழைக்கப்பட்டார்.

1953ம் ஆண்டில் இந்தியாவில் இருந்து கி. நாராயண சாஸ்திரிகளை (கோண்டாவில் வாத்தியார்) அழைத்தார். அந்தண சிறார்கள் வேதாகமங்கள் பயிலவேண்டும் என்று புங்குடுதீவு சிவன் கோவில் மார்க்கண்டேய குருகுலத்திற்கு ஆசிரியராக கடமையாற்ற ஏற்பாடு செய்தார். அமரர்கள் இ. கெங்காதரக்குருக்கள், சதாசிவ சுப்பிரமணியக் குருக்கள், ச. சிவகடாட்சக்குருக்கள், ப. கணேசராஜக் குருக்கள், சதா. பாலகிருஷ்ணக் குருக்கள். செ. பரமானந்தக் குருக்கள், சந்திரசேகரசர்மா இவர்கள் போன்ற குருமார்களுக்கு கல்வி போதித்தார்.

1961ம் ஆண்டு நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம் செய்தார். இக் கோவிலில் பல முறை கொடியேற்றினார். 1961ம் ஆண்டு புங்குடுதீவில் நடைபெற்ற சிலப்பதிகார விழாவில் குன்றக்குடி அடிகளாரின் வேண்டுகோளுக்கமைய புங்குடுதீவு கலட்டிப் பிள்ளையார் கோவிலில் தமிழில் அர்ச்சனை செய்தார்.

1961ம் ஆண்டு திருக்கேதீஸ்வரத்தில் கந்தையா வைத்தியநாதன் குழுவில் இணைந்து குருகுலம அமைத்தார். 1965ம் ஆண்டு யாழ்ப்பாணம் கணபதீஸ்வரர் குருகுலத்தை அமைத்து நியாய சிரோமணி கி. சுப்பரமணிய சாஸ்திரிகளை அதிபராகக்கொண்டு வேதம், ஆகமம் கற்பிக்க ஏற்பாடு செய்தார்.

1962ம் ஆண்டு கொழும்பு கப்பித்தாவத்தை சிவன் கோவிலில் பிரதான குருக்களாக இருந்து மகா கும்பாபிஷேகம் செய்தார். 1964ம் ஆண்டு நயினை நாகபூசணி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேகம் செய்தார்.

1968ம் ஆண்டு திருகோணமலை கோணேஸ்வரர் கோவில் கும்பாபிஷேகம் செய்தார். 08.02.1971இல் காலி சிவன் கோவில் கும்பாபிஷேகம் செய்தார். 1971ம் ஆண்டு தருமபுரம் 25ஆவது குருமகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய பரமாச்சாரிய சுவாமிகளால் அழைக்கப்பட்டு பன்னிரு திருமுறை ஏனைய சமய நூல்களும் ஆவணி மூல நாளில் அவரின் முத்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறிக்கப்பட்டு இவரிடம் கையளிக்கப்பட்டன.

1974ம் ஆண்டு தருமபுரம் வேதசிவாகம பாடசாலை அதிபர் சுவாமிநாத சிவாச்சாரியாரையும் ஏனைய வேதவிற்பனர்களையும் அழைத்து திருக்கேதீஸ்வரம் மகாகும்பாபிஷேகம் செய்தார்.

1972ம் ஆண்டு டில்லி உதிரமலை கும்பாபி ஷேகத்திற்கு, மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் அழைப்பில் சென்று கும்பாபிஷேகத்தில் பங்குபற்றினார். ராமேஸ்வரம் ராமநாதசுவாமி திருக்கோவில், பழனி தண்டாயுதபாணி திருக்கோவில் கும்பாபிஷேகத்தில் பங்குபற்றினார். மலேசியா ஸ்கொட்றோட் கந்தசுவாமி கோவிலிலும் கும்பாபிஷேகம் செய்தார்.

இலங்கையில் முதன்முதலில் சித்தன்கேணி மகாகணபதிப் பிள்ளையார் கோவிலிலே சிவஸ்ரீ வை. மு. குமாரசாமிக் குருக்களுடன் 33 குண்டம் அமைத்து கும்பாபிஷேகம் செய்தார். வை. மு. குமாரசுவாமிக் குருக்களினால் "பிரதிஷ்டா பூஷணம்" என்ற பட்டத்தையும் பெற்றார். புங்குடுதீவு சிவன் கோவிலிலேயும் 33 குண்டம் அமைத்து கும்பாபிஷேகம் செய்தார். திருவாடுதுறை ஆதீனத்தால் "சிவாகமஞானபானு" என்ற பட்டமும். தொண்டைமண்டல ஆதீனத்தால் "சிவாகமஞானபூபதி" என்ற பட்டமும், காஞ்சி காமகோடி சங்கராச்சாரியாரால் "சிவாகம ஞானபாஸ்கரன்" என்ற பட்டமும் வழங்கப்பட்டன.

நயினாதீவில் கோவிலின் உள்ளே எல்லா மக்களும் சென்று வழிபட வழிவகுத்தவர். அந்தண சிவாச்சாரியார்களால் பீஷ்மர் என்று அழைக்கப்படும் தர்மசாஸ்தா குருகுல அதிபர் தாணு. மகாதேவ வாத்தியார், துர்க்கா குருகுல அதிபர் விஸ்வ. நாராயண வாத்தியார் முதலியோரை சாதக ஆசிரியராக உருவாக்கியவர். இன்றும் அவர்கள் தமது பத்ததிகளில் இவரின் பாதகமலங்களுக்கு அஞ்சலி செய்கிறார்கள்.

இவரால் ஆச்சார்ய அபிஷேகம் செய்யப்பட்டவர்கள் அனேகர். உபநயனம். திருமணம் செய்யப்பட்டவர்கள் அனேகர். அதில் நாயன்மார்கட்டு சாம்பசிவக்குருக்கள், சுவாமிநாத பரமஸ்வேரக்குருக்கள். அகில இலங்கை இந்துமத குருபீடாதிபதி ஜம்புகேஸ்வரக் குருக்கள், அமரர்கள் முத்துக்குமாரசாமி குருக்கள், நாகேந்திரக்குருக்கள், கெங்காதரக்குருக்கள் இன்னும் பலர் அடங்குவர்.

பல ஆகமங்களை ஆராய்ந்து யாக இலட்சணம், குண்ட விபரம் அதன் திரவிய விபரம். இவற்றை எளிதில் புரிந்து செயற்பட இலகுவாக்கி புத்தக வடிவில் ஆகமாமிர்த வர்ஷிணீ எனும் நூலை தனது 60 ஆவது வயது பூர்த்தி விழாவிலே வெளியிட்டார். மேலும் சிவலிங்கப் பிரதிஷ்டாவிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் இரண்டில் குண்ட பூஜையில் கும்பாபிஷேகத்திலே நடுக்குண்டம், பஞ்சகுண்ட பூஜைகளில் தனித்தனி நாடி சந்தானம் போடும்படி இருந்தும், அது தேவையில்லை பிரதான நாடியே போதும் ஏனைய குண்டங்களில் உள்ள சங்கிதைகள். சங்கதிகள் அனைத்தும் பிரதானத்தில் ஒடுங்கவேண்டும். பிரதானத்தில் இருந்து கும்பத்தில் சேர்க்கவேண்டும் என்பதை நடைமுறைக்கு கொண்டுவந்தவர். இன்றைய குருமார் இதனை கடைப்பிடிப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

மேலும் நல்லை ஆதீன முதலாவது குருமகா சன்னிதானம் சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகளுக்கு குருப் பட்டாபிஷேகம் செய்தவர். ஊரெழுவில் மகாமேருயந்திர வேதிகையிட்டு கண்ணகி அம்மன் கோவிலில் கும்பாபிஷேகமும் நிறைவு செய்து, அளவெட்டி கும்பிளாவளையில் கர்மாரம்பம் செய்து கோண்டாவில் நாகபூசணி அம்மன் திருவிழாவில் ஆசியுரை வழங்கி அன்று மாலை 02.02.1979 தை மாதம் ஷஷ்டித்திதியில் தமது 67 ஆவது வயதில் நயினாதீவு நாகபூசணி அம்மன் பாதகமலங்களைப் பற்றிக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 90. வைதிக நிபுணர்

## மயிலணி மு. சிவகடாட்சக்குருக்கள்

### (02.08.1913 - 20.07.2002)



யாழ்ப்பாணத்தின் வடபால் சுன்னாகம் நகரில் மயிலணிப் பதியில் ஸ்ரீவத்ஸ கோத்ரம் - ஆஸ்வலாயன சூத்திர மரபில் 1913ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 02ஆந் திகதி பூர நட்திரத்தில் முத்துச்சாமி ஐயர் - கௌரியம்மா தம்பதிகளுக்கு ஏகபுதல்வராக வந்துதித்தார் சிவஸ்ரீ சிவகடாட்சக்குருக்கள்.

குருக்கள் தமது பள்ளிக்கல்வியை மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையில் பெற்றுக் கொண்டதுடன் மயிலணியைச் சேர்ந்த உறவினர்களான மூத்த சிவாசார்யார்களிடமிருந்து சமஸ்கிருதக் கல்வியையும் பெற்றுக் கொண்டார். தனது 16வது வயதில் சிறு குடிலாக இருந்த சுன்னாகம் ஊரிசாட்டி சிவபூதராஜர் கோவில் பூஜைப்பணியைப் பொறுப்பேற்று, 1992இல் மஹோற்சவம் நிகழும் ஆலயமாக வளர மூலகாரணமாக இருந்தார். தனது அனைத்து வருமானங்களையும் இந்த ஆலயத் திருப்பணிக்கே அர்ப்பணித்தார்.

மயிலணி கந்தசாமி கோவில், காரைநகர் மணற்காட்டு முத்துமாரி அம்மன் கோவில், மாசியப்பிட்டி மீனாட்சியம்மன் கோவில், ஆனைக்கோட்டை வரத விக்ன விநாயகர் கோவில் முதலியவற்றில் பிரதமகுருவாகவும் பிரதிஷ்டா குருவாகவும் பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாணம், வன்னி, வவுனியா, மலையகம், கொழும்பு, மட்டக்களப்பு முதலிய பல பிரதேசங்களிலும் பல கும்பாபிஷேகங்களில் பிரதம குருவாகவும் மூர்த்திபராகவும் பணியாற்றியதுடன் மஹோத்சவ பிரதம குருவாகவும் அலங்கார உத்சவ குருவாகவும் ஆன்மீகப் பணியாற்றியுள்ளார்.

மயிலணி சிவன் கோவில் ஆதீனகர்த்தராக இருந்த சோமசுந்தரஐயர் - பர்வதவர்த்தனி அம்மா தம்பதிகளின் மகளான சிவகாமசௌந்தரி அம்மாவை வதுவைசெய்து, ஐந்து பெண் பிள்ளைகளையும் ஒரு மகனையும் பெற்றுக் கொண்டார்.

நிறைந்த வைதீகக்கிரியா ஞானத்தைக் கொண்டிருந்த குருக்களை பல இடங்களையும் சேர்ந்த அந்தணர்கள், சிவாசார்யார்கள் வைதீகக்கிரியைகளை நிகழ்த்துவிப் பதற்காகவும் சந்தேக நிவர்த்திக்காகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடிவந்தனர். இலங்கையின் பல பாகங்களிலும் பூர்வக்கிரியைகளையும் அபரக்கிரியைகளையும் செவ்வனே நிகழ்த்துவித்துள்ளார்.

குருக்கள் அவர்கள் தமது ஆத்மார்த்த சிவபூஜையை மிகுந்த ஈடுபாட்டுடன் பக்குவமாகச் செய்வார். தினமும் பொங்கல் நிவேதனம் வைத்து தனது ஆத்மார்த்த லிங்கத்துக்கு பாலபிஷேகம் செய்து, மிக விஸ்தாரமான முறையில் சுமார் 02 மணித்தியாலயத்திற்கு கூடிய நேரத்திற்கு சிவபூஜையில் ஈடுபடுவார். மிகவும் நைஷ்டிகம் மிக்க குருக்கள் அவர்கள் தான் பல நாட்கள் வேறிடத்தில் தங்கியிருந்து பணியாற்ற வேண்டிய காலத்தில் தனது ஆத்மார்த்த லிங்கத்தையும் கூடவே கொண்டு செல்வார். தான் பணியாற்றச் செல்லும் ஆலயங்களில் கிரியை ஆரம்பிக்குமுன் த்வார பூஜை, சகளீகரணம் முதலியவற்றை நிகழ்த்தி, மூலமூர்த்தியிடம் சென்று பஞ்சாசன பூஜை, த்யானம் முதலியவற்றைச் செய்து வழிபட்டபின்னரே ஏனைய கிரியைகளை ஆரம்பிப்பதை இறுக்கமாகப் பின்பற்றியவர்.


சிவபூஜாதுரந்தரர், வேதசிவாகம கிரியா சிரோமணி முதலிய சிறப்புவிருதுகளைப் பெற்ற குருக்கள் 1992ஆம் ஆண்டு ஊரிசாட்டி சிவபூதராஜர் ஆலய முதலாவது மஹோத்சவ கொடியிறக்க வைபவத்தின்போது, "முதுபெருங்குரவர்" என அப்பிரதேச மக்களால் விருது வழங்கி பொன்னாடை போர்த்தி, பொற்கிழி வழங்கி கௌரவிக்கப் பட்டார். பல ஆலயங்களில் விருதுகள், கௌரவிப்புக்கள் பெற்றுக்கொண்டபோதிலும் தனது ஆலயத்தில் மக்களால் கௌரவிக்கப்பட்டதையே குருக்கள் அவர்கள் பெருமையாகக் கருதி விருப்புடன் ஏற்று மகிழ்ந்தார்.

புராண படனம் செய்வதில் ஈடுபாடுடைய குருக்கள் அவர்கள் பண்டிதர் நமசிவாயம் அவர்களின் பங்களிப்போடு ஊரிசாட்டி சிவபூதராஜர் ஆலயத்தில் திருவிளையாடற்புராண படனம், பெரிய புராண படனம், சித்திரபுத்திர நாயனார் கதை முதலியவற்றை நிகழ்த்துவித்துவந்தார்.

வயது முதிர்வு காரணமாகத் தளர்வுற்றிருந்த குருக்கள் அவர்கள் ஆத்மார்த்த சிவபூஜை செய்வதற்கு ஆலயத்திற்கு செல்லும்போது விழுந்து நோய்வாய்ப்பட்டு, சிறிது காலத்தில் சித்திரபானு வருஷம் ஆடிமாதம் தான் தொடர்ந்து விரதம் அனுஷ்டித்து வந்த ஏகாதசி (பூர்வபட்டச) திதியில் (20.07.2002) சிவபதமடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 91. திருக்கோணமலை
## சு. சண்முகரெத்தின சர்மா
## (எஸ்.எஸ்.சர்மா)
## (29-12-1914 - 24-07-1994)

ஈழத்தின் கிழக்கில், திருஞான சம்பந்தப்பெருமானால் தேவாரப்பாடல் பெற்றதும் அருணாகிரி நாதப்பெருமானால் திருப்புகழும் பாடப் பெற்ற தலமான, திருக்கோணேஸ்வரப் பெருமான் அருளாட்சி புரியும் இயற்கை எழில்மிகு திருக்கோணமலை மாநகரிலே பல ஆன்மீகப் பெரியோர்கள் வாழ்ந்து சமயப்பணிகளை மேற்கொண்டுள்ளனர். அந்தவகையில் 20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து சமய சமூக வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய அந்தணர் குல பெரியோரில் ப்ரம்மஸ்ரீ சண்முகரத்தின சர்மா அவர்கள் (சர்மா ஐயர், S.S சர்மா) சிறப்பாக செயல்பட்டு முக்கிய இடம் வகிக்கிறார்கள்.

இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள கொக்குவில் என்னுமிடத்தில் 29-12-1914 அன்று ப்ரம்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் - வாலாம்பிகை அம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். ஆறு விரல்களோடு முருகனுக்குகந்த கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்ததால் பெற்றோர் இவருக்கு சண்முகரெத்தின சர்மா எனப்பெயரிட்டனர். இவர் பாட்டனார் பெயர் நாகேந்திர ஐயர்

இவர் தனது ஆரம்பக் கல்வியை திருநெல்வேலி சைவ சாலையிலும், பின்னர் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் பயின்றார். வடமொழி மற்றும் வேதக் கல்வியை சுன்னாகம் பிரம்மஸ்ரீ சிதம்பரம் சாஸ்திரியிடம் பயின்றார். தனது ஆச்சார்ய அபிஷேகம் முடிந்தவுடன் முதன் முதலாக நல்லூர் சிவன் கோயிலில் தனது அர்ச்சகர் பணியினை துவங்கினார். அதன் பிறகு திருகோணமலையில் அமைந்துள்ள வீரகத்திப் பிள்ளையார் ஆலயப் பணியினை ஏற்றார். பின்னர் திருகோணமலையினைச் சேர்ந்த கனக சபாபதிக் குருக்கள் - தங்கம்மா தம்பதிகளின் புதல்வியார் தையல்நாயகி அம்மா அவர்களைத் திருமணம் புரிந்து தனது வாழ்க்கையைத் திருகோணமலையில் அமைத்துக்கொண்டார்.

1931 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற சமயத்தில் திருகோணமலை பாதிப்பிற் குள்ளாகியது.. இந்தக் காரணத்தால் மக்கள் இடம் பெயர்ந்து பல இடங்களுக்கு செல்லும் நிலமை ஏற்பட்டது. பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்கள் வழிபாடின்றி மூடப்பட்டது. இதை அறிந்து கோயில்களில் நித்தியபூசை தடை பெறாத வண்ணம் சண்முக ரத்தின சர்மா 18 ஆண்டுகள் தொடர்ந்து பல கோயில்களுக்கு தானே முன் வந்து நித்தியபூசை செய்து வந்தார். அதனால் பொதுமக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றார்

06-08-1951 அன்று திருகோணமலையில் உள்ள ஹஸ்கிஸன் வீதியில் தனது இல்லத்தில் ஓர் பகுதியில் 'கோணேஸ்வரா அச்சகம்' என்னும் நிறுவனத்தை நிறுவினார் அந்த அச்சகமே திருகோணமலையில் துவங்கப்பட்ட முதல் அச்சகம் ஆகும். தமிழ், ஆங்கிலம், சிங்களம் என்னும் மும்மொழியிலும் அந்த அச்சகம் அந்த நாளில் சிறப்பாகச் செயல்பட்டது. அந்த அச்சுப் பணியோடு தனது சமயப் பணியினையும் சிறப்பாகச் செய்து வந்தார். அதன் பின்னர் திருகோணமலை காசி விஸ்வநாதர் சிவன் கோயிலில் பிரதான சிவாச்சாரியாராகப் பணிபுரிந்து வந்தார்.

திருகோணமலையில் உள்ள பல கோயில் வருடாந்திர உற்சவங்கள், கும்பாபிஷேகம் போன்ற வைபவங்களுக்குப் பிரதான சிவாச்சாரியராக விழாவினைத் திறம்பட நடத்தி வைப்பார். மக்களின் சமயம் சார்ந்த பல ஐயங்களையும் தீர்த்து வைப்பார். திருகோணமலையில் அந்நாளில் சமயம் சார்ந்த தவறுகள், கோயில் வழிபாட்டில் குறைகள் எவையேனும் தனக்குத் தெரியவந்தால் அதனை சீர் செய்யும் வண்ணம் அவர்களுக்கு எளிமையாக திருத்துவதுடன், துண்டுப் பிரசுரம் மூலம் அச்சுச் செய்துவழங்கி, பொதுமக்கள் அறியும் வண்ணம் சமயப்பணி சிறப்பாகவும், எந்தக் குறைவின்றி நடைபெற வேண்டும் என்னும் உயர்ந்த எண்ணத்துடன் துணிச்சலுடன் செயல்படுவார்.

1964ம் ஆண்டு நடைபெற்ற திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் முதலாவது கும்பாபிஷேகத்தின்போது சர்வ போதகாசிரியராக இருந்து திறம்பட வழிநடத்தியுள்ளார்கள். அதனைத் தொடர்ந்து கோணேசர் ஆலய வழிபாட்டு முறைகளையும், திருவிழாக்கள் நடத்தப்படும் முறைகளையும் ஆகமநெறி வழுவாது, புராணங்களின் வழியாகவும் ஆலய மரபின் அடிப்படையில் வகுத்து, நிர்வாக உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் முறைகளையும் வகுத்து யாப்பாக எழுதி முறைப்படுத்தியுள்ளார்கள். இன்றும் இம்முறைகளே பின்பற்றப்பட்டு வருகின்றன .

தனது கோணேஸ்வரா அச்சகத்தில் பொதுவான பணிகள் நடைபெற்றாலும், சமயம் சார்ந்த பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து சமயம் சார்ந்த பல புத்தகங்கள் வெளிவர காரணமாக இருந்தார். முக்கியமாக வரலாற்றுப் புகழ் பெற்ற கோணேசர் ஆலயம் தொடர்பான புராண வரலாறுகள் அடங்கிய முக்கிய நூல்கள் பல அச்சிடப்பட்டு வெளிவர காரணமாக இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் பதிப்பித்த நூல்கள் சில :

1. யாழ்ப்பாண வைபவம்
2. "A GLIMPSE OF THIRUKONESWARAM"
3.. திருக்கரைசப் புராணம் :
4. கோணேசர் கல்வெட்டு
5. கேதார கௌரி நோன்புக் கதை

தமது அச்சகத்தின் மூலம் மக்களுக்கு சிறந்த ஆன்மீக நெறிகளை புகட்டினார். விரதங்கள் பற்றிய முக்கியத்துவங்களை அந்தந்த காலங்களில் சிறு துண்டுப்பிரசுரங்கள் மூலம் இலவசமாக வெளியிட்டு விரதங்கள் கடைப்பிடிக்கும் முறைகளை ஊக்குவித்தார்.

இன்று திருக்கோணாமலை மக்களால் பிரதானமாக மேற்கொள்ளப்படும் கேதாரகௌரி விரதத்தினை திருக்கோணமலை சிவன் கோயிலில் முதன் முதலில் ஆரம்பித்து வைத்தவர் சண்முகரெத்தின சர்மா ஆவார். விரதம் தொடர்பான புராண நூலையும் வெளியிட்டார். விரதத்திற்கான நோன்புக்கயிற்றினை இருபத்தியொரு முடிச்சுக்களுடன் தாமே தமது இல்லத்தில் முறையாகத் தயாரித்தார். விரத காலங்களில் பூஜைகளை திறம்பட மேற்கொண்டு மக்களுக்கு இறையருள் கிடைக்க சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

1972ம் ஆண்டு திருகோணமலையில் சைவசமய அபிவிருத்தி சபை என்ற அமைப்பினை உருவாக்கி பல சமயப்பணிகளை மேற்கொண்டு வந்துள்ளார். அவ் அமைப்பின் மூலம் பல அரிய நூல்களை மறுபதிப்புச் செய்து வெளியிட்டுள்ளார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் திருகோணாமலையில் வாழ்ந்த பாசுபதகுருமார் மரபில் வந்த முருகன் குருக்கள் என்பவர் எழுதிய திருக்கோணேஸ்வரர் ஊஞ்சல் பாடலை நூலாக தமது அச்சகத்தில் பதிப்பித்து சைவசமய அபிவிருத்தி சபைமூலம் இலவசமாக வழங்கினார்.

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் காப்பாளர் மற்றும் ஆலோசகராக்த் திகழ்ந்தவர்.

திருகோணாமலையில் பல கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டபோதும், புனரமைக்கப்பட்ட போதும் முக்கிய ஆலோசகராகத் திகழ்ந்துள்ளார். சிற்ப சாஸ்திரங்கள் தெரிந்த காரணத்தினால் அதற்குரிய ஆலோசனைகளை திறம்பட வழங்கினார். குறிப்பாக விஸ்வநாத சிவன் கோயில் மற்றும் திருக்கோணேஸ்வரர் ஆலய முதல் கட்டமைப்புப் பணிகளில் இவர் சிறந்த பங்களிப்பினை வழங்கியுள்ளார்கள்..

கொடிமரம் இல்லாத கோயில்களில் நடத்தப்பெறும் பாவனோற்சவ முறையினை திருகோணமலையில் முதன் முதலில் சிவன் கோயிலில் கொடிமரம் இல்லாத காலத்தில் நடத்தி அம்முறையினை அறிமுகப்படுத்தி பின்னாளில் பல கோயில்களில் இம்முறை தொடரக் காரணமாக இருந்தார் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மலையகப் பகுதிகளில் சென்று ஆலய உற்சவங்களையும் கும்பாபிஷேகங்களையும் நடத்திவந்தார். குறிப்பாக வன்னி முல்லைத்தீவைச் சேர்ந்த மக்கள் சிவன் கோவிலில் இவர் பணி புரிந்த காலங்களில் தேடிவந்து திருநீறு மற்றும் நூல், தீர்த்தம் ஆகியவற்றைப் பெற்றுச்செல்வர். பின்னர் யுத்தகாலங்களில் அம்மக்களால் வரமுடியாத சூழ்நிலையில் அவர்களுக்காக தமது இல்லத்திலேயே பூஜை செய்து விபூதி மற்றும் நூல்களை தபால் மூலம் அனுப்பி வைப்பார். அவற்றால் தமது நோய், துன்பம் நீங்குவதாக அவர்கள் திடமாக நம்பினார்கள்.

கதிர்காமத்தில் பூஜை செய்யும் கப்புறாளைமார்களில் சிலர் திருகோணமலை வரும்போதெல்லாம் இவர்கள் இல்லத்தில் வந்து தங்கிச்செல்வார்கள். அவ்வேளையிலே முருக வழிபாட்டினை ஆகம முறையில் எவ்வாறு செய்வதென இவர்களிடமிருந்து தெரிந்து கொண்டுள்ளனர்

திருகோணமலை மக்களிடையே சிறந்த ஆன்மீக வழிகாட்டியாகத்திகழ்ந்த சர்மா ஐயா அவர்கள் பித்ரு காரியங்களின் முக்கியத்துவத்தினையும் மக்களிடையே வலியுறுத்தி அவர்கள் செய்யவேண்டிய திதிக்கான காலங்களை தாமே எழுதிவைத்து உரிய நேரத்தில் அவர்களுக்கு தபால் மூலம் நினைவூட்டி வழிநடத்தியுள்ளார்.

சண்முகரத்தின சர்மா அவர்கள் தம்மை நாடிவருவோர்களின் சந்தேகங்களை தீர்த்து. அவர்களுக்கு ஆன்மீக நெறியினைப் புகட்டியவர், அன்பு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை, காலந்தவறாமை, அனைவரும் ஒன்று என்ற சமநோக்கு, கடுமையான ஆசார நெறி போன்றவற்றை உறுதியாக கடைப்பிடித்தார். த்ரிகால சந்தியாவந்தனம், நித்திய சிவபூஜையினை தமது இறுதிக்காலம்வரை மேற்கொண்டவர். சிவபூஜை முடிக்காமல் நீர்கூட அருந்தமாட்டார்கள். திருகோணமலையில் வாழ்ந்த சிறந்த ஆன்மீகப் பெரியோர்களான காந்தி ஐயா, தொண்டர் ஐயா, திருகோணாமலை பத்திரகாளி அம்மன் ஆலய ஆதீனகுரு பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்தக்குருக்கள் இன்னும் பல பெரியோர்களுடன் அன்பும் நட்பும் பூண்டவர்.

திருகோணமலையில் 1980 இல் ஏற்பட்ட வன்செயல் களில் மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டு வீடுகளை விட்டு இந்தியாவிற்கு இடம்பெயர்ந்து சென்றனர். இந்நிலை சர்மா ஐயர் குடும்பத்தினருக்கும் ஏற்பட குடும்பத்தினர் எவ்வளவு வற்புறுத்தியபோதும் கோணேசப்பெருமான் திருவடிகளை உறுதியாகப் பற்றி தமது உயிர் இம்மண்ணில்தான் போகவேண்டும் என மறுத்துவிட்டார். அவர் நம்பிக்கையை பொய்க்காது காத்துவந்த கோணேஸ்வரப் பெருமான் சண்முகரெத்தின சர்மாவை அவரது எண்பதாவது வயதில் 24-07-1994இல் தம்முடன் அழைத்துக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 92. இணுவில் கு. இராமநாதக் குருக்கள் (10.09.1914 - 04.07.1983)

ஞானபூமியாய் மிளிரும் இணுவில் பதியிலே வைதிக சைவநெறி பிறழாமல் வாழ்ந்துவந்த அந்தண சிரேஷ்டர் சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்களுக்கும், மாந்திரீக விஷகடி வைத்தியர் நடராஜ ஐயரின் பேர்த்தியான நீலாம்பாளுக்கும் மூத்த புதல்வராக ஆனந்த வருடம் ஆவணி மாதம் 25ஆம் நாள் (10.09.1914) ஆவணி மூல நட்சத்திரத்திலே இராமநாதக் குருக்கள் ஜனனமானார்.

தந்தையின் மறைவின்பின் நயினை சுவாமிநாதக் குருக்களுடன் வாசம் செய்தார். நயினை ஐ. கைலாசநாதக் குருக்களும் இவரும் சமகாலத்தில் தமிழ்நாடு கும்பகோணத்தில் பிரபல சிவாசாரியர்களிடம் பாடம் கேட்டனர்.

நாரந்தனை நாகலிங்க ஐயரின் மூத்த புதல்வி இராசம்மாவைத் திருமணம் புரிந்து நான்கு ஆண்மக்களையும், ஐந்து பெண்களையும் பெற்று அவர்களை நன்கு வளர்த்தெடுத்து இல்லற வாழ்வில் இணைத்ததோடு, ஆண்மக்கள் அனைவரையும் தம் வழியில் சிறந்த சிவாசாரியர்களாக ஆக்கினார்.

இருபத்தேழு வயதில் தமிழ்நாடு சென்று ஆசார்ய அபிஷேகம் செய்யப்பெற்று குருத்துவ சேவையில் ஈடுபட்டார். இணுவில் கந்தசுவாமி கோவிலில் தமது முதலாவது மஹோற்சவத்தை நடத்தினார்கள். தொடர்ந்து கோவிலின் பரம்பரை அர்ச்சகராகவும் பிரதமகுருவாகவும் பணிபுரிந்ததோடு அடியார்களுக்கு அடியவராகவும் இருந்து ஆலய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவர்.

இலங்கைத் திருநாட்டில் தலைசிறந்த கலை நுணுக்கங்களுடன் அமைந்த உலகப்பெருமஞ்சம் எனப் போற்றப்படும் மஞ்சத் திருவிழாவை 27.06.1983 இல் தலைமையேற்று நடத்திவைத்தார்.

ஸத்வ குணங்களை உடைய ஆகாரங்களையே உட்கொள்பவர். நித்திய கர்மானுஷ்டானத்தில் குறைவு அற்றவர். வைதீக சந்தியாவந்தனத்தையும் ஆத்மார்த்த சிவ பூஜையையும் மேற்கொள்பவர். ஆலயக்கிரியை எனில் அதற்கு முன்பாகவே சிவ பூஜை செய்பவர். ஆச்சார்ய இலட்சணத்திற்கு அமைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியைகளை செய்யும்போது எப்போதும் நிமிர்ந்த நிலையில் இருப்பார். பிராணாயாமத்தினை பூரக கும்பக ரேசகங்களை மாத்திரா காலத்திற்கு அமைவாக எப்போதும் செய்யக் கூடியவர்.

நித்திய நைமித்திகக் கிரியைகளில் முழுமனத்துடன் ஈடுபட்டு கிரியைகளைச் செய்கின்ற பாங்கு அனைவரின் பாராட்டுக்கும் போற்றுதலுக்கும் உரியதாகவும், சைவசமய வளர்ச்சிக்கு மெருகேற்றுவதாகவும் இருக்கும். ஏராளமான அந்தணர்களுக்கு ஆச்சாரியபிஷேகம் செய்தும் செய்வித்தும் மகோற்சவங்களை பயிற்றுவித்தவர்.

ஐ. கைலாசநாதக் குருக்கள், நவாலி விஸ்வநாதக் குருக்கள், சித்தங்கேணி சிவசாமி குருக்கள் போன்ற பெரியவர்களோடு ஆகம நுணுக்கங்களை விவாதித்து கொண்டிருப்பது பாரப்பதற்கு அழகாகவும். கேட்பவர்களுக்கு ஆகமத்தில் ஆர்வத்தையும் உண்டு பண்ணும் என்பர்.

முன்னேஸ்வரத்தில் முதன்முதல் நடைபெற்ற 33 குண்ட கும்பாபிஷேகத்தில் எண்ணாகுதியை எப்படி செய்வது என்கின்ற சர்ச்சையில் இராமநாதக் குருக்கள் அவர்கள் இதனை இவ்வாறு செய்ய முடியும் என ஆலோசனை கூறி அதனை செய்வித்தார், அவர் அன்று கூறிய ஆலோசனையே இன்று நாம் கைகொள்ளும் ஸ்பர்ஸாகுதி பத்ததி முறையாகும். அந்தக் காலத்தில் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் அவர்களிடமிருந்து முன்னேஸ்வர தேவஸ்தானத்தின் சார்பாக பாராட்டுக் கடிதம் பெற்றவர்.

மேலும் கும்பாபிஷேகங்களில் ஆஸனஸ்தாபனம் யந்திரஸ்தாபனம் ரத்தினநியாஸம் போன்ற கிரியைகளில் சிற்பாசாரியாருடன் தாமே முன்னின்று தீவிர கவனத்துடன் நடத்துவார். மேலும் பிம்பஸ்தாபனத்தில் யந்திரத்துடன் விஷ்ணுக்கிராந்தி, சீதேவியார்செங்கழுநீர் போன்ற பலவிதமான மூலிகைகளையும் நவரத்தினங்களையும் சேர்ப்பதில் முழுக் கவனத்தில் இருப்பார்.

மேலும் ஒரு முறை மிருத்சங்கிரஹண கிரியையில் பரிசாரகர் குந்தாலி அபிஷேகத்திற்காக பஞ்சபாத்திரத்தினை எடுத்தபோது அவரைக் கண்டித்து வேறு ஒரு பாத்திரம் எடுத்து வரச் செய்து மீண்டும் சாமான்யார்க்யம் செய்து தான் தொடர்ந்து அபிஷேகத்தினை செய்தவர்.

நாரந்தனை கும்பாபிஷேகத்தில் அவ்வாலயம் சிதிலமடைந்திருந்ததால் கலாகர்ஷணம் எங்கிருந்து செய்வது என்கின்ற சங்கையில் குருக்களுக்கு கனவிலே கிடைத்த அருள்வாக்கின்படி பக்கத்திலிருந்த மரத்திலிருந்து கலாகர்ஷணம் செய்து கும்பாபிஷேகத்தை சிறப்பாக செய்தார். அவ்வாலத்தின் மண்டலாபிஷேகம் முடிந்தபின்பு அந்த மரம் வாடிவிட்டது. இவ்வாறு பரார்த்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியைகளை ஆத்மார்த்தமாகவும் செய்பவர். இங்கு அவர் ஆரம்பித்துவைத்த ஸ்ரீசக்ர பூஜை இன்றுவரை சிறப்பாக நடைபெற்று வருகிறது.

எமது ஊரில் பிரபல வர்த்தகர் ஒருவருக்கு 15 வருடங்களாக புத்திர பாக்கியம் உண்டாகவில்லை. சோதிடரின் ஆலோசனைப்படி சுப்ரமணிய பிரதிஷ்டையை இணுவில் ஸ்ரீ பரராஜ சேகர பிள்ளையார் ஆலயத்தில் செய்தபோது அந்த வர்த்தகருக்கு கும்பாபிஷேக நிறைவில் உங்களுக்கு வெகுசீக்கிரமாகவே புத்திரபாக்கியம் கிட்டும் என ஆசிர்வதித்தார். அதன்படி மண்டலாபிஷேக 48 நாட்களுக்குள் அந்த வர்த்தகரின் மனைவி கருவுற்றார். இது அவருடைய தபோபலத்தையும் வாக்கு வன்மையையும் எமக்கு புலப்படுத்துகின்றது.

இணுவில் கந்தசுவாமி கோயிலில் சுப்பரமணிய யந்திரத்தினை பிரதிஷ்டை செய்து யந்திர பூஜை பூர்த்தியில் அன்று வசந்த மண்டபத்திலிருந்து தெற்கு வீதிவரை மடை போடுவித்து யாவரும் மெய் சிலிர்க்கும் வண்ணம் யந்திர பூஜையை பக்தி பூர்வமாக செய்தவர். தமது தனிப்பட்ட வாழ்வில் இணுவில் கந்தசுவாமி கோயில் 15 நாள் பூஜை வருமானத்துடன் அக்கால சில மகோற்சவ கும்பாபிசேஷக வரும்படிகளை மட்டும் வைத்துக்கொண்டு மிக எளிமையாக வாழ்க்கை நடாத்தியவர்.

ஆலயக் கிரியைகளிலும் சரி வீட்டிலும் சரி ஆசார நியமங்களை கடைப்பிடிப்பவர். குறிப்பாக பத்து, விழுப்பு முதலியவற்றில் மிகக் கவனமாக இருப்பார். புராண படனத்தில் மிகுந்த ஆர்வமுடையவர். புராண பாடல்களை வாசிப்பதிலும் பொருள் கூறுவதிலும் வல்லவர். சங்கீத ஞானமுடையவர்.

பூஜைகளில் வெள்ளை வஸ்திரமணிந்தவராகவே எப்போதும் இருப்பார். கிரியையின்போது யாராவது கதைத்தாலோ வீண் வார்த்தை பேசினாலோ இவருக்கு கோபம் வந்துவிடுமாம். கிரியையின் போது பேச வேண்டி ஏற்பட்டால் மட்டும் சமஸ்கிருத பாஷையில்தான் பேசுவார்.

எந்தவொரு கிரியையிலும் முன்பரிசீலனை செய்யாமல் ஆசாரியராக உட்காரமாட்டார். வேண்டிய பொருட்கள் - விடுபட்ட பொருட்களை சரிபார்த்து விட்டுதான் ஆரம்பிப்பார்.
பத்ததி வாசிப்பதிலும் கிரியைகளை செவ்வனே செய்வதிலும் சாதகர்களின் ஒத்துழைப்பையும் அவர்களுக்குரிய கௌரவத்தினையும் ஊக்குவிப்பையும் வழங்குவதில் இவர் நேர்மனப்பாங்கு கொண்டவர்.

அக்கால பிரசித்தி பெற்ற குருமார்களில் சுவாமிநாதக் குருக்கள் (சின்னத்துரைக் குருக்கள்) அவர்களின் மருமகனாக விளங்கியவர். அவரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து ஆலயக்கிரியை நிமித்தம் மலேசியா போன்ற நாடுகளுக்கு சென்று வந்த பெருமை இவருக்குண்டு. நாரந்தனை தான்தோன்றி அம்மன் ஆலயம், இணுவில் செகராஜசேகரப் பிள்ளையார் கோவில், புளியங்கூடல் மஹாமாரி அம்மன் கோவில் போன்ற பல ஆலயங்களில் மஹோற்சவகுருவாக விளங்கினார்.

நித்தியம் தவறாது சிவ பூஜை செய்பவர் பூஜை முடிந்த பின்பு கற்கண்டு அவல் பருப்பு முதலான சிவ பூஜை பிரசாதங்களை பெறுவதற்காக சிறுவர் சிறுமியர் எல்லாம் இவருடைய ஆத்மார்த்த சிவ பூஜையை பார்த்துகொண்டிருந்தோம் என அவருடைய பேரப்பிள்ளைகள் பெருமிதத்துடன் கூறுகின்றார்கள்.

அந்தண சமூகத்தில் பல வைதிகக் கிரியைகளையும் சிறப்பாக நடத்திவைத்த பெருமகன்.

நிறைவாக தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்தில் 03.07.1983 ஆம் ஆண்டு நடைபெற்ற சண்டிஹோமத்தில் சர்வசாதகராகவும் குருமாரில் ஒருவராகவும் செயற்பட்டார். அன்றைய தினம் உபசாரத்தில் அம்பாளுக்கு வஸ்திர சமரப்பணத்தில் எழுந்த பெரிய அக்னி ஜ்வாலையைக் கண்டு எல்லோரும் பின் வாங்கிய போது இவர் மட்டும் அம்பாளை வணங்கி புஷ்பாஞ்ஜலி செய்து அக்னியை அடங்கச் செய்தார் என இன்று வாழும் குருமார்களும் அன்பர்களும் இன்றும் மெய் சிலிர்க்க கூறுகின்றார்கள்.

ருதிரோற்காரி வருடம் ஆனித்திங்கள் இருபதாம் நாள் (04. 07. 1983) அபரபக்க நவமித்திதியில் சிவபதமடைந்தார்கள்.
ஊர்மக்களின் பிரியத்துக்குரியவரான நம் குருக்களுக்கு மக்கள் ஒன்றுபட்டு சிலை வைத்து இன்றும் பூசிப்பது சிறப்பு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 93. கப்பித்தாவத்தை,
## பா. சண்முகரத்தினசர்மா
## (06.11.1915 - 19.05.2012)

அவனியிலே வரவு:

நாவலர் பெருமானின் திருவடிச் சுவடு பதிந்த புண்ணிய மண்ணில், கலியுக வரதனாம் கந்தக்கடவுளின் கடைக்கண் பார்வை தழுவிடும் சொர்க்க பூமியில், நல்லை நகரினில் 1915 இராக்ஷத ஆண்டு ஐப்பசித் திங்கள் 20ம் நாள் சித்திரை விண்மீனில் வள்ளி மணாளனுக்கு வழி வழி அடிமை செய் அந்தணக் குலத்தோன்றல் சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் - சாரதாம்பிகைக்கு அருத்தவப் புதல்வனாகத் தோன்றினார் சண்முகரத்தின சர்மா.

கல்வித் தகைமை

கந்தர்மடம் மகாவித்யாலயத்தில் தமிழையும் சுன்னாகம் குருகுலத்தில் வடமொழியையும் சுற்றுத் தேர்ந்தார். "விளையும் பயிர் முளையிலே" என்பதற்கொப்ப பக்தி, ஒழுக்கம், ஒப்புரவு, ஈகை, வாய்மை என்ற அணிகலன்கள் இவரை அழகுசெய்ய ஒப்பற்ற இரத்தினமாகவே ஒளிர்ந்தார். குருவாயூர் பாலக்காடு சிதம்பர சாஸ்திரிகள் என்ற பெரியவரால் உபநயனம் செய்விக்கப் பெற்று அவரையே தமது மானசிகக் குருவாக ஏற்றார்.

இல்லறத்தின் ஏற்றம்:

1942ம் ஆண்டு சண்முரத்தின சர்மா அவர்களின் திருக்கரம் பற்றி இல்லறச் சோலைக்குள் பாதம் பதித்த பொழுதே திருமதி இராஜலக்ஷ்மி அவர்கள் தன்னுடன் அஷ்டலக்ஷ்மிகளையும் அழைத்து வந்துவிட்டார் போலும். அன்றிலிருந்து சர்மா அவர்களுககான புகழும், கீர்த்தியும், செல்வமும் வானின் உச்சிக்கே அவரை இட்டுச்சென்றன.

ஆலமரம் போன்று தன்னையும் காத்துக்கொண்டு, தன்னை நாடி வருபவர்களுக்கும் நிழலளித்து, வேரூன்றி, கிளைத்துச் செழித்து, மரத்தைத் தாங்கும் விழுதுகளாம் நன்மக்கட் செல்வங்களைப் பெற்று நாடுபோற்ற, நல்லோர் போற்ற சீரியவாழ்வு வாழ்ந்தனர் திரு சாமா தம்பதிகள்.

பக்தியின் உறைப்பு:

சண்முகரத்தின சர்மா அவர்களின் இத்துணை உயர்வுகளுக்கும் காரணம், ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமானின் திருவடிகளை சிக்கெனப் பற்றிக் கொண்டமையே! உண்ணும் நீரினும், உயிரினும், செல்வக்களிற்றினையே உயர்வாகக் கொண்டார். 1938ம் ஆண்டு முதல் இறக்கும் வரை இவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத் தொண்டு ஒரு கின்னஸ் சாதனை தான். இவர் பங்குகொண்ட கும்பாபிஷேகங்கள், யாகங்களைப் பட்டியலிட்டால் அது அஞ்சனை மைந்தனின் வால் என நீளும். நினைவிற்கு ஒருசில.

1958 - ஸ்ரீ பால செல்வ விநாயகருக்கு முதல் கும்பாபிஷேகம்
1974 - ஸ்ரீ மஹாலஷ்மி கும்பாபிஷேகம்
1974 -இலங்கையில் நடைபெற்ற முதலாவது சண்டிஹோமம்
1985 புதிய ஸ்ரீ பாலசெல்வ விநாயகர்
இராஜ கோபுரக் கும்பாபிஷேகம்
1986 இலங்கையில் முதலாவது அஸ்வமேத யாகம்,
அமைச்சர் திரு. செ. இராஜதுரை அவர்கள் தலைமையில் நிகழ்த்தியது.
1992 கோலாலம்பூர் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய கும்பாபிஷேகத்தில் அந்நாட்டு அமைச்சர் ஸ்ரீ சாமுவேல் அவர்களால் கௌரவிக்கப்பட்டமை.
1992 பிரத்தியங்கரா ஹோமம் புதுமை பொலியச் செய்தமை
1995 ஸ்ரீ பால செல்வ விநாயகருக்கு சித்தரத்தேர்

**பணிகளின் உயர்வு:**

இத்துணை பணிகளுடன் தொட்டதெல்லாம் பொன்னாகும் இவரது ஆகிவந்த கரத்தினால் ஏறக்குறைய மூவாயிரம் திருமணங்களுக்கு மேலாகச் செய்து வைத்துள்ளார்.

இவர் ஆலயத் தொண்டு மட்டுமன்றி சமூகத் தொண்டுகளிலும் சிறந்து முன்னிற்பவர். அதற்காக இவருக்கு அரசாங்கம் சமாதான நீதவாள் பட்டத்தை அளித்து சிறப்பித்தது. ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்கும் மேலோக ஸ்ரீராம கான சபையின் தலைவராகப் பொறுப்பேற்றும், சிவப் பிராமணர் சங்கத்தின் காப்பாளராகவும் கடமையாற்றி வந்தார்.

இதுமட்டுமல்ல கர்நாடக இசையில் பெருவிருப்புக் கொண்டவர். கலைஞர்களை மதிக்கும் உயர்குணம் கொண்டவர். இவரால் பாராட்டுப்பெறாத கலைஞர்களே இலங்கைத் திருநாட்டில் இல்லை என்று கூறலாம். அரசியல் ஆன்மிகம், கலை என்ற முக்கடலிலும் முக்குளித்தவர் இவர். நிறைவாகக் கூறவேண்டுமானால் புகழ். கல்வி, ஆற்றல், வெற்றி, நன்மக்கள், பொன், நெல், அழகு, பெருமை, ஆயுள், நல்லூழ், இளமை, அறிவு, துணிவு, நோயின்மை, நுகர்ச்சி என்ற பதினாறு பேறுகளும் பெற்று அகந்தையில்லாமல் அடக்கத்தின் பெட்டகமாக வாழ்ந்த இப்பெரியாரின் வாழ்க்கை நாம் வாழ வேண்டிய வாழ்க்கைக்கு ஓர் கைநூலாகும். ஆசி வேண்டி மலரடி பணிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 94. நல்லூர் வயலின் வித்வான் ச. வைத்தீஸ்வர ஐயர்

(1916 - 1990)

யாழ்ப்பாணம், நல்லூரிலே 1916ஆம் ஆண்டு மார்கழி மாதம் பிறந்தார். இவருடைய தந்தையார் சபாபதிஐயர் ஆவர். இவர் தனது இளம் பராயத்தில் பாடசாலைக் கல்வியுடன் இசைப் பயிற்சியையும் அக்காலத்தில் ஈழத்தில் தங்கி யிருந்த வீணை வித்துவான் துரைசாமி ஐயர், சபேசஐயர் ஆகியவர்களிடம் பயின்றார். வாய்ப்பாட்டு, வீணை, வயலின், புல்லாங்குழல், ஹார்மோனியம் ஆகிய பல்லியக் கருவி இசைகளையும் உரியமுறையில் கற்றுத் தேர்ந்தார்.

ஏறக்குறைய தனது 20ஆவது வயதளவில் பலமேடைகளில் இசைக்கச்சேரிகள் செய்தும், இசையரங்குகளில் வயலின், ஹார்மோனியம். புல்லாங்குழல் ஆகியவற்றில் பக்கவாத்தியமாக வும் தனி இசையாகவும் வாசித்துப் பெருமை தேடிக் கொண்டார். இவர் கையாண்டு வந்தவயலின் ஏழு தந்திகளையுடையது. இவ்வகையான ஏழு தந்தி வயலினை இந்தியாவில் மைசூர் சௌடையா, சேதுராமையா ஆகியோர்களே வாசித்து வந்துள்ளார்கள்.

இவர் நல்லூரைச் சேர்ந்த ருக்குமணி அம்பாள் என்பவரைத் திருமணம் செய்து ஒரு மகனையும் ஒரு மகளையும் பெற்றார். இவர்களுள் மகன் நாகேஸ்வர ஐயர் என்பவர் மிருதங்கப் பயிற்சி பெற்று தந்தையாருடன் இசைக் கச்சேரிகளுக்கு மிருதங்கம் வாசித்து வந்தார். குறிப்பாக ஐயர் அவர்கள் அருட்கவி சீ.விநாசித்தம்பி அவர்களின் கதாகால க்ஷேபத்திற்கும் திருமதி மோகனாம்பிகை கணேசன் அவர்களின் இசைக்கச்சேரிக்கும் வயலின் வாசித்து வந்துள்ளார்.

வைத்தீஸ்வர ஐயர் அவர்களின் இசைச்சேவை ஈழத்தின் பல பாகங்களிலும் கல்லூரிகள் மூலம் பிரதிபலித் துள்ளது. குறிப்பாக உடுவில் மகளிர் கல்லூரி, பருத்தித்துறை பெண்கள் கல்லூரி, ஹாட்லி கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் இசையாசிரியராக வாய்ப்பாட்டு இசை, வயலின், புல்லாங்குழல், வீணை இசை ஆகிய இசைகளைக் கற்பித்து மாணவர்களுக்கு, இசையறிவூட்டியுள்ளார். இவர் தனிப்பட்டமுறையிலும் பல இசைவாரிசுகளை உருவாக்கினார்.

ஈழத்தின் முது கலைஞர் பலருக்கும் பக்க வாத்தியமாக வயலின் வாசித்தவர். வீணை இசைக் கச்சேரிகளும் செய்துள்ளார். இவர் முருகபக்தன், யோகர் சுவாமிகள், வடிவேல் சுவாமியார் ஆகியோரிடமும் பக்தியுள்ளவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சிலகாலம்இல்லறத்தில் இருந்து கொண்டே தவ வாழ்க்கை நடத்தியுள்ளார். தனது மனைவி மக்களுக்கு செய்ய வேண்டிய கடமை எல்லாம் முடித்து கிளிநொச்சி மகாதேவ ஆச்சிர மத்தில் வடிவேல் சுவாமிகளிடம் துறவறம் பூண்டு காவி வஸ்த்திரம் தரித்து வாழ்ந்தார். பிற்காலத்.தின் உடல் நலம் குன்றிய போதும் அதிகாலை யிலேயே எழுந்து உள்ளம் உருகி தியானம், நாமாவளிகள், பஜனைகள் தோத்திரப் பாடல்களைப் பக்தியுடன் கண்ணீர் சொரிந்து பாடுவார். தாயின்மீது மிகுந்த பாசமுள்ளவர். அதனால் தனது தாயார் இறந்த சித்திராபௌர்ணமி அன்று தானும் இறக்க வேண்டும் எனும் அவாக்கொண்டிருந்தார். அது போலவே 1990ஆம் ஆண்டு சித்திராபௌர்ணமி அன்று தன் புகழுடம்பை விட்டு முருகனின் பாதாரவிந்தங்களில் கலந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 95. சுரபாரதி சேவா துரந்தரர், வித்வ சிரோமணி, வித்யா கலாபமணி, சிவகலா பூஷணம், சம்ஸ்கிருத பண்டிதர், ச. பஞ்சாக்ஷர சர்மா அவர்கள்

(13.11.1916 - 24.09.2003)

வடகோவைச் சபாபதி நாவலர், தென்கோவை கந்தையாபிள்ளை முதலிய பேரறிஞர்களின் வரிசையில் கோப்பாய்க் கிராமம் தமிழுலகிற்கு ஈன்றளித்த அரிய மணிகளில் ஒருவர் அமரர் பண்டிதர் பிரம்மஸ்ரீ சபாபதி ஐயர் பஞ்சாட்சர சர்மா அவர்கள்.

கோப்பாய்க் கிராமத்தைப் பிறப்பிடமாகவும் நீண்டகால வசிப்பிடமாகவும் கொண்டிருந்த ஐயா அவர்கள் நம் தமிழ்மொழிக்கும் சம்ஸ்கிருத மொழிக்கும் சைவ சமயத்துக்கும் தமிழ், சம்ஸ்கிருத இலக்கிய உலகிற்கும் இவை சார்ந்த வகையில் சமூகத்திற்கும் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது.

வடகோவையில் பிரபல சித்தவைத்தியரும் மாந்திரீக நிபுணரும் புராணபடன வித்தகருமான பிரம்மஸ்ரீ கோபாலையர் சபாபதிஐயர் அவர்களுக்கும் கந்தரோடை ஆரிய திராவிட விற்பன்னரும் புலவருமான சிவஸ்ரீ சிவப்பிரமணியக் குருக்களின் ஏகபுத்திரி மீனாட்சி அம்மாவிற்கும் மூத்த புதல்வராகத் தோன்றியவர் நமது பஞ்சாட்சர சர்மா அவர்கள். நள வருடம் ஐப்பசி மாதம் மிருகசீரிட நட்சத்திரத்திலே (13-11-1916) இவர் பிறந்தார்.

ஆரம்பக் கல்வியைச் சொந்த ஊரிலே ஜம்புகேஸ்வரக் குருக்கள் என்பாரின் கோவில் பாடசாலையிலும் அதையடுத்து கல்வியதிகாரி முகாந்திரம் சதாசிவ ஐயரால் நடத்தப்பட்ட சுன்னாகம் பிராசீன பாடசாலையிலும் கற்றார். இடையில் சிலகாலம் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் கல்விகற்றார். ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளிடத்தில் வேதாத்யயனம் செய்து கொண்டார். அவரிடமே சமஸ்கிருத மொழியையும் கற்றார். பின்னர் மீண்டும் பிராசீன பாடசாலையில் சேர்ந்து தமிழில் பிரவேச பாலபண்டித பரீட்சைகளில் சித்தியெய்தி பின்னர் கோப்பாய் சரவணபவானந்த பாடசாலையில் சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் சித்தியெய்தி திருநெல்வேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்ததம்பி வித்தியாசாலையில் ஆசிரிய தராதரப் பரீட்சையில் தோற்றி சித்தியெய்தினார். அங்கு பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, வியாகரணசிரோமணி பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள் ஆகியோரிடம் கற்றார். காவிய பாடசாலையில் கற்றவரான இவர் சாஸ்திரிகளின் வழிகாட்டலில் சமஸ்கிருத பண்டிதரானார்.

ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்க பண்டிதரான இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களை பண்டிதர் சி. கணேசையரிடம் கைவரப்பெற்றவர். ஆங்கிலம், சிங்களம், தெலுங்கு, குஜராத்தி முதலிய மொழிகளிலும் ஓரளவு அறிவைப் பெற்று விளங்கிய இவர் மலையாளத்தில் மிகுந்த பாண்டித்தியம் கொண்டிருந்தார்.

ஆரம்பத்தில் இருவருடங்கள் கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்திலும் பின்பு ஓய்வுபெறும் வரை புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

நீர்வேலி சோதிட, புராண வித்தகராக விளங்கிய சிவஸ்ரீ க. தியாகராஜக் குருக்களின் கனிஷ்ட புதல்வி இராசாத்தி அம்மாவை 30 - 03 - 1945 இல் திருமணம் செய்து இனிய இல்லறத்தை நடத்தினார்.

பொறியியலாளர் நித்தியானந்த சர்மா (இப்போது சுவாமி அக்ஷராத்மானந்தா - இராமகிருஷ்ணமடம், கொழும்பு), சௌதாமினி சாம்பசிவக் குருக்கள் (எழுத்தாளர் சௌமினி) சிவானந்த சர்மா B.A.(Hons) (கோப்பாய் சிவம்), பிரபல சோதிடர் சோமசேகர சர்மா J.P (பதுளை), அனுராதா புருஷோத்தம சர்மா B.A.(Hons), Dip.in Music ஆகியோர் இவர்களின் மக்கட்செல்வங்களாம்.

அமரர் பண்டிதர், பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சரசர்மா அவர்களின் முன்னோர் வரலாறு, தொடரும் ஒரு வம்சத்தின் நீண்ட வரலாறாக நோக்கப்படலாம்.

ஒருவம்சத்தினரின் பரம்பரை வரலாறு இவ்வளவு தெளிவாக நீண்ட தலைமுறைகளாக் பாதுகாக்கப்பட்டு வருவது அபூர்வமானதாகும். அதுவும், சாதாரண அந்தணர் குடும்ப வரலாறு அவ்வந்தணர்களாலேயே தொடர்ந்து ஏடுகளில் எழுதிப் பேணப்பட்டது அதிசயமானதே.

வித்துவான் எப்.எக்ஸ்.சி. நடராசா அவர்களின் காரைநகர் மான்மியம் என்ற நூலில் இதுபற்றிய விபரம் கிடைக்கிறது. சேதுபதி மஹாராஜாவின் செப்பேடுகளின் மூலமாகவும் திருவுத்தரகோசமங்கையிலிருந்து ஈழம் வந்து காரைநகரில் குடியேறிய குருபரம்பரையினர் வரிசைக்கிரம மாகத் தொடர்ந்து எழுதிவந்த - காரைநகர் சிவன் கோவில் குருபரம்பரையினரிடம் உள்ள - வரலாறு கூறும் ஏட்டுப் பிரதிகள் மூலமாகவும் இவ்வரலாறு உறுதிசெய்யப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்தியாவில் திருவுத்தரகோசமங்கையெனும் ஒரு பழம்பெரும் தலமுண்டு. அங்கே மங்களேஸ்வர சுவாமி கோவில் கொண்டிருக்கிறார். அந்தக் கோவில் பூஜாகாரியங் களை 32 குருக்கள் குடும்பத்தினர் வேதாகமோக்தமாக மிகவும் சிறப்புடன் நிகழ்த்திவந்தனர். அன்று அத்தேசத்துக்கு அரசனாக இருந்து இராச்சிய பரிபாலனம் செய்தவர் சோமசுந்தர சேதுபதி மகாராசா.

திருவுத்தரகோச மங்கையில் மங்களேஸ்வர சுவாமிக்குப் பூசைத் தொண்டு செய்தவர்களுள் காஞ்சிபுரம் கல்யாணசுந்தரக் குருக்களின் மகனான சிவசுப்பிரமணியக் குருக்கள் ஒருவர். ஒருநாள் இவரும் வேறுசில குருமாரும் அரசனைச் சந்திக்கச் சென்றபோது சிவசுப்பிரமணியக் குருக்கள் அரசன்மேல் சம்ஸ்கிருதக் கீர்த்தனைகள் பாடினார். பெரிதும் மகிழ்ந்த மகாராசா அவரைத் தலைமைக் குருக்களாக நியமித்தார். அவர்களின் சேவையைப் பெரிதும் மெச்சி அவர்களுக்கு அந்தக் கோவிலின் பூசை உரிமைகளைச் சூரிய சந்திரர்கள் உள்ளவரை உரிமையாக்கி அவர்கள் வாழ்வதற்குக் கிராமங்களையும் கொடுத்து இவற்றையெல்லாம் அழியாது செப்பேட்டில் எழுதிச் சாசனம் செய்துவைத்தான்.

இந்த முப்பத்திரண்டு குடும்பத்தைச் சேர்ந்த குருமாரும் இடைவிடாது பதினைந்து தலைமுறை காலமாக தம் பணிகளை நடத்திவந்தனர். இப்படியிருக்கும் நாளில் உள்நாட்டுக் கலகங்கள் தொடங்கின. வேறுவழியின்றி மங்களேஸ்வரக் குருக்களும் மனைவியும் சுந்தரேஸ்வரக் குருக்கள் என்பாரும் வேறும் இரண்டு குருமாரும் உத்தரகோச மங்கையை விட்டு நீங்கினர். இராமேஸ்வரம் வந்தடைந்து சிறிது காலம் தங்கியிருந்தனர்.

அங்கிருந்த காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து அங்கே தங்கியிருந்த முத்துமாணிக்கச் செட்டியாரைச் சந்திக்க நேர்ந்தது. யாழ்ப்பாணத்தில் குளக்கோட்டு மன்னனால் காரைநகர் வியாவிலில் கட்டிமுடிக்கப்பட்ட ஐயனார் கோவிலுக்குக் குருக்கள்மார் தேடி இந்தியாவுக்குப் பயணம் செல்லும் வழியில் இராமேஸ்வரத்தில் தங்கியிருக்கும் தமது வரலாற்றை முத்துமாணிக்கச் செட்டியார் மங்களேஸ்வரக் குருக்களுக்குக் கூறினார். திருவுத்தரகோசமங்கையில் நிகழ்ந்த அனர்த்தத்தையும் தமது துன்ப வரலாற்றையும் குருக்கள் செட்டியாருக்குக் கூறினார்.

இறைவன் திருவுள்ளம் இதுபோலும் எனவுணர்ந்து செட்டியார் வருந்தியழைக்கக் குருக்களும் இசைந்து காரைநகருக்கு வந்து வியாவில் ஐயனார் கோவில் கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி நித்திய நைமித்திகங் களைச் செய்துவரலானார்.

இந்த மங்களேஸ்வரக் குருக்களே பஞ்சாட்சர சர்மாவின் முற்சந்ததியினரில் முதன்முதலில் ஈழத்துக்கு வந்தவராவார். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களேஸ்வரக் குருக்களின் பரம்பரையில் ஐந்தாவது தலைமுறையில் மூத்தவர் கண்டோபண்டித ஐயர் காரைநகரிலேயே இருக்க அவரது சகோதரர்கள் நால்வரும் முறையே புங்குடுதீவு, சுன்னாகம் (மயிலணி), அராலி, இணுவில் ஆகிய இடங்களுக்குப் போய்க் குடியேறினர். சுப்பிரமணியக் குருக்கள் என்பாரே சுன்னாகம் மயிலணியில் குடியேறியவர். இவரது மகன் கார்த்திகேயக் குருக்கள். இவரது மகன் கோபால ஐயர். இவரது மகன் சபாபதி ஐயர். இவரது மகன் பஞ்சாட்சர சர்மா.

பஞ்சாட்சர சர்மா 27 வயதிலிருந்தே ஒரு சிறந்த வாசகராகவும் எழுத்தாளராகவும் முகிழ்த்தார். கலாமோகினி, வீரசக்தி, ஈழகேசரி, மறுமலர்ச்சி, கலைச்செல்வி, சோதிடமலர், அம்புஜம், அருவி, நாவலர் குரல், இலங்கை விகடன், காந்தீயம், இந்துசாதனம், ஈழநாடு, சுதேசநாட்டியம் முதலிய தமிழக, ஈழத்துப் பத்திரிகைகளிலும் சஞ்சிகை களிலும் ச. ப. சர்மாவின் பல்துறை ஆக்கங்கள் வெளிவந்தன. மறுமலர்ச்சி இயக்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரான சர்மா அவர்கள் அப்பத்திரி கையின் ஆசிரியபீடத்தையும் அலங்கரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை வானொலியில் சைவநற்சிந்தனை களையும் இலக்கியப் பேச்சுக்களையும் வழங்கியிருக்கிறார். பல்வேறு காலங்களில் வெளிவந்த பல பாராட்டுவிழா மலர்களின் தொகுப்பாசிரியராகவும் பல சிறந்த நூல்களின் பதிப்பாசிரியராகவும் விளங்கியதோடு பல நூல்களுக்கு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துமிருக்கிறார். இவர் ஓர் ஆசிரியர் என்பதற்கிணங்கப் பல பாடநூல்களையும் உரைவிளக்க நூல்களையும் வெளியிட்டிருக்கிறார்.

'எலிக்குஞ்சுச் செட்டியார்' என்னும் இவரது சிறுவர் கதை இலங்கை அரசாங்க கல்வி வெளியீட்டுத் திணைக்களம் வெளியிட்டிருக்கும் ஏழாம் ஆண்டுத் தமிழ்ப் பாடப் புத்தகத்தில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

சம்ஸ்கிருதக் கல்வியை வளர்ப்பதற்காகப் பல இடங்களிலும் சம்ஸ்கிருத வகுப்புக்கள், பரீட்சைகள் முதலியவற்றை நடத்தியிருக்கிறார். இந்தியாவிலே புகழுடன் விளங்கும் பாரதீய வித்யா பவன், அமரபாரதீ பரீக்ஷா சமிதி ஆகிய நிறுவனங்களுடன் சேர்ந்து அவர்களது பாடத் திட்டத்திற்கமைவாகக் கற்பித்து அந்தப் பரீட்சைகளை இங்குள்ள மாணவர்களுக்கு நடத்தி அரிய சான்றிதழ்களை அங்கிருந்தே பெற்றுக் கொடுத்தவர்.

சமயம், இலக்கியம், சமூகம் எனப் பல்துறை சார்ந்த சங்கங்கள் பலவற்றில் முக்கிய உறுப்பினராகப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. இவருடைய பங்களிப்பைப் பெற்ற 42 நிறுவனங்களின் பெயர்களும் இவரது ஆக்க இலக்கியங்கள் என 56 படைப்புக்களும் பதிப்பித்த அல்லது தொகுத்த நூல்கள் என 06 நூல்களும் உரைவிளக்கம் செய்தவை என 05 நூல்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை வழங்கியவை என 04 நூல்களும் மேற்பார்வையிட்டு ஆலோசனை வழங்கியவை என 12 நூல்களும் பரீட்சைப் பங்களிப்புக்கள் என எட்டுவிதமான பரீட்சைகளும் புள்ளிவிபரமாக 'மறுமலர்ச்சி கண்ட மாணிக்கம்' என்ற நூலில் தரப்பட்டுள்ளமை சமூகமட்டத்தில் இவர் வழங்கிய காத்திரமான பங்களிப்புப் பற்றி அறிய உதவுகின்றன.

பிறருக்கு உதவுதல், படிக்கவரும் மாணவர்களின் பசி, களையைப் போக்குவதிலும் முனைந்து நிற்றல், கடைசிக் காலம்வரை தாம் பல விடயங்களைத் தொடர்ந்து கற்றுக்கொண்டிருந்தமை, பல்துறைசார்ந்த விடயங்களைக் கடைசிக் காலம்வரை தேடித்தேடி வாசித்தமை, தாம் கண்டறிந்த புதிய விடயங்களைத் தம்மைச் சார்ந்தவர் களுக்குச் சுவைபட எடுத்துக் கூறுதல், மாணவர்க ளுகளுக்கு எந்த விடயத்தையும் தெளிவுற விளக்குதல், யாருடனும் தேவையற்ற முரண்பாடுகளை வளர்த்துக் கொள்ளாமல் நட்புநிலை பேணுதல் என்பவை என்றும் அவரிடம் காணப்பட்ட பண்புநலன்கள்.

ஓய்வுக் காலத்திலும் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டு, பல இடங்களிலும் தமிழ், சம்ஸ்கிருத வகுப்புக்களும் நடத்திக்கொண்டு இருந்தவர், யுத்த காலத்தில் இடம்பெயர்ந்து வன்னியில் மகளுடனும் பின்னர் பதுளையில் தமது இளைய மகனுடனும் வாழ்ந்து அங்கேயே 24 - 09 - 2003 இல் இறைபதமடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ૧௬. கலாநிதி க. வைத்தீஸ்வரக் குருக்கள்

(22.09.1916 - 25.04.2015)

பெரும்புலமை மிக்க புலவர் இளமுருகனார், வைத்தீசுவரக் குருக்களுக்கு, அஞ்சல் எழுதும்போதெல்லாம் "திருவடிகளைத் தெண்டனிட்டு வரைகிறேன்..." என்று எழுதுவாராம். சேக்கிழார் பெருமான் சுந்தரமூர்த்திகளை பாடவிழையும்போது, "மாதொரு பாகனார்க்கு வழி வழி அடிமை செய்யும் வேதியர் குலம்" என்று சொல்லுகிற சைவவேதியர் குலத் தோன்றலான இக்குருக்கள் 1916ஆம் ஆண்டு பிறந்தவர். ஈழத்துச்சிதம்பரம் என்று போற்றப்படும் காரைநகர் திண்ணபுரம் சிவன்கோவிலின் பரம்பரை அர்ச்சக மரபைச் சேர்ந்தவர். புகழ்பூத்த சிவாச்சார்யராக விளங்கிய கணபதீசுவரக்குருக்களின் புதல்வர். சைவத்திருமுறைகளில் ஆராக்காதல் கொண்டவர். தமக்கு பொருள் வேண்டும் போது "இடரினும் தளரினும்" பாடுவதும், உடல் நோயுண்டாயின் "அங்கத்துறு நோய்கள்.." பாடுவதும் இவர் பழக்கம் என்று எழுதியிருக்கிறார் இவரது நெருங்கிய நண்பர் புலவர் மணி க. மயில்வாகனனார்.

இவரது முன்னோர் கி.பி 1505ல் உத்தரகோச மங்கையிலிருந்து காரைநகருக்கு வந்த சிவாச்சார்ய மரபினர். பேரறிஞர் கணபதீஸ்வரக்குருக்கள் - சிவயோகசுந்தராம்பாள் தம்பதிகளின் மகனாக 22.09.1916இல் வைத்தீஸ்வரக்குருக்கள் பிறந்தார். இவரது தாயார் காரைநகர் கார்த்திகேயப் புலவரின் பேர்த்தி என்பது குறிப்பிடத்தக்கது. தந்தையிடமும், பண்டிதர் பஞ்சாட்சரக் குருக்களிடமும், பண்டிதர் இ. சுப்பிரமணிய தேசிகரிடமும் ஆரம்பக் கல்வி கற்றார். அதன்பின் சிதம்பர சாஸ்திரிகளிடம் சம்ஸ்கிருதமும், வித்துவசிரோமணி கணேசையரிடம் தமிழும் கற்றுத் தேர்ந்தவர்.

1940இல் கொழும்பு விவேகானந்தவித்தியாலயத்தில் ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். அக்காலத்தில் விவேகானந்தசபையின் சமயபாடப் பரீட்சைக் குழுவிலும் அங்கத்துவம் வகித்தார். தினகரன் பத்திரிகையிலும் அவர் பணியாற்றிவந்தார். ஞாயிற்றுக்கிழமைகளில் வெலிக்கடை சிறையிலுள்ள கைதிகளைச் சந்தித்து அறிவுரைகள் கூறுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். 1970இல் ஓய்வுபெறும்வரை பல இடங்களில் பணியாற்றிப் பல மாணவர்களை உயர்நிலைப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் மணிவாசகர் சபையை 1948லும், காரைநகர் தமிழ்வளர்ச்சிக் கழகத்தை 1960லும் ஸ்தாபித்திருக்கிறார். இவை இன்று வரை சிறப்பாகச் செயற்படுகின்றன. பல்வேறு நூல்களை எழுதியும் பதிப்பித்தும் வெளியிட்டிருக்கிற இக்குருக்கள் தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஆழ்ந்த பயிற்சியும் புலமையும் மிக்கவர். மகாவித்துவான் சி.கணேசையரின் மாணவரான வைத்தீசுவரக்குருக்களை அகில இலங்கை கம்பன் கழகம் "மூதறிஞர்" என்று விருது வழங்கி கௌரவித்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் "கலாநிதி" பட்டம் வழங்கிப் போற்றியது.

தம் தந்தையார் நினைவாக, காரைநகரில் கணபதீசுவரக்குருக்கள் நூலகத்தை உருவாக்கியுள்ள குருக்களின் பணிகள் மகத்தானவை. மாபெரும் பணிகள் செய்த தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாருக்கு 1970ல் "சிவத்தமிழ்ச் செல்வி" என்று பட்டம் வழங்கி, அவரது நற்பணிச்சிறப்புக்களுக்கு ஊக்க சக்தியாக விளங்கியவரும் குருக்கள் அவர்களே. நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் புதல்வர் புலவர்மணி இளமுருகனாரைக் கொண்டு "ஈழத்துச்சிதம்பர புராணம்" பாடுவித்து அதனைப் பதிப்பித்தவர் குருக்கள் அவர்களே..

இன்றும் குருக்களின் வழிகாட்டலில் மார்கழித் திருவெம்பாவைக்காலத்தில் காரைநகரில் வருடம் தோறும் மாபெரும் மாணிக்கவாசகர் விழா நடக்கிறது. தமிழகத்தி லிருந்தும் இலங்கையின் பல்வேறு பாகங்களிலிருந்தும் அறிஞர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொள்கிறார்கள்.

எளிமையின் உருவமாக, என்றைக்கும் தனக்காக விழாவோ கௌரவமோ வேண்டும் என்றே எண்ணமே சிறிதுமற்ற செம்மையராக திகழ்ந்தவர் வைத்தீசுவரக்குருக்கள்.
குருக்கள் அவர்கள் சிறியோரையும் பாராட்டும் தன்மையினர். பண்பின் உறைவிடமான இவரின் தமிழ்ப்பணி நினைக்கும் தோறும் வியப்பளிப்பன.

குருக்களின் மனைவி சாரதாம்பாள். இவர்களுக்கு ஒரு மகனும், இரு மகள்மாரும் பிள்ளைகள். இறுதிக்காலத்தில் குருக்கள் தம் புதல்வர், புதல்வியருடன் கந்தரோடையில் வசித்துவரினும் காரைநகரோடு எப்போதும் தொடர்பில் இருந்தார். "குருமார்கள் தமிழுக்கு முதன்மை தருவதில்லை" என்று பலராலும் இன்று கருத்துச் சொல்லப்படும் சூழலில் குருக்கள் அவர்கள் செய்து வரும் பெருந்தமிழ்ப்பணியை அறிவது சாலச்சிறப்பானது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 97. யாழ்ப்பாணத்தில் சமூக நீதிக்குப் போராடிய கம்யூனிஸ்ட் இராமசாமி ஐயர்

### (29.12.1916 - 11.09.1961)

சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் சாதி வன்முறை, பெண் அடிமைத்தனம் என்பவற்றிற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் குரல் எழுப்பிய முக்கியமானவர்களில் ஒருவர் பிராமண சமூகத்தைச் சார்ந்தவர் என்பது கவனிக்கத்தக்கது. இவர் தனது சமய அடையாளங்களான நீறு பூசப்பட்ட நெற்றி, உச்சிக்குடுமி, மார்பில் அசைந்தாடும் பூணூல் என்பவற்றை மறைக்காமல் தனது அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்திய செயல், அன்றைய யாழ்ப்பாண சமூகத்தில் ஒரு புரட்சிகரமான நடவடிக்கையாகவே பார்க்கப்பட்டது. இப்புரட்சிவாதிதான் இராமசாமி ஐயர். யாழ்ப்பாணத்தில் மக்கள் மத்தியில் இவர் "கம்யூனிஸ்ட் ஐயர" என்ற பெயராலேயே அறியப்பட்டார்.

### பிறப்பு

இராமசாமி ஐயர் இலங்கையில் இந்துக்களுக்குப் புனித வழிபாட்டுத் தலமாகக் கருதப்படும் நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு அண்மையில் உள்ள ஓர் இல்லத்தில் 1916ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தையார் சுப்பிரமணியக் குருக்கள் நல்லூர் முத்து விநாயகர் கோயிலில் பூசை செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தார். இராமசாமி ஐயரின் தாயார் பொர் யோகம்மா என்பதாகும். ஐயருக்கு மீனாட்சி என்ற பெயரில் ஒரு சகோதரியும் இருந்தார்.

### கல்வியும் புதிய சிந்தனையும்

தந்தையார் பணிபுரித்த கோள்லுக்கு அருகில் இருந்த மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் இராமசாமி ஐயர் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றார். போதனை தமிழ் மொழியில் மாத்திரமே இங்கு வழங்கப்பட்டது. தனது மகன் ஆங்கில மூலம் கல்வி பெறவேண்டுமென்று விரும்பிய சுப்பிரமணியக் குருக்கள் இல்லத்திலிருந்து சிறிது தொலைவில் அமைந்துள்ள பரமேஸ்வராகக் கல்லூரியில் இராமசாமி கல்வியைத் தொடர ஏற்பாடு செய்தார்.

இக்கல்லூரியில் இராமசாமி ஐயர் மாணவனாக இருந்த காலத்தில், 1927ஆம் ஆண்டு, காந்தியடிகள் இலங்கைக்கு வருகைதந்தார். இந்த விஜயத்தின்போது காந்தியடிகள் யாழ்ப்பாணத்தில் பல மேடைகளில் தீண்டாமை ஒழிக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தினார். இவரது விஜயம் யாழ்ப் பாணத்தில் பெருமளவில் மாற்றத்தை ஏறபடுத்தியது என்று கூற இயலாது. எனினும், காந்தியடிகள் முன்வைத்த கருத்துக்கள் இராமசாமி ஐயர் முதலான சில மாணவர்களைச் சிந்திக்கத் தூண்டின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸ்வராக் கல்லூரியில் பயிலும் காலத்தில், ஐயர் சர்வதேச விவகாரம், அரசியல் என்பவற்றில் பெருமளவில் ஆர்வம் காட்டினார். ருஷ்யப் புரட்சியைத் தொடர்ந்து உலக அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள், காலனித்துவ நாடுகளில் நிகழும் விடுதலைப் போராட்டங்கள் என்பவற்றை இராமசாமி ஐயர் கூர்மையாக அவதானித்தார். அன்றைய யாழ்ப்பாண சமுதாயத்தில் தலைவிரித்துத் தாண்டவமாடிய தீண்டாமை என்ற கொடிய நோய் மாணவனான ஐயரின் இதயத்தை வாட்டியது.

இவர் மாணவனாக இருந்தபோது அரசியல், பொருளாதாரம், வரலாறு தொடர்பான நூல்ளையும் சஞ்சிகைகளையும் ஆர்வத்துடன் தேடி வாசித்தார். பரமேஸ்வராக் கல்லூரியில் ஆங்கிலம் கணிதம் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் குறிப்பிடத்தக்க ஆற்றல் படைந்த மாணவனாகத் திகழ்ந்தார். எனினும், பொருளாதார நெருக்கடி காரணமாக இராமாமி ஐயர் தனது படிப்பை இடை நிறுத்திக் கோயில் பூசகாரகப் பணிபுரியுலும் நிலைககுத் தள்.ளப்பட்டார்.

## திருமணமும் கட்சி வாழ்க்கையும்

1939ஆம் ஆண்டு இராமாமி ஐயர் கும்பக்கோணத்தைச் சேர்ந்த ருக்மணி அம்மாளைத் திருமணம் செய்தார். பிற்காலத்தில் ஐயர் பல இன்னல்களுக்கு மத்தியிலும் தாம் நடைபோட்ட முற்போக்குப் பாதையில் இருந்து விலகாமல் இருப்பதற்கு குக்மணி அம்மாள் வழங்கிய ஆதரவு பாரிய சக்தியாக அமைந்தது. சமூகத்தில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகளை அகற்ற வேண்டுமென்ற எண்ணம் ஐயரின் இதயத்தில். கல்லூரி மாணவனாக, இருந்த காலத்திலேயே குடி கொண்டது என்றபோதும் தனிமனிதனால் இதனை இலகுவில் சாதிக்க இயலாது என்பதையும் இவர் உணர்ந்திருந்தார். இந்தகைய நடவடிக்கையை முன்னெடுக்க ஓர் இயக்கம் அவசியம் என்பதையும் ஐயர் அறிந்து வைத்திருந்தார். இவருக்கும் இவரைப்போன்ற சிந்தனை படைத்த யாழ்ப்பாணததைச் சேர்ந்த வேறு சிலருக்கும் இயக்கம் ஒன்றில் ஈடுபட்டு இயங்கும் சந்தர்ப்பம் 1946ஆம் ஆண்டுதான் சாத்தியமானது.

கொழும்பிலிருந்து இயங்கிய கொம்யூனிஸ்ட் கட்சித் தலைமைப் பீடம் அதன் ஆரம்பகால உறுப்பினரான தோழர் மு. கார்த்திகேசனை யாழ்ப்பாணத்தில் கட்சிக் கிளையைத் தொடங்கும் பொருட்டு 1946ஆம் ஆண்டு அனுப்பிவைத்தது. இங்கு கட்சிக்கிளை தொடங்கப்பட்டபோது ஐயர் உட்பட ஏழு பிரதேச வாசிகளே அங்கத்தவர்களாகச் சேர்ந்தனர் என்பது கவனிக்கத்தக்கது. இந்த ஏழு அங்கத்தவர்களில் பிற்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கிய தோழா எம். சி. சுப்பிரமணியம் மற்றும் ஐயருடன் நெருக்கமாகப் பழகிய அன்றைய யாழ்ப்பாணத்தில் அறிவுஜிவியாகக் கருதப்பட்ட தோழர் எஸ் கே. கந்தையா ஆகியோரும் அடங்குவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சி அங்கத்தினர் மிருந்த கட்டுப்பாட்டுடன் அதன் வளர்ச்சிக்குப் பங்காற்ற வேண்டுமென்பது ஐயரின் நிலைப்பாடாகும். கட்சி எடுக்கும் முடிவுகளை நடைமுறைப் படுத்துவதில் இவர் முழுமூச்சுடன் ஈடுபட்டார். கட்சி அங்கத்தவராக இருந்த காலத்தில், ஒரு சிலரைப்போல் அங்கத்துவ அட்டை சுமப்பவராக மாத்திரம் இருக்கவில்லை. சாதாரண கட்சி ஆதரவாளர்களுடன் சேர்ந்து பிரச்சாரக் கூட்டங்களுக்கான சுவரொட்டிகளை ஒட்டுதல், கட்சிப் பத்திரிகையைப் பொதுமக்கள் கூடும் இடங்களில் விற்பனை செய்தல் முதலிய கடமைகளிலும் பங்குபற்றினார்.

யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக் கிளை தொடங்கப்பட்டபோது, ஆங்கில அறிவற்று ஆதரவாளர்கள் மார்ச்சியச் சிந்தனையைப் புரிந்துகொள்ள போதிய ஆக்கங்கள் தமிழ் மொழியில் இருக்கவில்லை. இக்குறைபாடு நிவர்த்தி செய்யபடவேண்டுமென அன்று வலியுறுத்தியவர்களில் முக்கியமானவர் தோழர் இராமசாமி ஐயர். 1948ஆம் ஆண்டு ஐயரின் கோரிக்கையை நடைமுறைப்படுத்த கட்சிக்கிளை முன்வந்தது. அந்த ஆண்டு 100 ஆண்டுகளுக்கு முன்னர் கார்ல் மார்க்ஸ் மற்றும் அவரது தோழர் ஏங்கல்ஸ் ஆகியோரால் "கம்யூனிஸ்ட அறிக்கை" வரையப்பட்ட நிகழ்வைச் சிறப்பாகக் கொண்டாட யாழ்ப்பாணக் கட்சிக்கிளை முடிவெடுத்தது. இந்த நிகழ்வின்போது அறிக்கையின் தமிழ் மொழிபெயர்ப்பொன்றை வெளியிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. மொழிபெயர்ப்புப் பணி தோழர்கள் ஐயர் மற்றும் எஸ். கே. கந்தையா ஆகியோரிடம் விடப்பட்டது. இவர்களால் சிறந்தமுறையில் மொழிபெயர்க்கப்பட்ட இந்த அறிக்கை குறிப்பிட்ட நிகழ்வின்போது நூல் வடிலில் யாவருக்கும் கிடைக்கக்கூடியதாக இருந்தது.

யாவருக்கும் கல்வி

ஒரு சமுதாயம் முன்னேறுவதற்குக் கல்வி யாவர்க்கும் கிடைக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டில் இராமசாமி ஐயர் உறுதியாக இருந்தார். இந்த நோக்கத்துடன் தனது இல்லத்தை ஒரு வித்தியாலயமாக மாற்றினார். அண்மையில் வாழும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு விஞ்ஞானம், கணிதம் முதலிய பாடங்களைத் தனது இல்லத்தில் இலவசமாகப் போதித்தார். இதனால் சமுதாயத்தில் இவரின் மதிப்பு பன்மடங்கு உயர்ந்தது.

ஏற்றத்தாழ்வற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்குப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பது ஐயரின் கருத்து. அவரின் கருத்துப்படி மக்களைப் புத்தகப் பிரியர்களாக மாற்றுவதும், இந்த நடவடிக்கையின் ஓர் அம்சமாகும். வாசகரின் சிந்தனையைத் தூண்டக்கூடிய நூல்கள் அவர்களின் கைகளை எட்டுவதற்கு வழிவகுப்பது சமூகச் சீர்திருத்தவாதிகளின் கடமை என்ற எண்ணம் இவரது இதயத்தில் குடி கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் புகையிரத நிலையமேடையில் ஐயரால் நடத்தப்பட்ட புத்தகசாலை அவரின் இதயத்தில் தோன்றிய எண்ணத்தின் வெளிப்பாடாகவே பார்க்கப்படவேண்டும். இப்புத்தகசாலையில் விஞ்ஞானம்., வரலாறு, சமயம் முதலிய நூல்களுடன் கார்ல் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் முதலியோரின் ஆக்கங்களும் விற்பனைக்கு இருந்தன. இச்செயல் மூலம் பல வாசகர்கள் இதுவரை காலமும் தெரிந்திராத விடயங்களை அறிந்துகொள்ள இராமசாமி ஐயர் வழிவகுத்தார்.

## ஜனநாயகத்தில் பற்று

ஐயர் ஒரு சிறந்த ஜனநாயகவாதியாக அன்று விளங்கினார். மக்கள் ஜனநாயகம் என்ற பாதையில் ஐயர் ஏறுபோல் நடைபோட்டார். பேச்சுச் சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை வார்ததைகள் மூலமும், தனது செயற்பாடு மூலமும் வெளிப்படுத்தினார். யாழ்ப்யாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக்கிளை தொடங்கப்பட்ட சில ஆண்டுகளில், திரு ஜி. ஜி. பொன்னம்பலத்தின் தலைமையில் இயங்கிய தமிழ் காங்கிரஸ் கட்சியில் பிளவு தோன்றியது. இதற்குக் காரணம் பொன்னம்பலம் மலைநாட்டுத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய பிரஜா உரிமையைப் பறிக்கும் முயற்சியில் ஈடுபட்ட அன்றைய அரசாங்கத்திற்குத் துணை நின்றமையாகும். ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் துரோகச் செயலைக் கண்டித்து தமிழ் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். ஜே. வி. செல்வநாயகம், வனனியசிங்கம் ஆகியோர் அக்கட்சியிலிருந்து வெளியேறினர். இவர்கள் தமிழரசுக்கட்சி என்ற பெயரில் ஒரு புதிய கட்சியைத் தொடங்கினர். புதிய கட்சியின் கொள்கைகளை விளக்கும் நோக்கத்துடன் முதலாவது பிரசாரக் கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்தத் தீர்மானித்தனர்.

குறித்த நாளில் யாழ்ப்பாணத்தில் கூட்டம் தொடங்கியபோது அதனைக் குழப்பம் முயற்சியில் தமிழ் காங்கிரஸ் கூலிப்படையினர் ஈடுபட்டனர். இச்செய்தி ஐயரின் காதுகளுக்கு எட்டியது. ஐயர் கம்யூனிஸ்ட் கட்சி வாலிபர் அணியைச் சார்ந்த சிலரை அழைத்துக்கொண்டு கூட்டம் நடைபெறும் இடத்திற்குச் சென்றார். இங்கு கூட்டத்தைக் குழப்பும் செயலில் ஈடுபட்ட சுலிப்படையினரைக் கம்யூனிஸ்ட் வாலிபர்கள் தாக்கிப் பல திசையிலும் சிதறி ஓடவைத்தனர். அத்துடன் ஐயரும் வாலிபர்களும் கூட்டம் முடியும்வரை அவ்விடத்தில் நின்று ஓர் அமைதியான சூழலை புதிய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு உருவாக்கிக் கொடுத்தனர் இச்சம்பவம் மூலம் இராமசாமி ஐயரின் பண்பான மனமும் நீதியை நிலைநாட்டப் போராடும் குணமும் யாழப்பாணத்திற்கு அப்பாலும் நெரியவந்தது.

## தோழர் ஜீவானந்தமும் ஐயரும்

இலங்கையைச் சேர்ந்த இந்து ஐயரின் பெருமை சென்னையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவில் பேசப்பட்டது. இவர் தோழர் எஸ். கே. கத்தையாவுடன் இணைந்து, 1948ஆம் ஆண்டு தமிழ் மொழியில் வெளியிட்ட "கம்யூனிஸ்ட் அறிக்கை" சென்னையிலும் பலரின் கைகளுக்குக் கிட்டியது. இந்த மொழிபெயர்ப்பின் சிறப்பை அங்கு பலர் பாராட்டியமையும் இவரின் பெருமை சென்னையில் பேசப்படுவதற்கு ஒரு காரணமாக அமைந்தது.

அத்துடன் இராமசாமி ஐயர்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் ப. ஜீவானந்தம் வைத்திருந்த பாரிய மதிப்பை. சென்னையில் பலர் தெரிந்து வைத்திருந்தமையும்.. இன்னொரு காரணமாகும். இவ்விரு கம்யூனிஸ்ட் கட்சிகளிடையே மலர்ந்த தோழமையுடன் கூடிய நட்பு எதிர்பாராத விதமாக ஏற்பட்டதாகும். 1948ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டு முடிவுகள் அன்றைய ஆட்சியாளர்களான நேரு அரசாங்கத்திற்கு ஏற்றதாக அமையவில்லை. அதனால் அந்த அரசாங்கம் அங்கு வாழ்ந்த கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்மீது அடக்குமுறையை அவிழ்த்துவிட்டது. இந்த அடக்குமுறையே தோழர் ஜீவானந்தம் யாழ்ப்பாணத்தில் ஐயருடன் தொடர்புகொள்ள வழிவகுத்தது.

கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் பலர் இந்தியாவில் கைதுசெய்யப்பட்ட நிலையில் தோழர் ஜீவானந்தம் எந்த நேரமும் கைதுசெய்யப்படலாம் என்ற நிலை அங்கு தோன்றியது. கைதுசெய்யப்பட்டால் தொடர்ந்து கட்சி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது என்பதை உணர்ந்த தோழர் ஜீவானந்தம் மற்றையோரின் வேண்டுகோளுக்கு இணங்கி, இலங்கை வந்து யாழ்ப்பாணந்தில் தலைமறைவாக வாழ்ந்தார்.

யாழ்ப்பாணத்தில். கட்சியின் வளர்ச்சிக்கு ஐயர் வழங்கய கடுமையான உழைப்பை அங்கு தலைமறைவாக இருந்த தோழர் ஜீவா காணக்கூடியதாக இருந்தது. உலக அரசியல் விவகாரம், மார்க்சிய சித்தாந்தம் என்பவற்றில் இராமசாமி ஐயருக்கு இருந்த. ஆழந்த அறிவு ஜீவாவை அதிசயிக்க வைத்தது. இக்காலத்தில் ஐயருடன் ஏற்பட்ட தட்பு அவர் மறையும்வரை தோழர் ஜீவாவின் இதயத்தில் நிலைத்து நின்றது.

இலங்கையைச் சேர்ந்த தொழிற்சங்கவாதியான நீர்வை பொன்னையன் தனது நினைவலைகள் என்ற நூலில் இதனைப் பதிவு செய்துள்ளார். நீர்வை பொன்னையன், 1950ஆம் ஆண்டளவில் பட்டப்படிப்பை மேற்கொளவதற்கு இந்தியா சென்றிருந்தபோது. சென்னனயில் தோழர் ஜீவானந்தம் அவர்களைச் சந்தித்துள்ளார். இச்சந்திப்பு ஜனசக்தி பத்திரிகைக் காரியாலயத்தில் நிகழ்ந்தது. அத்தருணம் தோழர் ஜீவானந்தம். யாழப்பானத்தில் அறிமுகமான ஐயர் உட்பட சிலரைப்பற்றி ஆவலாகத் தன்னிடம் விசாரித்ததாக நீர்வை பொன்னையன் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி யாத்திரை

சமய இன அடையாளங்கள் ஒருவரின் முற்போக்கு நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருக்கமாடடாது என்பதற்குச் சிறந்த உதாரணம் இராமசாமி ஐயரின் வாழ்க்கை. தான் வாழ்ந்த சமுதாயத்தில் காணப்பட்ட சாதி வன்முறைகளைக் கண்டு அனல்கக்கும் எரிமலையைப்போல் பொங்கி எழுந்தவர் கம்யூனிஸ்ட் ஐயர். இவர் தான் வாழ்ந்த சமுதாயத்தில் யாவருக்கும் கல்வி கிட்டவேண்டுமென்ற கருத்தை விதைப்பத்ல் முன்னணியில் நின்றார். பாழப்பாணத்தில் மார்க்சீயச் சிந்தனையைப் பரப்புவதிலும், கட்சியைக் கட்டி எழுப்பும் பணியிலும் அயராது ஈடுபட்டார். இம்முயற்சியின்போது பிற்போக்குச் சக்திகளால் இவர் தாக்கப்பட்ட நிகழ்வுகளும் உண்டு.

இத்தகைய இடையூறுகளுக்கு மத்தியிலும் தனது கொள்கையைக் கைவிடாது வாழ்ந்த இராமசாமி ஐயர் அவரது 45ஆம் வயதில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டார். யாழ்ப்பாண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஐயர், சிகிச்சை பலன் தராத நிலையில் 1961ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் திகதி காலமானார். இவரது மறைவு யாழ்ப்பாணத்தில் இடதுசாரி இயக்கத்திறகுப் பேரிழப்பாக அமைந்த்து.

இராமசாமி ஐயர் - ருக்மணி அம்மாள் தம்பதியினருக்கு ஆறு பிள்ளைகள், ஒரே மளான கோகிலாம்பாள் வரதராஜன் ஒரு பட்டதாரி. கணவர் வரதராஜன் பிற்காலத்தில் ஒரு பிரசித்திபெற்ற விசேட வைத்தியராக அவுஸ்திரேலியாவில் பணிபுரிந்தார். ஐயரின் மகன்களான தியாகராஜன், சுவாமிநாதன், மகாலிங்க ஐயர், மீனாட்சிசுந்தரம், சுப்பிரமணியம் ஆகியோர் சிறந்த கல்விமான்கள். இலங்கையில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக வெளிநாடுகளில் குடியேறி தாம் நிபுணத்துவம் பெற்ற. மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பணிபுரிந்தனர். அவுஸ்திரேலியாவில் வாழ்ந்த ருக்மணி அம்மாள் 2019ஆம் ஆண்டு (சிட்னி) காலமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ௭8. திருக்கேதீஸ்வரம்
## ச. சுப்பிரமணிய பட்டர்
## (18.01.1917 - 14.09.2002)

தென்னிந்தியாவில் திருநெல்வேலியில் ஆதி சைவ மரபில் சதாசிவபட்டருக்கும் முத்தம்மாளுக்கும் பிறந்து உரிய காலத்தில் உபநயனம் பெற்று காஞ்சிபுரத்தில் ஏகாம்பரேஸ்வரர் கோவில் குருகுலத்தில் ஆரம்பக் கல்வியையும் வேத பாடத்தையும் கற்று, பின்னர் பழநி சித்தாந்த சரபம் ஈசான சிவாச்சாரிய சுவாமிகளை தன் வித்தியாகுருவாகப் பெற்று அவரது பாடசாலையில் வேதம் ஆகமம் சித்தாந்த சாஸ்திரங்களை ஐயம் தெளிவறக் கற்று அந்த பாடசாலையிலேயே குருவுக்குக் கீழ் ஆசிரியத்தொழில் செய்துவரலானார். பின் அந்த குருவினால் ஆசாரியாபிஷேகத்தில் ஈசான சிவாச்சாரியார் எனும் தீக்ஷாநாமம் பெற்று, திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் தமது சகோதரரோடு சேர்ந்து பரம்பரை ஸ்தானீகத்தை ஏற்று நடத்திவந்தார்,

வண்ணை வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரர் ஆலயத்தில் அவர் தமையனார் முத்துச்சாமி பட்டரும், தந்தையாரும் உற்சவாதிகளை ஏற்று நடத்தி வந்த காலத்தில் (நாற்பதுகளின் பிற்பகுதிகளில்) அவ்வாலயத்தில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தின்போது இவரும் ஏனைய சிவாச்சாரியார் களோடு மேற்படி கிரியைகளில் விநாயகர் யாகத்தை ஏற்று, பங்கு பற்றினார்.

இவரின் விநயத்தையும் திறமையயும் பணிவையும் அறிந்து அச்சுவேலி குமாரசுவாமி குருக்கள் தாமே இவருக்கு சாதகாசிரியராக இருந்த பெருமைபெற்றவர். இவரின் திறமையை அறிந்த கந்தப்ப செட்டியார் அன்று தொடக்கமே மேற்படி ஆலயத்தில் இவரை பிரதம குருக்களாக்கினார். இவருடன் சிவஸ்ரீ கைலாசநாத குருக்கள் (பாப்பா குருக்கள்), சிவஸ்ரீ இராமநாத குருக்கள் ஆகியோர் ஆஸ்தான குருவாக இருந்தார்கள். பின் 1954ல் பசுபதி செட்டியார் இவரை திருக்கேதீஸ்வரம் அழைத்துச்சென்று அங்கு விசேட குருவாக நியமித்தார். பின்னர் தலைவராக இருந்த சேர் கந்தையா வைத்யநாதனிடம் குமாரசுவாமிக் குருக்கள் இவரது வேதாந்த சித்தாந்த திறமைகளை எடுத்தியம்ப, நித்திய பூசகராகவும் பிரதம குருவாகவும் நியமித்தார். சுமார் 35 ஆண்டுகள் நித்திய நைமித்திக பூஜைகளை கௌரியம்பாள் சமேத கேதீச்சரப் பெருமானுக்கு அன்போடும் பயபக்தியோடும் நடத்திவந்தார்.

1965ம் ஆண்டில் பாலாவி தீர்த்தக்கரை பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம் இவர் சாதகாசிரியராக இருக்க நடத்தி வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னரும் பிரபல சிவாச்சாரியார்களோடு இலங்கையில் பல பெரிய கோவில்களின் கும்பாபிஷேகங்களிலும் மகோற்சவங்களிலும் குருவாகவும் சாதகாசிரியராகவும் பங்கு பற்றினார்.

மேலும் இவர் தமது குடும்பத்தாருடன் தங்கியிருந்த திருஞானசம்பந்தர் மடத்தில் வருஷாவருஷம் சிவராத்திரியின் போது பல நூற்றுக்கணக்கான சைவ அடியார்களுக்கு சிவதீக்ஷை கொடுத்து வந்ததை இவரை அறிந்த எவரும் இலகுவில் மறக்கமாட்டார்கள்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அவதரித்த இடமாகிய சீர்காழியைச் சேர்ந்த திருக்கோலக்கா சிவஸ்ரீ இராமநாத சிவசாரியார் அவர்கள் திருக்கேதீஸ்வரத்தில் மஹோற்சவம், சிவராத்திரி போன்ற காலங்களில் இவருடன் சேர்ந்து பூஜைகளை நடத்தும்போது இவரைப் பற்றி வியந்து சிறப்பாகவும், பெருமையாகவும் கூறிக்கொண்டு இருப்பார்கள். சிவராத்திரி லிங்கோற்பவ காலத்தில் இவரது லிங்கார்ச்சனையும் வேதமந்திர ஒலியும், திருவாதிரையன்று நடேசப் பெருமான் தீபாராதனை மந்திரமும் கேட்போர் உள்ளத்தை நெகிழ வைக்கும்.

"ஆவாகனாதி காலேது ஆசாரியோ குரு ரூப திருத்
அபிஷேகாத்யலங்காரே த்வாசார்யோ மாத்ரு ரூபவான்"

என்ற ஆகம வாக்கியப்படி கௌரியம்பாளை தாயாகவும், குழந்தையாகவும், யௌவனமாகவும், விருத்தாப்பியமாகவும், சந்தனக்காப்பிட்டு, முல்லை மொட்டுக்களால் அலங்காரம் செய்து பார்ப்பதில் ஆத்மதிருப்தி கொண்டவர். நம்முன்னோரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் நமக்கு நற்கதியடைய சிவபூசையைத் தவிர வேறொன்றுமில்லை என்னும் முடிவை, "முப்போதும் திருமேனி தீண்டுவார்", என்று கூறி எப்போதும் சிவபூஜையைச் செய்யக்கட்டளையிட்டார். அதன்படி, பாணலிங்க சிவபூசையை மரண பரியந்தம் தவறாது செய்துவந்தார். பின் உடல் நலக் குறைவால் அதனை மருமகனிடம் ஒப்படைத்தார்.

இலங்கையில் பிராமண சமூகத்தில் அனேகமானோர், ஆகம வைதிகக் கிரியைகளில் வல்லவரான இவரது கையால் தமது இல்லங்களில் ஆசாரியாபிஷேகம், உபநயனம், சீமந்தம், விவாஹம், ஆயுஷ்ஹோமம் முதலியவற்றைச் செய்விப்பதைப் பெருமையாகக் கொண்டிருந்தனர்.

படுத்த படுக்கையாக இருந்தபோது தமது குலதெய்வமான சாஸ்தாவின் பெயரில் "சுவாமியே சரணம் ஐயப்பா" என்றும், "கேதீஸ்வரா, கேதீஸ்வரா" என்றும் எந்நேரமும் உச்சரித்தபடியும், நினைவு பிறழ்ந்தபோது தன் முன்னோரோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் எல்லோரும் எதிரில் நிற்பது போன்று பேசியபடியும் கண்களை மூடிக்கொண்டு "யானை வருகின்றது சந்தனத்தை பூசு, பூஜை சாமன்களை எடுத்து வை. யானை பாராட்டுப் பத்திரம் தருகின்றது, பிள்ளையார் வருகின்றார், கற்பூரத்தைக் காட்டு" என்றெல்லாம் சொல்லிக்கொண்டு இருப்பார்.

ஆயிரம் பிறை கண்ட உத்தமனார், கௌரியம்பாள் சமேத கேதீஸ்வரநாதப் பெருமானை உள்ளன்போடு பூஜித்தவர், தனது கடைசி நேரத்தில் மரணபய வேதனையின்றி ஆவணி மாத வளர்பிறை, ஆவணி மூல அஷ்டமி திதியில் பகல் ஒன்றேகால் மணியளவில் பிள்ளைகள், பேரப்பிள்ளை களிடம் துளசி தீர்த்தம் பெற்று, கர்ணோபதேசம், ஸ்ரீ ருத்ர பாராயணம் கேட்டபடியே சிவச்சாயுச்சியமடைந்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 99. யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை
## ஆகம பிரவீண
## பி. பா. பஞ்சாட்சரக் குருக்கள் J.P.
## (23.10.1917 - 21.09.1991)

தஞ்சாவூரிலிருந்து இலங்கை வந்து குடியேறிய அம்பலவாண பட்டரின் பரம்பரையில் சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் மீனாம்பாள் அம்மா தம்பதிகளின் புதல்வராக இவர் பிறந்தார்.

சம்ஸ்கிருத மொழியறிவும், வேத சிவாகம அறிவும் நிரம்பப் பெற்ற சிவாசாரியராகிய இவர் "தியானார்ச்சனாகதம்பம்" என்ற நூலை அரிதின் முயன்று தொகுத்து இரண்டு பதிப்புக்கள் வெளியிட்டிருக்கிறார். மிகப்பல தெய்வங்களுக்கான தியானங்களும் அர்ச்சனைகளும் அடங்கிய இந்நூல் இன்றளவும் அர்ச்சகர்களின் பாவனையிலுள்ளது குறிப்பிடத்தக்கது.

சிவஸ்ரீ பி. பா. தியாகராஜக் குருக்கள் இவரது சகோதரராவார்.

## 100. சங்கீதக் குருக்கள்
## துணைவி செ. மஹேஸ்வரக் குருக்கள்
## (04.03.1917)



வட்டுக்கோட்டை துணைவி கிராமத்தில் 04.03.1917இல் பிரம்மஸ்ரீ செல்லையா ஐயர் கமலாம்பிகை தம்பதிகளின் மகனாக பிறந்தார். தமது குலதெய்வமாகிய அரசடி விநாயகர் பணியில் எந்தவித ஊதியமும் இல்லாமல் தவப்பணியாக அறுபது வருடங்களுக்கு மேல் ஈடுபட்டிருந்தார். பல ஆலயங்களில் மஹோற்சவங்கள், கும்பாபிஷேகங்கள் செய்துள்ளார்.

இவரது முக்கியமான சிறப்பம்சம், தமது பண்ணிசையாலும், கானங்களாலும் பக்தர்களை மெய்மறக்கச் செய்வதாகும். திருமுறை ஓதுதல் இவரது மிக விருப்பமான பணி. நல்லூர் ஆலயத்தில் கந்தரனுபூதி பாடுவதில் அடியார்களோடு ஈடுபடுவார். புராண படன வித்தகரும்கூட.

பிள்ளைகள் மூவர். மூவரும் சிவாசாரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும் நல்ல நிலையில் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 101. மாவிட்டபுரம்
## கு. பாலசுந்தரக் குருக்கள்
## (14.07.1918 - 08.03.1977)



சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரத்திலே, பெரியமனத்துளார் பரம்பரையில் சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் - ருக்மணி அம்மாள் தம்பதிகளுக்கு மகனாக 14.07.1918இல் பிறந்தவர்தான் சிவஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள்

இவர் பாவலர் நவநீதகிருஷ்ணபாரதி அவர்களிடம் தமிழ், சம்ஸ்கிருதம் இரண்டையும் துறைபோகக் கற்றார். லண்டன் பல்கலைக் கழகப்பரீட்சையில் இவ்விரு மொழிகளிலும் கலைமாணிப் பட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் வேத சிவாகமங்களையும் சைவ சித்தாந்தத்தையும் நன்கு கற்றுணர்ந்தார். பட்டப் படிப்புக்காக ஆங்கிலம், பாளி ஆகிய மொழிகளையும் கற்றதனால் அம்மொழிகளிலும் பாண்டித்தியமுடையவராக இருந்தார்.

நிறைய வாசிப்பவராகவும் ஆராய்ச்சி செய்பவராகவும் தமது வாழ்க்கையை அமைத்துக்கொண்ட இவர் தமது இல்லத்தில் அருமையானதொரு நூலகத்தை வைத்திருந்தார். பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார். சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலும் ஆசிரியராக இருந்ததோடு தமது இல்லத்திலும் பலருக்கும் பாடம் சொல்லிவந்தார்.

அகில இலங்கை வேதாகம சைவசித்தாந்த சபைத் தலைவராகவும், அகில இலங்கை சைவாநுட்டான சபை உபதலைவராகவும் அமர்ந்து பணியாற்றினார். வைதிக சைவம் என்பதில் உறுதியாக இருந்த இவர் வைதிக எதிர்ப்பாளர் களைக் காணவும் விரும்பார். இவரது நூல்நிலையத்திற்கே "வேதாகம நூல்நிலையம்" என்பதே பெயராக இருந்தது.

'திருவாதிரைச் சிறப்பு', 'மஹாசிவராத்திரி விரத விளக்கம்' 'வேதசாரமே சைவசமயம்' என்பன இவரது வெளியீடுகளில் குறிப்பிடத்தக்கன.

இவர் திட்டமிட்டு வைத்திருந்து, ஓய்வு காலத்தில் செய்யவெனக் கனவுகண்ட பல வைதிகப் பணிகளை நிறைவேற்ற முடியாமலே 08.03.1977இல் இறையடி சேர்ந்துவிட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 102. மணி ஐயர் எனப்படும் சி. எஸ். மணிபாகவதர் (ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள்)

(08.02.1918 - 10.04.1981)

கந்த புராண கலாசாரம் என சிறப்பிக்கப்படும் யாழ்ப்பாணத்தின் சைவப் பாரம்பரியத்தின் நிறுவன மயப்பட்ட கட்டமைப்பாக நல்லை ஆதீனம் திகழ்கின்றது. இத்தகு பெருமையுடைய நல்லை ஆதீனத்தின் முதலாவது குருமகா சந்நிதானமாக திகழ்ந்தவர்தான் பெருமதிப்புக்குரியவரும், போற்றுதலுக்குரியவருமான ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள்.

ஈழத்து இலக்கியத்தின் பிதாமகர்களாகத் திகழ்ந்த காசிவாசி செந்திநாதையர், தொல்காப்பியக் கடல் என்று போற்றப்பட்ட மகாவித்துவான் கணேசையர் ஆகியோரது பேரனாக யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை செல்லையா ஐயர், கனகாம்பாள் தம்பதியரின் புதல்வனாக இம்மண்ணிலே 08.02.1918இல் அவதரித்தான் சிவசுப்பிரமணிய ஐயர் எனும் சிறுவன். கருவிலே திருவுடையவனாகத் திகழ்ந்த சிவசுப்பிரமணிய ஐயர், வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூர் போன்ற பிரபல பாடசாலைகளில் கல்வி கற்றார். இளமையில் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய சிவசுப்பிரமணிய ஐயரின் மனம் அன்றைய காலங்களில் இன்னிசை விரிவுரைகளை ஜனரஞ்சகமாக செய்வதில் பேர் பெற்று விளங்கிய சங்கர சுப்பையர் சுவாமிகளின் மீது ஈடுபாடு கொள்ளத் தொடங்கிற்று, சங்கர சுப்பையர் இன்னிசை விரிவுரை நிகழ்த்தச் செல்லும் இடமொல்லாம் சிவசுப்பிரமணிய ஐயரும் நிழல்போல தொடர்ந்து சென்றார். சங்கர சுப்பையரும் இவரின் அதீத ஈடுபாட்டைப் பார்த்து தன் வித்தைகளைக் கற்றுக் கொடுத்தார்.

தன் 18வது வயதில் இன்னிசை விரிவுரை நிகழ்த்த ஆரம்பித்த சிவசுப்பிரமணிய ஐயர், சிறிது காலங்களிலேயே சி. எஸ். மணிஐயர் எனும் பெயரில் மிக விரைவாகவே பிரபல்யம் அடைந்தார். நடனம். நாடகம், ஓவியம் போன்றவற்றிலும் கைதேர்ந்த சி. எஸ் மணிஐயர் தன் முறைப்பெண்ணான யோகாம்பாள் என்னும் நங்கையை மணந்து முருகானந்தசர்மா எனும் புதல்வனைப் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் மனம் லௌகிக வழியில் ஒட்டவில்லை. நிலையான பேரின்பத்தை தேடத் தொடங்கினார். இவ் வேளையில் மதுரை ஆதீனத்தின் தொடர்பும் கிடைத்தது. தமிழகத்தில் இவர் பிரபல்யம் அடையவே மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கும் இன்னிசை விரிவுரையை நிகழ்த்த அழைக்கப்பட்டார். சி. எஸ் மணிபாகவதர் என்று பிரபல்யமான இவர் தொலைக்காட்சி மற்றும் வானொலிகளில் நன்கு அறியப்பட்டவராகத் திகழ்ந்தார். இன்றைய மும்பையின் மாதுங்காவில் இவர் ஆற்றிய இன்னிசை விரிவுரை உலகளவில் வரவேற்பைப் பெற்றது.

புகழின் உச்சியில் கொடிகட்டிப் பறந்தாலும் மீண்டும் மீண்டும் இவர் மனம் தத்துவத் தேடல்களிலேயே ஈடுபடலாயிற்று. அதன் பயனாக 1966இல் இல்வாழ்வை துறந்து மதுரை ஆதீனத்திடம் மந்த்ரோபதேசமும் காஷாயமும் பெற்றார். அப்பொழுது மதுரையில், 291ஆவது பட்டம் சந்நிதானமாக விளங்கியவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்ததேசிக பரமாசாரியர். அவர் பூர்வாசிரமத்தில் இலங்கை - கொழும்பில் வாழ்ந்தவர். மணி ஐயர் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் என தீட்சா நாமம் கொண்டு அழைக்கப்படலானார்.

யாழ்ப்பாணம் வந்த சுவாமிகளை யாரும் வரவேற்கவில்லை. கட்டிய மனைவி பிள்ளைகள் தவிக்கவிட்டு துறவறமா? எனப் பலத்த விமர்சனத்தை எதிர்கொண்டார். யாழ்ப்பாணத்து பிராமணர் மத்தியில் புரட்சிகரமான கருத்துக்களை விதைத்தார். நல்லூரில் ஆதீனத்தைத் தொடங்கினார். சிறிய விதை பெருவிருட்சமாக மாறியது. புராணபடன வகுப்புக்கள். சைவசமய தீட்சைகள், குருபூசைகள், யோகாசனம், சித்தாந்த வகுப்புக்கள், மகாநாடுகள், விழாக்கள் என நல்லை ஆதீனம் தன்னை நிலைநிறுத்திக்கொண்டது. ஈழத்தில் தமிழ்நாட்டு ஆதீன மரபுகளை ஒட்டி அமைக்கப்பெற்ற முதலாவது ஆதீனம் இதுவே!

அடுத்த ஆதீன சந்நிதானமாக வரக்கூடியவரைத் தேடிக்களைத்த தம்பிரான் சுவாமிகள் தன் அணுக்கத் தொண்டராய் இருந்த சுந்தரலிங்கம் எனும் சிறுவனை இளவரசுப் பட்டம் கட்டினார். அச்சிறுவனே இரண்டாவது குருமகா சந்நிதானம். 1981ல் மகாசமாதியடைந்த சன்னிதானம் அவர்களது குரு மூர்த்தம் நல்லூர் திருவீதியில் திகழ்கிறது. தற்போது குறித்த நல்லையாதீனத்தில் 2ஆவது குரு மகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரியர் விளங்கி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 103. கி. லட்சுமண ஐயர்

(10.05.1918 -)

ஐயர் அவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள பலாலி என்ற குக்கிராமத்தில் பிறந்தவர். கல்வியில் சுயமுயற்சியால் முன்னேறி புலமைப்பரிசில் பெற்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் அதன்பின்னர் காசிப் பல்கலைக்கழகத்திலும் பயின்றவர். காசி இந்துப் பல்கலைக் கழகத்தில் பயின்ற காலத்தில் அப்பல்கலைக்கழகத்தில் இந்திய தத்துவஞானம் பற்றிய முழுமையான எந்தவொரு தமிழ் நூலும் இல்லாதது அவருக்குக் கவலையூட்டியது.

தனது பட்டப்படிப்பை முடித்து இலங்கை திரும்பியபின் இந்திய தத்துவஞானம் பற்றிய கட்டுரைகளை எழுதத் தொடங்கினார். அக்கட்டுரைகள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டன. அதன்பின்னர் அக்கட்டுரைகள் தமிழகத்தில் 'இந்திய தத்துவஞானம்' என்ற மகுடத்தில் நூலாக்கப்பட்டன. இந்நூல் இலங்கை, தமிழ்நாடு அரசினர்களின் பரிசில்களையும் பாராட்டுதலையும் பெற்றது.

இலங்கையில் அவர் இருபது வருடங்கள் தமிழாசிரியராகப் பணிபுரிந்தவர். றோயல் கல்லூரியில் அவர் ஆசிரியராக இருந்தபோது பேராசிரியர் க.கைலாசபதி, நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன், முன்னைநாள் அமைச்சர் டி. எம். சுவாமிநாதன் ஆகியோர் அவரது மாணவர்களாக இருந்தனர். மொழிபெயர்ப்புத் திணைக்களத்தின் உயர் அதிகாரியாகவும் கடைசியாக கல்வித்திணைக்களத்தின் வித்தியாதிபதியாகவும் பணிபுரிந்தவர்.

மொழியை எவ்வாறு செழுமையாகக் கையாளலாம் என விளக்குவார். தமிழைப் பிழையறப் பேசவும் எழுதவும் வேண்டும் என்பதில் அவர் கருத்துடன் இருப்பார். ஐயரவர்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் இருந்த காலங்களில் எங்கு தமிழ்ப்பிழை கண்டாலும் அதனைத் திருத்தமுயற்சி எடுப்பார். திருச்சி விமான நிலையத்தில் அறிவிப்புப் பலகையில் குற்றம் கண்டு மேலதிகாரி ஒருவரைக்கொண்டு அதனைத் திருத்து வித்தவர். சென்னையில் இருந்த காலத்தில் 'தூரதர்ஷன்' அறிவிப்பாளர்களின் உச்சரிப்பு, சொற்பிரயோகம் என்பவற்றில் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டி திருத்த வழிசெய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பத்திரிகைகள் பலவற்றில் தமிழ்வழக்கில் காணப்படும் தவறுகள்பற்றி பல கட்டுரைகளை எழுதினார்.

இவரது மனைவி திருமதி பாலம் லக்ஷ்மணன் அவர்களும் காசி பல்கலைக்கழகத்தில் படித்தவர். இவரும் இலங்கையில் ஆசிரியராகக் கடமையாற்றியவர். இந்து சமயபாட நூல்களை எழுதும் ஆசிரியர் குழுவில் முக்கியபங்கு ஆற்றியவர்.

நாற்பது வருடம் இலங்கையில் வாழ்ந்த இவர்கள் பின்னர் அவுஸ்திரேலியா சென்று தமது பிள்ளைகளுடன் வாழ்ந்தனர். ஐயர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு 'சிப்பிக்குள் முத்து' என்ற தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது. அவர் 04-04-1990இல் சிட்னியில் அமரரானார்.

## 104. வித்துவான் பாலசுப்பிரமணிய ஐயர்
## (1918 - 1993)

இவருடைய தந்தையார் வட்டுக்கோட்டை அடைக்கலந் தோட்டக் குறிச்சியில் வாழ்ந்த இரத்தினசாமி ஐயர். தாயார் செல்லம்மாள்.

இவர் முதலில் வட்டு. திருஞானசம்பந்த வித்தியா சாலையிலும் பின்பு வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கற்றார். 1941ஆம் ஆண்டு சிதம்பரம் அண்ணாமலைப் பல் கலைக்கழகத்திற் சேர்ந்து 4 ஆண்டுகள் படித்து 1945இல் வித்துவான் பட்டம் பெற்றார். பின்னர்க் கொழும்புப் பல்கலைக்கழகக் கல்லூரியிற் சுற்று கலைமாணிச் சிறப்பு (B.A. Hons) பட்டம் பெற்றார்.

முதலில் யாழ்.இந்துக் கல்லூரியில் 5 ஆண்டுகள் ஆசிரிய சேவை செய்து, பின்பு வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியில் ஓய்வு பெறும் வரை சேவையாற்றியவர். 1978ஆம் ஆண்டில் ஓய்வூதியம் பெற்றார்.

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தின் தொடக்ககாலத் தலைவராயிருந்து பிரவேச பண்டித, பால பண்டித வகுப்புக்களில் சமஸ்கிருதம், இலக்கணம் என்ற பாடங்கள் கற்பித்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 105. கோண்டாவில், கி. நாராயண சாஸ்திரிகள்
(03.05.1919- 22.10.1990)

திருவனந்தபுரம் கல்லடக் குறிச்சியில் பிறந்து திருநெல்வேலியில் தனது தந்தையிடம் பயிற்சி பெற்று இலங்கை வந்து வைதீக மார்க்கத்தில் சிறந்து ஒழுகிய கி. நாராயண சாஸ்திரிகள் அவர்கள் சிறுவயதிலேயே ஒழுங்கான முறையில் வைதீகக் கிரியைகளைப் பயின்றும் வேதங்களை ஓதியும் இருந்தபடியால் இன்றுவரை அவருக்கு நிகராக யாழ்ப்பாணத்தில் வைதீக மார்க்கத்தில் பின்தொடர ஒருவர் இல்லை. புங்குடுதீவு பசுபதிப்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்ற வேதாகம பாடசாலையில் ஆசிரியராக இருந்து சிவாசார்ய மாணவர்களைப் பயிற்றுவித்தார். இறுதி மூச்சுவரை எல்லோருக்கும் இன்முகம் காட்டித் தம் நடத்தையாலும் செய்கையாலும் இலங்கை பூராவும் போற்றும்படியாக வாழ்ந்த பெரியார் அவர். குற்றத்தை நெற்றிக்குநேரே பேசி நேர்மையாக நடப்பதிலும் குறித்த நேரத்தில் நேரந்தவறாது அந்தந்த இடங்களுக்குச் சென்று கிரியைகளை நடத்துவதிலும் அவருக்கு ஒப்பானவர் இல்லை.

ஆரம்பநிலையில் யாழ்ப்பாணத்தில் புங்குடுதீவில் அவ்வூர் மக்கள் ஏற்படுத்திக் கொடுத்த வாய்ப்பின் காரணமாக சமஸ்கிருதக் கல்வியையும் வேத அத்யயனத்தையும் பிராமணச் சிறுவர்களுக்குப் புகட்டிவந்தார். திருக்கேதீச்சுரத்தில் நிறுவப்பட்ட சிவாநந்த குருகுலமும் இவ்விதக் கல்வியை பிராமணச் சிறுவர்களுக்கு வழங்க வாய்ப்புத் தந்தது. திருகோணமலை கும்பாபிஷேகத்தின்போது திருக்கேதீச்சுர மாணவர் முழங்கிய வேத ஒலி இன்றும் காதில் ஒலிக்கின்றது. ஸ்வரம் பிறழாது வேதம் ஓதுவது மட்டுமின்றி ஓதுவிக்கும் பண்புடைய வேதவிற்பன்னர் ஒருசிலருள் நாராயண சாஸ்திரிகளும் ஒருவர். பிரயோகம், சொல், ஸ்வரத்திலோ, வர்ணத்திலோ வேறுபாடு ஏற்படின் சொல்ல வந்த கருத்தை உணர்த்தவே உணர்த்தாது என்ற மரபை நன்குணர்ந்து உரியவழியை இறுகத்தழுவி அக்ஷர சுத்தமாக வேதம் கற்பிக்கவல்ல மிகச்சிலரில் சாஸ்திரிகளும் ஒருவராவர்.

சாஸ்திரிகள் இறுதிக்காலம் 36 ஆண்டுகளைக் கோண்டாவிலில் அமைந்துள்ள தம் இல்லத்தில் கழித்து வந்தார். இக்கால முழுவதும் பிராமண சமுதாயத்துக்காகவே கடுமையாக இரவுபகலாக உழைத்து வந்தார். தம்முடைய துவிச்சக்கர வண்டியினுதவியுடனேயே இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமண வீடுகளில் உபநயனம், விவாகம், சீமந்தம் முதலிய பூர்வக்கிரியைகளையும் மற்றவர்கள் தயக்கங்காட்டிப் பங்குபற்றி வழிநடத்த மறுக்கும் அபரக்கிரியைகளையும் செவ்வனே நடத்திவந்தார். ஒரு நாளிலே நான்கு ஐந்து நிகழ்ச்சிகள் நிகழும் சந்தர்ப்பங்களும் இருந்தன. கண் சுகவீனமாக, தன் சொந்த வாகனத்தில் (துவிச்சக்கரவண்டி) செல்லமுடியாத காலம் வந்தபோது வாகன வசதி செய்துகொடுக்கும் இடங்களில் கிரியைகளை நிகழ்த்த உதவிவந்தார். இவர் இவ்வாறு முன்வந்து செய்யாது விட்டிருப்பின் கிரியைகளிலேயே பிராமண மக்களுக்கு சிரத்தை குன்றியிருக்கும். யுத்தக் குமுறல்களுக்கும் குண்டு முழக்கங்களுக்கும் இடையே சிறிதும் தயக்கங் காட்டாது தம்மை அழைத்தவர்களுக்கு மறுப்புக் கூறாது தூர இடங்களுக்கும் கண்வருத்தத்தையும் உடல்நலக் குறைவையும் பாராட்டாது சென்று கடமைபுரிய இனி யார் எங்களுக்குக் கிடைக்கப் போகிறார்.

அவரிடம் கல்வி பயின்ற பல மாணவர்கள் இன்றும் பல ஆலயங்களில் சிறந்த சிவாச்சாரியர்களாகப் போற்றப்பட்டு வருகிறார்கள். மற்றவர்களைக் கஷ்டப்படுத்தக்கூடாது என்னும் விஷயத்தை மிகத் தீவிரமாகத் தம் வாழ்நாளில் கடைப்பிடித்தவர்கள். தாங்கள் வருவதற்குக் கார் அனுப்பவா? என்று கேட்டால், வேண்டாம் என்று சொல்லுவார். தானாகவே சிரமப்பட்டுக் குறித்த இடங்களுக்குச் சென்று தமது கடமையைப் பொறுப்போடு நிறைவேற்றித் தருவார்கள். புங்குடுதீவு, நுணாவில், சுன்னாகம், திருக்கேதீஸ்வரம் முதலிய இடங்களில் இவர்கள் நடத்திய சமஸ்கிருத பாடசாலைகள் பெருமை மிக்கன.

திருக்கேதீஸ்வர சிவானந்த குருகுலத்தில் தனி ஒருவராகப் பல மாணவர்களைக் குருமார்களாக உருவாக்கியதுடன் எல்லோருக்கும் பல்வேறு வழிகளிலும் அறிவுரைகளையும் உபதேசங்களையும் வழங்கி பிராமண குலத்தின் சிறப்பிற்குத் தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துள்ளார் என்றே சொல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 106. சித்தங்கேணி, வை. மு. குமாரசாமிக் குருக்கள் (சிவசாமிக் குருக்கள்)

## (10.05.1919 - 12.10.1974)

யாழ்ப்பாணம் கோப்பாய்க் கிராமத்தில் ஆதிசைவ அந்தண மரபில் பாரத்துவாஜ கோத்திரத்தில் வைரவநாத முத்துக் குருக்கள், பாலாம்பிகை அம்மா தம்பதிகளின் மகனாக 10.05.1919 இல் பிறந்தவர்தான் குமாரசாமிக் குருக்கள். இவருக்கு நான்கு ஆண்சகோதரர்கள்.

குமாரசாமிக்குருக்கள் ஆரம்பக்கல்வியை கோப்பாயில் கற்று உபநயன் சடங்குகள் செய்து அச்சுவேலி சிவஞானபானு சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்களிடம் சமஸ்கிருத, சித்தாந்த, வேதாகமக் கிரியை நெறிமுறைகளைக் கற்றுத் தேர்ந்தார். அவருடன் உடனருந்து கிரியாநுட்ப அனுபவங்களையும் பெற்று குருக்களின் ஆசியும் பெற்றார். இவருக்கு மணப்பருவம் எய்திய காலத்தில் சித்தங்கேணி பெரியவளவு மகாகணபதிப் பிள்ளையார் கோவில் அர்ச்சகர் முத்தையர் கணபதிஐயர் பராசக்தி அம்மா தம்பதிகளின் ஏகபுத்திரியான வல்லாம்பினக அம்மாவைத் திருமணம் செய்து இல்லற வாழ்வில் நல்லறம் காத்தனர்.

காரைநகர் சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள் போன்ற பெரியோர்களுடன் இணைந்து அகில இலங்கை சைவக் குருமார் சபைமூலம் அந்தணர் சமூகத்திற்கு பல தொண்டாற்றினார். பல அந்தணச் சிறுவர்களுக்கு சமஸ்கிருதம் கற்பித்து ஆலய குருத்துவப் பணிக்கு சிறந்த குருமார்களை உருவாக்கினார். நயினை நாகபூஷணி அம்மன்கோவிலின் நைமித்ய குருவாகவும் பணியாற்றினார். நல்லூர் கந்தசாமிகோவில் உற்சவ குருவாகவும் தனது சகோதரருடன் இணைந்து பணியாற்றினார். சங்கானை, வடடுக்கோட்டை, அராலி, சாவகச்சேரி, கொடிகாமம், ஓமந்தை, புங்குடுதீவு போன்ற பிரபல ஆலயங்களில் உற்சவங்கள், கும்பாபிஷேகங்கள் சிறப்புற நடத்திப் புகழ்பெற்றார். சித்தங்கேணி பிள்ளையார் கோவில் குருவாக இருந்த காலத்தில் அதனைப் புனருத்தாரணம் செய்ய அயலவர்கள் துணையோடு சொந்தப் பணத்தையும் அர்ப்பணித்து திருப்பணி வேலைகள் செய்து அழகான பெரிய கோவிலாக உருமாற்றினார். வரலாற்றில் முதன்முதலாக 33 குண்ட உத்தம யாகசாலை அமைத்து தரமான பத்ததி உருவாக்கி பெரும் சாதனை புரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரசாமிக் குருக்களை (சிவச்சாமிக்குரு) சிந்தங்கேணியார் என்றே அந்தணர் சமூகம் பெருமையாய் அழைத்தது. இதேபோல் மட்டக்களப்பு போரதீவு சித்திர வேலாயுதசுவாமி கோவிலில் 33 குண்டயாகசாலை அமைத்து மகாகும்பாபிஷேகத்தை நடத்திவைத்தார்கள்.

எல்லோருடனும் அன்பாகப் பேசும் நற்குணங்கள், அழ்ந்த சிவசித்தனை, இறைபணி என வாழ்ந்த உத்தமயக்ஞ பிதாமகர் சிவஸ்ரீ வை. மு. குமாரசாமிக் குருக்கள் அவர்கள் 12. 10. 1974 ஆனந்தவருஷம் புரட்டாதித் திங்கள் 27ஆம் நாள் திரயோதசித்தியில் நண்பகல் சிவபூசை முடிந்து சிவப்பரம் பொருளுடன் கலந்தார்.



## 107. யாழ். வடமராட்சி பருத்தித்துறை சிவஸ்ரீ சோம. இராமநாதக் குருக்கள் (1920 - 1962)

சிவஸ்ரீ இராமநாதக் குருக்கள் அவர்கள் ஸ்ரீவத்ச கோத்திரத்தில் சோமசுந்தரக் குருக்கள் நாகம்மா தம்பதிகளுக்குப் புத்திரனாக 1920ஆம் ஆண்டு பிறந்தார். அவர் நீர்வேலியைச் சேர்ந்த சிவஸ்ரீ ஜெகநாதக் குருக்கள் பொன்னம்மா தம்பதிகளின் புதல்வியான அமிர்தேஸ்வரி அம்மாவை மணம் செய்து இல்வாழ்க்கை மேற்கொண்டார். இவர்களுக்கு ஐந்து பெண்களும் நான்கு ஆண்களும் பிள்ளைகள். இவரது நான்கு ஆண்பிள்ளைகளும் தந்தைபோலவே குருசேவை புரிகின்றனர்.

மக்களால் மதிக்கப்பட்ட சிவஸ்ரீ இராமநாதக் குருக்கள் தமது சேவையால் பருத்தித்துறை வாழ் மக்களால் போற்றப்பட்டார். இளவயதில் 1962ஆம் ஆண்டு இறைபதமடைந்தபோதும் பருத்தித்துறை சிவன்கோவில் வரலாற்றில் அவருக்கென்று ஒரு நிரந்தர இடம் உண்டு. அத்தோடு, வரதராஜக் குருக்கள், சபேசக் குருக்கள், வாகீஸ்வரக் குருக்கள், ரமேஷ்குருக்கள் ஆகிய அவரது புதல்வர்கள் நால்வரும் தந்தையின் பெயர் விளங்குமாறு இலங்கையிலும் பல வெளிநாடுகளிலும் குருத்துவ சேவைபுரிந்து புகழ்பெற்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 108. சண்டிலிப்பாய்
# சி. நாகேஸ்வரக் குருக்கள்
## (1920 - 1963)

சிவஸ்ரீ சி. நாகேஸ்வரக் குருக்கள் மானிப்பாய் இந்து கல்லூரி மாணவர். லண்டன் மெற்றிக்குலேஷன் பரீட்சை சித்தி பெற்றவர். மிகுந்த ஆங்கிலப் புலமை உள்ளவர்.
சிறந்த சோதிட விற்பன்ன ராகவும் திகழ்ந்த இவர் ஆங்கிலத்திலேயே சோதிடக் குறிப்புக்களை எழுதிக் கொடுத்திருந்தார் என்பது சிறப்பான ஒரு செய்தியாகும்.

சங்கரசுப்பையரிடம் ஆரம்ப சங்கீதம் பயின்றவர் சிறந்த சங்கீத, வயலின் வித்துவான். சோதிடத்திலும் திறமை உள்ளவர் மணிபாகவதர், (ஆதீனம்) முதலிய பலரின் இசைகச்சேரிக்கு வயலின் வாசித்தார். வைத்தீஸ்வரசர்மாவுடன் சேர்ந்து யோலாக் கச்சேரிகள் செய்திருக்கிறார்.




இவருடைய மனைவி தேவகுஞ்சராம்பாள் கரம்பொன் சண்முகையரின் மகள். (1923 - 1999) அக்காலத்தில் இவர்களுடைய திருமணம் நடந்து (1940) சண்டிலிப்பாய்க்கு வரும்போது இரட்டை குதிரை வண்டியில் வரவேற்பு நடைபெற்றது தேவகுஞ்சராம்பாளும் சங்கீதம் பயின்றவர். ஹார்மோனியம் நன்றாக வாசிப்பார். லேகியங்கள், மருத்துவ எண்ணெய் வகைகள் குளிகை வகைகள் வாகடப்படி தாயாரிக்கத் தெரிந்தவர். பல வைத்தியர்களின் அனுசரணையில் அவர்களுக்கு இவர் எண்ணெய் வகைகளைத் தயாரித்துக் கொடுப்பதுண்டு.

நாகேஸ்வரக் குருக்கள் - தேவகுஞ்சராம்பாள் தம்பதிகளின் பிள்ளைகள்தான் இன்று உலகப் புகழ்பெற்ற 'மொடேர்ண் இந்து கலை கலாச்சார நிறுவனத்தை நடத்தும் சிவாசாரியர்களான சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் மற்றும் சுன்னாகம், கதிரமலை சிவன் தேவஸ்தானம் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 109. கலாநிதி, உத்தரகோவை பிரதிஷ்டா கிரியா கலாபமணி, வை. மு. பரமசாமிக்குருக்கள்

(18.06.1920 - 16.10.2009)

உத்தமர் பலரை உலகிற்கு வழங்கிய கோப்பாய்க் கிராமத்தில் பாரத்வாஜ கோத்திரத்தில் வைரவநாதக் குருக்கள் முத்துக் குருக்கள் பாலாம்பிகை தம்பதிகளுக்கு அரும் புதல்வராக 18.06.1920 இல் சிவஸ்ரீ மு. பரமசாமிக் குருக்கள் பிறந்தார்.

தம் கிராமத்திலேயே ஆரம்பக்கல்வியைப் பெற்ற இவர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து கோப்பாயில் வாழ்ந்த ஸ்ரீநிவாச சாஸ்திரிகளிடம் வேதாத்யயனம் செய்தார். அத்தோடு சிவாகம விற்பன்னர் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்களிடம் சிவாகமங்களையும் கிரியை நெறிகளையும் கற்றுணர்ந்தார். புராணபடனம் முதலிய வற்றிலும் பயிற்சிபெற்றார்.

ஊரெழு பாலசுந்தரக்குருக்களின் புதல்வி இராஜேஸ்வரி அம்மாவைத் திருமணம் செய்து இல்லறமென்னும் நல்லறம் நடத்திய ஐயா அவர்களுக்கு இரண்டு பெண் பிள்ளைகளும் ஐந்து ஆண்பிள்ளைகளும் உள்ளனர். அனைவரையும் அறிவூட்டி வளர்த்து அவரவர்க்குரிய நல்வாழக்கைகளையும் *அமைத்துக் கொடுத்து அவர்கள் மூலம் பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார்.*

*ஆகமங்களையும் அவற்றின் வழிநூல்களான கிரியா பத்ததிகளையும் மட்டுமன்றிப் புராணங்கள், திருமுறை களையும் நன்கு ஆராய்ந்து அவற்றினடிப் படையில் தாமே விரிவான பத்ததிகளைத் தம்கைப்பட எழுதிவைத்திருந்த குருக்களவர்கள் மரபுநெறியும் நூல்முறையும் வழுவாது மிகவும் பக்திபூர்வமாகவும் நிதானமாகவும் லயிப்போடு கிரியைகளைச் செய்வார்.*

*அவ்வப்போது கிரியை நெறிகள் பற்றிய விளக்கங்களை மக்களுக்கு எடுத்துக் கூறுவார். பலவேறு விளக்கங்களை அரிய பல நூல்களாகவும் வெளியிட் டிருக்கிறார். விநாயக பரத்துவம் (1985), சிவார்ச்சனா சந்திரிகா (1989) அம்பிகை வழிபாடு (1997) ஆகிய தமிழ் நூல்கள் இவரது நூல்களில் விதந்து போற்றத்தக்கன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிய பல சமஸ்கிருத நூல்களைத் தொகுத்தும் பதிப்பித்தும் வெளியிட்டிருக்கிறார். நவக்கிரகப் பிரதிஷ்டா விதி இவற்றில் மிக முக்கியமானதாகும்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் வித்வத் சபை உறுப்பினராகத் திகழ்ந்த இவர் பல்வேறு ஆலயங்களில் ஏற்படும் பிரச்சினைகளை ஆராய்ந்து சுமுகமாகத் தீர்த்துவைத்ததுடன் சம்பந்தப்பட்டவர்களின் ஐயங்களைப் போக்கி மகிழ்வித்துவந்தார்.

அந்தணர் இல்லங்களில் நிகழும் வைதிகக் கிரியைகள் பலவற்றையும் நடத்திவைத்துத் தமது சமூக மக்களுக்கு வழிகாட்டியாக விளங்கியமையும் ஐயா அவர்களின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். உபநயனம், திருமணம், ஆயுஷ்ஹோமம் முதலியவற்றையும் அந்தியேஷ்டி முதலியவற்றையும் இவ்வகையில் குறிப்பிடலாம்.

மேலும் அடியார்களின் இல்லங்களில் கிருஹப் பிரவேசம், நவக்கிரகசாந்தி, சிவபூசை முதலியவற்றைச் செய்துவைத்து அவர்களை நல்வழிப்படுத்துவதிலும் குருக்களவர்கள் திருப்தி கண்டார்கள்.

எழுபதாம் ஆண்டளவில் தென்னிந்திய யாத்திரையை மேற்கொண்ட சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள் அவர்கள் அங்கு பல்வேறு ஆலயங்களையும் தரிசித்து அங்கு நிகழும் கிரியைமுறைகளை அவதானித்து உள்வாங்கிக்கொண்டார்.

நயினை நாகபூஷணி அம்பிகையின் பரம பக்தரான இவர் அக்கோவிலின் விசேட சிவாச்சாரியாராக நீண்டகாலம் இருந்து கும்பாபிஷேகம், மஹோற்சவம் ஆகியவற்றை நடத்தி வந்தார். கோப்பாய் வடக்கு பலானை கண்ணகி அம்மன் கோவில் பிரதமகுருவாகப் பல ஆண்டுகள் பணி யாற்றி அவ்வாலய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினார். கோப்பாய், இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாற்பது ஆண்டு பிரதமகுருவாக விளங்கினார்.

தமது சொந்த பரம்பரைப் பரிபாலனத்திலுள்ள கோப்பாய் வடக்கு வைரவர் கோயிலை பக்திசிரத்தையுடன் பேணிவந்தவர். போர் நிலைமையால் சிதைவுற்றிருந்த அக்கோயிலை மீண்டும் தாமே முன்னின்று புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்து வைத்தார்.

குருக்களவர்களின் கிரியாமரபினையும் பக்தி சிரத்தையையும் அறிவாற்றலையும் வியந்து போற்றும் நம்நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்தவர்களும் அவரே தமது ஆலய கும்பாபிஷேகத்தை நடத்த வேண்டுமென அழைத்துப் போவது வழக்கம்.

அவ்வகையில் வண்ணை வைத்தீஸ்வரன் கோவில், புங்குடுதீவு பாணாவிடை சிவன்கோவில், வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோவில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில், மட்டுவில் வேரற்கேணிக் கந்தசுவாமி கோவில், எழுதுமட்டுவாள் விழுபளை அம்மன் கோவில், பொலிகண்டி கந்தவனக்கடவை முருகன் கோவில் முதலிய சுமார் நாற்பதுக்கு மேற்பட்ட ஆலயங்களிலே கும்பாபிஷேகம், மஹோற்சவம் முதலிய கைங்கரியங்களை ஆற்றிவந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய ஆலய கைங்கரியங்களிலே மகிழ்ந்த அவ்வாலயம் சார்ந்த சபைகளும் பக்தர்களும் ஐயா அவர்களுக்கு வழங்கியிருக்கும் கௌரவப்பட்டங்கள் கணக்கற்றவை. இவற்றைவிட அவரது அறிவாற்றல், ஆராய்ச்சி இவற்றின் சிறப்பையுணர்ந்து உயர்நிறுவனங்கள் பலவும் அவருக்கு விருதுகள் வழங்கியுள்ளன.

1980 முதல் இன்று வரை அவர் பெற்ற சுமார் பதினைந்துக்கு மேற்பட்ட பட்டங்களில், பிரதிஷ்டா பூஷண சிரோமணி, பிரதிஷ்டா கிரியாகலாப மணி, சிவாகம வாசஸ்பதி, சிவாகம கலாநிதி, வேதாகம மாமணி, வேதசிவாகம பிரதிஷ்டா சரஸ்வதி, வேதாகமஞான சிரேஷ்ட தத்துவநிதி முதலியன குறிப்பிடத்தக்கன. இவை யாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல ஜப்பானிய தற்காப்புக் கலைக்கான உள்ளகப் பல்கலைக்கழகம் இவருக்குக் கலாநிதிப் பட்டத்தை வழங்கியிருக்கிறது.

கலாநிதி, பிரதிஷ்டா கிரியா கலாபமணி, உத்தரகோவை வை. மு. பரமசாமிக்குருக்கள் அவர்களின் பாதங்களை வணங்கி நிற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 110. ஓவியர், அச்சுக் கலைஞர் நல்லூர், சு. ஜெகந்நாத சர்மா
### (11.05.1921 - 03.10.2010)

பெற்றோர் - யாழ்.பண்டிக் கோட்டுப் பிள்ளையார் கோவில் பரம்பரை அர்ச்சகர் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் - மீனாம்பிகை.

மனைவி - பேராசிரியர் கைலாசநாதக் குருக்களின் சகோதரி இந்திராக்ஷி. மூன்று பிள்ளைகள்.

நிரஞ்சனா அச்சுக்கூடம் நிறுவி பல நூல்கள் அச்சிட்டு வெளிப்படுத்தினார். சிறந்த ஓவியர். சிற்பக்கலைஞர். இவரது கண்ணாடி ஓவியங்கள் (தஞ்சாவூர் பாணி) பிரபலமானவை. நல்லூர் சிவன்கோவிலின் சந்திரசேகரர் விக்கிரகம் 1980இல் இவரது மேற்பார்வையில் உருவாக்கப்பட்டது.

நடனக் கலைஞர்களுக்கு உதவும் வகையில் ஹஸ்த அடைவுகள் வரைந்து கொடுத்து பிரபல சபாக்களில் பயன்படுத்தப்பட்டன. 108 தாண்டவர் மற்றும் பல ஓவியங்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்றன.

ஆலயங்களுக்கு நுட்பமான முறையில் யந்திரங்கள் வரைந்து கொடுப்பார். தரிசன யந்திரங்கள் பல கொத்துவேலையாகவும் செய்து கொடுத்திருக்கிறார்.

நல்லூர் பிரதேச சபை கலாசார அமைப்பினர் கலைஞானச்சுடர் விருது வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

## 111. வயலின் வித்துவான் இ. விஸ்வநாத ஐயர்
### (சங்கீத ஆசிரியர்)




தோற்றம்: 18.02.1921

மறைவு: 24.09.1995

திருமணம்: 1946 ஜனவரி
மனைவி அர்த்தநாரீஸ்வரி
பாலஞானோதய சபை சங்கீத ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 112. தகைசார் பேராசிரியர், கலாநிதி, கா. கைலாசநாதக்குருக்கள்

(15.08,1921 - 07.08.2000)

அறிமுகம்

இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் இந்தியாவில் பூனா பல்கலைக் கழகத்திலும் ஆங்கிலமொழி மூலமாக சம்ஸ்கிருத மொழியைக் கற்று உலகளாவிய நிலையில் பிரசித்தி பெற்று விளங்கிய பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் அவர்கள் பரந்த குரு சிஷ்ய மரபுகளை உலகில் பலபாகங்களிலும் நிலை நிறுத்தி முத்திரை பதித்தவர். பேராசிரியர் குருக்கள் அவர்கள் காச்யப கோத்திரம் ஆபஸ்தம்ப சூத்திரத்தைச் சார்ந்தவர்.

முன்னோர்கள்

தாம் பூஜை செய்துவந்த வெள்ளியினாலான வேலாயுதத்தை ஓலையால் கோவில் அமைத்து கி.பி. 1793ஆம் ஆண்டு ஸ்தாபித்து நல்லூர் கந்தசுவாமி கோவிலின் ஆரம்பத்திற்கு காரணமாக இருந்தவர் கிருஷ்ணையர். அவர் மகன் சுப்பையர். இவர் ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் நோர்த் தேசாதிபதியால் கோவில் குருக்கள் எனக் கையொப்பமிட்டுக் கொடுக்கப்பட்டவர். இவரின் மகன் கிருஷ்ணையர், இவரின் மகன் கணபதி ஐயர். இவரது மகனான வெங்கடேச ஐயர் சுந்தரம்மாளின் மகனே கார்த்திகேயக்குருக்கள். இவரே பேராசிரியர் குருக்களின் தந்தை. இவரது மூதாதையர்கள் தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்தவர்கள்.

சிவஸ்ரீ கார்த்திகேயக்குருக்கள் அவர்களை தம்பையாக் குருக்கள் என்றும் அழைப்பர். இவர் சேர். பொன் இராமநாத வள்ளலின் சமய குருவாகத் திகழ்ந்தவர். வேதாகம விற்பன்னர். சோதிட நிபுணர். இலங்கையின் பல இடங்களிலும் கும்பாபிஷே கிரியைகளில் குருத்துவம் வகித்து புகழ் பெற்றவர். இவரது தர்மபத்தினி முனீஸ்வரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சுந்தராம்பாள் ஆவார். இவர்கள் தமக்கு சந்ததியினை வேண்டியும் தமது ஆத்மலாபத்தின் பொருட்டும் நல்லூரில் கல்வளவு எனும் காணியைப் பெற்று வடக்கு நோக்கியதாக விநாயகர், சுப்பிரமணியர், கைலாசநாதர், கமலாம்பிகை, நடராஜப் பெருமான் ஆகிய மூர்த்திகள் ஒருங்கே அமையப் பெற்றதாகவும் சிவாகம முறைப்படி அம்பிகையாகிய கமலாம்பிகையை வலப்புறம் கொண்டும் விளங்கும் ஸ்ரீ கைலாசநாதப் பெருமானைப் பிரதிஷ்டை செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீகைலாசநாதப் பெருமானின் திருவருளால் பேராசிரியர் குருக்கள் அவர்கள் துர்மதி வருடம் ஆடிமாதம் முப்பத்தோராம் நாள் (15.08,1921) திங்கட்கிழமை பூராட நட்சத்திரத்தில் ஜனனமானார். பெற்றோர் தாம் முன்னர் கொண்டிருந்த விண்ணப்பப்படி கைலாசநாதக்குருக்கள் என நாமகரணம் செய்தனர். இவர் சர்வலோகநாயகி அம்மாள், இந்திராக்ஷி அம்மாள், இரத்தின கைலாசநாதக்குருக்கள், பாலாபரமேஸ்வரி ஆகிய சகோதரர்களுடன் கூடியவர்.

கல்வி

பேராசிரியர் குருக்களுக்குத் தந்தையே குருவாக இருந்து ஏழாவது வயதில் உபநயனம் செய்துவைத்தார். சம்ஸ்கிருதமொழியின் ஆரம்பக்கல்வியை தமது தந்தையாரிடம் பெற்று அதன்பின் சுன்னாகத்தை உறைவிடமாகக் கொண்ட பிரம்மஸ்ரீ சிதம்பரசாஸ்திரிகள், கோப்பாயில் சிலகாலம் வசித்து வந்த பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் ஆகியோரிடம் பத்தாண்டு காலமாக மரபு வழியாக வேதமோதும் விசேட பயிற்சியைப் பெற்றார், ஆகமக் கல்வியை தந்தையே உரிய நியமங்களோடு கற்பித்துவந்தார். பேராசிரியர் குருக்களின் ஆரம்பக்கல்வி 1927-1930 வரையாக நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் ஆரம்பமானது. சேர். பொன் இராமநாதன் அவர்களால் சைவச் சிறார்களுக்கென்றே உருவாக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரியில் 1931-1941 வரை கற்றுவந்தார்.

குருகுலக்கல்வி

திருபுடைமருதூரிலிருந்து சுழிபுரத்திற்கு 1936ஆம் ஆண்டில் வந்து அங்கு கற்பித்துவந்த வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ கி. சீதாராம சாஸ்திரிகளிடம் பாணினீய வியாகரணம், காவ்யங்கள், நாடகங்கள், அலங்கார சாஸ்திரங்கள் முதலானவற்றை மரபுவழிக் கல்வி மூலம் கற்ற பேராசிரியர் குருக்கள் சம்ஸ்கிருத மொழியில் சிறந்த பாண்டித்தியம் பெற்று விளங்கினார்.

திருமணம்

தந்தையின் வேண்டுகோளுக்கிணங்கத் தமது பதினெட்டாவது வயதில் முனீஸ்வரம் சிவஸ்ரீ சாம்பசிவக் குருக்கள் கமலாம்பிகை தம்பதிகளின் பன்னிரெண்டு வயது நிறைந்த மகளான ஸ்ரீமதி திரிபுரசுந்தரி அம்மாளை பேராசிரியர் குருக்கள் 4.2.1940இல் வைதிக முறைப்படி விவாகம் செய்து கொண்டு இல்லற வாழ்க்கையை நடத்திவந்தார்.

ஆங்கிலம், கணிதம், தமிழ், வரலாறு பாடங்கள் அடங்கிய இலண்டன் மெற்றிகுலேஷன் பரீட்சையில் 1941இல் சித்தியடைந்த பேராசிரியர் குருக்கள் சம்ஸ்கிருத மொழியின் இலக்கியச்சுவையையும், மொழியின் சிறப்பையும், அவசியத்தையும் உணர்ந்து அதற்குரிய அடித்தளத்தை பிறமொழிகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பீட்டடிப்படையில் அறிவதற்கு ஆவலுடையவராக ஆங்கிலம், இலத்தின், தமிழ், சம்ஸ்கிருதம் ஆகிய பாடங்கள் அடங்கிய இலண்டன் இன்டர்மீடியட் பரீட்சையில் 1943இல் சித்தியடைந்தார்.

உயர்கல்வி

பேராசிரியர் குருக்களை அவரது தந்தையார் அக்காலத்தில் பெருமதிப்புப் பெற்று விளங்கிய சேர். பொன். இராமநாதன் போன்றே சட்டத்துறையில் படிப்பிக்கவேண்டும் என விருப்பம் கொண்டிருந்தபோதிலும் சம்ஸ்கிருத மொழியை நன்கு ஆழமாக கற்கவேண்டும் எனும் தமது விருப்பத்தை பேராசிரியர் குருக்கள் தமது தந்தைக்கு தெரிவித்திருந்தார்கள். சோதிடக் கலையில் மிகுந்த திறமையும் அனுபவமும் நுட்பமும் பெற்றிருந்த பேராசிரியர் குருக்களின் தந்தையார் தமது ஆயுட்காலத்தின் முடிவினை ஒரு வருடகாலத்திற்கு முன்னதாகவே அறிந்திருந்தார். தாய் ஸ்ரீமதி சுந்தரம்மா 1942இல் திடீரென ஆஸ்மா நோயினால் பீடிக்கப்பட்டு முப்பத்தாறாவது வயதில் தை அமாவாசை தினத்தன்று தீர்க்கசுமங்கலியாக ஸ்ரீ கமலாம்பிகையின் திருவடியைச் சேர, தந்தை இருதய நோயால் அதேயாண்டு ஆடிச் சதுர்த்தியன்று ஸ்ரீ கமலாம்பிகை சமேத ஸ்ரீ கைலாசநாதப் பெருமானின் திருவடிகளைச் சென்றடைந்தார். இதன் காரணமாக பேராசிரியர் குருக்களுக்கு குடும்பப் பொறுப்பு, ஆலய பரிபாலனம், புரோஹிதம், ஜோதிஷம் எனும் பொறுப்புகள் கல்வியுடன் இணைந்த பணிகளாயின.

பேராசிரியர் குருக்கள் மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திருவாளர் வீரசிங்கத்தின் அனுசரணையில் சிலகாலம் தமிழ்ப்பாட ஆசிரியராக கடமையாற்றினார். உயர் படிப்புக்காக இலங்கையின் முதற் பல்கலைக் கழகமான கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 1944இல் அனுமதிபெற்ற பேராசிரியர் குருக்கள் சம்ஸ்கிருதம், தமிழ், பாளி ஆகிய பாடங்களை முதலாமாண்டுக் கலைத் தேர்வுக்காகக் கற்று 1945இல் தேர்ச்சி பெற்றார். தமிழை உப பாடமாகக் கொண்டு சம்ஸ்கிருத மொழியை சிறப்புக் கலைமாணிப் பட்டத்திற்காக கற்று இரண்டாந்தரம் உயர்பிரிவில் 1947இல் சித்தியடைந்தார். சம்ஸ்கிருதமொழியில் முதுகலைமாணிப் பரீட்சையில் 1949இல் சித்தியடைந்தார். 1947இல் கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தற்காலிக விரிவுரையாளராக நியமனம் பெற்றார். பேராசிரியர் குருக்கள் இலண்டன் பல்கலைக்கழகத்தால் கொழும்பு இலங்கைப் பல்கலைக் கழகத்திற்கென்று அனுப்பி வைக்கப்பட்ட ஜெர்மனியநாட்டு முதற் சம்ஸ்கிருத பேராசிரியை Betty Haiman அவர்களின் வழிகாட்டலில் கல்வி கற்ற பெருமை தனித்துவமானது.

பல்கலைக்கழக ஆசிரியப்பணி

கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 1952ஆம் ஆண்டுவரை தற்காலிக விரிவுரையாளராகத் திகழ்ந்துவந்த பேராசிரியர் குருக்கள் 1953ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டில் பேராதனை பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருதத்துறைக்கு நிரந்தர விரிவுரையாளராக நியமனம் பெற்றார்.

## கலாநிதிப்பட்ட ஆய்வு

உயர்பட்ட ஆய்விற்கான கற்கை விடுகையில் சம்ஸ்கிருத மொழியில் கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக இந்தியா பூனே பல்கலைக்கழகத்திற்குச் சென்ற பேராசிரியர் குருக்கள் பூனே பல்கலைக்கழக சம்ஸ்கிருத பேராசிரியரும், பூனே பண்டர்கார் ஆய்வு நிறுவன இயக்குனருமாக திகழ்ந்த ஜேர்மன் அறிஞரின் வழிகாட்டலில் ஆய்வுகள் பலவற்றைச் செய்தவருமான பேராசிரியர் கலாநிதி R.N. தண்டேகார் அவர்களின் வழிகாட்டலில் ஈராண்டுகளாக "புராண இதிகாச கால சைவசமயமும் அதன் கிளைநெறிகளும் - சிறப்பாக தென்னிந்தியாவிலும் இலங்கையில் நிலவும் சமயக்கிரியை மரபுகளுடன் தொடர்புபடுத்திய ஆய்வு" என்ற தலைப்பில் ஆய்வு செய்ததன் பயனாக உருவான ஆய்வு நூலின் தகுதி கண்ட பூனே பல்கலைக்கழகம் 1960இல் Doctor of Philosophy (Ph.D.) பட்டத்தினை வழங்கியது.

சம்ஸ்கிருத மொழியில் கலாநிதிப் பட்டம் பெற்ற பேராசிரியர் குருக்கள் இலக்கிய, இலக்கண, மொழியியற் பார்வைகளோடு இணைந்த வைதிக இலக்கியங்கள், சம்ஸ்கிருத இலக்கியங்கள் பற்றிய அறிவுத் தேடலுக்கு அக்காலத்தில் சிறந்து விளங்கியவர்களான இந்தோ ஆரியத்தில் உயர் ஆய்வு செய்த மொழியியல் வல்லுநர் தமிழ்ப் பேராசிரியர் சு. கணபதிப்பிள்ளை, வைதிக இலக்கியத்திலும் பௌத்த மத தத்துவத்திலும் துறைபோந்த சம்ஸ்கிருத மொழிப் பேராசிரியர் A விஜயசேகரா முதலான பேரறிஞர்களின் தொடர்புகள் பெரிதும் உதவிபுரிந்தன. இதன் பயனாக பல்கலைக் கழகத்தினூடாக தமிழ், இலத்தீன், பாளி ஆகிய மொழிகளில் ஆழமாகவும்: ஜேர்மனி, பிரெஞ்சு ஆகிய மொழிகளில் ஆராய்ச்சிக்கேற்ற அளவிலும் சம்ஸ்கிருத மொழியறிவோடு பெற்றிருந்த பேராசிரியர் குருக்கள் இரண்டாந்தர விரிவுரையாளராக பதவியுயர்ந்த நிலையினை 1960இல் அடைய 1961இல் தமிழ்மொழி மூலமான சம்ஸ்கிருத மொழி பொது சிறப்புப் பட்டங்களுக்குரிய கற்கைநெறியின் ஒழுங்கமைப்பாளராக விளங்கி, கொழும்பு கிளைப் பல்கலைக்கழகத்தின் சம்ஸ்கிருதத் துறையின் பொறுப்பு விரிவுரையாளராகத் தகுதியுயர்வு பெற்று சம்ஸ்கிருத மொழியைக் கற்பித்து வந்தார். அவ்வேளையில் இந்து தத்துவங்கள் பற்றியும் விரிவுரையாற்றி வந்தார்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சேவை

சேர். பொன். இராமநாதன் அவர்களின் கனவாக விளங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பரமேஸ்வரக் கல்லூரியினை அடித்தளமாகக் கொண்டு 1974.10.06 இல் யாழ்ப்பாண வளாகமாக உருவாக்கப்பட்டபோது மொழிகள் மற்றும் கலாசார கற்கைநெறித் துறையின் பதிற் தலைவராக நியமனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற பேராசிரியர் குருக்கள் 1975 இல் முதன் முதலாக உருவாக்கப்பட்ட இந்து நாகரிகத்துறையின் முதற் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் நியமனம் பெற்றார்.

இந்துநாகரிகத் துறையின் புதிய நிலையிலான உருவாக்கத்திற்காக உழைத்த பேராசிரியர் குருக்கள் யாழ் பல்கலைக்கழகத்திலேயே இத்துறையினூடாக முதல் கலைமாணி (B.A) பட்டதாரியையும், முதல் கலாநிதி (Ph.D) பட்டதாரியையும் குறுகிய காலத்தில் உருவாக்கிய பெருமை தனித்துவமானது. இந்து நாகரிகத் துறையின் பொது சிறப்புக் கலைக் கற்கை நெறிகளோடு பட்டப்பின் படிப்பின் டிப்ளோமா கற்கை நெறியில் இந்துநாகரிகத்தையும் ஒரு பாடமாக கற்பிப்பதற்குரிய பாடத்திட்டத்தை உருவாக்கிய பேராசிரியர் குருக்கள், இராமநாதன் நுண்கலைத் துறைத் தலைவராகவும் விளங்கி அக்கற்கை நெறிகளினை வளம்படுத்தினார்.

மனிதப் பண்பியற் பீடாதிபதியாக 1977 இலும், பதில் கலைப் பீடாதிபதியாக 1983இலும் நியமனம் பெற்ற பேராசிரியர் குருக்கள் 1984இல் ஒருவருட விடுமுறையின்போது பாரத நாட்டிற்கும் ஐக்கிய இராச்சியத்திற்கும் சென்று சிறப்புறக் கிரியைகளை நிகழ்த்தியும் இந்துப் பண்பாடு பற்றி விரிவுரைகளாற்றியும் வந்தார். தாம் ஆய்விற்கென பயன்படுத்தி வந்த சம்ஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பல நூல்களையும் யாழ். பல்கலைக்கழக நூல் நிலையத்திற்கு வழங்கிய பேராசிரியர் குருக்கள் 1986 இல் பல்கலைக்கழக முப்பத்தொன்பது வருடகால ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்று தொடர்ந்து 1987முதல் 1989 வரையான காலங்களில் ஒப்பந்த அடிப்படையில் இந்து நாகரிகப் பேராசிரியாராக விளங்கினர்.

### கௌரவம்

யாழ். பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறை, சம்ஸ்கிருதத்துறை, உயர்பட்ட ஆய்வுகளுக்கும் இலங்கையில் விளங்கும் பல்கலைக்கழகங்களினது சம்ஸ்கிருத மொழியைப் பற்றிய உயர்பட்ட ஆய்வுகளுக்கும் ஆலோசகராகவும் பரீட்சகராகவும் இருந்துவந்த பேராசிரியர் குருக்களுக்கு யாழ், பல்கலைக்கழகம் முதன்முதலாக தகைசார் பேராசிரியர் என்ற தகுதியை 1991இலும், 1998.10.04. அன்று நடைபெற்ற பொதுப் பட்டமளிப்பு விழாவில் இலக்கிய கலாநிதி எனும் கௌரவப் பட்டத்தையும் வழங்கி கௌரவப்படுத்தியது.

### சமய வாழ்வு

ஸ்வகுருவான தமது தந்தையான கார்த்திகேயக் குருக்களை ப்ரகாசானந்த நாதர் எனவும், பரமகுருவாக முனீஸ்வரம் சோமஸ்கந்தக்குருக்களை விமர்சானந்தநாதர் எனவும், முனீஸ்வரம் குமாரசுவாமிக் குருக்களை ஆனந்தானந்த நாதர் எனவும் குரு பரம்பரையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவராக மனதுள் சாக்தராகவும், புறத்தோற்றத்தில் சைவராகவும், கர்மாக்களைச் செய்வதில் வைஷ்ணவராகவும் வைதிகராவும் விளங்கியதோடு பெறுதற்கரிய உயர்ந்த உபதேசமான ஸ்ரீசோடசாக்ஷரீ உபதேசம் பெற்று தமது ஆலயத்தில் செவ்வாய், வெள்ளி பௌர்ணமி, நவராத்திரி காலங்களில் ஸ்ரீசக்ர பூஜையைச் செய்து வந்த பேராசிரியர் குருக்கள், ஸ்ரீபரசுராம கல்ப சூத்திரம் கூறும் சபர்யாக் கிரமப்படி 1957ஆம் ஆண்டு முதல் 1985ஆம் ஆண்டு வரை அதிகாலையில் இடையறாது பாஹ்யமாக ஸ்ரீ பூர்ணமேரு யந்திரத்தில் ஸ்ரீசக்ரபூஜை செய்து வந்ததோடு தொடர்ந்து மானசீகமாக ஸ்ரீசக்ரபூஜை, தேவி மஹாத்மிய பாராயணம் என்பவற்றை நியமமாக செய்து வந்தார்.

### குருத்துவப்பணி

மந்திரம், கிரியை, பாவனை என்பவற்றைத் தன்னகத்தே கொண்ட கிரியை எனும் கலையை நிகழ்த்துவதில் ஈடிணையற்று விளங்கிய பேராசிரியர் குருக்கள் தமது பன்னிரண்டாவது வயது முதலாகவே பத்து வருடங்களாக தமது தந்தைக்கு பத்ததி வாசித்து சாதகராக விளங்கியவர். தமது ஆலயத்தில் 1942ஆம் ஆண்டு முதலாக தமது மாமனாரும் முனீஸ்வரம் சோமாஸ்கந்தக் குருக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு கிரியைத் துறையில் சிறந்து விளங்கியவருமான முனீஸ்வரம் சாம்பசிவக்குருக்களின் உதவியுடனும் வழிகாட்டுதலுடனும் நவராத்திரியைத் திறம்பட நடத்திவந்தவர். அத்தோடு கும்பாபிஷேகங்கள், மஹோற்சவங்கள், சிவாசாரிய அபிஷேகங்கள் போன்ற பலவற்றை நடத்திவந்ததோடு தமது இறுதிக்காலம்வரை ஆலய அமைப்புகள், கிரியைகள், நெறிமுறைகள் பற்றி விளக்கந் தருபவராகவும் சிறப்புடன் திகழ்ந்தார்.

### சிவாச்சாரியப்பணி

முனீஸ்வரம் தேவஸ்தானத்தில் 1963இலும், நல்லூர் சிவன் கோவிலில் 1988இலும் நடைபெற்ற மஹா கும்பாபிஷேகங்களில் பிரதான சிவாசாரியாராகத் திகழ்ந்த குருக்கள், 1991இல் முனீஸ்வரம் தேவஸ்தானத்தில் நடைபெற்ற மஹாகும்பாபிஷேகத்திற்கு சர்வபோதகாசாரியராகவும் விளங்கினார்கள்.

### சண்டிஹோமம்

முனீஸ்வரத்தில் ஸ்ரீவடிவழகி அம்பிகைக்கு வசந்த நவராத்திரி காலங்களில் 1976ஆம் ஆண்டு முதலாக ஸ்ரீசண்டி ஹோமத்தையும், நல்லூரில் கமலாம்பிகைக்கு சாரதா நவராத்திரி காலங்களில் 1988ஆம் ஆண்டு முதலாக ஸ்ரீ தச சண்டிஹோமத்தையும் தாந்திரீக முறைப்படி ஆரம்பித்து தாமே பிரதான சிவாசாரியாராக திகழ்ந்த பேராசிரியர் குருக்கள் தமது துணைவியாருடன், மஹாநவமி காலங்களில் செய்து ஆரம்பித்து வைத்த சுவாஸினீ பூஜை, குமாரீ பூஜை என்பனவும் தனித்துவம் மிக்கன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஸ்ரீசக்ர பூஜை

நல்லூர் சிவன் கோவில் மண்டலாபிஷேக காலங்களில் 48 தினங்களும் மாலை வேளைகளில் இடையறாது ஸ்ரீ சக்ரபூஜை செய்துவந்த பேராசிரியர் குருக்கள், 1988இல் ஆடிப்பூர நன்னாளில் பூரண மேரு ஸ்ரீசக்ரத்தைப் பிரதிஷ்டை செய்ததோடு புங்குடுதீவு சிவன்கோவில், அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோவில், வண்ணை வீரமாகாளி அம்மன் கோவில் ஆகிய ஆலயங்களிலும் ஸ்ரீசக்ரப் பிரதிஷ்டை செய்து வைத்தார்கள்.

நாட்டின் அமைதி வேண்டி காம்ய யக்ஞமாக தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் ஆலயத்தில் 1983இலும், நல்லூர் சிவன் கோவிலில் 1985இலும், வேலணை மாரி அம்மன் கோவிலில் 1988இலும் ஸ்ரீசண்டிஹோமத்தைச் செய்த பேராசிரியர் குருக்கள் 1986இல் இலங்கை இந்து கலாசார அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க முனீஸ்வரம் தேவஸ்தானத்தில் ஸ்ரீசண்டீஹோமத்தை தொடர்ச்சியாக 27 தினங்கள் பிரதான சிவாசாரியராக இருந்து செய்து வைத்தார்கள்.

### குருகுலம் அமைத்தல்

குருத்துவப் பாரம்பரியத்தினை உரிய அடித் தளங்களுடன் உருவாக்க எண்ணங்கொண்ட பேராசிரியர் குருக்கள் அறுபதுகளில் முனீஸ்வரத்தில் ஆரம்பிக்கப்பட்ட விஸ்வ வித்யா பீடத்தில் சிவாசார்ய மாணவர்களுக்கு சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் கற்பித்து வந்ததோடு தமது இல்லத்தில் 1980இல் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீவித்யா குருகுலத்தில் தாமே காலை, மாலை ஆகிய இருவேளைகளிலும் ஸ்வர அட்சர சுத்தங்களுடன் வேதமந்திரங்களை அத்யாபனம் செய்து வந்தார்கள். இதன் விரிவான நிலை முழுநேர குருகுலமாக 1990இல் ஏற்பட்டபோதும், நாட்டின் சூழ்நிலை காரணமாக குருகுலத்தின் வளர்ச்சி யாழ்ப்பாணத்தில் தடைப்பட 1990இல் கொழும்பு சென்று செட்டியார் தெரு ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தில் குருகுலம், வேதாகம பாடசாலை என்பவற்றுடன் இணைந்த ஸ்ரீ முத்துவிநாயகர் வேதாகம ஆய்வு நிறுவனத்தை அமைத்தார்.

### சிறப்புக் கௌரவம்

இலங்கையில் மாத்திரமன்றி 1991 பெப்ரவரியில் சிங்கப்பூர் கும்பாபிஷேகத்திற்குச் சென்றதோடு, சிவநெறிக் கழகத்தின் விசேட அழைப்பின்பேரில் தென்னிந்தியா பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகர் ஆலயத்தில் 08.11.1991இல் நடைபெற்ற கும்பாபிஷேகத்திற்கு தலைமைவகித்த பேராசிரியர் குருக்களுக்கு சிவநெறிக் கழகமும், சென்னை அழகப்பா கல்லூரியும் இணைந்து 'சிவாகம ஞானபானு' எனும் கௌரவ விருதினையும், இலங்கை பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு 1993இல் 'வேதாகம மாமணி' என்றும் பட்டமளித்தும் கௌரவித்தனர். பேராசிரியர் குருக்கள், 1994இல் அவுஸ்திரேலியா சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசித்துவரும் காலங்களில் மெல்பேனில் தென்னிந்திய மற்றும் சிவாகம முறைப்படி அமைக்கப்பட்ட சிவாவின்ஞு ஆலய அமைப்பு, கும்பாபிஷேகம் ஆசியனவற்றிற்கும் 1995இல் பேர்த் நகரில் புதிதாக அமைக்கப்பட்ட பிள்ளையார் கோவில் அமைப்பு, கும்பாபிஷேகம் ஆகியனயற்றிலும் தலைமை வகித்து பங்குபற்றினார்.

### வைதிகக் கிரியை

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துவரும் காலங்களிலே அந்தணசமூகத்திடையே நிகழுகின்ற வைதிக பூர்வக் கிரியைகளையும் அவ்வப்போது அபரக் கிரியைகளையும் செய்துவைத்த பேராசிரியர் குருக்கள் அவுஸ்திரேலியா, டென்மார்க், ஐக்கிய இராச்சியம், ஸ்வீடன், சுவிற்சலாண்ட் ஆகிய நாடுகளிலும் வைதிகக்கிரியைகளைச் செய்துதவினார்.

### பிள்ளைகளும் உலகச்சுற்றுலாவும்

கௌரி, ஸ்ரீதரன் எனும் பிள்ளைச் செல்வங்களுள், மகளுடன் வாழ்ந்த பேராசிரியர் குருக்கள் தம்பதிகள் 1997இல் அவுஸ்திரேலிய பிரஜாவுரிமை பெற்றனர். இவர்கள் 1996 மார்ச்சில் முதலாவது உலகச் சுற்றுலாவாக நியூசிலாந்து, டென்மார்க், சுவிட்சலாந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கும், இரண்டாவது உலகச் சுற்றுலாவாக 1998 டிசம்பரில் நியூசிலாந்து, பெல்ஜியம், டென்மார்க், ஹொலண்ட், ஜேர்மன், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கும் சென்று உலக நாடுகளில் இந்துப் பண்பாட்டின் அம்சங்களைப் பரவச் செய்தார்.

### சம்ஸ்கிருத ஆளுமைகள்

சம்ஸ்கிருத மொழியில் ஸ்ரீ வடிவாம்பிகா பஞ்ச ரத்தினத்தை 1971இலும், ஸ்ரீ கன்யாகுமரி பஞ்சரத்தினத்தை 1972இலும், காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளுக்கு பஞ்சரத்தினத்தை 1972இலும் சமர்ப்பித்து ஆசார்ய சுவாமிகளால் பொன்னாடை போர்த்திக் கொரவிக்கப்பட்டதை வாழ்வின் உயர்பேறாகப்பெற்ற பேராசிரியர் குருக்கள் தமது குருநாதர் வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகளுக்கு ஸ்ரீகுரு ஸ்தோத்திரம், சாஸ்திரிகளின் சஷ்டியப்த பூர்த்தியில் ஆசி வேண்டி பிரார்த்தனை, துதிகள் என்பனவற்றையும் இயற்றியதோடு நல்லூர் சிவன்கோவில், முன்னேஸ்வரம் தேவஸ்தானம் ஆகியவற்றிற்கு மஹா கும்பாஷேக பிரகடனங்களையும் சம்ஸ்கிருதத்தில் இயற்றியுள்ளார்கள்.

### நூல்களியற்றுதல்

தமிழ்மொழி மூலமாக சம்ஸ்கிருத மொழிப் பயிற்சிக்கென சம்ஸ்கிருத இலகுபோதம், I, II (1960, 1962), வடமொழி இலக்கிய வரலாறு - வைதிக இலக்கியம் (1962), சைவத்திருக்கோயிற் கிரியைநெறி (1963) எனும் நூல்கள் பேராசிரியர் குருக்களால் இயற்றப்பட்டு கொழும்பு இந்து கலாபிவிருத்திச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம், கலாநிலையம் இவற்றை வெளியிட்டுள்ளதோடு இந்துப்பண்பாடு - சில சிந்தனைகள் யாழ் பல்கலைக்கழகத்தால் 1885இலும் விசேஷ திரவ்ய ஹோம மந்திரங்கள், தீபாராதனை வேத மந்திரங்கள், வேத மந்திரங்களின் தொகுப்பு கல்லச்சுப் பதிப்பாக சுழிபுரம் அமரர் சிவஸ்ரீ இராதாகிருஷ்ணக் குருக்கள் நினைவாக 1988இலும் சம்ஸ்கிருத கிரந்தாக்ஷர இலகுபோதம் 1997இலும் பேராசிரியர் குருக்களால் எழுதப்பட்டு தனித்தனி நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. இலங்கை சாஹித்ய அக்கடமி பரிசினைப் பெற்ற வடமொழி இலக்கிய வரலாறு எனும் நூலைச் சென்னை நர்மதா பதிப்பகத்தினர் 1981இலும், இந்துப் பண்பாடு சில சிந்தனைகள் எனும் நூலை சென்னை தமிழியல் பதிப்பகத்தினர் செப்டெம்பர் 1986இலும், சைவத்திருக்கோயிற் கிரியைநெறி எனும் நூலை கொழும்பு ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலய நிர்வாகத்தினர் 1992இலும் இரண்டாம் பதிப்பாக வெளியிட்டுள்ளனர். வடமொழி இலக்கிய வரலாறு, சைவத்திருக்கோவிற் கிரியைநெறி, இந்துப்பண்பாடு சில சிந்தனைகள் எனும் நூல்கள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் ஞாபகார்த்த சபையினரால் 2010இல் மறுபதிப்பு செய்யப்பட்டன. வடமொழி இலக்கிய வரலாறு, சைவத்திருக்கோவில் கிரியை நெறி என்பன நாகர்கோவில் காலச்சுவடு பதிப்பாக வெளிவந்தமையும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

ஸ்ரீசண்டிஹோமம் பத்ததி, ஸ்ரீ கணபதி ஹோமபத்ததி, விக்னேஸ்வரர். சுப்பிரமணியர், சிவன், தேவி, பைரவர், மஹாவிஷ்ணு ஆகிய மூர்த்திகளுக்குரிய பிரதிஷ்டை உற்சவ பத்ததிகளை அச்சுப் பதிப்பதற்கு ஏற்றதாக தொகுத்து தயார்படுத்தி வைத்திருந்ததோடு பேராசிரியர் குருக்கள் சைவத் திருக்கோயிற் கிரியைநெறி நூலை ஆங்கில மொழியில் சற்று விரிவுபடுத்தி தாமே மொழிபெயர்த்துவந்தார்.

இவற்றைவிட பல நூல்களில் ஆசியுரை, அணிந்துரை, நூன்முகம், முன்னுரை, சிறப்புரை என பல்வேறு நிலைகளில் ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. பேராசிரியர் குருக்கள் நவாலியூர் சோ.நடராஜனின் வடமொழி இலக்கிய வரலாறு (செம்மொழிக்காலம்) நூலின் உருவாக்கத்திற்கும் பெரிதும் உதவியுள்ளார்கள்.

**உரைகள்**

வட இலங்கை சம்ஸ்கிருத சங்கம் 17.01.1953 இல் மதிப்புக்குரிய திருவாளர் சு. நடேசன் தலைமையில் திருநெல்வேலி பரமேஸ்வரக் கல்லூரியில் நடைபெற்ற முதலாவது சம்ஸ்கிருத மகாநாட்டில் சம்ஸ்கிருத இலக்கியங்கள் பற்றி உரையாற்றிய பேராசிரியர் குருக்கள் அறுபதுகளில் சம்ஸ்கிருத இலக்கியங்கள் என்ற தலைப்பில் வானொலியில் தொடர்ச்சியாக உரை நிகழ்த்தினார்.

உயர் மாநாடுகள் பலவற்றிலும் அவ்வப்போது கலந்துகொண்டு ஆய்வுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகள் சமர்ப்பித்தார். இலங்கை கல்வி உயர்கல்வி அமைச்சின் இந்துசமய பாட ஆலோசனைக் குழுவில் 1976 - 1985 வரையில் அங்கம் வகித்த பேராசிரியர் குருக்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திலும் அளப்பரிய சேவைகள் பலவற்றை வழங்கிவந்துள்ளார்கள்.

**மணிவிழா**

கொழும்பு ராமகான சபையினரால் 1976இல் இந்து நாகரிகத் துறைப் பேராசிரியராக நியமனம் பெற்றதையொட்டியும், மணிவிழாவையொட்டியும் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும், பத்திரிகையாளர் சமூகத்தினரால் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் 1981இலும் விழாக்கள் எடுக்கப்பட்டன.

**சமூக சேவை**

பேராசிரியர் குருக்கள் பிராமண சமாஜம், அகில இலங்கை பிராமண குருசேவா சமூகம், சிவானந்த குருகுலம், அகில இலங்கை சிவப்பிராமண சங்கம் முதலான அமைப்புக்களில் குறிப்பிடத்தக்க அங்கத்தவராக இருந்து அளப்பரிய பணியாற்றியவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வு நிறுவனம், நல்லூர் சிவன்கோவிலில் இயங்கிவரும் நியந்த்ரீ, ஐக்கிய இராச்சியத்தில் இயங்கிவரும் வேதாகமசபா ஆகிய அமைப்புக்களின் போஷகராக இருந்து வழிகாட்டி வந்தவர்.

**சுயசரிதம்**

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் திருமதி பாலம் லக்ஷ்மணனின் தூண்டுதலின்பேரில் பேராசிரியர் குருக்கள் தமது சுயசரிதத்தை 1998ஆம் ஆண்டு முதலாக எழுதிவந்தார்.

**மனைவியின் மறைவு**

அறுபது ஆண்டுகளாக இணைபிரியாத தம்பதியினராக வாழ்ந்து வருகையில் பேராசிரியர் குருக்களின் தர்மபத்னி ஸ்ரீமதி திரிபுரசுந்தரி அம்மாள் தமது 72 ஆவது வயதில் ஆஸ்துமா மற்றும் மாரடைப்பு நோயினால் உலகச் சுற்றுலாவின்போது ஐக்கிய இராச்சியத்தில் 1999.10.04இல் தீர்க்கசுமங்கலியாக இறையடி சேர்ந்தார்கள். அவர்களுக்காக 1999,11.04இல் நினைவு மலரும் வெளியிடப்பட்டது.

**இறுதிக்காலம்**

எழுபத்தொன்பதாவது வயதைப் பூர்த்தி செய்து இந்து சமயத்திற்கும், சமூகத்திற்கும், அந்தண சிவாசார்ய சமூகத்திற்கும், எல்லாவற்றிற்கும் மேலாக கல்விச் சமூகத்திற்கென்றே பணியாற்றி, கலங்கரை விளக்கமாக இருந்து வழிகாட்டி வந்த பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள் அவர்கள் 07.08.2000 அன்று இறையடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு மலர்

பேராசிரியர் குருக்களையும் அவரது சேவைகளையும் கொரவிக்கும் வகையில் "கைலாசநாதம்" எனும் ஆய்வடங்கல் வெளியிடப்பட்டது.

ஞாபகார்த்த சபை

பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் ஞாபகார்த்த சபை 2000..09.24 அன்று நல்லூர் சிவன் கோவிலில் ஆரம்பிக்கப்பட்டது.

இஞ்ஞாபகார்த்த சபையின் முயற்சியால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இந்துநாகரிகம், சம்ஸ்கிருதம், இந்துதத்துவம் ஆகிய பாடங்களை பட்டதாரிக் கற்கையில் சிறப்புத்தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கான பரிசில் நிதியம் ஆரம்பிக்கப்பட்டதோடு நினைவுப் பேருரை நிகழ்த்துவதற்கான நிதியமும் யாழ்ப்பாணப் பல்கலைக்ககத்திற்கு வழங்கப்பட்டது.

ஆராய்ச்சி நிறுவனம்


வாழ்நாட் பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா, கைலாசநாதக் குருக்கள் ஆராய்ச்சி நூலகம் 11:03.2001 அன்று லாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிறைவுரை

அளப்பரிய சேவையாற்றிய பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா கைலாசநாதக்குருக்கள் அவர்களது கல்வி, சமயம், சமூகம், சமூகமேம்பாடு. மொழி , இலக்கியம், வரலாறு, கிரியை மரபு போன்ற பல்வேறு பரிணாமத்தில் விளங்கும் ஆளுமைகள எமக்கு என்றும் வளமூட்டுவனவாக விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 113. மயிலணி, சீ. சர்வேஸ்வரக்குருக்கள்

(27.02.1922 - 27.12.1996)

யாழ்ப்பாண நகரத்தின் வட பால் சுன்னாகம் மயிலணிப்பதியில் கௌண்டின்ய கோத்திரத்தில் சிவஸ்ரீ சி. சிவசுப்பிரமணியக் குருக்கள் - இலட்சுமி அம்மா தம்பதிகளுக்கு சிரேஷ்ட புத்திரராக துர்மதி வருடம் மாசி மாதம் 12 ஆம் திகதி (27 -02-1922) பிறந்தார். இவருடன் சாரதாம்பாள், தாட்சாயிணி, சச்சிதானந்தக் குருக்கள், பரமேஸ்வரசர்மா ஆகியோர் உடன்பிறப்புக்களாவர்.

மயிலணி சைவ வித்தியாசாலையில் கல்வியை முறைப்படி கற்று சுன்னாகம் சதாசிவ பிராசீன பாடசாலையில் தென்னிந்திய குருவான சிதம்பர சாஸ்திரிகளிடம் வேத, சிவாகம சாஸ்திரங்களை முறைப்படி கற்று வந்ததோடு இலக்கண இலக்கியங்களையும் கற்று ஒரு சிறந்த ஆசானாகத் திகழ்ந்தார். தமது தந்தையாருடன் சகல ஆலயங்களிலும் நடைபெறும் கிரியைகளில் பங்குபற்றி உதவிகள் செய்து குருத்துவத்திற்குரிய முறைகளைக் கற்றுணர்ந்தார். பின்னர் ஆசார்ய அபிஷேகம் தகப்பனாரினால் செய்யப்பெற்று சிறந்த ஒரு குருவாகத் திகழ்ந்தார். தனது 18 ஆவது வயதில் கோப்பாய் நீலகண்டக்குருக்கள் தம்பதியினரின் மகளான மனோன்மணி அம்மாவை வதுவை புரிந்து சிறந்த இல்வாழ்க்கையை மேற்கொண்டார். இவர்களுக்கு ஆறு பிள்ளைகள். சகல நற்பண்புகளையும் அறிவாற்றலையும் பெருக்கி உரிய காலத்திலே திருமணமும் செய்து வைத்தார்.

இவர் தமது குருத்துவகாலத்தில் மயிலணி கந்தசாமி கோவில், சூராவத்தை முத்துமாரிஅம்மன் கோவில் ஆகியவற்றின் பிரதம குருவாகவும், பூசகராகவும் இருந்ததோடு யாழ். குடாநாட்டில் பல ஆலயங்களுக்கு குருத்துவப் பணிக்கும், அலங்காரங்களுக்கும், ஆசாரியாராகத் திகழ்ந்துவந்தார். சோதிடக்கலையில் சிறந்து மக்களின் கிரக தோஷங்களை எடுத்துக்கூறி பரிகாரம் செய்து மக்களின் மனதில் ஒரு நீங்காத இடத்தைப் பெற்று 'பெரிய ஐயா' என்ற ஒரு ஸ்தானத்தை அடைந்தார். வைதீக கிரியைகளை அந்தணர் இல்லங்களில் செய்விப்பதோடு அவைபற்றிய சந்தேகங்களுக்கு விளக்கம் கூறி வந்தார். வாஸ்து விதிகளுக்கமைய வீடு, கிணறு முதலியவற்றின் நிலையங்கள் எடுத்தலிலும் சிறந்து விளங்கினார். இசைவல்லுநராகவும் திகழ்ந்தார். திருமுறைகள் ஓதுதல், புராணபடனம், ஊஞ்சற்பாடல்கள் பல இராகங்களில் பாடி மகிழ்வித்தல் இவரது சிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்துப்படிக் கலையில் மேன்மைபெற்றவராக சுமார் ஐம்பது கோவில்களுக்குமேல் அலங்கரணாச்சாரியாராக பல வருடங்கள் பணியாற்றியவர்.


இவர் மஹோற்சவம் செய்த கோவில்கள்:

மயிலணிக் கந்தசுவாமிகோவில், ஏழாலை சிவன்கோவில், சூராவத்தை முத்துமாரிஅம்மன் கோவில், காரைநகர் மணற்காடு முத்துமாரிஅம்மன் கோவில், பயிரிக்கூடல் முருகன் கோவில், வல்வை சிவன் கோவில், கோப்பாய் வெள்ளெருவைப்பிள்ளையார் கோயில்,

27-12-1996 வெள்ளிக்கிழமை அபர பக்ஷ திருதியை திதியும் பூச நட்சத்திரமும் கூடிய புண்ணிய நன்னாளில் இறைபதம் எய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 114. நீர்வேலி, சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள்
(22.04.1922 - 20.12.2000)

அண்மைக்காலங்களில் நமது கண்ணுக்கு முன்னே வாழ்ந்து மறைந்தவர் நீர்வேலி சிவஸ்ரீ சுவாமிநாத. இராஜேந்திரக் குருக்கள் அவர்கள். குரு பாரம்பரியத்தின் கொடியாக, மரபுவழித் தொடர்பின் பாலமாகத் திகழ்ந்தவர் அவர். பழமையான நெறி முறைகளை வழுவாது பாதுகாத்து, புதிய சிந்தனைப் போக்குகளையும் போதிய அளவு உள்வாங்கிப் புகழ் பூத்த ஒரு பூசுரரின் மாதிரி வடிவமாகத் திகழ்ந்தவர் இவர். நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோயிலின் பிரதமகுருவாக இருந்தவர்.

நீர்வேலி சிவஸ்ரீ சுவாமிநாதக் குருக்கள் - வாலாம்பிகை தம்பதிகளின் மகனாக 22.04.1922 சித்திரைப் புனர்பூச நாளில் பிறந்தவர் இராஜேந்திரக் குருக்கள். இளமையிலேயே பாடசாலைக் கல்வியோடு குருத்துவக் கல்வியையும் தந்தையிடம் மரபுவழிப்படக் கற்றதுடன், கோப்பாய் ஸ்ரீநிவாச சாஸ்திரிகளிடமும் பாடம் கேட்டார். பிரம்மஸ்ரீ தி. சீதாராம சாஸ்திரிகள், கோப்பாய், பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா ஆகியோரிடம் நெருங்கிப் பழகிய குருக்களவர்கள் இவர்கள்மூலம் தம் அறிவை வளம் படுத்திக்கொண்டார். இவ்விருவரும் அவருக்கு இடக்கரம் வலக்கரமாக இருந்தவர்கள்.

அல்வாய் வீரபத்திரகோவில் பிரதமகுரு சிவஸ்ரீ சிவசாமிக் குருக்கள் - வீணாகானவிபூஷணி தம்பதிகளின் மகள் சம்புநாதேஸ்வரி அம்மாவை 1942ஆம் ஆண்டில் திருமணம் செய்து ஒரு புதல்வரையும் ஆறு பெண்களையும் பெற்று வளர்த்து உரியகாலத்தில் திருமணம் செய்துவைத்துத் தமது கடமைகளை நிறைவேற்றினார்.

ஆஜானுபாகு என்று சொல்லத்தக்க நெடிதுயர்ந்த தோற்றம். மெலிந்து சற்றே முன் வளைந்த உடல்வாகு. நெற்றியில் துலங்கும் வெண்ணீற்றுப் பூச்சும் சந்தனத் திலகமும். அவற்றின் கிழ் தீட்சண்யமான விழிகள். எடுப்பான நாசி. கைகளை வீசி நிதானமாக நடக்கும் கம்பீர நடை. இதுதான் இராஜேந்திரக் குருக்களின் தோற்றப் பொலிவு.

ஒரு சிவாச்சாரியார் எப்படி இருக்கவேண்டும் என்பதற்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனை அம்சங்களும் அவரிடம் இருந்தன. வெண்கலக்குரலில் வேதபாராயணம். ஆகம நெறிமுறை ஆராச்சியும் அவற்றின் வழி நிதானமான கிரியை முறைகளும். புராண இதிகாச நல்லறிவும் மேடைகளில் அவற்றின் விளக்கங்களை மக்களுக்கு எடுத்துரைக்கும் வாக்குவன்மை, புராணபடன ஆற்றல், அழகாகப் பயன் சொல்லுதல், இவையெல்லாம் அவரது ஆளுமைகள்.

ஜோதிடத்திலும் வல்லமை கொண்டவர். முகூர்த்தம் கணித்து தோஷங்களை விலக்கி சுப நேரத்தில் கிரியைகளை நிறைவேற்றுவதில் குறியாக இருப்பார். பலன் கேட்பதற்கும் நாள் குறிப்பதற்கும் பொருத்தம் பார்ப்பதற்கும் அடியார் கூட்டம் எந்நேரமும் குழமிநிற்கும். பார்வை பார்ப்பது, நூல்கட்டுவது என்பவற்றுக்கும் ஒரு கூட்டம் காத்திருக்கும்.

நிலையம் வகுப்பதில் மிக நுணுக்கமான திறமை கொண்டவர் குருக்களவர்கள். முக்கியமாக ஆலயங்களில் புதிய கட்டடங்கள் அமைக்கும்போது ஏற்படும் சிக்கல்களை இலகுவாகத் தீர்த்து சாஸ்திர விரோதமில்லாமலும் சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையிலும் எந்தவித இடையூ றில்லாமலும் நிலையம் அமைத்துக் கொடுப்பார். ஏற்கெனவே இருக்கும் கட்டிடங்கள், மரங்கள், கிணறு முதலியவற்றை அழிக்காமல் பேணிப் பாதுகாத்து அவற்றுக்கேற்ற வகையில் பரிகாரங்களைத்தேடும் தனித் திறமை அவரிடம் மட்டுமே காணப்படும் சிறப்பியல்பாகும்.

தம்மோடு இணைந்து செயல்படும் சிஷ்யர்கள், நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருடைய குடும்பங்களில் நிகழும் வைபவங்களில் கலந்துகொண்டு வேண்டிய உதவிகளைச் செய்து தமது பங்களிப்பை முழுமையாகச் செலுத்துவார்.

முற்கோபம் இவரிடம் காணப்பட்ட ஒரு பலவீனம். யாவரையும் நடுங்கச் செய்யும் அந்தக் கோபம் நெருங்கிப் பழகுபவர்களுக்கு ஓர் ஆசிர்வாதமாக அமைவதுண்டு.

தமிழகப் பேரறிஞர் வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன் அவர்களைத் தமது குடும்ப நண்பராகப் பெறும் பாக்கியம் கொண்டிருந்தவர் குருக்கள். அடிக்கடி அவரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துத் தமது இல்லத்திலேயே தங்கச்செய்து பல இடங்களிலும் சொற்பொழிவுகளுக்கு அழைத்துச் செல்லுவார். தாமும் பல தடவை தமிழகம் சென்று அவருடன் தங்கியிருக்கிறார். அங்குள்ள பல ஆலயங்களுக்கும் சென்று வழிபாடு செய்து கிரியைகளிலும் பங்கு கொண்டிருக்கிறார்.

கி. வா. ஜ. மட்டுமன்றி வேறும் பல நல்லறிஞர்களின் தொடர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கிருந்திருக்கிறது. யாழ்ப்பாணத்துப் புலமையாளர்கள் பலரும் ஒரு தடவையாவது அவரது இல்லத்திற்கு விஜயம் செய்திருப்பார்கள்.

பல்வேறு அறிஞர்களுடன் அவர் நல்ல நட்பை பேணினார். பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள், வியாகரணசிரோமணி அச்சுவேலி குமாரசுவாமிக்குருக்கள். சீதாராமசாஸ்திரிகள், பஞ்சாட்சர சர்மா போன்ற அக்காலத்தில் புகழ்பெற்ற சம்ஸ்கிருத அறிஞர்கள் சிவாச்சார்யார்களுடன் இராஜேந்திரக்குருக்கள் மிகவும் நெருக்கமான உறவைப் பேணினார். அவர்களது பணிகளுக்கு உதவியதோடு, தம் பணிகளிலும் அவர்களை ஈடுபடுத்திக் கொண்டார். இவ்வுறவு வழியே அச்சுவேலி குமாரசுவாமிக்குருக்களின் சுப்பிரமணிய பிரதிஷ்டாவிதியை குருக்கள் அவர்களே பதிப்பித்திருக்கிறார். சீதாராமசாஸ்திரிகளைக் கொண்டு மாம்பழத்திருவிழா, விஸ்வரூப தர்சனம் என்பவற்றை சம்ஸ்கிருதத்தில் கதை வடிவில் உத்ஸவ பத்ததியாக எழுதத்தூண்டினார். அதனை அடிப்படையாக கொண்டு நீர்வேலி கந்தசுவாமிகோயிலில் உத்ஸவத்தை நெறிப்படுத்தினார்.

முருகப்பெருமான் குறித்த சம்ஸ்கிருத மொழியிலமைந்த பத்ததி நூல்களை பதிப்பிப்பதில் பெரும் அக்கறை காட்டினார். அக்காலத்தில் எவரிடமும் குமாரசூக்தம் கைவசம் இல்லாதிருந்தபோது திருச் செந்தூரிலிருந்து குமாரசூக்தத்தை கொண்டு வந்தார். அது நாகரலிபியில் இருந்த போது கிரந்த லிபிக்கு மாற்றி பதிப்பித்தார். அவர் காலத்தில் குமாரதந்திராகமமும் யாழ்ப்பாணத்தில் குருக்களிடம் மட்டும்தான் இருந்தது என்றும் சிலர் குறிப்பிடுகிறார்கள்.

இறைவன் முருகனுக்கு புதிதாக, தனித்துவமாக, சிறப்பாக விழாக்களை ஆகமோக்தமான - புராணோக்தமான முறையில் செய்ய வேண்டும் என்பது குருக்களின் பேரவா. எனவே, நீர்வேலிக் கந்தசுவாமி கோயிலில் முன்னரே நடைபெற்று வந்த சித்திரை மஹோற்சவத்திற்கு மேலதிகமாக ஸ்கந்த சஷ்டி புண்ணிய காலத்திலும் தனித்துவமான கொடியேற்றம், தீர்த்தோற்சம், யாகபூஜை, பலி என்பவற்றோடு கூடிய ஸ்கந்த மஹோற்சவத்தை நெறிப்படுத்தினார். குமாரதந்திர அடிப்படையில் ஏழு நாள் மஹோற்சவத்தை நடைமுறைப் படுத்திக் காட்டினார். அந்த உத்ஸவத்தில் ஐந்தாம்நாள் விஸ்வரூபதரிசனம் என்ற திருப்பெருவடிவக்காட்சியை விழாவாக நடத்தினார். ஆறாம் நாள் சூரசம்ஹாரத்திற்கு முன் வேல்பெறும் காட்சியை நிகழ்வாக நடாத்தினார். சூரசம்ஹாரத்திற்கு இறைவன் எழுந்தருளும் போது ஸ்கந்தபுராணத்தில் உள்ளது போலவே அந்த நிகழ்வு நடைபெறும் வண்ணம் ஏற்பாடு செய்தார்.

இவை மட்டுமல்ல, குருக்கள் அவர்களை யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் உள்ள கோயில்களில் கோயில் கட்டட அமைப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகம், வழிபாடு போன்றவற்றிற்கு ஆலோசனை வழங்குமாறு பலரும் அழைப்பர். வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமம், வன்னி என்ற பலபாகங்களிலும் இவ்வாறான ஆலோசனைகளை வழங்கும் பொருட்டு குருக்கள் அவர்கள் சென்றிருக்கிறார். மிகவும் சர்ச்சைக்குரிய விடயங்களை மிக லாவகமான முறையில் குருக்கள் தீர்த்து வைத்து பாராட்டுப் பெறுவார். அவருக்கு வாஸ்து சாஸ்திரம், ஜோதிடம் என்பவற்றில் மிகுந்த நிபுணத்துவம் இருந்தது.

அறிவும், ஆற்றலும், இறையன்பும் மிக்க இளைஞர்களை இனம்கண்டு அவர்களை ஊக்குவிக்கும் அருமையான பண்பு இவரிடம் இருந்தது. இவரது முற்கோபத்திற்கு அஞ்சிப் பெரியவர்கள் பலர் எட்ட நிற்கும்போது பாடசாலை மாணவர்கள் பல்கலைக்கழக இளம் ஆய்வாளர்கள், இளைஞர்கள் போன்றோர் தமது ஐயங்களைத் தெரிவிக்க இவரிடம் வந்து மிக நெருங்கி உரிமையோடு பழகுவார்கள். அவ்வேளைகளில் இவரிடம் காணப்படும் வாத்சல்யம் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதது. அனுபவித்தவர்களுக்கே தெரியும்.

இன்று பிரபல பேச்சாளர்களாகவும் சமயப் பற்றாளர்களாகவும் சமூக சேவையாளர்களாகவும் திகழ்கின்ற திருவாளர்கள் ஆறு. திருமுருகன், கனகசபாபதி நாகேஸ்வரன், ஏ. அனுசாந்தன் முதலியோர் மிகச் சிறுபராயத்திலேயே குருக்களவர்களால் இணங்காணப்பட்டு ஆசிர்வதிக்கப்பட்டவர்கள்.

வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் பல ஆலயங்கள் ஐயா அவர்களின் குருத்துவத்தால் பொலிவுற்றிருந்தன. வரணிப்பகுதியிலும், வல்வெட்டித் துறையிலும் நீர்வேலி, கோப்பாய்ப்பகுதியிலும் உள்ள பல ஆலயங்கள் இராஜேந்திரக்குருக்களின் நேரடி வழிகாட்டலில் தனித்துவமான மரபுவழிக் கிரியைகளைப் பேணுபவையாக இருந்திருக்கின்றன. இவற்றுள் ஒரு சில ஆலயங்கள் நவீனத்துவ நீரோட்டத்தில் கலந்து ஆடம்பர மாற்றங்களைப் பெற்றுவிட்ட போதிலும் ஏனையவை இன்னும் அவரது பெயர் சொல்லி அவர் வழியிலேயே நடைபெறுகின்றன.

நீர்வேலிக் கிராமம் அவரைத் தன் ஆத்மாவில் இணைத்திருக்கிறது. இந்து சமயவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையம் பாலர்விடுதி வலி. கிழக்கு ப. நோ. கூ. சங்கம் ஆகியவற்றின் ஆலோசகராகவும் சிவசங்கர பண்டிதர் ஞாபகார்த்த சபையின் கௌரவ உறுப்பினராகவும் திகழ்ந்தார். இவற்றோடு நின்றுவிடாமல் சிவானந்த குருகுலத்தின் நிர்வாக உறுப்பினராகவும் கி. வா. ஜ. மணிவிழாச்சபை, சீதாராம சாஸ்திரிகள் மணிவிழாச்சபை ஆகியவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய உறுப்பினராகவும் அவர் செயற்பட்டமை சமூகமட்டத்தில் அவரது காத்திரமான பங்களிப்பைக் காட்டி நிற்கிறது.


தீவிரமான முருகபக்தரான ஐயா அவர்கள் தமது ஆலயத்தில் கந்தரனுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, திருமுருகாற்றுப்படை முருகன் திருவிசைப்பா, வேல் விருத்தம், மயில்விருத்தம், சேவல்விருத்தம் முதலிய பாடல்களை அடியார்கள் ஓதச் செய்து தாமும் அவர்களுடன் இணைந்து பாடி மகிழ்பவர். இவற்றை நூல்வடிவமாகவும் வெளியிட்டிருக்கிறார். இவைதவிர வேறும்பல தமிழ் சமஸ்கிருத நூல்களையும் அச்சுவாகனமேற்றி வெளியிட்டு ஒரு சிறந்த பதிப்பாளராகவும் விளங்குகிறார்.

இவ்வாறு நிறைவாழ்வு வாழ்ந்த குருக்களவர்கள் 20.12.2000 இல் சிவப்பேறு பெற்றார்.

அவரது மகன் சிவஸ்ரீ இராஜேந்திர. சுவாமிநாதக்குருக்கள் இப்போது அவரது பணிகளை மேற்கொண்டு வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 115. அருள்ஜோதி, ஸ்கந்த . சாம்பசிவ சிவாச்சாரியார்

**(22.07.1922 - 07.02.1996)**

ஈழத்துச் சிவாச்சாரிய மரபின் மகத்தான வரலாற்றுப் பக்கங்களை புரட்டுகின்றபோது நம் முன்னே கம்பீரமாகத் தோற்றமளிக்கின்றார் அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்.

ஷடமர்ஷண கோத்திரத்தின் வழிவந்த நல்லூர் வைரவர் கோயில் ஐயா என எல்லோராலும் நன்கு அறியப்பட்ட பண்டிதர் சபாபதிக் குருக்களின் மைந்தன் கந்ததாசக் குருக்கள் தர்மாம்பாள் தம்பதியினருக்கு சிரேஷ்ட புத்திரனாக 22.07.1922 ஆடித் திருவாதிரை நன்னாளில் பிறந்தார். அன்னார் தமது பாடசாலைக் கல்வியை பரமேஸ்வராக் கல்லூரியில் பெற்றார். இவரின் ஒருசாலை மாணாக்கராக மாவை சு. து. ஷண்முகநாதக் குருக்கள் விளங்கினார். ஆங்கிலம், கணிதம், புவிச்சரிதவியல், தமிழிலக்கியம் போன்ற பாடங்களில் நிபுணராக விளங்கினார். எதையும் பார்த்தவுடன் அப்படியே திருப்பி செய்யும் ஆற்றல் வாய்ந்தவராகக் காணப்பட்டார்.

சம்ஸ்கிருதக் கல்வியை சிதம்பர சத்திரிகளிடமும், தன் தந்தையாரிடத்திலும் கற்றறித்தார். பிராசீன பாடசாலையில் கற்று பண்டிதரானார். அதே பாடசாலையில் சம்ஸ்கிருதம் கற்று சம்ஸ்கிருதத்தில் பாலபண்டிதர் பட்டம் பெற்றார். கணீர் என்ற சிம்மக் குரலும் எதற்கும் அஞ்சா நெஞ்சரமும். நேர்மைத் திறனும் தவறை இடித்துரைக்கும் தன்மையும் தனது நியாயங்களை தக்க சான்றுகளைக் கொண்டு நிறுவும் தன்மையும், சமயோசித புத்தியும், அவருக்கு குருமார் மத்தியில் தனியான கௌரவத்தினையும், மரியாதையையும் பெற்றுக் கொடுத்தன. நயினை ஐ கைலாசநாதக் குருக்களின் கைகளினால் சிவாசாரியாபிஷேகம் செய்யப்பெற்ற சாம்பசிவக் குருக்கள், ஈழத்தின் தலைசிறந்த சிவாச்சாரியார்களுடன் இணைந்து பணியாற்றிய பெருமைக்குரியவர்.

இணுவில் இராமநாதக் குருக்கள், கோப்பாய் வைரவநாதக் குருக்கள், உரும்பிராய் சபாரத்தினக் குருக்கள், உரும்பிராய் முத்துக்குமாரசுவாமிக் குருக்கள், நவாலியூர் விஸ்வநாதக் குருக்கள், அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள், மாதகல் செல்லப்பாக் குருக்கள், ஊரெழு வைத்தியநாதக் குருக்கள், வட்டுக்கோட்டை குருமூர்த்தி குருக்கள், காரைநகர் கணபதீஸ்வரக் குருக்கள், சுப்பிரமணிய சாஸ்திரிகள், நாராயணசாஸ்திரிகள், நல்லூர் குமாரசுவாமிக் குருக்கள், பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள், ஊரெழு பெரிய குருக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தங்கேணி சிவசாமி குருக்கள், சிவலிங்கப்புளியடி மதுரக் குருக்கள் போன்ற நலைசிறந்த சிவாச்சாரியார்களுடன் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

சர்வசாதகாசிரியராக, போதகாசிரியராக, பிரதிஷ்டா பிரதமகுருவாக, உபநயன குருவாக, வைதிக குருவாக, தீட்சா குருவாக என்றவாறு பல்வேறு வழிகளில் திறமையாக செயற்பட்ட ஒருவர்.

மணிமந்திர ஔஷதாலயம் என்னும் பெயரில் மருத்துவ சேவைகள் மற்றும் ஆன்மீக சேவைகளை முன்னெடுத்திருந்தார். லங்கா சித்த ஆயர்வேதக் கல்லூரியில் கல்விகற்று M.I.H & M.D.G & D.A.M ஆகிய பட்டங்களை பெற்றிருந்தார். இவரிடம் வைத்தியத்திற்காக கத்தோலிக்க மக்கள்கூட வருகை தந்திருந்தனர். நாயன்மார்கட்டில் உள்ள இவரது இல்லத்தில் விடுதி வசதியுடன் கூடிய வைத்திய சாலையாக அருள்ஜோதி இல்லம் விளங்கியது. மனநோய் குணப்படுத்தலில் மிகுந்த புகழ் பெற்றவராக விளங்கினார்.

1962ம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் சகோதரன் அனுருத்த ரத்வத்தவுக்கு தீராத நோய் ஏற்பட்டு இலங்கையின் அனைத்து பிரபல மருத்தவர்களாலே கைவிடப்பட்டிருந்த நிலையில் சாம்பசிவ குருக்களின் பெருமையினை கேள்விப்பட்ட சிறிமாவோ குடும்பம் இவரை பலாலி விமானநிலையத்தின் ஊடாக விசேட விமானத்தில் அழைத்தனர். 3 நாட்களில் அவரது நோய் குணமாகியது. இவரின் மகத்துவத்தை நன்கு பாராட்டிய சிறிமாவோ குடும்பத்தினர் மாந்திரிக பூஷண எனும் கௌரவ பட்டத்தை வழங்கி, பலத்த சன்மானமும் செய்தனர். அத்தகு பெருமை மிகுந்தவர் சாம்பசிவக் குருக்கள் ஐயா அவர்கள்.

சாம்பசிவக் குருக்கள் புத்தகங்கள்மீது அலாதிப் பிரியமாக இருந்தார். அருள்ஜோதி இல்லத்தில் ஒரு நூலகமே இருந்தது. சமஸ்கிருத புத்தகங்கள் வைத்தியப் புத்தகங்கள் ஜோதிட புத்தகங்கள், தமிழ் இலக்கிய இலக்கண புத்தகங்கள், நிகண்டு, அரிச்சுவடிகள் என அவை எண்ணிறந்தவை. அழகான கையெழுத்து வாய்க்கப்பெற்ற சாம்பசிவக் குருக்களின் கைகளால் எழுதப்பட்ட ஏராளமான பத்ததிகள் இன்று புத்தகங்களாக வெளிவந்துள்ளன.

1968ம் ஆண்டு ஆபஸ்தம்ப பூர்வ பிரயோகம், அபர பிரயோகம் என இரண்டு நூல்களை மிகத் தெளிவான பதிப்பில் தருகின்றார். இந்தப் புத்தகங்கள் உலகளாவிய ரீதியில் பிரபல்யம் அடைந்தன. புராணபடனம் செய்வதில் அவருக்கு நிகர் அவரே. கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம். சிதம்பர புராணம், திருச்செந்தூர் புராணம் என அவர் பிரபல பௌராணிக வித்தகராகத் நிகழ்ந்தார். திருவாதவூரடிகள் புராணத்திற்கு விளக்கம் கூறக்கூடியவர்கள் ஒரு சிலரே. சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் மார்கழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதத்தில் திருவாதவூரடிகள் புராண படனம் நடக்கும். அவ்வேளைகளில் அன்னாரே வருகைதந்து தன் கணீர் குரலினாலே பொருள் கூறுவார். அதைக் கேட்பதற்கென்றே அடியார் கூட்டம் கூடும்.

மட்டுவில் ம. க. வேற்பிள்ளை அவர்களின் உரையினையே இவரும் கைக்கொண்டு பொருள் கூறுவார். யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் புராண படன வகுப்புக்களை நடத்திய பெருமைக்குரியவர்.

நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளுடன் நெருங்கிய நட்பு பாராட்டியவர். அதன் காரணமாக நல்லை ஆதீன பீடாரோகண விழாக்கள் மற்றும் வைபவங்களைத் தலைமையேற்றுச் செய்த பெருமைக்குரியவர், தற்போதைய ஆதீன சுவாமிகளுக்கு ஆன்மீக போதனைகளை செய்தவர்.

இவர் தற்காப்புக் கலைகளிலும் (Martial Ants) வல்லவர். சிலம்பம், கராத்தே தீப்பந்தம் சுற்றுதல், வாள்வித்தை போன்றவற்றில் கைதேர்ந்தவர். வேட்டைத் திருவிழாக் காலங்களில் இவரது திறமைகளைக் காணலாம். இக்கலைகளை இளைய சமுதாயத்தினரும் பயன்பெறும் வகையில் பயிற்றுவித்தவர்.

1994ம் ஆண்டு இலங்கையின் முதலாவது இந்துமத குருபீடாதிபதியாக அனைவராலும் தெரிவுசெய்யப்பட்டு இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் தனது ஆன்மீக பணிகளை மேற்கொண்டவர். இவரது இல்வாழ்க்கையை நோக்குகின்றபோது. முள்ளியவளை கல்யாண வேலவர் ஆலயத்தின் குருவாகத் திகழ்ந்த பிரம்மஸ்ரீ கணேசையர் செல்வநாயகி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி கௌரியம்மா ளையும் தஞ்சாவூர் ப்ருகதீஸ்வரர் கோவில் பூஜா பரம்பரையைச் சேர்ந்த ஜெகதீஸ்வர ஐயர் பிருகத்குசாம்பாள் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி செல்லம்மாவையும் திருமணம் செய்து பதினாறு பிள்ளைச் செல்வங்களையும் பெற்று பெருவாழ்வு வாழ்ந்த ஒரு பெரியார்.

தமிழகத்தின் திருவாரூர் ஹோமியோபதி கல்லூரியில் கல்விகற்று ஹோமியோபதியிலும் சிறந்து விளங்கினார். சித்த மற்றும் யுனானி வைத்திய முறைகளை ஒருங்கிணைந்த மருத்துவம் எனும் பெயரில் வைத்தியப் பணிகளை மேற்கொண்டார்.

மண்டைதீவிலுள்ள அனைத்து ஆலயங்களிலும் இவரது சேவை பரிபூரணமாக கிடைத்தது. பல பட்டங்களைப் பெற்றிருந்தாலும் சிவாச்சாரிய சிம்மம் என்ற பட்டம் எல்லோர் மத்தியிலும் பிரபல்யமானது. கணீர் குரலினாலும் எடுத்துக் கொண்ட செயலை கனகச்சிதமாகச் செய்வதாலும் இந்தப் பட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்கு மிகப் பொருத்தமாக இருந்தது. தன் மைந்தர்களை தன் வழியில் உருவாக்கி இன்று உலகில் அவர்கள் பல பாகங்களிலும் ஆன்மீக பணிகளை முன்னெடுத்துச் செல்லவைத்தார்.

ஈழத்து சிவாச்சாரிய பாரம்பரியத்தின் மிகப் பெரும் ஜாம்பவானாக திகழ்ந்த சாம்பசிவ குருக்களை 1995ம் ஆண்டு மாபெரும் இடப்பெயர்வு வெகுவாகப் பாதித்தது. அவர் கட்டிக் காப்பாற்றிய புத்தகங்களை விட்டுப் பிரிந்தமை, அனுதினம் ஆராதித்து வந்த இராஜேஸ்வரி அம்மன் மற்றும் துர்க்கை அம்மன் கோவில்களை பிரிந்தமை மனதளவில் மிகவும் பாதித்தது. கொழும்பில் தங்கியிருக்க வேண்டிய காலங்களில் எப்போது யாழ்ப்பாணம் திரும்புவேன் என்ற சிந்தனையிலேயே இருந்தார். நித்திய அக்கினி காரியத்துடன் கூடிய சிவபூசையை விஸ்தாரமாகச் செய்து வந்த பெருமைக்குரியவர். அத்தகு பெருமைக்குரிய சாம்பசிவ குருக்கள் ஐயா அவர்கள் 07.02.1996இல் இவ்வுலகை விட்டு பிரிகின்றார். உண்மையில் அவரது இழப்பு மிகப் பெரும் இட்டுநிரப்பப்பட முடியாத இடைவெளியாக காணப்படுகின்றது.

## 116. யாழ்ப்பாணம், வயலின் வித்வான் பி. வைத்தியநாதசர்மா (10-08-1923 - 1973)

பிரம்மஸ்ரீ வைத்தியநாதசர்மா அவர்கள் யாழ்ப்பாணம், கைதடி என்னும் ஊரில் பரமசாமிக் குருக்கள், வேதநாயகி தம்பதிகளுக்கு 10-08-1923இல் புதல்வராகப் பிறந்தார். தந்தையாரும் நன்றாகப் பாடுவதிலும், பாடல்களை இயற்றுவதிலும் வல்லவர். இதனால் சர்மா அவர்களுக்கும் இயற்கையிலேயே நல்ல ஞானம் உண்டாகியதில் வியப்பில்லை. இவர்கள் ஓர் இசைப் பாரம்பரியக் குடும்பம் என்றே கூறலாம். இவர் தானாகவே வயலின் கற்கவேண்டும் என விரும்பி தனது ஆரம்பக்கல்வியை யாழ். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் கற்றுத் தொடர்ந்து வயலின் இசைக் கல்வியைத் தனது 14ஆவது வயதில் மலேசியாவிலுள்ள இந்து கான சபாவில் வயலின் வித்துவான் தூத்துக்குடி பொன்னுச்சாமி ஐயங்காரிடம் கற்றார். இந்தியா, சென்று மைசூர் சௌடையாவின் தம்பியரான குருராஜப்பாவிடமும், மருங்காபுரி கோபாலகிருஷ்ணனிடமும் வயலினிசை நுட்பங்களைக்கற்று இந்தியாவிலேயே அரங்கேற்றம் செய்து அங்கேயே பல கச்சேரிகள் செய்து பெரும் புகழீட்டினார்.

சர்மா அவர்கள் 1946ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்து தனது மாமன்மகளான மனோரமா என்பவரைத் திருமணம் செய்து இனிது வாழ்ந்து பல ஆண்டுகளாக இவர்களுக்கு வாரிசுகள் இல்லாத காரணத்தினால் இவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை மாணவி காரைநகர் நாகமுத்துஐயர் தம்பதிகளின் மகள் சுலோஜனா என்பவரை வாழ்க்கையில் இணைத்துக் கொண்டார் இதன் பயனாக இவர்களுக்கு பிள்ளைகள் மூவர் கிடைத்தனர்.

இவர் இந்தியாவிலிருந்து வந்த கலைஞர்களான சித்தூர் சுப்பிரமணியபிள்ளை ஏ. கல்யாணகிருஷ்ணபாகவதர். மகாராஜபுரம் சந்தானம், ஈழத்துக் கலைஞர்களான இசைப்புலவர் சண்முகரட்ணம். பரம். தில்லைராஜா ஐயாக்கண்ணு தேசிகர், எஸ். பாலசுப்பிரமணியஐயர், டி. எஸ். மணிபாகவதர் ஆகியோருக்கு பக்கவாத்தியமாக வயலின் வாசித்துள்ளார். அழகும் துடிதுடிப்புமுள்ள இவர் பாடல்கள் இயற்றுவதிலும், ஜதிக்கோர்வைகள். தயாரிப்பதிலும் வல்லவர். வயலின் வாசிப்பதிலுள்ள திறமை போலவே நன்றாகப்பாடுவார் அக்காலத்தில் மார்கழித் திருவெம்பாவைக் காலத்தின் திருவெம்பாவைப் பாடல்கள் அனைத்தையும் தனித்தனி இராகங்களில் அழகாகப் பாடுவார்.

சர்மா அவர்கள் காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் இசையாசிரியராகச் சிலகாலம் கடமை புரிந்துள்ளார். பின்னர் இலங்கை வானொலியில் நிலைய வயலின் வித்துவானாகவும் கடமைபுரிந்துள்ளார். அந்நேரத்தில் அவர் பல பாடல்களை இயற்றி, இசையமைத்து தானே வயலின் வாசித்தும் பலரின் பாராட்டுதல்களையும் பெற்றார். இவருடைய வயலின் பேசும், பாடும், இசைக்கும் என்றால் மிகையாகாது, பாடகர்களை எந்த விதத்திலும் சோர்வுற விடாத ஒத்துழைப்பு நிறைந்த சுருதி லய சுத்தமான வாசிப்பு இவருடையது. இலங்கை, இந்தியா, மலேசியா போன்ற நாடுகளில் வயலின் இசையால் புகழீட்டிய இவர் 1973இல் தனது 50ஆவது வயதில் கலையுலகை விட்டு நாதப்பிரம்மத்தோடு ஒன்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 117. ஓவியர், வே. சிவசுப்பிரமணியக்குருக்கள் (மைனர் ஐயா)

(09-03-1924 - 22.11.2004)

இலங்கை, யாழ்ப்பாணம், சுழிபுரத்தில் பறாளையம் பதியிலே பேரும் புகழும் பெற்ற பேராளர் வேதாரண்யேஸ்வரக் குருக்கள் வீணாவாத விதூஷணி தம்பதிகளின் திருமகனாக ருதிரோற்காரி வருடம் மாசி மாதம் இருபத்தாறாம் நாள் (09-03-1924) ஞாயிற்றுக்கிழமை முருகன் திருவருளால் தோன்றியவரே சிவசுப்பிரமணியக்குருக்கள் ஆவார்.

குருக்கள் அவர்கள் பிறப்பதற்குமுன் நிகழ்ந்த சில சம்பவங்களையும் இங்கு குறிப்பிடவேண்டும். ஐயா அவர்களின் பெற்றோர் ஆண்குழந்தை ஒன்றைப் பெறவேண்டும் என்ற ஆவலில் தலயாத்திரை மேற்கொண்டு தவமியற்றினர், அக்காலை "அடையாளத்துடன் ஆண்மகவு பெறுவாய்" என்ற வார்த்தையை இறைவாக்காகக் கனவில் கண்டு வியந்த அவர்கள் தொடையில் துலங்கிய மச்சத்துடன் குழந்தை பிறந்தது கண்டு மகிழ்ந்தனர்.

முருகன் திருவருளால் பிறந்த குழந்தைக்கு முருகன் நாமத்தையே இட்டு அன்போடும் பண்போடும் குழந்தையை வளர்க்கலாயினர். குழந்தை சிவசுப்பிரமணியன் அடிக்கடி நோயினால் விழும் நிலை கண்டு வேதனையடைந்து கோயில் சந்நிதானத்தில் வேண்டுதல் செய்தனர். தாயார் தன் தாலிக் கொடியைக் கழற்றி முருகன் திருவடியில் சமர்ப்பித்துக் கதறியழுதார். திருச்செந்தூர் சென்று நேர்த்திக்கடன் செய்து குழந்தையின் சுகம் கண்டு மகிழ்ந்தனர். தாலிக் கொடியைத் திருச்செந்தூர் முருகன்மேல் திகழும் இரத்தினவேல்போல் செய்வித்துப் பறாளாய் முருகனுக்கு அலங்காரம் செய்து உளம் பூரித்தனர். இந்த இரத்தினவேல் இன்றும் பறாளாய் முருகன் கையில் மிளிர்கின்றது.

சிறுவர் சிவசுப்பிரமணியர் சுழிபுரம் பறாளாய் ஆறுமுக வித்தியாலயத்திலும் ஐக்கிய சங்க வித்தியாலயத்திலும் கல்விகற்றுச் சிறந்ததோர் கல்விமானாகும் வாய்ப்பைப் பெற்றார். அத்தோடு வடமொழிக் கல்வியை வியாகரண சிரோமணி தி.கி. சீதாராம சாஸ்திரிகளிடம் கற்கும் பேறு பெற்றார்.

பூணூல்சடங்கு செய்யப்பெற்றுப் பூசகராகப் பணியாற்றிப் புகழ்பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்களாக வளர்ந்த சிவசுப்பிரமணியக் குருக்கள் பறாளாய் முருகனை அளைந்தும் தொட்டும் இட்டும் துலக்கியும் அர்ச்சித்துப் பூஜை புரிந்ததனால் அவரே அழகு ரூபராய்த் திகழ்ந்தார். அவரது தோற்றப் பொலிவு கண்டு ஊரார் பலரும் "மைனர் ஐயா" எனச் செல்லமாக அழைக்கலாயினர்.

குருக்கள் அவர்கட்கு உடன்பிறந்தவர்களாக சிவஸ்ரீ முத்துக்குமாரசாமிக் குருக்கள், பிரம்மஸ்ரீ சத்தியமூர்த்தி சர்மா ஆகிய ஆண்சகோதரர்களும் நான்கு பெண் சகோதரர்களும் அமைந்தனர். மைத்துனர்களாக வைத்தீஸ்வரக் குருக்கள், சாமி விஸ்வநாதக் குருக்கள், வரதராஜ சர்மா, சுப்பிரமணிய சர்மா ஆகியோர் வாய்த்தனர்.

வாலிபப் பருவம் அடைந்த சிவசுப்பிரமணியக் குருக்களை மணவாழ்வில் ஈடுபடுத்த விரும்பிய பெற்றோரும் உற்றோரும் சேர்ந்து கவினுற விளங்கும் காரைநகரில் சிறப்புடன் திகழும் சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்களின் அருந்தவப் புதல்வியாக விளங்கிய புவனேஸ்வரியம்மாவைத் திருமணம் செய்துவைத்தனர்.

இல்லறமென்னும் நல்லறத்தில் இணைந்த தம்பதிகட்கு இனிய மக்கட்செல்வங்களாக மூன்று புதல்வர்களும் இரு புதல்விகளும் தோன்றினர். ஆயின் மூத்த இரு புதல்வர்களின் திடீர் மறைவு சிவசுப்பிரமணியர் தம்பதிகளின் மனத்தில் சொல்லவொண்ணாத் துயரத்தை ஏற்படுத்தியது. எனினும் முருகன் அருளால் மனம்தேறி அவன்மீதே பாரத்தை விட்டு ஏனைய மக்கட்செல்வங்களை இனிதே வளர்த்தெடுத்தனர்.

ஒரே மகன் பாலகுமார் இன்று உலகம் போற்றும் சிற்பக் கலை நிபுணராகவும் ஓவியக் கலைஞராகவும் திகழ்கிறார். அவருக்குச் சென்னை காளிகாம்பாள் தேவஸ்தான சிவாச்சாரியார் சக்தி கருணாகரச் சக்கரவர்த்தி கலாநிதி சாம்பமூர்த்தி சிவாச்சாரியாரின் புதல்வி விசாலாட்சி அவர்களை மணம்செய்வித்த சிவசுப்பிரமணியக் குருக்கள், பேரப் பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார்.

இவ்வாறு சீரும் சிறப்புமாக வாழ்ந்த சிவசுப்பிரமணியக் குருக்கள் அவர்கள் சிறந்த ஒரு ஓவியக் கலைஞராகவும் புகழ்பெற்று விளங்கினார். பறாளாய் முருகன் முதல் கதிர்காமக் கந்தன்வரை ஓவியத் திரைகள் தீட்டி ஒப்பிலாப் புகழ்பெற்றார். பல நூல்களுக்கும் சஞ்சிகைகளுக்கும் ஓவியங்களையும் வரைபடங்களையும் வரைந்தளித்து வளம்செய்தார்.

குருக்கள் அவர்கள் தமது மகனுடன் பாரததேசத்தில் தமிழ்நாட்டிலே வாசம்செய்தபின்னர் மீண்டும் தாயகம் திரும்பி சுழிபுரம் பறாளாய்ப் பதியிலே முருகன் அருகிலே வாசம் செய்யலானார். இக்காலகட்டத்தில் 2004 ஏப்ரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் நிகழ்ந்த சிவசுப்பிரமணியர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக வைபவத்திலும் சிவாச்சாரியாராகக் கலந்துகொண்டு சண்முகப் பெருமானின் குடமுழுக்கை நிகழ்த்தியமையும் குறிப்பிடத் தக்கது.

ஈற்றில் 22-11-2004இல் முருகன் தமது பாதாரவிந்தத்தில் இணையிலா இன்பம் துய்க்க அவரை அழைத்துக்கொண்டார். அவரது குருத்துவ சேவைப் பெருமையும் அவரது கலைப் பணிகளின் பெருமையும் இன்றும் இனியும் என்றென்றும் நிலைத்துநிற்கும். அவரது எச்சங்களே சான்று பகரும்.



## 118. கந்தரோடை, சங்கீதம் ந. நடராஜ ஐயர் (20.12.1924 - 22.10.2000)

பெற்றோர்: இந்தியா, காரைக்குடியைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ நரசிம்மையர் - சுந்தரம்மாள்

இளமையிலேயே தந்தையாரிடம் சோதிடத்தையும் சங்கீதத்தையும் கற்று அதில் திறமை பெற்றார். மயிலாப்பூர் கே. சி. ஆதிவராகாச்சாரியார், பி. சாம்பமூர்த்தி ஐயர் ஆகியோரிடம் இசை பயின்று சென்னைப் பல்கலைக்கழக இசைப்பட்டதாரியும் ஆனார்.

இவர் ஒரு காந்தியவாதி. தாமே நூல் நூற்று, ஆடை தயாரித்து அணிந்துகொள்வார். 1944இல் 'தினமணி' பத்திரிகையில் பணிபுரிந்தார்.

1952இல் இலங்கை வந்து மாவிட்டபுரம் வைத்தியநாதக்குருக்களின் மகளான தர்மாம்பாளை மணந்தார். சுதந்திரன் பத்திரிகையில் சிலகாலம் பணிசெய்தபின்னர் இசை ஆசிரியராக நியமனம் பெற்றார். பல மாணவர்களுக்கு இசையாசிரியராக இருந்து சிறந்த இசைக் கலைஞர்களை உருவாக்கினார்.

சம்மஸ்கிருத மொழியிலும் வல்லவரான இவர் சில உருப்படிகளை ஆக்கியும் உள்ளார். இசைக்களஞ்சியம் தயாரிப்பதைத் தமது வாழ்நாட் பணியாகக் கொண்டு பல விடயங்களை வருந்திச் சேகரித்தார். முதலில் கல்லச்சில் சில தொகுதிகளை 'சங்கீதரத்னம்' என வெளியிட்டார். இவரது குருவாகிய சாம்பமூர்த்தி ஐயரின் கனவாகிய 'இசை நடனக் களஞ்சியம்' 1973இல் முதலாம் பகுதி வெளிவந்தது. அடுத்த தொகுதிகளைத் தயார்செய்துகொண்டிருக்கும்போதே 22.10.2000இல் இறைபதம் எய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 119. மட்டுவில் தெற்கு, ஐ. ஞானசர்மா (31.07. 1924 - 07.12.2010)

ஈழவள நாட்டின் சிரசாக விளங்கும் யாழ்ப்பாணத்தில், கற்றோர் நிறைந்த கல்வியங்காட்டில் காசிப கோத்திரத்தைச் சேர்ந்த அந்தணோத்தமர் ஐயாத்துரைக் குருக்கள் தமது துணைவியார் பொன்னம்மாவுடன் இல்லறமாகிய நல்லறத்தை நடத்திவந்தார். அவர்களின் கனிஷ்ட புதல்வராகப் பிறந்தவர்தான் பிரம்மஸ்ரீ ஞானசர்மா அவர்கள்.

இவர் தமது ஆரம்பக் கல்வியை கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலையிலும் பெற்றுக்கொண்டார். சம்ஸ்கிருதக் கல்வியை தமது தந்தையா ரிடத்திலும் வடலியடைப்பு அருணாசல சாஸ்திரிகளிடத்திலும் கற்று வல்லவரானார். ஞானசர்மா 1948ஆம் ஆண்டில் மட்டுவில் தெற்கு பொன்னுத்துரை ஐயர் லட்சுமி அம்மா தம்பதிகளின் மூத்த புதல்வி இரத்தினம்மாவைக் கைப்பிடித்துத் தமது இல்லற வாழ்வைத் துவக்கினார். இவர்களின் இல்லறப் பயனாக அனுராதா, பத்மாவதி ஆகிய இரு பெண் குழந்தைகளைப் பெற்றனர். இரத்தினம்மா நோய்வாய்ப்பட்டு 1954ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். இதன்பின் ஞானசர்மா 1959இல் கனகாம்பிகையை மணமுடித்து சியாமளா எனும் புதல்வியைப் பெற்றார். தமது புதல்வி பத்மாவதியைத் தெல்லியூர் சுந்தரமூர்த்தி ஐயர் அன்னபூரணி தம்பதிகளின் புத்திரர் சுந்தரராஜ சர்மாவுக்கு மணம் முடித்துக் கொடுத்தார்.

இவர் கல்வியங்காடு ஸ்ரீ பத்ரகாளியம்பாள் சமேத வீரபத்திரர் கோவில், நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவில், நுணாவில் வீரபத்திரர் கோவில் ஆகிய ஆலயங்களில் அர்ச்சகராகவும் பிரதமகுருவாகவும் கடமையாற்றி மக்களின் மதிப்பைப் பெற்றிருந்தார். தமது சம்ஸ்கிருதக் கல்வியறிவைப் பல மாணவர்களுக்கு ஊட்டி அவர்களின் மொழியறிவை விருத்தி செய்ததுடன் பல அந்தண மாணவர்களுக்குத் தாமே குருவாக இருந்து உபநயனத்தையும் நடத்திவைத்திருக்கிறார்.

பல ஆலயங்களில் பத்ததிகளை வாசிக்கும் சாதகாச் சாரியாராக விளங்கினார். முன்னாள் இந்துமத குரு பீடாதிபதி நாயன்மார்கட்டு சிவஸ்ரீ சாம்பசிவ சிவாச்சாரியார், நவாலி சிவஸ்ரீ விஸ்வநாதக் குருக்கள் ஆகியோருக்கு இவர் பத்ததி வாசித்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர்களின் இல்லங்களில் நிகழும் வைதிகக் கிரியைகளை நடத்திவைப்பதில் சமர்த்தராக இருந்த இவரை "ஞானம் வாத்தியார்" என அன்போடு அனைவரும் அழைத்துவந்தனர். முக்கியமாக அபரக் கிரியைகளை நடத்திவைத்துப் பலரது நெருக்கடி நிலைமைகளில் அருமருந்தாக அரும்பணியாற்றியிருக்கிறார்.

ஞானசர்மா அவர்கள் தமது எண்பத்தேழாவது வயதில் சில தினங்கள் நோய்வாய்ப்பட்டு இருந்தபின்னர் 07-12-2010 இல் இவ்வுலக வாழ்வை நீத்து ஈசன் இணையடி நீழலைச் சென்றடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 120. நியாய சிரோமணி, வித்தியாசாகரம் கி . சுப்பிரம்மண்யசாஸ்திரிகள்
(05.05.1925 - 14.08.1998)

### அறிமுகம்

தாய்நாட்டில் இருந்து யாழ்ப்பாணம் வந்து சம்ஸ்கிருதக் கல்வியையும் விழுமியங்களையும் வளர்ப்பதற்கு தமது வாழ்நாட்களை அர்பணித்த கோப்பாய் ஸ்ரீநிவாச சாஸ்திரிகள், நல்லூர் சிதம்பர சாஸ்திரிகள், கோண்டாவில் நாரயண சாஸ்திரிகள், வண்ணை சீதாராமசாஸ்திரிகள் போன்ற அறிஞர்களின் வரிசையில் வித்யாசாகரம் நியாயசிரோமணி கி. சுப்ரம்மணிய சாஸ்திரிகளையும் சிறப்பாக குறிப்பிடலாம்.

### சாஸ்திரிகளின் பிறப்பு

தென் இந்தியாவில் திருச்சி மாவட்டத்தில் யஜுர்வேத கவுண்டின்ய கோத்திரத்தில் கிருஷ்ணஐயரின் 5 வது மகனாக 05.05.1925 இல் கார்த்திகை நக்ஷத்திரத்தில் சாஸ்திரிகள் அவதரித்தார். இவருக்கு தாய் தந்தையார் சிறப்பாக சுப்பிரமணியன் எனப்பெயரிட்டு, ஸ்கந்தன் என அன்புடன் அழைத்து வந்தார்கள்.

### சாஸ்திரிகளின் கல்வி

சாஸ்திரிகள் தென் இந்தியாவின் வேம்பத்தூர் தமிழ் பாடசாலையில் கல்வி பயின்றார். குருகுலக் கல்வியை பயில்வதற்காக ஏழாவது வயதில் உபநயனம் செய்து கொண்டு சங்கராச்சார்ய மடத்தில் வேதாகம பாடசாலையில் தொடர்ந்து 8 வருடம் கல்வி கற்று வேதபாடத்தை சம்ஹிதாபாடம், பதபாடம், கிரமபாடம். ஜடாபாடம். கனபாடம், சிகாபாடம் வரை முழுமையாக அத்யயனம் செய்து கொண்டவர். மேலும் சாஸ்திரிகள் சம்ஸ்கிருதபாஷையில் புலமைத்துவம் மிக்க நரசிம்ம சாஸ்திரிகளிடம் வியாகரணம், காவியம், மீமாம்சை, தமிழ், ஆங்கிலம், ஹிந்தி என்கிற பாடங்களில் தேர்ச்சி பெற்று வந்தனர். நியாயம் என்கிற கற்கை நெறியை நான்கு ஆண்டுகள் கற்று அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் "நியாய சிரோமணி" என்கின்ற சிறப்பு பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

### சாஸ்திரிகள் ஈழ நாட்டுக்கு வருகை

யாழ்ப்பாணத்தில் சிறப்புமிக்க ஆலயங்களில் ஒன்றான நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ குருசாமிக்குருவின் மூத்த புதல்வர் குமாரசாமிக்குருக்கள் 1946 இல் சிதம்பரம் RMS பாடசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி கற்றுக் கொண்டிருந்த சமயத்தில் கி. சுப்பிரமணிய சாஸ்திரிகளிடம் கல்விகற்கும் வாய்ப்பு கிடைத்தது. 1950 இல் குருசாமிக் குருக்களின் சீமந்த புத்திரி கமலாதேவியை தர்மபத்தினியாக ஏற்று முதன்முதலாக சாஸ்திரிகள் இலங்கை வந்து கைலாசபிள்ளையார் கோவில் வாசஸ்தலத்திலே தங்கிக் கொண்டார்.

**யாழ்ப்பாணத்தில் சாஸ்திரிகளின் கல்விப்பணிகள்.**

1950 இல் யாழ்ப்பாணம் வந்த சாஸ்திரிகள் ஆரம்பத்தில் தாம் வாழ்ந்த கைலாசபிள்ளையார் கோவில் சூழலில் சம்ஸ்கிருத கல்விப்பணியை தொடங்கினார். 1945 - .59 காலப்பகுதியில் கி. சீதாராமசாஸ்திரிகளுடன் சேர்ந்து சுன்னாகம் சதாசிவ பிராசீன பாடசாலையில் வேத ஆகம சம்ஸ்கிருத கல்விப் பணியை செய்து வந்தார். பல்கலைகழக B. A பரீட்சைக்கு சம்ஸ்கிருத மொழியை ஒரு பாடமாக கற்கும் மாணவர்களுக்கும் வகுப்பு நடத்தி வந்தார். பின்னர் 1957 இல் அகில இலங்கை சைவக்குருமார் சபையிலும் 1964 இல் ஸ்ரீலங்கா குரும்பிரம்ம வித்தியார்த்தி சபையிலும் 1993 இல் நல்லூர் "ஹேரம்ப பவனம்" என்ற அவரது வாசஸ்தலத்திலும் அதிக மாணவர்களுக்கு வேதம் ஆகமம் சம்ஸ்கிருத மொழி ஜோதிடம் போன்ற பாடங்கள் கற்பித்து வந்தார். பின்னர் 1968 இல் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு முன் உள்ள குருபூசை மடத்தில் குருகுலக்கல்வி நடைபெற்றது. அக்காலத்தில் இக்குருகுலத்திற்கு அயராது உழைத்த கணபதீஸ்வரக் குருக்களின் மறைவின்பின் அவரின் ஞாபகார்த்தமாக "கணபதீஸ்வர குருகுலம்" எனப்பெயர் வைத்து நடத்திவந்த குருகுலம் இன்றும் தொடர்ந்து நடை பெறுகின்றது. 1974 தொடக்கம் 1989 வரை 14 ஆண்டுகள் இக்குருகுலத்தின் தலைமை ஆசிரியராக கடமையாற்றி வந்தார். அந்த காலப்பகுதியில் மட்டுவில் கி. சதாசிவசர்மா அவர்கள் பலகாலம் இவரது குருகுலத்தில் முதன்மை மாணவராக விளங்கி வந்தார். அவரை உதவியாசிரியராக பணித்து இருவரும் சிறப்பாக நடத்தி வந்தார்கள். அவருக்கு சாஸ்திரிகள் "சிக்ஷா நிபுண" என்ற சிறப்பு பட்டம் வழங்கி கௌரவித்தார். மேலும் 1994 இல் பங்குனி உத்தரத்தில் யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் சேர்: பொன் இராமநாதன் வேதாகம பாடசாலையை நிறுவி அங்கு தலைமை ஆசிரியராக பணியாற்றி வந்தார்.

மேலும் சாஸ்திரிகள் அந்தண சிறார்கள் மட்டுமல்ல ஆலய பூஜைகளை நடத்தும் சைவக்குருமாருக்கும் ஆகம சமஸ்கிருத கல்வியை புகட்டி வந்தார். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட சம்ஸ்கிருத பிரவேசபண்டிதர், பாலபண்டிதர் பரீட்சைக்கும் கல்வி கற்பித்து வந்தார். சாஸ்திரிகளின் கல்விப்பணிக்கு உறுதுணையாக பல அறிஞர்கள் உதவினார்கள். அந்த வரிசையில் சீதாராம சாஸ்திரிகள், நாராயண சாஸ்திரிகள், தர்மசாஸ்தாகுருகுல அதிபர் மஹாதேவகுருக்கள், கோப்பாய் ச. பஞ்சாட்சர சர்மா ஆகியோர்கள் போற்றத்தகுந்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்திரிகளின் தொகுத்து வெளியிட்ட நூல்கள்

1. நியாய லகு வியாகரணம்
2. வியாகரண அப்பியாசப் புத்தகம்
3. ஸ்தோத்திர உபதேச மாலா
4. நவநீத மனன மஞ்ஜரி
5. நவராத்திரி பூஜா பத்ததி
6. நடராஜ ஸ்நபனம்
7. விக்னேஸ்வர மஹோற்சவ பத்ததி
08 விஷ்ணு ஸ்நபனம்
09 திராவிட ஸ்துதி மஞ்சரி
10 திருமுறை மனன அமுதம்
11 சோதிடம் பயில வாய்பாடு
13 நவக்கிரக அட்டவணை
14 நீங்களும் சுப முகூர்த்தம் வைக்கலாம்
15 சைவ ஆசார அனுஷ்டானங்கள்.
16 கேதாரகௌரி விரதம்
17 தேவீ மஹாத்மிய கவசம்

1964 இல் அச்சுவேலி குமாரசாமிக்குருக்கள் வெளியிட்ட அக்னிகார்யவிதி என்ற நூலைப் பரிசோதித்து முன்னுரை வழங்கினார். நயினாதீவு ஐ.கைலாசநாதக்குருக்கள் தொகுத்து வெளியிட்ட ஆகமாமிர்த்தவர்ஷிணி என்ற நூலை பரிசோதித்து சிறப்பு முன்னுரை வழங்கியுள்ளார்.

சாஸ்திரிகளின் சமூகப்பணிகள்

எமது ஈழநாட்டில் பல்வேறு ஆலயங்களில் நடைபெற்ற பாலஸ்தாபனம், கும்பாபிஷேகம், மஹோற்சவங்கள் போன்ற பலவற்றில் சிவாச்சாரியார்களுடன் கலந்து சர்வபோதகாசாரியர், சர்வசாதகாசாரியர் எனப் பணியாற்றியதுடன் முகூர்த்தநிர்ணயம் செய்தும் சிறப்பித்தவர். பல ஆலயங்களில் வேதபாராயணம் நிகழ்த்தியும் சைவ அபிமானிகளுக்கு சமய உபந்நியாசமும் மலேசியநாட்டில் ஆலயங்களில் தொடர் சமய உபந்நியாசமும் செய்து வந்தார். மருதடி பிள்ளையார் கோவில், வண்ணார்பண்ணை வெங்கடேசர் கோவில், பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில் போன்ற பிரபல ஆலயங்களில் நிரந்தர ஆகம ஜோதிட சாஸ்த்திர ஆலோசகராகவும் விளங்கினார்.

சாஸ்திரிகள் அந்தணர்களின் ஆன்மார்த கிரியை களான உபநயனம் விவாஹம், சீமந்தம், ஆயுஷ்ய ஹோமம், நவக்கிர சாந்திகள், ஆசார்யாபிசேகம், ஷஷ்டியப்த பூர்த்தி விழா போன்ற கிரியைகளை முன்நின்று நடத்தி வைத்தார். 14.08.1998 ஆடிப்பூர்வ சப்தமியில் சிவபதப் பேறெய்திய சாஸ்திரிகளின் பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் அவரது மாணவர்களால் போற்றப்பட்டு வருகின்றது.

ஆசார்ய பாரம்பரியத்தில் நிறைவான வடிவமாக வாழ்ந்து காட்டிய குருநாதர் சாஸ்திரிகள் அவர்கள் தனக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்த வழிகாட்டிய சீரிய பண்பாளர். சிஷ்ய பாரம்பரியத்தை உருவாக்கிய சாஸ்திரிகளின் மாணவர்கள் இன்று நிறைவான சிவாச்சாரியர்களாகவும் ஆசிரியர்களாகவும், பல்கலைக்கழக பட்டம் பெற்ற விரிவுரையாளர்களாகவும் விளங்குபவர்களில் சிறப்பாக நல்லூர் சிவன் கோவில் பிரம்மஸ்ரீ கிருஷ்ணானந்தசர்மா, சுதுமலை பாலகைலாசநாதசர்மா, வெளிநாடுகளில் பணிபுரிகின்ற அந்தணர்களான பிரம்மஸ்ரீ சர்வேஸ்வரசர்மா (வசந்தன் சர்மா). பிரம்மஸ்ரீ கமலநாதசர்மா போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.



## 121. மட்டக்களப்பு, பிரம்மஸ்ரீ கா. சிவசுப்பிரமணியக் குருக்கள்

### (23.10.1926 - 29.06.2003)

ஈழத்துச் சிவாச்சார்யர்களுள் புரோகிதராகவும் ஆயுர்வேத வைத்தியராகவும். சோதிடராகவும் விளங்கி கிழக்கிலங்கையில் பணியாற்றிய பெருந்தகை கா. கு. சி. கு என அனைவராலும் அழைக்கப்படும் சிவசுப்பிரமணியக் குருக்கள் ஆவார். யாழ்ப்பாணத்து சுன்னாகம் ஐயனார் கோவிலடி பிரம்மஸ்ரீ கார்திகேயக்குருக்கள் கௌரியம்மா தம்பதிகளின் புத்திரரே இவர். சுன்னாகம் சம்பந்தர் வித்தியாசாலை, பரமேஸ்வராக் கல்லூரி என்பவற்றில் கல்வி கற்ற இவர் தமது மரபு நிலைக் கல்வியை சுன்னாகத்திலேயே பெற்றுக் கொண்டார்.

தமது மரபு நிலையுடன் சோதிடம், சித்த வைத்தியம் என்பவற்றினையும் கற்று மேலான அறிவைப் பெற்று சித்த ஆயர்வேத வைத்தியராகவும் விளங்கினார். இசை அறிவையும் பரம்பரையாகப் பெற்றுக்கொண்ட இவர் தம்பலகாமம் சிவன், மீசாலை நாச்சிமார் கோவில் ஆகிய இடங்களில் பணியாற்றி மட்டக்களப்பை அடைந்து வாழ்விடமாகக் கொண்டதோடு சித்தவைத்தியத்தில் சிறுபிள்ளை ரோகம். ஹோமியோபதி, அக்குபஞ்சர், என்பவற்றில் ஆற்றல் பெற்றவராகவும் விளங்கினார். இவர் 'சோதிடமணி', 'சித்தவைத்திய நிபுணர்', 'சித்தமருத்துவபூபதி' என்ற பட்டங்களைப் பெற்றதோடு கிழக்கிலங்கை ஹோமியோபதி சங்கத் தலைவராகவும் விளங்கினார். இத்தகைய பெருமையுடன் எழுபத்தேழு ஆண்டுகள் வாழ்ந்து இவ்வுலகில் பெருமைபெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 122. வயலின் வித்வான் கொழும்பு சோமாஸ்கந்த சர்மா (வானொலிக் கலைஞர்)

## (01-03-1926 - 08.11.2011)

யாழ் நகரிலே மூளாய் எனும் ஊரிலே, சிவஸ்ரீ சிவசாமிக் குருக்கள் வாலாம்பிகையம்மாள் தம்பதிகளுக்கு இரண்டாவது சற்புத்திரனாகப் பிறந்தவர்தான் பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்த சர்மா.

1926-03-01 ம் திகதி பிறந்த இவர், வளர்ந்த கோவிற் சூழல், இவருக்கு இசையில் ஆர்வத்தை ஏற்படுத்துவதாய் அமைந்திருந்தது. இவரது தந்தையாரது பிறப்பிடம் உரும்பிராய், இவர் பூசைசெய்த காலத்தில் கோவிற் குருக்களாய் இருப்பவர்கள், கந்தபுராணம், வள்ளி கல்யாணம், சூரசம்காரம் முதலிய புராணங்களை விரதகாரர் சபையில் இருக்கக் கண்டிப்பாகப் பாடவேண்டும் ஒருவர் பாடலை ராகத்துடன் பாட மற்றவர் அதே ராகத்துடன் பலன்சொல்வார். இவ்வாறு பலரும் தத்தம் இசையாற்றலை வெளிப்படுத்த, அதனைத் தொடர்ந்து பார்த்தும், கேட்டும், இரசித்தும் வந்த சர்மா அவர்களுக்கும் சிறு வயதிலேயே இசைஞானமும், ஆர்வமும் ஏற்பட்டதில் வியப்பில்லை. இவர், மூளாய் சைவப்பிரகாச வித்தியசாலையில் தமது ஆரம்பக் கல்வியை முடித்தார். மாதகல் என்னும் ஊரில் கோவில் பூசையுடன் பூசைக்கு ஏற்ற சமஸ்கிருதக் கல்வியைச் சிலகாலம் கற்றார். இதனையடுத்து, மூளாய் - பிள்ளையார் கோவிலில் நித்திய பூஜை செய்துவந்தார். இயல்பாகவே ஏற்பட்ட இசை ஞானம் காரணமாக நாதஸ்வரவித்துவான் சோழமுத்து என்பவரிடம் இசை பயின்றதோடு, வயலின் வித்துவான். சிங்காரவேலு என்பவரிடம் வயலின் இசையையும் ஆரம்பித்து அதனைத் தொடர்ந்து பிரம்மஸ்ரீ வைத்தியநாத சர்மா என்பவரிடம் பயிற்சி பெற்று மேலும் அதனை விருத்தியாக்கிக்கொண்டார்.

சிறுவயதிலேயே தந்தையை இழந்த இவர் வயலின் இசையைப் பயிலுவதிலே தனது இழப்பினை ஈடுசெய்ய முயன்றார். பிரம்மஸ்ரீ சீதாராமசாஸ்திரிகளிடம் சமஸ்கிருதம் பயின்றபோதிலும் இவரது நாட்டம் இசைமீதானதாய் இருந்தது. தாயாரிடம் சம்மதம் பெற்று இந்தியா சென்று வயலின் வித்துவான் ஏ. சந்தானமையா என்பவரிடம் மூன்று வருட காலங்கள் சீடராக இருந்து வயலின் நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ச்சி பெற்றுத் தம் தாய்நாடு திரும்பினார்.

இவருடைய காலத்தில் யாழ்ப்பாண நகரிலே நடைபெற்ற பெரும்பாலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்கச்சேரிகள், நாடகங்கள், நாட்டிய நிகழ்ச்சிகள். பிரசங்கங்கள் யாவற்றிலும் இவரது பங்கேற்பு இடையறாது இடம்பெற்றது. அக்காலத்தில் பிரபல்யம் பெற்று விளங்கிய இசை விற்பன்னர்களான சங்கீத பூஷணம் திரு. ஷண்முகரத்தினம், திரு. ராம்குமாரசுவாமி, திரிபுரசுந்தரி குமாரசுவாமி, பாம். தில்லைராஜா போன்றோர்களின் இசைக்கச்சேரி இவருடைய பக்கவாத்திய வயலின் இசை மூலம் சோபிதம் பெற்றமை இசையுலகம் அறிந்த விடயம். இந்தியாவில் இருந்து வருகை தந்த புலூட் ஸ்வாமிநாத பிள்ளை. பேராசிரியர் சித்தூர் சுப்பிரமணியம் பிள்ளை போன்ற பிரபல வித்துவான்களுக்கும் பக்கவாத்தியம் வாசித்த பெருமை இவருக்குண்டு. இவை தவிர இந்தியாவில் இருந்து இங்குவந்து இசைக்கச்சேரிகளை அவ்வப்போது நடாத்திவந்த திருமதி ஆனந்தவல்லி, கும்பகோணம் வி. பி. ராஜேஸ்வரி, பிரபல பாடகி வாணி ஜெயராம் போன்றோரின் இசைக் கச்சேரிகளுக்கும் வயலின் வாசித்துச் சிறப்பித்த பெருமை இவருக்குண்டு.

இலங்கைக் கலைஞர்களான நடனக்கலைஞர் வேலானந்தன், நடன நர்த்தகி வாசுகி சுப்பையா, மணிபாகவதர் அவர்களின் கதாப்பிரசங்கம் கோவிற் திருவிழாக் காலங்களில் இடம்பெற்ற இசை விழாக்கள் யாவுமே இவரது வயலின் இசையால் மெருகேறிச் சிறப்புப்பெற்றன என்றால் மிகையாகாது. இசையுலகிற் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்த இவரது 33வது வயதில் இவரது வாழ்க்கைத் துணைவியாக அமையும் பாக்கியம், நங்கை சுந்தராம்பாளுக்குக் கிட்டியது. தனது அன்பு மனைவிக்கும், அதன் விளைவாகத் தமக்குக் கிடைத்த அருஞ் செல்வங்கள் ஐவருக்கும் இசைக்கலையினையும், வாத்தியக்கலையினையும் கற்பித்து மகிழ்ந்தார். மனைவியுடன் குழந்தைகள் ஐவருமே இசைவல்லவர்களாக விளங்கினார்கள்.

இவாது திறமை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 1ம் தர வயலின் இசைக் கலைஞராகத் தரமுயர்த்தி பக்க வாத்தியக் கலைஞராக நியமனம் பெறச்செய்தது. 1971-10-22 முதல் இலங்கை வானொலியிற் கடமையாற்றிய இவர் எல்லோர் நன் மதிப்பையும் பெற்று 1983 இல் ஓய்வு பெற்றார். ஓய்வுபெற்ற பின்னரும் கூட இவரது வாசிப்பும், கலையார்வமும் ஓய்வடையவில்லை. தனது முழு நேரத்தையும் வயலின் இசைப்பதிலும், இசையைக் கேட்பதிலும், தன்னை நாடி வருவோருக்குப் பயிற்றுவிப்பதிலும் செலவிட்டார்.

வயலின் இசைக்கும் போது இவர் அமர்ந்திருக்கும் விதமே அலாதியானது. மெல்லிய தலையசைவு, அங்கசேட்டைகள் எதுவுமின்றி இடது பாதம் லயத்துடன் தாளம் போட, மெல்லிய புன்சிரிப்புடன் வயலின் வாசிக்கும்போது பார்க்கவும், கேட்கவும் உள்ளத்தில் அமைதியும். ஆனந்தமும் ததும்பும். அளவான உணவுப் பழக்கம். தவறாத உடற்பயிற்சி, எதற்கும் அலட்டிக்கொள்ளாத மனப்பாங்கு, தானுண்டு தனது வயலின் உண்டு என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையான வாழ்க்கை வாழ்ந்த இவரை நோய்கள்கூட அணுக அஞ்சின என்றால் மிகைளயாகாது.

இவரது திறமைக்குச் சான்றாகக் கிடைத்த பாராட்டுக் களும், விருதுகளும் அநேகம், அவற்றுள் அப்பொழுது வாழ்ந்த ஈழநாட்டுப் பத்திரிகை அதிபர் ஹரன் என்வர் அளித்த தங்கமெடல், 'கலைமணி' எனும் பட்டம், மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் மதுரை ஆதீன சுவாமிகளால் வழங்கப்பட்ட 'கலை மாமணி' எனும் விருது, வானொலி நிலைய நிகழ்ச்சிகள் மூலம் வழங்கப்பெற்ற 'கலாபூஷணம்', சரத்பாபு அவர்களால் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட'கலாமணி' விருது போன்றவை குறிப்பிடத்தக்கன.

இல்லறத்துடன் இசையையும் தனது மூச்சின் ஒரு பகுதியாகக் கொண்ட சோமாஸ்கந்தன் எனும் கலைஞன் 08.11.2011 செவ்வாய்க்கிழமை காலை இயற்கை எய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 123. சுழிபுரம், சம்ஸ்கிருத பண்டிதர், சி. வரதராஜக் குருக்கள்

## (10.07.1926 - 04.08.1993)

இலங்கையின் வடபால் யாழ்ப்பாண நகரின் மேற்றிசையில் குளங்களும், வயல்களும், ஓங்கி உயர்ந்த பனைமரத் தோப்புக்களும், தென்புறம் உவர்நீர்க்கடலும், மேற்கே பெரியவர் கோவில் என்னும் சிவன்கோவிலும், வடக்கே திருவடிநிலை என்னும் திவ்விய தீர்த்த நிலையும் பொருந்த அமையப்பெற்றதாய் பொன்னாலை என்னும் வரலாற்றுப் பிரசித்திபெற்ற ஸ்ரீவரதராஜப்பெருமாள் கோவில் உள்ளது. தமிழகம் காஞ்சியிலுள்ள தேவராஜப் பெருமாள் என்னும் வரதராஜப் பெருமாள் ஆலயத்திலிருந்து அழைத்துவரப்பட்ட ஸ்ரீவத்ஸ கோத்திர அந்தணர்கள் பாரம்பரியமாக நித்திய நைமித்திகங்களை இங்கு ஆற்றிவந்தனர். அவர்களின் குடும்பங்கள் ஏனைய கோத்திரங்களில் திருமணம் செய்து குடியிருப்பு, பறாளை ஆகிய இடங்களில் குடியேறி அப்பிரதேச ஆலயங்களிலும் அடியார் வீடுகளிலும் சமயக்கிரியைகளை ஆற்றிவந்தனர். இப்பாரம்பரிய மரபில் குடியிருப்புப் பகுதியில் வேத, ஆகம, சோதிட, புராணங்களில் ஆற்றல்மிக்க சாஸ்திரியார் குடும்பம் எனப் புகழ்பெற்ற பரம்பரையில் சபாபதி ஐயா என அழைக்கப்பட்ட சிவசுப்பிரமணியக்குருக்கள் - இராசம்மா தம்பதிகளுக்கு மூத்தபுதல்வராக அட்சய வருடம் ஆனிமாதம் புனர்பூச நட்சத்திரத்தில் (10.07.1926) உதித்தவரே வரதராஜக் குருக்கள் ஆவார்.

உரிய பருவத்திலே பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்திலும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் கல்விகற்றுத் தேர்ந்து கல்வி கேள்விகளில் சிறப்புற்றவராக பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியிலும், காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் ஆசிரியராகப் பணியாற்றினார்.

பெற்றோரினதும் ஊர்மக்களினதும் வேண்டுகோளை ஏற்று தமிழகத்திலிருந்து வந்து பறாளையில் குருகுலம் நடத்திய வியாகரண சிரோமணி கி. சீதாராம சாஸ்திரிகளிடம் முதன்மை மாணாக்கனாக சம்ஸ்கிருதக் கல்வியைத் துறைபோகக் கற்று, சம்ஸ்கிருத பண்டிதரானார்.

1950ஆம் ஆண்டு காரைநகர் களபூமி தன்னை சித்திவிநாயகர் ஆலய பிரதமகுரு கா. குமாரசாமிக் குருக்களின் சீமந்தபுத்திரி ஞானாம்பிகை அம்மாவைக் கரம்பிடித்தார். இல்லறத்தின் பயனாக எட்டுப் புத்திரர்களையும் இரண்டு புத்திரிகளையும் பெற்று மகிழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லிபுர தேவஸ்தான பிரதமகுருவும் தாய் மாமனுமாகிய பிரம்மஸ்ரீ கணபதிசாமிக்குருக்களால் சிவாசார்ய அபிஷேகம் செய்யப்பெற்று பல ஆலயங்களில் குருத்துவப் பணி ஆற்றியதுடன் சம்ஸ்கிருதக் கல்வியைக் கற்பித்தும் வந்தார். இவருடைய இல்லத்தில் பண்டிதர் வகுப்பு மாணவர்களும், இந்துநாகரிகத்துறை மாணவர்களும் கற்றுவந்தனர். ஆய்வுக்கட்டுரை எழுதும் மாணவர்கள், ஆலய பரிபாலகர்கள், குருமார்கள் எனப் பலர் வந்து ஆலயம், கிரியைகள் பற்றிய சந்தேகங்கள், விளக்கங்களைப் பெற்றுச்செல்வர். வல்வெட்டித்துறைச் சிவன்கோவில், கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவன் கோவில் ஆகியவற்றில் பிரதம குருக்களாக நீண்டகாலம் பணிபுரிந்தார்.

"சம்ஸ்கிருத சிக்ஷா சோபனம்" என்னும் நூலை குருநாதரின் வழிகாட்டிலில் பதிப்பித்து வெளியிட்டார். குலதெய்வமான பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயிலிலும், பூர்வீகத் தொடர்புள்ள பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி கோவிலிலும் பிரதமகுருவாக இருந்து மஹாகும்பாபிஷேகங்களை நிறைவேற்றியதுடன், பறாளை முருகன்கோவில், வடக்கம்பரை முத்துமாரிஅம்மன் கோவில் முதலிய பல கோவில்களில் மஹோற்சவ குருவாகப் பணியாற்றியதுடன் ஈழத்துச் சிதம்பரத்தில் நீண்ட காலம் அலங்கார ஆச்சாரியராகப் பணிபுரிந்தார்.

அந்தணர் இல்லங்களிலும் சைவ மக்களின் இல்லங்களிலும் பூர்வ, அபரக்கிரியைகளை நடத்திவைத்தார். நித்தியகர்மானுஷ்டானங்களில் மிகுந்த சிரத்தை உடையவராக இருந்தார். லோகக்ஷேமத்திற்காக வேதமந்திரங்கள், விஷ்ணு சஹஸ்ரநாமம் ஆகியவற்றையும் பாராயணம் செய்துவந்தார்.

அமைதி, பொறுமை, அன்பாகப் பேசுதல், பிறர் மனம் நோகாமல் நடந்துகொள்ளுதல், பக்திசிரத்தையுடன் இறைபணி மேற்கொள்ளல் என்பவற்றால் இவர் ஒரு நிறைவான குருவாக சகல சமூகத்தவராலும் மதிக்கப்படத்தக்கதாகத் திகழ்ந்தார். ஸ்ரீமுக வருடம் ஆடித்திங்கள் கிருஷ்ணபட்ச துவிதியைத் திதியில் 04.08.1993 வைகுண்டப் பிராப்தி அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 124. பிரதிஷ்டா சக்கரவர்த்தி சி. குஞ்சிதபாதக் குருக்கள் (16.02.1926 - 10.01.2006)



குடும்ப வாழ்வியல்

சுன்னாகம், மயிலணியைச் சேர்ந்த சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள் அவர்கள் 1926 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி ஸ்கந்ததாசக் குருக்கள் என்னும் சின்னையர் விசாலாட்சி அம்மா தம்பதிகளுக்கு மகனாக உதித்தார். தனது குருகுலக் கல்வியை மயிலணி விஸ்வநாத சுவாமி கோவில் பிரதமகுருவாக விளங்கிய தனது மூத்த சகோதரரான சிவஸ்ரீ ச. சிதம்பரநாதக்குருக்களிடம் பெற்றுக் கொண்டார்.

தந்தை தாய், தமையன் ஆகிய மூவர் மீதும் அன்பும் பக்தியும் மரியாதையும் கொண்டிருந்த குருக்கள் அவர்கள் 2000 ஆம் ஆண்டு வெளியிட்ட ஆப்ஸ்தம்ப ஹிரண்ய சிராத்தப் பிரயோகம் என்ற தமது நாலினை இம்மூவருக்கும் சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குருக்கள் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை சுன்னாகம், மயிலணி சைவ வித்தியாசாலையில் பெற்றுக் கொண்டதுடன். சுன்னாகம் சதாசிவ பிராசீன பாடசாலையில் சம்ஸ்கிருதக் கல்வியை சிதம்பர சாஸ்திரிகளிடமும், தமிழ் இலக்கிய இலக்கணத் கல்வியை மஹாவித்துவான் கணேசையரிடமும் பெற்றுக் கொண்டார்.

1943 ஆம் ஆண்டு கந்தரோடையைச் சேர்ந்த சிவஸ்ரீ சிவசுப்பிரமணியக் குருக்கள் தம்பதிகளின் மகளான சாந்தநாயகி அம்மாவைத் திருமணம் செய்து கொண்ட குருக்கள் அவர்களுக்கு ஹரிஹர சர்மா (பட்டயப் பொறியியலாளர், இலங்கை மின்சார சபை) ஸ்கந்த தாச சரமா (பட்டயக் கணக்காளர்) ஆகியோர் புத்திரர்களாகவும், விசாலாட்சி அம்மா (கமலா) ஏக புத்திரியாகவும் வாய்க்கப் பெற்றார்கள்.

ஆலயப்பணி

1949 ஆண்டு நவம்பர் முதல் அவரது இறுதி மூச்சுவரை கொழும்பு, கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரர் கோவில் குருக்களாகவும், பிரதம குருக்களாகவும் சுமார் 57 ஆண்டுகள் சிவப்பணியாற்றினார். தான் பிரதம்குருவாக இருந்து அந்த ஆலயத்தில் நான்கு மஹா கும்பாபிஷேகங்களை நடத்திச் சிவனருள்பொலியக் காரணமாயிருந்துள்ளார். அது மட்டுமன்றி, அந்த ஆலயத்தில் நித்தியாக்னி வழிபாடு தொடர்ந்து நடைபெற வழிவகுத்ததுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து பல ஆண்டுகள் அவ்வாலயத்தில் மஹோற்சவங்களை நிகழ்த்திய பெருமையும் குருக்களையே சாரும். அங்கு குருக்களைப் பிரதமகுருவாகக் கொண்டு 11 நாட்கள் ஸ்ரீருத்ர மஹாயாகம் நிகழ்த்தப்பட்டது. இந்த ஆலயத்திலே குருக்களின் முயற்சி காரணமாக இலங்கையிலேயே முதன்முதலாக பவித்ரோற்சவம் நிகழ்த்தப்பட்டது.

இவர் பிரதம சிவாசார்யாராகப் பங்கு பற்றிய மஹா கும்பாபிஷேகங்கள்: சுன்னாகம் மயிலணி விஸ்வநாதஸ்வாமி கோவில், உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில், திருகோணமலை பத்திரகாளி கோவில், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், இரத்தினபுரி சிவன் கோவில், திருக்கேதீஸ்வரம், வத்தளை ஹேகித்த முருகன் கோவில் முதலிய பல கோவில்களிலும், பம்பலப்பட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு இந்துக் கல்லூரி, விவேகானந்தாக் கல்லூரி, விவேகானந்த சபை முதலிய நிறுவனங்களிலுள்ள விநாயகர் ஆலயங்களிலும், அகில இலங்கை இந்து மாமன்ற நடராஜர் ஆலயத்திலும் கும்பாபிஷேகங்களை நிகழ்த்தி யுள்ளார்.

புலம்பெயர் தேசங்களில் அவுஸ்ரேலியா மெல்போர்ன் முருகன் கோவில், சுவிற்சர்லாந்து சூரிச் முருகன் கோவில் முதலியவற்றில் மஹாகும்பாபிஷேகத்தைப் பிரதம குருவாயிருந்து நடத்தியுள்ளார்.

## ஆத்மார்த்த சிவபூஜைச் சிறப்பு

குருக்கள் அவர்கள் சிவாசாரியாபிஷேகம் செய்யப்பட்டது முதல் அவரது இறுதிக் காலம் வரை தவறாது விஸ்தாரமான முறையில் நிவேதனங்களுடனான சிவபூஜை செய்யும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். இதனால் குருக்களிடம் அன்பு, அமைதியுடன் கூடிய தேஜஸ் காணப்பட்டதாக அவரது நினைவு மலரில் சிவாசாரியார்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## கல்விப்பணி

1957 ஆம் ஆண்டு குருக்களின் முயற்சியால் அகில இலங்கை சிவப்பிராமண சங்கம் உருவாக்கப்பட்டது. அச்சங்கத்தின் ஊடாக கொழும்பு, சுன்னாகம், மாவிட்டபுரம் கோப்பாய், துன்னாலை. ஆகிய இடங்களில் வேதசிவாகமப் பாடசாலைகளை நிறுவி வழிநடத்தி வந்த குருக்கள் சிவாச்சார்யப் பரீட்சைக்கு தாமே பிரதம பரீட்சகராகப் பணியாற்றி பக்கச் சார்பற்று, நேர்மையான பரீட்சைகள் இடம்பெறச் செய்ததன் மூலம் சிறந்த பல சிவாச்சார்யார்கள் உருவாக வழிவகுத்துள்ளார். இவை மட்டுமன்றி சுன்னாகம் வேத சிவாகம பிராசீன பாடசாலைக்கு சமஸ்கிருத உபாத்தியாராக இன்றைய தர்மசாஸ்தா குருகுல அதிபர் வேதாகம ஞான பாஸ்கரன் சிவஸ்ரீ தா.மஹாதேவக் குருக்களை நியமித்து அந்தச் சிறார்களின் முன்னேற்றத்திற்கு காரணமாக. இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலைகளால் சமஸ்கிருத பிராசீன பாடசாலைகள் இயங்காத நிலையிலும் கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் பிராசீன பாடசாலையைத் தொடர்ந்தும். வெற்றிகரமாக நடத்தி வந்திருந்தார் அதற்காக தமது செலவில் ஆசிரியருக்கான ஊதியத்தை வழங்கி வந்துள்ளார். குருக்கள் அவர்கள் வேத சிவாகம கிரியா மரபுகளையும் வைதீக கீரியா மரபுகளையும் தெளிவாக அறிந்திருந்தமையால் அவரது இறுதிக்காலம் வரை பல்வேறு சிவாச்சார்யார்களுக்கும், சமயப் பெரியார்களுக்கும், இந்து கலாசார அமைச்சு, இந்துப் பண்பாட்டலுவல்கள் திணைக் களம், கல்வி அமைச்சு முதலிய அரச நிறுவனங்களுக்கும் ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டி வந்துள்ளார்.

**வைதீகப் பணி**

அந்தண குருமார்களின் வாழ்வியலுடன் தொடர்பான வைதீகக் கிரியைகளில் நிறைந்த அறிவும், அனுபவமும் கொண்டிருந்த குருக்கள், அந்தணர் சமூகத்தில் நிகழும் பும்சவனம், சீமந்தம், ஜாதகர்மா, நாமகரணம், அன்னப்பிராசனம், சௌளம், உபநயனம், ருதுசாந்தி, விவாஹம் முதலிய பூர்வக் கிரியைகளையும், சிராத்தம் முதலிய அபரக் கிரயைகளையும், செவ்வனே விதி வழுவாது அவ்வப்போது நிகழ்த்திவந்துள்ளார்.

இன்று வைதீகக் கிரியைகளில் சிறப்புற்று விளங்கும் மூத்த குருவான வைதீக கிரியாரத்தினம் சிவஸ்ரீ ஷ. சோமாஸ்கந்தக் குருக்கள் (மயிலணி) அவர்களுக்கு சமய, விசேஷ, நிர்வாண தீட்சைகளுடன் சிவாச்சார்ய அபிஷேகம் செய்துவைத்தவர் சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள் ஆவார்.

**நூல் வெளியீட்டு முயற்சிகள்**

சிவாகம நூல்களை ஆய்ந்தறிவதையே தமது பொழுதுபோக்காக கொண்ட குருக்கள் வைதிக மரபுகளிலும் சிவாகம மரபுகளிலும் தேர்ச்சியுடையவராக பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

அந்தணச் சிறார்களுக்கான ஆபஸ்தம்ப சந்தியா வந்தனம், ஆபஸ்தம்ப ஹிரண்ய சிராத்தப் பிரயோகம் முதலிய நூல்களை வைதிகத் துறைபிலும், ஆத்மார்த்த சிவபூஜா நூலை, சிவாசார்யார்களின் ஆத்மார்த்த சிவபூஜைக்காகவும் உருவாக்கி வெளியிட்டார்.

இந்த நூல் வெளியீடுகள் கணினி ஊடாக கிரந்த லிபியில் வெளியிடப்பட்ட முன்னோடி நூல்களாகும். இதற்குரிய கிரந்தலிபி சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்களைக் கௌரவிக்கும் வகையில் அவருக்கு சமர்ப்பணமாக அவரது மூத்த மகன் கு. ஹரிஹரசர்மாவினால் "குஞ்சிதபாதம்" என்ற பெயருடன் உருவாக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகங்களினூடான சமூக இடைவினை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபனம், ரூபவாஹினி, சக்தி TV சக்தி றேடியோ சூரியன் FM. வீரகேசரி, தினகரன், தினக்குரல் சுடரொளி முதலிய ஊடகங்களில் சமய விளக்கங்கள், சமய சிந்தனைகள், ஆசியுரைகள் முதலியவற்றை குருக்களவர்கள் நீண்ட காலமாக வழங்கி வந்துள்ளார்.

## பங்குபற்றிய சில அரச நிகழ்வுகள்

நேபாள மஹாராஜாக்கள் ஸ்ரீமஹேந்திர வீரவிக்ரமன்ஷா அவர்களை வரவேற்று ஆசிவழங்கியதுடன், பிரேந்திர வீர விக்ரமன்ஷா மற்றும் .அவரது மனைவி மகாராணி ஐஸ்வர்யராஜ்யலக்ஷ்மி ஆகியோரை வரவேற்று ஆசிர்வதித்தமையும், பரிசுத்த போப்பாண்டவர் ஜோன் போல் இலங்கை வந்தபோது மத நல்லிணக்க உறவாடலுக்காக இந்து குருமார் சார்பில் சந்திப்பில் கலந்து கொண்டமையும் குருக்கள் பங்குபற்றிய அரச நிகழ்வுகளில் முதன்மையானவை

இவைமட்டுமன்றி பல் தசாப்தங்களாக அரச பிரமுகர்களை ஆசிர்வதித்துவந்தமையும் தேசிய நிகழ்வுகளில் இந்து மதகுருமார் சார்பில் கலந்து கொண்டமையும் குருக்களுக்கு அரச கௌரவத்தினை ஈட்டிக் கொடுத்துள்ளன.

## விருதுகளும் கௌரவங்களும்

11.08.1974 சிவாகம சிரோமணி - ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரர் தேவஸ்தானம், நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்.

04. 01. 1976 கிரியாகலாப முக்தாமணி - சதாசிவ ஐயர் ஞாபகார்த்த விழாவில் அகில இலங்கை சிவப்பிராமன சங்கம் - சுன்னாகம் கிளை.

27. 03. 1976 பிரதிஷ்டாரத்னம் - அகில இலங்கை சிவப்பிராமண சங்கத்தின் 14 வது மஹாசபை

21.08.1988 கிரியா பூஷணம் - கொழும்பு இந்துசமய கலாசார அமைச்சர் கௌரவ செ. இராஜதுரை

01.09.1982 பிரதிஷ்டா கலாநிதி - கொழும்பு கொச்சிக்கடை வீரமாகாளியம்மன் பரிபாலன சபை

21:02:1992 வேதாகமக்கிரியா :சூடாமணி - இந்துசமய இராஜங்க அமைச்சர் கௌரவ பி. பி. தேவராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22.11.1996 பிரதிஷ்டா சிரோமணி - வத்தளை ஹேகித்த முருகன் கும்பாபிஷேக சபையினர்

23,04.1999 சைவசித்தாந்த பிரதிஷ்டா சக்கரவரத்தி - திருக்கழுக்குன்றம் டீ. சி. தியாகராஜ சிவாசாரியார், பொன்னம்பலவாணேஸ்வரர் அறகாவலர் சபை

14.07.1994 ஜோதிடகலாபூஷணம் - டென்மார்க் வேதாகம சபையினர்.

11.02.2001 வைதீகவித்யாசாகரம் - குருக்களின் நூல் வெளியீட்டில் இணுவில் தர்மசாஸ்தா குருதலம்

10.01.2005 சிவகலாரத்னா - தென் இந்தியா பிள்ளையார்பட்டி வேதசிவாகம பாடசாலை வெள்ளிவிழா:

நிறைவுரை

சிவபூஜா துரந்தரராக, சிவாகமச் செம்மலாக சிவப்பணியில் ஈடுபட்டுவந்த குருக்கள் அவர்கள் ஜனவரி வைகுண்ட ஏகாதசியன்று "ஓம் மிருத்யுஞ்ஜயாய நமஹ'' என உச்சரித்தவாறு மோட்சம் அடைந்தார். பீடுடைய மாதமான மார்கழியில் "ஏகாதசி மரணம் துவாதசி தகனம் அமைவது மோட்சசாதனம்" என சாஸ்திரங்கள் குறிப்பிடுவதற்கிணங்க வைகுண்ட ஏகாதசியில் சிவபதமடைந்து துவாதசியில் இயற்கையுடன் கலந்து கொண்டார். இது எல்லோருக்கும் கிடைப்பதில்லை.

அறிவு, அனுபவம், சிவபக்தி. நல்லொழுக்கம் இவைகளை தன் அணிகலன்களாக குருக்கள் எப்பொழுதும் அணிந்திருந்தார். வைதிக சைவ நெறி, சிவாகம எழுச்சி, சைவ சித்தாந்த மரபு போன்றன கடந்த நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் இலங்கை தலைநகரில் பேணப்பட குருக்களின் பங்கு மிக காத்திரமானதாகும்.

குருக்களின் வாழ்வியலின் பல்வேறு பரிமாணங்களும் இன்றைய இளைய தலைமுறையினர உணர்ந்து பின்பற்ற வேண்டியவை என்பது இங்கு மனம் கொள்ளத்தக்கது. அவரது வழியைப் பின்பற்றி அந்தணர் குலம் ஏற்றமுற உழைப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 125. ஆசிரியர், வயலின் கலைஞர் தி. சுந்தரமூர்த்தி ஐயர் (15.04.1927 - 10.08.1992)

நெல்லிப்பளை கிழக்கு ஸ்ரீ தோதரவை அம்மன் ஆலயச் சூழலில் பிரம்மஸ்ரீ தியாகராஜ ஐயரின் ஏக புததிரளாகத் தோன்றிய சுந்தரமூர்த்தி ஐயர் பாரம்பரிய புரோகிதங்கள், ஆலயப் பூசைகளிலும் பங்களிப்பு வழங்கித் தந்தையாருடன் சேர்ந்து பணியாற்றினார். இயற்கையாக இருந்த இசைஞானம் அவரைக் கர்நாடக் சங்கீத்திலும் ஈடுபாடு கொள்ளச் செய்தது. தெலலிப்பழையில் வாழ்ந்து மறைந்த ஸ்ரீமான் சிவசுப்பிரமனியக்கருக்கள், சங்கீத ஆசிரியர் விஸ்வாத ஐயர் இவர்களுடன் சேர்ந்து இசைக்கசச்சரிகளைக் கேட்டு ரசிக்க மிதி வண்டிகளில் தொலைதூரங்களுக்குக் கூடச் சென்று வந்தார். சிறந்த வியலின் வித்துவாவாக விளங்கிய இவர் முறையாகப் பண்ணிசையும் கற்று தேறியவராவார்.

பாடசாலைக் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பயின்று கண்டி மாநகர தமிழ்ப் பாடசாலையில் நிரந்தர பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணி புரிய ஆரம்பித்தார். உரிய வயதில் அன்னபூர்னேஸ்வரி அம்மாவை வதுவைசெய்து இவ்வாழ்வை அரம்பித்தார். ஐயா அவர்களின் இல்வாழவின் பயனாக ஐந்து ஆண்பிள்ளைகளும் இரண்டு பெண்பிள்ளைகளும் பிறந்தார்கள். அவர்களில் ஒருவர் (பிரம்மஸ்ரீ சு. வரதராஜசர்மா) இசைத்துறையில் பிரகாசிக்கின்றார்.

தெல்லிப்பழை கிழக்கில் இவரது மூதாதையர் நிறுவிய சைவப் பிரகாச வித்தியாசாலை 'ஐயர் பாடசாலை' என்னும் பெயருடன் சிறப்புடன் ஆரம்பப் பாடசாலையாக விளங்குவதை அனைவரும் அறிவர். கண்டியின் கடமை புரிந்த ஐயரவர்கள் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கு இடமாற்றும் பெற்று வந்தார். இக் காலகட்டத்தில் பாடசாலையின் பன்முக வளர்ச்சியில் ஐயா அவர்களின் பங்கு அளவிடமுடியாதது. ஏறத்தாழ 1953இல் பணி ஓய்வுபெறும் வரை ஐயர் பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் பங்கினை வழங்கினார். பாடசாலையில் ஆங்கில, சமய, இசை ஆசிரியராகப் பணியாற்றியனார்.

கொக்குவில் மஞ்சவனப்பதியில் 1957 - 58ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற திருமுருக. கிருபானந்த வாரியாரின் சிறந்த கதாப்பிரசங்கத் தொடரில் அணிசெய் கலைஞராகப் பணியாற்றி வாரியாரிடமும் சபையோரிடமும் பெரும் பாராட்டுக களைப் பெற்றார். தம்நாட்டுப் பண்ணிசைச் செல்வர்களின் இசைக்கச்சேரிகள் கோவில் விழாக்கள், பண்ணிசை அரங்குகள், பாலர் ஞானோதய சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைவிழாக்கள் என அவரது பணி தொடர்ந்துசென்றது.

காலத்தின் சூழலினால், ஐயா அவர்கள் சிறிதுகாலம் இடம்மாறி வாழ்ந்தமை அவரை உள்ளத்தினாலும் உடலாலும் வருத்தியது. அதன் காரணமாக சிறிதுகாலம் துர்க்காதேவியின் ஆலயச் சூழலில் அம்பிகையின் ஆலய வளாகத்தில் தெய்வ சிந்தனையோடு தேவாரம் பாடி வாழ்ந்தார் 'அண்ணா' என அக்கிரஹாரத்தரால் அழைக்கப்பட்டவர திடீர் மாரடைப்பால் தெய்வத்தாளிணை சென்றடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 126. மாவை ஆதீன கர்த்தர் மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாத குருக்கள்

(07.05.1927 - 06.03.2011)

பாரத கண்டத்தின் சேய் நாடாகிய இலங்கை தீவில் மிக மிக தொன்மை வாய்ந்ததும் உலகெங்கும் வாழும் சைவ மக்களால் உணர்வுபூர்வமாக அறியப்பெற்றதுமான முருகப் பெருமான் திருக்கோவில்கள் இரண்டு. ஒன்று கதிர்காமம், மற்றையது மாவிட்டபுரம், முன்னையது இத்தேசத்தில் தென்மூலையில் இருந்து அருளாட்சி புரிகின்றது. மாவிட்டபுரம் வடபால் இருந்து அருளாட்சி புரிகின்றது. பாரத தேசத்துடன் இவ்விரண்டு கோவில்களும் மிகமிக நெருக்கமான தொடர்புகளை பண்டு தொட்டு கொண்டிருப்பதை அனைவரும் அறிவர்.

சோழப் பேரரசினால் இளவரசி மாருதப்புரவீகவல்லியின் சாபவிமோச்சன காணிக்கையாக கிபி789 ஆம் ஆண்டு உக்கிரசிங்க பெருவழுதி மன்னனால் நிர்மாணிக்கப்பெற்று தில்லை சிதம்பரம் கோயிலின் தீக்ஷிதர் பெரியமனத்துள்ளார் அப்பெருஞ்சாந்தி விழாவை நடாத்தி 40 ஆண்டுகள் மாவை ஆதீன குருமுதல்வராக விளங்கினார்.

அப்பொழுது தொடக்கம் தீக்ஷிதர் பரம்பரையினரால் மாவிட்டபுரம் திருக்கோவில் நிர்வகிக்கப்பெற்று வருகின்றது. இவ்வாறான பரம்பரையிலேயே 1927ஆம் ஆண்டு மே மாதம் 7ம் திகதி இந்திய திருநாட்டில் கேரள மாநிலத்தில் மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாத குருக்கள் பிறந்தார். அப்பெருமகனார் 1976ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் நாள் 38வது மாவை ஆதீன கர்த்தாவாக பொறுப்பேற்று 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆறாம் திகதிவரை, 35 ஆண்டுகள் மாவை ஆதீனத்தை தமது புலமைத்துவதாலும் ஆற்றிலினாலும் தலைமை ஏற்று நடத்தி வந்தார்.

யாழ்பாணத்தை எதேச்சாதிகாரமாக கைப்பற்றி யாழ்ப்பாண மன்னனை சிறைபிடித்து பறங்கியர் என்னும் போர்த்துக்கீசர்கள் புகழ்பூத்த சைவ ஆலயங்களை தரை மட்டமாக்கி சிவபூமியில் வாழ்ந்த சைவ மக்களை மதமாற்றம் செய்த வரலாறு 1609ஆம் ஆண்டு நிகழ்ந்தது. அக்காலத்தில் மாவிட்டபுரம் சேதமாக்கப்பட்ட சமயம் அன்றைய தீக்ஷிதர் பரம்பரையினர் திருவிக்ரஹங்களை கிணறு ஒன்றில் இட்டு, அதனை மூடினர். ஒல்லாந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியிலும் தொடர்ந்து கரந்துறைந்து வாழ்ந்தனர். பிரிட்டிஷார் ஆட்சியில் மதவழிபாடு சுதந்திரம் கிடைத்ததும் 19ம் நூற்றாண்டில், மீண்டும் மாவிட்டபுரம் வந்து கந்தவேள் பெருமான் திருக்கோவிலை ப்ரம்மாண்டமுறையில் அமைத்து 1789இல் திருக்குடமுழுக்கு பெருஞ்சாந்தி விழா நடத்தி சைவ பெருமக்கள் வழிபாட்டிற்கு வழி செய்தார்கள்.

மஹாராஜஸ்ரீ சு து ஷண்முகநாத குருக்கள் பண்டைய மரபுகளை சற்றும் வழுவாது கடைப்பிடிப்பதில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தார். முன்னையவர்களைப் போன்றே வேதங்கள் சிவாகமங்கள் புராணங்கள் உபநிஷங்கள் அனைத்திலும் மிகுந்த தேர்ச்சியும், பாண்டித்தியமும் கைவரப் பெற்றிருந்தார். தமிழ் மொழியிலும் தேவ பாஷையாகிய சமஸ்கிருதத்திலும் நல்ல பாண்டித்தியம் படைத்திருந்ததுடன் ஆங்கில மொழியிலும் புலமையாளராக இருந்தமை தனிச்சிறப்பாகும். அன்னாரின் காலத்தில் உள்நாட்டு யுத்தம் பல ஆண்டுகளாக நடைபெற்று வந்தன. 1990ஆம் ஆண்டு வலிகாமம் வடக்கு மக்களுடன் தேசாந்திரிகளாக குரு முதல்வரும் குடும்பத்தினரும் வெளியேறவேண்டி ஏற்பட்டது. திருக்கோவில் பல நூறு கோடி மதிப்புள்ள சொத்துக்களையும் இழந்து பல ஆண்டுகள் பூசைகளின்றி எவரும் செல்லமுடியாத நிலையில் காட்சியளித்தது.

பல ஆண்டுகள் கழித்து இந்திய திருநாட்டுக்கு பயணத்தை மேற்கொண்டு, தமது ஆதி மூதாதையயரின் திருத்தலமாகிய தில்லை சிதம்பரத்துக்கு சென்று வேண்டுதல் செய்தார் அதன் பலனாக அன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் அழைப்பை ஏற்று இராணுவத்தின் உதவியுடன் மாவிட்டபுரம் சென்றார். மரங்கள் புதர்கள் இடிபாடுகள் நிறைந்த மாவிட்டபுரத்தை நினைந்து அவர் மனம் வருந்தியதை யாராலும் கணக்கிட முடியுமோ? ஆயின் மனம் தளராஉறுதியுடன் ஜனாதிபதி அளித்த ஒத்துழைப்புடன் இப்புண்ணிய க்ஷேத்திரத்தை எண்ணற்ற சிரமங்களையும் இடர்பாடுகளையும் எதிர்கொண்டவராக சீரமைப்பதில் உழைத்தார்.

மல்லாகம் பழம் பிள்ளையார் கோவில் முன்னிலையில் ஒரு வீடு எடுத்து. அங்கிருந்துகொண்டு துவிச்சக்கரவண்டி, உழவு இயந்திரம் இவற்றின் மூலமாக தினமும் மாவிட்டபுரம் சென்று புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொண்டுவந்தார். அதேசமயம் இராணுவ தளபதியுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு மாவிட்டபுரம் வீணியவரை இராஜராஜேஸ்வரி அம்மன் கோவில், தெல்லிப்பளை அரசன்னார்வளவு பிள்ளையார் கோவில், கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவில் ஆகியவற்றையும் பூஜைகளை துவங்குவதற்கு ஒழுங்குபடுத்தி செயற்படுத்தினார். ஒரு கட்டத்தில் வலி வடக்கில், மாவிட்டபுரத்தில் எவரும் மீண்டும் குடியயேற முடியாத நிலையிலும் தமது குடும்பத்துடன் சென்று வசித்துவந்தார். திருப்பணிகள் வேகம் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் மேற்கொண்ட மிகத்துணிவான செயல்களே வலிகாமம் வடக்கு மீள் குடியேற்றத்துக்கு வழி அமைத்தது என்றால் மிகையாகாது.

கீரிமலை காசி விஸ்வநாதர் கோவில் தர்மகர்த்தா வாகவும் பிரதம குருக்களாகவும் இருந்து ஆலய வளர்ச்சிக்குப் பெரிதும் அர்பணித்திருந்தார். ஈழத்தில் புகழ் பூத்த சக்தி பீடங்களில் ஒன்றான தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானம், காரைநகர் ஈழத்து சிதம்பரம் மற்றும் காரைநகர் கருங்காலி முருகமூர்த்தி கோவில்களின் முக்கிய காரியங்கள் அவரின் வழிகாட்டுதலின்படி நிகழ்வது வழக்கம். அன்னாரது பரம்பரை கோவிலான விளைவேலி மருதடி பிள்ளையார் கோவிலின் தர்மகர்த்தாவாக இருந்து அக்கோவில் காரியங்களில் நெறிப்படுத்துவதும் வழக்கம். அது மட்டும் அல்லாது கதிர்காமம் மாணிக்க (செல்ல) பிள்ளையார் கோவில், வள்ளி அம்மன் கோவில், கதிரமலை முருகன் கோவில் என்பவற்றுக்கு, இந்தியா மணி ஐயர், சுந்தரராஜ சர்மா, சுப்ரமணிய சர்மா. வாசுதேவ சர்மா இவர்களை கொண்டு பத்து வருடங்களுக்கு மேல் பூஜைகள் செய்வித்தார். முழங்காவில் முருகேசு பிள்ளையால் கொடுக்கப்பட்ட முழங்காவில் ஊர் நிலங்களை அங்கே அமைந்து இருக்கும் முழங்காவில் பிள்ளையார் கோவிலுக்கு அளித்து பூஜைகள் தடையின்றி நடக்க செய்வித்தார். மலையகத்தின் பிரசித்திபெற்ற தலமாகிய ஹட்டன் மாணிக்க பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம் நடத்தியதன் மூலம் அன்றிலிருந்து அவர்களால் போற்றப்பட்டு வந்துள்ளதை அறியலாம்.

ஒரு சமயம் நொச்சியாகமம் மக்கள் மழை இல்லாமல் பெரும் வறட்சியில் தவித்த சமயம் நொச்சிச்சியாகமம் பொன்னுத்துரை என்பவர், அங்கே அமைந்து இருக்கும் சர்வ மத ஆலயத்தில் மஹாராஜாஸ்ரீ அவர்கள் தலைமையில் மழை பொழியவும் வறட்சி தீரவும் யாகம் ஒன்று ஒழுங்கு செய்து செய்யப்பட்டு. யாகம் பூர்த்தியான அடுத்த நொடி மேகங்கள் ஒன்று சேர்ந்து மழை கொட்டியதைக்கண்டு அனைவரும் வியந்தனர்.

கடல்கடந்த நாடாகிய மலேசியாவின் பெருமை மிக்க மஹாலக்ஷ்மி கோவிலின் வழி காட்டியாக இருந்ததுடன் இடம்பெயர்ந்து வசித்தகாலத்தில் அங்கு சென்று அக்கோவிலின் மஹாகும்பாபிஷேகம் செய்து, அம்மக்களால் போற்றப்பட்டு வந்தார்.

மாவை ஆதீன குரு முதல்வர் அவருக்கு இருந்த வேத ஆகம பயிற்சிகள் பாண்டித்தியம் காரணமாக இந்நாட்டிலும் தமிழகத்திலும் உள்ள பலப்பல சிவாச்சாரியார்கள் அவரை அணுகி தத்தமது சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு, ஆலோசனைகள் வழங்குவது வழக்கம்.

திருக்கோவில் பணிக்கு அப்பால் தமிழுக்கு அவர் கொடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் அவர் இயற்றிய புத்தகங்களே எடுத்துக்காட்டு. மாவை கந்தனின் திருத்தல வரலாறை ஒன்று திரட்டி புத்தகமாக வெளியிட்ட பெருமை அவரையே சேரும் அதோடு தீப வழிபாட்டை விளக்கும் தீபதரிசனம், மயிலின் சிறப்பை விளக்கும் மயில் எனும் புத்தகம், மாவைக்கந்தன் தோத்திரங்களை ஒன்று திரட்டி மாவைக்கந்தன் தோத்திர திரட்டு இன்னும் பல வெளியீடுகளை அவர்செய்திருந்தார். ஆங்கிலத்திலும் அவரின் புலமைகளை விவரிக்கும் வகையில் கந்தனின் திருத்தல வரலாறை ஆங்கிலத்திலும் வெளியிட்டு இருந்தார்.

மாவை முத்தமிழ் கலை மன்றத்தை நிறுவி அதன் தலைவராக இருந்து முத்தமிழை வளர்த்தார். பல புகழ் பூத்த கலைஞர்களை உருவாக்கினார், தமிழ்நாட்டின் குரலரசி கே. பி. சுந்தராம்பாள், பஜனை சாம்ராட் பித்துக்குளி முருகதாஸ் ஆகியோரை மாவிட்டபுரம் அழைத்து பல்லாயிர கணக்கான மக்கள் முன்னிலையில் கச்சேரிகள் செய்வித்து. அனைவரையும் மெய் சிலிர்க்கவைத்தார்.

"எழுதிச் செல்லும் விதியின் கை" என்ற பெயரில் நாவல் ஒன்றை எழுதி வெளியிட்டதன்மூலம் சிறந்த ஒரு இலக்கியவாதியாகவும் பரிணமிக்கலானார்.

கந்த பெருமானின் கருணை ஒன்றையே அவர் என்றும் வேண்டுதல் செய்தார். கந்தன் காலடியில் 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06ஆம் நாள் அமைதி பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 127. ஊரெழு, பால. வைத்தியநாதக் குருக்கள்

(20.07.1927 - 22.04.1998 )

ஈழமணித்திருநாட்டின்வடபால், யாழ்ப்பாணத்தில், ஊரெழு கிராமத்தில் சின்னக்குருக்கள் என அன்பாக அழைக்கப்பட்ட பாலசுந்தரக் குருக்களுக்கும் மீனாம்பிகை அம்மாவுக்கும் தெய்வீகப் புதல்வராக வைத்தியநாதக் குருக்கள் 20.07.1927 இல் பிறந்தார். ஊரெழு கணேசவித்தியாலயத்தில் கல்விகற்ற இவர் சிதம்பர சாஸ்திரிகளிடம் வேத, ஆகம, ஜோதிடக் கல்விகளைக் கற்றார். இளமைப்பருவத்திலேயே தந்தையாருடன் ஆலயக் கிரியைகளில் ஈடுபட்டுவரலானார்.

1955ஆம் ஆண்டு கண்டி பத்மநாப ஐயர்- பகீரதி தம்பதிகளின் புதல்வி பவானி அம்மாவைத் திருமணம் செய்து ஆறு குழந்தைகளைப் பெற்றார். ஊரெழு பெரிய குருக்கள் என அழைக்கப்படும் பெரியதந்தையாராகிய சிவஸ்ரீ ச. சோமசுந்தரக் குருக்களினால் ஆசார்ய அபிஷேகம் செய்யப்பெற்றார்.

முதலாவது திருவிழாவாக வேலணை முடிப்பிள்ளையார் கோவிலில் கொடியேற்றினார். இவரது சிறப்புக்களைக் கண்ட தீவக மக்கள் தமது ஆலயங்கள் பலவற்றிலும் இவரையே குருவாக அமர்த்தினர். அனலைதீவு, நெடுந்தீவு, வேலணை, மண்டைதீவு ஆகியன குறிப்பிடத் தக்கன. அத்தோடு மட்டுவில் கண்ணகை அம்மன் பரம்பரைக் குருத்துவத்தையும் கவனித்துவந்தார். ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவிலின் பரம்பரைக் குருத்துவத்தைப் பொறுப் பேற்ற இவர் கடைசிக் காலம்வரை காலநேர நியமங்கள் தவறாது நித்திய நைமித்திகங்களைத் திறம்பட நடத்தினார்.

அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமிக்குருக்களுடன் பல ஆலயங்களில் குருத்துவம் செய்தமை இவரது நற்பணிக்குச் சான்றாகும். பிள்ளைகள் யாவரையும் உரியமுறையில் வளர்த்து உரிய கருமங்களைச் செய்து குருத்துவப் பணியில் சிறக்கச் செய்தார். இவரது மைத்துனர் கோப்பாய் பரமசாமிக் குருக்கள் மற்றும் சகோதரர் வாகீஸ்வரக் குருக்கள் ஆகியோர் இவரது நற்கருமங்களுக்கு இறுதிவரை துணைநின்றனர்.

இவர் சுமார் எழுநூறு மஹோற்சவங்களையும் ஐநூறுக்கு மேற்பட்ட கும்பாபிஷேகங்களையும் செய்துவைத்த பெருமைக்குரியவர். 1995இல் சுவிஸ் நாட்டிற்குச் சென்று சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் கும்பாபிஷேகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தினார். இவருக்குப் பல ஆலயங்களும் நிறுவனங்களும் பல விருதுகளை வழங்கிக் கௌரவித்துள்ளனர். 'சிவபூஜா துரந்தரர்', 'சிவாகமவித்யாபூஷணம்', 'வேதாகம மாமணி', 'சிவபூஜாநிதி', 'சிவாகமதிலகம், 'கிரியாரத்தினம்', 'சிவாகம கிரியாசூடாமணி' முதலியன இவற்றுட் சிலவாகும்.

இறுதிக்காலத்தில் பாரத யாத்திரை செய்து காசிக்கும் சென்று மனநிறைவடைந்தார். புளியந்தீவு நாகேஸ்வரன் ஆலய கும்பாபிஷேக ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்த வேளை 22. 04. 1998 தமது திருமணநாளில் அபரபட்சத் தசமித்திதியில் இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 128. நயினை, சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள்
### (16.12.1927 - 21.05.2007)

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் பிரதம குரு பிரம்மஸ்ரீ சு. பரமேஸ்வரக் குருக்கள். 1927 ஆம் ஆண்டு நயினாதீவிலே பிறந்தவர். தந்தையார் சிவஸ்ரீ சுவாமிநாதக் குருக்கள். தாயார் செல்லம்மா. தந்தையாரிடம் தமிழ் சமஸ்கிருத மொழிகளைக் கற்ற இவர், நயினை நாகபூஷணி வித்தியாசாலையில் வரன்முறைக் கல்வியினையும் பெற்றார். சிதம்பரத்தில் காஞ்சிப் பெரியார் ஆசியுடன் வேதங்களையும், சமஸ்கிருத மொழியினையும் இவர் கற்றார். திருகோணமலை பூரணானந்தேஸ்வரக் குருக்கள், நயினை ஐ. கைலாச நாதக் குருக்கள், இணுவில் இராமநாதக் குருக்கள் ஆகியோரிடம் இவர் கிரியைநெறி பற்றிய பாடங் கேட்டார்.

இவருடைய 27 ஆவது வயதில் அனலைதீவு சிவஸ்ரீ குமாரசாமிசர்மா - பொன்னம்மா தம்பதிகளின் மகள் லலிதாம்பிகையைத் திருமணம் புரிந்தார். இதே ஆண்டில் நயினை ஐ. கைலாசநாதக் குருக்களைக் குருவாகக் கொண்டு ஆச்சாரியாபிஷேகம் நடைபெற்றது. திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோயிலிலேயே முதன் முதலாகக் கொடியேற்று வைபவத்தை நடத்தினார். ஏழு வருடங்களாக நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் கொடியேற்று வைபவத்தை நடத்தினார். திருக்கோணேஸ்வரம், கொழும்பிலுள்ள கோயில்கள் உட்பட இருநூறுக்கு மேற்பட்ட கோயில்களின் கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்தி வைத்துள்ளார். தமிழ்நாட்டிலுள்ள திருப்பழனி முருகன் ஆலயக் கும்பாபிஷேகத்தினை ஈசான சிவாசாரியாருடன் குருவாகவிருந்து நடத்திவைத்துள்ளார். 1986ஆம் ஆண்டு லண்டன் முருகன் கோயில் கும்பாபிஷேகத்தினை நடத்தினார்.

தமிழ்நாட்டு மெய்கண்டார் ஆதீனம் "சிவாகம ஜோதி" என்றும், நல்லை ஆதீனம் " சிவாகம ஞானபானு " என்றும், புங்குடுதீவு கண்ணகை அம்பாள் தேவஸ்தானம் "பிரதிஷ்டா பூஷணம்" என்றும், இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் தேவஸ்தானம் "வேத சிவாகம கிரியாசாகரம்" என்றும் இவருக்குப் பட்டங்கள் வழங்கியுள்ளன. வைதீக, ஆகம சைவ நெறிகளிலே துறைபோய அறிவினையுடைய இவர் ஆற்றிய பணிகளைப் பாராட்டி நாவலர் சபை "சிவாகமக்கிரியாமாமணி" என்ற விருது வழங்கிக் கௌரவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகூர்த்தநிர்ணயம், சிவமஹோற்சவ சங்கிரஹம், ஸ்ரீசக்ர பூஜாவிதி என்பன இவர்களால் வெளியிடப்பட்ட நூல்களாகும்.

இவர் கலந்துகொண்ட, மற்றும் நடத்திவைத்த கும்பாபிஷேகங்கள் பல. சிலவற்றை இங்கு பார்க்கலாம்.

திருகோணமலை கோணநாதேஸ்வரர் திருக்கோவில் (2முறை)
கொழும்பு செட்டியார்தெரு முத்துவிநாயகர் (2 முறை) சம்மாங்கோடு ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி கோவில் (2 முறை) பம்பலப்பிட்டி சம்மாங்கோட்டார் ஸ்ரீமாணிக்கவிநாயகர்
கோவில் (3 முறை)
காரைநகர் மணற்காடு மாரியம்மன் கோவில்
பதுளை ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவில்
பண்டாரவளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்(2 முறை)
டிக்கோயா ஸ்ரீ மாரியம்மன் கோவில்
புளியங்கூடல் ஸ்ரீ மஹாமாரியம்மன் கோவில்
புங்குடுதீவு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி (கண்ணகை) கோவில்
(33 குண்டம்)
நீர்கொழும்பு சித்திவிநாயகர் கோவில் (33 குண்டம்)
கொழும்பு செக்கடித்தெரு கதிரேசன் கோவில் (2 முறை)
வவுனியா கோவிற்குளம் அகிலாண்டேஸ்வரி சமேத
அகிலாண்டேஸ்வரர் கோவில் ஆவர்த்தன கும்பாபிஷேகம் யாழ் பல்கலைக்கழக
பார்வதி சமேத பரமேஸ்வரர் ஆலயம் பேராதனை குறிஞ்சிக் குமரன் கோவில்
திருகோணமலை விஸ்வநாத (சிவன்) ஆலயம்
புங்குடுதீவு குறிகட்டுவான் மனோன்மணி அம்பாள் கோவில்
(17 குண்டம்)
வெளிநாடுகளில்.....
இலண்டன் உயர்வாசல் குன்று முருகன் கோயில்
கனடா றொரன்ரோ துர்க்கையம்மன் கோயில் (33 குண்டம் ) கனடா மொன்றியல் ஸ்ரீ துர்க்கையம்மன் கோவில் அவுஸ்திரேலியா மெல்போன் சிவா விஷ்ணு கோவில்
அவுஸ்திரேலியா பிரிஸ்பேர்ன் ஸ்ரீ செல்வ விநாயகர்
சிங்கப்பூர் செண்பக விநாயகர் ஆலயம்
ஜேர்மனி மயூரபதி முருகன் கோவில்
கனடா ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் கோவில்

ஐயா அவர்கள் தமது குருத்துவக் காலத்தில் பலதமிழ்நாட்டு ஆகம வேத விற்பன்னர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இவ்வாறு சிறப்புற வாழ்ந்த பெரியார் 21.05.2007இல் இறையடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 129. தீவக பீஷ்மர்
## நா. யோகீஸ்வரக் குருக்கள்
## (01.07.1928 - 27.11.2017)

இலங்கைத்தீவின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தில் புளியங் கூடல் சரவணை கிராமத்தில் செருத்தனைப் பதியில் சிவஸ்ரீ நாகலிங்கக் குருக்கள் அம்மணி அம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனாக 01.07.1928இல் யோகீஸ்வரக் குருக்கள் பிறந்தார்.

தமது ஆரம்பக் கல்வியை சரவணை நாகேஸ்வரி வித்தியா லயத்தில் பெற்றுக்கொண்ட இவர் இளமையில் பாடசாலைக் கல்வியுடன் சம்ஸ்கிருதக் கல்வியையும் இணைந்து கற்று வளரலானார். 1939ஆம் ஆண்டில் சுருவில் சதாசிவக் குருக்கள் அவர்களால் நாரந்தனை கந்தசுவாமி கோவிலில் உபநயனம் செய்துவைக்கப்பட்டார்.

புங்குடுதீவு பெருங்காடு சிவன்கோவிலில் பிரம்மஸ்ரீ கி. நாராயண சாஸ்திரிகளிடம் குருகுலக் கல்வியை மேற்கொள்ளலானார். சிறுவயதிலேயே கோயிற் கிரியைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு மிகவும் துடிப்புடன் செயற்படலானார். கிரியைகளின் செயல்முறைகளையும் விளக்கங்களையும் கேட்டறிந்து அறிவையும் அனுபவத்தையும் பெருக்கிக் கொண்டார். பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகளிடம் சம்ஸ்கிருதமொழி கற்று சம்ஸ்கிருத பண்டிதர் ஆனார்.

1951ஆம் ஆண்டு ஜம்புகேஸ்வரக் குருக்கள் மீனாம்பாள் தம்பதிகளின் மகள் சுபதாம்பிகையைக் கரம்பிடித்து தமது இல்லறவாழ்க்கையைத் தொடங்கினார். 1960ஆம் ஆண்டில் இணுவில் கந்தசுவாமி கோவில் பரம்பரை குருவாக விளங்கிய இவரது மைத்துனர் வேதாகம ஞானபானு சிவஸ்ரீ இராமநாதக் குருக்களிடம் ஆசார்ய அபிஷேகம் பெற்றுக்கொண்டார்.

தமது முதலாவது மஹோற்சவத்தை 1962இல் தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் சிறப்புற ஆற்றினார். தொடர்ந்து நூற்றுக்கணக்கான ஆலயங்களில் மஹோற்சவங்களை நடத்திவைத்ததுடன் இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள பல ஆலயங்களில் பல கும்பாபிஷேகங்களில் கலந்துகொண்டும், தாமே பிரதம குருவாக இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கும்பாபிஷேகங்களை நடத்திவைத்தும் சைவப் பெருமக்களிடையே நன்மதிப்பைப் பெற்றார்.

சுன்னாகம் சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள், இணுவில் சிவஸ்ரீ இராமநாதக் குருக்கள், நவாலி சிவஸ்ரீ சாமி. விஸ்வநாதக் குருக்கள், நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள், நயினை சிவஸ்ரீ ஐ. பரமேஸ்வரக் குருக்கள், வடகோவை சிவஸ்ரீ வை.மு. பரமசாமிக் குருக்கள், நீர்வேலி சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள், அரியாலை சுப்பிரமணியக் குருக்கள் முதலிய ஈழத்தின் பிரபல குருமணிகள் யாவருடனும் சேர்ந்து பணியாற்றி அவர்களுடன் அனுபவப் பகிர்வினை மேற்கொண்ட திருப்தி சிவஸ்ரீ யோகீஸ்வரக் குருக்களிற்கு உண்டு. பல ஆலயங்களில் பல விருதுகளையும் பெற்றுக் கொண்ட இவருக்கு கரவெட்டி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகத்தின்போது வழங்கப்பெற்ற சிவாசார்ய குருமணி, "வேதாகமோத்தம ஆசார்ய சாரதா" என்னும் விருது குறிப்பிடத்தக்கது.

2003ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது உலக இந்து மஹாநாட்டில் இந்துசமய விவகார அமைச்சினால் இவர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 2012ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆன்மீகப் பெருவிழாவில் நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் ஞாபகார்த்த சிறப்பு விருதினை சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடத்தில் பெற்றுக் கொண்டார். 88ஆவது வயதில் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் எட்டாவது குருபூசைத் தினத்தில் மூத்த சிவாசாரியார் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். ஆரம்பக் காலம் முதல் இறக்கும் வரை தீவுப்பகுதியிலுள்ள பல கோவில்களில் யோகீஸ்வரக் குருக்கள் வந்துதான் எதையும் செய்யவேண்டும் என்ற நிலை இருந்தது. அதனால் இவர் "தீவக பீஷ்மர்" எனப் போற்றப்பட்டார்.

மிகப் பெரிய குடும்பப் பின்னணியை உடைய இவர் தமது மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள் மற்றும் தமது நெருங்கிய உறவினர்கள் இல்லங்களில் நிகழும் சகல வைபவங்களிலும் முதன்மையாகக் கலந்துகொண்டு அவர்கள் அனைவருக்கும் பிதாமகராக உயர்ந்துநின்றார். அவ்வக் குடும்பங்களில் பல உபநயனங்கள், பூப்புனித நீராட்டு வைபவங்கள், ஆசார்ய அபிஷேகங்கள் போன்றவற்றைத் தாமே குருவாக இருந்து நடத்திவைத்திருக்கிறார். ஏடு துவக்குவதிலிருந்து திருமணம் செய்துவைத்து ஆசார்யாபிஷேகம்வரை இவர் நடத்திவைத்திருக்கிறார்.

1988ஆம் ஆண்டில் ஷஷ்டியப்த பூர்த்தியையும், 2005ஆம் ஆண்டில் பவளவிழாவையும் கொண்டாடிய குருக்கள் அவர்கள் தமது எண்பத்து மூன்றாவது வயதில் இந்தியாவில் திருக்கடவூரில் சதாபிஷேகத்தையும் கொண்டாடி மகிழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990ஆம் ஆண்டிலிருந்து 2016ஆம் ஆண்டுவரை அத்தியடிப் பிள்ளையார் கோவிலின் பிரதம குருவாக விளங்கித் தமது மகன், மற்றும் மருமகனுடன் நீண்டகாலம் குருத்துவம் செய்தமையும் இரண்டு கும்பாபிஷேகங்களை நடத்திவைத்தமையும் குறிப்பிடத்தக்கது. மூத்த இரு புதல்வர்களின் ஷஷ்டியப்தபூர்த்தி வைபவங்களை நடத்தி நிறைவுகண்டார்.

இறுதிக்காலம்வரை அனைத்து அந்தணர்களின் நிகழ்வுகளிலும் தம்பதி சமேதராகக் கலந்து ஆசிவழங்கி மகிழ்வாகவும் நிறைவாகவும் வாழ்ந்து உடல்நலக் குறைவால் இரண்டொரு தினங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று 27.11.2017 கார்த்திகைச் சோமவாரம் சுக்கிலபட்ச நவமித் திதியில் இறையடி சேர்ந்தார்.

## 130. வயலின் வித்துவான், நவிண்டில், சி. சர்வேஸ்வர சர்மா

**(20.01.1928 - 16.06.2010)**



குரு: என். ஜி. கோபாலகிருஷ்ண ஐயர், கஜபதிராவ்.
திருமணம்: 15.09.1958 மனைவி ருக்மணிதேவி.

**இவர் வாசித்த சில பிரபல கலைஞர்கள்:**
புல்லாங்குழல் மூர்த்தி ஐயர்,
திருமுருக. கிருபானந்த வாரியார்.

**பணிகள்:**
ராமநாதன் நுண்கலைப்பீடத்தில் வருகைதரு விரிவுரையாளர்.
யாழ். ரசிகரஞ்சனசபாவில் 15 வருடம் ஆசிரியர்.
சொந்தமாக பாரதி கானசபா - 15 வருடம். கற்பித்தல்.
இலங்கை வானொலிக் கலைஞர்.
மலேஷியா கச்சேரிகள்.

**விருதுகள்:**
மலேஷியா - வாத்திய சங்கீத ரத்னம்.
நல்லூர் பிரதேச சபை - கலைஞானச்சுடர்
இலங்கை கலாசார அமைச்சு - கலாகீர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 131. நவாலி, சாமி. விஸ்வநாதக் குருக்கள்

(14.05.1928 - 04.01.2010)

யாழ்ப்பாணத்தின் நவாலிப் பதியிலே, அட்டகிரித் தலத்திலே சிறப்புறு முருகன் ஆலயம் உள்ளது. இப்பெருமானை முக்காலமும் தீண்டி அர்ச்சித்துப் பரவசத்துடன் வணங்கிவந்த அந்தணப் பெருமகன் சீதாபதிக் குருக்கள் சாமிக்குருக்கள். வடமொழியிலும், தமிழ் மொழியிலும் பாண்டித்தியம் பெற்ற வித்தகர். இவரது மனைவியார் சண்டிருப்பாய் ஐயாத்துரைக் குருக்கள் மகேஸ்வரி அம்மாள். இவர்களது இவ்வாழ்க்கையின் தவப் பயனாய் ஆசைக்கொரு மகளையும் ஆஸ்திக்கொரு மகனையும் பெற்று பெருமகிழ்வுற்று கண்ணின் மணிகளைப் போலப் போற்றி வளர்த்து வந்தார்கள் ஓரே மகள் நாகரத்தின அம்மையாரை யாழ்ப்பாணம் வண்ணை வேங்கட வரதராஜப் பெருமாள் ஆலய பிரதம குருவாயிருந்த வேதாகம விற்பன்னர் இராமசாமிக் குருக்களுக்கு கன்னிகாதானஞ் செய்வித்து மனம் மகிழ்ந்தார்கள்.

ஒரே மகனுக்கு விஸ்வநாத சர்மா என்னும் பெயர் சூட்டி எதுவித குறையும் விடாது கருத்துடன் வளர்த்து வந்தார்கள். செந்தில் ஆண்டவன்மீது தாளாத தாகமும் பக்தியும் கொண்டு அவனது பேரருளினால் பிறந்த ஒரே மகனை அவனது சன்னிதிக்கு அழைத்துவந்து, முடிக்காணிக்கை கொடுத்து தமது பிரார்த்தனையை நிறைவேற்றி அருள்பெற்றுத் தாயகம் திரும்பினார்கள்.

பெற்றோர் வழிகாட்டலில் குருக்களும், நவாலி சோமசுந்தரப் புலவர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, மகாலிங்கசிவம் போன்ற தமிழ்ப் பேரறிஞர்களிடம் தமிழ் மொழியைக் கசடறக் கற்று அவ்வாசிரியர்களின் அன்பிற்குப் பாத்திரமானார். வடமொழியை ஆரம்பத்தில் நீர்வேலி பண்டிதர் கந்தையா அவர்களிடமும், வடலியடைப்பு அருணாசலதேசிகர், சோமசுந்தரக்குருக்கள், சீதாராமசாஸ்திரிகள் போன்ற வடமொழி விற்பன்னர்களிடமும் உரிய முறையில் பயின்றுவந்தார். இவரது கிரகிக்கும் தன்மையையும், பாடங்களில் இவர் காட்டிய ஆர்வத்தையும் கண்ட ஆசிரியர்கள் இவர்பால் அன்பு பூண்டு பல கலைகளையும் விரும்பிக் கற்பித்தனர். பின் உறவினர்களிடமும் குறிப்பாக இவரது மைத்துனர் இராமசாமிக் குருக்களிடமும், கிரியாபத்ததிகள் பெற்று செயல் முறைகளையும் ஆர்வத்துடன் கேட்டும் செய்தும் வந்தார்.

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதற்கிணங்க கல்வி, கலை முதலியவற்றில் சிறந்து விளங்கியதோடு, கர்நாடக சங்கீதம், வாத்திய இசை, ஜோதிடம் முதலியவற்றிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது பெற்றோர் பதினொராவது வயதில் உபநயன விழாவைப் பெருவிழாவாக நடாத்தி உவகை உற்றனர். ஒரே மகனை இல்வாழ்க்கையில் ஈடுபடுத்த விரும்பினர். கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் இராமநாதப்பெரியார் காலத்தில் பிரதமகுருவாகவும், ஸ்தானிகராகவும் இருந்தவர் சுழிபுரம் பறாளாய் - வேதாரண்யேஸ்வரக் குருக்கள். இவரது திருமகளாம் வாலாம்பிகை என்னும் மங்கையர் திலகத்தை திருமணஞ் செய்வித்துக் களிப்புற்றார்கள். இருபத்திரண்டாவது வயதில் வேதாகம கிரியைகளில் தன்னிகரில்லாக் குருமணி - சிறந்த ஒழுக்கம் நிறைந்த தவசீலா் - இவரின் மைத்துனர் வண்ணை பெருமாள் கோயில் பிரதம சிவாசாரியார் இராமசாமிக் குருக்களினால் ஆச்சார்ய அபிஷேகம் செய்யப்பெற்று சிவாச்சாரியப் பதவியைப் பெற்றார். இவரிடம் பெருமாள் கோயில் பொறுப்பையும் பெற்று நித்திய நைமித்திக உற்சவம் செய்யும் ஆற்றலையும் திறனையும் பெற்றார்.

நல்லறமான இல்லறத்தில் கருத்தொருமித்து இணைந்த இவர்களது இனிய இல்வாழ்வின் பயனாய் முப்பெருந் தேவிகளைப் போன்ற மூன்று குமாரத்திகளையும் இருகண்ணணைய குமாரர்களையும் பெற்றுச் சீராட்டி வளர்த்து கல்வியூட்டி அவர்களுக்குரிய வாழ்க்கையமைத்துக் கொடுத்து பேரக்குழந்தைகளையும் கொஞ்சிக் களிப்புற்று பெருவாழ்வு வாழ்ந்தார்.

சிவாச்சார்ய பதவிபெற்றபின் இவரது மாமனாரின் வேண்டுதலின்பேரில் சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் முதன்முதலாக உற்சவ சிவாச்சாரியாராக மகோற்சவத்தை நடாத்தி, தொடர்ந்து இவரது குலதெய்வமான அட்டகிரிக்கந்தனது உற்சவத்தையும், வண்ணை பெருமாள் மகோற்சவத்தையும் திறமையாக நடத்திச் சைவப் பெருமக்களின் நன்மதிப்பினைப் பெற்றார். தொடர்ந்து பல இடங்களிலும் திருவிழாக்களையும் சமயக் கிரியைகளையும் செய்து வந்தார்.

இவர் பொறுப்பேற்றுத் திறம்பட நடத்தி வைத்த கும்பாபிஷேகங்கள் பல நூற்றுக்கணக்கானவை. யாழ் வண்ணை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் பல ஆண்டு காலம் பொறுப்பான குருக்களாக இருந்தவர். கொழும்பு தெஹிவளை விஷ்ணு ஆலயத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் துணைநின்று உரிய நேரத்தில் ஆலோசனைகள் வழங்கி, ஆலய வளர்ச்சிக்குக்கு வித்தாக நின்றவர். இருமுறை கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தவர்.

கொழும்பு மயூரபதி அம்பாள் ஆலய கும்பாபி ஷேகத்தைச் செய்துவைத்தவர். சைவப் பெருமக்கள் ஆயிரக்கணக்கில் கூடி மயூரபதி அம்மனின் அருளை நாடி பக்திப் பரவசத்துடன் வணங்கி அமைதியடைவதை நாம் பார்க்கலாம். இலங்கைத் திருநாட்டில் எண்ணற்ற ஆலயங்களில் மகோற்சவம், சங்காபிஷேகங்கள் நடத்தியம், சிவாச்சாரிய அபிஷேகம் செய்தும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணச் சிறார்களுக்கு உபநயனங்கள் மற்றும் அந்தணர் திருமணங்கள் பல நடத்தியும் வரலாறு படைத்தவர்.

கப்பித்தாவத்தை அருள்மிகு ஸ்ரீ பால செல்வவிநாயகர் ஆலயப் பிரதமகுரு சமாதான நீதவான் சிவஸ்ரீ பா. சண்முகரத்தினசர்மா இவர்மீது மிகுந்த அன்பும், மதிப்பும் கொண்டவர். இவரது முன்னேற்றத்தில் ஆர்வம் கொண்டவர். இதேபோல சர்வதேச இந்துமத குருபீடத் தலைவரும் அகில இலங்கைச் சமாதான நீதவானும் ஆகிய கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார் இவர்மீது ஆழ்ந்த பக்தியும் மதிப்பும் பேரன்பும் கொண்டு இவரது வழிகாட்டலையும் ஆலோசனையும் மிகவும் விரும்பிப் பெற்றுச் செயல்படுவார். இவ்வாறே இவரது சகோதரர்களும் இவர்மீது அபிமானம் கொண்டவர்கள்.

ஒரு குருவிற்குரிய குருலக்ஷணம் அனைத்தையும் கொண்டவர். அழகிய தோற்றம், ஆழ்ந்த வடமொழியறிவு, தமிழ் மொழியில் மிகுந்த புலமை ஜோதிடம், சங்கீதம் போன்ற கலைகளில் ஈடுபாடுடையவர். ஆசையின்மை, பொறுமை பண்புடன் கூடிய இனிமையான பேச்சு, தயை, அகிம்சை போன்ற அருங்குணங்களின் உறைவிடம். எல்லாவற்றிற்கும் மேலாக செய்யும் சேவைகட்கு மனமுவந்து கொடுப்பதை மனத்திருப்தியுடன் ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்குடையவர். பொன்னையும், பொருளையும் விரும்பி நாடி நிற்கும் இன்றைய நிலையில் இவரின் இவ்வரிய குணம் பலராலும் போற்றப்படுகிறது. பொறுப்பேற்ற பணிகள் சரிவர நிறைவுறும் வரை ஓய்வுகொள்ள மாட்டார். உறங்கமாட்டார். எல்லாப் பணிகளும் சரிவரச் செய்யப்பட்டிருக்கிறதா எனத் தானே சென்று பார்த்தபின்பே திருப்தி அடைவார். உதவியாளர்களோ மற்ற உதவிக் குருமார்களோ செய்யும்வரை காத்திருக்காது தானே அவற்றைச் செய்து முடிக்கும் சுபாவம் கொண்டவர். அந்தணப் பெருமக்கள் பலரையும், உறவினரையும் நெறிப்படுத்தி அவர்களது முன்னேற்றத்திற்கு உறுதுணையாய் இருந்து வந்தவர். இவரின் வழிகாட்டலில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல குருமார்கள் இன்று பலரும் மதிக்கத்தக்க குருமார்களாக விளங்கி வருகிறார்கள்.

இவரது துணைவியார் இவருக்கு உறுதுணையாக இருந்து அவர் நினைப்பதைச் செயல்படுத்தும் மாதர் குல மாணிக்கம். அவர் எங்கு சென்றாலும் நிழல் போலத் தொடர்ந்து அவரது தேவையறிந்து சேவை செய்வதையே பெரும் பேறெனக் கருதி செயல்படும் திருமகள். குலதெய்வம் முருகனாக இருப்பினும் நாராயணன்பால் மிகுந்த பக்தியும் பிரேமையும் பூண்டவர்.

குருக்கள் ஐயா அவர்கட்கு வழங்கிய பட்டங்களும் வழங்கிய ஆலயங்களின் விபரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிஷ்டா சிரோமணி - குறிஞ்சிக்குமரன் கோயில், பேராதனை.
சிவாச்சார்ய துரந்தார் - திருமலை ஸ்ரீ பத்திரகாளியம்பாள் கோயில்

பிரதிஷ்டா கலாநிதி - விநாயகர் கோவில், எட்டியாந்தோட்டை
வேதாகம கிரியா கலாஜோதி - விநாயகர் கோவில், முனைத்தீவு.
கிரியா கிரம ஜோதி - - சிந்தாமணிவிநாயகர் கோயில், வவுனியா:
கிரியா துரந்தரர். - பத்திரகாளி கோயில், திருகோணமலை.
கிரியா ஞானபாஸ்கரன் - மயூரபதி அம்மன் கோயில், கொழும்பு.
சுவானுபூதி - சிவன் கோவில், ஆவரங்கால்.
சைவ வைஷ்ணவ ஆகம கிரியா கலாநிதி
- புளியடிப்பிள்ளையார் கோவில், வவுனியா.
விசாலாட்சி பீட த்ரிவேணிஸ்வரர் - அருணாசலேஸ்வரர் கோவில், முகத்துவாரம்.
சிவாச்சார்ய சக்கரவர்த்தி - சென்னை, காஞ்சி மடம்.
பூஜா சமுத்திர - காளி கோயில், இராஜகிரிய.
சிவாகம கலாநிதி - இந்துமத குருபீடம்.
வேதாகம கிரியா சூடாமணி - இந்து கலாசார அமைச்சு
வேதாகம கிரியா பூஷணம் - சித்தி விநாயகர் கோவில், சுவிஸ்.
பிரம்ம வித்தியா குரு - திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயம்.

அளப்பரிய பணிகள் ஆற்றி அனைவர் மனத்திலும் நீங்கா இடம்பெற்ற குருக்கள் ஐயா அமைதியாக இறைபதம் நாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 132. யாழ்ப்பாணம் – கல்வளை (கண்டி) இரத்தினேஸ்வர சோமாஸ்கந்தக்குருக்கள்

15.01.1928 - 24.01.1999

இலங்கைத் தீவகத்தின் வடபாலில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வலிகாமம் மேற்கு என்னும் பிரிவில் உள்ள சைவசமயம் தழைத்தோங்கும் கிராமமாகிய சண்டிருப்பாயில் கல்வளை என்னும் குறிச்சியில் சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குரு 1928ம் ஆண்டு ஜனவரி மாதம் 15ம் திகதிக்குச் சமமான பிரபவ ஆண்டு தைத்திங்கள் பொங்கற் புதுநாளாம் முதல்நாளில் பின்னிரவு மறுநாள் சூரிய உதயத்திற்கு முன்பாக ஜனனமானார். இவரது தாயார் செல்லம்மா, தந்தையார் தம்பையாக் குருக்கள் சபாபதிக் குருக்களின் இரண்டாவது புத்திரரான சிவஸ்ரீ இரத்தினேஸ்வரக் குருக்கள்.

சோமாஸ்கந்தர் சிறுவனாக இருந்தபோதே அவரது அன்னை செல்லம்மா இறைவனடி எய்திவிட்டார். அதன்பின் சிறுவனை அவரது அன்னையின் பெற்றோராகிய சுப்பையாக் குருக்கள் இராசரத்தினம்மா ஆகியோரும். பின்பு அன்னையின் தங்கையாம் சிற்றன்னை அன்னரத்தின அம்மா அவர் கணவர் விஸ்வநாதக் குருக்கள் குடும்பத்தினரும் வளர்த்து வந்தனர். சிறுவன் சோமாஸ்கந்தர் தனது ஆரம்பக் கல்வியை சண்டிருப்பாய் இந்துத் தமிழ் மகாவித்தியாலயத்தில் மேற்கொண்டார். இவரது தமிழ்க் கல்வி வேலாயுதம் ஆசிரியரால் நன்கு வளர்ந்தது. யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை இராமசாமிக் குருக்களிடம் சம்ஸ்கிருதமும் கற்றார். தந்தையார் இரத்தினேஸ்வரக் குருக்கள் அடிக்கடி இந்தியாவுக்குச் செல்லும்போது மகன் சோமாஸ்கந்தரையும் கூடவே அழைத்துச் செல்லுவார். இந்தியாவிலும் சோமாஸ்கந்தருக்கு வேத, ஆகமங்கள் கற்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. அப்படி இந்தியாவில் தங்கியிருந்த காலத்தில் தந்தையார் இரத்தினேஸ்வரக் குருக்கள் சிவபதமடைந்தார். அதன்பின் சோமாஸ்கந்தர் தனது சொந்த ஊருக்குத் திரும்பினார்.

சோமாஸ்கந்தர் தனது சிறுபராயத்தில் சின்னம்மாவான அன்னரத்தின அம்மாவுடன் வளர்ந்த காலத்தில், அன்னரத்தின அம்மாவின் பிள்ளைகளில் மூத்தவர்களுடன் சொந்த அண்ணன் தம்பிகளாகவே வேறுபாடு ஏதுமின்றி வளர்க்கப்பட்டார். விஸ்வநாதக் குருக்கள் அன்னரத்தின அம்மாவின் மூத்த புதல்வரான முத்துலிங்க சர்மா எப்போதும் சோமாஸ்கந்தரை "அண்ணை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அழைப்பது மட்டுமல்ல் சோமாஸ்கந்த குரு வயதாகி ஜேர்மனியில் நோய்வாய்ப்பட்டிருந்த பொழுது, முத்துலிங்க சர்மா கனடாவிலிருந்து அடிக்கடி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டும், நேரில் வந்து பார்த்தும் சுகநலம் விசாரித்தது, இந்தப் பற்றைப் பறைசாற்றுகின்றது.

சோமாஸ்கந்தர் தாயின் தாயாம் பேத்தியாருடனும், சிறிய தந்தை சங்கானைச் சுப்பையாக்குருக்கள் சிவசுப்பிரமணியக் குருக்களுடனும் கிரியாநிகழ்வுகளில் கலந்துகொண்டதோடு சுன்னாகம் சுந்தரக் குருக்களுடன் சேர்ந்து, சுவாமி அலங்காரம் செய்யும் வகையிலும் தொண்டுகள் ஆற்றினார். தனது 19 ஆவது வயதில், நீர்வேலியில் வசித்த ஆசிரியரான சதாசிவக்குருக்கள் புவனேஸ்வரி அம்மை தம்பதிகளின் மூத்த புதல்வியான ஞானேஸ்வரியைத் திருமணம் செய்தார். சீரணி நாகம்மாள் கோவில் குருக்களாகப் பணியாற்றித் தனது இல்லற வாழ்க்கையை மேற்கொண்டார். அதன்பின்னர் கொழும்பு தம்பையா சத்திர சித்தி விநாயகர் ஆலயத்திலும், மாத்தளைப் பிள்ளையார் கோவிலிலும், கொழும்பு செட்டித்தெரு முத்துவிநாயகர் ஆலயம், யாழ்ப்பாணம் வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில், மட்டக்களப்பு பாண்டிருப்பு அம்மன் கோவில், மட்டக்களப்பு காரைதிவு கந்தசுவாமி கோவில் ஆகியவற்றில் குருக்களாகப் பணியாற்றினார். அதன்பின்னர் மீண்டும் தனது சொந்த ஊரான சண்டிருப்பாயில் கல்வளைப் பிள்ளையார் கோவிலில் ஆலய குருவாகவும், மகோற்சவ குருவாகவும் பணியாற்றினார்.

வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு இடங்களில் இவரது சேவையைப் பலரும் விரும்பியதால் பணியாற்றிவந்தார். இணுவில் சிவகாமி அம்மை ஆலயத்தில் சிலகாலம் குருவாக இருந்தபின் கண்டி கட்டுக்கலைப் பிள்ளையார் ஆலயத்தில் நீண்ட காலம் பிரதமகுருவாகக் கடமையாற்றினார்.

சோமாஸ்கந்தக் குருக்களுக்கும் ஞானேஸ்வரி அம்மைக்கும் கனகசபேச சர்மா, சரோஜா, ஜெயஸ்ரீ, இராமச்சந்திரசர்மா, வசந்தி, குகானந்தசர்மா, ஸ்ரீகாந்த சர்மா, ஸ்ரீதரசர்மா ஆகியோர் பிள்ளைகளாகப் பிறந்தனர். இவர்களில் பலரும் தற்போது வெளிநாடுகளிலுள்ளனர். பலரும் தந்தை வழியில் குருத்துவப் பணி செய்கின்றனர்.

குருக்கள் அவர்கள் தமக்கு எழுபத்தொரு வயது எய்தியவுடன் காலன் அணுகுவான் என்பதை உணர்ந்து கொண்டார். உணவில் நாட்டத்தைக் குறைத்துக்கொண்டார். தமது ஆத்மா இறையடி சேருவதையே உறுதியாகப் பின்பற்றியதை அவரது மன உறுதி வெளிப்படுத்தியது. .துணைவியாரும், மக்கள், மருமக்கள் கலங்கிக் சதறியழ குருக்களவர்கள் வெகுதானிய ஆண்டு தை மாதம் 11ம் நாள் 1999 ஜனவரி 24ம் திகதி பிற்பகல் 2.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 133. சோதிட நிபுணர் வி பரமேஸ்வர ஐயர்
## (05.10.1929 - 14.12.2001)

தென்னிந்தியா, கும்பகோணம் கௌண்டின்ய கோத்திரத்தில் தோன்றி யாழ்ப்பாணம் வந்து குடியேறிய இராமர் என்பாரின் வழித்தோன்றலான தி. விஸ்வநாதக் குருக்கள், காஞ்சிபுரத்திலிருந்து வந்து அளவெட்டியில் குடியேறிய பாரத்வாஜ கோத்ரம் குஞ்சிதபாத பட்டர் வழித்தோன்றலான லலிதாம்பாளை திருமணம் செய்து நடத்திய இல்லறத்திக் பயனாக 05. 10.1929 இல் பிறந்தவர்தான் பரமேஸ்வர ஐயர். ஆரம்பக் கல்வியை உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்திலும் ஆங்கிலக் கல்வியை கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் பெற்றார். உயர்வகுப்பில் சம்ஸ்கிருதம் பாளி ஆகியவற்றையும் கற்றார். தந்தையாரிடமும் பாட்டனாரிடமும் சம்ஸ்கிருத ஆகமக் கல்வியையும் பெற்றுக்கொண்டதோடு அவர்களுடன் ஆலயப் பணிகளிலும் ஈடுபட்டார். புராணபடனங்களிலும் திறமைபெற்றார்.

கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலய தலைமை ஆசிரியர் சு. சிவசுப்பிரமணிய ஐயர் - சௌந்தராம்பாள் தம்பதிகளின் மகள் பராசக்தியைத் திருமணம் செய்து இரு மக்கட் செல்வங்களைப் பெற்றார். அரச எழுதுவினைஞர் பதவியில் சேர்ந்து படிப்படியாக உயர்ந்து 1980இல் நிர்வாக உத்தியோகத்தரானார். சமாதான நிதவானாகவும் நியமிக்கப்பட்டார். ஐம்பத்தைந்து வயதில் ஓய்வுபெற்றார். அரச சேவையிலிருக்கும்போதே அகில இலங்கை சிவப்பிராமண சங்கத்தின் தனாதிகாரியாக பணியாற்றியதுடன் ஓய்வுபெற்றபின் பல சமூகப்பணிகளில் ஈடுபட்டார். அந்தணர் சமூக அமைப்பான நியந்தரீயில் சமூக மேம்பாட்டுக் குழுவின் தலைவராகவும், இந்துமத குருமார் ஒன்றியத்தின் வித்வத் சபை உறுப்பினராகவும் உடுவில் இந்து இளைஞர் மன்ற ஆலோசகராகவும் பணியாற்றினார்.

இவரது ஓய்வுகாலப் பணிகளில் யாவராலும் வியந்து போற்றப்பட்டது இவரது சோதிட சேவையாகும். சிறுவயதில் தமது தந்தையாரிடம் கற்ற சோதிடக்கலையைத் தக்க அறிஞர்களுடன் கலந்துரையாடியும் பல நூல்களை ஆராய்ந்து கற்றும் விருத்திசெய்துகொண்டு, பலன் சொல்லுதல், பரிகாரம் சொல்லுதல், முகூர்த்தம் கணித்தல், பொருத்தம் பார்த்தல் முதலியவற்றில் ஈடுபட்டுப் புகழடைந்தார். முகூர்த்த நிர்ணயம் பற்றிய இவரது ஆழ்ந்த புலமை சொற்பொழிவாகவும், கட்டுரையாகவும் பலரைக் கவர்ந்ததுண்டு. ஆலய நிகழ்வுகளில் சாதகாச்சாரியாராகவும் கலந்து சிறப்பித்திருக்கிறார். அந்தணர் குடும்பங்களில் வைதிகக் கிரியைகளையும் செய்து வைத்திருக்கிறார்.

2001ஆம் ஆண்டு டிசம்பர் 14ஆம் திகதி அமாவாசைத்திதியும் கேட்டை நட்சத்திரமும் கூடிய நாளில் 'அனாயாச மரணம்' அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 134. மயிலணி, சோ. சோமாஸ்கந்தக் குருக்கள்

**(செந்தி ஐயா)**

**(26.03.1930 - 13.12.1997)**

சுன்னாகம், மயிலணி ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோவில் ஆதீனகர்த்தரும், பிரதம குருவும் ஆகிய சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களின் பூர்வீகம் இந்தியா கும்பகோணம் திருநாகேஸ்வரம். இவரது பெற்றோர் சிவஸ்ரீ ச. சோமசுந்தரக்குருக்கள் ஸ்ரீமதி பர்வதவர்த்தனி அம்மா. சுக்கிலவருஷம் பங்குனி மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் (26.03.1930) பிறந்தார். ஆரம்பக்கல்வியை நிறைவுசெய்தபின் தந்தையாரிடத்திலும், முகாந்திரம் பிரம்மஸ்ரீ தி. சதாசிவ ஐயரிடமும், பாலக்காடு பி. வி. சிதம்பர சாஸ்திரிகளிடமும் சமஸ்கிருதம், வேத சிவாகமம் என்பவற்றைக் கற்றார்.

மனைவி நாகேஸ்வரி அம்மா. இவர்களுக்கு எட்டுப் பிள்ளைகள்.1948இல் மயிலணி சிவஸ்ரீ ச. சிதம்பரநாதக் குருக்கள் இவருக்கு ஆசார்யாபிஷேகம் செய்துவைத்தார். ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்தவர். அதேநேரத்தில், சிறந்த குருவாகவும் சோதிடராகவும் மிளிர்ந்தார். மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோவிலின் பிரதம குருவாகவும் இவரே இருந்தார். பல அந்தணர்களின் இல்லங்களில் வைதிக பூர்வ அபரக் கிரியைகளைச் செய்துள்ளார்.

பல ஆலயங்களில் கும்பாபிஷேகங்கள், மஹோற்சவங்கள் செய்துள்ளார். மயிலணி விஸ்வநாதசுவாமிகோவில், மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோவில், பொலிகண்டி கந்தவனக்கடவை முருகன் கோவில், கரவெட்டி தச்சன்தோப்பு பிள்ளையார் கோவில், மட்டுவில் செல்லப்பிள்ளையார் கோவில், பொலிகண்டி உப்புக்கிணற்றடி விநாயகர் கோவில், சங்குவேலிப் பிள்ளையார் கோவில், உடுவில் சிவஞானப் பிள்ளையார் கோவில், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் சிவன் கோவில் ஆகியவை இதில் அடங்கும்.

இவரது சிறப்பையுணர்ந்து வழங்கப்பட்ட விருதுகள்: வைதீக சாகரம், சிவாகம கிரியா பூஷணம், சிவபூஜா துரந்தரர், பிரதிஷ்டா விசாரத்.

ஈஸ்வர வருஷம் கார்த்திகை மாதம் தீபத்திருநாளில் (13.12. 1997) சிவபதமடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 135. துன்னாலை சாரதாபீடம், சபா. ராமச்சந்திர ஐயர் (சின்னக்குரு ஐயா)

(07.09.1930 - 1987)

இந்தியா, கும்பகோணத்திலிருந்து வடதுன்னையம் பதிக்கு வந்தவர் பிரம்மஸ்ரீ மறைஞானபூத ஐயர். இவரின் தொடர்சந்ததி துன்னாலையில் பெரிய குருக்கள் குடும்பமாக அமைந்தது. இவ்வழியில் வந்தவர் சிவஸ்ரீ ஆ. சபாரத்தினக் குருக்கள். இவர் 1929ஆம் ஆண்டில் 'சாரதாபீடம்' வேதாகமகுருகுலம் ஆரம்பித்து அந்தண சிறுவர்களுக்கு சம்ஸ்கிருதக் கல்வி போதித்தார். இவரது மூன்று பிள்ளைகளில் ஒருவர்தான் ராமச்சந்திர ஐயர்.

இவர் தமது தந்தையாரிடம் முறையாக சம்ஸ்கிருதம், தமிழ், ஜோதிடம், புராணபடனம் என அனைத்தும் கற்று உரிய வயதில் இந்தியா திருவனந்தபுரத்தில் ராஜலட்சுமி அம்பாளைக் கரம்பற்றி இல்லறம் நடத்தி நான்கு பெண்கள், நான்கு ஆண்கள் என எட்டுப் பிள்ளைகளைப் பெற்று நிறைவாக வாழ்ந்தார். தந்தையின் மறைவின்பின் குருகுலத்தைச் சிறப்பாக நடத்திப் பல அந்தணக் குருமார்களை உருவாக்கினார். அந்தணர் குடும்பங்களில் வைதீகக் கிரியைகளையும் செய்துவந்தார். பல ஆலயங்களில் சர்வசாதகராகப் பணிபுரிந்தார்.

குறிப்பாக, கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான், இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயங்களில் இவரது பணிகள் சிறப்புற்றன. தமது செயற்பாடுகளில் தர்மசிந்தனையோடு வாழ்ந்தவர் சின்னக்குரு ஐயா.

இவரது தந்தையார் எழுதி வெளியிட்ட ஆசௌச தீபிகை, வல்லிபுர மான்மியம் ஆகிய நூல்களின் மீள்பதிப்புக்களை வெளியிட்டார். ஆலயங்களின் கட்டுமான நிலையங்கள், இல்லங்களின் வாஸ்து நிலையம், ஜோதிடம் எனப் பல பணிகள் ஊரில் இவரது முதன்மை நிலையை எடுத்தியம்பின.

துன்னாலை சின்னக்குரு ஐயா என்றால் அவ்வூர் மக்களின் வணக்கத்திற்குரியவராகத் திகழ்ந்தார். 07.09.1930இல் பிறந்த இவர் 1987ஆம் ஆண்டு பங்குனி பூர்வபட்ச தசமியில் சிவசாயுச்சியம் அடைந்தார். இவரது நான்கு ஆண் வாரிசுக்களும் சிறந்த சிவாசாரியர்களாக பணிபுரிகின்றனர். ராம். கெங்காதரக் குருக்கள், ராம். சபாநாதக்குருக்கள், ராம். சர்வலோகேஸ்வரக் குருக்கள், ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள் ஆகியோர் தந்தையின் பெயரை விளங்கவைக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 136. நீர்வேலி, தி. நடனசபாபதி சர்மா
## (11.08.1930 - 21.04.2018)

யாழ்ப்பாணம் நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் ஈழத்தின் பல்வேறு பகுதிகளைத் தன் அரசபணிக் களங்களாகவும் கொண்டபின் நீண்டநாள் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைத் தம் வசிப்பிடமாகவும் கொண்டிருந்து, இறுதியில் ஐரோப்பிய நாட்டில் பிரான்சை வசிப்பிடமாகக் கொண்டிந்த பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா அவர்கள் ஒரு பல்துறை விற்பன்னர்.

சோதிட விற்பன்னரும் புராண படன வித்தகரும் ஆகிய நீர்வேலி சிவஸ்ரீ க. தியாகராஜக் குருக்களுக்கும் இராஜலட்சுமி அம்மாளுக்கும் புதல்வராகப் பிறந்து பலவித நெருக்கடிகளுக்குள் வளர்ந்து சுயமுயற்சியினாலே அரச சேவையில் எழுது வினைஞராக இணைந்து உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் மிகப் பொறுப்பான உயர்பதவிவரை வகித்தபின் உரிய வயதில் ஓய்வுபெற்றவர் பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா. தமது பதவியின் உச்சநிலையில் தம் அலுவலகத்தில் பலருக்கு அவர் சிம்மசொப்பனமாக இருந்தார் எனக் கூறுவது, அவரது துணிவும் நேர்மையும் கடமை உணர்வும் எப்படி இருந்தன என்பதை விளக்கப் போதுமானது.

13 ம் நூற்றாண்டளவில் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி, அக்காலத்தில் இந்தியாவிலிருந்து காசி நகரத்து வேதிய குலோத்துங்கனாகிய கெங்காதர ஐயர் என்னும் குருவையும் அழைத்துவந்து நல்லூர்ப் பகுதியிலே அரசிருக்கையை ஏற்படுத்தினான். தனது அரண்மனை அருகில் பிராமணகுல திலகரான கெங்காதர ஐயரும். அவர் மனைவி அன்னபூரணி அம்மாளும் வாசம் செய்வதற்கு ஏற்ற அக்கிரகாரத்தையும் ஏற்படுத்தினான். இவ்வரலாற்றினை யாழ்ப்பாண வைபவ மாலையில் காணலாம்.

பின்னர் சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியின் வழியில் வந்த பரராஜசிங்க முதலி என்ற மன்னன் காலமாகியதும் இந்தப் பிராமணோத்தமரின் வழித்தோன்றல்கள் நல்லூரைவிட்டு நீங்கி நீர்வேலியிலும் வடமராட்சியிலும் சென்று குடியேறினர். கெங்காதர ஐயரின் பரம்பரையிலே மகிமைபொருந்திய அந்தணர்களின் வழித்தோன்றலாக பிராமணகுலம் தழைக்க காசிபகோத்தவரான கதிரேசக்குருக்களின் பௌத்திரராகவும் தியாகராஜாக் குருக்களுக்கும் இராஜலக்ஷ்மி அம்மாளுக்கும் புத்திரராக தோன்றியவரே நடனசபாபதிசர்மா ஆவார்கள்.

நீர்வளமும் நிலவளமும் பெருகி. நிமலனின் அருள் நிறைந்து சைவநீதி பாலித்து வாழும் சைவமக்கள் நிறைந்ததும் மங்கலம் தருவதுமான வாழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்கள் மலிந்ததுமான நீர்வேலிக் கிராமத்தில், பிரமோதூத வருடம் ஆடி மாதம் 27ம் திகதி (11.08.1930) சதய நட்சத்திரத்தில் நடனசபாபதிசர்மா அவர்களின் ஜனனம் நிகழ்ந்தது.

சிறுவயதில் தனது தந்தையாரிடம் வடமொழியையும் ஆகமக்கிரியா விளக்கங்களையும், ஜோதிடம் முதலிய வேத சாஸ்த்திரங்களையும் கற்றறிந்தார். அதேவேளை தமது சம்ஸ்கிருத கல்வியை வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராமசாஸ்திரிகளிடமும் கோப்பாய் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளிடமும் சிறப்பாகக் கற்றுத் தேறினார். சிறு வயதிலேயே தந்தையாருடன் கோவில்களில் நித்திய நைமித்திய பூஜை வழிப்பாடுகளிலும், மஹோற்சவங்களிலும் பங்காற்றி பயிற்சியைப் பெற்றிருந்தார். நீர்வேலிக் கதிர்காமசுவாமி கோவிலை தனது தந்தையார் ஸ்தாபித்துக் குடமுழுக்குச் செய்த போது உடனிருந்து பங்காற்றிப் பராமரித்தவர். இத்தருணத்தில் பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மாவிடம் "லகுசித்தாந்தகௌமுதி" எனும் இலக்கண நூலை ஆர்வத்துடன் கற்றுத் தேர்ந்தார். பாடசாலைக் கல்வியை ஆரம்பத்தில் அத்தியார் இந்துக் கல்லூரியிலும், தொடர்ந்து யாழ் இந்துவில் ஆங்கிலக்கல்வியும் பயின்றார். பேராசிரியர் க. கைலாசபதி, கவிஞர் இ. முருகையன் ஆகியோருடன் சகபாடியாய் உயர் கல்வியை முடித்தார். இவர் சங்கீத ஞானத்தைப் பிறவிக் கொடையாகக் கொண்டவர். புராண படனங்களில் தனது ஞானத்தைப் பிரயோகிக்கும் அழகு அலாதியானது.

அரச சேவையில் பாதுகாப்பு அமைச்சில் இணைந்து, பின்னர் திருகோணமலை வவுனியா முல்லைத்தீவு யாழ்ப்பாணம் எனப் பல இடங்களிலும் பல்வேறு நிலைகளில் பணியாற்றி 1989ல் ஓய்வு பெற்றார்.

'காட்டுத்துறைத் தம்பிராஜாக்குருக்கள்' என அன்போடு அனைவராலும் அழைக்கப்பட்ட சிவஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள் அவர்களின் மகளான கிரிஜாம்பிகை அவர்களை 29.04.1956இல் இல்லறத் துணைவியாக அடைந்து மூன்று ஆண்மகவுகளையும் மூன்று பெண் மகவுகளையும் பெற்றெடுத்து அவர்கள் யாவரையும் நல்வழிப்படுத்தி நல்வாழ்க்கையை அமைத்துக்கொடுத்தார்.

தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம், சிங்களம் ஆகிய நான்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர். நிறையத் தேடல் உள்ளவராகச் சிறு வயதுமுதல் இறுதிவரை வாழ்ந்தவர். வாசிப்பு மிக அதிகம். சிறு வயதிலிருந்தே இலக்கியப் பயிற்சி உடையவராக, ஆக்க இலக்கிய கர்த்தாவாக அவர் மலர்ந்தார். இயல்பான அவரது ஆர்வம் அவரது 'அத்தான்' ஆகிய பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா அவர்களின் தொடர்பால் வளர்ந்து பரிமளித்தது. அவர் இவருக்குக் குருவாய் இருந்தமையையும், தமது வாழ்வில் பஞ்சாட்சர சர்மாவின் தாக்கம் மிக அதிகம் என்பதையும் நடனசபாபதி சர்மா அவர்கள் எப்போதும் நன்றியோடு சொல்லிக்கொண்டிருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமலர்ச்சி பத்திரிகையில் சிறுகதை எழுத்தாளராக நடனம் என்ற பெயரில் அறிமுகமானார். வானொலி, பத்திரிகை எனப் பல துறைகளில் தனது தடம்பதித்தார். கட்டுரைகள், கவிதைகள், வானொலி நாடகங்கள், சிறுகதைகள், சம்ஸ்கிருத ஆக்கங்கள் எனப் பல்கி அமைந்தன.

80 களில் தனது கவனத்தை இன்னொரு பக்கம் திருப்பினார். அவர் ஒரு விவசாயியாக மாறினார். நீர்வேலியில் இருந்த தான் பிறந்த வீட்டின் காணியைக் கல்புரட்டி விவசாயபூமியாக மாற்றினார். வாழை, வெங்காயம் எனப் பயிர்களைப் பயிரிட்டார். யாழ் மாவட்டச் செயலகத்தில் வேலை முடிந்தபின் வீடுவந்து, இரவு உணவை கட்டிக்கொண்டு நீர்வேலி போய் இரவிரவாக நீரிறைத்துத் தோட்டம் செய்தார். காலையில் வாழைக்குலைகளைக் கட்டிக்கொண்டு சந்தையில் கேட்ட விலைக்கே கொடுத்துவிட்டு, வீடுவந்து பின் அலுவலகம் செல்வார். இப்படியும் வாழ்ந்தாரா என எண்ணும்போது ஆச்சரியமே எஞ்சுகிறது. இந்திய இராணுவம் இருந்த காலத்தில் நடந்த கொடுமைகளை "சேவல் கூவாது விடிந்த நாட்கள்" என்று இவர் எழுதிய கட்டுரை சனி தோறும் ஈழநாதத்தில் 1991ம் ஆண்டு பத்து வாரமாக வெளிவந்தது.

தமது ஓய்வுக் காலத்தில் அவரது கவனம் ஆலயக் கிரியைகள் பற்றியும் வைதிகக் கிரியைகள் பற்றியும் திரும்பியதால் இலக்கியத் துறைக்குக் கொஞ்சம் இழப்பு என்றாலும் நமது ஆன்மீகத்துறை நல்ல பயனைப் பெற்றுளளது. தீபபூஜை என்ற சிறிய புத்தகத்தில் ஆரம்பித்துப் பல வைதிக நூல்களை ஆராய்ந்து, தொகுத்து வெளியிட்டுள்ளமை அவரது பணிகள் யாவற்றுக்கும் மகுடம் வைத்தாற்போல் அமைந்தது.

சிவானந்த குருகுலத்திலும் தனது வீட்டிலுமாக பலருக்கும் சம்ஸ்கிருதக் கல்வியுடன் ஆங்கிலக் கல்வியையும் வழங்கியுள்ளார். இவரிடம் கல்வி கற்ற ஏராளமான மாணாக்கர்கள் உலகம் முழுவதும் உள்ளார்கள். பல பயனுள்ள சம்ஸ்கிருத நூல்களை வெளியிட்டமை பிராமண சமூகத்திற்கு பேரதிஷ்டமாக அமைந்தது. இறுதிக்காலத்தில் இருபது வருடங்களை பிரான்ஸில் கழித்தபோதும் தனது பிராமண சமூகத்திற்கான சேவையை மறந்ததில்லை. அவரது பல நூல்கள் புலம்பெயர் வாழ்வில் எழுதப்பட்டவையே. "யாழ்ப்பாணத்தில் கந்தபுராணக் கலாசாரம்" என்ற நூலை இறுதியாக எழுதி வெளியிட்டிருந்தார். 1947ல் எழுதப்பட்ட இவரது சிறுகதை கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட ஈழகேசரிச் சிறுகதைகள் என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

நிறைவாழ்வு வாழ்ந்த நடனசபாபதிசர்மா அவர்கள் இறுதிக்காலத்தில் நோயுற்றிருந்தாலும் மனவுறுதியுடன் இறுதி மூச்சுவரை சுயநினைவுடன் இருந்து தனது பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பீட்டப்பிள்ளைகள் என அனைவரையும் பார்த்துப் பேசி மகிழ்ந்தார். இத்தகைய பெரும்பணி புரிந்த பெருந்தகை விளம்பி வருடம் சித்திரை மாதம் 7 ம் திகதி (21.04.2018) சிவபதம் அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 137. மட்டக்களப்பு, வியாகரணசிரோமணி பூரண தியாகராஜக்குருக்கள்

B.A.(Hons) (CEY)

(26.06.1931 - 01.10.2016)

தக்ஷிண கைலாயம் என்று போற்றப்படுகின்ற திரிகோணமலைப் பதியிலே வடமொழி, தென்மொழி, வேத, ஆகமம் ஆரியபாஷா விற்பன்னர, வில்லூன்றி கந்தசுவாமி தேவஸ்தான ஆதீன கர்த்தா பிரமஸ்ரீ இ. கு. பூர்ணானந்தேஸ்வரக் குருக்கள் யோகாம்பிகை அம்மா தம்பதிகளுக்கு மகனாக 26.06.1931ஆம் வருடம் தியாகராஜக் குருக்கள் அவர்கள் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை திருகோணமலை இந்துக் கல்லூரியில் பயின்றார். அத்துடன் தந்தையிடம் கிரந்த எழுத்துப் பயிற்சி, தோத்திரம் என்பவற்றையும் பயின்றார்.

இவர் தமது பத்தாவது வயதிலேயே யாழ்ப்பாணம் தாவடிப் பிள்ளையார் கோவில் கொடியேற்ற நிகழ்வில் தனது சிறிய தமையனாருடன் சேர்ந்து கணபதி தாளம், மூஷிக தாளம், சமஸ்ததேவதாவாஹனம் என்பவற்றை புத்தகம் இன்றி ஓதி பலரின் பாராட்டுக்களையும் பெற்றதோடு பண்டாரவளை சுப்பிரமணியர் கோவில் கும்பாஷேகத்தில் வேதம், ஸ்தோத்திரம் என்பவற்றையும் சொல்லி எல்லோரின் பாராட்டுக்களையும் பெற்றார்.

1942ம் வருடம் திருகோணமலையில் ஜப்பான் குண்டு வீச்சு காரணமாக கல்வி தடைப்பட, 1943ம் வருடம் தமையனாருடன் சிதம்பரம் சென்று M.S வித்தியாலயத்தில் சேர்ந்து வியாகரணம், (இலக்கணம்) சாஹித்தியம், (இலக்கியம்) தர்க்கம், வேதாந்தம், மீமாம்சை, தமிழ் ஆகிய பாடங்களில் 06 வருடங்கள் பயிற்சி பெற்றார். அத்துடன் 04 வருடங்கள் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பயின்று "வியாகரணசிரோமணி" பட்டத்தையும் பெற்றார். அங்கு பயிலும் போதே விடுமுறை நாட்களில் வேதாத்யயனமும் ஆகமப் பாடங்களையும் உரியவர்களிடம் பயின்றார்.

1953ம் வருடம் பிற்பகுதியில் திருகோணமலை வந்து உடனே திருகோணமலை இந்துக்கல்லூரியில் சமஸ்கிருத ஆசிரியராக ஆறு மாதங்கள் பணி புரிந்தார். 01.03.1954 முதல் 26.06.1988 வரை மட்டக்களப்பு, கல்லடி. உப்போடை சிவாநந்த வித்தியாலயத்தில் மேல் வகுப்பு மாணவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதின்மூன்று வருடம் சமஸ்கிருதமும் பின் இந்து நாகரிகமும் கற்பித்து அனைத்து மாணவர்களையும் சித்திபெறச் செய்து பல்கலைக்கழகம் செல்ல வைத்தது புகழும் பெருமையும் ஆகும். அத்துடன் எண்ணற்ற ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழக புகுமுகதேர்வு பரீட்சைகளுக்கு படிப்பவர 'களுக்கு சமஸ்கிருதத்தை ஒரு பாடமாக வீட்டில் வைத்து கற்பித்து புகழ்பெற்றார்.

1955ம் வருடம் மட்டக்களப்பு கல்லடி உப்போடையைச் சேர்ந்த கருணாகரேஸ்வரக் குருக்கள் காமாட்சிஅம்மா தம்பதிகளின் மகளான கமலாம்பிகை என்பவரைத் திருமணம் செய்து 05 பெண் பிள்ளைகளையும் இரு ஆண்மகன்களையம் பெற்று அவர்களுக்குத் திருமணம் செய்வித்ததோடு இரு மகன்களையும் பாடசாலைக் கல்வியுடன் குருப்பட்டம். தரித்து அவர்களும் சிறந்த குருமார்களாக விளங்குவதற்கு வழிவகுத்தார்.

மட்டக்களப்பிலுள்ள எண்ணற்ற பிராமண சிறார்களுக்கு பூஜாவிதிகளைப் படிப்பித்து மனனம் செய்வித்தார். முதலில் பெற்ற அண்ணாமலை சர்வகலாசாலை வியாகரண சிரோமணி பட்டத்திற்கு. மேலாக இலங்கை பேராதனை பல்கலைக் கழகத்தில் வெளிவாரி மாணவராக B.A. Hons இரண்டாம் வகுப்பு உயர்தரசித்தி பெற்றார். ஆசிரியப் பணியையே முதன்மையாகக் கொண்டிருந்த இவர் 1975ம் வருடம்: மட்டக்களப்பு சித்தாண்டி முருகன் சந்நிதியில் பேராசிரியர் கா. கைலாச நாதக்குருக்கள் அவர்களால் குருப்பட்டாபிஷேகம் செய்யப்பெற்று குருக்களாக மிளிர்ந்தார்.

இவர் 1962 தொடக்கம் 1964ம் வருடம்வரை பிராமண சமூக சங்கத் தலைவராக பதவி வகித்து தந்தையார் சிவஸ்ரீ இ. கு. பூர்ணானத்தேஸ்வர குருக்கள் பல விளக்கங்களுடன் எழுதிய "விக்னேஸ்வர பூஜாவிதி", "அக்னி காரியம்" ஆகிய புத்தகங்களைத் தொகுத்து அச்சங்கத்தின்மூலம் வெளியிட்டார்.

கொழும்பு கப்பித்தாவத்தை பால செல்வவிநாயகர் கோவில், நயினை நாகபூஷனி அம்மன், புங்குடுதீவு கண்ணகி அம்மன், ஊரெழு அம்மன், நல்லூர் சிவன், திருமலை சிவன் முதலிய பல கோவில்களில் பிரதான குருவாகவும் உதவிக் குருவாகவும் இருந்து கும்பாபிஷேகம், மஹோற்சவம் முதலியவற்றை நடத்தி வைத்துள்ளார்.

அத்துடன் வில்லூன்றி கந்தசுவாமி கோவில் மஹோற்சவம். மற்றும் பல ஆலயங்களிலும் மஹோற்சவங் களையும் அலங்கார உற்சவங்களையும் நடத்தியுள்ளதுடன் லண்டன் உயர்வாசல்குன்று முருகன் கோவில், ஜேர்மனி ஹனோவர் முத்துமாரி, டென்மார்க் சித்தி விநாயகர், கனடா மொன்றியல் முருகன், கனடா கணேச துர்க்கா, கனடா கந்தசாமிகோவில் போன்ற பல ஆலயங்களிலும் பிரதமகுருவாக இருந்து கும்பாபிஷேகங்களை நடத்தியுள்ளார். இவர் வித்வசிரோமணி, சிவாச்சார்யமணி, சிவாச்சார்ய கலாநிதி, வித்யாசாகர,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாகம சைவசித்தாந்த விசாரத, பாடல்வல்லான், சிவாசார்ய சக்கரவர்த்தி முதலிய பட்டங்களையும் பெற்றார்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், கனடா. I.T.R வானோலிசேவை போன்றவற்றில் நற்சிந்தனைகள் சமய இலக்கிய பேச்சுக்களையும் நிகழ்த்தியுள்ளார். கனடாவில் வசித்தபோது அங்குள்ள பிராமண சமூகத்தினருக்கும் இயன்றவரை சமஸ்கிருத மொழியைப் போதித்து வந்தார். அத்துடன் மட்டக்களப்பு திருகோணமலை மற்றும் வெளிநாடுகளில் பல்வேறு அந்தணர் இல்லங்களில் சீமந்தம், நாமகரணம், உபநயனம். ஆசார்ய அபிஷேகம், விவாகம், கிருஹப் பிரவேசம் முதலிய பல்வேறு வைதிக சம்ஸ்காரங்களையும் நடத்தி வைத்துள்ளார்.

அன்னார் இயற்றி உரை எழுதிய நூல்கள்

01. கோணகிரீச அஷ்டகம்

02 திருத்தணி ஷண்முக ஷட்கம்

03. காஞ்சி கைலாசநாத அஷ்டகம்

04. பறாளாய் சுப்பிரமணிய அஷ்டகம்

05. ரொறன்ரோ வரசித்தி விநாயகர் அஷ்டகம்

06. சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அஷ்டகம்

எழுதி மொழிபெயர்த்த நூல்கள்

01. நளோபாக்யானமும் ஹிதோபதேசமும்

(சம்ஸ்கிருத மூலம் பதவுரை. இலக்கணக் குறிப்புக்களும், தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் )

02. சாவித்திரி உபாக்யானமும் ருது சம்ஹாரமும்
(சம்ஸ்கிருத மூலம் பதவுரை. இலக்கணக் குறிப்புகளும், தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பும்)

03. பஞ்சதந்திர லப்தப்பிரணாசம்

(சம்ஸ்கிருத தமிழ் எழுத்தில் மூலம் பதவுரை இலக்கண குறிப்புகளும், தமிழ் மொழி பெயரப்பும்)

04. கணேச பஞ்சரத்தினம்

(கிரந்த எழுத்தில் மூலமும் தமிழ் உரையும்)

05. சிவதாண்டவ எஸ்தோத்திரம்

(கிரந்த எழுத்தில் மூலமும், பதவுரையும்)

06. லக்ஷ்க்ஷ்மி ஸ்துதிமாலா

(சமஸ்கிருத தமிழ் எழுத்துக்களில் மூலமும் தமிழ் பொழிப்புரையும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. ஷண்முகவுட்கம் (தமிழில் மூலமும் பொழிப்புரையும் தமிழாக்கமும்)

08. விக்னேஸ்வர பூஜாவிதி (கிரந்த மூலம் தமிழ் விளக்ககுறிப்பு)

09. கணேச பஞ்சரத்னமும் கணேசாஷ்டகமும்
(தமிழில் மூலம் பதவுரை பொழிப்புரையும்)

10. நீதிசதகம் (சம்ஸ்கிருத - தமிழ் எழுத்தில் முலமும் பதவுரை இலக்கண குறிப்பும்)

இவ்வாறு பல சிறப்புக்களையும் பெருமைகளையும் ஆயிரம் பிறை கண்ட தம்பதிகளாகவும் வாழ்ந்தவர், 01.10.2016ம் வருடம் இவ்வுலகை விட்டுச் சென்ற போதும் அவரது நினைவுகளும் சேவைகளும் அழியாப்புகழ் பெற்றவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 138. மஹாவித்வான் இணுவில் மா.த.ந. வீரமணி ஐயர் (15.10.1931 - 07-10-2003)

வீரமணி ஐயர் அவர்கள் அற்புதமான இசை விற்பன்னராக இருந்தார். நல்ல நாட்டியக் கலைஞராக மிளிர்ந்தார். சிறந்த கவிஞராக விளங்கினார். உயர்ந்த வாக்கேயகாரராகப் புகழ்பெற்றார். அருமையான நாடக வேந்தராக பொலிவுபெற்றார். எல்லாவற்றையும்விட, அவர் உண்மையான மானிடநேயம் மிக்க ஒரு மக்கள் கலைஞராகவும் நாகரிகம் மிக்க நல்ல மனிதராகவும் வாழ்ந்து மறைந்தார்.

மஹாவித்துவான் மா.த.ந. வீரமணி ஐயர் அவர்கள் இணுவையம்பதியிலே 1931ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி பிறந்தார் இவரைத் தம் மகவாகப் பெறும் பாக்கியம் பெற்ற பெற்றோர் பிரம்மஸ்ரீ நடராஜ ஐயர் - சுந்தராம்பாள் தம்பதியர் ஆவர். பிரம்மஸ்ரீ நடராஜ ஐயரவர்களும் இசைஞானம் மிக்கவராயும் முத்தமிழ் வித்தகராகவும் விளங்கினார்.

வீரமணி ஐயருடன் உடன்பிறந்தவர் அவரது அண்ணராகிய கந்தசாமி ஐயர் அவர்களாவார். இவ்விருவரும் சிறுவயதிலேயே பெற்றோரை இழக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. ஆனாலும் உறவினர்களின் அணைப்பில் கல்வியை விடாது கற்று உயர்ந்தனர். இணுவில் அம்பிகை வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைத் தொடங்கிய வீரமணி ஐயர் அவர்கள் தொடர்ந்து மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தமது கல்விப் பயிரை வளர்த்துக் கொண்டார். பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே கல்வியிலும் விளையாட்டிலும் மட்டுமல்லாமல் கலைகளிலும் சிறந்து விளங்கினார்.

இவரது திறமைகளைக்கண்டு மகிழ்ந்த இவரது தமையனார் இவரை உயர்படிப்பிற்காக இந்தியாவுக்கு அனுப்பிவைத்தார். அப்போது இவருக்கு இருபத்திரண்டு வயது. ஒரு விஞ்ஞானப் பட்டதாரியாக வரும் நோக்குடன்தான் இவர் இந்தியாவுக்குச் சென்றிருந்தார். ஆனால் அங்கே சென்றதும் அவரது கலையுள்ளம் அவரது வாழ்க்கைத் திசையையே மாற்றிவிட்டது. கலைவாணியின் திருவருளும் நமது புண்ணியப் பலனும்தான் அவரை விஞ்ஞான உலகிலிருந்து கலையுலகிற்கு அனுப்பிவைத்ததாகக் கருதலாம்.

சென்னை அடையாறு கலாக்ஷேத்ரா நாட்டியக் கல்லூரியிலே சேர்ந்து நடனக் கலையைக் கற்கத் தெடங்கினார். ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் வீரமணி ஐயருக்குக் குருவாகக் கிடைத்தமை பெரும் பேறாகும். இதே காலகட்டத்தில் இசைவல்லாளரும் பிரபல வாக்கேய காரருமாகிய பாபநாசம் சிவன் அவர்களையும் பிரபல இசைவிற்பன்னர் எம். டி. ராமநாதன் முதலிய பாடகர்களையும் தமது குருவாகக் கொண்டு இசைக் கலையையும் பயின்றார். சங்கீதம், நடனம் இரண்டிலும் அதிக திறமையும் ஆற்றலும் மிக்கவராக வளம்பெற்று இரு துறைகளிலும் வித்துவான் பட்டத்தையும் சுவீகரித்துக்கொண்டார்.

இவரது திறமைகளைக் கண்டு வியந்த எச். எம். வி. நிறுவனம் இக்காலகட்டத்தில் தமது சாஹித்ய கர்த்தாவாக வீரமணி ஐயரை நியமித்தனர். 1956ஆம் ஆண்டில் இவரது இருபத்தைந்தாவது வயதில் இவரை இசையுலகம் நன்கு கவனிக்கும் வகையிலான நிகழ்ச்சி இடம்பெற்றது. திருமயிலைக் குறவஞ்சியின் தோற்றம்தான் அது. குற்றாலக் குறவஞ்சியைப் பின்பற்றி திருமயிலைக் கபாலீஸ்வரர், கற்பகாம்பாளைத் தலைவன், தலைவியாகக் கொண்டு இயற்றப்பட்ட இந்த நூல் அனைவராலும் போற்றப்பட்டது. இக் குறவஞ்சியில் இடம்பெற்ற "கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்....." என்ற பாடல் இவரை ஓர் உன்னத இசைக் கவிஞராக உலகின்முன் நிலைநிறுத்தியது. மயிலாப்பூர் கற்பகாம்பாள் சந்நிதியில் கற்பொறிப்பிலே இப்பாடல் காணப்படுவது இப்பெருமைக்குச் சான்றாக அமைகிறது.

இலங்கைக்குத் திரும்பிய ஐயரவர்கள் இசை நடன ஆசிரியராக நியமனம் பெற்று மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் தமது பணியை ஆரம்பித்தார். இக்காலகட்டத்தில் அவர் தம்மை நாடிவந்த மாணவர்களை உயர்ந்த இசைக் கலைஞர்களாயும் நடன வித்தகர்களாயும் உருவாக்கியதன்மூலம் சிறந்த ஒரு கலைப் பாரம்பரியத்தை உருவாக்கியதுடன் தமது திறமையைப் பலருக்கும் பயன்பட வைத்தார்.

பாடசாலைப் போட்டி நிகழ்ச்சிகளின்மூலம் இவரது நாட்டிய நாடகங்கள் வெளியுலகத்தின் கவனத்தை ஈர்க்கலாயிற்று. மாவட்ட மட்டத்திலும் பல பரிசுகளை வெல்லும் வாய்ப்பு அந் நாடகங்கள் பலவற்றுக்குக் கிட்டின. பல ஆலயங்களிற்கு ஊஞ்சற்பாடல்கள் பாடுதல், பல வைபவங்களுக்கு வாழ்த்துப் பாடல்கள் பாடுதல், பல திருத்தலங்கள் மீது கீர்த்தனங்கள் பாடுதல், நாட்டிய நாடகங்கள் பலவற்றை எழுதி மேடையேற்றுதல், வானொலி நிகழ்ச்சிகளுக்குத் தமது இசை, நடனத் திறமைகளை வழங்குதல் எனப் பலவகையில் அவரது கலைப் பணியும் விஸ்தரித்தபோது அவரது திறமையும் வளர்ந்தோங்கி வலிவும் வனப்பும் பெற்றன. அவரது புகழும் வானோங்கியது.

இக் காலகட்டத்தில் அவரது இல்வாழ்க்கையும் ஆரம்பமானது. தமது இருபத்தேழாவது வயதில் புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சோமசுந்தர ஐயர் அவர்களின் புதல்வி ருக்மணி அம்மாவைத் திருமணம் செய்து இனிய இல்லறத்தை நடத்திவந்தார். அவரது வாழ்க்கைத் துணைவியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைநாட்டம் உடையவராக இருந்ததனால் அவரது கலைப் பணிகளுக்கு உந்துசக்தியாகவும் அவரது கலைப்படைப்புக் களின் முதலாவது இரசிகையாகவும் விமர்சகியாகவும் இருந்து அவரது வாழ்க்கை வளம்பெற உதவினார்.

வீரமணி ஐயரவர்களின் இரண்டாவது பரிமாணம் அவரது ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆரம்பமாகிறது. முப்பத்துமூன்று வருடங்கள் அவர் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகப் பணியாற்றி ஆயிரக்கணக்கான கலைத்துறை ஆசிரியர்களை உருவாக்கி அதன்மூலம் பாரிய ஒரு கலைப் பாரம்பரியத்தை உருவாக்கியமை அவரது கலைப்பணிகளில் மிக முக்கியமான ஓர் அம்சமாகும். இதுவரை எவரும் செய்யாத சில சாதனைகளையும் வீரமணி ஐயர் செய்திருக்கிறார். ஒட்டுமொத்தமாக முப்பத்தைந்து தாளங்களிலும், நூற்றெழுபத்தைந்து தாளங்களிலும் தமிழிசைப் பாடல்கள் பாடியுள்ள ஒரேயொரு சாகித்ய கர்த்தா இவர் ஒருவர்தான். அதேபோல திருமயிலைக் கற்பகாம்பாளின் புகழ்பாடும் எழுபத்திரண்டு மேளகர்த்தா ராகத்திலமைந்த கீர்த்தனைகளையும் இவர் ஆக்கியிருக்கிறார்.

ராகமாலிகைகள் இசைப்பாடல்களில் தனியிடம் பெறுபவையாகும். ஆனால் ஒரே பாடலில் பல ராகங்களைப் பொருத்தமான முறையில் புனைந்து பாடுவதும் ஒரே அடியிலேயே இரண்டு ராகங்கள் அமைத்துப் பாடுவதும் இலகுவான விடயங்களல்ல. இங்கு முக்கியமாகக் கவனிக்கவேண்டியது அந்த உருப்படியைப் பாடும் கலைஞனுக்கு அந்த ராகங்கள் அடுத்துவரும் முறைமைகள் மாலை மாற்றத்துக்கு உகந்தவையாக அமையவேண்டும் என்பதே. அடுத்து வரும் இரு ராகங்கள் ஒன்றுக்கொன்று இசைந்து வருபவையாகவும் அமைந்துவிடும்போதுதான் ராகமாலிகைகள் வெற்றிபெறுகின்றன. ஐயரவர்களுக்குப் பெரும்புகழைத் தேடித்தந்த "கற்பகவல்லி" பாடலும் ஒரு ராகமாலிகையே. இதில் ராகங்கள் கோக்கப்பட்டிருக்கும் முறை பாடுவோராலும் கேட்போராலும் அனுபவித்து இன்புறத்தக்க பெருமைக்குரியது. உலகப் புகழ்பெற்ற பாடகர் டி. எம். சௌந்தரராஜனின் குரலில் உலகெங்கும் ஓங்கி ஒலித்து இன்றளவும் வீரமணி ஐயரின் புகழை ஒலிக்கச்செய்வது இந்தப் பாடலாகும்.

இதேபோன்ற இன்னொரு பாடல் மிகப் பிரபலமான சங்கீத வித்துவான் மஹாராஜபுரம் சந்தானம் அவர்களால் பாடப்பெற்ற "சாரங்கன் மருகனே...." என்ற ராகமாலிகையாகும். இதில் ஒவ்வோர் அடிகளிலும் இரண்டு இரண்டு ராகங்கள் இணைந்து வரும். அவற்றில் ஒன்று ஆண் ராகமாகவும் மற்றது பெண் ராகமாகவும் அமைக்கப்பட்டிருக்கும் புதுமையும் அவ்விரு ராகங்களும் ஒன்றையொன்று தழுவிவரும் பாங்கும் இசைவிற்பன்னர்களால் சுவைத்தின்புற்றுப் போற்றி மகிழப்பட்ட பெருமைக்குரியதாகும். இப் பாடலின் பெருமை காரணமாக இந்திய மேடைகள் சிலவற்றில் இப்பாடல்கள் தமது ஆக்கம் என்று சில கலைஞர்களால் பொய்யுரிமை கோரப்பட்டதையும் கலையுலகம் அறியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரமணி ஐயரவர்கள் பல பிரபந்தங்களையும் இயற்றி வரலாற்றில் அழியா இடம் பெற்றிருக்கிறார். திருமயிலைக் குறவஞ்சியைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வரக் குறவஞ்சி, நல்லைக் குறவஞ்சி, கண்ணப்பர் குறவஞ்சி முதலிய பல பிரபந்தங்களை இயற்றியுள்ளார். இவரது திருக்கேதீஸ்வரக் குறவஞ்சியைப் புகழ்ந்து பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்,

வீரமணி ஐயர் வித்தகத்தை என்னென்பேன்
ஈரமிகு தமிழில் ஈந்திட்டார் - மூரல்
கெழுமு கௌரி திருக் கேதீச்சரர்மீது
பழுதில் குறவஞ்சிப் பா எனப் பாடியுள்ளார்.

வீரமணி ஐயரவர்கள் இந்துமதம் சார்ந்த பாடல்களை மட்டுமல்லாது பிறமதப் பாடல்கள் பலவற்றையும் ஆக்கித் தந்திருக்கின்றார். அவரால் இயற்றப்பட்ட பல இஸ்லாமியப் பாடல்கள் யாழ்ப்பாணம் இஸ்லாமிய மன்றத்தினரின் பாராட்டைப் பெற்றிருக்கின்றன. வண்ணை எஸ். பக்கீர்த்தம்பி என்பார் வீரமணி ஐயரைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

முன்னரே குறிப்பிட்டதுபோல இவர் பல்துறை விற்பன்னராக இருப்பினும் இவரது முத்திரை பதிந்த துறை நாட்டிய நாடகமேயாகும். ஏறத்தாழ முன்னூறு நாட்டிய நாடகங்களை அவர் ஆக்கியுள்ளார். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் தொடர்புபடுத்தி பல்வேறு விதமான இசைக்கோலங்களுடன் பல்வேறு விதமான மாற்று வடிவங்களையும் பயன்படுத்திப் புதுப்புது மெட்டுக்களும் புதுப்புது ஜதிகளும் பொலிவு சேர்க்க அவர் ஆக்கித் தந்திருக்கும் நாட்டிய நாடகங்கள் என்றும் அவர் புகழைச் சாற்றிநிற்கும்.

சுமார் அறுபதிற்கு மேற்பட்ட ஆலயங்களிற்கு ஐயரவர்கள் ஊஞ்சற் பாடல்கள் இயற்றியிருக்கிறார். சுமார் ஐம்பது ஆலயங்களிற்குத் திருப்பள்ளி எழுச்சி பாடியிருக்கிறார். இவற்றை விட சுமார் முப்பதிற்கு மேற்பட்ட ஆலயங்களிற்கு இவர் கீர்த்தனைகள் பலவற்றை இயற்றி அவை பிரபலமான இசைக்கலைஞர்களால் பாடப்பெற்று இறுவட்டுக்களாக அவ்வாலயங்களினால் வெளியிடப்பட்டிருக்கின்றன. அப்பாடல்கள் அவ்வாலயங்களில் நாளாந்தம் ஒலிபரப்பப்பட்டு அவர் புகழை வானில் பரப்பியவண்ணம் இருக்கின்றன. அவரது நூல்வடிவில் வெளிவந்த பிரபந்தங்கள் சுமார் இருபத்தைந்து அளவில் இருக்கும். இன்னும் பல நூல்கள் அச்சேறவேண்டியுள்ளன.

இவரது பெரும் புலமையை உணர்ந்த தமிழகத்தின் பெரும் கலைஞர்களான எம்.டி ராமநாதன், பாபநாசம் சிவன், டாக்டர் பாலமுரளிகிருஷ்ணா, ஜி. என். பி., வெங்கடராம ஐயர், முசிறி சுப்பிரமணிய ஐயர், பேராசிரியர் சாம்பமூர்த்தி, இ கிருஷ்ண ஐயர், கிருபானந்த வாரியார், சா. கு. கணபதி ஐயர், சி. கணேச ஐயர் இராமையாபிள்ளை ஆகியோர் அவ்வப்போது இவரைப் பாராட்டி எழுதியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் காலமாக இப் பெரும் கலைஞர் வீரமணி ஐயரைப் பாராட்டியும் கௌரவித்தும் விருது வழங்கியும் நிறுவனங்களும் தனி மனிதர்களும் இறும்பூதெய்தியுள்ளனர். அவற்றுள் சிலவற்றை இங்கே பட்டியலாகக் காணலாம்.

இயலிசை வாரிதி - தியாகராஜ கான மையம், கொழும்பு 24-061968
ஸாஹித்ய சிரோமணி - நல்லை ஆதீனம் 04-05-1971
நாட்டிய சாஹித்ய கலாவேந்தன் - பரமானந்த வாசிகசாலை,
இணுவில் 15-01-1973
சாஹித்ய கானவேந்தன் - இணுவில் சனசமூக நிலையத்தினர 15.01.1975
முத்தமிழ் வாரிதி - கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை 27-03-1980
கவிமாமணி - வட இலங்கை சங்கீத சபை 10-06-1982
ஸாஹித்ய ஸாகரம் - கோப்பாய் ஆசிரிய கலாசாலை 21-07-1986
ஸாஹித்ய மாமணி - நாவலர் சபை 23-11-1986
கலாரத்னா - கலாசார அலுவல்கள் திணைக்களம் 21-12-1986
சிருஷ்டி ஞாயிறு - பிரதேச அபிவிருத்தி அமைச்சு 03-01-1987
மஹாவித்வான் - நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் 29-03-1998
அருட்கலை வாரிதி - இந்துசமய கலாசார அமைச்சு 21-02-1993
கலாபூஷணம் - கலாசார அமைச்சு 22-05-1997
சம்வாதீஸ்வரர் - நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம் 08-07-1998
ஞானக் கவிமணி - இந்து சமயப் பேரவை 11-10-1998
முத்தமிழ்க் கலாநிதி - சர்வதேச இந்துமத குருபீடம் 10-04-2002
லலிதகலா அபிஞர் - கும்பகோணம் அனைத்து இசைக் கலைஞர்கள்
06-01-2003
அருள் இசை வித்தகர் - சென்னை, உலகத்தமிழர் மையம் 07-01-2003

இவற்றைவிட அவ்வப்போது அவருக்கு ஆசுகவி, மதுரகவி, அருட்கவிச் செம்மல், ஸங்கீத வித்வத் ஸாகரம், முத்தமிழ் வித்தகர், முத்தமிழ்ச் சுரபி முதலிய பட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன.

1999இல் இடம்பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெள்ளிவிழா ஆண்டிற்கான பட்டமளிப்பு விழாவில் வீரமணி ஐயருக்கு கௌரவ முதுமாணிப் வழங்கப்பட்டது.

2000ஆம் ஆண்டில் வடக்கு, கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆளுநர் விருது வழங்கப்பட்டது.

2003ஆம் ஆண்டில் இலங்கை கம்பன் கழகத்தின் கௌரவிப்பும் கிடைத்துள்ளது.

அச்சேறி வெளிவந்துள்ள அவரது முக்கியமான சில நூல்களையும் இங்கு பட்டியலிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் குறவஞ்சி நாட்டிய நாடகம், கதிர்காமக் கந்தன் குறவஞ்சி, அர்ஜுனன் தவம், அஷ்டலக்ஷ்மி, பக்தப் பிரகலாதன், சுபத்திரா பரிணயம், கர்ணன், ஸ்ரீ கிருஷ்ணாவதாரம், நவரஸ இராமாயணம், ராதையின் நெஞ்சம், திருஞான சம்பந்தர், விஸ்வரூப தர்சனம், திருவாசகம் தந்த மணிவாசகர், ஸத்யம் சிவம் சுந்தரம், கண்ணப்பர் குறவஞ்சி நாட்டிய நாடகம்.

இம் மாபெரும் கலைஞரது இன்னும் பல பிரபந்தங்களும் நாட்டிய நாடகங்களும் அச்சுவாகனமேறக் காத்திருக்கின்றன. நாட்டியத்திற்கேற்ற பல பதங்களும் தில்லானாக்களும் அழியாது பாதுகாக்கப்பட்டு அடுத்த தலைமுறைக்குக் கையளிக்கப்படவேண்டியுள்ளது.

இத்தகைய பெருமைக்கும் பெருமதிப்புக்கும் உரியவரான ஸ்ரீமான் வீரமணி ஐயரவர்கள் தமது அறுபத்துநான்காவது வயதில் 1996இல் தமது மனைவியைப் பறிகொடுத்தார். தனிமையில் வாடிய அவரது கலை வாழ்க்கைக்கு ஒரு துணை அவசியம் என உணர்ந்த உறவினரும் ஊரவரும் நல்லூரைச் சேர்ந்த சிவஸ்ரீ இரத்தினசாமிக் குருக்களின் புதல்வி சுசீலாதேவி அவர்களை 1997 இல் திருமணம் செய்து வைத்தனர்.

சிறியதொரு இடைவெளியின்பின் ஐயரவர்களின் கலைப்பணி மீண்டும் வீறுகொண்டெழுந்து சிறக்கலாயிற்று. அவரது கலைப்பணிக்கு ஸ்ரீமதி சுசீலாதேவி அவர்கள் அருந்துணை நல்கினார்.

செவ்விய வாழ்வில் சீரிய பணியை நிறைவுசெய்த செழுங்கலைஞரான மஹாவித்வான் வீரமணி ஐயரவர்கள் 07-10-2003இல் கற்பகாம்பாளின் பொற்பதங்களைச் சென்றடைந்தார். அவர் விட்டுச்சென்ற அழியாச் சொத்துக்களான கலைப்படைப்புக்களைப் பேணிப் பாதுகாத்து அடுத்த தலைமுறையினரின் ஆய்வுக்கும் அறிவுக்கும் தந்துகொண்டிருக்கிறார் அவரது துணைவியார் ஸ்ரீமதி சுசீலாதேவி அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 139. மாவிட்டபுரம், து. சுந்தரமூர்த்திக் குருக்கள்

(04.10.1931 - 03.12.2009)

இலங்கையின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தின் வடக்கே மாவிட்டபுரம் பதியிலே 1931ம் ஆண்டு ஐப்பசி மாதம் 4ஆம் திகதி காஸ்யப கோத்ரம் ப்ரம்மஸ்ரீ துரைச்சாமி குருக்கள் அவர்களுக்கும் நாரயணி அம்மையார் அவர்களுக்கும் மைந்தனாக சுந்தரமூர்த்திக்குருக்கள் உதயமானார்.

ஸ்கந்தனின் சேவையையே தன்மூச்சாகக் கொண்டிருந்த ப்ரம்மஸ்ரீ துரைச்சாமிக் குருக்கள் அவர்கள் தன் மைந்தனுக்கு சுந்தரமூர்த்தி என்ற நாமகரணத்தைச் சூட்டி மகிழ்ந்தார். மேலும், தந்தையாரது வழி நடத்தலில் வேதங்களை ஓதவும். பாடசாலைக் கல்வியும் பெற்றுக்கொள்ள ஆரம்பித்தார். சிறுவயதிலேயே தந்தையுடன் மாவைக் கந்தனின் சேவையிலும் ஈடுபட ஆரம்பித்தார். உரிய வயதில் உபநயன, ப்ரம்மோபதேசமும் செய்விக்கப்பட்டு தந்தையிடம் வேதங்களையும் பாடசாலைக் கல்வியையும் ஒருங்கே கற்று வந்தார். மகாஜன கல்லூரி மற்றும் பரமேஸ்வராக் கல்லூரியில் கல்விபயிலும் காலத்திலே ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்ற மாணவனாகத் திகழ்ந்தார். பாடசலையில் இருந்து வந்ததும் தனது கடமைகளை முடித்துக் கொண்டு தந்தைக்கு உதவியாக கோவில் கைங்கர்யங்களில் மூழ்கிவிடுவார். கோவில் அர்த்தஜாமப் பூஜையின் பின்புதான் இவரது பாடசாலை வேலைகளைச் சிரமத்தோடு செய்து முடிப்பார். காலச் சக்கரம் சுழன்று அக்காலத்து சிரேஷ்ட தராதரப் பரீட்சையிலும் திறமைகளுடன் சித்தி எய்தினார். சிரேஷ்ட தராதரத்தை முடித்துக் கொண்டபின் மேற்கொண்டு படிப்பதற்குப் போதிய பக்கபலமோ அல்லது தூண்டுகோலோ கிடைக்கவில்லை தந்தையுடன் கோவில் சேவையிலும் கிடைத்த நேரங்களில் கற்றறிந்த பெரியோர்களிடமிருந்து இதிகாசங்களையும் புராணங்களையும் கேட்டறிந்து கொள்வார். மாவைக் கந்தனின் அருள்கடாட்சம், அவரது சிறிய தந்தையாரும் ஆசிரியப்பணியில் இருந்தவருமான ப்ரம்மஸ்ரீ பாலசுந்தரக்குருக்கள் அவர்கள் மூலம் சமஸ்கிருதம், ஆங்கிலம், பாளி ஆகிய மொழிகளை முறையாக போதிக்கப்பட்டு லண்டன் பரீட்சைக்கும் தோற்றினார். B.A. பரீட்சையில் திறமையாச் சித்தியெய்தி தன் குலத் தொழிலையும் விட்டுவிடாமல் ஆசிரியப் பணியில் புகுந்தார். ஆசரியப்பணியில் மாணவர்களாலும், சகஆசிரியர்களாலும் மிகுந்த மரியாதையுடனும் மதிப்புடனும் போற்றப்படடார்.

திருமண வயதை எட்டியபோது பெரியோர்களின் ஆசீர்வாதங்களுடன் பொலிகண்டியைச் சேர்ந்த தியாகராஜ குருக்கள் சரஸ்வதி அம்மாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பதிகளின் புத்திரியான ஜெயம் அம்மையார் அவர்களை 1959ல் திருமணம் செய்துகொண்டு இல்லற வாழ்வில் இனிதே காலடி எடுத்து வைத்தார். இல்லற வாழ்வில் ஏழு செல்வங்களை பெற்றுக் கொண்டதுடன் அறுவரை உரிய முறையில் கல்விபோதித்து பெண்கள் ஐவரையும் ஆசிரியைகளாக் கண்டதுடன் அவர்களுக்கு உரிய வரன்களைத் தேர்ந்தெடுத்து பேரர்களையும் கண்டுகளித்தார். எல்லோருக்கும் இளவலாக அமைந்துவிட்ட துரைச்சாமி சர்மா (ரமேஷ்) இன்று அரச வைத்தியராக கடமை ஆற்றி வருகின்றார்.

ஓய்வு பெற்றவுடன் ஆசார்யாபிஷேகம் பெற்று ஷண்முகநாதக் குருக்கள் அவர்களுக்கு கோவில் காரியங்களில் மனநிறைவுடனும், சிரத்தையுடனும் உதவி செய்து கொடுப்பார். சந்தர்ப்பமும் காலமும் கிடைத்த போது வெளி இடங்களில் குருத்துவ பணியையும் செய்து வந்தார்.

இளைப்பாறி விட்டோமே என்ற எண்ணம் அவர் மனதில் இருந்தாலும் மனச் சோர்வின்றி ஆகமக்கிரியைகளிலும், வைதீகக் கிரியைகளிலும் பங்குபற்றி ஏனையோருக்கும் வழிகாட்டி, கிரியைகளை எக்குறைவுமின்றி மிகச் சிறப்புடன் செய்து வைப்பார்.

பல ஆலயங்களில் நடைபெற்ற கும்பாபிஷேகங்களில் பங்குபற்றி சிறப்புடன் கிரியைகளைச் செய்துள்ளார். காரியம் நடைபெறும் போது அவரிடம் எவ்வித பதற்றத்தையும் காணமுடியாது. அவரது நேர்த்தியான கிரியைமுறைகளால் பக்தகோடிகள் பரவசமடைந்த சந்தர்ப்பங்கள் பல. வைதீகக் கிரியைகளைச் செய்யும்போது அக்கிரியை செவ்வனே நடைபெற கிரியையின் விளக்கங்களையும் அவ்வப்போது விளங்கவைத்தே செய்வார். மாவைக் கந்தனின் உற்சவத்திலும் கவனம் செலுத்துவார். பிரதிபலனையோ அல்லது பாராட்டுகளையோ சிறிதும் எதிர்பார்க்க மாட்டார். இடம் பெயர்ந்து பல மைல்களுக்கு அப்பால் இருந்தபோதும் மாவைக் கந்தனின் விசேஷ தினங்களில் தனது தேக நிலையையும் பொருட்படுத்தாது தனது துவிச்சக்கர வண்டியிலேயே மாவைக் கந்தனின் பணி செய்யப் புறப்பட்டு விடுவார்.

அவரது ஆசிரியப் பணிக் காலத்திலேயே மனதில் ஓர் ஆசையை வளர்த்துக் கொண்டவர். காலம் கடந்தாலும் வரும் சமுதாயத்தினருக்கு பயன்படும் வகையில் சமஸ்கிருத, ஆங்கில, தமிழ் அகராதியொன்றை (அகராதியைவிட களஞ்சியம் என்றே கூறலாம்) பதிப்பித்து வெளியிட விடவேண்டுமென்ற அவாவுடன் நேரம், காலம், உடல்நிலை என்பவற்றைக்கூட கவனியாது தனது ஆக்க வேலையில் மூழ்கிவிடுவார். அவரின் இப்பணி பின்னாட்களில் ஏற்பட்ட இடப் பெயர்வு, காரணங்களால் முழுமையாக முற்றுப்பெறவில்லை ஆயினும் தொகுக்கப்பட்டவற்றை பாகம் பாகமாகவாவது வெளியிட வேண்டும் என்ற எண்ணத்துடன் முயற்சிகளை மேற்கொண்டு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றோடு மட்டுமல்லாது இராமநாதன் சிவன் கோவிலில் நடைபெற்றுவரும் இராமநாதன் வேதாகம பாடசாலையின் ஆசிரியராகவும், யாழ் "நியந்திரீ" அமைப்பின் உபதலைவராகவும் இருந்து வந்துள்ளார். இப்பணியில் அவரது சொற்பொழிவுகள் பலமுறை இடம்பெற்றதுண்டு. ஆழமான கருத்துக்களையும், கிரியா விளக்கங்களையும் தனக்கே உரிய பாணியில் ஏனையோருக்கு புரியும் வண்ணம் எடுத்துரைப்பதிலும் ஆற்றல் பெற்றிருந்தார்.

நல்லூர் கைலாய பிள்ளையார் கோவிலில் பத்துவருடங்களுக்கும் மேலாக தொடர்ந்து உற்சவ ஆசார்யராக இருந்து உற்சவங்களை மனநிறைவுடன் நிறைவேற்றி வந்தார்.

இவரது கடைசிகால வாழ்க்கை இலங்கையின் தலைநகரம் கொழும்பில் தனது மைந்தனுக்கு உதவியாக அமைந்தது. கொழும்பிலேயே அவரது ஆத்மா இறைபதம் அடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 140. பிரதிஷ்டா வித்வத்ஜோதி இ. சுப்பிரமணியக்குருக்கள்

## (20.01.1931 - 13.04.2008)

இவர் இலங்கையின் வடபால் யாழ்ப்பாண நன்னகரின் வட்டுக்கோட்டை கிராமத்தில் 20.01.1931ம் ஆண்டு பிறந்தார். இவர் கோத்திரம் கௌசிகம் ஆகும். தந்தையார் இரத்தினசபாபதிக் குருக்கள். தாயார் புவனேஸ்வரி அம்மா ஆவர். இவருக்கு சகோதரர்கள் ஏழுபேர்.

சிறுவயதில் கொழும்பில் பெரிய தந்தையார் குமாரசாமிக் குருக்களுடன் இருந்து கல்வி பயின்றுவரும் காலத்தில் 1940இல் அவர் அமரத்துவம் அடைய கொழும்புத்துறை தாய்மாமனாகிய தியாகராஜ ஐயாவுடன் இருந்து கொழும்புத்துறை இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தார். பின் மயிலணி சதாசிவக் குருக்களினால் உபநயனம் செய்யப்பெற்று புளியங்கூடல் இந்தன் முத்துவிநாயர் ஆலயத்தில் தந்தையாருக்கு உதவிசெய்து புளியங்கூடல் சைவப்பிரகாச பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தார். சமஸ்கிருத கல்வியை தாய்வழி மாமனாராகிய வடலியடைப்பு சோமசுந்தர ஐயாவிடம் பயின்றதுமல்லாது புராண படனங்களையும் அவரிடம் கற்று பயன் சொல்லும் திறமையையும் பெற்றார். காரைநகர் ஈழத்துச்சிதம்பரம் குருவாகத் திகழ்ந்த கணபதீஸ்வரக் குருக்களினால் சிவாசார்யாபிஷேகம் செய்யப்பெற்று 1949ஆம் ஆண்டு தை மாதம் முதல் அரியாலை சித்திவிநாயகர் ஆலய பிரதமகுருவாக பதவியேற்று திருமலை கோணேஸ்வரர் கோயில் பிரதமகுருக்கள் சுப்பிரமணியக்குருக்கள் அன்னபூரணி அம்மா தம்பதிகளின் மூத்த புத்திரி அமிர்தகுண நாயகியை 1954இல் திருமணம் செய்து ஐந்து பிள்ளைகளுக்குத் தந்தையாகத் திகழ்ந்தார். இலங்கையின் பலபாகங்களில் மகோற்சவம் கும்பாபிஷேகம் போன்றவற்றைச் சிறப்பாகச் செய்து வாழ்ந்து வந்தார்.

இவரது குருத்துவத் திறமையைக் கண்டு 1981ஆம் ஆண்டு சிங்கப்பூர் செல்வ விநாயகர் ஆலய அறங்காவலர்களும் இவரை அழைத்து மஹோற்சவத்தை செய்வித்தனர். இவர் தமது காலத்தில் கற்ற கல்விகளுக்கேற்ப கிராம நகரங்களில் நடைபெறும் திருமணங்கள் சிராத்தங்கள் போன்றவற்றை சிறப்பாகச் செயதுவந்தார். பிராமண சமூகத்திலும் பூர்வ அபர காரியங்களையும் சிறப்பாக செய்து வந்தார். குறிப்பாக காரைநகர்ப் பகுதியில் அனைத்து ஆலயங்களிலும் கும்பாபிஷேகம் மகோற்சவம் நடத்திய பெருமை இவருக்குண்டு. சங்கானை செங்கற்படை விநாயகர் ஆலயம், மடத்துப்பிள்ளையார் ஆலயம், அரியாலை நாச்சிமார்கோவில், வரணி கும்பிட்டான் விநாயகர் ஆலயம், கட்டப்பிராய் அம்மன் கோயில், யாழ். கலட்டி அம்மன் கோயில் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களிலும் மஹோற்சவம் செய்தார்.

தான் பொறுப்பேற்கும் கும்பாபிஷேக வைபவங்களில், யாவும் ஒரு கைப்பாடாக இருக்கவேண்டும் என்ற நியமப்படி பிரதான யாகபூசைகள், தூபி கும்பாபிஷேகங்களைத் தானே செய்த பெருமை இவருக்குண்டு. தான் செய்யும் மஹோற்சவங்களில் யாக தரிசனத்தில் இறைவனுக்கு அருகே சென்று அர்ச்சனை, புஷ்பாஞ்சலி போன்றவற்றை செய்வார். தனது பிற்காலத்தில் கும்பாபிஷேக வைபவங்களில் போதகாச்சாரியரக இருந்து நடத்திப் பெருமையடைந்தார். இத்தகைய சிறப்புக்களுடன் வாழ்ந்த குருக்களவர்கள் 13.04.2008 இல் சிவபதமடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 141. நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையார் தேவஸ்தான ஆதீன கர்த்தர், பிரதமகுரு ஆ. சந்திரசேகரக் குருக்கள்

(19.01.1931 - 26.11.2020)

முப்போதும் திருமேனி தீண்டும் பேறுபெற்ற ஆதிசைவ சிவப்பிராமண குலத்தைச் சேர்ந்த அந்தணச் செம்மல்களின் வம்சத் திலே, பாரத்துவாஜ கோத்திரத் தையும் போதாயன சூத்திரத்தையும் சேர்ந்தவர்களாய், யஜுர்வேதிகளாய், தொன்றுதொட்டே கல்வி கேள்விகளில் வல்லவர்களாய் விளங்கிய சான்றோர்கள் வரிசையிலே பிரம்மஸ்ரீ சிவசாமிக் குருக்கள், பிரம்மஸ்ரீ சந்திரசேகரக் குருக்கள் (அண்ணாச்சாமிக் குருக்கள்) ஆகியோரின் பரம்பரையிலே சிவஸ்ரீ ஆபதோத்தாரணக் குருக்களும் தாட்சாயணி அம்மாளும் செய்த தவப்பயனால் 1931ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதிக்குச் சரியான பிரமோதூத வருடம் தை மாதம் திருவோண நட்சத்திரத்தில் வேதநெறி தழைத்தோங்கவும் மிகுசைவத்துறை விளங்கவும் சிவஸ்ரீ சந்திரசேகரக் குருக்கள் அவர்கள் பிறந்தார்.

இவர் உரிய வயதிலே வித்தியாரம்பம் செய்யப்பெற்று தமிழ்மொழி, வடமொழி ஆகிய இரு மொழிகளையும் நன்கு கற்றுச் சித்தாந்த சாஸ்திரங்களையும் நன்கு பயின்றார். வித்துவான் கணேசையர், இலக்கண வித்தகர் நமசிவாயம் போன்றோரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்கும் பேறு இவருக்குக் கிடைத்திருக்கிறது. ஆங்கில மொழியிலும் வல்லவராகத் திகழ்ந்தார். இவர் தமது ஆரம்பக் கல்வியை சாவகச்சேரி டிரிபேக் கல்லூரியிலும் உயர்கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டதோடு வேத சிவாகமப் பயிற்சிகளை தந்தையாரிடமும் பெற்றார். தமது குடும்ப மரபுக்கேற்ப சமய விசேட நிர்வாண தீக்ஷைகளையும் ஆசார்யாபிஷேகத்தையும் பெற்றார். தமது சந்ததி உடையவர் ஆகிய சூழிகாம்பாள் சமேத சரண்ய புரீஸ்வரர் என்னும் நாமமுள்ள பாணலிங்க பூஜையை மேற்கொண்டு கிரமமாக ஆத்மார்த்த பூஜையைச் செய்துவந்தார்.

தமது குருத்துவத்துக்கு உதவியாக இல்லறமாகிய நல்லறத்தை நாடவேண்டியவரானார். தென்னிந்தியா கும்பகோணத்தைச் சேர்ந்தவரும் அப்போது இலங்கை பலாங்கொடையில் வசித்தவருமாகிய சிவஸ்ரீ சுப்பிரமணியக் குருக்களின் மகளாகிய சுப்புலட்சுமி என்னும் கன்னியை 1960 இல் கைப்பிடித்தார். ஜெயந்திநாதசர்மா என்னும் ஆண்மகவையும், தாட்சாயணி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகலக்ஷ்மி என்னும் இரு பெண்களையும் மக்கட்செல்வங்களாகப் பெற்றெடுத்தார்.

நித்திய கர்மானுஷ்டானங்களில் அசையா நம்பிக்கையும் சைவம் அனுஷ்டானத்துக்குரியது என்னும் உறுதியும் பூண்ட இப்பெரியார் தமது புதல்வரான ஜெயந்திநாத சர்மாவுக்கு ஆரம்பக்கல்வி, உயர்கல்வி ஆகியவற்றை வழங்கியதோடு குலவழக்கப்படி வேத சிவாகமக் கல்வியையும் நன்கு கற்பித்து முறைப்படி ஆசார்யாபிஷேகம் செய்வித்து நித்திய கர்மானுஷ்டானங்களில் ஈடுபடுத்தியதுடன் சிவாசார்யப் பணியிலும் பிரகாசிக்கச்செய்தார்.

கும்பாபிஷேகம், சங்காபிஷேகம், ஆசார்யாபிஷேகம், மஹோற்சவம் முதலிய நைமித்திகக் கிரியைகளில் பக்தர்கள் கண்டுகளிக்கும் வண்ணம் கடமையாற்றும் கண்ணியர். இவர் முற்றுவித்த கும்பாபிஷேகங்கள் பல. நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்தவிநாயகர் கோவில், கைதடிப் பிள்ளையார் கோவில் என்பவற்றின் பரம்பரை குருவாக அடியார்களின் அபிமானத்துக்குரியவராக அரும்பணியாற்றினார்.
இளமைக்காலத்தில் நீண்ட காலம் இவர் கைதடியிலேயே வசித்துவந்ததும் குறிப்பிடத்தக்கது.

பொலிகண்டி கந்தவனக்கடவை, உப்புக்கிணற்றடி பிள்ளையார் கோவில், அல்வாய் வேவிலந்தை முத்து மாரியம்மன் கோவில், விளைவேலி துர்க்கை அம்மன் கோவில், ஆகிய ஆலயங்களில் தொடர்ந்து பல வருடங்கள் மஹோற்சவ குருவாக விளங்கினார்.

முன்னேஸ்வரம் சிவாலயத்தில் வருடம்தோறும் சிறப்பாக நடைபெற்றுவரும் வசந்த நவராத்திரி விழாவில் பத்து வருடங்களுக்கு மேலாக கலந்து சிறப்பித்து அவ்வாலய ஆதீனகர்த்தரும் பல்கலைக்கழகப் பேராசிரியருமாகிய சிவஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களால் பாராட்டப்பெற்றவர். வரலாற்றுப் புகழ்மிக்க கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்திலும் (சம்பந்தி) இவரது குருத்துவசேவை இடம்பெற்றுள்ளது.

சிவாச்சாரியார் அவர்கள் தம்மாதீனத்திலுள்ள நீர்வேலி, வாய்க்காற்றரவைப் பிள்ளையார் கோவிலின் நித்திய நைமித்திகங்களை வழுவாது ஆற்றிவந்தார். கோவிலின் வளர்ச்சிக்கு அவ்வப்போது இன்றியமையாதனவற்றைச் செய்தும் செய்வித்தும் பணியாற்றிவந்துள்ளார்.

இவ்வாறு நிறைவாழ்வு வாழ்ந்த குருக்கள் அவர்கள் சிலகாலம் நோய்வாய்ப்பட்டிருந்து சார்வரி வருடம் கார்த்திகை மாதம் பூர்வபட்சத் துவாதசித் திதியில் (26.11.2020) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் விநாயகர் பாதங் களை அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 142. சித்திரக் கலைஞர் பா. பஞ்சநத சர்மா (பகவான்)

(29.09.1932 - 29.04.2010)

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தவர் பகவான். பகவான் என்ற பெயர் அவரது அன்புள்ளங்கள் அனைவருக்கும் நன்கு பரிச்சயமானதொன்று. இளவயதிலிருந்து அனைவருடனும் அன்புடன் பழகும் பண்பாளராகத் திகழ்ந்தவர். பாரதி கண்ட இலட்சி புருஷனாக, ஒளிபடைத்த கண்ணினனாக, உறுதி கொண்ட நெஞ்சினனாக, களி படைத்த மொழியினனாக, தெளிவு மதியினனாக, எளிமை கண்டு இரங்குபவனாக உயர் இலட்சிய உள்ளத்தினனாக எம்மோடு வாழ்ந்து மகிழ்ந்தவர் பகவான்.

பிரம்மஸ்ரீ பஞ்சநதம் அவர்கள் வடமராட்சி பருத்தித் துறையில் புகழ்பூத்த சிவாச்சாரியராகத் திகழ்ந்த சடமர்ஷண கோத்திரத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ நடேசு ஐயர் பாஸ்கரக் குருக்கள் மற்றும் ஸ்ரீமதி அபயாம்பிகை அம்மா தம்பதியரின் இரண்டாவது புத்திரனாக 29.09.1932 அன்று பிறந்தார். இவரது தந்தையார் பருத்தித்துறை, கொட்டடிப் பிள்ளையார் கோயிலில் நீண்டகாலம் விநாயகப் பெருமானைக் குல தெய்வமாகக் கொண்டு அவ்வாலயத்தின் பிரதம குருக்களாக விளங்கி இறைபணியாற்றி வந்தவர். பாஸ்கரக் குருக்கள் செய்த தவப்பயனாய் நான்கு புத்திரர்களையும், மூன்று புத்திரிகளையும் பெற்று மகிழ்ந்தவர். பிரம்மஸ்ரீ பஞ்சநதம் அவர்களது மூத்த சகோதரன் பிரம்மஸ்ரீ சண்முகரத்தின சர்மா தற்பொழுது கனடாவில் வசித்து வருகிறார். இவரது இளைய சகோதரர்களில் ஒருவராகிய பருத்தித்துறையில் வாழும் பிரம்மஸ்ரீ நாராயண சர்மா தபாலதிபராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவராவார். இவரது மற்றைய இளைய சகோதரர் கொழும்பில் வசித்துவரும் பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதி ஐயர் ஆவார். இவரும் ஓய்வுபெற்ற தபாலதிபராவார். இவரது மூன்று சகோதரிகளில் திருமதி காமாட்சி (கங்கா) ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியையாவார். மற்றைய மூத்த சகோதரி நீலாயதாட்சி (பகவதி) ஆவார். இவரது இளைய சகோதரியாகிய தேவகி இளவயதிலேயே இப்பூவுலக வாழ்வை விட்டு இயற்கை எய்து விட்டார்.

பஞ்சநதம் இளவயதிலிருந்தே கலையார்வம் கொண்டவராகத் திகழ்ந்தார். இவரது ஆரம்பக் கல்வி பருத்தித்துறை சித்திவிநாயகர், யாழ்ப்பாணம் ஸ்ரான்லிக் கல்லூரி, பருத்தித்துறை வேலாயுதம் பாடசாலைகளில் தொடங்கியது. பின்னர் சித்திர ஆசிரியர் தராதரக் கல்விகற்றார். தமது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவுடன் இவரை இவரது தந்தையார் இந்தியாவில் சென்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசினர் ஓவியக் கல்லூரியில் (Govt. School of Arts & Crafts Madras) சித்திரத்தில் உயர் பயிற்சியையும், தகைமையையும் பெற அனுப்பினார். சித்திரத்தில் டிப்ளோமா பட்டம்பெற்ற பஞ்சநதம் அவர்கள் தாயகம் திரும்பி, பல பாடசாலைகளில் எண்ணற்ற மாணவர்களுக்கு கலையுணர்வூட்டி, சித்திரத்தில் பயிற்சி வழங்கி மனநிறைவு கொண்டார். சிறந்த சித்திரக் கலைஞனாகவும், ஆசிரியராகவும் விளங்கிய பஞ்சநதம் பாடசாலையிலும், சமூகத்திலும் இனிய முகத்துடன் அனைவருடனும் பழகி வந்தார். இவரது முதல் சித்திர ஆசிரியப்பணி கொழும்பு சென், பீட்டர்ஸ் கல்லூரியில் 1960ஆம் ஆண்டில் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து ஏறாவூர் அரசினர் மகாவித்தியாலயத்தில் 1966ஆம் ஆண்டு கல்விப் பணியினைத் தொடர்ந்தார். 1967இல் கட்டுஸ்தோட்டை, இக்குரச்சிட்டிய முஸ்லீம் மகாவித்தியாலயத் திலும், பின்னர் நாவலப்பிட்டி ஸ்ரீ கதிரேசன் மகா வித்தியாலயத்திலும் 1968ஆம் ஆண்டு ஆசிரியப் பணியாற்றினார். 1978ஆம் ஆண்டு யாழ். சித்திவிநாயகர் வித்தியாசாலைக்கு இடமாற்றம் பெற்றார். நிறைவாக தமது பிறந்த ஊராகிய பருத்தித்துறையில் புகழ்பூத்த ஹாட்லிக் கல்லூரியில் ஓய்வு பெறும் வரை 1984 - 1992ஆம் ஆண்டு வரை ஆசிரியப் பணியாற்றினார். பல பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் ஆசிரியப் பணியாற்றியதால் தாம் சார்ந்த துறையிலும், கல்வித்துறையிலும் சிறந்த அனுபவமிக்கவராகத் திகழ்ந்தார். 1992-1993 களில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் இடைவரவு விரிவுரையாளராகப் பணி புரிந்தார்.

பிரம்மஸ்ரீ பஞ்சநதம் பல கல்விநிறுவனங்களிலும் அமைப்புக்களிலும் பங்குகொண்டு சித்திரக் கலை வளர்ச்சிக்குப் பெரும்பங்களிப்பு நல்கினார். 1952-1954களில் யாழ் வின்ஸர் கலை கழகத்திலும், 1955-1956களில் யாழ். பெனடிக்ட் கலைக் கழகத்திலும் பங்கு கொண்டவர். 1958ஆம்ஆண்டு சித்திரத்தில் ஆங்கில ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றார். யாழ்ப்பாணம் ஓய்வு நாள் வர்ணம் தீட்டுனர் பிரிவில் அங்கத்துவம் (Holiday Painters Group) பெற்றார். 1960ஆம் ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களில் வட இந்தியாவில் மனஸ்கவி இராஜஸ்தானில் நடாத்தப்பட்ட சுவர் ஓவியப் பயிற்சிப் பட்டறையில் 1644 × 12 அடி பரப்புடைய சுவரோவியம் தீட்டிச் சிறப்படைந்தார். கண்டிப் பாடசாலைகளில் சித்திர ஆசிரியர்களுக்கு பயிற்சிப் பட்டறைகள் நடத்தி அரும் பணியாற்றினார். பாடசாலை மட்டத்திலும் மற்றும் மாவட்ட மட்டத்திலும் நடத்தப்பட்ட சரித்திர நாடகப் போட்டிகளுக்கு பின்புறத்திரை ஓவியம், ஊடக ஒப்பனவு, கிரீடங்கள். வாள்கள், கேடயம், கப்பல், ஓடம் கைலைக் காட்சி முதலியன தயாரித்த பெருமைக்குரியவர். தன்னால் வரையப்பட்ட ஓவியங்களை ஹாட்லிக் கல்லூரி நூலகத்திற்கு வழங்கியமை மற்றுமொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பிரம்மஸ்ரீ பஞ்சநதம் 23.10.1969 ஆம் ஆண்டு இல்லற வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்தார். கம்பளை ஸ்ரீ கதிரேசன் கோவில் பிரதம் குருவாகத் திகழ்ந்த பிரம்மஸ்ரீ மு. பத்மநாபக் குருக்கள் மற்றும் ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மா தம்பதியரின் இரண்டாவது அருந்தவப் புதல்வியும், பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பட்டதாரியும், ஆசிரியையுமாகிய ஸ்ரீமதி புவனேஸ்வரி அவர்களின் கைத்தலம் பற்றினார். புவனேஸ்வரி புசல்லாவை சரஸ்வதி மகாவித்தியாலயம், கம்பளை சாகிராக் கல்லூரி ஆகியவற்றிலும் ஆசிரியப் பணியாற்றி, நிறைவாகப் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலையில் உப அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவ்வகையில் இத் தம்பதியர் ஆசிரியப் பணியில் ஒன்றிணைந்து பணியாற்றிய பெருமை பெற்றவர்கள்.

இவர்கள் செய்த தவப் பயனாய் சுபாஷினி முதலாவது புத்திரியாகவும், ஸ்ரீகீதா இரண்டாவது புத்திரியாகவும் பிறந்தனர். தமது இரு புதல்விகளையும் இருகண்மணிபோல் காத்து பாசத்துடன் வளர்த்தெடுத்து மனநிறைவு கொண்டனர். உரிய காலத்தில் அவர்களைப் பாடசாலைக்கு அனுப்பி கல்வி கற்பித்ததன் பயனாய் சுபாஷினி அவர்கள் விவசாயத் துறையில் பட்டதாரியாகவும், ஆசிரியையாகவும் திகழ்கின்றார். இவர் தற்பொழுது ஹற்றன் புனித பொஸ்கோ பாடசாலையில் ஆசிரியப் பணி புரிகின்றார். ஸ்ரீகீதா விஞ்ஞானப் பட்டதாரியாகவும் அதனைத் தொடர்ந்து M.Sc பட்டம்பெற்று சிறிது காலம் இலங்கை புத்தாக்க ஆணைக்குழுவில் வடக்கு கிழக்கு இணைப்பாளராக கடமையாற்றினார். தற்பொழுது யாழ்ப்பாணம் கல்லூரியில் ஆசிரியையாகவும், பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ விஞ்ஞான வருகை விரிவுரையாளராகவும் பணிபுரிகின் றார். தமது புதல்வியர் இருவரும் கல்விகற்று நிறைவு செய்தவுடன் தமது துணைவியார் ஸ்ரீமதி புவனேஸ்வரியுடன் இணைந்து அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை பிரம்மஸ்ரீ பஞ்சநதம் இனிதே நிறைவேற்றி மகிழ்ந்தார். தமது மூத்த புதல்வி சுபாஷினியை விவசாய முதுமாணிப் பட்டதாரியாகிய பிரம்மஸ்ரீ மு. ஸ்ரீவேணுகோபால சர்மா அவர்களுக்கு மணம் முடித்து வைத்தார். இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த இவர் தலவாக்கலை தமிழ் மகாவித்தியாலயத்தில் பணியாற்றி வருகின்றார். தமது இரண்டாவது புதல்வி ஸ்ரீகீதாவை உடுவிலைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சசிவர்ண சர்மா அவர்களுக்குத் திருமணம் செய்துவைத்தார். யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரியாகிய இவர் சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கி உத்தியோகத்தராக பணிபுரிந்து வருகின்றார். இவரது இருமருமக்களும், அவர்களது பெற்றோர்களும், சகோதர சகோதரிகளும் பல்வேறு வழிகளிலும் பக்கத்துணையாக விளங்கினர்.

பிரம்மஸ்ரீ பஞ்சநதம் விநாயகப் பெருமான்மீது அளவற்ற பக்தி பூண்டவர். தமது இறுதிக் காலம்வரை தமது தந்தையார் பரிபாலித்த கொட்டடிப் பிள்ளையார்மீது அளவற்ற பக்தி பூண்டவராக விளங்கினார். அத்துடன் பகவான் ஸ்ரீ சத்தியமீதும் அளவற்ற பக்தி பூண்டவர். "ஜெய்ஸ்ரீ சாய்ராம்" என்ற தாரக மந்திரத்தில் அளவற்ற நம்பிக்கை பூண்டவர். பல்வேறு சத்ய சாயி சமித்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயச் செயற்பாடுகளில் தம்மை இணைத்துக் கொண்டு ஆர்வமுடன் பணியாற்றி பகவானின் அருளுக்குப் பாத்திரரானார். பகவான் சத்ய சாயியின் சிந்தனைகளைச் சதா படிப்பதிலும், அதைப் பற்றிச் சிந்திப்பதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். அவரது நூல்களை உள்ளன்புடன் படித்து மகிழ்வார். பகவான் ஸ்ரீ சத்ய சாயியின் அருளுபதேசமாகிய சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை. அகிம்சை ஆகியவற்றில் அளவற்ற நம்பிக்கை கொண்டு விளங்கியதோடு சத்திய சாயி அன்பர்களோடு இனிமையுடன் பழகியவர். சமித்தி செயற்பாடுகளில் ஈடுபட்ட காரணத்தால் இவருக்கு உறுதுணையாகப் பல சாயி அன்பர்கள் விளங்கினர்.

இவரது கலைத்துறை ஆற்றல், ஆங்கில புலமைத்துவம், கலைப்பணி காரணமாக அவரைக் கௌரவிக்கும் பொருட்டு இவருக்கு இலங்கை அரசு கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஊடாக 04.02.2004 அன்று "கலாபூஷணம்" என்ற அரிய விருதினை வழங்கியது. சிறு வயதிலிருந்து தனது கல்வியை ஆங்கில மொழிமூலம் கற்றுத் தேர்ந்த காரணத்தினால் இம்மொழியில் ஆழ்ந்த புலமை கொண்டிருந்தார். தனது இளைப்பாறும் காலத்தில் தன்னை நாடி வருபவர்களிடம் இவ் அறிவினை வளர்த்துக் அவாவினை அவர்களுக்கு ஊட்டுவதற்கு முன்னின்று வழிகாட்டியவர்.

தனது வாசிப்புப்பழக்கம் மூலம் இவ் ஆங்கில அறிவினை பலரும். மேலும் மெருகூட்டி கொண்டார். இளவயது தொடக்கம் அரிய நூல்களினை சேகரித்து வைக்கும் பழக்கவழக்கம், இவரை தனது இல்லத்தை ஒரு நூலகமாக உருவாக்க வழிசமைத்தது. பயன்பெறவேண்டுமென்ற உயரிய சிந்தனையில் பொக்கிசமாக சேகரித்த இந்நூல்களினை தான் வடமராட்சியில் உள்ள பல பாடசாலைகளுக்கு வழங்கிய பெருமை இவரினைச் சாரும். தான் வாசிக்கும் நூல்களிலிருந்து சிறுகுறிப்புக்களினை எழுதி வைத்து அவற்றினை பின்னர் மீட்டிப்பார்க்கும் பழக்கவழக்கத்தி னால் அனைத்துத் துறைகளிலும் இவரால் முழுமையான தெளிவான - நுட்பமான அறிவினை ஈட்டமுடிந்தது. தமது ஓய்வு காலத்தில் பல்வேறு சமூகக் கடமைகளிலும், சமயக் கடமைகளிலும் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளத் தவறவில்லை. எளிமை, நேர்மை, அன்பு, பிறர்மீது காட்டும் பாசம், தமது உறவுகளுடனும் அன்பர்களுடனும் இன்முகத்துடன் பழகும் சுபாவம் ஆகிய பண்புகளுடன் கூடியவராக அவர் இன்றும் எம் மனக் கண்முன் தோன்றிக் கொண்டே இருக்கின்றார். அனைவருடனும் அவரவர் தன்மைக்கேற்ப அளவளாவித் திருப்தியடையச் செய்வதில் வல்லவர்.

ஒருவகையில் மனநிறைவு கொண்டவராகவே தமது. இறுதி நாட்களைக் கழித்து எவரும் எதிர்பாராத நிலையில் 29.04.2010 வியாழக்கிழமை அன்று பகல் ஐயாறனின் திருவடி நீழலைச் சென்றடைந்தார். அவரது மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 143. அரியாலை

## கு. பாலசுப்பிரமணியக் குருக்கள்

## (1932 - 1990)

தந்தை: குகநேச சர்மா, தாய்: சாந்த நாயகி அம்மா

தீட்சாகுரு: புத்தூர் வைத்தியநாதக் குருக்கள் (தாய்மாமன்)

மனைவி: நாகேஸ்வரி இணுவில் சிவஸ்ரீ கு. ராமநாதக்குருக்களின் மகள்

ஆரம்பக் கல்வி: ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை

உயர் கல்வி: கனகரத்தினம் மத்திய மகா வித்யாலயம்

கணிதம், ஆங்கிலம் ஆகிய பிரிவுகளில் கற்று சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்யாசாலையில் ஆசிரியப் பணி புரிந்தார். கண்டி தெல்தெணியா பாடசாலையிலும் புங்குடுதீவு பாடசாலையிலும் சில காலம் கல்வி கற்பித்தார். தமிழ் ஆங்கிலம் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் பாண்டித்யம் பெற்றவர். பல ஆலயங்களில் பிரசங்கம் செய்தவர். நல்லை ஆதீனத்தில் சுவாமிநாதத் தம்பிரான் முன்னிலையில் சொற்பொழிவு செய்து பெருமை பெற்றவர்.

அநேகமான பாடசாலைகளில் சிவராத்திரி தினத்தில் சமய தீட்சை வைக்க வேண்டும் என்ற கொள்கையைப் பரப்பி பல மாணவ மாணவிகளுக்கு சமய தீட்சை வைத்தவர்.
அத்துடன் இளவயது முதல் சிகை வளர்த்து வேத சிவாகமக் கல்வியோடும் ஆர்வங் கொண்டு விளங்கினார். இவரது தந்தையாரது பாரம்பரியக் கோவிலான அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோவில் பூசைப் பணிகளையும் செய்துவந்தார் 1967ம் ஆண்டு தாய்மாமன் அவர்களால் சிவாச்சார்ய அபிசேகம் செய்யப்பெற்று முதன்முதலில் இணுவில் செகராச சேகரப் பிள்ளையார் மஹோற்சவத்தை மாமனார் இராமநாதக்குருக்கள் தலைமையில் செய்தார். இலங்கையின் பல பாகங்களிலும் கும்பாபிஷேகம் திருவிழாக்கள் செய்து வந்தார். குறிப்பாகக் காரைநகர் வாரிவளவுப் பிள்ளையார் கோவிலில் சுமார் இருபது வருடங்கள் மகோற்சவக் குருவாக விளங்கினார். நாரந்தனைக் கந்தசாமி கோவில், தான்தோன்றி அம்மன்கோவில், இலந்தைக் கூடல் பிள்ளையார் கோவில், சரவணை முருகன் கோவில், புளியங்கூடல் முத்துமாரி அம்மன்கோவில் போன்ற ஆலயங்களில் மகோற்சவ குருவாக விளங்கினார்.

நல்லூர் பாணன்குளம் அம்மன் கோவில், ஈச்சமோட்டை வைரவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில், கொழும்புத்துறை விநாயகர் கோவில், பாண்டியந்தாழ்வு ஸ்ரீ நரசிம்மவைரவர் கோவில், கொய்யாத் தோட்டம் ஸ்ரீ ஞான செல்வவிநாயகர் கோவில், அரியாலை முத்துமாரி அம்மன் கோவில் போன்ற பல ஆலயங்களில் கும்பாபிஷேகம் செய்துவைத்தார். சில அந்தணர் வீட்டில் வைதிகக் கிரியைகளையும் அவ்வப்போது செய்து வந்தார்.

இணுவில் ராமநாதக் குருக்கள், நயினை ஐ. கைலாசநாதக் குருக்கள், .சுன்னாகம் சோமாஸ்கந்தக் குருக்கள், சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள், சுதுமலை மகேஸ்வரக் குருக்கள், கோப்பாய் பரமசாமிக் குருக்கள் நாயன்மார்கட்டு ஸ்கந்த சாம்பசிவக் குருக்கள், மாதகல் செல்லப்பாக் குருக்கள் போன்ற பலருடன் இணைந்து கும்பாபிஷேக வைபவங்களை நிகழ்த்தியவர். இவ்வாறு ஆலயக் கிரியைகள், இல்லற வைதிகக் கிரியைகள் எனப் பலவகையிலும் ஈடுபாட்டுடன் விளங்கிய குருக்கள் அவர்கள் 58வது வயதில் சிவபதம் அடைந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 144. இசைக்கலைஞர், ஆசிரியர், கவிஞர், பத்திரிகையாளர்,

சுன்னாகம், (பறூளாய், தமிழ்நாடு)

## ப. முத்துக்குமாரசாமி சர்மா (நல்லைக்குமரன்)

(23.08.1932 - 25.06.2019)

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் பிரதம சிவாசாரியராக இருந்த சிவஸ்ரீ ஜெ. பரமசாமிக் குருக்கள் - இரத்தினம்மாள் தம்பதிகளின் மகன். தா. பொன்னம்பலம், வைத்திலிங்கம், நாதஸ்வரக்கலைஞர் சுப்பையாபிள்ளை ஆகியோர் ஆரம்ப இசை ஆசிரியர்கள். இளமையில் நாடகநடிகர், பேச்சாளர், பாடகர் எனப் புகழ்பெற்றார். இசைப்பேரரசு தண்டபாணி தேசிகரின் மாணாக்கர், தஞ்சாவூர் ராமதாஸ், திருப்பாம்புரம் ராஜகோபால், மயிலை வஜ்ரவேல் முதலியார், டி. கே. ரங்காச்சாரி முதலியோரிடம் பாடம் கேட்டவர். அண்ணாமலைப் பல்கலைக்கழக சங்கீத பூஷணம்.

யாழ்ப்பாணப் பாடசாலைகளில் சங்கீத ஆசிரியர். பல மாணாக்கர்களுக்குத் தனியே பாடம் சொன்னவர். இலங்கை வானொலியில் முதலாம் தரக் கலைஞர். நூற்றுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தி வழங்கியிருக்கிறார். நேர்முக வர்ணனைகள் பலவற்றை நடத்திப் பாராட்டுப் பெற்றவர். பண்ணிசை நிகழ்ச்சிகளைத் தரமாக வழங்கி அத்துறையில் தனி முத்திரை பதித்தவர்.

பாடசாலையில் இசைக்கெனக் கண்காட்சி ஒன்றை நடத்தி அனைவரையும் வியக்கவைத்தவர். வாழ்வின் இறுதி அரைப்பகுதியை இந்தியாவில் கழித்தவர். புகழ்பூத்த இசைக்கலைஞர் சுதாரகுநாதன் இவரிடம் சில பாடங்களைக் கேட்டுக்கொண்டவர் என்பது எமக்கெல்லாம் பெருமை.

இவர் சிறந்த ஒரு வாக்கேய காரரும்கூட. நடராஜர் மீது தினம் ஒரு கீர்த்தனை எழுதுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். திருமயிலைக் கற்பகாம்பாள் மீதும் கீர்த்தனைகள் இயற்றியுள்ளார். இவரது மணிவிழாவும், சதாபிஷேகமும் சிதம்பரம் நடராஜர் சந்நிதியிலேயே நடந்தன. இசையருவி, கலையருவி பத்திரிகைகளை ஈழத்திலிருக் கும்போது கலைக்காக நடத்தியவர். நாட்டில் இசை ஏடு என்ற பெயரில் 1995 முதல் 2018 வரை நடத்தினார். எண்பது வயதிலும் பிசிறில்லாத குரலில் கச்சேரிகள் நடத்தியவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம்: 04.12.1961 மனைவி: நளினரஞ்ஜனி (பறாளாய் சண்முகரத்தின சர்மாவின் புதல்வி) குழந்தைகள் மூவர். பிரபல ஓவியர் பத்மவாசன் இவரது மகன்.

தமிழ்நாட்டில் இவருக்குக் கிடைத்த விருதுகள்:
ஏழிசைச் செல்வர், தமிழிசைக் கலாபாரதி, பெரும்பாண நம்பி, கந்தர்வ வித்யாதர, தமிழிசை வேந்தர், தமிழிசை வாருதி, பண்ணிசைக் கலாவித்தகர், மதுரக்குரலோன், மதுரத் தமிழ்வித்தகர். இவைதவிர, கபிலர் விருதும் இறுதியாக 2019இல் நல்லாசான் விருது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 145. பட்டயக் கணக்காளர், மிருதங்கவித்வான், அ. கணேச சர்மா

(12.11.1932 - 06.10.2001)

தமிழும் சைவமும் தழைத்தோங்கும் யாழ்நகரின் மேற்குப் புறத்தின்கண் அமைந்திருக்கும் வட்டுக் கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கலாபூஷணம் பிரம்மஸ்ரீ கணேசசர்மா J. P. அவர்கள்.

கணேசசர்மாவின் பேரர் பிரம்மஸ்ரீ நா. சிவசுப்பிரமணிய சர்மா அவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியவர். இளம் பராயத்திலேயே அவரது புத்திக்கூர்மையை அவதானித்த அவரது தந்தையாரான பிரம்மஸ்ரீ இ. நாகேஸ்வரசமா, அக்காலத்தில் வித்துவானாகத் திகழ்ந்த நெவில் சின்னத்துரை என்பாரிடம் அவரைக் கல்வி கற்க அனுப்பி வைத்தார். சிவசுப்பிரமணிய சர்மா முறையாகத் தமிழைக் கற்றுத் தேறினார்.

சிவசுப்பிரமணிய சர்மா தமிழோடு சமஸ்கிருதத்தையும் துறைதோயக் கற்றார். தமிழ்ப்பண்டிதராக விளங்கிய அவர் சிவபுராணம், கந்தபுராணம் ஆகியவற்றில் ஆழ்ந்த அறிவுடன் திகழ்ந்தார். கல்வி கேள்விகளில் சிறந்து நாவன்மை பூண்டவராக மிளிர்ந்ததால் அவரை எல்லோரும் "நாவன்னா ஐயர்" என அழைக்கத் தொடங்கினர். நாவன்னா ஐயரின் பேரர், (தந்தையின் தந்தை) காசிப கோத்திர வழித்தோன்றலாகிய பிரம்மஸ்ரீ இராமேஸ்வரப்பட்டர், காஞ்சிபுரத்திலிருந்து இறைபணி புரிவதற்காக இலங்கைக்கு வந்தவர்.

நாவன்னா ஐயருக்கு இரு புதல்வர்கள். மூத்த புதல்வரான அனந்த சுப்பிரமணிய சர்மா 1883ல் பிறந்தார். இவரே கணேசசர்மாவின் தந்தையாவார். மற்றவர் முன்னேஸ்வர க்ஷேத்திரத்தின் ஆதீன கர்த்தாவாக விளங்கிய பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் ஆவார்.

அனந்த சுப்பிரமணிய சர்மா வைத்தியம், சோதிடம், மாந்திரீகம் ஆசிய துறைகளில் வல்லவராக இருந்தார். வீட்டில் முன்புறத்தே ஒரு கண்ணகை அம்மன் கோவில் உண்டு. கண்ணகை அம்மனுக்கும் அனந்த சுப்பிரமணிய சர்மாவே பூஜை செய்வார்.

அவருக்குப் புத்திரச் செல்வங்களாக நாகராஜ சர்மா, கண்ணலிங்கேஸ்வர சர்மா, இராமச்சந்திர சர்மா, பாலாம்பிகை, ஆனந்தகணேச சர்மா, மங்களராஜேஸ்வரி அம்மாள், சரோஜினி அம்மாள் ஆகியோர் அமைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12-11-1932ல் பிறந்த கணேச சர்மா, அனந்த சுப்பிரமணிய சர்மாவின் கனிஷ்ட புத்திரராவார். அவர் தனது ஆரம்பக் கல்வியை சுப்பிரமணிய வித்தியா சாலையிலும் சுழிபுரம் விக்டோரியா கல்லூரியிலும் கற்றார், பின்னர் இடைநிலைக் கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்றார். விளையும் பயிரை முளையில் தெரியும் என்பதற்கேற்ப கணேச சர்மா பாடசாலை நாட்களில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் பல பரிசில்களைப் பெற்றார். அக்காலத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியில் இசை நடன ஆசிரியராக C. S.S. மணிபாகவதர் கடமையாற்றிக் கொண்டிருந்தார் கணேச சர்மாவின் மதிநுட்பமும் இசை நடனத்துறையில் அவர் காட்டிய ஆர்வமும் மணிபாகவதரைப் பெரிதும் கவர்ந்தன. கணேச சர்மாவை நெறிப்படுத்த எண்ணிய மணிபாகவதர், தனது பிரசங்கங் களுக்கு பக்கவாத்தியம் வாசிக்கும் மிருதங்க வித்வான் பாலக்காடு கிருஷ்ண ஐயர் அவர்களை கணேச சர்மாவின் வித்தியா குருவாக வரித்து, மிருதங்கம் கற்க ஒழுங்கு செய்தர்,

மணிபாகவதர், கணேச சர்மாவின் மேல் வைத்திருந்த பேரன்பும் பெருமதிப்பும் அளப்பரியது. இதனைக் கவனித்த கணேச சர்மாவின் தந்தையார். மணிபாகவதரையும் பாலக்காடு கிருஷ்ண ஐயரையும் தமது இல்லத்திலேயே தங்கியிருக்கச் செய்தார். மணிபாகவதர், கணேச சர்மாவுக்கும் அவரது இளைய சகோதரிகளான மங்களராஜேஸ்வரி அம்மாள், சரோஜினி அம்மாள் ஆசிய இருவருக்கும் நடனம் பழக்கி அவர்களை அக்கலையில் தேர்ச்சி பெறவைத்தார். அவர்களது நடன நிகழ்ச்சிகளைப் பல இடங்களில் அரங்கேற்றினார்.

மணியாகவதரின் கதாப்பிரசங்கங்களுக்கு கணேச சர்மா மிருதங்கம் வாசிப்பார். அவரது சகோதரர் நாகராஜ சர்மா வயலின் வாசிப்பார். காலப்போக்கில் கணேச சர்மா கெஞ்சிரா வாசிப்பதிலும் வல்லவரானார். சர்மாவின் இல்லத்தில் பாட்டொலியும் சலங்கை ஒலியும் இசைக்கருவிகளின் ஒலிகளும் இயைந்து ஒலிக்கத்தொடங்கின. இல்லம் ஒரு கலைக் கோயிலாயிற்று. மணிபாகவதர் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று கதாகாலேட்சப நிகழ்ச்சிகளை நடத்தியபோது, கணேச சர்மாவும் நாகராஜ சர்மாவும் கூடவே சென்று பக்கவாத்தியம் வாசித்துச் சிறப்பித்தனர். இதன் காரணமாக தமிழ்கூறு நல்லுலகெங்கும் இவர்களது புகழ் பரவியது.

கணேச சர்மா தனது உயர்கல்வியை திருச்சி கிறிஸ்தவக் கல்லூரியில் பெற்று விஞ்ஞானப் பட்டதாரியானார். அதன் பின்னர் "பூரா ஹாத்தி" என்ற நிறுவனத்தில் கணக்காளராகப் பயிற்சியும் அனுபவமும் பெற்றார். இந்தியாவில் இருந்த காலத்தில் மிருதங்கமேதை ஸ்ரீ பழனி சுப்பிரமணியம் பிள்ளையிடம் மிருதங்க வாத்தியத்தின் நுட்பங்களைக் கற்று அதில் சிறப்புத் தேர்ச்சிபெற்றார். இலங்கை திருப்பியதும் A.G. சர்மா பட்டயக் கணக்காளர் நிறுவனத்தை ஸ்தாபித்து நிர்வாகியாகவும் விளங்கி பல்லின மக்களின் நன்மதிப்பைப் பெற்ற நிறுவனமாக அதனை உயர்வடையச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேச சர்மா முன்னேஸ்வரம் பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணிய ஐயரின் சிரேஷ்ட புத்திரி ஸ்ரீ வடிவாம்பிகையைத் திருமணம் செய்து நன்மக்களைப் பெற்றார். தமது பிள்ளைகளான ஆனந்த சுப்பிரமணிய சர்மா, அன்னபூரணி, இராகவ சர்மா, சுவாமிநாதன் சர்மா, லக்ஷ்மீநாராயணன் சர்மா ஆகியோரை கல்வி கேள்விகளில் சிறக்க வைத்து உயர்நிலையை எய்தவைத்தார்.

"செல்வர்க் கழகு செழுங்கினை தாங்குதல்" என்ற முதுமொழிக்கேற்ப, கணேசசர்மா தனது சகோதர சகோதரிகளின் பிள்ளைகளுக்குப் பல உதவிகள் செய்து அவர்களை வாழ்க்கையில் உயர்வடையச் செய்தார். அதே போன்று உற்றோருக்கும் மற்றோருக்கும் பயன்கருதாது வாரி வழங்கினார். பிறருக்கு உதவி செய்வதற்கென்றே இறைவன் இவரைப் படைத்தார் எனப்போற்றுமளவுக்கு கணேச சர்மா ஓர் உதாரண புருஷராக வாழ்ந்தார்.

கலைஞர்களுக்கு இருக்கவேண்டிய சிறந்த பண்புகளில் ஒன்றான குருபக்தி கணேச சர்மாவிடம் அதீதமாக இருந்தது. எப்பொழுதமே தன்னை ஆரம்பகாலத்தில் ஊக்கமளித்து கலைஞனாக வளர்த்தெடுத்த சி. எஸ். எஸ். மணிபாகவதர் அவர்களை அவர் நினைவுகூரத் தவறுவ தில்லை. இலங்கை வானொலி, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகிய ஊடகங்களுக்கு அவர் அளித்த பேட்டிகளில், தனது இசையுலகக் குருவாக சி. எஸ் எஸ். மணிபாகவதர் அவர்களைக் குறிப்பிடத் தவறவில்லை. சி. எஸ். எஸ். மணிபாகவதர் அவர்கள் பிற்காலத்தில் நல்லை நகரில் ஆதீனம் ஒன்றை அமைத்து ஆதீன முதல்வரானார். அப்போது அவர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் என்ற திருநாமம் பெற்றார். கணேச சர்மா அவர்கள் தனது குருவின் நினைவாக, தனது பிள்ளைகளில் ஒருவருக்கு "சுவாமிநாதன்" என்று பெயரிட்டு, தனது குருவை என்றும் நினைவில் நிறுத்திக்கொண்டார்.

பிற கலைஞர்களை மதித்து அவர்களைக் கௌரவிப் பதிலும் கணேச சர்மா ஆர்வங்கொண்டவராக இருந்தார். தனது இல்லத்தில் நடக்கும் சகல சுபகாரியங்களுக்கும் கலைஞர்களை அழைத்து கச்சேரிகள் வைத்து இரசிகர்களை மகிழ்விப்பதோடு அக்கலைஞர்களுக்கு சன்மானம் வழங்கிக் கௌரவித்து மகிழ்ச்சியடைவார். இந்தியாவில் இருந்தும் பல கலைஞர்களை அழைத்து அவர்களைக் கௌரவித்து மகிழ்வித்தார்.

இலங்கை வானொலி, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் முதலாந்தரக் கலைஞராக விளங்கிய கணேச சர்மா, பிறநாட்டு வானொலி நிலையங்களிலும் தொலைக்காட்சி நிலையங்களிலும் தமது மேதைமையைக் காட்டிப் புகழ்பெற்றார். ஐம்பது வருடங்களுக்கு மேலாகக் கலைச்சேவையாற்றிய கணேச சர்மாவின் திறமையை அறிந்த நமது நாட்டு அரசு அவருக்கு "கலாபூஷணம்" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971ல் மதுரை ஆதீனம் 'மிருதங்க பூபதி' என்ற பட்டத்தை வழங்கியது. "நாதமணி", "லய ஞான மணி" ஆகிய பட்டங்களையும் அவர் பெற்றார். கணேச சர்மா ஓர் அகில இலங்கை சமாதான நீதவானாகவும் நி.யமனம் பெற்றார். குலப்பெருமை மிக்க ஒரு குடும்பத்தில் உதித்த கணேச சர்மா, தன் வாழ்நாள் முழுவதும் அக்குலப்பெருமையைத் தனதாக்கி சிறப்புடன் வாழ்ந்த ஒரு பெருமகன் ஆவார். அவரது மகன் பிரம்மஸ்ரீ சுவாமிநாத சர்மா அவர்கள் அவரைப்போலவே பிரபலமான மிருதங்க வித்துவானாகவும் பட்டயக் கணக்காளராகவும் திகழ்கின்றார். அதுமட்டுமல்லாமல், பேரனும் அதேவழியில் பெருமை சேர்க்கும் இளைஞர் என்பதோடு, சுவாமிநாதசர்மாவின் குடும்பமே கலைக்குடும்பமாக உலகப் புகழ்பெற்று விளங்குவது கணேச சர்மா அவர்களுக்குச் செலுத்தும் சிறந்த நன்றிக்கடனாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 146. சி. சிவசரவணபவன் (சிற்பி)

(28.02.1933 - 09.11.2015)

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாண இராச்சியம் தமிழ் மன்னர்களால் ஆளப்பட்டுக் கொண்டிருந்தது. அக்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்திலுள்ள சைவ ஆலயங்களில் சிவப்பணி செய்யத் தமிழ்நாட்டிலிருந்து அந்தணர்களை வருவித்து வாழவைப்பது எமது மன்னர்களின் வழமையாக இருந்தது. இவ்வழமை யின்படி காஞ்சிபுரத்திலிருந்து, யாழ்ப்பாணத் தமிழ்மன்னர் ஒருவரினால் அழைத்துவரப்பட்டவர் பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்த குஞ்சிதபாதபட்டர். அவர் அளவெட்டியிலுள்ள பெருமாக்கடவை எனும் பதியிற் குடியேறிச் சிவப்பணியில் ஈடுபட்டார். அவரின் வழித்தோன்றல்கள் அருகிலுள்ள கந்தரோடையைத் தமது வாழ்விடமாகக் கொண்டனர். குஞ்சிதபாதபட்டரின் பரம்பரையில் வந்தவரே சிவசுப்பிரமணியக் குருக்கள்.

இது போலவே காரைநகரிலுள்ள வியாவில் என்ற இடத்தில் அமைக்கப்பட்ட வியாவில் ஐயனார் கோவிற் பணிகளுக்காக, குளக்கோட்டு மகாராசாவினால் தமிழ் நாட்டின் திருவுத்தரகோசமங்கையிலிருந்து அழைத்து வரப்பட்டவர், மங்களேஸ்வரக் குருக்கள். அவரின் வழித்தோன்றல்களுள் ஒருவரே 'ஈழத்துச் சிதம்பரம்" என அழைக்கப்படும் காரைநகர்ச் சிவன் கோவிலின் புகழ் பூத்த சிவாச்சாரியாராக விளங்கிய கணபதிஸ்வர குருக்கள். கணபதீஸ்வரக்குருக்களின் சிரேஷ்ட புத்திரி சௌந்தராம்பாள்.

சிவசுப்பிரமணியக் குருக்கள் தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்றவர். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கற்றுப் பயிற்றப்பட்ட தமிழாசிரியராக விளங்கியவர். இவர் 26 ஆண்டுகள் ஆசிரியராகவும், 14 ஆண்டுகள் தலைமை ஆசிரியராகவும், 40 ஆண்டுகள் கல்விப் பணி புரிந்தவர். சீரிய முறையில் கல்விப்பணி செய்து முடித்த பின், ஆச்சார்யபிஷேகம் செய்விக்கப்பட்டு இறைபணியைத் தொடர்ந்தவர் இவர். கும்பாபிஷேகங்கள், ஆலய வருடாந்த உற்சவங்கள், உபநயனம். விவாகம் போன்றவற்றை செவ்வனே நடத்தியவர்.

குஞ்சிதபாதபட்டரின் வழிவந்த சிவசுப்பிரமணியக் குருக்களும், மங்களேஸ்வரக் குருக்கள் வழி வந்த சௌந்தராம்பாளும் இல்லறபந்தத்தில் இணைந்துகொண்டனர். இவர்களின் மணவினைப் பேறாகப் பத்துப் பிள்ளைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வங்களைப் பெற்றெடுத்தனர். இத் தம்பதியரின் ஆறாவது மகவாக 28.02.1933 இல் இப் பூவுலகிற் பிரவேசித்தவரே பின்னாளில் "சிற்பி" எனப் பலராலும் அறியப்பட்ட சி. சிவசரவணபவன் ஆவார்.

**கல்வி**

தனது ஆரம்பக் கல்வியைக் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் பெற்றுக் கொண்டார் சிற்பி. எட்டாம் வகுப்புவரை தமிழ்க்கந்தையா வித்தியா சாலையிலே தமிழ்மொழி மூலம் கல்வியைத் தொடர்ந்தார். இதன் பின்னர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்று, சிரேஷ்ட தராதரப் பத்திரத் தேர்வில் சித்தியடைந்தார். அதன்பின் கொழும்பிலுள்ள உயர்நீதிமன்றப் பதிவாளர் அலுவலகத்டதில் எழுதுவினைஞராகக் கடமையாற்றினார். பணி புரிந்து கொண்டே இலண்டன் பல்கலைக்கழக இன்டர் ஆர்ட்ஸ் பரீட்சையில் சித்தியடைந்தார். அதனைத் தொடர்ந்து எழுதுவினைஞர் வேலையை விட்டு ஆசிரியப்பணியில் இணைந்து கொண்டார்.

சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் 1953 ஆம் ஆண்டு பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் நோக்கில் இணைந்து கொண்டார். பட்டதாரி மாணவனாக இருந்தபோது மிகச்சிறந்த மாணவனாக மிளிர்ந்து, தமிழ்ப்பாடத்திற்கான இராஜா சேதுபதி தங்கப்பதக்கத்தையும், ஆங்கிலப் பாடத்திற்காக ஸ்கின்னர் தங்கப்பதக்கத்தையும் சரித்திர பாடத்திற்காக மற்றொரு தங்கப்பதக்கத்தையும் பெற்று ஈழத்துக்குப் பெருமை சேர்த்தவர். சென்னைப் பல்கலைக்கழகக் கலை இளமாணி (B.A) பட்டத்தைப் பெற்று வெளியேறி 1955 ஆம் ஆண்டு பட்டதாரி ஆசிரியரானார். இதன் பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தில், பட்டப்படிப்பின் பின்னரான கல்வியியல் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்திசெய்தார். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வியியற் கலை முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார்.

**கல்விப்பணி**

சிற்பி அவர்கள் 28 வருடங்கள் ஆசிரியராகவும், அதன்பின் 12 வருடங்கள் அதிபராகவும் கடமையாற்றினார். மானிப்பாய் இந்துக்கல்லூரி, செங்குந்தா இந்துக்கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், பண்டாரவளை புனித சூசையப்பர் கல்லூரி உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், ஆகிய இடங்களில் ஆசிரியராகவும், உசன் இராமன் மகாவித்தியாலயம், யாழ். வண்ணை. வைத்தீஸ்வராக் கல்லூரி என்பவற்றில் அதிபராகவும் இவரது கல்விப்பணி அமைந்திருந்தது. இவர் தமது பதவிக்காலத்தில் மேடைப்பேச்சு, கட்டுரை, நாடகங்கள், பிற இலக்கிய முயற்சிகள் என்பவற்றில் மாணவர்கள் திறமைபெறுவதற்கான களங்களை உருவாக்கிக் கொடுப்பார். யாழ்ப்பாணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பிரபல கல்லூரிகள் தமது வருடாந்த சஞ்சிகைகளை வெளியிடச் சிரமப்பட்ட காலத்தில், செங்குந்தா இந்துக் கல்லூரியிலிருந்து சுடரொளி எனும் பாடசாலைச் சஞ்சிகையை ஏழு ஆண்டுகள் தொடர்ந்து வெளிவரக் காரணமாக இருந்தார்.

பின்னர் தென்மராட்சியிலுள்ள உசன் இராமநாத மகா வித்தியாலயத்திற் பணி புரிந்தபோது தனது குடும்பத்தாருடன் அக்கிராமத்திலேயே வாழ்ந்து அங்குள்ள மக்களில் ஒருவராகவே மாறிப் பனிசெய்தார். கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள், இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் என எல்லாச் செயற்பாடுகளிலும் பாடசாலை உச்ச நிலையை அடையப்பாடுபட்டார். இக் காலத்தில், "இளந்தளிர்' என்ற இதழை வெளியிட்டார். தென்மராட்சியைச் சேர்ந்த பாடசாலை ஒன்றிலிருந்து முதன் முதலில் அச்சில் வெளியான மாணவர் சஞ்சிகை "இளந்தளிர்'தான்.

வைத்தீஸ்வராக் கல்லூரி பவளவிழாக் கண்டபோது அதன் அதிபராகவிருந்தவர் இவர். பவள விழா நிகழ்வுகள் மூன்று நாட்கள் நடைபெற்றன. அந்நிகழ்வுகள் ஒழுங்கமைக் கப்பட்ட விதத்தினையும், நேர்த்தியையும் விதந்துரைக்காதோர் இலர். வைத்தீஸ்வராக் கல்லூரியின் புகழ் பூத்த அதிபர் அமரர் அம்பிகைபாகனுக்குப் பிறகு "சிற்பி ஐயா"வின் காலமே கல்லூரியின் பொற்காலம் ஆகும்.

இவருடைய கற்பித்தற் திறனை வியக்காத, நயக்காத மாணவர்கள் இலர் என்றே கூறலாம். தமிழ், ஆங்கிலம், வரலாறு ஆகிய மூன்று பாடங்களையும் எளிமையாகவும், இலகுவாகவும், மாணவர் மனத்தில் பதியும்படி கற்பிப்பது இவரது தனிச்சிறப்பு. எவ்விதமான பாடக் குறிப்புகளும் இன்றி, மடைதிறந்த வெள்ளம்போல ஆற்றொழுக்காகப் பேசி, மிக முக்கியமான எண்ணக் கருக்களைமட்டும் கரும்பலகையில் எழுதி, மிகத் தேவையான குறிப்புக்களை மட்டும் எழுதச் சொல்லும் இவரின் கற்பித்தற் பாங்கினை இன்றளவும் நினைவில் இருத்தியுள்ளனர் அவர்தம் மாணாக்கர்கள்.

### இலக்கிய உலகில்

தமிழிலும், வடமொழியிலும் பாண்டித்தியம் பெற்றி ருந்த இவரது தந்தையாரின் நூலகத்திலிருந்த பழந்தமிழ் இலக்கியப் புத்தகங்கள், அவர் கிரமமாக வாங்கிவரும் "ஈழகேசரி", "இந்து சாதனம்", "கலைமகள்" என்பவை இளம் சிவசரவணபவனின் வாசிப்பார்வத்திற்கும், இலக்கிய ஈடுபாட்டிற்கும் முதற் காரணங்களாக அமைத்திருந்தன.

பின்நாளில் "மெய்யியற் கலாநிதி" எனப் பட்டமளித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் கௌரவிக்கப்பட்ட, நடமாடும் சைவத் தமிழ்க் கலைக் களஞ்சியமெனப் போற்றப்பட்ட இவரது தாய்மாமன் வைத்தீஸ்வரக்குருக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிய கட்டுரைகள், வாசித்த தமிழ்ப் புத்தகங்கள் என்பனவும் இளைய சிவசரவணபவனின் இலக்கியப் பசிக்குத் தீனியாயின.

மகாகவி பாரதியாரின் கவிதைகளை இவருக்கு அறிமுகப்படுத்தியதோடு, பாடசாலையில் இரண்டு வாரங்களுக்கொருமுறை கையெழுத்துப் பிரதியாக வெளிவந்த "மாணவர் போதினி" என்ற சஞ்சிகையிலும் இவரது ஆக்கங்களை இடம்பெறச்செய்த, தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஆசிரியர் திரு. சி. பொன்னம்பலம் (ஆதவன்), ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இவர் எழுதிய கட்டுரைகளை ஏனைய மாணவர்களுக்கு முன்னுதாரணமான கட்டுரைகள் எனச் சிலாகித்து வாசித்துக் காட்டிய வித்துவான் சி. ஆறுமுகம் என்போர் இவரை எழுதத் தூண்டிய பெருமக்கள் ஆவர். வித்துவான் சி. ஆறுமுகம் அவர்கள் அளித்த உற்சாகத்தில், "ஈழகேசரி" பத்திரிகைக்கு இவரால் எழுதி அனுப்பப்பட்ட ஆசிரியப்பா பத்திரிகையின் பாலர் பகுதியில் பிரசுரமானதும், "பழம் பண்பைப் பகிர்வதிற் பயனில்லை" என்ற கட்டுரை "சுதந்திரன்" இதழில் பிரசுரமானதும், "ஸ்கந்தா" என்ற கல்லூரிச் சஞ்சிகையில் இவர் எழுதிய "இளைஞர் கடன்" என்ற கட்டுரை இடம் பெற்றதும் இவரது எழுத்து முயற்சிகளுக்கு உற்சாகம் தருபவையாக அமைந்தன.

கொழும்பில் உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவல கத்தில் பணிபுரிந்த காலத்தில் "மலர்ந்த காதல்" (1952) என்ற இவரது முதற் சிறுகதை சுதந்திரன் பத்திரிகையில் பிரசுரமானதும், "மாணிக்கம்" என்ற சிறுகதை இலங்கை வானொலியில் ஒலிபரப்புக்காக ஏற்றுக் கொள்ளப்பட்டதும், அதே கதை "ஏழையின் இதயம்" என்ற தலைப்பில் வீரகேசரியில் பிரசுரமானதும், சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியின் சேலையூர் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்றபோது சேலையூர் தமிழ் மன்ற வருடாந்த சஞ்சிகையான "இளந் தமிழன்" சஞ்சிகைக்கு இவர் இதழாசிரியரானதும் இவர் ஆக்க இலக்கியத் துறையிலும், இதழியல் துறையிலும் தடம் பதிக்கக் காரணங்களாயின.

அவரது இலக்கியப் பயணத்தின்போது எழுபது சிறுகதைகளையும், மூன்று நாவல்களையும் (உனக்காகக் கண்ணே", "அன்பின் குரல்", "சிந்தனைக் கண்ணீர்") ஏராளமான கட்டுரைகளையும், பல கவிதைகளையும் படைத்துள்ளார். இவரது தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள் 'நிலவும் நினைவும்" (1964), "சத்திய தரிசனம் (2001), "நினைவுகள் மடிவதில்லை" (2008) ஆகிய தொகுதிகளாகத் தொகுத்து வெளியிடப்பட்டன. 'உனக்காக் கண்ணே" என்ற நாவலும் நூலுருப் பெற்றுள்ளது.

**இலக்கிய நோக்கு**

இலக்கியத்தின் மூலம் நல்ல எண்ணங்களையும், தூய உணர்ச்சிகளையும் வாசகருள்ளத்தே கிளர்ந்தெழச் செய்ய முடியும். சுதந்திரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபீட்சம், சமத்துவம் ஆகியவை ஈட்டப்பட்டவுடன் அதுவும் வன்முறைப் புரட்சியினால் ஈட்டப்பட்டவுடன், மனித மனம் நிறைவு பெற்று விடும் என்று சொல்லமுடியாது. "செல்வம் என்பது சிந்தனையின் நிறைவே" என்பதை நினைவிலிருத்தி, மனிதனுடைய அகத்தைச் செம்மைப்படுத்துவதன் வாயிலாக, அவனுடைய புறத்தையும் மேம்படச் செய்வதே இலக்கி யமாகும்" என்ற அவருடைய கூற்று அவரது இலக்கிய நோக்கைப் பிரதிபலிப்பதாகும்.

## கலைச்செல்விக் காலம்

ஒரு படைப்பாளியாக இவரின் இலக்கியப் பணிகளுக்கு அப்பால், ஓர் இதழாசிரியராக, மற்றைய படைப்பாளிகளின் படைப்புத்திறனை வெளிக் கொணரக் களமமைத்துக் கொடுத்த இவரது பணி அனைவராலும் சிலாகிக்கப்பட்டு வருகிறது.

எட்டு ஆண்டு காலம், 1958 இலிருந்து 1966 வரை கலைச்செல்வியை (71 இதழ்கள்) வெளியிட்டார். கலைச் செல்வியின் ஒரே ஒரு நோக்கம் ஈழத்து இலக்கிய வளர்ச்சி எனக் கருதிய "சிற்பி" அவர்கள், காத்திரமான இலக்கியக் கருத்துப் பரிமாற்றத்திற்கு கலைச்செல்வி வழி சமைத்துக் கொடுத்தது என்பதில் பெருமையுற்றிருந்தார். புதிய எழுத்தாளர் தலைமுறையொன்றைக் கலைச்செல்வி உருவாக்கியது என்று போற்றப்படும்போது "வளரும் எழுத்தாளர்களின் திறமையை இனங்கண்டு ஆதரித்தமையும், வளர்ச்சிக்கு வாய்ப்பளித் தமையுமே கலைச் செல்வியின் பங்களிப்பாக இருந்தன" எனத் தன்னடக்கத்தோடு கூறுவார்.

ஈழத்து தமிழ் இலக்கிய, இதழியல் துறைகளில் பிரகாசித்த செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், செ. யோகநாதன். யாழ். நங்கை, கவிஞர் ச.வே. பஞ்சாட்சரம், பெனடிக்ற் பாலன், ஐ. சாந்தன், கல்வயல் வே. குமாரசாமி, மயிலன், பொ. சண்முகநாதன், மு. பொன்னம்பலம், தி. ஞானசேகரன், மு. கனகராஜன், பா. சத்தியசீலன், தெணியான், மட்டுவிலான், கவிதா, பாமா ராஜகோபால், மு. வ. கானமயில்நாதன், து. வைத்தி லிங்கம், வி. க. இரத்தின சபாபதி, இளையவன், கெ. கதிர்காமநாதன், முனியப்பதாசன், க. பரராஜசிங்கம் (துருவன்) கலா. பரமேஸ்வரன், மணியம், முகிலன், பெரி. சண்முகநாதன் ஆகியோர் வளரும் எழுத்தாளர்களாகக் கலைச் செல்வியில் வாய்ப்பளிக்கப்பட்டுத் தமது திறமைகளை வெளிப்படுத்தியவர்கள்.

"கலைச் செல்விக் காலம்" குறித்த "சிற்பி" அவர்களின் பதிவு "ஞானம்" பத்திரிகையில் ஜூன் 2008இல் இருந்து தொடராக வெளிவந்தது.

## ஓய்வு நிலை வாழ்க்கை

நாற்பதாண்டு கால ஆசிரியப் பணியிலிருந்து 1991ஆம் ஆண்டு "ஓய்வு" பெற்றபோதும், அவர் உடல் நலக் குறைவால் வருந்திய கடைசி ஆறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்கள் தவிர, இறுதிவரையும். அவர் ஓய்வொழிச்சலின்றித் தொழிற்பட்டார். இக் காலப் பகுதியில் அவர் ஒரு "பிதாமகர்" ஆக "மூதறிஞர்" ஆக தனது வகிபாகத்தை ஆற்றினார். தனது ஆங்கில அறிவை வளர்ந்த, தொழில்புரியும், பல்கலைக் கழக மாணவர் களாயிருக்கும், அனைத்துத் திறத்தவருக்கும் இல்லையெனாது வழங்கினார். இலக்கிய உலகத்தைச் சேர்ந்தவர்கள், இளம் ஆய்வாளர்கள், சமய ஆர்வலர்கள் என அனைவருக்கும் தேவையான ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் அவர்கள் கோரும்போது வழங்கிவந்தார். விழாக்களிலும், நிகழ்வுகளிலும் பங்கேற்றுத் தனது கணீரென்ற குரலினால் உரையாற்றி, ஆழமான கருத்துக்களைப் பகிர்ந்து, கருத்துருவாக்கத்தில் ஈடுபட்டார். அரசியற் தலைவர்களை நேரிலும், கடிதமூலமும் தொடர்புகொண்டு மிகுதிக்கண் மேற்சென்று இடித்து, சாதாரண மக்களின் உள்ளக் கிடக்கையைத் தெரிவித்துவந்தார். அவரது குடும்பத்தினருக்கு ஒரு பிதாமகராகத் தேவையான ஆற்றுப்படுத்தல்களை மேற்கொண்டார். 'இந்து சாதனம்' பத்திரிகை ஆசிரியராகவும் சில காலம் பணிபுரிந்து திருப்திகண்டார்.

குடும்பநிலை

அவரது இல்லறத்துணையாகிய திருமதி. சி. சரஸ்வதி அவர்களோடு மிகவும் தோழமையுடன் பழகும் அவர், இலக்கியம், சமூகம், அரசியல், குடும்ப விவகாரங்கள் என அனைத்திலும் அவரோடு உரையாடலை மேற்கொள்வார். தமது பிள்ளைகளோடும் மிக நட்பார்ந்த முறையில் பழகும் அவர், உலக விடயங்கள் தொடர்பான அவர்களது தேடலை ஆழப்படுத்தும் வகையில் கருத்துக்களைப் பகிர்ந்துவருவார்.

இவருடைய மூத்த மகன் சி. சுந்தரேஸ்வரன், ஹட்டன் நஷனல் வங்கியில் முகாமையாளராகவுள்ளார். இரண்டாவது மகன் சி. சாயீஸ்வரன் சத்திர சிகிச்சைநிபுணராக கடமையாற்றி வருகிறார். இவரது இளைய மகன் சி. சர்வேஸ்வரன், ஒரு பொறியியலாளர்.

நிறைவு நாட்கள்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த" சிற்பி ஐயா எனும் சிவசரவணபவச் செம்மல் 09.11.2015 ஐப்பசித் திரயோதசித் திதியில் அமைதியாகத் தில்லைக்கூத்தனின் பாத கமலங்களைச் சென்றடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 147. நா. சோமகாந்தன்

(20ஆம் நூற்றாண்டு நடுப்பகுதி)

(12.01.1934 - 28-04-2006)

இவர் யாழ்ப்பாணம் கரணவாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரின் பெற்றோர் நாகேந்திரக்குருக்கள், செல்லம்மாள். பாதராயண கோத்திரத்தைச் சேர்ந்தவர். 14-01-1934இல் பிறந்தவர். கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும் தெல்லிப்பளை மகாஜனா கல்லூரியிலும் கற்றவர். தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் புலமைபெற்ற இவர் சிறந்த எழுத்தாளராக விளங்கியவர். அரசபணியில் உயர்பதவி வகித்தவர். பல கட்டுரைகள், சிறுகதைகள், நாவல்கள் எழுதியுள்ளார். நாவலர் சபையில் முக்கிய பொறுப்பிலிருந்தார். ஆறுமுக நாவலர் மகாநாட்டு மலர் (1969) உட்படப் பல வெளியீடுகளுக்கு ஆசிரியராகவும் இருந்துள்ளார். இவரது மனைவி பத்மா சோமகாந்தனும் சிறந்த ஒரு எழுத்தாளராவார்.

சுதந்திரன், கலைச்செல்வி ஆகியவற்றின் மூலம் இலக்கிய உலகில் காலகோள் கொண்ட சோமகாந்தனின் ஆரம்பகாலச் செயற்பாடுகளாக எழுத்தாளர்களை அறிமுகப்படுத்துதல், காரசாரமான இலக்கியக் குறிப்புகளை எழுதுதல் போன்றவை அமைந்தன. 1960களில் 100க்கு மேற்பட்ட எழுத்தாளர், கலைஞர்களை சுதந்திரன் மூலமாக அவர் அறிமுகம் செய்து வைத்தார். அறுபதுகளின் ஆரம்பத்தில் அவர் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இணைந்து கொண்டார். 1964இல் இ.மு.எ.ச.வின் தேசிய அமைப்பாளர் ஆனார். நாவலர்விழா (1963), யாழ்ப்பாணத்தில் இ.மு.எ.ச. நடத்திய இரண்டாவது மாநாடு, பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடந்த தமிழ் - சிங்கள எழுத்தாளர் தேசிய ஒருமைப்பாட்டு மாநாடு (1975), 1982-83 காலப்பகுதியில் மகாகவி பாரதி நூற்றாண்டுவிழா, 1987இல் தேசிய இனப்பிரச்சனையில் இ.மு.எ.ச. நிலைப்பாட்டை விளக்கும் மகாநாடு ஆகியவற்றை சிறப்பாக நடத்துவதில் சோமகாந்தன் முன்னின்று உழைத்தார். 1969இல் நடைபெற்ற நாவலர் மகாநாடு, நல்லூரிலே நாவலர் சிலைநிறுவுதல், நாவலர் மாநாட்டு மலர் வெளியிடல் என்பன சோமகாந்தனின் உழைப்பின் வெளிப்பாடு.

அறுபதுகளின் முற்பகுதியில் சென்னையில் நடந்த அனைத்திந்திய எழுத்தாளர் மகாநாட்டில் இலங்கை இ.மு.எ.ச. பிரதிநிதிகளாக சோமகாந்தனும் திருமதி பத்மா சோமகாந்தனும் அங்கு சென்று உரையாற்றினார்கள். தமிழகத்திற்கு அடிக்கடி இலக்கியப் பயணம் மேற்கொண்டு அங்குள்ள எழுத்தாளர்களை இங்கு அழைத்துவந்து கலை இலக்கிய நிகழ்வுகளில் பங்குபற்ற வைப்பதோடு நம்நாட்டு இலக்கிய கர்த்தாக்களை அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகம்செய்து தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் இலக்கியப் பாலமாக விளங்கினார் சோமகாந்தன்.

தமிழகத்திலிருந்து வருகை தந்த சிதம்பர ரகுநாதன், விஜய பாஸ்கரன், ராஜம் கிருஷ்ணன், பேராசிரியர் இராமகிருஷ்ணன், கோமல் சுவாமிநாதன், வாசந்தி, பொன்னீலன், வல்லிக்கண்ணன், தாமரை மகேந்திரன், பேராசிரியர் நமசிவாயம், புனிதா ஏகாம்பரன், ருக்மணி, சாரதா நம்பியாரூரன் என சோமகாந்தன் தம்பதியர் தமது இல்லத்தில் விருந்தளித்து மகிழ்ந்த பட்டியல் நீளும்.

1996ஜுலை 5,6,7ஆம் திகதிகளில் கொழும்பில் இ.மு.எ.ச. நடத்திய இலக்கியப் பெருவிழாவில் பொன்னீலன், தாமரை மகேந்திரன், வல்லிக்கண்ணன் ஆகியோரை பங்குகொள்ளச்செய்து அவ்விழாவினைச் சிறப்பாக நடத்திய பெருமை சோமகாந்தனுக்கு உரியது.

1990இல் சின்மயமிஷன் ஆன்மீக இயக்கத்தில் இணைந்து அவ்வியக்கத்தின் உதவிப் பொதுச் செயலாளரானார். சின்மயமிஷன் வெளியிட்டுவரும் 'வொய்ஸ் ஓவ் சின்மயா' காலாண்டிதழின் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றினார்.

சோமகாந்தனின் நூல்களாக ஆகுதி (சிறுகதைத் தொகுதி 1984) விடிவெள்ளி பூத்தது (நாவல் 1987) ஈழத்து இலக்கியம் பல்துறைநோக்கு (கட்டுரைகள் - 1997) தத்துவச்சித்திரம் (வானொலி உரைகள் 1993) சிரிக்கும் கோடையில் சிலிர்க்கும் பனிநாடு (பயண இலக்கியம் 1993) நிகழ்வுகளும் நினைவுகளும் (பத்தி இலக்கியம் 2001) ஈழத் தமிழர்க்கு ஏன் இந்த வேட்கை? (அரசியல் 2003) ஆகியவை வெளிவந்துள்ளன.

எழுத்தாளர் சோமகாந்தனின் மணிவிழா 21.12.1996இல் திரு. தெ. ஈஸ்வரன் அவர்களின் தலைமையில் மிகவும் கோலாகலமாகக் கொழும்பில் நடைபெற்றது. 'சோமகாந்தம்' என்ற மணிவிழா மலரும் திரு. ஸ்ரீதரசிங் அவர்களால் தொகுத்து வெளியிடப்பட்டது. சோமகாந்தனின் இலக்கியப் பணிகளைப் பாராட்டி, இலக்கியக் குரிசில்(1993), தமிழ்மாமணி(1994), தமிழ்ஒளி(1994) ஆகிய பட்டங்கள் இலக்கிய நிறுவனங்களால் வழங்கப்பெற்றன. மல்லிகை சஞ்சிகை தனது 1989 ஏப்ரல் இதழ் அட்டையில் இவரது படத்தைப் பொறித்து கட்டுரை வெளியிட்டுக் கௌரவித்தது. இலங்கை அரசினால் 2005ஆம் ஆண்டில் 'கலாபூஷணம்' பட்டம் வழங்கப்பட்டது.

திரு. சோமகாந்தன் 28-04-2006 அன்று அமரரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 148. ஏழு தசாப்தகாலம் தனது ஓயாத எழுத்துக்களால் ஈழுந்து இலக்கிய உலகை வளம்படுத்திய திருமதி பத்மா சோமகாந்தன்

05-03-1934 - 15.07.2020

தனது பதினேழாவது வயதில் எழுதத் தொடங்கி எண்பத்தாறு வயதுவரை தனது இறுதிக்காமவரை ஓயாது எழுதித் தமது எழுத்துக்களால் ஈழத்து இலக்கிய உலகை வளம்பத்தியவர் திருமதி பத்மா சோம்காந்தன்.

பத்மா சோமகாந்தன் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் 05-03-1934 அன்று ஓர் அந்தணர் குடும்பத்தில் பிறந்தவர். இவர் சிரேஷ்ட தராதர வகுப்பில் படிக்கும்போது எஸ். டீ. சிவநாயகத்தை ஆசிரியராகக்கொண்ட சுதந்திரன் பத்திரிகை 1951இல் நடத்திய சிறுகதைப் போட்டியில் "இரத்தபாசம்" என்ற கதைக்கு முதற்பரிசு பெற்றதன்மூலம் இலக்கியவுலகில் பிரவேசித்தவர். அமரராவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் மார்ச்மாத ஞானம் இதழில் எழுதிய "பெண்களின் சமத்துவத்தை வலியறுத்தும் மகளிர் தினம்'' என்ற கட்டுரையே கடைசியாக இவர் எழுதிய கட்டுரையாகும்.

மாணவப் பருவத்திலேயே பத்மா சிறந்த மேடைப் பேச்சைளராகத் திகழ்ந்தவர். தமிழரசுக்கட்சியின் மேடைகளில் பேசியிருக்கிறார். இப்படி இவரது மேடைப்பேச்சைக் கேட்கவந்து அறிமுகமானவர்தான் இவரது கணவரான சோமகாந்தன், இவர், ஆசிரிய நியமனம் பெற்று பின்னர் ஆசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியராகத் தொழிற்தகைமையைப் பெற்றுக் கொண்டார். ஆசிரியையாகத் தமது தொழிலை ஆரம்பித்த திருமதி பத்மா முதலாம்தர அதிபராகப் பணிபுரிந்து உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வுபெற்று ஓய்வுபெற்றவர்.

பல சிறுகதைகளும் அதேசமயம் ஏராளமான கட்டுரைகளும் எழுதியிருக்கும் திருமதி பத்மா சோமகாந்தள்,
தினக்குரல் ஞாயிறு இதழில் நூற்றுக்கும் மேற்பட்ட சாதனைப்பெண்கள் பற்றியும், கலைக்கேசரியில் 75இற்கும்
மேற்பட்ட இசைவல்லுனர்களையும் பற்றி எழதியிருப்பவர்.

கடவுளின் பூக்கள், வேள்ளி மலர்கள், புதிய வார்ப்புகள், கரும்பலகைக் காப்பியங்கள், இற்றைத்திங்கள் முதலான சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டிருக்கும் இவர், இந்நூல்களுக்காக தமிழ்நாடு லில்லி தேவசிகாமணி பரிசு, சென்னை இந்து நாளிதழின் பாராட்டு, சார்க் மகளிர் சங்கத்தின் பரிசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

,வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சின் சாகித்தியப் பரிசு ஆகியனவற்றைப் பெற்றிருப்பவர்.

இவைதவிர ஈழத்து மாண்புறு மகளிர் பற்றிய நூலை 2002இல் எழுதி வெளியீட்டுள்ளார். ஈழத்து தமிழ்ப்பெண் ஆளுமைகள் என்ற நூலையும் வெளியிட்டிருக்கிறார். சிறுவர்களுக்கான அனுமான் கதை என்ற நூலையும் தந்திருக்கிறார். உலகப் புகழ்பெற்ற சுவாமி சின்மயானந்தரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கிறார். திருமதி பத்மா ஒரு பெண்ணியச் சிந்தனையாளர். பெண்ணின் குரல் சஞ்சிகைக்கு ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.

ஊடகத்துறையில் கடமையாற்றும் பெண்களின் ஆளுமையை வலுப்படுத்தவும் அவர்களின் நன்மைகளைக் கவனிப்பதற்குமாக இயங்கிய "ஊடறு" என்ற அமைப்புக்குத் தலைமைதாங்கி சிலகாலம் வழிநடத்தியுள்ளார். திருமதி பத்மா ஆங்கிலத்திலும் எழுதும் திறன்வாய்ந்தவர். உலகெங்கும் பரவிவாழும் தமிழ் மக்களின் பிள்ளைகள் தமிழ்ப் பண்பாட்டையும் சமய நெறிகளையுமாவது தெரிந்திருக்க வேண்டும் எனக்கருதி அவர்களுக்காக Stories from Hindu Mythology என்ற நூலை எழுதியிருக்கிறார்.

இவரது கணவன் திரு. சோமகாந்தன் அரசபணியில் உயர்பதவி வகித்தவர். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் இயங்கு சக்தியாக இருந்தவர்களில் முக்கியமானவர். திருமதி பத்மா கணவரது இலக்கியச் செயற்பாடுகளுக்கெல்லாம் உற்ற துணையாக இருந்தவர், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முக்கிய பெண் ஆளுமையாக இயங்கியவர். இவர் இருபது ஆண்டுகளுக்கு மேலாக கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நிர்வாகசபை உறுப்பினராக விளங்கி, பல்வேறு கலை இலக்கியச் செயற்பாடுகளுக்கும் சமூகச் செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக இருந்தவர்.

பிற்பட்ட காலத்தில் இவர் கொடகே நிறுவனத்துடன் இணைந்து சிங்கள், தமிழ் இன ஒற்றுமைக்கான இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டுவந்தார், 2019ஆம் ஆண்டில் கொடகே வாழ்நாள் சாதனையாளர் விருது இவருக்கு வழங்கப்பெற்றது. 15.07.2020இல் இவர் அமரரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 149. கதிர். செல்லப்பாக்குருக்கள்
(26.06.1935 - 30.08.2002)

அறிமுகம்

காசிப கோத்திரத்திலே சிவஸ்ரீ. செ. கதிரவேற்குருக்கள் தந்தையாகவும் ஸ்ரீமதி க. தங்கம்மாள் தாயாகவும் 26.06.1935 இல் திகதியில் மாதகல் கிராமத்தில் சிவஸ்ரீ செல்லப்பாக் குருக்கள் பிறந்தார்.

மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாசாலையில் பாடசாலைக் கல்வியைப்பெற்றார். தந்தையை குருவாகக் கொண்டு வேதம், ஆகமம், வைதீகம் முதலியவற்றை ஐயம் திரிபறக் கற்றார். பதினோராவது அகவையில் இராமேஸ்வரம் கைலாச கனபாடிகள், பத்மநாப கனபாடிகள் குருவாயிருந்து உபநயனம் செய்து வைத்தனர். இருபத்தோராவது வயதில் பொன்னையாக் குருக்கள் அவர்கள் குருவாயிருந்து ஆச்சார்யாபிஷேகம் செய்து வைத்தார்.

நித்திய பூஜை கிரியை பணிகள்

1. மாதகல் நுணசை முருகன் தேவஸ்தானம்
2. மாதகல் அரசடி விநாயகர் தேவஸ்தானம்
3. மாதகல் பாணாவெட்டி புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானம்

புரோகிதப்பணிகள்

மாதகல் கிராம மக்களின் மத்தியில் உன்னத மதிப்பு மரியாதையுள்ள குருக்கள் கிராம மக்களின் இல்லங்களில் நடைபெறும் கிருகப் பிரவேசம், திருமணம், ருதுசோபனம், ஆசௌசகழிவு, சிராத்த திதிகள் என சகல சமய நிகழ்வுகளையும் முறைதவறாது செய்து பிரபலமடைந்தார்.

பிராமணச் சிறார்கள் அறுபதுக்கு மேற்பட்டவர்களுக்கு உபநயனமும், எழுபத்தைந்துக்கு மேற்பட்டவர்களுக்கு ஆச்சார்யாபிஷேகமும் செய்து வைத்தார். அந்தணர்களின் இல்லங்களில் நடைபெறும் பூர்வ, அபரக் கிரியைகளையும் முறைப்படி செய்து வந்தார். சைவ சமயக் குழந்தைகளுக்கு சமயதீட்சை வழங்கி தீட்சாகுருவாகத் திகழ்ந்தார்.

கும்பாபிஷேகம், மகோற்சவம் முதலானவற்றில் இவருடனிணைந்து குருத்துவப் பணி செய்த குருமார்கள் பலர். நயினைக் குருமணி கைலாசநாதக் குருக்கள், வியாகரணசிரோமணி சீதாராம சாஸ்திரிகள், நல்லை குருபீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்பசிவ சிவாச்சாரியார், கோப்பாய் சித்தாந்தபானு சுப்பிரமணியக்குருக்கள், இணுவைக்குருமணி இராமநாதக் குருக்கள், நயினை சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள், ஊரெழு பால. வைத்தியநாதக்குருக்கள், நவாலியூர் சாமி விஸ்வநாதக்குருக்கள், சுன்னாகம் கலாநிதி சோமாஸ்கந்தக் குருக்கள், அரியாலையூர் வித்வஜோதி சிவசுப்பிரமணியக் குருக்கள், கோப்பாய்க் குருமணி பரமசாமிக்குருக்கள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

**இல்லறவாழ்வு**

வதிரி தியாகராஜக்குருக்கள் புத்திரி தவமணி அம்மா ஆகிய தமது சொந்த மைத்துனியைத் தமது இருபதாவது வயதில் மணம் செய்தார். மூன்று ஆண் பிள்ளைகளையும் மூன்று பெண் பிள்ளைகளையும் கொண்ட குடும்பமாக உரிய கல்வி கேள்விகளை வழங்கி பிள்ளைகளின் குருத்துவத்திலும், மணவாழ்விலும் தந்தைக்குரிய கடமைகளை நிறைவு செய்தார்.

**வெளிமாவட்டங்களில் கும்பாபிஷேகம் செய்த சில ஆலயங்கள்**

காலி சிவன் கோவில், கொழும்பு கப்பித்தாவத்தை பிள்ளையார் கோவில், கொழும்பு கொட்டாஞ்சேனை மாரியம்மன கோவில், நீர்கொழும்பு பிள்ளையார் கோவில் கண்டி கட்டுகஸ்தோட்டை பிள்ளையார் கோவில், மாத்தறை முத்துமாரியம்மன் கோவில், அம்பாந்தோட்டை பிள்ளையார் கோவில், திருகோணமலை காளி அம்மன் கோவில், மட்டக்களப்பு தான்தோன்றிஸ்வரர் கோவில்

**திறன்கள்**

ஜோதிடம், புராணபடனம், புராணங்களுக்கு உரையாசிரியர், சங்கீத ஞானம், நினைத்தகாரியம் கூறுதல், திருமுறை ஓதல், சொற்பொழிவு, சமயதீட்சை, வாஸ்து சாஸ்திரம், ஆலய ஸ்தல நிர்மாணம், பூர்வ - அபரக்கிரியைகள்.

**பட்டங்களும் பாராட்டுக்களும்**

1. வேதசிவாகமபூஷணம்
   - அல்வாய் முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
2. சிவாச்சாரிய சிகாமணி
   - உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோயில்
3. வைதிக சாகரம் - பிரான்பற்று முருகன் கோயில்
4. சிவாச்சாரிய திலகம் - நவாலி அட்டகிரி கந்தசாமி கோயில் 5. சிவாகமசுரபி
   - மாதகல் இந்து சமய அபிவிருத்திச் சங்கம்

**சமூக சேவைகள்**

போஷகர், மாதகல் இந்து சமய அபிவிருத்திச் சங்கம்

அங்கத்தவர், இலங்கை இந்து குருமார் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவர், சிவானந்த குருகுலம்
ஆலோசகர், மாதகல் புவனேஸ்வரி அம்மன் திருப்பணிச்சபை
அங்கத்தவர், வழக்கம்பரை முத்துமாரி அம்மன் கோயில் திருப்பணிச்சபை

1981ம் ஆண்டு கொழும்பில் நடந்த அஸ்வமேத யாகத்தில் அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெய்வர்த்தனே அவர்களின் அழைப்பின் பேரில் குருவாகப் பங்கேற்று சிறப்பாக கிரியைகளை நடத்தினார்.

1995ஆம் ஆண்டில் ஷஷ்டியப்த பூர்த்தி கண்ட குருக்களுக்கு நாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வுகள், யுத்த சூழல் காரணமாக 2000ம் ஆண்டில் மாதகல் வாழ் சைவப் பெருமக்கள் ஒன்றிணைந்து மாதகல் சைவ சமய அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் பெருமெடுப்பில் மணிவிழா கொண்டாடி மணிவிழா மலரும் வெளியிட்டு கௌரவம் செய்தனர்.

**நிறைவு**

30.08.2002ம் திகதி எதிர்பாராத விதமாக மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரக்குழந்தைகள் சூழ இருக்க குருக்கள் அவர்கள் இவ்வுலக வாழ்விலிருந்து விடைபெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 150. மட்டுவில், திருக்கணிதம் சி. சிதம்பரநாதக்குருக்கள்

## (18.12.1935 - 24.05.2015)

குருத்துவ மரபில் தனித்துவ முத்திரை பதித்த திருக்கணித பஞ்சாங்க கணிதர் அமரர் சிவஸ்ரீ சிதம்பரநாதக்குருக்கள் அவர்கள் தென்னிந்தியாவின் கேரள மாநிலத்தில் திருவிதாங்கூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சிதம்பரஐயருக்கும் ஜானகி அம்மாவுக்கும் மகனாக 1935 ஆம் ஆண்டு பிறந்த இவர் மிகச் சிறுவயதிலேயே அக்காலத்தில் திருக்கணித பஞ்சாங்க கணிதராகத் திகழ்ந்த மட்டுவில் சுப்பிரமணியஐயர் அவர்களால் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டார்.

மட்டுவிலில் மைத்துனரான சுப்பிரமணிய ஐயர் அவர்களுடன் வாழ்வினை ஆரம்பித்த அவர் இளமைக் கல்வியையும், தொடர்ந்து இடைநிலைக் கல்வியையும் சிறப்பாக நிறைவு செய்தார். அதே வேளையில் பஞ்சாங்க கணிதத்திலும் பயிற்சி பெற்றதோடு வடமொழி மற்றும் வேதாகமக் கல்வியினை வியாகரண சிரோமணி சீதாராம சாஸ்திரிகளிடமும் கிரியா சிரோமணி நாராயண சாஸ்திரிக ளிடமும் கற்றுத் தேர்ந்தார்.

மட்டுவில் பொன்னுஸ்வாமிக் குருக்களின் மகளான இராஜேஸ்வரியுடன் இல்லறத்தில் இணைந்ததோடு மாமனார் பொன்னுஸ்வாமிக் குருக்களிடம் ஆலய கிரியாபாகங்களில் போதிய பயிற்சியினையும் பெற்றுக்கொண்டார். பொன்னுஸ்வாமிக் குருக்கள் இறையடி சேர அவரது கோவில் பூசைப் பொறுப்புகளில் ஒரு பகுதியினைப் பொறுப்பேற்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் பூசைப்பொறுப்புகளைக் கையேற்றதோடு சிவாச்சார்யப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இந்நிலையில் பஞ்சாங்க கணிதர் சுப்பிரமணிய ஐயர் சிவபதமடைய திருக்கணித பஞ்சாங்க கணிதப் பொறுப்பினையும் ஏற்றுக்கொண்டார். இவ்வகையில் இருதுறைசார் பொறுப்புக்களையும் இருகண்கள் போல் கவனத்தில் கொள்ளவேண்டிய நிலை உருவானது. சிவாச்சார்யாபிஷேகம் செய்யப்பெற்றபின் முன்னேஸ்வரம் சிவன் ஆலய கும்பாபிஷேகம் மூலம் குருத்துவப் பணியினை ஆரம்பித்த குருக்கள் அவர்களின் இளமைக்காலச் சிவாச்சார்யப் பணியில் தென்மராட்சி பிரதேச ஆலயங்கள் பலவும் களமாகின. மஹாகும்பாபிஷேகங்கள். மஹோற்சவங்கள் எனப் பல்வேறு உற்சவங்கள் வாயிலாக இவர் பணியாற்றிய பல ஆலயங்கள் இவரது முழுமையான ஆளுமையைப் பெற்று மிளிர்கின்றன. இவ்வகையில் சரசாலை வீரமாகாளி அம்மன் ஆலயம், மீசாலை வெள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவடிப்பிள்ளையார் ஆலயம், ஆகியவை அவரது பணியினைப் பறைசாற்றி நிற்கின்றன. குருக்கள் அவர்கள் ஆகமக் கிரியைகளுடன் நின்றுவிடாது வீடுகளில் இடம்பெறும் மங்கல காரியங்களையும் நடத்தி வைத்துப் பெருமை சேர்த்தார். குருக்கள் மூலம் மங்கல கருமங்களை நிறைவேற்றுவதில் தென்மராட்சி மக்கள் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தமை அவரது சிறப்பான பணிக்கான சான்றாகும். மேலும் பல்வேறு பூர்வ அபரக் கிரியைகளையும் அவ்வப்போது ஆற்றி வந்துள்ளார்.

இவ்வாறு பணியாற்றி வரும் வேளையில் மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் மூலமாக "வேதாகம சோதிட பூஷணம்" எனும் பட்டத்தையும், சரசாலை வீரமாகாளியம்மன் ஆலயத்தில் பேராசிரியர் சுப்பிரமணியஐயர் ஊடாக "சிவாச்சார்ய திலகம்" எனும் கௌரவத்தினையும் பெற்றுக் கொண்டார். லண்டன் சைவத் திருக்கோயில் ஒன்றியத்தால் "வேதாகம வித்தகர்" எனும் பட்டமும் வழங்கப்பட்டது. சோதிடத்துறை சார்ந்து "கலாபூஷண" விருதினை 2004 இல் கலாசார அமைச்சு இவருக்கு வழங்கியது.

இவரது வேதாகம சோதிட புலமையும் துறைசார் அனுபவமும் கருதி இந்துக்குருமார் ஒன்றியமானது அதனது வித்துவ சபையில் உறுப்புரிமை வழங்கி பல்வேறு சிக்கல்களுக்கு தீர்ப்பை வழங்கும் அறிஞர்களுள் ஒருவராகக் கௌரவித்து வந்தது. இதனோடு இரண்டாவது இந்து மகாநாட்டில் நீண்டகால சேவைக்காக கௌரவிக்கப்பட்ட சிவாச்சார்யர்களுள் ஒருவரானார்.

பஞ்சாங்க கணிதத்தில் தனது பட்டறிவு தற்துணிவு மூலம் புலம்பெயர்ந்து வாழும் இலங்கை இந்துத் தமிழ் மக்கள் தாம் இலங்கையில் பின்பற்றியது போலவே பிறநாடுகளிலும் பயன்படுத்தக்கூடியதாக அவ்வப்பிரதேச மத்திய நாடிக்குக் கணிப்பிடப்பெற்ற திருக்கணித பஞ்சாங்கத்தினை தயாரித்து வெளியிட்டார். இது வேறெந்த பஞ்சாங்க கணிதரும், ஏன் இந்தியர்கள் கூட முயலாத ஓர் விடயமாகும். இவரது இந்த முயற்சியானது புலம்பெயர் இந்துக்கள் மத்தியில் கலாசாரத்தைப் பேணும் ஒரு முயற்சியின் திறவுகோல் எனலாம்.

சோதிடத்துறையில் இவரது பணி பரந்துபட்டது. சோதிடமலர் எனும் சோதிட மாத சஞ்சிகை மூலம் சோதிட ஆன்மீக எழுத்தாளர்கள் ஒன்றிணையக் களம் வகுத்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்பலகுகள் ஊடாக வானியலும் சோதிடமும் பாடநெறியில் அவ்வப்போது விரிவுரைகளையும் ஆற்றியிருந்தார். 2001 இல் லண்டன் பிரித்தானிய சைவத்திருக்கோவில் ஒன்றியத்தின் 4-வது மகாநாட்டில் பஞ்சாங்கம் எனும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை ஒன்றினைச் சமர்ப்பித்ததன்மூலம் பேரூர் ஆதீன சுவாமிகளால் கௌரவிக்கப்பட்டார். இக்கட்டுரை அம் மகாநாட்டு மலரில் வெளிவந்தது. தான் அறிந்த சோதிட நுட்பங்களை மற்றையோர் அறிந்துகொள்ள வசதியாக 'சோதிடம் கற்போம்.' 'விவாகப்பொருத்தம்' ஆகிய சோதிட நூல்களையும் வெளியிட்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்களிடம் காணப்பட்ட பன்முக ஆளுமையும் வேதாகம சோதிட அறிவும் குருத்துவப் பண்பும் அவரது வெற்றிக்கு அடிப்படையான காரணிகள் ஆயின. குருக்கள் அவர்களின் சிரேஷ்ட புதல்வனான ஜெகதீஸ்வர சர்மா திருக்கணித பஞ்சாங்க கணிதத்தையும் சோதிடத் துறையையும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறார். இளைய புதல்வர்களில் ஒருவரான கிருபாகரக்குருக்கள் குருத்துவப்பணியினை செவ்வனே செயற்படுத்தி வருகிறார்.

இத்தகைய தனிச்சிறப்புடைய குருக்களின் வாழ்க்கை அவரது 80 ஆவது அகவையில் 2015 ஆம் ஆண்டு நிறைவுபெற்றது. இவரது அறிவும், ஜோதிட ஞானமும் ஆகமத் தெளிவும், வழிப்படுத்தலும் தொடர்ந்து நம் அனைவருக்கும் உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமில்லை.




## 151. சொற்பொழிவாளர் வசந்தா வைத்தியநாதன் (இருபதாம் நூற்றாண்டு)

பிறந்த ஊர். தஞ்சாவூர் . தாய் தந்தை பெயர். பரமேஸ்வர ஐயர் அலமேலு அம்மாள். .கல்வி மயிலாடுதுறை பெண்கள் உயர்தர ப்பாடசாலை. கல்வி கற்று தஞ்சை ஆதார ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் பயிற்சி பெற்று பின் தர்மபுரத்தில் வாழ்ந்து வந்தார். சென்னை சர்வகலாசாலயையில் தமிழ்வித்வான் பட்டப்படிப்பினை முடித்து பட்டம் பெற்று தர்மபுர ஆதீன திருஞானசம்பந்தர் உயர்நிலைப் பள்ளியில் . 1957ல் தமிழ் ஆசிரியராகக் கடமையாற்றினார். 1962 ஆம் வருடத்தில் இந்தியாவில் திருமணம் நடந்தது. கணவர் .வைத்தியநாதன் கொமெஷல்வங்கி முகாமயாளர். பின் இலங்கைக்கு வந்தார். இங்கு இலங்கை வானொலியில் பல வருட காலங்கள் சமயாசாரம் மற்றும் சைவநற் சிந்தனைகள் பேன்றவற்றில் பங்குபற்றினார். பல ஆலய விழாக்கள் வானொலியில் அஞ்சல்கள் நடத்தினார் 1993ல் லண்டன் மற்றும் 1999ல் கனடா சொற்பொழிவுகளுக்கு சென்றிருந்தார் 1998ல் லண்டனில் ஏழாவது அகில உலக சைவ மகா நாட்டில் பங்கு பற்றினார். விருதுகள் . தொண்டர் திலகம், அருள்மொழி அரசி, சிவநெறிப்பெண், செந்தமிழ் செல்வி, விழைதமிழ் வித்தகி. அரசாங்கத்தினால் 1992ல் கொழும்பு சமாதான நீதவான் நியமனம். 2001 அகில இலங்கை சமாதான நீதவான் நியமனம். அரசால் கொடுக்கப்பட்ட கலாபூஷணம் விருது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 152. வாக்கிய பஞ்சாங்க கணிதர் இ. வெங்கடேச ஐயர்

(22.02.1936 - 15.01.2014)

ஈழவள நாட்டின் சிகரம் என விளங்குவது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தின் பொன் எனத் திகழும் நற்பதி கொக்குவில். கொக்குவிற் பதியில் சோதிட பரிபாலனமட பரிபாலகரும், இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க கணிதரும், வாக்கிய பஞ்சாங்கப் பரம்பரையில் 11ஆம் தலைமுறைக்குரியவரும், வாக்கிய பஞ்சாங்கம் சிறப்புற பணியாற்றியவரும், ஆரிய திராவிட பண்டிதராகவும் திகழ்ந்த பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதி ஐயர் அவர்களுக்கும் ஸ்ரீமதி இரத்தினம்மா அவர்களுக்கும் மூத்த தமக்கையாக லலிதாம்பாள் அம்மாவோடு இரட்டைச் செல்வங்களாக கதிரேசஐயரோடு ஸ்ரீமான் வெங்கடேசஐயர் அவர்கள் யுவ வருஷம் மாசி மாதம் 10ம் நாள் (22.02.1936) செவ்வாய்க்கிழமை இவ்வுலகில் அவதரித்தார்.

பழகுவதற்கு இனிய பண்பாளராகவும், தோற்றத்தில் எளிமையாகவும் சிறந்து விளங்கிப் பெற்றாரும், சுற்றத்தவரும், அயலவரும் அகமகிழ வளர்ந்துவந்தார். இவர் தமது ஆரம்பக் கல்வி முதல் இறுதிதேர்வு வரை தனது ஊரான கொக்குவிலில் சிறந்து விளங்கும் கல்விக் கூடமாகிய கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றுத் தேர்ந்தார்.

இவர் தமது 11 வயதிலேயே தமது தந்தையாரை இழந்து தமது பெரிய தந்தையாராகிய இரகுநாதையரின் அரவணைப்பில் வாழ்ந்து வந்தார்.

சிறந்த சங்கீத ஆற்றல் மிக்க இவர் வாய்ப் பாட்டினையும், வயலினையும் விருப்பமுடன் கற்றார். தமது பெரிய தந்தையார் அவர்களின் மூலமாக வான சாஸ்திரம், சோதிடம் போன்றவற்றைக் கற்றுப் பஞ்சாங்கம் கணிப்பதற்கு தன்னை தகுதி உடையவராக்கிக் கொண்டார். பெரிய தந்தையார் அவர்களோடு சேர்ந்து வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பை திறம்படச் செய்தார். இவர் 1969 ஆம் ஆண்டு தைப்பூச நன்நாளில் அளவெட்டி பெருமாக்கடவையைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ முத்துக்குமாரசாமிக்குருக்கள் ஸ்ரீமதி நீலலோஜினி அம்மா தம்பதியரின் புத்திரியாகிய இராஜராஜேஸ்வரியை இனிதே கரம்பற்றினார். தம்பதிகள் தம் இல்லறத்தை நல்லறமாக நடத்தினார்கள். இக்காலத்தில் (1969 ஆம் ஆண்டு) தமது பெரிய தந்தையார் அவர்களை இழக்க நேரிட்டது. பின்னர் சகல பஞ்சாங்கக் கணிப்பு வேலைகளையும், சோதிட பரிபாலனமடப் பொறுப்பையும் தனித்து ஆற்றத் தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது சிறந்த இல்லறத்தின் பயனாக மூன்று புதல்வர்களையும், இரு புதல்விகளையும் பெற்று அகமகிழ வாழ்ந்து வந்தார். ஐவருக்கும் உரிய கல்வி, கலைகளை ஊட்டி வளர்த்தார். தமது புதல்வர்களை சிறந்த அந்தணராக்க உரிய பருவத்தில் கருமங்களை நிகழ்த்தினார். உரிய பருவம் வந்த தமது பிள்ளைகளுக்கு திருமணம் என்ற சிறப்பினை நடத்தி மகிழ்ந்தார்.

இன்சொல்பேசும் இனியவராகவும், வன்சொல் பேசாத பண்பாளராகவும் வாழ்ந்துவந்தார். தன்னை நாடி வந்தோருக்கு நல்ல பலன்களைச் சொல்லி, ஜாதகம் கணித்து, மணப் பொருத்தங்கள் கொடுத்தார். சகல சமயக் கிரியைகள், கோயிற் கிரியைகள், வீட்டுக் கிரியைகளுக்கு நல்ல நாள்கள் கணித்து நன்மதிப்புப் பெற்றார். தான் வசிக்கும் வீடாகிய சோதிட மடத்தை தன் கோயிலாகக் கருதி வாழ்ந்துவந்தார். இல்லையென்று இரந்து வருவோர்க்கெல்லாம் இல்லையெனாது குறைவறக் கொடுத்தார். அன்னதானமெனும் புண்ணியத்தை திறம்பட நிகழ்த்தினார். தமது சோதிடப் பிரகாச யந்திரசாலையில் தம்புதல்வர்கள் மூவரையும் பஞ்சாங்க கருமங்கள் ஆற்றக்கூடிய வகையில் பஞ்சாங்கப் பணியில் தம்முடன் இணைத்துக் கொண்டார். தமது மைத்துனராகிய யோகேஸ்வரசர்மாவின் ஆலோசனையையும் பெற்று பஞ்சாங்கக் கணிப்பை திறம்பட நடத்தினார்.

தமது வாக்கிய பஞ்சாங்கத்தை உலகறியச் செய்தார். இத்தோடு நின்றுவிடாது கனடா, லண்டன். ஜேர்மனி போன்ற நாடுகளுக்குமான பஞ்சாங்களைத் தயாரித்து வெளியிட்டார். இலங்கை, லண்டன். நோர்வே, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ்லாந்து, சுவீடன், அவுஸ்ரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்குமான பஞ்சாங்கக் கலண்டர்களை வெளியிட்டார். விக்னேஸ்வர பூஜாவிதி, சோதிட நூல்கள், திருமுறை புத்தகங்கள், புராணக் கதைகள் என்பவற்றை அச்சிட்டு வெளியிட்டார். சோதிட விலாச புத்தகசாலையையும் திறம்பட நடத்தினார். சிறந்த நிர்வாக சேவையாளராகவும், நல்வழிகாட்டியாகவும் செவ்வனே நிகழ்த்தினார்.

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நாளில் செவ்வாய்க்கிழமை பின்னிரவு 15.01.2014 சதுர்த்தசித் திதியில் இவ்வுலகை விட்டு புகழுடல் எய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 153. நல்லூர் ப. சர்வேஸ்வர ஐயர் (06.02.1936 - 16.12.2002)

என்றுங் குன்றாத பெருமதிப்புடைய கல்விச் செல்வத்தை எம்மனோர்க்கு வாரி வழங்கும் பெருநோக்குடன் தாம் கற்ற கல்வியினை தொடர்ந்து வழங்கிய மனப்பான்மையினராக, அந்தணர் குலத்திலகமாக, உயர் பண்பாளராக யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்து அறுபத்தாறாவது வயதில் நல்லூரிலேயே அமரத்துவமடைந்த பிரம்மஸ்ரீ பத்மநாப ஐயர் சர்வேஸ்வர ஐயர் அவர்கள் வழிகாட்டிய இவ்வுயர்பண்புக்கு சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்.

இலங்கையிலிருந்து இலண்டன் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலமொழி மூலமாக சம்ஸ்கிருத மொழியைக் கற்று தாம் பெற்ற கல்விச்செல்வத்தை எமது நாட்டில் சிறப்பாக யாழ்ப்பாண மாணவர்களுக்கென்றே தம்மை அர்ப்பணித்து. பரந்த சீடர் மரபுகளை நிலை நிறுத்தி, உத்தம புருஷராகத் திகழ்ந்து அமரத்துவமடைந்த இவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இவர் பாரத்வாஜ கோத்திரத்தைச் சார்ந்தவர். இவரின் முன்னோர்கள் முன்னேஸ்வரம் முன்னைநாதசுவாமி தேவஸ்தானத்தில் முப்போதும் திருமேனி தீண்டும் சிவாச்சார்ய மரபில் தோன்றிய சிவராமகிருஷ்ண ஐயர், சுப்புலக்ஷ்மி தம்பதிகளின் பிள்ளைச்செல்வங்கள் சுப்பிரமணிய ஐயர், நீலாம்பிகை, சாம்பசிவ ஐயர், பத்மநாப ஐயர், சுந்தரம்மா ஆகியோர். இவர்கள் முன்னேஸ்வரத்தையே பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவர்கள்.

இவர்களுள் பிரம்மஸ்ரீ பத்மநாப ஐயர் அவர்களே இவரது தந்தையார். இவரது தாயார் கமலாம்பிகை அம்மாள். இவர் நல்லூர் சிவன்கோவில் ஸ்தாபகர் பிரம்மஸ்ரீ ந.வே.கார்த்திகேய குருக்களின் மகள். பிரம்மஸ்ரீ கார்த்திகேயக் குருக்கள் தம்பையாக் குருக்கள் என அழைக்கப்பட்டவர்.

பிரம்மஸ்ரீ பத்மநாபஐயர், கமலாம்பிகை தம்பதிகளுக்கு இரண்டு புதல்வர்கள். இவர்களுள் மூத்தவர் பிரம்மஸ்ரீ பரமேஸ்வர ஐயர், இளையவர் பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர ஐயர். இவர் 06.02.1936 தைப்பூச நாளில் நல்லூரில் பிறந்தார். இவர்களுடைய தாயார் கொடிய நோயினால் இருவரும் இளம்பிராயத்திலிருக்கும் பொழுதே இறந்தார். சர்வேஸ்வர ஐயரை இவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் தந்தையாகிய கார்த்திகேயக் குருக்களின் சகோதரியாகிய அமிர்தவல்லியம்மா வளர்த்து வந்ததோடு ஆசார ஒழுக்கங்களையும் புகட்டி வழிப்படுத்தினார். இவரோடு இணைந்து நல்லூர் பிரதேசத்தில் வாழ்ந்த காலத்தில் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியையும் பரமேஸ்வராக் கல்லூரியில் உயர்கல்வியையும் கற்றார். முன்னேஸ்வரத்தில் உபநயனம் செய்யப்பட்ட இவர் இவருடைய வளர்ப்புத் தாயாகிய அமிர்தவல்லி அம்மாவின் மறைவுக்குப்பின் இவர் தனது தாய்மாமனாகிய பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள், சகோதரி திரிபுரசுந்தரி அம்மாள் தம்பதிகளின் வழிகாட்டலில் கண்டியில் இருந்ததோடு அங்கு தர்மராஜாக் கல்லூரியில் சிலகாலம் கல்வி கற்றார். தாய்மாமனாகிய பேராசியர் குருக்கள் அவர்கள் தனது கலாநிதிப்பட்ட ஆய்வுக்காக இந்தியா சென்றபோது சகோதரி திரிபுரசுந்தரி மற்றும் சகோதரன் தியாகராஜக்குருக்கள் குடும்பத்தினரோடு மீண்டும் நல்லூரில் வசித்து வந்தார் அவ்வேளையில் பரமேஸ்வராக் கல்லூரியிலும், ஸ்ரான்லி கல்லூரியிலும் கல்வி பயிலும் வாய்ப்பைப் பெற்றார். 1957களில் மீண்டும் கண்டி சென்று தனது தாய்மாமன் குடும்பத்தினரோடு வாழ்ந்து வந்தார்.

பேராதனையில் இருக்கும் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருதத் துறையில் விரிவுரை யாளராக விளங்கிய இவரது தாய்மாமன் பேராசியர் கைலாசநாதக் குருக்கள் அவர்களது தூண்டுதலினால் வெளிவாரி நிலையில் இந்திய சமய வரலாறு, பாளி, சம்ஸ்கிருதம் ஆகிய பாடங்களை உள்ளிட்டு லண்டன் பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருதத்தை சிறப்புப் பாடமாகக் கற்று கலைமாணிப் பட்டம் பெற்றார். இவரது தாய்மாமனோடு ஏற்பட்ட கல்விசார்ந்த உறவு இவரை உயர்நிலைப் படுத்துவதற்கு பெரிதும் உதவியது.

இவர் பேராதனை - இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருத துறையில் விரிவுரையாளராக 1962 - 1964 வரை கடமையாற்றினார். இவரது கற்பதோடு இணைந்த கற்பித்தல் பணி ஆரம்பமானது. அங்கு சம்ஸ்கிருத முதுகலைமாணி, தகுதிகாண் தகுதியும் பெற்றார். தொடர்ந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் பிரிவில் சம்ஸ்கிருத விரிவுரையாளராக கடமையாற்றினார். அவ்வேளை அங்கு நூலகத்தில் பகுதிப் பொறுப்பதி காரியாகவும். கடமையாற்றினார்.

இலங்கை அரசு தனியார் பாடசாலைகளை அரசு மயமாக்கும் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படுகையில் இவர் வட்டுக்கோட்டை சித்தன்கேணி இந்துக்கல்லூரியில் உதவி ஆசிரியரானார். அங்கு 22 வருடகால சேவையில் நீண்ட நாட்களாக உபஅதிபராகவும் பதிற்கடமை அதிபராகவும் பொறுப்பாசிரியராகவும் மாணவ மன்றங்களின் வழிகாட்டியாகவும் விளங்கி 1996ம் ஆண்டு ஓய்வுபெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் கல்வி கற்பிக்கும் காலங்களில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 1982ல் முதுகலைமாணிப் பட்டத்தையும், 1988ல் கல்விப் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவையும் பெற்றதோடு தொடர்ந்து "காரணாகமம் கூறும் கிரியை மரபு" எனும் பொருளில் கலாநிதிப்பட்டத்திற்கான ஆய்வினையும் மேற்கொண்டு வந்தார்.

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1982ல் சம்ஸ்கிருதத் துறையின் வருகை விரிவுரையாளராகவும், கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மருதனார் மடத்தில் இயங்கிய கல்வி வலயத்தில் தொலைக்கல்விப் பாடத்தில் இந்துநாகரிக, இந்துசமய ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

இவர் வட்டுக்கோட்டை ஆனந்தசுப்பிரமணியசர்மாவின் கனிஷ்ட புத்திரியாகிய சரோஜாவை 1963ல் திருமணம் செய்தார். இவருக்கு கமலாம்பிகை, சோபனா, பத்மநாபன் (மோகன்). கல்பனா எனும் நான்கு பிள்ளைச் செல்வங்கள்.

தினத்தாள்களிலும், வானொலிகளிலும் தமது ஆக்கங்களை வெளிப்படுத்திய சர்வேஸ்வர ஐயர் சம்ஸ்கிருத மொழியையும், இந்துசமயம், இந்து நாகரிகம், தமிழ் ஆகிய பாடங்களையும் தமது கற்பித்தற் பாடங்களாக கொண்டுவந்ததோடு ஆங்கிலத்தையும் போதித்து வந்தார்.முன்னேஸ்வர தேவஸ்தானம், நல்லூர் சிவன்தேவஸ்தானம், வட்டுக்கோட்டை மஹாலிங்க சுவாமி தேவஸ்தானம், நல்லூர் முத்துவிநாயகர் கோவில் ஆகிய ஆலயங்களுடன் நெருங்கிய தொடர்புடையவராகவும் பரந்த உறவினர்களின் அன்புக்குரியவராகவும், பரோபகாரியாகவும் விளங்கி வந்தார்.

ஓய்வு பெற்று விளங்கும் காலங்களில் தமது பொழுதினை கற்பித்தலில், சிறப்பாக சம்ஸ்கிருத மொழியைக் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டார்.தென்னிந்தியாவுக்கு தலயாத்திரைகளினை மூன்று தடவைகள் மேற்கொண்டார்.

இவர் இவரது சுற்றத்தவர் சூழ சித்திரபானு வருடம் மார்கழி மாதம் 1ம் நாள் திங்கட்கிழமை (16.12.2002) இரவு 8.34 மணியளவில் பூர்வபக்ஷ துவாதசித்திதியில் இறைவன் திருவடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 154. ஜோதிடர், இணுவில், கொட்டகல இ. சத்திய மூர்த்திக்குருக்கள்

## 1936 - 2013

பெயருக்கு ஏற்ற இனிமையும் மங்கள இசையும் செந்தமிழும் நிறைந்த யாழ். இணுவையில் உயர் அந்தணர்குல இராமநாதக் குருக்கள் - இராசம்மா தம்பதிகளின் முதல் தோன்றலாக மண்ணுலகில் 1936இல் உதித்தவர் சத்தியமூர்த்திக் குருக்கள் ஆவார்.

இல்லறத்தின் ஆரம்பகாலத்தில் தனது கல்விக்கு எற்ற உயர் ஊதிய வேலையாக அமையாததால் தபால்துறை பணியிலிருந்து விலகி பல சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்ட இவர் இயல்பிலேயே தெய்வ கடாட்சமும் ஜப, தியானங்களில் மிகுந்த நாட்டமும் உடையவராக இருந்தார்.

1959ஆண்டின்பின்னர் தமது குடும்பத்துடன் மலையகம் நோக்கிச் சென்ற இவர் 1964இல் கண்டி வத்தேகம அருள்மிகு அம்பாளின் ஆலய குருக்களாக பணியாற்றிவந்தார். ஜோதிடத்துறை நுட்பங்களை சுயமாகக் கற்றுவந்த இவரது வாழ்க்கையில் முக்கிய திருப்பமாகவும் ஜோதிடத்துறையில் முழுமையாகப் பணியாற்றத் தூண்டியதும் கந்தப்பளை ஸ்ரீ மகாவிஷ்ணு கோவிலுக்கான பூஜைப்பணி அழைப்பாகும்.

வருமானம் பெரிதாக இல்லாவிட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் விஷ்ணுபெருமானுக்கு உள்ளன்போடும் முழுமன ஈடுபாட்டுடனும் பூஜைப் பணிகளைத் தொடர்ந்து செய்துவந்தார். ஜோதிடத்துறையில் ஒரு ஜோதியாக இவர் ஒளிரக் காரணம் மகாவிஷ்ணுவின் அருளால் வாக்குச் சித்தி கிடைக்கப்பட்டமையே ஆகும். ஆதலால் அந்த விஷ்ணுவின் நாமத்துடன் "ஸ்ரீ மகாவிஷ்ணு ஜோதிடாலயம்" என்ற ஜோதிட நிலையத்தை நிறுவினார்.

தொடர்ச்சியாக 1996இல் கொட்டக்கலை வூட்டனில் தனியான மலைப்பகுதியாக இருந்த அமைதியான இடத்தைத் தெரிவுசெய்து அங்கு சிறிய கோவில் ஒன்றையும் தமது ஜோதிட நிலையத்தையும் அமைத்து ஜோதிட சேவையை ஆற்றிவந்தார். அப்பகுதி "விஷ்ணுபுரம்" என அழைக்கப்படும் அழகிய குடியிருப்புப் பகுதியாக வளர்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000ஆம் ஆண்டின் பின்னர் கொழும்பில் இருந்து இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் இருந்து தேடிவரும் மக்களுக்கு ஜோதிட சேவையை சிறப்பாக ஆற்றியதுடன் சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளுக்கும் சென்று தமது பணிகளைத் தொடர்ந்தார்.

விஷ்ணுபெருமான்மீது கொண்ட அளவற்ற பக்தியின் காரணமாக கந்தப்பளை மகாவிஷ்ணு கோவிலுக்குத் தமது செலவிலேயே மணிக்கோபுரம், அனந்தசயனர் சந்நிதி போன்றவற்றைக் கட்டியதுடன் கும்பாபிஷேகத்தையும் சிறப்பாக நிறைவேற்றினார். இதற்கு முன்னரும் பல ஆலயப் பணிகளை நிறைவேற்றியுள்ளார்.

இவரது ஜோதிட, சமய, சமூக, கலைப்பணிகளைப் பாராட்டி "டென்மார்க் வேதாகம சபா" இவருக்கு "ஜோதிட மேரு" என்ற பட்டத்தை வழங்கி (2002) கௌரவித்தது. இவரது பணிக்குச் சிகரம் வைத்தாற்போல 2012இல் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு இவருக்கு சிறப்பு விருதாக "ஜோதிர் வித்யா ரத்னா" என்ற பட்டத்துடன் அரச ஜோதிட விஞ்ஞான விருதினை வழங்கிக் கௌரவித்தது.

கலைரசனையும் சங்கீத ஞானமும் கொண்ட இவரது இராகத்துடன் கூடிய மந்திர ஒலிகள் பூஜைகளின்போது மனத்தை நெகிழச் செய்து இறையருளில் மூழ்க வைப்பது சிறப்பான அம்சமாகும். வாழ்வின் இறுதி வருடங்களில் நோய் உடலைப் பாதித்தாலும் மனத்தளவில் என்றும் ஆரோக்கியத்துடனும், தேடி வந்தவர்களுக்கு தளராமல் ஜோதிட சேவை செய்தும் புகழ் பெற்ற இப் பெரியவர் இறுதிநாள் அன்று பிரபல வைத்தியசாலையில் ஒழுங்குசெய்யப்பட்ட அறையில் உறவுகளும் மற்றைய அன்பு நெஞ்சங்களும் கூடியிருக்க உயிர் பிரியப் போகும் வேளையில் சிவபுராணம் பாட முழுவதுமாகக் கேட்டபின் தான் விடைபெறமுன் தன் இரு கரங்களையும் உயர்த்தி எல்லோரையும் ஆசீர்வதித்து பின் நிதானமாக கரங்களை கீழ் இறக்கி உடலை விட்டு விடைபெற்றாலும் அவர் ஆற்றிய சேவைகள் நம் மனத்தை விட்டு விடைபெறப் போவதில்லை.



## 155. எழுத்தாளர், குப்பிளான் சுந்தர. பிரேமசம்பு

பிறப்பு: 17.02.1936 இறப்பு: 24.05.1976

பிரமச்சாரியாக வாழ்ந்த இவர் ஈழநாடு முதலி ய பத்திரிகைகளில் நிறைய ஆன்மீக ஆக்கங்களை எழுதிவந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 156. கல்வியாளர், இர. சந்திரசேகர சர்மா

(12.07.1937 - 01.05.2019)

ஈழத் திருநாட்டில் வட பகுதியான யாழ்ப்பாணம் ஆவரங்கால் பகுதியில் சிறந்த கல்விமானாகவும் ஆவரங்கால் சிவன் கோவிலில் சிவாச்சாரியாராகவும் திகழ்ந்த சிவஸ்ரீ இரத்தினக் குருக்கள், சரஸ்வதியம்மா தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாக 12.07.1937 இல் உதித்தவர் நமது அமரர் சந்திரசேகர சர்மா.

இவருக்கு நாகேந்திரக் குருக்கள், பாலசுப்ரமணியக் குருக்கள், இராமகிருஷ்ண சர்மா ஆகியோர் உடன் பிறப்புகள். ஆவரங்கால் அமெரிக்க மிஷன் பாடசாலை, புத்தூர் சோமஸ்கந்தா ஆகியவற்றில் தமது ஆரம்பக்கல்வியைக் கற்றார். தந்தையார் ஆலயக் குருக்கள் என்பதால், பெற்றவர் களுடன் இவரும் இடம்பெயர்ந்து நாவலப்பிட்டிக்குச் சென்றார். தந்தையார் இரத்தினக்குருக்கள் அங்கு கதிரேசன் கோயிலில் சிவாச்சாரியாராகப் பண்ணியாற்றிக் கொண்டு இருந்தார். அப்போது சந்திரசேகர சர்மா புனித அன்ரூஸ் கல்லூரியில் ஆங்கில மொழி மூலமாக கற்றார். அங்கேயே தனது முதலாவது ஆசிரிய நியமனமும் பெற்று, கல்விப் பணியில் ஈடுபட்டார்.

அதன் பின்னர் அறுபதுகளில் பலாலி ஆசிரியர் கலாசாலையில் விஞ்ஞான பாடத்தில் விசேட பயிற்சி பெற்று ஆசிரியராக வெளிவந்தார். மேலும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் திட்டமிடலும் அபிவிருத்தியும் என்ற பாடத்தில் தனது எம். ஏ. (MA in Planning Development) பட்டத்தினையும் பெற்றார். ஆசிரியராக முப்பத்தைந்து ஆண்டுகள் தனது கல்விப் பணிகளைத் தொடர்ந்து புரிந்து வந்தார்.

ஐந்து வருடங்கள் கல்வி அமைச்சின் பாட விதான அபிவிருத்தி நிலையத்தின் முழு நேர அங்கத்தவராக இருந்து, மாணவர்களுக்கான நூல்கள், ஆசிரியர்களுக்கான வழிகாட்டி நூல்கள் போன்றவற்றை தயாரித்துள்ளார். 22 வருடங்கள் ஆசிரியராகவும் 5 வருடங்கள் ஆசிரிய ஆலோசகராகவும் பண்ணியாற்றி உள்ளார். பசறை, அழுத்கம, பம்பலபிட்டிய இசுப்பொத்தானை, கொட்டஞ்சானை மத்திய கல்லூரி, யா/ முத்துத்தம்பி வித்தியாலயம், பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்பித்துள்ளார். மேலும் வடமராட்சி கிழக்கு பாடசாலைகளுக்கு ஆசிரிய ஆலோசகராகவும் இருந்து வந்துள்ளார். தனது மாணவர்களின் தனித்திறமைகளைக் கண்டறிந்து ஊக்கப்படுத்தி அவர்கள் உலகெல்லாம் போற்றத்தக்க வகையில் வளர்த்தெடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970ம் ஆண்டு பருத்தித்துறையின் புகழ்பூத்த சிவாச்சாரியார் இராமநாதக் குருக்கள் அமிர்தேஸ்வரி தம்பதிகளின் 4 வது புதல்வி உஷாதேவியை விவாகம் செய்து இல்லறத்தினை செல்வனே நடத்தி இறைவனின் அனுக்கிரக்கிரகத்துடன் கவிதா, கார்த்திகா ஆகிய புதல்வி களைப் பெற்றெடுத்தார்.

பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வி கொடுத்து திருமணமும் செய்து வைத்துப் பேரப்பிள்ளைகளையும் பார்த்து விளையாடிக் களைத்து மகிழ்ந்துள்ளார். சிறந்த விருந்தோம்பல் பண்பினைக் கொண்டிருந்த இவர் எல்லோரிடமும் இனிமையாகவும் நட்பாகவும் நகைச் சுவையாகவும் பேசிப் பழகி நல்லுறவுகளைப் பேணிப் பாதுகாப்பார். வாழ்க்கையில் ஒவ்வொருவரும் சிறந்து முன்னேற வேண்டும் எனவும் உலக விடயம், விஞ்ஞானம், சமயம், ஆங்கிலம் தொடர்பாக அவர்கள் பல தேடல்களையும் தேடும் வகையில் கருத்துக்களைப் பகிர்ந்துவந்தார்.

1960 களில் இலக்கிய உலகில் கால் எடுத்து வைத்து பல சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள், விஞ்ஞானக் கட்டுரைகள் எனப் பல துறைகளில் தனது ஆளுமையை வெளிப்படுத்தியிருந்தார். இவர் நாவலபிட்டியில் “கலைமகள்” படிப்பகத்தை நிறுவி தரமான வாசகர்களை உருவாக்கினார். இப்படிப்பகம் மூலம் பலர் பயன் பெற்று எழுத்தாளர்களாக திகழ்கின்றார்கள். தென்னிந்திய எழுத்தாளர்களான மு. வ , கல்கி, பார்த்தசாரதி போன்ற பலரிடம் இவர் நேரில் பழகிய அனுபவங்களை பின்னாட்களில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்திருந்தார்.

இவர் கலைமகள் படிப்பகம் மூலம் பல செயற் பாடுகளை மேற்கொண்டிருந்தார். வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தல் முற்போக்கான கலைகள் தோன்ற உற்சாகமும் ஊக்கமும் அளித்தல், மாணவர்கள் அகில இலங்கைரீதியில் கட்டுரை - பேச்சு போட்டிகளில் பங்கு பெற்ற பயிற்சி அளித்தல் என இப்பணிகள் நீளும். இவரது தலைமையில் எழுத்தாளர் சந்திப்பும் விமர்சனக் கருத்துக்கள் பரிமாற்றமும் இடம் பெற்றுள்ளது. இலக்கிய கூட்டங்களை நடத்தியமை, நாடகங்களையும் கலை நிகழ்வினையும் மேடை ஏற்றியமை போன்ற பல விடயங்களை மேற்கொண்டுள்ளார். பருத்தித்துறை அறிவோர் ஒன்று கூடலிலும் இவர் அங்கத்தவராக இருந்து பல அரிய செயற்பாடுகளை ஆற்றியுள்ளார்.

எழுபதுகளில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் கல்விச் சேவையில் மாணவ ஆசிரிய நிகழ்ச்சிகள் “அகல் விளக்கு”, “அறிவியல் அரங்கு” ஆகிவற்றை நடத்தியதோடு விஞ்ஞான பாடங்களை நாடக வடிவிலும் அறிமுகப்படுத்தியுள்ளார். நுட்பமான விஞ்ஞானத்தினை மாணவர்களும் புரியவேண்டும் என்பதே அவரது குறிக்கோளாக இருந்தது.

இவரது ‘களைகள்’ என்ற நூல்வெளியீடும் கண் காட்சியும் வடமராட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோட்டாரிக் கழகத்தினால் நடத்தப்பட்டது. விஞ்ஞானம் இலக்கியம் இரண்டினையும் இரு கண்களாக எல்லா மாணவர்களும் பயன்படுத்த வேண்டுமென பல முயற்சிகளை மேற்கொண்டார். மாணவர்கள் மத்தியில் கையெழுத்துப் பிரதிகளை எழுத வழிகாட்டி நெறிப்படுத்தினார். வட மாகாணம் மட்டுமின்றி இலங்கை ஆஸ்திரேலியா போன்ற பல இடங்களிலும் இவரது மனிதத்துவம், இலக்கியம், விஞ்ஞானம் போற்றப்படுகின்றது.

பருத்தித்துறை FORUT அரச சார்பற்ற நிறுவனத்தில் பணிபுரியும்போது பல சமூக சேவைகளை மேற்கொண்டார். மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி, நூலகம், வெளிவாரிப் பட்டப்படிப்புகள் போன்றவைகளை அமைத்துக் கொடுத்துள்ளார். "சக்தி" "ஒளி" போன்ற பத்திரிகைகளை மாணவர்களுக்காக உருவாக்கி அவர்களது ஆளுமை, எழுத்தாற்றல் தேடல் போன்ற பல திறன்களை வெளிக் கொண்டுவந்தார்.

1998ல் சாந்திகம் உளவள நிலையத்தில் உளவள சமூக பயிற்சியாளர்கள் உருவாக உறுதுணையாக இருந்தார். பல நூல்களின் இணைப்பாளராகவும் ஆசிரியராகவும் பணி புரிந்து வெளியிடப் பங்காற்றினார். 90களில் FORUT நிறுவனத்தில் பணி செய்யும்போது போதைவஸ்துக்கு எதிரான சர்வதேச மகாநாட்டில் பங்கு பெற்றார்.

ஆங்கிலம், தமிழ் மொழிபெயர்ப்பாளராகவும் தமிழ் -ஆங்கிலம் மொழிபெயர்ப்பாளராகவும் சம நேர மொழிபெயர்ப்பாளராகவும் செயற்றப்படக் கூடியவராகவும் பல திட்ட அறிக்கைகளை (Project Report) தயாரித்து பல நிகழ்ச்சிகளின் திட்ட முகாமையாளராகவும் இருந்து நடத்தியுள்ளார்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பல சமூக சேவைகளையும் ஆற்றிப் பலருக்கும் நல்லாசி வழங்கி அமைதி பொறுமை சகிப்புத்தன்மைகளைக் கடைப்பிடித்து பலருக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து 01.05.2019 புதன்கிழமை சித்திரை அபரபட்ச துவாதசித் திதியில் இறைபதம் எய்தியுள்ளார். என்றென்றும் நிலைத்து நிற்கும் இவ்வுலகின் சிறப்புக்களை அனுபவித்த இவர் இறைவனின் கருணைக்கு ஆளாகி மறுமையிலும் இன்பம் பெறப் பிரார்த்திப்போமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 157. இ, மகேஸ்வர சர்மா (கோவை மகேசன்)
## (22.02.1939 - 04.07.1992)

"கோவை மகேசன்" என்று நன்கறியப்பட்ட மகேஸ்வர சர்மா கோப்பாயில் இரத்தின சபாபதிக் குருக்கள், இரத்தினாம்பிகை தம்பதிகளின் மைந்தனாக 22.02.1939 அன்று பிறந்தார். தனது ஒன்பதாவது வயதிலேயே தாயை இழந்தார். இவரது அக்காவின் பெயர் புவனேஸ்வரி தம்பியின் பெயர் பிரணதார்த்திஹரகுருக்கள். சிவஸ்ரீ பிரணதார்த்திஹரக் குருக்கள் சைவத்தோடு தமிழிலும் பற்றுக்கொண்டு தொண்டாற்றுபவர் என்பதும் இங்கு குறிப்பிடவேண்டிய ஒன்று. வலி கிழக்கு அருள் நெறி மன்றத்தை ஸ்தாபித்து அதன்மூலம் சமயத்திற்கும் தமிழுக்கும் பல்வேறு பணிகள் செய்து வருகிறார்.

மகேஸ்வர சர்மா கோப்பாய் நாவலர் வித்தியாலயத்திலும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் கல்விகற்றார். கல்வி பயிலும் காலத்திலேயே சுதந்திரன், வீரகேசரி முதலிய பத்திரிகைகளில் கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதிவந்தார். பேச்சுப்போட்டிகளில் மாகாண மட்டத்திலேயே முதற்பரிசுகளை பெற்றுவந்தார்.

அவரது கவனம் அரசியல் பால் திரும்பியது. தமிழரசு வாலிப முன்னணியில் இணைந்து செயற்படத் தொடங்கினார். 'கோவை மகேசன்' என்ற பெயரில் கட்சிக் கொள்கை களுக்குகேற்ப செயற்பாடுகளில் ஈடுபட்டார். 1962ல் விசாலாட்சியை புரட்சிகரமாகத் தமிழ்ப் பண்பாட்டின்படி திருமணம் செய்தார். இவரது தந்தையின் சகோதரியின் மகளே விசாலாட்சி. கணவனின் கொள்கைவழி அவரும் இணைந்து நடந்தார்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் மாணவனாக இருந்த வேளையில் அவர் ஈழகேசரி ஆசிரியருக்கு "கோவை மகேசன்" என்ற பெயரில் எழுதிய கடிதம் 12.07.1953 அன்றைய ஈழகேசரியில் வெளிவந்தது. அது அவரது எழுத்துலக வாழ்விற்குப் பிள்ளையார் சுழியிட்டது. "சிற்பி" ஐயா வெளியிட்டு வந்த 'கலைச்செல்வி" சஞ்சிகையில் பணியாற்றியதே இவரது ஊடகவியற்துறை உள் நுழைலின் ஆரம்பமாக அமைந்தது. சில மாதங்கள் அங்கு பணியாற்றியவர் 1962ல் "சுதந்திரன்" பத்திரிக்கையில் இணைந்துகொண்டார். முதலில் விற்பனை முகாமையாளராகப் பணியைத் தொடங்கிய மகேசன் ஐயா, உதவி ஆசிரியராகி பின் ஆசிரியராகினார்.

"எண்ணம்" என்ற தலைப்பில் ஆசிரியர் தலையங்கங்களையும் "அரசியல் மடல்" என்ற கடிதத் தொடரையும் எழுதி வாசகர்களை ஈர்த்தார். அவைமட்டுமல்ல, எஸ். ஆர். எம், கோவை, எரியீட்டி, தமிழ் மாறன், திரைவாணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய பல புனைபெயர்களுள் நின்று நிறைய எழுதிக் குவித்தார். சுதந்திரனில் வந்த "கேட்டுப்பாருங்கள்" பகுதியில் குயுக்தியாராக நின்று பதிலளித்தும் வந்துள்ளார். 'சுடர்' என்ற இலக்கியத் திங்கள் இதழை 1975ஆம் ஆண்டு சித்திரை மாதம் முதல் வெளியிடத் தொடங்கினார். 1977 வரை சுடரில் ஆசிரியராகவிருந்து இலக்கியம் வளர்த்தார்.

தெருப்புலவர் சுவர்க்கவிதை, இலங்கையில் உயர் கல்வி, இலங்கைத்தமிழர் இன்னல் தீருமா?, அனைத்துலக நீதிச்சபை முன் இலங்கைத் தமிழர் பிரச்சினை, தமிழ் மண் காப்போம் தாயகம் மீட்போம், தமிழன் சிந்திய இரத்தம், தடுப்புக்காவலில் 19 நாட்கள், பாரளுமன்றத்தில் பெரியவர் முதலிய நூல்களை சுதந்திரன் வெளியீட்டகத்தின் மூலம் வெளியிட்டார். மே22. நெஞ்சம் நிறைந்த தம்பி, துரோகிகளே தூரவிலகுங்கள். அரசியல் மடல், செல்வாஞ்சலி ஆகிய நூல்களை அவர் தானே எழுதி வெளியிட்டார்.

இவற்றுள் அரசியல் மடல் கட்டுரைகளின் முதலாம் தொகுதியை விடுதலைப்பாசறை வெளியீடு என்ற சொத்தப் பதிப்பகத்தின் மூலம் வெளியிட்டார். அதன் இரண்டாம் தொகுதியையும், நான் அகதி ஆனது ஏன்? அண்ணா, தமிழ் நாடு கண்டேன், யாழில் எழுந்த தமிழோசை, கோவை மகேசன் கவிதைகள், கோவை மகேசன் கட்டுரைகள் என்பவற்றை தன் பதிப்பகம் மூலம் வெளியிட எண்ணிய அவரது எண்ணம் ஈடேறுமுன் அவரைக் காலன் திருடிச் சென்றுவிட்டான்.

அரசியல் சூழல் அவரை ஈழத்திலிருந்து அள்ளிச் சென்று பாரததேசத்தில் சேர்த்தது. அங்கும் "வீரவேங்கை" என்னும் இதழை 1984ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் வெளியிட்டு அரசியல் பரப்புரை செய்தார். 1990 எப்ரல் மாதத்தின் பின் உடல் நலமின்மை காரணமாக அதனை வெளியிட இயலாது போனது. நோய் படிப்படியாக அதிகரித்து 04.07.92 அன்று வேட்கை தணியாமலே விண்ணகம் ஏகினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 158. திருகோணமலை
## மு. பத்மநாப சர்மா
## (பண்டிதர் ஐயா – சிற்பி)
## (09.05.1939 - 01.01.2021)

ப்ரஹ்மஸ்ரீ மு . பத்மநாப சர்மா அவர்கள் யாழ்ப்பாணம் காரை நகரில் பிரபல சோதிடர் முத்துஸ்வாமி குருக்கள் (காய்கட்டி ஐயர்) கல்யாணி அம்மா தம்பதியருக்கு 1939 ஆண்டு மே மாதம் 9 ஆம் தேதி மகனாகப் பிறந்தார். முத்துஸ்வாமி குருக்கள் கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். குருத்துவத் தொழில் காரணமாக காரைநகரில் குடியேறி காரைநகர் சிவகாமி அம்மன் ஆலய பிரதம குருவாக பணி செய்து வந்தார். அதே நேரத்தில் சோதிடப் பணிகளையும் மேற்கொண்டு வந்தார். இவர் வடமொழி மற்றும் தமிழ் மொழியில் புலமை வாய்ந்தவர்.

பத்மநாப சர்மா காரைநகர் மெய்கண்டான் வித்தியாலத்திலும் காரைநகர் இந்துக் கல்லூரியிலும் தமது பாடசாலைக் கல்வியைப் பயின்றார். அதே சமயத்தில் தனது தகப்பனாரிடம் வேத ஆகம கல்வியையும்,பூஜை முறைகளையும் பயின்றார். தமது முதல் ஆலய பூஜையை தந்தை பூஜை செய்த சிவகாமி அம்மன் ஆலயத்தில் துவங்கினார்.

இறைவன் தந்த கொடையாக இயற்கையில் தாம் பெற்ற அறிவால் இவர் தனது சிறு வயது முதல் களிமண்ணில் சிற்பங்களைத் தாமாகவே செய்யத் துவங்கினார் பின்னாளில் தேர்ந்த வல்லுநர் ஆனார். பின்னர். ஆசிரியராகப் பணி நியமனம் பெற்று மட்டக்களப்பு வந்தாறுமூலையில் அமைந்த தமிழ் வித்தியாலயத்தில் தமது ஆசிரியப் பணியினைத் துவங்கினார். பின்னர் திருகோணமலை புனிதவளனார் வித்தியாலயத்தில் மரவேலைப்பாடத்திட்ட ஆசிரியரகப் பணி நியமனம் பெற்றார் . அங்கு தமிழ், சமயம், சித்திரம் ஆகிய பாடங்களையும் கற்பித்தார். ஆசிரியர் பணிக்கிடையேயும் தனது சிற்பம் செய்யும் கலையினையும் மேம்படுத்திக் கொண்டார். அதற்காக 1963 இல் திருக்கோணேஸ்வரத்திலும் 1970 இல் பேராதனைக் குறிஞ்சி ஆலயத்திலும் சிற்பி திரு. நாகலிங்கம் அவர்களிடம் நேரடியாக சிற்ப நுணுக்கங்களை கற்றுத் தேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் 1979 இல் கோணேஸ்வர அச்சக ஸ்தாபகர் மற்றும் தலை சிறந்த சிவாச்சாரியார் ப்ரஹ்மஸ்ரீ சண்முகரத்தின சர்மா தையல்நாயகி அம்மா தம்பதிகளின் மூத்த புதல்வி ஜெகதாம்பிகையைத் திருமணம் செய்துகொண்டு திருகோணமலையை தமது வாழ்விடமாகக் கொண்டார்.

இவர் தனது இல்லத்தில் ஒரு சிற்ப அருங்காட்சியம் போல நூற்றுக்கணக்கான சிற்பங்களைச் செய்து வைத்துள்ளார். விநாயகர், சிவன், அம்பாள், சிவலிங்கம், நவக்கிரஹம், நந்தி, முருகன், மஹாவிஷ்ணு, யானை, குதிரை, அபிராமிப் பட்டர், வள்ளுவர் என்று நீண்டு செல்கிறது இந்த வரிசை. இவற்றினை இவரது குடும்பத்தினர் இன்னும் பாதுகாத்து வருகின்றனர்.

தமது ஆசிரியப்பணியிலிருந்து ஓய்வு பெற்றபின் தாம் பெரிதும் விரும்பிய சிற்பக்கலையில் முழுநேரமும் ஈடுபட்டார். திருகோணமலையில் ஆன்மீகத்தொண்டுகள் புரிந்த அமெரிக்க நாட்டைச் சேர்ந்த சுவாமி தந்திரதேவாவுடன் நட்பும் அன்பும் பூண்டவர். அவர்களுடன் இணைந்து திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள வசதி குறைந்த பின் தங்கிய ஆலயங்களுக்கு சிலைகளை இலவசமாக செய்து வழங்கிவந்துள்ளார்கள்.

இவரது பல சிலைகள் இலங்கையிலுள்ள பல கோயில்களிலும், அறநெறிப் பாடசாலையிலும் இடம்பெற்றுள்ளது. ஸ்ரீ கோணேச்வரா இந்துக் கல்லூரி, உவர் மலை விவேகானந்தா கல்லூரி என்பவற்றில் ஏழு அடி உயரமான விபுலாந்த அடிகளின் சிலைகளும், ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் உள்ள ஏழு அடி உயரமுள்ள தங்கம்மா அவர்களின் சிலைகளும் இவரது கைவண்ணத்திற்கு அமைந்த சான்றாகும். மேலும் பல பாடசாலைகளில் உள்ள சரஸ்வதி சிலைகளும் இவர்களால் படைக்கப்பட்டதே.

இவரது சிற்பங்கள் பலமுறை திருகோணாமலை நகராட்சி மண்டபத்திலே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. மாகாண, மாவட்ட மட்டங்களில் நடைபெற்ற கலைப்போட்டிகளில் தொடர்ந்து எட்டு வருடங்கள் முதல் பரிசைப் பெற்றார். இவ்வறு காட்சிக்கு வைக்கப்பட்ட சிலைகளில் நான்கு சிலைகள் தெரிவு செய்யப்பட்டு கொழும்பு மயூராபதி அம்மன் திருமண மண்டப கலைக்கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. 2011 இல் திருகோணமலை பிரதேச சாகித்யவிழாவிலும், 2012 இல் கிழக்கு மாகாண சபையின் விழாவிலும் மு. பத்மநாப சர்மா அவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

மேலும் இலங்கை அரசின் உயரிய விருதுகளான கலாபூஷண விருது 2014 நகர முதல்வர் விருது 2014 ஆகிய விருதுகளை சிறந்த சிற்பி என்னும் திறமைக்காக பெற்றுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பப் பணிகளுக்கிடையே இலிங்க நகர் பிள்ளையார் கோயில் மற்றும் சிவயோக சமாஜம், திருகோணமலை மனோன்மணி அம்மன் ஆலயம் ஆகியவற்றில் பூஜையும் செய்து வந்தார். சிவயோக சமாஜத்தில் தொடர்ந்து இருபத்து ஐந்து வருடங்கள் பூஜைகள் செய்து வந்துள்ளார். மேலும் யாகங்களுக்கு தேவையான விசேட மூலிகைகள் சமித்துக்கள் ஆகியவற்றை தமது இல்லத்தில் சேகரித்து ஆலயங்களுக்கு வழங்கி வந்தார். தெளிவான புலமையும், கூர்மையான அறிவும், அன்பும் பண்பும், ஆச்சாரமும் நேர்மையையும் உறுதியாக கடைப்பிடித்து வந்தவர். எந்நேரமும் சுறுசுறுப்பாக செயல்படும் இவரை மக்கள் பண்டிதர் ஐயா என அன்போடு அழைப்பர். இவர்கள் தமது எண்பத்து இரண்டாவது வயதில் 1-1-2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.

தமக்கு இருந்த இசை ஆர்வத்தினால் தனது புதல்வர்களை சிறந்த இசைக்கலைஞர்களாக் உருவாக்கினார். இவரது மூத்த மைந்தன் ப. திவ்யரூப சர்மா (விரிவுரையாளர் கிழக்குப் பல்கலைக்கழகம் மட்டக்களப்பு) அவர்கள் இலங்கையின் பிரபல மிருதங்க வித்வான் ஆவார். இவரது மற்றொரு மைந்தரான ப. சாந்தரூப சர்மா அவர்கள் திருகோணமலையில் மிருதங்கம், புல்லாங்குழல் இசைக்கலைஞராகவும், சிவாச்சாரியராகவும் திகழ்ந்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 159. பத்திரிகையாளர், உடுவில் வி. பரிபூரணானந்த சர்மா

(20.07.1942 - 22.11.2005)

யாழ்ப்பாணத்துக்குப் பெருமை சேர்க்கும் உடுவில் என்னுஞ் சிற்றூரில் சிவஸ்ரீ தி. விஸ்வநாதக் குருக்கள் லலிதாம்பாள் தம்பதிக்கு மகனாக 1942.07.20 இற் பிறந்தவர் பரிபூரணானந்த சர்மா. பல்லாண்டுகளுக்கு முன்னர் தென்னிந்தியாவைச் சேர்ந்த கும்பகோணத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து குடியேறிய இராமர் என்பவருடைய வழித்தோன்றல். தாயார் லலிதாம்பாள், காஞ்சிபுரத்திலிருந்து வந்த குஞ்சிதபாத பட்டர் பரம்பரையைச் சேர்ந்தவர்.

கொழும்பு காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் நிர்வாக உத்தியோகத்தராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவரும் பிரபல சோதிடராக விளங்கியவருமான வி.பரமேஸ்வரன், ஸ்ரீமதி வாலாம்பிகை அம்மா சுப்பிரமணிய ஐயர், வி. சிவசாமிக் குருக்கள் ஆகியோரைப் பாசமிகு உடன்பிறப்புக் களாகக் கொண்டிருந்தவர் பரிபூரணானந்த சர்மா.

இவர் தனது ஆரம்பக் கல்வியைத் தன் பெரிய தந்தையார் பண்டிதர் தி. சுப்பிரமணிய ஐயர் ஆசிரியராக இருந்த உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையிற் கற்றார். இடைநிலைக் கல்வியைக் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியிற் பெற்று 1959ஆம் ஆண்டிலே க.பொ.த(சா/த) பரீட்சையிற் சித்தியடைந்தார். இருமொழிப் பண்டிதரும். தமிழ் சமஸ்கிருதம், சமயம் ஆகிய பாடங்களை மாணவருக்கு நன்கு போதித்தவருமாகிய தந்தையார் விஸ்வநாதக்குருக்கள் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தமை இவருடைய கல்வி வளர்ச்சிக்கும் ஒழுக்கச் சிறப்புக்கும் பெரிதும் உதவியாக இருந்தது.

தலைநகர் கொழும்பிற்கு வெளியேயிருந்து வெளிவரத் தொடங்கிய முதலாவது தமிழ் நாளிதழ் என்ற பெருமைக்குரிய "ஈழநாடு" இதழின் நிருபராக 1963ஆம் ஆண்டில் இவர் கடமையாற்றத் தொடங்கினார். 1965இல் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியிற் சேர்ந்து கற்று, 1967ஆம் ஆண்டில் தமிழ் வர்த்தக தராதரப் பத்திரப் பரீட்சையிற் சித்தியடைந்தார். வர்த்தக ஆசிரியராக நியமனம் பெற்று 1968.01.01 இல் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலே தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். நான்கு ஆண்டுகள் அப்பாடசாலையிற் கடமையாற்றிய பின்னர், கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டு ஓராண்டு காலம் அங்கே பணிபுரிந்தார். அக்காலத்திலேயே அவர் ஆசிரியர் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரிய இரண்டு ஆண்டு காலம் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவேற்றிய இவர் மாத்தளை இந்து மகாவித்தியாலயம் (04 ஆண்டுகள்), எனமல்பொத்த முஸ்லிம் வித்தியாலயம் (03 மாதம்), கனகராயன்குளம் மகாவித்தியாலயம் (01மாதம்), முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி (02 ஆண்டுகள்), ஆகிய வெளிமாவட்டப் பாடசாலைகளிற் கடமையாற்றியபின்னர் 1982ஆம் ஆண்டில் உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் தன் கடமையைத் தொடர்ந்தார். எட்டு ஆண்டு காலச் சேவையின் பின், சில மாதங்கள் நவாலி மகாவித்தியாலயத்திற் பணியாற்றிவிட்டு, 1992ஆம் ஆண்டிலே கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றார். தமிழ்க் கந்தையா வித்தியாசாலையிலே வர்த்தகக் கல்வி வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றிய இவர், ஆசிரியர் கழகத் தலைவர், விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர், பகுதித் தலைவர் போன்ற பதவிகளையும் திறம்பட வகித்து, 2002ஆம் ஆண்டு ஆடி மாதம் 19ஆம் திகதி ஓய்வு பெற்றார். கடமையுணர்ச்சி, கற்பித்தற் திறமை, எளிமையான வாழ்க்கை, இனிமையான சுபாவம், பிறர்க்குதவும் பாங்கு போன்றவற்றால், இவர் கற்பித்த எல்லாப் பாடசாலைகளிலும், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அதிகாரிகள் போன்ற எல்லாத் தரப்பினரின் மதிப்புக்கும் இவர் ஆளாகியிருந்தார்.

மானிப்பாய், மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் இவர் ஆசிரியராகக் கடமையாற்றிய வேளையிலேயே 1971ஆம் ஆண்டில் இவருடைய திருமணம் நடைபெற்றது. யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடி பிரம்மஸ்ரீ ம. செந்தில்நாதக் குருக்கள் சங்கரம்மா தம்பதியின் சிரேஷ்ட புத்திரி ரேவதி அம்மா இவருடைய வாழ்க்கைத் துணைவியானார். இனிய இல்வாழ்க்கையின் பயனாக, சுபாஷினி, சசிவர்ணன், சுபாங்கினி ஆகியோரை நன்மக்கட் பேறாகக்கொண்டார்.

ஆசிரியருக்குரிய கடமைகள் அனைத்தையும் செவ்வனே ஆற்றிய அதே வேளையில், பத்திரிகைத்துறைக் கடமைகளையும் மிகுந்த உற்சாகத்துடன் செய்து வந்தவர் பரிபூரணானந்த சர்மா. 1985ஆம் ஆண்டில் உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளில் நிருபரானார். செய்திகளை அனுப்புவதுடன் அமையாமல் செய்தி விளக்கக் கட்டுரைகள், விவசாய விருத்திக்கட்டுரைகள், பிரமுகர் பேட்டி, நூல் விமர்சனம் போன்றவற்றையும் எழுதி, பத்திரிகையின் தரம் உயர்வதற்கு உதவினார். உடுவில் கலைமதி சனசமூகநிலையம், உடுவில் இந்து இளைஞர் மன்றம் போன்றவற்றின் வளர்ச்சியில் இவர் அக்கறை எடுத்தார். இவருடைய சமூகப்பணிகளை அங்கீகரிக்கும் வகையில், இவரை ஓர் சமாதான நீதவானாக இலங்கை அரசாங்கம் 2003இல் நியமித்துக் கௌரவித்தது. எந்த வைபவத்திற்கு அழைத்தாலும், தவறாது சமூகமளித்து வைபவத்தைச் சிறப்பிப்பது இவருடைய நற்பண்புகளுள் ஒன்று. ஆலயத் திருவிழாக்கள், சமயச் சொற்பொழிவுகள், நியந்த்ரீ, இந்துக் குருமார் ஒன்றியம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் தர்மசாஸ்தா குருகுலம் சம்பந்தமான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன்மூலம் இவர் ஆற்றிய சமயப் பணிகள் தனித்தன்மை வாய்ந்தவை.

கடமையுணர்ச்சி நிறைந்த நல்லாசானாக, பாசம் மிக்க இல்லத் தலைவனாக, தோழமை உணர்ச்சி மிக்க நண்பனாக, சமூகப் பொறுப்பு நிறைந்த பத்திரிகையாளனாக, உயர்ந்த சிந்தனையும் எளிமையான வாழ்க்கையும் கொண்ட ஒரு மனிதனாக பல்வேறுபட்ட மக்களின் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராக வாழ்ந்த பரிபூரணானந்தசர்மா, தன் குலதெய்வ மாகிய கற்பொக்கணை விநாயகப் பெருமானின் திருவடி நிழலில் 22.11.2005இல் அமைதிகொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 160. வேதசிவாகம வித்யாபூஷணம் தாணு. அரிஹரசுப்பிரமணிய சிவாசாரியார்

**(இணுவில் தர்மசாஸ்தா குருகுல உப அதிபர்)**

**(23.04.1942 - 08.03.2019)**

இந்தியாவின் கேரளா - சாட்டுப்பத்தூரிலிருந்து இலங்கைத் திருநாட்டின் வடபால், யாழ்ப்பாணம், மாவிட்டபுரம் ஆலயத்தில் பணிசெய்வதற்காக அழைத்துவரப்பட்டவர் பிரம்மஸ்ரீ மகாதேவஐயர் தாணு ஐயர் ஆவார். அவர் மனைவி இராஜலட்சுமி அம்மா. இவர்களது மூன்றாவது புதல்வராக அரிஹரசுப்பிரமணியக் குருக்கள் 23.04.1942 இல் பிறந்தார். இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் இவருடைய மூத்த சகோதரர் ஆவார். லக்ஷ்மி அம்மா, ராமச்சந்திரன் ஆகியோர் இவரது சகோதரர்கள்.

இவர் தமது மூன்றாவது வயதில் தமது தாயை இழந்து தந்தை மற்றும் தமக்கையின் அரவணைப்பில் வளர்ந்தார். மாவிட்டபுரம் - வீமன்காமம் ஆங்கிலப் பாடசாலையில் இவரது கல்வி வளம்பெற்றது. அன்பும் பண்பும் இயல்பாகவே பெற்றிருந்த இவர் சீதாராம சாஸ்திரிகள், நாராயண சாஸ்திரிகள் ஆகியோரிடமும், தமது தமையனாரிடமும் வேத சிவாகமப் பயிற்சிகளைப் பெற்று சிவாசாரியத் தகைமையைப் பெற்றார். ஜோதிஷம், சிற்ப சாஸ்திரம் ஆகியவற்றிலும் தமிழ், ஆங்கில மொழிகளிலும் திறமைபெற்று விளங்கினார்.

தமது இளமைப்பருவத்தில் சிறியதந்தையார் ஹரிஹரக் குருக்களுடன் உதவிக் குருக்களாக கோண்டாவில் நெட்டிலிப்பாய்ப் பிள்ளையார் ஆலயத்தில் நித்தியபூஜைகளைச் செய்துவந்தார். 1967ஆம் ஆண்டு ஆலயத்தின் பூஜைப் பொறுப்புக்கள் முழுவதையும் அரிஹர சுப்பிரமணியக் குருக்களிடம் ஒப்படைத்துவிட்டு இந்தியாவுக்குச் சென்றுவிட்டார் சிறியதந்தையார்.

1975ஆம் ஆண்டில் சிவஸ்ரீ இராமநாதக் குருக்கள் அவர்கள் மணிக்குருக்களுக்கு ஆசார்யாபிஷேகம் செய்துவைத்தார். இராமலட்சுமணர்கள்போல இணைபிரியாதவர்களாக சிவஸ்ரீ மகாதேவக் குருக்களும், சுப்பிரமணிக்குருக்களும் வாழ்ந்துவந்தமை யாவரும் அறிந்ததே. உரிய வயதில் தாணுஐயர் தமது மூத்த மகனுக்கு சோமசுந்தரக் குருக்கள் - பராசக்தி அம்மா தம்பதிகளின் இரண்டாவது புதல்வி புவனாம்பிகை அம்மாவை திருமணம் செய்து வைத்தவர், அதன்பின் குடும்ப ஒற்றுமைகருதி அவர்களின் கடைசி மகளான பூர்ணாம்பிகை அம்மாவை ஹரிஹரசுப்பிரமணியக் குருக்களுக்கு மணம் செய்துவைத்தார். இவர்களுக்கு முரளிதரசர்மா, சபர்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அமரர்), ஸ்ரீவதனா, தேனுகா ஆகியோர் மக்கட்செல்வங்களாவர். இக்குழந்தைகளை நன்கு வளர்த்து உரியவயதில் திருமணங்களையும் நடத்திவைத்தார்.

நெட்டிலிப்பாய்ப் பிள்ளையார் ஆலய குருத்துவ சேவையுடன், வேறு பல ஆலயங்களிலும் தமையனார் மகாதேவக் குருக்களுடன் இணைந்தும் தனியாகவும் கும்பாபிஷேகம் முதலிய பல நைமித்திகக்கிரியைகளைச் செய்துவந்தார். இணுவில் வட்டுவினிப்பதி கண்ணகை அம்மன் கோவிலில் மகாதேவக் குருக்களினால் ஆரம்பிக்கப்பட்டு நீண்டகாலமாக நடந்துவருகின்ற தர்மசாஸ்தா குருகுலத்தில் முழுநேர ஆசிரியராக இருந்து தமையனாருடன் இணைந்து மாணவர்களுக்கு வேத சிவாகமக் கிரியை நெறிகளையும் ஜோதிடம் முதலியவற்றையும் கற்பித்துவந்தார். இவர் பணியாற்றிய நெட்டிலிப்பாய்ப் பிள்ளையார் கோவில் மாணவர்களுக்கான பயிற்சிக் கூடமாகவும் விளங்கியது. மணிவாத்தியாருடன் இந்த ஆலயம் செல்லும் மாணவர்கள் செயன்முறைப் பயிற்சிகளில் மிகவும் சிறந்து விளங்கினர். நெட்டிலிப்பாய்ப் பிள்ளையார் ஆலயத்தின் நித்திய நைமித்திக குருவாக சுமார் ஐம்பது வருடங்கள் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. இவ்வாலயத் திருப்பணிகள் முதலியவற்றிலும் முழுமையாக ஈடுபட்டு மிகச் சிறப்பா மிளிர அரும்பாடுபட்டார். 1980, 1999, 2011 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற மூன்று கும்பாபிஷேகங்களை இவ்வாலயத்தில் தலைமையேற்று நடத்திவைத்த பெருமை இவருக்குரியது.

இனிமையாகவும் அமைதியாகவும் மாணவர்களுக்குக் கற்பித்து அவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைப் பொறுமையாகப் போக்கி உலகம் போற்றும் உத்தமர்களாகப் பலநூற்றுக்கணக்கான சிவாசாரியர்களை உருவாக்கிய தர்மசாஸ்தா குருகுலத்தின் தன்னலம் கருதாத உயரிய பணியில் மணிவாத்தியாருடைய பங்களிப்பும் முதன்மையானது.

இவருடைய சுத்தமான வேதமந்திர கோஷமும், இனிய இசையோடு கூடிய ஸ்தோத்திரங்களும் கணீர் என்ற குரலில் பத்ததி வாசிப்பும் பலரைக் கவர்ந்தவையாகும். இத்தனை சிறப்பு இருந்தும் அமைதியாக, தனனடக்கமாக, ஆடம்பரமில்லாமல் தம் பணிகளைச் செய்துவந்தார்.

முகூர்த்தம் கணிப்பதில் வல்லவர். இவரிடம் பார்வை பார்த்து நூல்கட்டுவதற்காகவே பலர் தேடி வருவார்கள். ஜாதகம் பார்ப்பதற்காகவும் பலர் வருவார்கள்.

அமைதியாக ஆன்மீகப்பணியாற்றி வாழ்ந்த அரிஹரசுப்பிரமணியக் குருக்கள் அவர்கள் 2019ஆம் ஆண்டு பங்குனி மாத எட்டாம் திகதி தமது நாளாந்தக் கடமைகளை முடித்து இறைவனை வணங்கி உறக்கத்திற்குச் சென்றவர் அமைதியாக இறைபதம் சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 161. சித்திரமேழி, சோ. நடராஜக் குருக்கள் (27.06.1943 - 19-09.2005)

இளவாலை சித்திரமேழியைச் சேர்ந்த சோமசுந்தரக் குருக்களுக்கும் இந்தியாவிலுள்ள பாலக்காட்டைச் சேர்ந்த அனந்தாம்பாளிற்கும் நான்காவது, கடைசிப் பிள்ளையாகப் பூமியில் தோன்றியவரே நடராஜக் குருக்கள் ஆவார். இவரைக் கோபால் என்று எல்லோரும் செல்லமாக அழைப்பார்கள். இவருக்குச் சித்திராங்கி என்ற பெயருடைய ஒரு தமக்கையாரும். பாலசுப்பிரமணியக் குருக்கள், மகாகணபதிக் குருக்கள் என்ற பெயர்களுடைய இரு அண்ணன்மாரும் சகோதரர்களாக உள்ளனர்.

இவர் தமது இளமைக் கல்வியை இளவாலை மெய்கண்டான் தமிழ் வித்தியாலயத்தில் பெற்றுக்கொண்டார். பின்னர் சில வருடங்கள் நல்லூர் சிவன் கோவிலில் சேவையாற்றியபின் திருக்கேதீஸ்வரத்தில் நடைபெற்ற குருகுலத்தில் பயின்று சம்ஸ்கிருத பண்டிதரானார். இதன் பின்னரும் நல்லூர் பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகளிடமும் கோண்டாவில் பிரம்மஸ்ரீ கி. நாராயண சாஸ்திரிகளிடமும் சம்ஸ்கிருதக்கல்வியை மேலும் கற்று வேத சிவாகமங்களில் விற்பன்னரானார்.

கொழும்பில் சில ஆலயங்களில் அர்ச்சகராகச் சில ஆண்டுகள் பணியாற்றிய நடராஜக் குருக்கள் அதன்பின் யாழ்ப்பாணம் அரியாலை மாம்பழம் சந்தியிலுள்ள நாச்சிமார் கோவில் குருவாகப் பணியாற்றிவந்தார்.

1972ஆம் ஆண்டளவில் இளவாலை மாரீசன்கூடால் முருகமூர்த்தி ஆலயத்தின் குருவாகப் பொறுப்பேற்றார். அந்த ஆலயத்திலேயே நயினாதீவு சிவஸ்ரீ ஐ கைலாசநாதக் குருக்கள் அவர்களால் ஆசார்யாபிஷேகம் செய்துவைக்கப் பெற்றுக் குருப்பட்டம் பெற்றார்.

சிறுவயதில் தந்தையை இழந்த இவர் 1974இல் தாயையும் இழந்தார். நல்லூர் நடராஜக்குருக்களிற்கும் இந்தியா பாலக்காடு மீனாட்சி அம்மாவிற்கும் பிறந்த நான்காவது புதல்வியாகிய விஜயகுமாரியை 1975ஆம் ஆண்டு திருமணம் புரிந்தார். இவர்களின் இனிய இல்லறத்தின் பயனாக அனந்தலக்ஷ்மி, ஸ்ரீதேவி ஆகிய இரு புதல்வியரைப் பெற்றெடுத்தனர்.

மாரீசன்கூடல் முருகமூர்த்தி கோவிலில் சுமார் 12 வருடங்கள் குருவாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றிவந்தார். பின்பு சில காலம் சித்திரமேழியிலுள்ள தமது இல்லத்தில் தங்கியிருந்தபின் நல்லூர் வந்தார். 1984 ஆம் ஆண்டு நல்லூர்க் கந்தசுவாமி கோவில் குருவாகப் பணியாற்றிவந்தார். நல்லூர் மடத்தில் சில காலம் வாழ்ந்து நல்லூரிலேயே அழகிய இல்லமொன்றை அமைத்து 1985இலிருந்து அங்கேயே தமது இல்லாளுடன் இல்லறம் நடத்திவரலானார்.

1987 இலிருந்து இறக்கும்வரை பல கும்பாபிஷேகங்கள், மஹோற்சவங்கள் முதலிய வைபவங்களைப் பல்வேறு ஆலயங்களில் நடத்திவந்ததுடன் அந்தணர் இல்லங்களில் உபநயனம், திருமணம் முதலிய வைதிகக் கிரியைகளையும் சிறப்பாக நடத்திச் சேவையாற்றி வந்தார். தமது புதல்விகள் இருவரையும் அன்புடன் அரவணைத்து வளர்த்து ஒழுக்கமும் பண்பும் ஊட்டி கல்வி கலைகளிலும்வல்லவர்களாக மிளிரச் செய்தார். இவரது மூத்த புதல்வி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே இந்து தத்துவத்தில் சிறப்புக் கலைமாணிப் பட்டம் பெற்று கொழும்பு இந்து கலாச்சார அமைச்சின்கீழ் இந்து அபிவிருத்தி உதவி உத்தியோகத்தராகக் கடமையாற்றி வருகிறார். இரண்டாவது புதல்வி ஸ்ரீதேவி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இசைத்துறையைச் சிறப்புக் கலையாகப் பயின்றுள்ளார்.

பல இடங்களில் வசிக்க நேர்ந்தாலும், அந்தந்த இடங்களில் வசிக்கும் அந்தணச் சிறார்களுக்கு சம்ஸ்கிருத, வேத, சிவாகம பாடங்களைச் சொல்லிக்கொடுப்பதை விருப்பமான பணியாகத் தொடர்ந்து செய்தார்.

நல்லூர்ச் சூழலிலுள்ள பல் ஆலயங்களில் நடைபெறும் எல்லா வைபவங்களிலும் கலந்து பணியாற்றி வந்ததுடன் பல மாணவர்களுக்கு வேத, ஆகம சம்ஸ்கிருதக் கல்வி போதித்து வந்தார். நல்லை ஆதீன சிவாச்சாரியாராக இருந்து திருமண வைபவங்களின் கிரியைகளை ஆற்றிவந்தார். 'சிவாகம பிரதிஷ்டா ரத்னம்' என்ற சிறப்பு விருது இவரைக் கௌரவிப்பதாக அமைகிறது.

இவ்வாறு தமது இறுதி மூச்சுவரை தமது குடும்பத்திற்கும் நமது சமூகத்திற்கும் அயராது உழைத்துவாழ்ந்த குருக்கள் அவர்கள் 2005 ஜூன் மாதம் முதல் சிறிது நோய்வாய்ப்பட்டிருந்தார். பார்த்திப வருடம் புரட்டாதி மாதம் மூன்றாம் திகதி (19-09.2005) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 162. மயிலணி
# சி. நாகேஸ்வரக்குருக்கள்

(11.03.1943 - 03.11.1994)

சுன்னாகம் நகரில் மயிலணிப்பதியில் ஸ்ரீவத்ஸ கோத்ரம் - ஆஸ்வாலாயன சூத்திர மரபில் 1943ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11ஆந் திகதி கார்த்திகை நட்சத்திரத்தில் சிவகடாட்சக் குருக்கள் - சிவகாமசௌந்தரியம்மா தம்பதிகளுக்கு ஏகபுதல்வராக வந்துதித்தார் சிவஸ்ரீ நாகேஸ்வரக்குருக்கள்.

தனது ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி என்பவற்றை மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையில் பெற்றுக்கொண்டார். சமஸ்கிருத ஆரம்பக்கல்வியைத் தனது தந்தையாரிடம் பெற்றுக்கொண்டு, சுன்னாகம் சதாசிவ பிராசீன பாடசாலையில் கற்று, தமது சமஸ்கிருதக் கல்வியறிவை வளர்த்துக் கொண்டார். கிரந்தம், நாகரம் ஆகிய இரு எழுத்து வடிவங்களிலும் நன்கு பரிச்சயமுடையவரான குருக்கள் அவர்கள் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது, இலங்கையின் பல பாகங்களிலும் சாதகாசார்யாராகவும் பணியாற்றியுள்ளார்.

அரச சேவையில் இணைந்து, தபாலதிபராக கொழும்பு, அனுராதபுரம், திருகோணமலை, ஹற்றன், சுன்னாகம், மட்டக்களப்பு, வவுனியா முதலிய இடங்களில் பணியாற்றிய வேளை அங்குள்ள ஆலயங்களில் சாதகாசார்யாராகவும் பணிபுரிந்துள்ளார். குறிப்பாக, கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் கோவில், கொச்சிக்கடை காளி கோவில், தம்பையா சத்திரம் சித்திவிநாயகர் கோவில், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் கோவில், வவுனியா குருமண்காடு பிள்ளையார் கோவில், கோயிற்குளம் சிவன் கோவில், கண்டி கட்டுக்கலை பிள்ளையார் கோவில் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றபின்னர், தனது மனைவியின் தந்தையாரான மயிலணி சிவஸ்ரீ சி. சர்வேஸ்வரக் குருக்களால் சிவாசார்யாபிஷேகம் செய்யப் பெற்று, ஏழாலை அம்பலவாணேஸ்வரர் (சிவன்) கோவில், மயிலணி முத்துமாரி அம்மன் கோவில், சுன்னாகம் கிழக்கு ஊரிசாட்டி சிவபூதராஜர் கோவில் முதலிய ஆலயங்களில் பிரதம குருவாகப் பணியாற்றியுள்ளார். தனது முதலாவது மஹோற்சவத்தை ஏழாலை அத்தியடி பிள்ளையார் ஆலயத்தில் மேற்கொண்டார். தொடர்ந்து ஊரிசாட்டி சிவபூதராஜர் கோவில், அச்செழு பிள்ளையார் கோவில், அச்செழு மீனாட்சியம்மன் கோவில், மாசியப்பிட்டி மீனாட்சி அம்மன் கோவில், ஆனைக்கோட்டை வரத விக்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகர் கோவில் முதலிய பல பத்து ஆலயங்களில் பிரதம குருவாக இருந்து, மஹோற்சவத்தை நிகழ்த்தியுள்ளார்.

குருக்கள் அவர்கள் பிரதம குருவாக இருந்து பிரதிஷ்டை நிகழ்த்திய ஆலயங்களில் முதன்மையான சில ஆலயங்களாக சுன்னாகம் தெற்கு சிவபூதராஜர் கோயில், ஊரிசாட்டி சிவபூதராஜர் கோயில் முதலியவற்றைக் குறிப்பிடலாம். இவை மட்டுமன்றி தீவகம், வடமராட்சி, தென்மராட்சி முதலிய இடங்களிலும் பிரதம குருவாக இருந்து அலங்கார உத்ஸவம், மஹோத்ஸவம், கும்பாபிஷேகம் முதலியவற்றை நிகழ்த்தியுள்ளார்.

தனது தந்தையாரிடமிருந்து வைதிகம் கற்றுக் கொண்ட குருக்கள் அவர்கள் அந்தணர் சமூகத்தில் நிகழும் பூர்வக் கிரியைகளையும் அபரக்கிரியைகளையும் அவ்வப்போது செவ்வனே நிகழ்த்தி வந்துள்ளார். தனது தந்தை வழியைப் பின்பற்றி ஆஸ்வலாயன மரபுப்படி கிரியைகளை நிகழ்த்தும் அனுபவமுடையராகவும் அக்காலத்தில் குருக்கள் அவர்கள் இருந்துள்ளார். நீர்வைக் கந்தசாமி கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ சு. இராஜேந்திரக்குருக்களின் அன்பைப் பெற்றதால், அவரது வழிகாட்டல் - ஆலோசனைகள் மூலம் மனையடி சாஸ்திரத்தில் அனுபவமுடையவராக இருந்தார். இதற்காக ஏழாலை, குப்பிளான், சுன்னாகம் பிரதேச மக்களால் நாடப்பட்டார்.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிப் பாண்டித்தியமுடையவரான குருக்கள் அவர்கள் தனது குருத்துவப் பணிக்கு மேலதிகமாக, தன்னை நாடிவரும் மக்களின் தேவைக்கேற்ப தமிழிலுள்ள கடிதங்களை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்துக் கொடுக்கும் தன்னார்வப்பணியில் ஈடுபட்டு வந்ததுடன் உத்தரவு பெற்ற படவரைஞராக வீடுகளுக்கான திட்டப்படங்களை உரிய அளவுப்படி வரைந்து கொடுத்தும் உதவி வந்துள்ளார். இந்துக்குருமார் ஒன்றியத்தின் ஆரம்ப கால - ஆயுட்கால உறுப்பினரான குருக்கள் அவர்கள் சுன்னாகம் ஐக்கிய நாணய சங்கத்தின் தலைவர், செயலாளர் பதவிகளையும் வகித்து வந்துள்ளார். இவை மட்டுமன்றி அரசபணியில் இருந்தபோது, தேசிய தபாலதிபர் சங்கத்தின் யாழ்ப்பாண இணைப்பாளராகவும் பொதுப்பணியாற்றியுள்ளார்.

குருக்கள் அவர்கள் மேற்கொண்ட இறைபணிகளுக்காக ஆலய நிர்வாகிகளாலும் மக்களாலும் பாராட்டப்பட்டார். இவற்றின்போது வேதசிவாகம கிரியா ஜோதி, வேதாகமக்கிரியாமணி, சாதகரத்னம், கிரியா சிரோமணி முதலிய விருதுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

எல்லோருடனும் அன்புடனும் பண்புடனும் கலகலப்பாகவும் பழகும் பாங்குடையவரான குருக்கள் அவர்கள் எதிர்பாராதவிதமாக இளவயதிலேயே 1994ஆம் ஆண்டு ஐப்பசிப் பிரதமை (கந்தஷஷ்டி விரதாரம்பம் - 03.11.1994) அன்று சிவபதமடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 163. வயலின் வித்துவான், ஆவரங்கால் வே. தியாகராஜசர்மா

(21.06.1944 - 17.01.2010)

திருமணம்: 1975.
மனைவி: பரமசாமிக்குருக்கள் கோகுலராணி

அச்சுவேலி சித்திவிநாயகம் ஆசிரியரிடம் முறையாக கர்நாடக சங்கீதம் கற்று அதன்பின் இந்தியா சென்று திருப்பாற்கடல் வீரராகவனிடம் இசைநுணுக்கங்கள் கற்று, கொழும்பு இலங்கை வானொலி புகழ் சோமாஸ்கந்த சர்மாவிடம் வயலின் கற்றுக்கொண்டார். பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலாமன்றத்தில் நீண்டகாலம் இசை ஆசிரியர். பல இடங்களில் பல மாணவர்களுக்கு வாய்ப்பாட்டு, வயலின் கற்பித்தார். பல கச்சேரிகளில் தனியாகவும், பக்கவாத்தியமாகவும் வாசித்துப் புகழ்பெற்றார். சந்நிதியான் ஆச்சிரம நிகழ்வுகள் அனைத்திலும் நீண்டகாலம் இவரே வாசித்து வந்தார்.



## 164. சங்கீதக் குருக்கள் இ. சோமசுந்தரேஸ்வரக் குருக்கள் (சுப்பையர்)

(20.06.1945 ~ 05.03.2004)

அளவெட்டி ஸ்ரீ கும்பளதவளைப் பிள்ளையார் கோயில் பிரதமகுரு

தந்தையார் இராமலிங்க ஐயர்
தாய்: சீதாலக்ஷ்மி அம்மா

ஆரம்பக்கல்வி அளவெட்டி சதானந்த வித்தியாலயம்.
பண்ணிசைக் கல்வி: திரு சச்சிதானந்தசிவம், இணுவில் வடிவேல் சுவாமிகள்
உயர்கல்வி: கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி
மனைவி: சாந்திமலர் பிள்ளைகள்: 5ஆண் 2 பெண்.

அருட்கவி விநாசித்தம்பி அவர்களின் கும்பளாவளைப் பிள்ளையார் திருப்பள்ளி எழுச்சியையும், தோத்திரமாலை சதகத்தையும் தமது இனிய குரலில் இறுவட்டாகப் பாடி ஆலயத்தில் ஒலிக்கச்செய்துள்ளார்.

பல ஆலயங்களில் கும்பாபிஷேகங்கள், மஹோற்சவங்கள் செய்துள்ளார். தமது குரல்வளம், சங்கீதஞானம், பண்ணிசை அறிவு இவற்றால் எல்லா மக்களின் உள்ளங்களையும் கவர்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 165. கானவினோதன், புளியங்கூடல் சோ. சண்முகநாதக் குருக்கள் (வரதராஜக் குருக்கள்)

இந்தன் முத்துவிநாயகர் கோவில் பிரதமகுரு

(17.12.1947 - 29.08.2011)

இலங்கையின் பல பாகங்களிலும் சிவாசார்யப்பணி புரிந்து தமது இனிய குரல்வளத்தாலும், இசை ஞானத்தினாலும் அனைவரையும் கவர்ந்த பெருமைக்குரியவர்.



## 166. வயலின் வித்துவான், கொக்குவில், ச. வெங்கடேஸ்வர சர்மா

(22.06. 1948 - 20.03.1998)

திருமணம்: 27.08.1986 , மனைவி - மகேஸ்வரி

குரு: பாரதத்திலிருந்து இலங்கை வந்திருந்த சங்கரையரிடம் குரு சிஷ்ய முறைப்படி இசைபயின்று தொடர்ந்து சோமாஸ்கந்த சர்மாவிடம் வயலின் கற்றார்.

பணிகள், சபாக்கள்: தெல்லிப்பளை காசிப்பிள்ளையார் கோவில், வட்டுக்கோட்டை கலாநிலையம், திருமறைக்கலாமன்றம் போன்ற பல இடங்களில் வயலின் இசைவகுப்புகள் நடத்திவந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 167. மயிலணி,
# ச. வரதராஜேஸ்வரக்குருக்கள்
## (24.12.1948 - 17.11.2003)

யாழ்ப்பாணத் திருநகரின் வடபுலத்தே சீர்பெற்று விளங்கும் சுன்னாகம் மயிலணிப்பதியில் கௌண்டின்ய கோத்திரத்தில் சிவஸ்ரீ சி. சர்வேஸ்வரக்குருக்கள் மனோன்மணி அம்மா தம்பதிகளுக்குச் சிரேஷ்ட புதல்வராகச் சர்வதாரி வருஷம் மார்கழி மாதம் 10 ஆம் திகதி (24.12.1948) வெள்ளிக்கிழமை அத்த நட்சத்திரத்திரத்தில் அவனியில் அவதரித்தவர் சிவஸ்ரீ ச. வரதராஜேஸ்வரக்குருக்கள் அவர்கள். இவருக்கு, உருக்குமணிதேவி, லலிதாம்பாள், சண்முகானந்த சர்மா, ஜானகி, பிரணதார்த்திகர சர்மா ஆகியோர் உடன்பிறப்புக்களாக அமையப்பெற்றனர்.

இவர் தமது கல்வியறிவு விருத்தியை மயிலணி சைவ வித்தியாசாலையில் பெற்றுக்கொண்டார். சுன்னாகம் பிராசீனப் பாடசாலையிலும், உடுவில் சிதம்பரநாதக் குருக்களிடமும், கோண்டாவில் நாராயண சாஸ்திரிகளிடமும், யாழ்ப்பாணம் சீதாராம சாஸ்திரிகளிடமும், இணுவில் மகாதேவக் குருக்களிடமும் வேத சிவாகம சாஸ்திரங்களை முறைப்படி கற்றுவந்ததுடன் இலக்கண இலக்கிய அறிவும் பெற்று விளங்கினார். வைதீகக் கிரியானுபவமுறைகள், மற்றும் விளக்கங்களைத் தமது தந்தையாரிடமும் மயிலணி சோமாஸ்கந்தக் குருக்களிடமும் இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபராகிய மகாதேவக் குருக்களிடமும் கசடறக் கற்றுத் தெளிந்தார். தமது தந்தையாருடன் இளமைக் காலத்தில் அனேக ஆலயங்களிலும் நடைபெறும் கிரியை முறைகளில் பங்குபற்றி உதவிகள் செய்து குருத்துவத்துக்குரிய முறைகளைக் கற்றுணர்ந்தார். பின்னர், ஆசார்யபிஷேகம் தகப்பனாரினால் நிகழ்த்தப் பெற்று, சிறந்த ஒரு குருவாகத் திகழ்ந்தார்.

யாழ்ப்பாணம், வில்லூன்றிப் பிள்ளையார் கோயிற் பிரதமகுருக்கள் பரமசாமிக் குருக்கள் - ஆனந்தம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியான சரோஜினி அவர்களை 1978ம் ஆண்டு வைகாசி மாதம் 26 ஆம் திகதி வதுவை புரிந்து இல்லறத்தை இனிதே மேற்கொண்டார். இருமழலைச் செல்வங்களைப்பெற்று அவர்களுக்குச் சகல நற்பண்புகளையும் உயர்கல்வியையும் வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தமது குருத்துவகாலத்தில் மயிலணி கந்தசாமி கோவில் பிரதம குருவாகவும், பூசகராகவும் இருந்ததோடு யாழ். குடாநாட்டில் பல ஆலயங்களுக்கு குருத்துவப் பணியில் திகழ்ந்துவந்தார். சோதிடக்கலையில் சிறந்து விளங்கினார். வைதீக கிரியைகளை அந்தணர் இல்லங்களில் செய்விப்ப தோடு அவைபற்றிய சந்தேகங்களுக்கு விளக்கம் கூறி வந்தார். இசைவல்லுநராகவும் திகழ்ந்தார். திருமுறைகள் ஓதுதல், புராணபடனம், ஊஞ்சற்பாடல்கள் பல இராகங்களில் பாடி மகிழ்வித்தல் இவரது சிறப்பு. தமது குருநாதர் மஹாதேவக்குருக்களின் ஸ்ரீசக்ர பூஜையில் நவாவரணங்களுக்கும் அந்தந்த ராகங்களை இசைத்து சமர்ப்பணம் செய்வதில் மகிழ்ச்சியடைவார்.
தீவிர முருகபக்தரான இவர் அடியார்களுடன் சேர்ந்து கந்தரனுபூதி முதலியவற்றைப் பாராயணம் செய்வது வழக்கம்.

தமதில்லத்தில் அந்தணச் சிறார்களுக்கு வேத சிவாகம வகுப்புக்களை நடத்திவந்தார். ஆனைப்பந்தி வேதசிவாகம் குருகுல கலாசாலையிலும் சேவையினடிப் படையில் சமஸ்கிருத வகுப்புக்களை மேற்கொண்டு வந்தார்.

இவரது சேவைகளைப் பாராட்டி வழங்கப்பெற்ற விருதுகள்:

வேதசிவாகம கிரியாசிரோமணி
- சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார் கோவில்.
ஆகம கிரியாபூஷணம் - நவாலி விஸ்வநாதக் குருக்கள்
கிரியாரத்னா - கோண்டாவில் சிவபூதராயர் கோவில்
சிவாகம கிரியா தத்வநிதி - தர்மசாஸ்தா குருகுலம்

தமது குலதெய்வமாம் மயிலணி முருகப் பெருமானின் ஆலயத்தைப் புதுப்பொலிவுற, ஆகம விதிப்படியமைத்து மகாகும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என நெஞ்சத்திற் கொண்ட நல்விருப்பின் பிரதிபலிப்பாகப் பாலஸ்தாபனஞ் செய்து, திருப்பணி வேலைகள் மும்முரமாக நடைபெற்றுப் பூர்த்தியடையும் நிலையில், 17.11.2003 அபர பட்ச நவமித்திதியும் மக நட்சத்திரமும் கூடிய புண்ணிய சோமவார நன்னாளில் அருள்முருகனின் அடிக்கமலங்களை அரவணைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 168. இசைக் கலைஞர், கரணவாய், இராமநாத சர்மா (ஜெயராமன்)

(1950 அக்டோபர் - 30.12.2007)

பிரம்மஸ்ரீ கல்யாணசுந்தரக்குருக்கள் இராமநாதன் 1950ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் யாழ். வடமராட்சி நவிண்டிலில் பிறந்தார். தமது ஆரம்பக்கல்வியை நவிண்டில் தாமோதர வித்தியாலயத்திலும், உயர்தர வகுப்பை உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையிலும் கற்றார். சங்கீதத்தில் ஈடுபாடுகொண்ட இவர் தமது சிறியதந்தையார், சர்வேஸ்வரசர்மாவிடம் இசையைக் கற்று அதன்பின் தமிழ்நாடு இசைக்கல்லூரியில் வித்துவான் பட்டமும் பெற்றார். அக்காலத்தில் இராஜம் ஐயர், ஆலந்தூர் பிரம்மஸ்ரீ எஸ். நடராஜ ஐயர், பிரம்மஸ்ரீ ஜி. வி. சங்கர், தஞ்சாவூர் எம். தியாகராஜன், கே. வி. நாராயணசுவாமி ஆகியோரிடம் சிறப்பாக இசைபயின்றார்.

இலங்கை திரும்பி 19.10.1975இல் அரங்கேற்றம் செய்தார். 1977இல் நுவரெலியா சென் சேவியர் கல்லூரியில் நியமனம் பெற்று, பின் ஆசிரியர்பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்டு ஆசிரியராக வெளியேறி இனக்கலவரத்துடன் வேலையை விட்டார். இதன்பின் 1986 - 2000 வரை யாழ். இராமநாதன் நுண்கலை வளாகத்தில் பகுதிநேர விலிவுரையாளராக இருந்தார். அக்காலத்தில் பல மாணவர்களுக்குத் தனிப்பட்டமுறையிலும் பாடம் சொல்லிப் பல கலைஞர்களை உருவாக்கினார். இதன்பின் இந்தியா சென்று கும்பகோணத்தில் 250இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு இசை பயிற்றுவித்தார். திருவையாறு அரச இசைக்கல்லூரியில் மூன்று வருடம் பேராசிரியராக இருந்தார். கும்பகோணம் இசை நடனக் கல்லூரியிலும் பணியாற்றினார். அக்காலத்தில் நிறைய சபாக்களில் கச்சேரிகள் செய்தார். 2004இல் இலங்கை திரும்பி மீண்டும் இராமநாதன் நுண்கலை வளாகத்தில் விரிவுரையாள ராக இருந்தார். 2006இல் மலையகம் ஹட்டனில் குடியேறி அங்கும் பல மாணவர்களுக்குக் கற்பித்தார். பத்தனை ஸ்ரீபாதக் கல்வியியல் கல்லூரியில் பகுதிநேர விரிவுரையாளராகக் கடமையாற்றினார். இக்காலத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் இசைக்கச்சேரிகள் செய்து புகழ்பெற்றார்.

இவர் சுன்னாகம், முகாந்திரம் சதாசிவ ஐயரின் பேர்த்தியான வசந்தி தியாகராஜ ஐயரை 1986.ல் திருமணம் செய்து மூன்று பிள்ளைகளைப் பெற்றார். தம் பிள்ளைகளையும் இசைத்துறையில் ஈடுபடச்செய்து தமது இளைய மகளான யதுநந்தினியையும் பல மேடைகளில் கச்சேரி செய்யவைத்தார். தமது சிறியதந்தை, வயலின் வித்துவான் சர்வேஸ்வர சர்மாவின் பாரதி கான சபாவைத் தாம் பொறுப்பேற்று நடத்திவந்தார். இவரது மறைவிற்குப் பின்னரும் இவரது துணைவியார் இதனை நடத்திவருகிறார். 2007இல் டிசம்பர் 30இல் சுகவீனம் காரணமாக இறையடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 169. சமூக சேவையாளர், மன்னார், சபா. மனோகரக்குருக்கள்

## (06-09-1951 - 14.03.2012)

கரவெட்டி துன்னாலையில் காசிபகோத்திர அந்தணர் மரபில் சபாரத்தினக்குருக்கள் - மீனாட்சியம்மா தம்பதிகளின் புதல்வராக 06-09-1951 மனோகரக்குருக்கள் பிறந்தார். அவருக்கு பூர்ணானந்த ஈஸ்வரசர்மா லீலாதேவி என இரண்டு உடன்பிறப்புக்கள்..

ஆரம்பக்கல்வியை சொந்தகிராமத்திலே கற்று வேத சிவாகமங்களை சின்னக்குரு ஐயா எனப்படும் ராமச்சந்திரக் குருக்களிடம் கற்றார். பின் இந்தியா சென்று சேலம் உடையாரப்பிட்டி சமஸ்கிருத கலாசாலையில் கற்று அங்கேயே ஆசார்யஅபிஷேகம் பெற்று ஊர் திரும்பினார். ரதி அம்மாவை திருமணம் செய்தார். இவரது இல்லறவாழ்வின் பயனாக, இரு புதல்வர்கள் பிறந்தனர். பின் மன்னாரில் குடியேறினார். மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவை மூலம் பலபணிகள் செய்து வந்தார். அங்குள்ள ஆலயங்களுக்கு ஆலோசராகவும் இருந்தார். மன்னாரிலுள்ள. பேசாலை சுப்பிரமணியர் கோவில், முத்து மாரியம்மன்கோவில், கீரிமுருகன்கோவில், கற்பிட்டி வேல்முருகன் கோவில். இலுப்பைக்கடவை முத்துமாரியம்மன் கோவில், கற்பிட்டி வேல்முருகன் கோவில், ஆலடிப்பிள்ளையார் கோவில், கட்டுக்கரை பிள்ளையார்கோவில், மணற்குளம் முத்துமாரியம்மன் கோவில், இரட்டைக்குளம் பிள்ளையார் கோவில், வைத்தியசாலை பாலமுருகன் கோவில், குமுள முனை முத்துமாரியம்மன் கோவில், முள்ளிப்பள்ளம் முல்லைக்குமரன் கோவில், எழுத்தூர் அகிலாண்டேஸ்வரி கோவில், செந்தார் முருகன் கோவில், விடத்தல்தீவு கற்பகவிநாயகர் கோவில், பாவிலுப்பட்டான் பிள்ளையர்கோவில் பரிகாரிகண்டல் மாரியம்மன் கோவில். வேட்டையாமுறிப்பு இராஜராஜேஸ்வரி அம்மன் கோவில், தண்ணீர்தாங்கி பிள்ளையார் கோவில், ஸ்ரேசன் அம்மன் முருகன்கோவில், கள்ளிக்கட்டைக்காடு வைரவர் கோவில் ஞானவைரவர் திருமுருகன் கோவில் என்பன இவர் பிரதமகுருவாக இருந்து கும்பாபிஷேகங்கள் மஹோத்சவங்கள் செய்த கோவில்கள் ஆகும்.

இலங்கை அரசால் சமாதான நீதவான் என கௌரவ விருதுபெற்றார். கமலபூஷணம், சிவாச்சார்யதிலகம், தேசசக்தி, தேசபந்து, தேசகீர்த்தி என அரசவிருதுகளும் பெற்றார். இந்தக் குருமார்பேரவை இவரின் நாற்பது ஆண்டுச்சேவையை பாராட்டி கௌரவிப்பு செய்தது. சகல மததலைவர்களின் மதிப்பைப் பெற்று அவர்கள் விழாவிலும் பங்குபற்றி மத நல்லிணக்க நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். மிகப்பல சமூக சேவைகளைச் செய்ததால் மக்கள் இவரைத் தமது தலைவராகவே போற்றி இவருக்கு மன்னாரில் சிலை அமைத்துக் கௌரவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 170. கரணவாய், சி. ஹரகுகவரத சர்மா

(08.06.1951 - 15.12.2009)

யாழ்ப்பாணம், கரணவாய் தெற்கைச் சேர்ந்த நாகேந்திர ஐயர் தர்மாம்பிகை தம்பதிகளின் புதல்வர் சிவசாமிக் குருக்கள், யாழ்ப்பாணம் தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த நடராசக் குருக்கள் விசாலாட்சி தம்பதிகளின் இளைய புத்திரி அன்னபூரணியை மணந்து இல்லறம் நடத்திவரும் நாளில் 06-08-1951 இல் தலைக்குழந்தையாக ஆண்குழந்தை ஒன்று பிறந்தது. ஹரகுகவரதன் என நாமகரணம் செய்து வளர்த்துவரலாயினர். உரிய வயதில் வித்தியாரம்பம் உபநயனம் என்பன செய்விக்கப்பட்டு பாடசாலைக் கல்வியையும் பெற்றுக் கொண்டார். உயர்தரக் கல்விவரை தெல்லிப்பழை மஹாஜனாக் கல்லூரியில் கற்ற அவர் சம்ஸ்கிருதக் கல்வி கற்பதற்கு நல்லூர் சுப்பிரமணிய சாஸ்திரிகளிடம் அனுப்பப்பட்டு முறையாகக் கற்று யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பரீட்சையில் அதிக பெறுபேறுகளைப் பெற்றுச் சிறந்த மாணவனாகத் திகழ்ந்தார்.

குருத்துவத் துறை மிகக் கூடுதலாக இவரைக் கவர்ந்தது. குருத்துவம் பயில்வதில் முழுக் கவனத்தையும் செலுத்தினார். நயினை நாகபூஷணி அம்மன் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ ஐ கைலாசநாதக் குருக்களினால் ஆசார்யாபிஷேகம் செய்துவைக்கப் பெற்று சிவாச்சாரியர் என்ற தகுதியைப் பெற்றார்.

அளவெட்டி வடக்கு சண்முகசுந்தரசர்மா மனோன்மணி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி நாகேஸ்வரியை விவாகம் செய்துகொண்டார். இவர்களது இல்லறமென்னும் நல்லற வாழ்வில் ஜெகதீஸ்வரசர்மா, நளாயினி என்ற இரு செல்வங்களைப் பெற்றெடுத்து மகிழ்ந்தனர்.

தெல்லிப்பழை மாரியம்மன் ஆலயத்தின் பிரதமகுருவாக இருந்து சிறப்பாக அவ்வாலயத்தின் நித்திய நைமித்திகங்களை நடத்திவந்தார். நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களால் இடப்பெயர்வுகள் ஏற்பட்டபோது கொழும்புக்கு வந்த அவர் பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் சேர்ந்து நித்திய நைமித்திக கிரியைகளை மிகவும் பக்திபூர்வமாகவும் அடியார்களின் மனம்கவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையிலும் சிறப்பாக ஆற்றிவந்தார். இதன்பின் கொழும்பு ஜிந்துப்பிட்டி முருகன் ஆலயத்திலும் பிரதம சிவாச்சாரியாராக இருந்து வழிநடத்தி வந்தார். அந்தணர் இல்லங்களில் நிகழும் வைதிகக் கிரியைகளை நடத்தி வைக்கின்ற சிறந்த வாத்தியாராகவும் இவர் விளங்கினார்.

ஸ்ரீவித்யாபீடத்தின் தலைவராகவும் இவர் நியமிக்கப் பட்டிருந்தார். இலங்கை சமாதான நீதிவான் பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டிருந்தது. கொழும்பு இந்துக்கல்லூரி கற்பக விநாயகர் ஆலயத்தில் குருவாகக் கடமையாற்றிவரும் காலத்தில் இந்துதர்ம பாராட்டுவிழாவிலும் கௌரவிக்கப்பட்டார். திருவும்பிட்டிய - கெடஹெத்த அருள்மிகு ஸ்ரீ சத்தியஜோதி ஐயப்ப தேவஸ்தானத்தில் ஆகமக் கிரியைகளைச் சிறப்பாக நடத்தியமையால் "வேதாகம சிரோமணி ஞானஜோதி" எனும் சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இலங்கையின் பல பாகங்களிலும் புகழ்பூத்த க்ஷேத்திரங்கள் பலவற்றில் கும்பாபிஷேகக் கிரியைகளைப் பலர் மெச்சும்படி நடத்திவைத்துப் பொன்னாடைகளும் பட்டங்களும் பல பெற்று விளங்கினார். இவர் குருவாக இருந்து நடத்திவைத்த உபநயன தீட்சைகள், ஆசார்யா பிஷேகங்கள், திருமணங்கள், மற்றும் அபரக் கிரியைகள் கணக்கிலடங்கா.

இவ்வாறு வைதிகம், ஆகமம் இருதுறைகளிலும் ஈழத்தின் பல பாகங்களிலும் ஆன்மிகப் பணியாற்றி நற்பேருடன் வாழ்ந்திருந்த குருக்களவர்கள் விரோதி வருடம் கார்த்திகை மாதம் அமாவாசைத் திதியில் (கேட்டை நட்சத்திரம்) 12-15-2009 இரவு இப்பூவுலக வாழ்வை முடித்துக்கொண்டு பொன்னுலகம் சென்றடைந்தார். அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 171. எழுத்தாளர், கணினிக் கலைஞர்
## சா.பாலச்சந்திரசர்மா (நீர்வை இளமதி)
(25.03.1953 - 07.03.2016)

உத்தரகோச மங்கையில் இருந்து வந்து யாழ்ப்பாணத்தில் குடியேறிய அந்தணர் குலத்தில் வந்த பாரத்துவாஜ கோத்திரத்தை சேர்ந்த நீர்வேலியில் வசிப்பிடமாகக் கொண்டு சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ அரச கேசரிப்பிள்ளையார் கோவில் பிரதம குரு சாம்பசதாசிவக் குருக்களுக்கும் கௌரியம்மாவிற்கும் மூத்த புதல்வராக 25.03.1953ஆம் ஆண்டு பிறந்தவரே பாலச்சந்திரசர்மா.

இவருக்கு 3 தம்பிமாரும் 2 தங்கைமாரும் உண்டு. சிறுவயதில் அரசகேசரிப்பிள்ளையார் கோவில் அருகில் அமைந்த சி.சி.த. கலவன் பாடசாலையில் பாலர்கல்வியைப் பயின்றார். பின்பு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் உயர் கல்வி கற்றார். உயர்தரக்கல்வியின்பின் மின்சாரவியல் கல்வியைக் கற்றார். மின்சார தொழில்நுட்ப நிபுணர் பட்டத்தைப் பெற்று பின்பு யாழ் மாநகர சபையில் மின்னியலாளர் பதவி வகித்து இரண்டு வருடங்களின் பின்பு சுன்னாகம் மின்சார சபையில் பணியாற்றினார். அக்காலத்திலேயே 30.04.1980ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. புகழ்பெற்ற அந்தணப் பெரியார் சுன்னாகம் வித்தியானந்த சர்மாவின் மகளை இவர் திருமணம் செய்தார். இரண்டு வருடங்களின் பின்பு திருகோணமலையில் மின்சார மேற்பார்வையாளர் பதவிபெற்று அங்கு சென்று குடியேறினார். அக்காலத்தில் ஓர் ஆண் மகனைப் பெற்று மகிழ்ந்திருந்தார். பின்பு 1984இல் ஜேர்மனிக்கு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. அந்நேரத்தில் ஓர் பெண்மகவுக்கு தந்தையானார். பின்பு அன்பு மனைவி இரண்டு குழந்தைகளுடன் ஜேர்மனி பயணமானார்.

ஜேர்மனியில் கம்பனியில் வேலை செய்து கொண்டு தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழ்மொழியை கற்பித்து வந்தார். அத்துடன் சாயிநாதம் என்ற அச்சுக் கம்பனியை நடத்தி வந்தார். அதன்மூலம் புலம்பெயர் மக்களுக்கு தேவையான உதவிகளை நிறைவேற்றிவந்தார்.

முதன்முதல் கணினியில் கிரந்த எழுத்துக்களை வடிவமைத்து பல நூல்களை வெளியிட்ட ஈழத்தவர் என்ற தனி முத்திரையை அவர் பெறுகிறார். இளவயதில் பத்திரிகைகளில் இலக்கியப் படைப்புக்களும் வெளியிட்டுள்ளார். இவரது புனைபெயர் 'நீர்வை இளமதி' என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2002ம் ஆண்டு கம்பனியில் வேலை செய்யும்போது தடக்கி விழுந்த தால் பிடரியில் அடிபட்டு மயக்கமடைந்தார். குடும்பத்தவர்களும் வைத்தியர்களும் அவரை நலம் பெறுவதற்கு மிகவும் பாடுபட்டனர். ஆனால் இறைவன் விரும்பவில்லையோ என்னவோ அவர் தொடர்ந்து கோமா நிலையில் இருந்தார் 14 வருடங்கள் நித்திரை செய்த அமரர் 07.03.2016 திங்கட்கிழமை சிவராத்திரி தினத்தில் இரவு லிங்கோற்பவ நேரத்தில் சிவனுடன் ஒன்றாகி கலந்தார்.



## 172. மிருதங்க வித்துவான், தெல்லிப்பளை வி. ஐம்புநாத சர்மா (20.12.1958 - 21.12.2015)

திருமணம்: 27.01.1994
மனைவி: சந்தானலக்ஷ்மி
குரு: கே. பி. சின்னராஜா, வி. அம்பலவாணர், ஏ.எஸ் ராமநாதன்
பணிகள்: இலங்கை வானொலி வாத்தியக் குழு அங்கத்தவர்.
University of Visual and Performing Arts விரிவுரையாளர்.
200இற்கும் மேற்பட்ட மேடை நிகழ்ச்சிகள்.
விருதுகள்:
இசைக்கலைமணி, லயஞான கலாநிதி (சர்வதேச இந்துபீடம்)
சிறந்த கலைஞர் விருது - Art Council



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 173. கந்தர்மடம், நீராவியடி, நா. பாலசுப்பிரமணியக் குருக்கள்
## (28.10.1954 - 23.04.2016)

கண்டி, கட்டுக்கலை ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தைப் பரம்பரை உரிமையாகக் கொண்டவரும் பிரபல ஜோதிடராக விளங்கியவருமாகிய பால சுப்பிரமணியக் குருக்களுக்கும் மீனாம்பாளுக்கும் மூத்த புதல்வன் சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் ஆவார். இவர், காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய பரம்பரைக் குரு சிவஸ்ரீ சுந்தரேஸ்வர ஐயர் கௌரி அம்மாவின் இரண்டாவது புதல்வி அமிர்தாம்பிகையை திருமணம் புரிந்தார். இவர்கள் இல்லற வாழ்க்கையின் மகிழ்ச்சியில் நல்லறம் பூண்டு கண்டியில் வாழ்ந்து வந்தனர். இவர்களின் நற்பேறாக 28.10.1954இல் மூத்த புதல்வனாக பாலசுப்பிரமணியக் குருக்கள் பிறந்தார். இவரின் சகோதரர்களாக சிவஸ்ரீ நல்லூர்தாசக் குருக்கள், சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள், மீனாம்பாள், நாகேஸ்வரி, சிவஸ்ரீ பாலேந்திரக் குருக்கள் ஆகியோர் பிறந்தனர். கண்டியில் குதூகலமாக இவர்கள் வாழ்ந்தனர். ஆரம்பக்கல்வியைக் கண்டியில் கற்று எட்டாவது வயதில் தமது தந்தை அமரத்துவம் அடைந்ததனால் தமது தாயின் தகப்பனிடம் சென்று காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் கல்வியைத் தொடர்ந்தார்.

1964ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வில்லூன்றி விநாயகர் ஆலயத்தில் கோண்டாவில் நாராயண சாஸ்திரிகளால் உபநயனம் செய்துவைக்கப்பட்டார். தொடர்ந்து தமது சிறு வயதில் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயம், காரைநகர் கிட்டங்கி துறைமுகம் ஆலயம், பரம்பரை ஆலயமாகிய காரைநகர், மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயம் ஆகியவற்றில் பூஜைப் பணிகளையும் தொடர்ந்தார்.

1968ஆம் ஆண்டு கல்வியங்காட்டு சிவஞான விநாயகர் ஆலயம், நல்லூர் கந்தசுவாமி கோவில் ஆகியவற்றில் பணி செய்தார். தமது குடும்ப சூழ்நிலைகருதி 1969இல் அனலைதீவு தெற்கு முருகன் ஆலயத்திற்குச் சென்று பூஜை வழிபாடுகளும் விவசாயமும் செய்து குடும்பத்தைப் பாதுகாத்து வந்தார்.

1974ஆம் ஆண்டு மீண்டும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பணிசெய்தார். 1978ஆம் ஆண்டு சங்கானை நாகேஸ்வர ஐயர் - சுலோசனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா தம்பதிகளின் மூத்த புதல்வி கௌரீஸ்வரியை பங்குனி உத்தர நாளில் தமது வாழ்க்கைத் துணைவியாகக் கரம்பிடித்தார்.

இல்லறத்தின் நற்பயனாக எட்டுச் செல்வங்களை பெற்றெடுத்தார். 1982ஆம் ஆண்டு சிவாசார்ய அபிஷேகம் பெற்றார். 1984இல் யாழ். வண்ணை வடகிழக்கு கொண்டலடி ஆலயத்தில் முதன்முறையாகக் கும்பாபிஷேகத்தை நடத்திவைத்தார். அதனைத் தொடர்ந்து பல ஆலயங்களில் பிரதம குருவாக இருந்து ஏககுண்டம் முதல் முப்பத்து மூன்று குண்டம்வரை பலவிதமான கும்பாபிஷேகங்களையும், மஹோற்சவங்களையும் நடத்திவைத்தார்.

2001ஆம் ஆண்டில் தனக்கென ஒரு சொந்த இல்லத்தை கந்தர்மடத்தில் புகையிரத வீதியருகில் அமைத்து வாழ்ந்து, தமது பிள்ளைகள் அனைவருக்கும் பாடசாலை மற்றும் சம்ஸ்கிருதக் கல்வியையும் கற்பித்து உபநயனம், ஆசார்ய அபிஷேகம், பூப்புனித நீராட்டு, திருமணம் முதலிய அனைத்து விசேடங்களையும் அவ்வப்போது சிறப்பாக நடத்திவைத்தார்.

பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்து அவர்களின் விழாக்களையும் உரிய காலங்களில் செய்துவைத்தார். தமது அறுபதாவது வயதில் ஷஷ்டியப்த பூர்த்தி விழாவினை அனைவரது அன்பினையும் ஆதரவையும் பெற்று 25. 10. 2014இல் பெரியோர்களின் ஆசியுடன் நடத்தி மகிழ்ந்தார்.

யாழ். கந்தர்மடம் செட்டியந்தாழ்வு ஞானவைரவர் ஆலயத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராகவும், கந்தர்மடம் ஐயப்ப மணிகண்ட சபையின் போஷகராகவும் பொறுப்பேற்று தமது கடமைகளை இனிதே நடத்திவந்தார். பலவருடங்களாக சபரிமலை யாத்திரையையும் காசி, இராமேஸ்வரம் யாத்திரையையும் செய்து முடித்தார். அத்துடன் இந்துமத குருமார் ஒன்றியத்தில் பொருளாளராக இருந்து வேத ஆகமங்களைப் பயில்வதற்காக காஞ்சி காமகோடி பீட பாடசாலைக்கு 16 மாணவர்களைக் கூட்டிச்சென்று இணைத்தமையும் குறிப்பிடத்தக்கது. இவர் ஜோதிடவல்லுநராகவும் விளங்கினார். தம்மைத் தேடி வருபவர்கள் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்று அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து வந்தார்.

இவ்வாறு மேன்மையுடனும், புகழுடனும் பெருடனும் வாழ்ந்துவந்தவர் 23.04.2016 சனிக்கிழமை துர்முகி வருடம் சித்திரை மாதம் தேய்பிறைத் துதியைத் திதியில் ஜன்மநட்சத்திரமான விசாகநட்சத்திரத்தில் சிவபதம் அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 174. கானப்பிரியன், இணுவில்
# தாணு. வாசுதேவக் குருக்கள்
## (29.12.1959 - 02.02.2019)

இணுவில் (மாவிட்டபுரம்) தாணு ஐயர் மீனாட்சி அம்மா தம்பதிகளின் இளைய புதல்வர். ஆரம்பக் கல்வியை இணுவில் இந்துக்கல்லூரியில் பெற்று சம்ஸ்கிருத, வேத சிவாகமங்களைத் தமையனாராகிய இணுவில் தர்சாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தாணு. மஹாதேவக் குருக்களிடம் கற்று சிவாசாரியரானார். மிகுந்த இசைஞானம் இவரிடம் இயல்பாகவே இருந்தமையாலும், இனிய குரல்வளம் இருந்தமையாலும் எல்லா ஆலய நிகழ்வுகளிலும் இன்னிசையால் மக்களைக் கவர்ந்தவர். தாமே பாடல்களை இயற்றும் திறமையும் வாய்த்தவர்.

1979 இல் மட்டக்களப்பு பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணிய சர்மா இராஜாம்பாள் தம்பதிகளின் இரண்டாவது புதல்வியாகிய தமது சொந்த மைத்துனி சுசீலாதேவியைத் திருமணம் செய்தார். ஐந்து பிள்ளைகள் இவருக்குள்ளனர்.

இவரை உலகறியச்செய்தது இவரது ஐயப்ப விரத பூஜைகளாகும். பலமுறை சபரிமலை யாத்திரை சென்றதோடு வருடாவருடம் பல சாமிமாருக்குக் குருசாமியாக மாலையிட்டு அவர்களது விரதத்தை நிறைவேற்றிவைப்பவர்.

2011இல் உரும்பிராயில் சொந்தமாக ஒரு காணிவாங்கி தமது குலதெய்வமான சாட்டுப்பத்தூர் சிவதர்மசாஸ்தாவிற்கு ஓர் ஆலயம் அமைத்து அதன் ஆதீனகர்த்தரானார். பல ஆலயங்களில் குருத்துவ சேவை செய்து பல கும்பாபிஷேகங்களையும் மஹோற்சவங்களையும் நடத்தியுள்ளார்.

'சபரீச தாசன்', 'ஆகமவேத கீத சாஸ்திரா', 'கிரியா தத்துவநிதி', 'கானப்பிரியன்' முதலிய இருபத்தைந்திற்கு மேற்பட்ட விருதுகள் இவரை அலங்கரிக்கின்றன. தமது 59 வயது உக்ரரத சாந்தியைத் தமது ஆலயத்தில் சிறப்பாகக் கொண்டாடினார். அதன்பின் 02.02.2019இல் ஐயப்பன் பாதம் அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 175. ஸ்ரீ. கிருஷ்ணானந்த சர்மா

(06.10.1961 - 04.09.2014)

ஈழமணித் திருநாட்டின் புத்தி ஜீவிகள் மிகுந்த பலரைத் தன்னகத்தே கொண்டு அன்றும் இன்றும் என்றும் புகழ்மேவும் யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் துன்னாலைப் பகுதியிலே காஸ்யப கோத்திரத்தில் வேத, ஆகம, ஆயுர்வேதம் முதலான சாஸ்திர பரம்பரையில் வந்தவர் பொன்னையா ஐயர் ஸ்ரீபதி சர்மா அவர்கள். அப்பெருமகனாரும் லஷ்மி அம்மாளும் செய்த தவப்பேற்றின் மூலம் 06.10.1961 இல் மக நட்சத்திரத்தில் உதித்தவர் ஸ்ரீ கிருஷ்ணானந்தசர்மா.

இளம்பராயத்திலேயே இறைபக்தியும் பெரியோரிடம் பணிவும் கல்வியில் ஈடுபாடும் மிகுந்த அவர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பாடசாலைக் கல்வியைக் கற்றார். அத்தோடு நம் குலமரபை மறவாது தக்கவயதில் உபநயனம் பெற்றுக்கொண்டு அந்தணர்களின் அறுதொழில் களில் ஒன்றான வேதாத்யயனத்தை மேற்கொண்டார். வேத ஆகமங்கள் மேலும் பயிலப் பேராசிரியர் கா. கைலாச நாதக்குருக்கள் அவர்களிடம் சேர்ந்தார். அதுவே அவரது வாழ்வின் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. தமது 18 ஆவது வயதிலிருந்து தமது வாழ்வை குருவிற்கே சமர்ப்பணம் என நினைத்தாரோ என்னவோ, நல்லூர் கமலாம்பிகை சமேத கைலாச நாதஸ்வாமி கோவிலில் தமது இருப்பிடமாகக் கொண்டார்.

சிறுவயதிலிருந்தே அவருக்கிருந்த சமஸ்கிருத அறிவு மூலம் மொழி ஆற்றலை வளர்த்ததோடு வேத நுணுக்கங்களாகிய மாத்ராகாலம் சந்தஸ் என்பவற்றை அறிந்து ஸ்வரத்தோடு வேதத்தை உணர்ந்து ஓதினார். சந்தியாவந்தனம் முதலான நித்ய கடமைகளைத் தினமும் தவறாது ஆற்றி வந்தார். அவ்வப்போது நல்லூர் சிவன் கோவிலில் நடைபெறும் ஸ்ரீசக்ர பூஜை, பிரதோஷம், நவராத்திரி பூஜைகள் விழாக் காலங்களில் பத்ததி வாசித்தல், பூஜைகளுக்கான கருமங்களை நிறைவேற்ற மிகுந்த விருப்புடன் ஈடுபட்டுள்ளார். நல்ல ஞானத்துடன் விளங்கியமையால் குருவின் அன்பிற்குப் பாத்திரமானார். பேராசிரியர் குருக்களோடு பல ஆலயங் களிற்குச் சென்று கும்பாபிஷேகம் போன்ற கிரியைகளில் பங்குபற்றி வேத ஆகம அறிவையும் பெற்றார்.

இவரது தகுதியையும் பக்குவ நெறியையும் உணர்ந்து 1981ஆம் ஆண்டுமுதல் ஆலயபரிபாலனம் பேராசிரியர் கைலாச நாதக் குருக்கள், சிவஸ்ரீ ரத்னகைலாச நாதக்குருக்கள் ஆகியோரால் இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அன்று முதல் இவரது பரிபாலனத்தில் ஆலயம் பல வளர்ச்சிகளைக் கண்டது. 1988, 2006 ஆகிய ஆண்டுகளில் இடம் பெற்ற கும்பாபி ஷேகங்கள் இவரது பங்குபற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் நெறிப்படுத்தலுடன் இடம்பெற்றது. இருந்தபோதும் குருக்கள் அவர்கள் கிரியைகளில் ஏற்படுத்திய நெறிமுறைகள் மரபுகளை சிறிதும் மாற்றாமல் அவ்வண்ணமே பேணி நடத்திவந்தார்.

ஆலயப் பணியோடு மட்டும் நின்றுவிடாத ஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா துன்னாலையில் வசித்து வந்த பெற்றோரையும் கவனிப்பதிலும் அக்கறையுடனும் பேரன்புடனும் இருந்தார். சகோதர சகோதரிகளின் திருமணத்தை தாமே முன்னின்று நடத்தினார். உறவினர் மருமக்கள் முதலானோர் திருமணம் முதலான நிகழ்வுகளை தாமே முன்னின்று நடத்தி அவர்தம் சிறப்புக் கண்டு அக மகிழ்வெய்தினார்.

திருகோணமலை வில்லூன்றி மைத்ராவருண கோத்ரம் சுந்தரேஸ்வர ஐயர் மங்களகௌரி தம்பதிகளின் தவச்செல்வி இரவிச்சந்திரிகாவை 2004ல் மணமுடித்து தமது இல்வாழ்க்கையைத் தொடங்கினார்.

அந்தண மற்றும் பொதுமக்களுக்கு ஆலயம் தொடர்பான ஐயங்களைத் தீர்த்து வைத்தார்.

"அயம் நிஜ: பரோவேத்தி கணனாலகு சேதஸாம்
உதாரசரிதானந்து வசுதைவ குடும்பகம்"

எனும் வடமொழி ஸ்லோகத்திற்கு பிரமாண புருஷராக வாழ்ந்தார். ஜாதி சமூக இன வேறுபாடின்றி எல்லோருக்கும் தம்மாலான உதவிகளைச் செய்து அவர்தம் கருமங்களை ஆற்ற உதவினார்.

பிரம்மஸ்ரீ சர்மா கல்வியில் தான் முன்னுதாரணமாக விளங்கவேண்டும் எனும் முயற்சியின் பயனாக 1989ம் ஆண்டு சம்ஸ்கிருதம், இந்துநாகரிகம், தமிழ், இந்து சமயம் என்பவற்றை தேர்வு செய்து பல்கலைக்கழக அனுமதி பெற்றார். யாழ்ப்பாணப் பலகலைக் கழகத்தில் 1991-1995 வரையான காலப்பகுதியில் சம்ஸ்கிருதத்தைச் சிறப்புப் பாடமாகக் கற்ற இவர் முதற்தரத்தில் சித்தியெய்தினார். பேராசிரியர் வி. சிவசாமி. பேராசிரியர் ப.. கோபாலகிருஷ்ண ஐயர், கலாநிதி வி. சிவச்சந்திரன். திருமதி ஸ்ரீகலா ஜெகநாதன் ஆகியோரிடம் கல்வி கற்றவரான இவர் தனது கற்கைக் காலத்தைத் தொடர்ந்து 1997.01.07 முதல் 1998.06.30 வரை தற்காலிக சம்ஸ்கிருத விரிவுரையாளராகவும். 1998.10.06 முதல் 1999.01.31 வரை சமஸ்கிருத தற்காலிக உதவி விரிவுரையானராகவும் 1999.02.01 முதல் சம்ஸ்கிருத துறையின் தகுதிகாண் விரிவுரையாளராகவும் சேவையாற்றி, 2005.01.10 முதல் 2ம் தர சிரேஷ்ட விரிவுரையாளராகப் பதவியுயர்வு பெற்று 23.03.2011 முதல் சம்ஸ்கிருதத்துறையின் முதற்தர சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரீவித்யா உபாசனை**

இவர் செய்யும் ஸ்ரீசக்ரபூஜை தனித்துவமானது. பக்திபூர்வமானது. சௌந்தர்யலஹரீ பாராயணம், தேவீ மஹாத்மிய பாராயணம் என்பன இவரது நாளாந்தப் பணியாகும். பேராசிரியர் குருக்களின் வழிகாட்டலில் தம்மைத்தடம் பதித்துக் கொண்ட பிரம்மஸ்ரீ சர்மா, முன்னேஸ்வரம் தேவஸ்தானத்தில் நிகழும் வசந்த நவராத்திரி நிகழ்விலும் தம்வாழ்நாள் முழுவதும் தம்மை இணைத்து ஸ்ரீசக்ரபூஜை நிகழ்ததுவதும், நல்லூர் சிவன் கோவிலில் சாராதா நவராத்திரி காலங்களில் ஸ்ரீ தச சண்டீ ஹோமத்தை 1988 முதல் குறைவற நடத்திவருவதும், சிறப்பாக மஹா நவமி தினத்தன்று சுவாசினி, குமாரி பூஜையை மனநிறைவோடு ஆற்றிவந்தமையும் இவரது ஆளுமைக்கு தக்க எடுத்துக்காட்டுக்களாகும்.

**சிவாச்சார்ய பணி**

இவர் ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானத்தில் 2006ம் ஆண்டு நடைபெற்ற மஹாகும்பாபிஷேகத்தில் 17 குண்ட யாகத்திற்கு தலைமை தாங்கி சிறப்புறக் கிரியை நிகழ்த்தி சிவாச்சார்யப்பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

**சமூகப்பணிகள்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட அங்கத்தவராக விளங்கிய இவர் ஆயுட்கால உறுப்பினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெள்ளிவிழாக் குழு, நியந்த்ரீ, பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள் ஞாபகார்த்த சபை என்பனவற்றிலும் விளங்கினார். இவர் அகில இலங்கை சமாதான நீதவான் என்பது குறிப்பிடத்தக்கது. வலிகாமம் தென்மேற்கு பிரதேசச் செயலகத்தின் இந்துசமய ஆலோசனைச் சபையின் அங்கத்தவராகவும், இந்து சமயப் பேரவையின் அங்கத்தவராகவும் விளங்கினார். 'யாழ்ப்பாணத்தில் சம்ஸ்கிருதக் கல்வியை வளர்த்த நிறுவனங்களும் அறிஞர்களும்', நியாய சிரோமணி பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகளின் சம்ஸ்கிருதக் கல்விப் பணிகள்' என்ற நூல்களை இவர் எழுதி வெளியிட்டார்.

'ஸ்ரீ வல்லிபுர மாயன் அலங்காரம்', 'கீர்த்தனா தசகங்கள்', 'நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத கைலாசநாத சுவாமி திருவூஞ்சல்' ஆகிய நூல்கபை பதிப்பித்து வெளியிட்டார். மிகநீண்ட காலம் கையெழுத்துப் பிரதியாக இருந்த சிவஸ்ரீ சிவசுப்பிரமணிய சிவாசாரியார் இயற்றிய நல்லூர் சிவன்கோவிலின் தலபுராணமான 'ஸ்ரீ கைலாசநாத புராணம்' 2010இல் இவரால் வெளியிடப்பட்டது.

திடீரென ஏற்பட்ட உடல் சுகயீனத்தால் யாரும் எதிர்பராத வகையில் 04.09.2014 அன்று வியாழக்கிழமை ஸ்ரீ கமலாம்பிகை சமேத கைலாசநாத ஸ்வாமியின் திருவடிகளை பற்றிக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 176. சிவாகம கிரியா தத்துவநிதி, ஆசார்ய லட்சண சுந்தர குருமணி சா. சுந்தரேசக் குருக்கள்

## (14.02.1963 - 25.02.2010)

சீரோங்கும் சிறப்புமிகு இலங்கையின் வடபால் தாவடி என்னும் புண்ணிய பூமியில் புகழ்பூத்த புண்ணியன் சாமிரத்தின சர்மா - திரிபுரேஸ்வரி தம்பதிகளுக்கு மூன்றாவது புதல்வனாக சுந்தரேசன் என்ற சாமி சுந்தரேசக்குருக்கள் 14.02.1963இல் பிறந்தார். இவரின் அன்புச் சகோதரர்கள் சாந்திமதி, ஹரிகேசன், ரமணேசன், புவனேசன், பானுமதி, குமரேசன் ஆகியோர்.

சுந்தரேசன் அவர்கள் தமது ஆரம்பக் கல்வியைத் தாவடி தமிழ்க் கலவன் பாடசாலையிலும் பின்னர் உயர்கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார். கல்வி கற்கும் காலங்களில் பாடசாலைப் படிப்பில் மட்டுமல்லாது கல்லூரி விழாக்களிலும் விளையாட்டுத் துறையிலும் சிறந்தவராகவும் மாணவத் தலைவராகவும் இருந்தார்.

சிறு பராயத்திலேயே ஆலய நித்திய பூஜையில் ஆர்வம்கொண்டு இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் மஹாதேவக்குருக்களிடம் சம்ஸ்கிருதம், வேதம், ஆகமங்களைக் கற்றபின்னர் பேராசிரியர் கைலாசநாதக் குருக்களிடம் வேதாத்யயனம் செய்ததுடன் வைதீக, ஆகமக் கிரியா நெறிமுறைகளையும் கற்றுத் தேர்ந்து தளர்விலா உயர் ஞானத்தைப் பெற்றுத் திகழ்ந்தார்.

ஆலயக் கிரியைகளில் ஆர்வம் கொண்டு நயினை சிவஸ்ரீ சுவாமிநாத. பரமேஸ்வரக் குருக்களிடம் சிவாசார்ய அபிஷேகம் பெற்று ஈசான சிவம் என்னும் தீட்சாநாமத்துடன் சிறந்த குருவாகத் திகழ்ந்தார். தாவடி அம்பலவாண வேதவிநாயகர் ஆலயம், கொக்குவில் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், தாவடி நெல்லுருப்பதி ஆகிய ஆலயங்களில் தெய்வப் பணியை ஆரம்பித்தார். இவரது சிறந்த வைதீக ஆகம குருப்பணித் தேர்ச்சியினால் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் பிரதமகுருவாகிப் பெருமையும் புகழும் சேர்த்துக் கொண்டார்.

இல்லறத் துணைவியாக நீர்வேலி வாய்க்காற்றரவை பிள்ளையார் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள் ரஞ்சனா தம்பதிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதல்வி சீதாலட்சுமியைக் கரம்பிடித்து வைஷ்ணவி, வைகரி, வைசாலி என்னும் அன்புப் புதல்விகளைப் பெற்று இல்லறத்தில் சிறந்து விளங்கினார்.

தமது பரம்பரைக்கே உரித்தான தாவடி வேதவிநாயகர் ஆலயத்தில் கொடியேற்றம் நிகழ்த்த ஆரம்பித்து வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் மற்றும் பல ஆலயங்களில் மஹோற்சவ குருவாகவும் கும்பாபிஷேக குருவாகவும் கடமையாற்றிப் பெருமை பெற்றார்.

1996ஆம் ஆண்டு லண்டன் சென்று ஆச்வே முருகன் கோவில், ரூட்டிங் முத்துமாரி அம்மன் கோவில் போன்ற ஆலயங்களில் குருத்துவப் பணி புரிந்தார். அத்துடன் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஐரோப்பா, கனடா போன்ற நாடுகளுக்கும் சென்று கும்பாபிஷேகம், மஹோற்சவம் முதலியவற்றை நிகழ்த்திப் பாராட்டுக்களையும் பட்டங்களையும் பெற்றுத் தாய்நாட்டிற்கும் சமயத்திற்கும் பெருமை சேர்த்துக்கொண்டார்.


லண்டன் மாநகரின் குறோளி என்னும் புண்ணியபதியில் சொர்ணகாமாட்சி அம்மன் ஆலயத்தை அடியார்களின் உதவியுடன் ஸ்தாபித்துக் கும்பாபிஷேகம் செய்து பிரதமகுருவாக இருந்து குறோளிவாழ் மக்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றார்.

இறைபணியின் பயனோ திருவருளின் நிழலோ அம்பிகையின் சந்நிதானத்திலே நாராயணன் துணையுடன் 25.02.2010இல் ஆத்ம பரிபூரணம் அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org